வந்துவிட்டார்! திகம்பர சாமியார்

# பூர்ண சந்திரோதயம்



1

## வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

# பூர்ண சந்த்ரோதயம்

முதல் பாகம்

வடுவூர்
கே. துரைசாமி அய்யங்கார்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு : டிசம்பர், 2004

© பதிப்பாளர்

**விலை: ரூ. 130.00**

**மொத்த பக்கங்கள் 16+330=346**

Laser Typeset by: Keerthana Laser. Madurai
Printed at: M/s. Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

# பதிப்புரை

பரபரப்பு குறையாமல், அந்த பரபரப்புக்கு என்று நிகழ்ச்சிகளைத் தொடுக்காமல், ஆபாசமில்லாமல், ஏராளமான கதாபாத்திரங்களை உருவாக்கி, அபத்தங் களைக் கொட்டாமல், முதல் வரியிலிருந்து கடைசி வரி வரை விறுவிறுப்பைக் குறைக்காமல், நிகழ்ச்சி மேல் நிகழ்ச்சியாக உருவாக்கி, புத்திசாலித்தனமாக, சாதுர்யமாக கதாபாத்திரங்களைப் பேச விட்டு, சமு தாயத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் எப்படி எல்லாம் நடந்து கொள்ளக் கூடாது... போன்ற அற்புத மான தகவல்களைச் சொல்லும் நாவல்கள்தான் வடு வூர் துரைசாமி ஐயங்காரின் நாவல்கள். இவருடைய கதைகளில் காதல் காட்சியும் வரும், கோர்ட் சீனும் வரும், போலீஸ் நடவடிக்கைகளும் வரும், மருத்துவரின் சேவையும் வரும் — இப்படி அநேகமாக எல்லாத் தரப்பு மனிதர்களின் மேன்மையைப் பற்றியும் சொல் வார்.

அதே சமயத்தில், இதே சமுதாயத்தில் நல்லவர் கள் மத்தியில் வாழும் வக்ர புத்தி உள்ளவர்களைப் பற்றியும் சொல்லி, அப்படிப்பட்டவர்களை எப்படி எல்லாம் அடக்கி ஆளலாம் என்பதைப் பற்றியும் சொல்லியிருப்பார். இவருடைய எழுத்துக்களில் சிரிப் புக்குப் பஞ்சமிருக்காது. கதைகளில் நிலவும் கடின மான சூழ்நிலையையும், படு சாதாரணமாகக் கையாண் டிருப்பார். சிக்கலையும் உருவாக்கி, அந்த சிக்கலி லிருந்து விடுபடும் வழியையும் சொல்வார். வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்களைப் படித் தால், பொழுது போவது மட்டுமன்றி, பல விஷயங் களைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழில் நெடுங்கதை அல்லது நாவல் தோன்றிய ஆரம்ப கால கட்டத்தில் வடுவூர் துரைசாமி ஐயங்கார் இந்த நாவல்களை எழுதியுள்ளார். அந்த காலகட்டத்தில் இவருடைய நாவல்களைப் படிக்காதவர் எவரும் இருந்திருக்க முடியாது. மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட 'திகம்பர சாமியார்' இவருடைய பாத்திரப் படைப்பு. திகம்பர சாமியாரின் அறிவு அளவிட முடியாதது. மிகவும் புத்திசாலியானவர். தன்னுடைய ஒவ்வொரு பேச்சு வார்த்தையிலும், செயலிலும் பல்லாயிரக்கணக்கான அர்த்தங்களை யூகிக்க வைப்பார். இவருடைய ஒவ்வொரு நாவலும், ஒன்றை ஒன்று மிஞ்சி நிற்கிறது.

'இவ்வளவு வருடங்கள் ஆகி விட்டதே! போர் அடிக்காதா?' என்று வாசகர்கள் துளிகூட எண்ண வேண்டாம். இதை நாங்கள் வியாபார நோக்கில் சொல்லவில்லை. உண்மையில் இந்த நாவல்களை எல்லாம் நாங்கள் படித்துப் பார்த்த பிறகுதான் வெளியிடுகிறோம். நேரம் போவதே தெரியாமல் சரளமான தமிழ் நடையில், கதை போகும் போக்கே மிக மிக நன்றாக உள்ளது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் இப்படிப்பட்ட நாவல்களை எழுதியதால் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களையும், தங்க மெடல்களையும் பெற்று உள்ளார். இதெல்லாம் சாதாரண விஷயமல்ல. இந்த நாவல்களைத் தமிழ் மக்கள் படிக்க வேண்டும், போற்ற வேண்டும், நாங்களும் நிறைய புத்தகங்களை விற்க வேண்டும். இதெல்லாம் வாசகர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? இந்தப் புத்தகங்களை வாங்கும் அனைவருமே புத்திசாலிகள்தான்.

இந்த நாவல்களை வெளியிடும் முயற்சியில் எங்களுக்கு மிகவும் உதவியாக எங்களது நீண்ட நாள்

நண்பரான, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைவரான திரு. இரா. முத்துக்குமாரசாமிக்கும், நூலின் பழைய பிரதிகளைக் கொடுத்து உதவிய *(காஞ்சி புரம்)* அன்பர்களுக்கும், மேலும் இந்த நூல்களை, அந்தக் காலத்திலேயே ஏராளமாக விற்பனை செய்து, பெரும் பணியாற்றி தற்போது எங்களுக்கு உரிமையை வழங்கிய இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ் உரிமை யாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் வாசகர் கள் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

'வடுவூர் துரைசாமி ஐயங்கார் நூல்கள் மீண்டும் வருமா? மீண்டும் வருமா?' என்று ஏங்கிக் கொண் டிருக்கும் வாசகர்கள் இப்போது மகிழ்ச்சி அடை வார்கள். இந்த நூல்களை 'புரூப்' பார்த்துக் கொண் டிருக்கும்போதே, பல வாசகர்கள், 'புரூப்' படிக்க வில்லை என்றால்கூடப் பரவாயில்லை, தாமதப்படுத் தாமல் உடனே வெளியிடுங்கள் என்று கூறினார்கள்.

அன்று 007
இன்று ஜேம்ஸ்பாண்டு - ஆனால்
அன்றும் இன்றும் என்றும்
''திகம்பர சாமியார்''

அல்லயன்ஸ் ஸ்ரீநிவாஸன்

# வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்

*வடுவூர் துரைசாமி ஐயங்கார்: 1880-1942. தஞ்சை மாவட்ட மன்னார்குடி வட்டம். தந்தை கிருஷ்ண ஐயங்கார். பி.ஏ. பட்டம் பெற்று தாசில்தாராக விளங்கி, எழுத்துச் செல்வாக்கால் வேலையை விட்ட வர். தம் நாவல்களைத் தாமே அச்சிட ஓர் அச்சகமும் 'மனோரஞ்சனி' என்ற மாத இதழும் தொடங்கி மாதம் ஒரு கதை நூல் என எழுதிக் குவித்தவர். கலைமகள் கம்பெனி, விற்பனை நிலையமாகும்.*

நடுத்தர உயரம், ஒல்லியான உடல், கருத்த மேனி, கழுத்து வரை பொத்தான் போட்ட கோட்டு, அங்க வஸ்திரம், பஞ்சகச்சம், தலையில், குல்லா, காலில் கட் ஷூ, கையில் தடி, நெற்றியில் எப்போதும் திரு மண், வாய் நிறைய வெற்றிலை *(பெரிய வாய்)*, புகை யிலை, தினமும் தங்க பஸ்பம் சாப்பிடுவார் இளமை யோடிருக்க. மொத்தத்தில் கை நிறைய சம்பாதித்த கவலை இல்லாத உல்லாச மனிதர். இவர் மாடிக்கு ஜே.ஆர். ரங்கராஜு, ஆரணியார், பம்மல் சம்பந்த முதலியார், வை.மு.கோ., எஸ்.எஸ். வாசன் வந்து போவர்.

மனைவி நாமகிரி அம்மாள். மக்கள் விஜயராக வன், ரங்கநாயகி, கிருஷ்ணசாமி. மூத்த மகன் மனைவி புஷ்பவல்லி; புதுப்பேட்டை கார்ப்பரேஷன் பள்ளி ஆசிரியையாக இருந்து ஓய்வு; ஒரு பெண்ணும் பிள்ளையும் ரங்கநாயகிக்கு நான்கு மகள்களும், ஒரு பிள்ளை ரகுவும் நேவியில் காப்டன், வடுவூராரின் நவீனம். 'மைனர் ராஜாமணி' சினிமாவாக வந்து திரை யிட்டதும் ஒரு சமூகத்தை இழிவு செய்வதாக வழக்கு

தொடர்ந்து நிறுத்தப்பட்டது. இந்த அதிர்ச்சி, அவமானம் தாங்காது குருதிக் கொதிப்பால் மாண்டார்!

இந்த நூற்றாண்டின் தொடக்க 30 ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம் துப்பறியும் கதைகளால் பிணித்தவர். புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, பரந்த ஓர் வாசக உலகினைப் படைத்துக் கொண்ட பெருமையர் Reynolds போன்ற நாவலாசிரியர்களைத் தழுவி எழுதியதோடு, சொந்தமாகவும் படைத்துள்ளார். இவர் படைப்பில் சிறந்ததாக மேனகா, கும்பகோணம் வக்கீல் குறிப்பிடத்தக்கன; படமாகவும் வந்தவை. வாசகர்களின் நாடித் துடிப்பறிந்து ஈர்க்கும் இனிய வசனமும் அழகு வருணனைகளும் அனைவரையும் அள்ளின.

திகைப்பூட்டும் திருப்பங்கள், சுவைமிகு நிகழ்ச்சிகள், ஆவலைத் தூண்டும் விறுவிறுப்பும், படிக்கப் படிக்க மகிழ்வூட்டும் நடையும், நகைச்சுவை நெளிய நல்ல நல்ல நவீனங்களைப் படைத்துள்ளார்.

வெறும் மர்ம நாவல் என ஒதுக்க முடியாத அளவுக்கு வைணவத் தலங்களையும், வேற்று மதத்தினரும் கூடி வாழும் வகையும், சமூகக் குறை நீக்கமும் கொண்டும் விளங்குகின்றன. திகம்பர சாமியார் துப்பறியும் பாத்திரம் நினைவில் நிற்கும். நாவல் வரலாற்றில் சுவடு பதித்தவர் வடுவூரார் என்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

— நன்றி - தமிழ் இலக்கிய வரலாறு
(மது.ச. விமலானந்தம்)

# இலக்கிய சாதனையாளர்

முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் கல்கி என்கிற எழுத்தாளர் தமிழ் வாசகர்கள் எண்ணிக்கையை அதி கரிக்க ஆவன செய்ததுபோல இருபதுகளில் தமிழ் வாச கர்கள் பரம்பரையை உருவாக்க முயன்றவர்கள் என்று ஜே.ஆர். ரங்கராஜு என்பவரையும் வடுவூர் துரைசாமி ஐயங்கார் என்பவரையும் சொல்ல வேண்டும்.

இந்த விஷயத்தைக் கல்கி தெரிந்து செய்தார் என் றும், முன்னிருவரும் தாங்களும் அறியாமலே வாசகர் பெருக்கத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்றும் சொல்ல வேண்டும்.

ஜே.ஆர். ரங்கராஜுவின் ஐந்தாறு நாவல்களும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒன்றாக 1916 முதல் 1923 வரை யில் வெளிவந்தன. பிரஸ் சொந்தக்காரரான ரங்கராஜு பத்தாயிரம் பிரதிகளை அச்சிட்டு ஒவ்வொரு ஐநூறு பிரதி களையும் ஒரு பதிப்பாகக் குறிப்பிட்டு 10 பதிப்புகள் வரை தன் நாவல்களை வெளியிட்டார். ராஜாம்பாள், ராஜேந்திரன், சந்திரகாந்தா, ஆனந்தகிருஷ்ணன் என்று ஒவ்வொரு நாவலும் வெளியாகும்போது மிகவும் பர பரப்பாக வாசகர்கள் வாங்கிப் படித்தனர். வரதராஜன் என்று இரண்டு பாகங்கள் வெளிவரும் வரையில் ஒன்றும் தடங்கல் இல்லை. 'வரதராஜனின் பல பகுதிகள் இலக் கியத் திருட்டு' என்று கேஸ் போட்டு, மேலே எதுவும் எழுதிப் பிரசுரிக்கக் கூடாது என்றும், ஆறு மாதம் ஜெயில் வாசம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என் றும் கோர்ட் அவருக்குத் தண்டனை விதித்தது என்று எண்ணுகிறேன். ஜெயிலில் இருந்து விட்டு எழுதுவதை நிறுத்தி விட்டார் ரங்கராஜு. இவரை எழுத்தாளர் சங்கம் ஒன்று 40களின் ஆரம்பத்தில் கல்கி தலைமையில் ஏற்பட்ட போது முதல் கூட்டத்துக்கு வரவழைத்து நான் சந்தித்

திருக்கிறேன். தாடி வளர்த்துக் கொண்டு நாமம் போட்டுக் கொண்டு (வைஷ்ணவ நாயுடு அவர் என்று எண்ணுகிறேன்) பார்ப்பதற்குக் கம்பீரமாக இருந்தார்.

ரங்கராஜுவுக்கு அடுத்து வாசகர்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தவர் என்று வடுவூர் துரைசாமி ஐயங் கார் என்பவரைச் சொல்ல வேண்டும். 1923, 24 முதல் 27 வரையில் தஞ்சையில் கல்யாண சுந்தரம் ஹைஸ்கூலில் நான் படித்துக் கொண்டிருக்கும்போது பச்சை, மஞ்சள், சிவப்பு அட்டையில் டெமி சைஸில் அவர்கள் நாவல்கள் ஒவ்வொன்றாக அப்பாவுக்குத் தெரியாமல் ரெயில்வே ஸ்டேஷன் ஹிக்கின்பாதம்ஸில் வாங்கிப் படித்த நினைவிருக்கிறது. படித்துவிட்டு வீட்டுக்கு எடுத்துப் போனால் அப்பா சண்டை பிடிப்பாரென்று அப்போது மேல வீதியில் தெற்குக் கோடியில் இருந்த ஒரு லைப்ர ரிக்கு இனாமாகப் புஸ்தகத்தைக் கொடுத்து விடுவேன். இப்படிப் படித்த நாவல்கள் என்று கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமகளும், வஸந்த கோகிலம், பூரண சந்திரோதயம், விலாஸவதி, திகம்பர சாமியார், மேனகா இவை நினைவுக்கு வருகின்றன. ஒரு நாவல் கலைப் பிரக்ஞையுடன், சுலபமாகப் படிக்கக் கூடிய நடையுடன், விரஸமான விஷயங்களையும்கூட அதிக விரஸம் தட்டாமல் எழுதுவதில் சிரத்தையுடன் எழுதிய வடுவூரார் உண்மையிலேயே இலக்கியப் பிரக்ஞை உடையவர் என்பதில் சந்தேகத்துக்கிடமேயில்லை.

ரெயினால்ட்ஸின் மட்டமான நாவல்களைத் தழுவி எழுதினார் பெரும்பாலும் என்றாலும் அவர் விக்டர் ஹ்யூகோவின் Les Miserables என்கிற நாவலை அற்புத மாகத் தமிழில் தழுவி எழுதியிருக்கிறார். முதநூலைப் போலவே கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமக ளும் என்கிற நாவல் அமைந்திருப்பதாகச் சொன்னால் அதில் தவறவில்லை.

அதே போல கிரேக்க புராணக் கதையான Eros and Psyche கதையை வஸந்த கோகிலம் என்கிற நாவலாகச் செய்திருக்கிறார்.

இன்று தமிழில் சரித்திர நாவல்கள் ஏராளமாக எழுதப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் முன்னோடி யாகக் கல்கியைக் கருதுவது வழக்கமாக இருக்கிறது. ஆனால், இதே அளவில் இன்று எழுதப்படுகிற சரித்திர நாவலாசிரியர்களுக்கு முன்னோடியாக 1924-ல் வெளி வந்த வடுவூராரின் விலாஸவதி என்பதைத்தான் சொல்ல முடியும். அது வெளிவந்த சமயத்தில் மிகவும் பரவ லாகப் பேசப்பட்டதுடன் படிக்கவும் பட்டது. மூன்று ஆண்டுகளில் ஐந்து பதிப்புகள் வந்ததாக ஒரு தகவல் படித்திருக்கிறேன்.

வடுவூராரின் ஆரம்பக் காலத்திய நாவல்கள் எல் லாம் மாதாந்திரப் பத்திரிகையாக வெளிவந்த மனோரஞ் சிதம் *(அல்லது மனோரஞ்சனியா?)* என்கிற பத்திரிகை யில் வெளிவந்ததாகச் சொல்வார்கள். இந்தப் பத்திரி கையைப் பார்த்திருப்பதாக எனக்கு நினைவில்லை. அந்தப் பத்திரிகையை முன்மாதிரியாகக் கொண்டுதான் வை.மு. கோதைநாயகி அம்மாள் தனது ஜகன்மோகினி நாவல் பத்திரிகையைத் தொடங்கியதாகவும் சொல்வார்கள்.

இன்னொரு விஷயமும் அப்போது பரவலாகப் பேசபட்ட விஷயம் நினைவுக்கு வருகிறது. வை.மு. கோதைநாயகியின் முதல் நாவலான வைதேகியின் முதல் பாதியை வடுவூரார் எழுதி, முன்மாதிரியாகத் தந்த தாகவும் அதைப் பின்பற்றி முடித்து விட்டு வெற்றிகர மாக வை.மு.கோ. துப்பறியும் நாவல்களிலிருந்து அவர் தனி பிராண்டான சமூக நாவல்களுக்கு நகர்ந்தார் என்றும் சொல்லுவார்கள்.

1930-ல் என்று எண்ணுகிறேன். பைகிராப்ட்ஸ் ரோடு கோடியில் மரினா பஸ் ஸ்டாண்டிற்கு எதிரே

வேங்கடரங்கம் பிள்ளை தெரு பைகிராப்ட்ஸ் ரோடைச் சந்திக்கிற இடத்தில் இருந்த வீட்டை வாங்கி வடுவூரார் புதுப்பித்து வடுவூர் ஹவுஸ் என்று பெயரிட்டு கிரஹப் பிரவேசம் நடத்தியபோது, மாலையில் பாண்ட் வாசித்துக் கொண்டிருக்கும்போது நான் சென்னையில் இருந்தேன். வீட்டைப் பார்த்து வைத்துக் கொண்டு ஒரு வாரம் கழித்து, அவரைப் பார்க்கப் போனேன். அந்த ஒரு தடவை மட்டுமே அவரை நான் சந்தித்திருக்கிறேன்.

என்ன பேசினோம் என்று நினைவில்லை. ஆனால், பேச்சு பூராவும் தன் பக்கத்தில் அவர் நாவல்களைப் பற்றி யும், அவருடைய தழுவல் முறைகளைப் பற்றியும் அவர் நடையைப் பற்றிய வரையிலும்தான் என்று நான் நினைவு கூர்கிறேன். தன் நாவல்களில் பெரும் பகுதி தழுவல்கள்தான் என்று அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால், மேனகாவும் திலோத்தமை என்று ஒரு ஐந்து அங்க நாடகமும் தன் சொந்த எழுத்து என்று சொல்லி எனக்கு திலோத்தமா ஒரு பிரதி அன்பளிப்பாக அளித் தார். அதை வெகுநாள் நான் பத்திரப்படுத்தி வைத்திருந் தேன்.

அதைத் தவிர அவர் பேசிய விஷயங்களிலே முக்கியமானதாக ஒன்று நினைவுக்கு வருகிறது. எகிப் தில் தலைமுறை தலைமுறையாக ஃபாரோக்கள் என்கிற பெயருடன் அரசாண்ட மன்னர்கள் தென்னாட்டிலிருந்து எகிப்து என்கிற மிசிர தேசத்துக்குச் சென்ற வடகலை அய்யங்கார்கள்தான் என்று அசைக்க முடியாத ருசு இருப்பதாகவும், அதையெல்லாம் சொல்லித் தான் ஒரு நூல் எழுதிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். இந்தச் சரித்திர உண்மையில் இருந்த அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாக ஆங்கிலத்தில் Long Missing Links என்று ஒரு 900 பக்க நூல் எழுதி அதைத் தன் சொந்தச் செலவிலேயே அச்சிட்டு விற்க முயன்றார். புஸ்தகம் விற்கவில்லை. அச்சுக்கும், பேப்பருக்கும் ஆன

கடனை புதுசாக வாங்கிய வீட்டை விற்று அடைத்து விட்டு, பேசாமல் கிராமத்துக்குப் போய்விட்டார் என்று எண்ணுகிறேன். இந்தப் புஸ்தகமும் என்னிடம் வெகு நாள் இருந்தது.

'காங்கிரஸ் கமலம்' அல்லது 'ஆணென்று அணைய அகப்பட்ட பெண் புதையல்' என்கிற நாவலை சுதேச மித்திரனில் தொடராக எழுதி வெளியிட்டார். இதுதான் பழைய வடுவூர் பாணியில் அவர் கடைசி முயற்சி என்று எண்ணுகிறேன். அதற்குப் பிறகு அவர் முப்பதுகளில் பழைய வேகத்தையோ சாதனையையோ எட்டவில்லை. மாசத்துக்கு ஒரு நாவல் என்று எழுதி, நாவலுக்கு நூறு ரூபாய் என்று கூலி வாங்கிக் கொண்டு ஏழெட்டு ஆண்டுகள் இருந்து பிறகு இறந்து விட்டார் என்று எண்ணுகிறேன்.

சேலம் பட்டுக் கரை வேஷ்டியும், காதில் டால் வீசும் வைரக் கடுக்கனும், நெற்றியில் ஒரு சிவப்பு ஸ்ரீ சூர்ணக் கோடுமாகவும் நான் பார்த்த வடுவூர் துரைசாமி ஐயங்காரை என்னால் இன்றுகூட நினைவுகூர முடிகிறது. தமிழுக்கு அவர் சேவை சரியானபடி கணிக்கப்பட வில்லை; புரிந்து கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

— நன்றி - இலக்கியச் சாதனையாளர்கள் - க.நா.சு.

# தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆரணி குப்புசாமி முதலியாரைத் தொடர்ந்து அவர் பாணியில் தழுவல்களாக எழுதியவர் வடுவூர் துரைசாமி ஐயங்கார். தழுவல் நாவல்களாயிருந்தபோதிலும் தமிழ்நாட்டு இடப் பெயர், மக்கள் பெயர்களை வைத்தே ஜனரஞ்சகமாக எழுதப்பட்டதால், இவரது நாவல்கள்தான் தமிழ்நாட்டில் ஒரு பரந்த வாசகர் உலகத்தைச் சிருஷ்டித்து வைத்தன. புத்தகம் படிக்கும் பழக்கம் இந்த நாவல்களால் ஏற்பட்டது ஒரு புற மிருக்க, கண்டமேனிக்கு கதை எழுதும் எழுத்தாளர்களை உற்பத்தி செய்யக் காரணமாய் இருந்ததும் வடுவூரார் நாவல்கள் தான். ஆக, அக்காலச் சூழ்நிலையை ஒரு விமர்சகர் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்:

'அச்சுப் பொறி மலிந்து காகித வர்த்தகம் பெருகி வரும் இக்காலத்தில் நாவல்களும் புற்றீசல்போல் தோன்றித் தொடங்கி விட்டன. மக்களின் ஆசாரங்கள் சீர் பெறவும், பாஷை வளர்ச்சி யுறவும் நாவல்கள் பெரிதும் உதவி புரியும் என்பது உண் மையே. ஆனால், தடியெடுத்தோரெல்லாம் வேட்டைக்காரர் என்றபடி தமிழ் உலகத்திலே இறகோட்டிகளெல்லாம் நாவ லாசிரியர்களாய் முன்வந்திருப்பதால் தற்கால நாவல்கள் பெரும்பாலானவற்றால் விளையும் தீமைகள் அற்ப சொற்ப மன்று. 'ர'கர 'ற'கரங்களைச் சரியாய் வழங்க அறியாதவர் களும் தமிழ் எழுத்தாளராகத் துணிவு கொள்வதும் தமிழ் மொழியின் சனி திசையென்றே கூற வேண்டும். ஒன்றோ இரண்டோ விட புருஷர்கள், இரண்டோ மூன்றோ நாண மற்ற கன்னியர்கள், ஒரு துப்பறியும் கோவிந்தன் அல்லது கோபாலன், ஒரு ஆகாவழி ஜமீந்தார் — தமிழ் நாவல் பூர்த்தி யாகி விடுகிறது. தற்காலத்தில் துப்பறியும் நாவல்களெல் லாம் பிற நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மனோபாவங் களையும் தமிழகத்தில் பரப்பித் தமிழ் மக்களை அனாசாரப் படுகுழியில் தலைகீழாக வீழ்த்துகின்றன. நாவல்களின் தன்மை இன்னதென்றறியாத தமிழ் மக்களும் இந்த நாவல் புற்றீசல்களைக் கோழி விழுங்குவதுபோல் விழுங்கித் திருப்தி அடைகின்றனர் *(லக்ஷ்மி, செப். 1924, முத்து மீனாட்சி நாவ லுக்கு மதிப்புரையில்).*

வடுவூர் துரைசாமி ஐயங்கார் ரெயினால்ட்ஸ் போன்ற ஆங்கில நாவலாசிரியர்களின் கதைகளைத் தழுவி எழுதிய தோடு நின்று விடாமல் தமிழ்நாட்டின் சமகால சமுதாயத்தைச் சித்திரிக்கும் சொந்த நாவல்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார். இவருடைய சொந்த முயற்சிகளில் சிறந்தவை மேனகா, கும்பகோணம் வக்கீல் என்பவையாகும். கையில் எடுத்தால் புத்தகத்தைக் கீழே வைக்காமல் தொடர்ந்து படிக்கும் ரசனை மிகுந்த கதைகளை எழுதிய வடுவூர் துரைசாமி ஐயங்கார் பின்னர் கல்கி போன்றவர்களின் கதைகளைப் படிக்கத் தயாரான ஆயிக்கரணக்கான வாசகர்களைத் தோற்றுவித்த முன்னோடியாகவே விளங்கினார். இந்தப் பெருமையை ஆரணி குப்புசாமி முதலியாரும், ரங்கராஜுவும் பகிர்ந்து கொண்டனர்.

துரைசாமி ஐயங்காரின் மிகப் பிரசித்தமான மேனகா என்ற நாவலின் முதல் பக்கத்திலேயே ஓர் அடிக் குறிப்பு காணப்படுகிறது:

> 'சம்பசிவையங்கார், மேனகா என்பவை உண்மைப் பெயர்களை மறைக்கும் பொருட்டு வைக்கப்பட்ட கற்பனைப் பெயர்கள்'

என்று அந்தக் குறிப்பு விளக்குகிறது. இன்றைய நாவல்களில் வரும் 'பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. உண்மை மனிதர்களையும் சம்பவங்களையும் குறிப்பிடுபவை அல்ல' என்ற சட்ட அடிப்படையில் முன்கூட்டியே விளக்கம் சொல்லிக் கொள்வது நடப்பியல் சித்திரங்களில் இன்றியமையாத நிபந்தனையாக அமைவதற்கு மாறாக, வடுவூராரின் குறிப்பு, மேனகா கதை உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கற்பனை என்பதை உணர்த்துகிறது. மர்மங்களும் துப்பறிதலும் நுறைந்த இந்த நாவலில் வாசகர் மனதை ஈர்க்கும் சம்பவங்கள் பல கையாளப்பட்டிருக்கின்றன. உணர்ச்சிகளின் உச்ச நிலையைத் தொடும் சம்பவங்களுக்கும் குறைவில்லை. பல அல்லல்களுக்குட்படும் மேனகா, ஒரு முஸ்லிம் பெண்ணின் உதவியினால் தன் கணவனை மீண்டும் அடைவது லட்சிய கதை மாந்தர்களின் செயலின் விளைவாக அமைகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களின் சமகாலச் சூழ்நிலை 1920களில் எழுதப்பட்ட இந்த நாவலில் தத்ரூபமாக விளங்குகிறது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவல்களில் மேனகாவை அடுத்து மிகப் பிரசித்தி பெற்றது கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார் என்பது. பல மர்மங்களும், திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த இந்த நாவலில் தஞ்சைப் பிராந்தியத்தில் அன்று நிலவிய சூழ்நிலை வருணிக்கப்படுகிறது. கதையின் ஆரம்பமே பின்வருமாறு அமைந்திருக்கிறது:

'திருக்கண்ணமங்கை என்னும் சிற்றூர் தஞ்சை ஜில்லாவிலுள்ள மிக்க இரமணியமான ஒரு ஸ்தலம். அவ்வூரில் எக்காலத்திலும் ஓயாது குயிலினங்கள் தமது தீங்குரலமுதைச் சொரிந்து கொஞ்சிக் குலாவிக் குதூகலமாக வதிந்த தென்னஞ்சோலைகளுக்கிடையில், அச்சிற்றூரின் வேளாளரது தெரு அமைந்திருந்தது. அத்தெருவினிடையிலிருந்த ஒரு பெருத்த மச்சு வீட்டின் கூடத்தில் முப்பத்தைந்து வயதுள்ள ஒரு ஸ்திரீ தென்னங்கீற்று முடைந்து கொண்டிருந்தாள். அவளது கைகள் எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தனவோ அவ்வளவு சுறுசுறுப்பாகவே அவளது வாயிலிருந்து சொற்களும் வெளிப்பட்டு பக்கத்து அறையில் வாழைப் பூவை அரிவாள்மணையில் வைத்து நறுக்கிக் கொண்டிருந்த ஓர் அழகிய பெண்மணியின் செவிகளில் தாக்கிக் கொண்டிருந்தன.'

இவ்வாறு அழகாக சில காட்சிகளை வருணிக்கும் துரைசாமி ஐயங்கார் எழுத்திலே வாசகரைக் கவரும் உத்தி எங்கும் சிறந்து நிற்கிறது. 'கல்கிக்கு முன் அவ்வளவு தெளிவுடனும், அழகுடனும் வசனம் எழுதியவர்கள் வடுவூராரைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்லி விடலாம்... தமிழ் வாசகர்களின் நாடியைப் பிடித்துப் பார்த்து அறிந்து எழுதியவர்களில் காலத்தால் முதன்மையானவர் வடுவூர் துரைசாமி ஐயங்கார்...' என்பது க.நா. சுப்பிரமணியத்தின் மதிப்பீடு *(படித்திருக்கிறீர்களா?-2)*.

வடுவூர் துரைசாமி ஐயங்காரின் செல்வாக்கைப் பயன்படுத்தி, குடும்பச் சூழ்நிலையை வைத்து, ஜனரஞ்சகமான நாவல்களை எழுதியவர் வை.மு. கோதைநாயகி அம்மாள்.

நன்றி: தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் - சிட்டி, சிவபாதசுந்தரம்.

# தமிழ்த் திரையில்... முதல் நாவல்

*புராணக் கதைகளும், இதிகாசக் கதைகளும், ராஜா ராணிக் கதைகளும் படமாக எடுக்கப்பட்ட தமிழ்த் திரையின் தொடக்க காலத்தில்... முதன்முதலாக நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் மேனகா.*

*அந்நாளின் புகழ் பூத்த எழுத்தாளர் வடுவூர் துரை சாமி ஐயங்கார் எழுதிய நாவல் இது.*

*திரைப்படமாக எடுக்கப்படுவதற்கு முன்பு மேனகா நாவல், நாடகமாகவும் வடிவமைக்கப்பட்டு பல தடவை மேடையேறி புகழ் பெற்றது. அப்போது, நடிகர் எம்.கே. ராதாவின் தந்தையார் எம். கந்தசாமி முதலி யார், மேனகா நாடகத்திற்கு வசனம் எழுதினார் (டி.கே. சண்முகம் சகோதரர்கள்தான் இந்நாடகத்தைத் தயா ரித்து வழங்கியவர்கள்).*

*1935-இல் மேனகா நாவலைப் படமாக்கிய பொழுது அதில் டி.கே. பகவதி, டி.கே. சண்முகம், என்.எஸ். கிருஷ்ணன், டி.கே. சங்கரன், எஸ்.வி. சகஸ்ரநாமம், கே.ஆர். ராமசாமி, டனை். சிவதாணு ஆகியோர் நடித்தனர். இவர்கள் அனைவருக்கும் இதுவே முதல் படம் என்பதும் குறிப்பிடத் தக்க செய்தி. எம்.எஸ். விஜயா, கே.டி. ருக்மணி ஆகியோரும் நடித்த இப் படத்தை இராஜா சாண்டோ இயக்கினார். பாரதி யாரின் பாடல் முதன் முதலாக ஒலித்த படம் என்ற வர லாற்றுப் பெருமையும் மேனகா படத்தையே சேரு கிறது.*

நன்றி - பதிப்புத் தொழில் உலகம், ஜூலை 2004

# பூர்ணசந்திரோதயம்

## 1-வது அதிகாரம்

### கலையோ, பிணையோ, கவினார் மடமயிலோ!

தஞ்சை மாநகரை மகாராஷ்டிர அரசர்கள் ஆண்டு அரசு புரிந்த காலத்தில், 1812-ம் வருஷத்தில் நமது கதை ஆரம்பமாகிறது. அப்போது, திருவாரூரிலிருந்து நாகைப்பட்டணத்திற்குச் சென்ற ராஜபாட்டையின் ஓரத்தில் ஓர் அழகான மாளிகை இருந்தது. அதைச் சுற்றிலும் பூச்செடிகளும், பழமரங்களும் நிறைந்த ஒரு தோட்டமிருந்தது. அந்தத் தோட்டத்தின் நாற்புறங்களிலும் சவுக்கு, மருதாணி முதலியவற்றாலான உயர்ந்த கனமான வேலியிருந்தது. அந்த அதியலங்காரமான பூஞ்சோலைக்குள் எப்போது பார்த்தாலும் மரங்களில் பழங்கள் குலுங்கி மாதுரியமான மணத்தை நெடுந்தூரம் வரையில் வீசிக்கொண்டிருக்கும். அதுபோலவே, மிகவும் சொகுஸாகவும், அழகாகவும் வைத்து வளர்க்கப்பட்டிருந்த மல்லிகை, ஜாதி, ரோஜா, செண்பகம், இருவாட்சி, சம்பங்கி முதலியவற்றின் செடிகொடிகளில் சப்த நிறங்களைக் கொண்ட பூக்களே மயமாக நிறைந்து, தரையின்மீது ஒரு சாணுயரம் வீழ்ந்து மெத்தை பரப்பப்பெற்றது போலக் காணப்பட்டு, அந்த ராஜபாட்டை யின் வழியாகச் செல்லும் பிரயாணிகள் அவற்றினால் கவரப்பட்டு அவ்விடத்தில் சிறிது நேரமாகிலும் மயங்கி ஆனந்த பரவசமுற்று நின்ற பின்னரே போகும்படி செய்தன.

அப்படிப்பட்ட அதிமனோக்கியமான உத்தியான வனத்திற்குள், காலைமாலை நேரங்களில், மடமயில் போலவும், பேடன்னம் போலவும் பிரகாசித்த மகாவசீகரமான வனப்பு வாய்ந்த இரண்டு மடந்தையர் காணப்பட்டு, அந்த

ரமணீயமான ஸ்தலத்தின் இனிமையை ஆயிரமடங்கு அதிகரிக்கச் செய்தனர். அவ்வாறு காணப்பட்ட இரண்டு பெண்மணிகளும் சகோதரி முறைமையுடை யவர்கள். அவர்கள் தாய்தந்தை யற்றவர்களானாலும், தந்தையின் உடன்பிறந்தா ளான அத்தையினால் மிகுந்த வாத்சல்யத்தோடு வளர்த்துக் காப்பாற்றப்பட்டு வருகிறவர்கள். அந்த மடந்தையரின் தந்தை தஞ்சைபுரி அரண்மனையில், ராணுவத்தில் , காலாட்படை களுக்குத் தலைவராக இருந்து இங்கிலீஷ்காரரோடு நடத்தப் பட்ட ஒரு யுத்தத்தில் மாண்டுபோய் விட்டதாகவும், அதைக் கேட்டு அந்த விசனத்தைப் பொறாமல் அவரது மனைவியும் தேக அசௌக்கியமடைந்து ஐந்தாறு மாத காலத்தில் இறந்து போய்விட்டதாகவும், அப்போது குழந்தைகளாகவும் அநாதை களாகவும் இருந்த அந்த இரண்டு நங்கையரையும், அவர்களது அத்தையான நீலலோசனி அம்மாள் எடுத்து வந்து தனக்குச் சொந்தமான முன் விவரிக்கப்பட்ட மாளிகையில் வைத்து, தாயைக்காட்டிலும் பன்மடங்கு அதிகப் பக்ஷமாகவும், வாஞ்சையோடும் அவர்களை வளர்த்து வருவதாகவும், அந்த ஊரிலுள்ள எல்லோரும் அவர்களது வரலாற்றை அறிந்து கொண்டிருந்தனர். நீலலோசனி அம்மாள் வைதவ்வியம் அடைந்தவள். அந்த அழகான சிறிய மாளிகையைத் தவிர, சொற்பமான ஆஸ்தியே நீலலோசனி அம்மாளுக்கு இருந்தமை யால், அவள் செட்டும் சிக்கனமுமாகக் குடித்தனம் செய்து அந்தப் பெண்மணிகள் இருவரையும் செல்வமாகவும் சிறப்பாக வும் காப்பாற்றி, அக்காலத்தில் பெண்டிர் கற்கத்தகுந்த கல்வியைப் புகட்டி, அவர்களை நற்குண நல்லொழுக்கங் களிற் பயிற்றி வந்தாள். அந்த மங்கையருள் மூத்தவளது பெயர் கமலம். அவள் சுமார் பதினேழு வயதடைந்தவள். இளையவளது பெயர் ஷண்முகவடிவு. அவள் பதினைந்து வயதடைந்தவள். அவர்களிருவரும் உயர்வான ஆடையாபர ணங்களை அணிந்திரா விடினும், அவர்களுக்கு இணையான கட்டழகும் காந்தியும் வசீகரத்தன்மையும் வாய்ந்த பெண்

சிருஷ்டியே இந்த உலகத்தில் இல்லையென்று எல்லோரும் கூறி பிரமிக்கும் படியாக, அந்த அணங்குகள் இருவரும் இயற்கை எழில்பெற்ற இரண்டு நட்சத்திரச் சுடர்கள்போல் இருந்தனர். ஆனால், மூத்தவளான கமலத்திற்கும் இளையவளான ஷண்முக வடிவிற்கும், தேக அமைப்பிலும், குண விசேஷங்களிலும், நடத்தையிலும், அதிக தாரதம்மியம் இருந்து வந்தன. இருவர் களும் அதிதீக்ஷண்ய புத்தியுடைய வர்களானாலும் மூத்தவள் மகா தந்திரி; இளையவன் குழந்தை போன்ற கபடமற்ற மனமுடையவள். மூத்தவள் வேளாவேளைக்கு நன்றாக உண்டு, அழகாக உடுத்தி, சொகுஸாக இருந்து, மெலுக்காகப் பொழுதைப் போக்குகிற சுகவாஸி. இளையவளோ உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு என்ற வாக்கியத்திற்கு ஒரு உதாரணமாய், எவ்வளவு சொற்பமாக உண்ணக் கூடுமோ அவ்வளவு சொற்பமாக உண்டு வீட்டிலுள்ள சகலமான அலுவல்களையும் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும், தலைப்பொறுப்பாகச் செய்யும் உழைப்புக் குணமுடையவள். மூத்தவள் மாசுமறுவற்ற தேக அமைப்பையும், கட்டுமஸ்தான அங்கங்களையும், வசீகரமான முகம், மார்பு, இடை, நடை முதலிய சிறப்புகளையெல்லாம் சம்பூரணமாகப் பெற்று, நவராத்திரிக் கொலுவில் சிங்கார மண்டபத்தில் சித்திரப் பதுமைகளிடையில் கொலு வீற்றிருந்து அக்கிராசனம் வகிக்கத் தகுந்த ஒப்புயர்வற்ற பட்டத்துராணிபோல இருந்து, ரதி தேவியோ, இந்திராணியோ என்று சகலரும் மயங்கிக் கலங்கும்படி யாகவும், ஐம்புலன்களையும் அடக்கி அருந்தவம் புரியும் துறவிகளும் மோகலாகிரி கொண்டு நெடுமூச்செறியும் படியாகவும் இருந்தாள். ஷண்முகவடிவோ அடக்கம், ஒடுக்கம், வீட்டின் காரியங்களிலே கவனம் முதலிய உத்தம குணங்களெல்லாம் நிறைந்து, மகாலக்ஷ்மியோ, பார்வதி தேவியோ, கலைமகளோ என அவளைக் கண்டோர் எவரும் ஒருவித சந்தோஷமும் வியப்பும் கொண்டு, அவளிடத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைக்கத் தகுந்த

குடும்பஸ்திரீயாக இருந்தாள். வேடிக்கையாகவும், ஆசியமாகவும், உல்லாசமாகவும் பேசிக்கொண்டிருக்க யாராவது மனிதர் அகப்பட்டுவிட்டால், மூத்தவள் மூன்று தினங்களானாலும் ஊணுறக்கமின்றி அவர்களோடு பேசிச் சிரித்துக் கொண்டிருப்பாள். இளையவளோ மிருதுபாஷிணி; அநாவசியமான வார்த்தைகளைப் பேசினால் வாய்முத்து சிந்திவிடுமென எண்ணுகிறாளோவென மற்றவர் நினைக்கும்படியாக, ஏதேனும் அவசியமான விஷயங்களை மாத்திரம் பேசுவாள்; மற்ற வேளைகளில், வீட்டின் அலுவல்களைச் செய்வதிலோ, அல்லது, நல்ல புண்ணிய சரிதங்களைப் படிப்பதிலோ, அல்லது, தனது அத்தை அக்காள் முதலியோருக்கு ஆகவேண்டிய குற்றேவல்களைச் செய்வதிலோ தனது கவனத்தை நாள் முழுதும் செலுத்திக் கொண்டிருப்பாள். தன் மனது நினைத்த காரியத்தை மற்றவர் நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற ஒரு பிடிவாதகுணம் கமலத்தினிடத்தில் இருந்துவந்தது. ஷண்முக வடிவோ, மூத்தோர் சொல்லும் வார்த்தையை அமிர்தமாக மதித்து அவர்களுக்கு அடங்கி அவர்களது பிரியப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற உத்தமஸ்திரீயின் லக்ஷணம் பூர்த்தியாகப் பெற்றிருந்தாள்.

இவ்விதமாக அந்த இரண்டு பெண்மணிகளின் குணாதிசயங்களின் தாரதம்மியம் இருந்துவந்ததானாலும், அவர்களிருவரும் ஒருவர் மீதொருவர் கரைகடந்த பிரியமும், வாஞ்சையும் வைத்தவர்களாய் இரண்டுடலும் ஓருயிரும் போல இருந்ததன்றி, தாயைக்காட்டிலும் பன்மடங்கு அதிக அன்பாகத் தங்களைக் காப்பாற்றிவந்த அத்தையிடத்தில் மட்டுக்கடங்காத மரியாதையும் பயபக்தியும் வைத்து விருத்தாப்பிய தசையிலிருந்த அந்த அம்மாளைப் பேணிப் பாராட்டி வந்தனர்.

அவ்வாறு, அந்த எளிய குடும்பத்தினர் வாழ்க்கை நடத்தி வந்த காலத்தில், அவர்களுக்கு மகாவிபரீதமான ஒரு பொல்லாங்கு சம்பவித்தது. அந்தப் பொல்லாங்கு, எவரும்

எதிர்பார்க்காத வகையில் திடீரென்று நேர்ந்தமையால், அதன் கொடுமை அவர்களால் சகிக்க ஒண்ணாததாக இருந்தது. அந்த மடந்தையரின் அத்தையான நீலலோசனியம்மாளுக்குத் திடீரென்று பக்ஷவாத நோய் ஏற்பட்டுப் போகவே, அவள் பாயும் படுக்கையுமாக ஆகிவிட்டாள். வாயைத் திறந்து பேசமாட்டாமல், அவளுக்கு வாய் அடைத்து போய்விட்டது. கைகளால் சைகை காட்டித் தனது மனதிலுள்ளதை வெளியிடலாமென்பதற்கும் கைகளும் சொரணையற்றுக் கட்டைபோலப் போட்ட இடத்தில் கிடந்தன. அவளது உயிர்மாத்திரம் உடலில் தங்கியிருந்தது. மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவள் நன்றாக உணர்வது; அவளது கண்களின் பிரகாசத்தினால் தெரிந்தது. ஆனால், அவளது உடம்பின் எந்தப் பாகமும், அவளது விருப்பத்தின்படி அசையாமல் உயிரற்ற மாம்சத்திரளாக இருந்தது. அவள் அப்படிப்பட்ட விபரீதமான நிலைமையிலிருந்தது அவள் இறந்து போவதைவிடப் பன்மடங்கு அதிகமான கொடுமையாக இருந்தது. அந்த விபரீதத்தைக் கண்டு மிகுந்த கலக்கமும் திகிலும், கவலையும் கொண்ட அந்தப் பெண்மணிகள் இருவரும், கையைப் பிசைந்துகொண்டு, தாங்கள் என்ன செய்வதென்பதை அறியாமல் தத்தளித்திருக்க, அவர்களது வீட்டின் வேலைக்காரி யான முத்தம்மாள் என்பவள், அந்த ஊரிலுள்ள பிரபல வைத்தியனான நாவித முருகனை அழைத்து வந்து நீலலோசனி யம்மாளின் தேகக்கூறை உணர்ந்து அதற்குத் தகுந்த ஔஷதங்களைக் கொடுக்கும்படி செய்தாள். அவன் தன்னால் இயன்ற வரையில் முயன்று பலநாட்கள் வரையில் மருந்துகள் கொடுத்ததெல்லாம் சாம்பலில் பெய்த நெய்போல வீணாயிற்று. அந்த ஊரில் அவர்களுக்குப் பழக்கமாக இருந்த சில மனிதர்களது யோசனையின் மேல் வேறே ஊர்களிலிருந்த பல பிரபல வைத்தியர்களும் வருவிக்கப்பட்டனர். அவர்கள் தங்களது திறமையை முற்றிலும் புலப்படுத்தி மாதக்கணக்கில் அங்கே இருந்து சிகிச்சை செய்து பார்த்தனர். ஆனால்

நீலலோசனி அம்மாளது தேக ஸ்திதியில் சொற்ப அநுகூலமும் காணப்பட வில்லை. அவளது தேகத்தின் ஒவ்வோர் அங்கமும் மீளாதபடி இறந்துபோக, அவளது உயிர் மாத்திரம் நிற்பதுபோல ஆகி விட்டது. அவ்வாறு ஆறுமாத காலம் கழிந்தது; நீலலோசனி யம்மாளது பெட்டியில் பணமிருந்த வரையில், அந்தப் பெண்களுக்குப் பணவிஷயத்தைப் பற்றிய கவலையே தோன்றா மலிருந்தது. மூத்தவளான கமலம் துரும்பை யெடுத்துத் துரும்போடு போடாமல் மெலுக்காக இருக்கும் இயற்கை யுடையவளாதலால், வீட்டின் சகலமான பொறுப்பையும் அலுவல்களையும் ஷண்முக வடிவே ஏற்று நடத்திக்கொண்டு போக நேர்ந்தது. கடைசியாக ஒருநாள், ஷண்முகவடிவு தனது அத்தையின் பெட்டியைத் திறந்து, அதற்குள்ளிருந்த கடைசி ரூபாயை எடுத்து வேலைக்காரியிடத்தில் கொடுத்துக் கடைக்கு அனுப்பியபோதுதான் மறுநாளைக்கு வேண்டிய பணத்திற்கு என்ன செய்கிறது என்ற கவலையும் அச்சமும் அவளது மனதில் எழுந்து சஞ்சலப்படுத்தத் தொடங்கியது; அவள் உடனே தனது அக்காளண்டையில் போய்த் தனது கவலையை வெளியிட, அக்காள் சிறிதுநேரம் சிந்தனை செய்தபின், தனது அத்தையின் பெட்டிகளை நன்றாக ஆராய்ந்து அவற்றுக்குள்ளிருந்த தஸ்தாவேஜுகளை எல்லாம் படித்துப் பார்த்தால் அத்தைக்கு அதுவரையில் எந்த மூலமாக வருமானம் வந்து கொண்டிருந்த தென்பது தெரியுமென்று தங்கைக்கு யோசனை சொன்னாள். அவ்வாறே அத்தையின் பெட்டிகளிற் குள்ளிருந்த தஸ்தா வேஜுகள் யாவும் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. அவைகளில் பண விஷயமான தகவல் எதுவும் அகப்படவில்லை. மிகவும் இடுக்காக இருந்த அந்த நிலைமையில் அவர்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாக்கத் தக்க எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. பெண்கள் இருவரும் கையைப் பிசைந்துகொண்டு தவிக்கிறார்கள். அப்போது இளையவளுக்கு ஒரு நினைவு தோன்றியது. தங்களது அத்தை ஆறு மாத காலத்திற் கொருமுறை திருவாரூரிலிருந்த ஒரு செட்டியாரது பாங்கிக்கிப்

போய்ப் பணம் வாங்கிக் கொண்டு வந்ததை அவள் அறிந்து கொண்டிருந்தாளாதலால், தான் அங்கே போய் விசாரித்தால் உண்மை தெரியவரும் என்ற நம்பிக்கை கொண்டவளாய், ஷண்முகவடிவு தனது வேலைக்காரியை அழைத்துக் கொண்டு திருவாரூரிலிருந்த செட்டியார் பாங்கிக்குப் போய்த் தங்களது வரலாற்றைச் சொல்லி, தங்களுக்கு எங்கிருந்தாகிலும் பணம் வருவதுண்டா வென்று விசாரித்தாள். அந்த பாங்கியின் நிர்வாகஸ்தரான செட்டியார் மிக அன்பாகவும், மரியாதை யாகவும் ஷண்முக வடிவை வரவேற்று, தங்களுடைய பாங்கியின் சொந்தக்காரர் தஞ்சை நகரத்தில் ஒரு பெருத்த பாங்கி வைத்திருப்பதாகவும், அதன் கிளைபாங்கியே திருவாரூரிலி ருப்பதென்றும், ஆறு மாதத்திற்கொருமுறை நீலலோசனியம் மாளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி தஞ்சை நகரத்து பாங்கியிலிருந்து உத்தரவு வருவதும், நீலலோசனியம்மாள் வந்து அதைப் பெற்றுக்கொண்டு போவதும் வழக்கமென்றும், அதைத் தவிர மற்ற விவரம் எதுவும் தமக்குத் தெரியாதென்றும் செட்டியார் சொன்னதன்றி, தாம் உடனே தமது தலைமை பாங்கிக்கு அந்த விபரங்களை யெல்லாம் எழுதுவதாகவும், நீலலோசனி யம்மாள் விபரீதமான நிலைமையிலிருப்பதால் பெண்கள் இருவரும் அநாதரவாகத் தவித்திருக்கும் விஷயத்தை எடுத்துக் கூறுவதாகவும் வாக்களித்து ஷண்முகவடிவை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

அதன்பிறகு சில நாட்கள் கழிந்தன. மறுபடியும் ஷண்முக வடிவு செட்டியாரது பாங்கிக்குப் போய் விசாரிக்க செட்டியார் அவளுக்குச் சந்தோஷகரமான செய்தியைத் தெரிவித்தார். தஞ்சையிலுள்ள சோமசுந்தரம் பிள்ளை என்ற ஒருவருடைய பணம் தஞ்சையிலுள்ள பாங்கியிலிருப்பதாகவும், அவரது உத்தரவின் மேல் ஆறு மாதத்திற்கு ஒருமுறை நீலலோசனி யம்மாளுக்கு அவ்வாறு பணம் கொடுத்து வரப்பட்டதென்றும், அப்போது நீலலோசனியம்மாள் பக்ஷவாதத்தினால்

நகரமாட்டாமல் கிடப்பதை அறிந்து மேற்படி ஆகிய இருவரது கையெழுத்துகளுள்ள ரசீதைப் பெற்று ஆறுமாத காலத்திற்கு ஒருமுறை அனுப்பி வைத்தால், மேற்படிப் பணத் தொகையைக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் தஞ்சையிலிருந்து மறுமொழி கிடைத்திருப்பதாகச் செட்டியார் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

அந்த நற்செய்தியைக் கேட்டு மிகவும் களிகொண்டு திரும்பிய ஷண்முகவடிவு தனது ஜாகையை அடைந்து அந்த மகா சந்தோஷகரமான சமாசாரத்தைத் தனது அக்காளிடத்தில் தெரிவித்து அவளை இன்புறச் செய்து வழக்கம்போலத் தனது குடும்பக் காரியங்களைச் சரிவர நடத்திவரலானாள். அந்தப் பெண்மணி அப்போதும் நிபுணர்களான பல வைத்தியர்களை வருவித்துத் தனது அத்தைக்கு ஆகவேண்டிய சிகிச்சைகளைச் செய்வித்து வந்ததன்றி, அவளுக்குரிய ஆகாராதி சகல சௌகரியங்களுக்கும் எவ்விதக் குறைவுமின்றிப் பார்த்து வந்தாள்; கமலம் தனது இயற்கைப்படியே சதாகாலமும் சந்தோஷ புருஷியாக இருந்து, உண்பதும் உடுப்பதும் உல்லாசமாய்ப் பலவிதமாகப் பொழுதைப் போக்குவதுமே வேலையாகச் செய்துவந்தாள். அவ்வாறு ஒன்றரை வருஷகாலம் எவ்விதத் துன்பமுமின்றி சந்தோஷகரமாகக் கழிந்தது. அதற்குள், அவர்களிருவரும் கையெழுத்துச் செய்த ரசீதுகளை பாங்கிக்கு அனுப்பி அவர்கள் மூன்றுதரம் ஆயிரம் ரூபாய் வாங்கி, சுகமாகக் காலக்ஷேபம் செய்துவந்தார்கள். நான்காவது ஆறுமாதம் வந்தது. வழக்கப்படி பெண்மணிகள் ரசீது தயாரித்து திருவாரூர் பாங்கியில் கொடுக்க, அது தஞ்சைக்குச் சென்று வழக்கப்படி இரண்டு நாட்களில் திரும்பிவந்தது. ஆனால், பணம் கொடுக்கும்படி அதன்மேல் உத்தரவு செய்யப்படாமலிருந்தது அன்றி, அந்த பாங்கியின் அதிபரான செட்டியார், அதன்மேல், ''சோமசுந்தரம் பிள்ளையின் உத்தரவு கிடைக்கவில்லையாகையால், பணம் பட்டுவாடா செய்ய வேண்டாம்'' என்று எழுதியனுப்பி யிருந்தார். அந்த

விவரத்தை உணர்ந்த ஷண்முகவடிவு, சோமசுந்தரம்பிள்ளை என்பவர் ஒருகால் மறதியினால், தலைமை பாங்கிக்கு உத்தரவு கொடுக்காமலிருந்திருப்பார் என்று நினைத்தவளாய் மேற்படி சோமசுந்தரம் பிள்ளையின் மேல் விலாசத்தை தஞ்சை பாங்கியி லிருந்து தெரிந்துகொண்டு அவருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி, தாங்கள் பணம் இல்லாமல் துன்பப்படுவதாகத் தெரிவித்துக் கொண்டாள். அந்தக் கடிதத்திற்கு எவ்வித மறு மொழியும் கிடைக்க வில்லை. அவள் சில நாட்கள் பொறுத்துப் பொறுத்து இரண்டு மூன்று நான்கு கடிதங்கள் வரையில் எழுதிப் பார்த்தாள். மறுமொழியே கிடைக்கவில்லை. என்ன செய்கிறது! ஷண்முகவடிவு நெருப்பின்மேல் வீழ்ந்த புழுவெனத் துடித்து, திருவாரூர் பாங்கிக்குப் போய்ச் செட்டியாரிடத்தில் கூற, சோமசுந்தரம் பிள்ளையிடத்தில் போய், உண்மையான விவரங்களைக் கேட்டறிந்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்வதாக வாக்களித்தார். மறுபடியும் சில நாட்கள் சென்றன. ஷண்முகவடிவு பாங்கிக்குப் போய் விசாரிக்க, தஞ்சையிலிருந்து வந்த கடிதத்தில், மேற்படி பாங்கி குமாஸ்தா தமக்கு வேலை தொந்தரவு அதிகமாகவிருப்பதால் தாம் சோமசுந்தரம் பிள்ளையிடத்தில் போய் விசாரித்து எழுத சௌகரியப்பட வில்லையென்று எழுதியிருந்த விஷயம் அவளுக்கு அறிவிக்கப் பட்டது. அதற்கு மேல் தாம் ஒன்றும் செய்வதற்கில்லை யென்றும், அவர்களே முகதாவில் தஞ்சைக்குப்போய் விசாரிப்பதே நலமென்றும் செட்டியார் கூறி ஷண்முகவடிவை அனுப்பிவிட்டார். கலங்கிய மனதும் வாடிய முகமும் கொண்டவளாய் வீட்டிற்கு வந்து சேர்ந்த அந்த இளைய மடந்தை நிகழ்ந்த விஷயங்களையெல்லாம் தனது அக்காளிடத்தில் சவிஸ்தாரமாகத் தெரிவிக்க, உடனே இருவரும் கலந்து நெடு நேரம் வரையில் யோசனை செய்து தங்களுள் எவளேனும் ஒருத்தி முகதாவில் தஞ்சைக்குப் போய் விஷயங்களை நிச்சய மாகத் தெரிந்துகொண்டு வருவதே முடிபெனத் தீர்மானித்தனர்.

அதுகாறும் ஒரு சாய்மான நாற்காலியில் சொகுஸாகச் சாய்ந்திருந்த கமலம் துடியாக எழுந்து, ''நானே தஞ்சைக்குப் போய் விட்டு வருகிறேன். நீயும் வேலைக்காரியுமாக இருந்து அத்தையையும் வீட்டையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருங்கள். நீ உலக அநுபோகம் இல்லாத சின்னவள். இப்படியாகத் தனியாகப் போவதில், ஏதேனும் துன்பம் சம்பவிக்கும். அதையெல்லாம் அநுபவிக்க மூத்தவளான நான் தான் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் தவிர, வீட்டுக் காரியங்களை யெல்லாம் பார்ப்பதிலும், அத்தைக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்வதிலும் நீதான் கைதேர்ந்த அநுபவசாலி. ஆகையால், நீ இங்கேயிருப்பது தான் உசிதமான காரியம்'' என்றாள்.

அந்த ஏற்பாட்டிற்கு எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல் ஷண்முகவடிவு அப்படியே செய்வதென்று ஒப்புக் கொண்டாள். அந்த ஊரிலிருந்து தஞ்சைக்கு அப்போது ரயில்பாதை போடப்பட வில்லையாதலால், நாகைப்பட்டணத்திலிருந்து விடிய ஜாமத்திற்குப் புறப்படும் தபால் வண்டிகளிலோ, அல்லது பிரத்தியேகமாக அமர்த்தப்படும் வண்டிகளிலோ ஜனங்கள் தஞ்சைக்குப் போவது வழக்கம். ஆனால் தபால் வண்டிகள் குதிரை வண்டிகளாதலால், அவற்றின் மூலமாகப் போவதே துரிதத்தில் போய்ச் சேரக் கூடிய வசதியாதலால், எல்லாரும் அவற்றின் மூலமாகவே போவது வழக்கம். ஆகவே, கமலம் தங்களது வேலைக் காரியை நாகைப்பட்டணத்திற்கு அனுப்பி, ஒரு மனிதருக்குத் தேவையான இடத்திற்கு அச்சாரம் கொடுத்துவிட்டு, தாங்கள் இருக்கும் இடத்தின் அடையாளத்தை யும் நன்றாகத் தெரிவித்துவிட்டு வரச்செய்தாள். அந்தத் தபால் வண்டிகள், மறுநாள் விடியற்காலம் ஐந்துமணிக்கு அவர்களது மாளிகையின் வாசல் வழியாகச் செல்லுமாதலால், அப்போது புறப்பட்டுப் போக ஆயத்தமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு கமலம் தனது பிரயாணத்திற்கு வேண்டிய முஸ்தீபுகளையெல்லாம் செய்து கொள்ளத் தொடங்கினாள்.

அதுவரையில் நாற்காலியில் உல்லாஸமாகச் சாய்ந்து உடம்பிற்கு உழைப்பே கொடுக்காமல் மெலுக்காக இருந்துவந்த அந்த வடிவழகியின் தேகத்தில் அப்போது ஒருவிதமான புதிய ஊக்கமும், உற்சாகமும் பரபரப்பும் காணப்பட்டன. ஏனென்றால், அந்தக் காலத்தில் தஞ்சைமாநகரம் அரசனது வாசஸ்தலமாக இருந்தது. ஆகையால், அதில் பிரம்மாண்டமான அரண்மனையும், மாட கூடங்களும், தேவாலயங்களும், தடாகங்களும் ஏராளமாக நிறைந்து மிக உன்னதமான பட்டணமாக இருந்ததென்பது பற்றி, கிராமவாசிகள் எல்லோரும் அந்த ராஜதானிக்குப் போய்ப் பார்ப்பதை ஒரு பெருத்த பாக்கியமாக மதித்து வந்தனர். அதுவும் தவிர, அந்த மடந்தையரின் அத்தை தஞ்சை நகரத்தின் சிறப்பைப் பற்றி அபாரமாகப் புகழ்ந்து எப்போதும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டிருந்ததனால் உண்டாகிப் பெருகிக்கொண்டே வந்திருந்த ஆசையும் ஆவலும் அப்போது மும்முரமாக எழுந்து அவளது மனதில் கட்டுக்கடங்காத உற்சாகத்தையும் மனவெழுச்சியையும் உண்டாக்கின. ஆகையால் கமலம் அன்றைய இரவு தனது இமைகளையே மூடாமல் மிகுந்த ஆவலோடு படுத்திருந்தாள்.

விடியற்காலம் சரியாக ஐந்துமணிக்குத் தபால் வண்டிகள் அவர்களது பங்களாவின் வாசலில் வந்து நின்றன. வண்டிக்காரன் ஒருவன் கதவைத் தட்டி அவர்களை அழைக்க, கமலம், ஷண்முகவடிவு, வேலைக்காரி ஆகிய மூவரும் உடனே எழுந்தனர். கமலத்தின் உடைகளும், சில சிற்றுண்டிகளும் அடங்கிய ஒரு சிறிய மூட்டையை வேலைக்காரி தனது கரத்தில் எடுத்துக்கொண்டு முன்னாக வண்டியண்டை சென்றாள்.

கமலம் புறப்பட்டுப் போகும் அவசரத்தில் தனது தங்கையை நோக்கி, ''அம்மா! வீட்டையும் அத்தையையும் பத்திரமாகப் பார்த்துக்கொள். நான் போய்விட்டு அதிசீக்கிரத்தில் வந்து சேருகிறேன்'' என்று திடமாகவும் துணிவோடும் கூறினாள். ஆனால், ஷண்முகவடிவின் மனதும் கண்களும் கலங்கின. தனது

அக்காள் தன்னைத் தனியாக விட்டுப் பிரிந்து நெடுந்தூரத்திலுள்ள ஊருக்குப் போவதைப்பற்றி பெருத்த திகிலும் சஞ்சலமும் எழுந்து அவளது மனத்தைக் கலக்கத் தொடங்கின. தன்னைவிட்டுத் தனது அக்காள் நெடுங்காலத்திற்குப் பிரிந்திருக்க நேர்ந்து விடுமோ வென்றும், அவளுக்குத் தஞ்சையில் ஏதேனும் துன்பம் சம்பவிக்குமோ வென்றும் நினைத்துக் கலங்கி ஷண்முகவடிவு கண்ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். தனது வலது கண்ணும் வலது பக்கமும் துடித்ததிலிருந்து பின்னால் ஏதேனும் தீங்கு சம்பவிப்பதற்கு அது அறிகுறியோ என்று அஞ்சி, மிகுந்த வேதனைக்குள்பட்டு நைந்துருகினாள். அவளது நிலைமையைக் கண்ட கமலம் மிகுந்த விசனமும் சஞ்சலமும் அடைந்தவளாய் தனது தங்கையைத் தேற்றி, ஈசுவரனது அருளால் தங்களுக்கு எவ்விதத் துன்பமும் நேராதென்று உறுதி கூறி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுப் போய் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டாள். அவ்விடத்தில் நின்ற வேலைக்காரி கொடுத்த மூட்டையைக் கமலம் வாங்கிக்கொள்ள வண்டி அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டது. அக்காளைவிட்டுப் பிரிந்த ஷண்முகவடிவு கரை கடந்த துயரமுற்றவளாய்க் கண்ணும் கண்ணீருமாக இருந்து தனது அக்காள் நல்ல செய்தியோடு க்ஷேமமாக அதி சீக்கிரத்தில் திரும்பி வரும்படி அநுக்கிரகிக்க வேண்டுமென்று அவளுக்குத் தெரிந்த சகலமான தெய்வங்களையும் வேண்டிக்கொண்டே இருந்தாள்.

தபால் வண்டிகள் விரைவாக ஓட ஆரம்பித்தன. திருவாரூரிலுள்ள தெருக்கள், கோயில், கமலாலயம், ஆறு, சோலைகள் முதலியவைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பின்னிட்டுத் தூரத்தில் போகப்போக கமலத்தின் மனதில் சகிக்கமுடியாத வேதனையும் துயரமும் பெருகி வதைக்கத் தொடங்கின. தான் பிறந்ததுமுதல் அதுவரையில் இருந்து பழகிய ரமணீயமான இடத்தையும், தனக்கு நெருங்கிய அருமையான பந்துக்களையும் விட்டுத் தான் எங்கேயோ போக

நேர்ந்துவிட்டதே என்ற கவலையும் துயரமும் அவளைக் கலக்கினவாதலால், அவளது கண்கள் கண்ணீரை ஓடவிட்டுக் கொண்டே இருந்தன. அவளோடுகூட வண்டியிலிருந்த சகப்பிரயாணிகள் யாவரும் அவளது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு இரங்கி அவளைத் தேற்ற ஆரம்பித்தனர். வேறு சிலர் தஞ்சைபுரியிலுள்ள அதிசயக் காட்சிகளைப் பற்றி விரிவாகப் பேசப்பேச, கமலத்தின் கவனம் அந்த விஷயங்களில் சென்றமையால், அவளது விசனம் குறைந்து கொண்டே வந்தது.

அன்றைய பகல் முழுவதும் தபால் வண்டிகள் பிரயாணம் செய்தன. இடையிடையே இருந்த ஊர்களில் வண்டி சிறிது நிறுத்தப்பட்டதனால், அந்தப் பிரயாணிகள் இடைவழியில் காணப்பட்ட சத்திரங்களில் இறங்கித் தங்களது போஜனத்தை முடித்துக்கொண்டனர். எவ்வித விசேஷ சம்பவமுமின்றி அந்தத் தபால் வண்டிகள் இரவு ஒன்பது மணிக்குத் தஞ்சையை அடைந்தன. மற்றப் பிரயாணிகளுள் சிலர் அங்கே காணப் பட்ட ஒரு சத்திரத்தில் இறங்கினராதலால், அவர்களோடு பழக்கம் செய்துகொண்ட கமலமும் அவ்விடத்திலேயே இறங்கி, தான் கொணர்ந்திருந்த ஆகாரத்தை உண்டுவிட்டு அவ்விடத்திலேயே படுத்து அன்றைய இரவைப் போக்கி மறுநாள் விழித் தெழுந்தாள். எழுந்தவள் தனது காலைக்கடன்களை முடித்துக் கொண்டு பக்கத்திலிருந்த அன்னசாலையிலிருந்து ஆகாரம் தருவித்து உண்டபின், மேற்கு ராஜவீதிக்குப் போவதற்கு ஒரு வண்டியமர்த்தி, அதற்குள் உட்கார்ந்துகொண்டு புறப்பட்டாள். அந்த வீதியில் 20வது இலக்கமுள்ள வீட்டிலிருக்கும் சோமசுந்தரம் பிள்ளை என்பவரிடத் திற்குத் தன்னைக் கொண்டு போய் விடவேண்டு மென்று அவள் தெரிவிக்கவே, வண்டிக் காரன் அவ்வாறே வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். எங்கு பார்த்தாலும் அகழியும், அலங்கங்களும், ஏழு உப்பரிக்கை களைக் கொண்ட அரண்மனையும், மாடங்களும், ஆகாயத்தை அளாவிய கோபுரங்களைக் கொண்ட கோவில்களும், வேறு பலவிதமான அணிகளும் நிறைந்து காணப்பட்டு, காண்போர்

பிரமிக்கும்படி இருந்தன. அப்படிப் பட்ட அற்புதக் காட்சிகளை யெல்லாம் கடந்து, அந்த வண்டி எண்ணிறந்த தெருக்களையும், சந்து பொந்துகளையும் தாண்டிச் சென்றது. தஞ்சையைப்பற்றி ஜனங்கள் பேசிக்கொள்வதெல்லாம் உண்மையான விவரங்கள் என்பதைக் கண்ணாரப் பார்த்துக் களிகொண்டு சென்ற கமலம், இடையிடையே தனது அத்தை, தங்கை, தனது சொந்த ஊர் முதலியவற்றை நினைத்துப் பெருமூச்செறிந்தாள்.

கடைசியில் வண்டி மேற்கு ராஜவீதியை அடைந்து 20வது இலக்கமுள்ள வீட்டின் வாசலில் போய் நின்றது. அந்த ஜாகை, நான்கு உப்பரிக்கைகளையும், முன்பக்கத்தில் தோட்டத்தையும் கொண்ட மகா உன்னதமான ஒரு மாளிகையாக இருந்தது. கமலம் வண்டியைவிட்டுக் கீழே இறங்கி நின்றாள். வண்டிக் காரன், அந்த மாளிகையின் முன்புற வாசற்கதவை மெதுவாக இடிக்க, உடனே ஒரு சேவகன் வந்து கதவைத் திறந்தான். அவன் தலைப்பாகை, அங்கி, வெள்ளிபில்லை, டாலிடவாலி முதலிய வைகளை அணிந்து யாரோ பெருத்த அதிகாரியின் டலாயத்து போலக் காணப்பட்டான். ஆனால், கமலம் கேட்டதற்கு அவன் சொன்ன மறுமொழி, பெருத்த திகைப்பையும், வியப்பையும், கவலையையும் உண்டாக்கின. அந்த வீட்டில் சோமசுந்தரம் பிள்ளையென்ற பெயருடைய மனிதர் எவருமில்லை என்றும், அந்த மாளிகை பவானியம்பாள்புரத்து ஜெமீந்தாரது வாசஸ்தலமென்றும் அந்தச் சேவகன் கூறியதைக் கேட்ட கமலம், அந்த வீட்டின் கதவிலக்கத்தை இன்னொருமுறை ஆராய்ந்து பார்க்க, 20-என்ற இலக்கமே கதவில் காணப்பட்டது. அது சரியான இலக்கம் என்று சேவகனும் ஒப்புக் கொண்டான். உடனே கமலம் தனது மூட்டையை அவிழ்த்து அதற்குள்ளிருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்தாள். தஞ்சையிலிருந்த பாங்கியின் தலைவரால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த விலாசத்தை அவள் இன்னொரு முறை கவனித்து நோக்க, அதிலும் அதே விலாசம் சந்தேகமறக் காணப்பட்டது. அவள் என்ன செய்வதென்பதை அறியாதவளாய்த் தயங்கித் தவித்தாள்.

அதைக் கண்ட அந்தச் சேவகன் அந்த மேற்கு ராஜவீதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் இன்னின்னார் இருக்கிறார்களென்பது தனக்குத் தெரியுமென்றும், சோமசுந்தரம் பிள்ளையென்ற மனிதரே அந்த வீதியில் இல்லையென்றும் உறுதியாகக் கூறினான். அதைக் கேட்ட கமலத்தின் குழப்பமும் கலக்கமும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தன. அந்த மடமங்கை நிலை கலங்கிச் சிறிது நேரம் அப்படியே நின்று சிந்தனையில் ஆழ்ந்தபின், அந்தச் சேவகனைப் பார்த்து, ''ஐயா! மேற்கு ராஜவீதியில் 20-ம் இலக்கத்திலுள்ள சோமசுந்தரம் பிள்ளைக்குக் கொடுப்பதென்று ஏதாகிலும் கடிதங்கள் இந்த வீட்டிற்கு வந்ததுண்டா? அதையாகிலும் தெரிவி'' என்றாள். அந்த வேலைக்காரன் அப்படிப்பட்ட கடிதம் எதுவும் அங்கே வந்ததே இல்லையென்று மிகவும் நிச்சயமாகவும் உறுதியாகவும் உடனே கூறிவிட்டான். அதற்குமேல் தான் என்ன செய்வதென்பதையும், அந்த மர்மத்தை என்னவென்று யூகித்துக் கொள்வதென்பதையும் உணராமல், அந்தப் பெண்மணி தவித்தாளானாலும், தான் எப்பாடு பட்டாகிலும் அந்த விஷயத்தை முற்றிலும் ஆராய்ச்சி செய்தே தீர வேண்டுமென்ற உறுதிகொண்டவளாய் அந்த வேலைக் காரனை நோக்கி, அந்த மாளிகையின் சொந்தக்காரரான பவானியம்பாள்புரத்தின் ஜெமீந்தாரிடத்தில் தான் இரண்டொரு நிமிஷம் நேரில் பேசும்படி செய்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, உடனே அந்த வேலைக்காரன் கமலத்தை நோக்கி, ''அம்மா! என்னுடைய எஜமானர் சில வாரங்களாக ஊரில் இல்லை. வெளியூருக்குப் போயிருக்கிறார். அவர் எப்போது திரும்பி வருவார் என்பது இப்போது நிச்சயமாகத் தெரிய வில்லை. ஆனால் அவருடைய குமாரர்தான் உள்ளே இருக்கிறார். அவரை வேண்டுமானால் பாருங்கள்'' என்றான். கமலம் அதற்கு இணங்க, உடனே சேவகன் உள்ளேபோய்த் திரும்பிவந்து, அந்த மடந்தையை அழைத்துக்கொண்டு உட்புறத்தில் நுழைந்து மேன்மாடத்திற்குச் சென்று அவ்விடத்தில் மிகவும் அழகாகவும்

அலங்காரமாகவும் சிங்காரிக்கப்பட்டிருந்த ஒரு ஹாலிற்குள் நுழைய, அவ்விடத்தில் ஒரு ஸோபாவின்மீது உட்கார்ந்திருந்த ஒரு யௌவன புருஷன் கமலத்தை அன்பாக வரவேற்றான். அவனது வயது இருபத்திரண்டு இருக்கலாம். வசீகரமான முகமும், அழகும் நெட்டையுமான சிவந்த ஒற்றைநாடி உடம்பும் பெற்றிருந்த அந்த யௌவன புருஷனது முகம் மிகுந்த துயரத்தைக் காண்பித்தது. அவன் பேசிய போது, அவனது வார்த்தைகளும் விசனகரமாகவே தோன்றின. இருந்தாலும், அவன் கமலத்தின் விஷயத்தில் மனப்பூர்வமான அநுதாபமும் இரக்கமும் கொண்டவனாகவே வார்த்தையாடினான். அந்த மடந்தை இன்ன கருத்தோடு தன்னிடத்தில் பேச விரும்புகிறாளென்பதை அவன் சேவகனிடத்திலிருந்தே அறிந்து கொண்டவனாதலால், கமலத்தைக் கண்டவுடனே அவன் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசத் தொடங்கி சோமசுந்தரம் பிள்ளை என்ற பெயரையே தான் அதுகாறும் கேட்டதில்லை என்றும், அந்தப் பெயருடைய மனிதரே அந்த வீட்டில் இல்லை யென்றும், அந்தப் பெயருக்கு கடிதம் வந்ததில்லை என்றும் நிச்சயமாகக் கூறினான். அவன் அவளிடத்தில் மிகவும் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்து கொண்டானானாலும் அவன் தனது விசனத்தில் மூழ்கிப் போயிருந்தமையால், அவளிடத்தில் அதிகமாக சம்பாஷணையை வளர்க்க அவனுக்கு விருப்பமில்லை என்பது நன்றாகத் தெரிந்தது. ஆகவே தான் அநாவசியமாக அவ்விடத்தில் தங்கி அவரை வருத்தக் கூடாதென்ற நயத்தை உணர்ந்தவளாதலால் கமலம் உடனே அவனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு வெளியில் வந்துவிட்டாள்.

அதன்பிறகு தான் என்ன யுக்தி செய்வது எங்கே செல்வது என்ற கேள்விகள் அவளது மனத்தில் எழுந்து வருத்தின. தஞ்சையில் எந்த பாங்கியிலிருந்து தங்களுக்குப் பணம் கொடுக்க உத்தரவு வந்து கொண்டிருந்ததோ, அந்த பாங்கியின் சொந்தக்காரரிடத்தில் போய் விசாரிப்பதைத் தவிர, வேறே

மார்க்கமில்லை என்பதை உணர்ந்த பெண்மணி அந்த பாங்கி எவ்விடத்திலிருக்கிறதென்பதை விசாரித்து அறிந்து கொண்டவளாய் வண்டியில் உட்கார்ந்துகொண்டு கிழக்கு ராஜவீதியிலிருந்த அந்த பாங்கிக்கு வண்டியை ஓட்டச்செய்தாள். அரை நாழிகை நேரத்தில் வண்டி அந்த பாங்கியின் வாசலில் போய் நின்றது. உடனே கமலம் கீழே இறங்கி பாங்கிக்குள்போய் அதன் முதலாளியான செட்டியாரைப் பார்த்து விஷயத்தைச் சொல்ல, அவர், ''யாரோ சேவகன் பணம் கொண்டுவந்து கொடுக்கிறான்; வாங்கிக்கொண்டு போகிறான். சோமசுந்தரம் பிள்ளை என்பவரை நாங்கள் பார்த்ததில்லை. அவர் சேவகன் மூலமாக எங்களுக்குக் கொடுத்திருந்த விலாசம் இதுதான். இதை நான் உங்களுக்கு எழுதியனுப்பினேன். மற்ற விவரம் எதுவும் எங்களுக்குத் தெரியாது'' என்று சொல்லிவிட்டார்.

அதைக்கேட்ட கமலத்தின் நாடி வீழ்ந்துவிட்டது. சொற்பமாக அவளது மனத்திலிருந்த நம்பிக்கையும் போய்விட்டதாகையால், அந்த இள நங்கை மிகுந்த ஏக்கமும், ஏமாற்றமும், கலக்கமும் அடைந்தவளாய் அந்த பாங்கியை விட்டு வெளியில் வந்துவிட்டாள். சோமசுந்தரம் பிள்ளை என்பவரைப் பற்றிய விஷயமெல்லாம் ஏதோ காரணத்தைப் பற்றி மிகவும் பூடகமாகவும் மர்மமாகவும் நடத்தப்படுகிறது என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். ஆனால், அந்த மர்மம் இன்னதென்ன அறிந்துகொள்ளக் கூடாததாக இருந்தது. ஆகவே, தான் தஞ்சையை விட்டு உடனே திரும்பி ஊருக்குப் போவதே இனி தான் செய்யக்கூடிய காரியம் என அவள் எண்ணினாள். தான் போய் அந்த மகா துக்ககரமான விஷயத்தைத் தனது தங்கைக்கு எப்படி தெரிவிப்பதென்றும், தானும் தங்கையும் எப்படிப் பொருள் தேடித் தங்களது அத்தையைக் காப்பாற்றுவதென்றும் கமலம் பலவாறு எண்ணமிட்டுக் கலங்கலானாள். தாங்கள் இனிமேல் தங்களது வீட்டை விற்றுத் தின்னவும், அதன்பிறகு யாசகத்திற்குப் புறப்படவும் தங்களுக்குத் தலைவிதி இருந்ததாவென்று

நினைத்துக் கரைகடந்த துயரத்தில் ஆழ்ந்தவளாகக் கமலம் திரும்பவும் அந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டு தான் தங்கியிருந்த சத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்து அந்த வண்டியை அனுப்பிவிட்டு அவ்விடத்தில் உட்கார்ந்தபடி சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அப்போது அவ்விடத்தில் வந்த சில மனிதர்களை நோக்கி அந்த மடந்தை, அந்த ஊரிலிருந்து நாகைப்பட்டணத்திற்குப் போகும் தபால் வண்டிகள் எப்போது புறப்படுமென்று விசாரிக்க, சிறிது தூரத்திலிருக்கும் வண்டிப்பேட்டையில் போய் விசாரிக்கும்படி அவர்கள் மறுமொழி கூறினர். உடனே கமலம் தனது துணி மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு வண்டிப் பேட்டையை நோக்கி நடக்கலானாள். அவள் தனது நினைவு முழுவதையும் திருவாரூரில் வைத்துக்கொண்டு மிகுந்த துயரத்தினால் சோர்ந்து தளர்ந்து மெல்ல மெல்ல நடந்து போய்க்கொண்டிருந்த தருணத்தில், அவளுக்கு எதிரில் வந்த நாலைந்து முரட்டு மனிதர்கள் புரளியாகப் பேசிய வண்ணம் அவளை நடுவில் விட்டு நாற்புறங்களிலும் சூழ்ந்து அவள் மீது முரட்டுத்தனமாக இடித்தும் உராய்ந்தும் அப்பால் சென்றனர். அவர்களது நடத்தையைக் கண்டு மிகுந்த திகிலும் நடுக்கமும் அடைந்த கமலம் ஓட்டமும் நடையுமாக அப்பால் போய், பக்கத்திலிருந்த வண்டிப்பேட்டைக்குள் நுழைந்து நாகப்பட்டணத்திற்கு வண்டிகள் எப்போது புறப்படும் என்பதை விசாரித்தாள். மறுநாட் காலையில் புறப்படப் போகிறது என்பதைக் கேட்ட கமலம் மிகுந்த மகிழ்ச்சியும் இன்பமும் அடைந்தவளாய், தன்னை உட்கார வைத்துக்கொண்டு போவதற்காக இடம் அமர்த்தி, அதன் பொருட்டு அச்சாரம் கொடுப்பதற்காக, தனது இடையிலிருந்த பணப்பையைப் பார்க்க, அது காணப்பட வில்லை! ஆகா! என்ன செய்வாள்! அவளது தேகம் திடுக்கிட்டுப் பதறியது! சற்றுமுன் சூழ்ந்து தன்மீது உராய்ந்த முரட்டு மனிதர்களே வெகுதந்திரமாகப் பணப்பையைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள் என்பதைக் கமலம் உடனே உணர்ந்து கொண்டாள்.

எதிர்பாராத அந்தப் புதிய துன்பத்தைக் கண்டு மிகுந்த பதைப்பும், சஞ்சலமுமடைந்து பைத்தியம் கொண்டவள்போல மாறித் தன்னை மறந்து, அந்த முரட்டு மனிதர்கள் போன இடத்தை நோக்கி ஓட்டமாக நடக்கலானாள். அவ்வாறு, அவள் சிறிது தூரம் சென்று நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அந்த முரட்டு மனிதர்களுள் ஒருவனாகிலும் காணப்படவில்லை. எங்கு பார்த்தாலும் தெருக்களும் சந்துகளும் தாறுமாறாகச் சென்று கொண்டிருந்தமையால், அப்படிப்பட்ட பெருத்த பட்டணத்தில்,தான் அந்த முரட்டு மனிதர்களைக் கண்டுபிடிப்பது பலியாக் காரியமென உணர்ந்த கமலமென்னும் அந்த வடிவழகி மனமாழ்கி ஓய்ந்து தளர்ந்து ஸ்தம்பித்து சித்திரப்பதுமை போலவும், தோகை மயில் போலவும் அப்படியே சிறிது நேரம் நின்றாள்.

அந்த நிலைமையில் அவ்விடத்தில் வந்த ஒரு வண்டி அவளுக்கு அருகில் நிறுத்தப்பட்டது. அந்த வண்டிக்குள் இருந்த ஒரு ஸ்திரீ கமலத்தை நோக்கி, ''யாரம்மா நீ? நிரம்பவும் விசனமாக நிற்கிறாயே! என்ன விசேஷம்?'' என்று மிகவும் அன்பாக வினவினாள். அந்த ஸ்திரீக்கு நாற்பது வயதிற்கு உள்ளாகவே இருக்கலாம். அவள் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு தக்க பெரிய மனிதர் வீட்டுப் பெண் பிள்ளைபோலக் காணப்பட்டாள். அவளது குரலின் நயத்திலிருந்து அவள் உண்மையாகவே அநுதாபமும் இரக்கமும் கொண்டு பேசுகிறாள் என்பதை உணர்ந்த கமலம் தனது வரலாற்றையெல்லாம் சவிஸ்தாரமாகத் தெரிவித்தாள். அவள் மறைக்காமல் எல்லா விவரத்தையும் அவ்வாறு சொன்னதன் மேல், அவளுக்கு இன்னமும் ஏதேனும் துன்பம் நேர்ந்ததா, அல்லது அநுகூலம் ஏற்பட்டதா என்பதும், அங்கே வண்டியில் வந்தவள் எப்படிப்பட்ட மனுஷி என்பதும் இப்போது சொல்லத்தகாத ரகசிய விஷயங்களாதலால், இவ்வளவோடு நிறுத்தி வேறொரு விநோத சம்பவத்தை வெளியிடுவோம்.

## 2-வது அதிகாரம்

## எப்போது வருவாரோ என் சாமி?

கமலம் தஞ்சை நகருக்குச் சென்ற தினத்திற்குச் சில வாரங்களுக்கு முன்பு ஒரு நாளைய இரவில் சுமார் 11மணி சமயம் இருக்கலாம். தஞ்சைக்கு வடக்கில் இரண்டு மைல் தூரத்தி லுள்ள வெண்ணாற்றங்கரை என்ற ஊரில் மூன்று உப்பரிக்கை யுள்ள அழகான ஒரு மெத்தை வீட்டில் இரண்டாவது மாடத்தில் நிரம்பவும் சொகுசாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு சயன அறையில் பெண்மணி யொருத்தி தனியாக உட்கார்ந்திருந்தாள். அவள் சுமார் இருபது வயதடைந்த அதிசுந்தர ரூபிணியாகக் காணப்பட்டாள். அவள் முதன்முதலாக சோபனக் கலியாண அறைக்குள் விடப்பட்ட மணவாட்டிபோல விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் ஜாதி, ரோஜா, மல்லிகை முதலிய நறுமலர்களையும் அணிந்து, அத்தர் பன்னீர் முதலிய பரிமள கந்தங்களைத் தன்மீதும் சயனத்தின்மீதும் தெளித்துக்கொண்டு, மையிட்டு, ஜவ்வாதுப் பொட்டிட்டு, தெய்வலோகத்திலிருந்து அப்போதே நேராக வந்து இறங்கிய ரதிதேவியோ, ரம்பை ஊர்வசி திலோத்தமையோ என, யாவரும் மயங்கித் தடுமாறும்படி, மனிதரது மனமாகிய இரும்பை ஓர் இமைப்பொழுதில் கவர்ந்து இழுத்துக்கொள்ளும் காந்தம்போல அழகும், இனிமையும் ஒன்றாகத் திரண்டு ஓருருக்கொண்டு வந்ததோ வெனும்படி அந்த மோகனாங்கி இனிது வீற்றிருந்தாள். அவள் அடிக்கடி நெடுமூச்செறிவதால் அவளது எழில் வழிந்த மார்பகம் விம்மி விம்மித் தணியும் போதெல்லாம் அவள் அணிந்திருந்த பனாரீஸ் ரவிக்கை படார் என்று இரண்டாகக் கிழிந்து போய்விடுமோவென யாவரும் அஞ்சும்படியாக இருந்தது. அந்த அறைக்கு வெளியில் உண்டான ஓர் அற்ப ஓசையையும் அவள் செவிகொடுத்துக் கவனித்துக் கொண்டிருந்ததிலிருந்து அவள் யாரோ ஒருவரது

வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருப்பவளாகக் காணப்பட்டாள். பக்கத்திலிருந்த மேஜையின் மீது ஒரு கண்ணாடி விளக்கு அதிகப் பிரகாசத்தோடு எரிந்துகொண்டிருந்தது.

அவ்வாறு அந்தக் கட்டழகி ஆவலே வடிவாக உட்கார்ந்திருந்த சமயத்தில், அவளுக்கெதிரிலிருந்த ஜன்னலின் மேல் சடேரென்ற ஓசையுண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில் சுண்டைக்காய்ப் பருமனிருந்த ஒரு சிறிய கூழாங்கல் உள்புறத்திலே பொத்தென்று வந்து விழுந்தது. அதைக்கண்ட உடனே அந்த மங்கையின் வதனம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. உடம்பு பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தது. கண்கள் உருக்கி வார்த்த கண்ணாடிபோல இளகி ஜ்வலித்து, அவளது மனதின் நெகிழ்வைக் காட்டியது. அவள் உடனே குபீரென்று எழுந்து விளக்கை அணைத்தாள். கல் வந்து விழுந்த ஜன்னலுக்குமேல் ஓர் ஆள் நுழையத்தகுந்த ஒரு திறப்பு இருந்தது. அந்தத் திறப்பு பச்சைக் கண்ணாடியால் மூடப்பட்டிருந்தது. அந்தப் பெண் விளக்கை அணைத்தவுடன், ஓசை செய்யாமல் மேற்படி கண்ணாடியைத் திறந்து வைத்துவிட்டு வந்து கட்டிலின் மேல் பரப்பப்பெற்றிருந்த மெத்தையின் ஒரு மூலைக்குப் போய் அவ்விடத்திலிருந்த சில தையல்களைப் பிரித்து அதற்குள் திணித்து வைக்கப்பட்டிருந்த பட்டுக் கயிற்றினால் பின்னப்பட்டி ருந்த ஒரு நூலேணியை வெளியில் இழுத்து, அதன் ஒரு நுனியை ஜன்னலின் கம்பிகளில் இறுகக் கட்டி மறு நுனியை ஜன்னலிற்கு மேலே இருந்த திறப்பின் வழியாக வெளியில் கொண்டு போய் மெதுவாகத் தொங்க விட்டாள். அவள் அவ்வளவு காரியத்தையும் ஒரு நிமிஷ நேரத்தில் செய்து முடித்து விட்டுக் கீழே குனிந்து பார்த்த வண்ணம் பதைபதைத்து நின்றாள்.

அப்போது வளர்பிறைக் காலமாதலால், மேகங்களில்லாத சுத்தமான ஆகாயத்தில் சந்திரன் ஜிலுஜிலென்று பன்னீரைத்

தெளித்து எல்லோரையும் இன்பசாகரத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தான். நிலவு பட்டப்பகல் போல எரித்துக் கொண்டிருந்தது. அந்த ஊரின் வழியாகச் சென்ற ராஜபாட்டை அந்த மாளிகைக்கு நெடுந்தூரத்திற்கு அப்பாலிருந்தமையால், தனியாக இருந்த அந்த மாளிகையில் என்ன நடக்கிறதென்பதை வழிப் போக்கர் கவனிக்க ஏதுவில்லா திருந்தது.

கீழே இறக்கிவிடப்பட்ட பட்டு நூலேணி இரண்டொரு நிமிஷம் வரையில் அசைந்து அதன்பிறகு விறைப்பாகவும் நிமிர்வாகவும் நின்றது. சிறிது நேரத்தில் ஜன்னலிற்கு வெளியில் ஒருதலை தென்பட்டது. உடனே ஒரு மனிதரது முழு வடிவமும் புலப்பட்டது. அந்த மனிதர் நூலேணியின் வழியாக ஏறி ஜன்னலுக்கு மேலேயிருந்த திறப்பை அடைந்து, அதற்குள் புகுந்து உட்புறத்தில் நகர்த்தி வைக்கப்பட்டிருந்த மேஜையின் மீது காலை வைத்து இறங்கி உள்ளே வந்து சேர்ந்தார். உடனே நூலேணி மேலே உயர்த்தப்பட்டது. ஜன்னலும் திறப்பும் கண்ணாடிக் கதவுகளால் பழையபடி மூடப்பட்டுப் போயின. அடுத்த நிமிஷத்தில் அந்தக் கள்ளக் காதலர் இருவரும் கரை கடந்த பிரேமையும் மோகஆவேசமும் கொண்டவராய் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து இறுகத் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டனர். அந்தப் பெண்மணி எப்படி ரதிதேவிபோல இருந்தாளோ, அதுபோல, அந்த மனிதரும் மன்மதன் போன்ற அழகுடையவராக இருந்தார். அவரது வயது சுமார் நாற்பதாகி இருந்தாலும் நல்ல கட்டான தேகமுடைய வராதலால் சுமார் 32 அல்லது 33 வயதடைந்தவர் போலக் காணப்பட்டார். அவரது முகம் மிகவும் வசீகரமாகவும், அவரது சொல் அமிர்தம்போல இனிமையாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. அவர் நல்ல புத்தி தீக்ஷண்யம் உடையவராகவும் தமது வாக்கு நயத்தாலும், இளகிய தன்மையாலும் தேக அழகினாலும் எப்படிப்பட்ட ஸ்திரீயின் மனதையும் மயக்கக்கூடிய சரஸகுன சௌந்தரிய புருஷராக இருந்தார்.

அவரிடத்தில் அப்படிப்பட்ட அபாரமான கவர்ச்சி நிறைந்திருந்த காரணத்தினாலேதான் அவரைக்காட்டிலும் வயதில் மிகவும் குறைந்து அதியௌவன பருவத்தினளாகவும் அதிசுந்தர ரூபிணியாகவும் இருந்த அந்த அணங்கு தனது சொந்தக் கணவனை வெறுத்து அவரைத் தனது உயிருக்கு உயிராக நினைத்துக் காதலிக்க நேர்ந்ததென்பது கூறாமலே விளங்கும். அவ்வாறு, அந்தக் கள்ளக் காதலர் இருவரும் கட்டுக்கடங்கா ஆவலோடும் ஆசையோடும் ஆலிங்கனம் செய்து சரஸ லீலைகள் புரிந்தவண்ணம், மஞ்சத்தின்மீது உட்கார்ந்துகொள்ள, உடனே அந்தக் காதலர் அவளை நோக்கிக் கொஞ்சலாகப் பேசத் தொடங்கி, ''கண்ணே! நான் கடைசியாக உன்னிடத்தில் வந்து இப்படிப் பட்ட சொர்க்கபோகம் அநுபவித்துச் சரியாக இரண்டு மாசகாலம் ஆகிவிட்டதல்லவா! அடடா! இந்த இரண்டு மாசமும் கழிவது எப்படி இருந்தது தெரியுமா? இரண்டு கற்பகாலம் கழிவது போலவே இருந்தது. என் மனம் பட்ட பாட்டை நரக வேதனைக்கே ஒப்பிட வேண்டும். உன்னை நினைத்து நினைத்து ஏங்கி நான் எத்தனை ராத்திரி தூங்காமலிருந்தேன்; எத்தனை நாள் அன்னத்தையே பார்க்காமல் பட்டினி யிருந்தேன் தெரியுமா? இந்த இரண்டு மாசத்திற்குள் என்னுடைய உடம்பு துரும்பாக மெலிந்து போய் அடையாளம் தெரியாதபடி உருமாறிப் போயிருப்பதை நீ கவனித்தாயா? ஒருவேளை நீ என்னை மறந்து போய் விட்டாயோவென்று நான் எத்தனை தடவை சந்தேகித் திருப்பேன் தெரியுமா?'' என்று மிகவும் உருக்கமாகவும் கனிவாகவும் கூறினார்.

அதைக்கேட்ட அந்தப் பெண், அவரைக் காட்டிலும் அதிகமாக இளகி மிகுந்த வாஞ்சையோடு பேசத் தொடங்கி, ''ஐயோ! நான் என்ன செய்வேன்! இந்தக் கிழவனுக்கு வரவர என்னவோ கேடு காலம் அதிகரித்துப் போய்விட்டது. இதற்கு முன் அடிக்கடி எங்கேயாவது ஊருக்குத் தொலைந்து போவான்;

தொடர்ச்சியாக இரண்டு மூன்று தினங்கள் வரையில் வீட்டுக்கே வராமல் இருந்துவிடுவான். இப்போது இந்த இரண்டுமாச காலமாக அவன் வீட்டிலேயே குந்திக் கொண்டு கிடக்கிறான்; பெண்டாட்டியின் மேலும் அதிக உருக்கமும் கரிசனமும் உண்டாயிருக்கின்றன. நான் எங்கே போனாலும், தலைப்பைப் பிடித்துக்கொண்டே அலையத் தலைப்பட்டிருக்கிறான். இந்த இரண்டுமாச காலமாக என் மனமும் உங்களுடைய மனசைப் போலப் பெருத்த நரக வேதனையைத்தான் அநுபவித்துக் கொண்டிருந்தது. ஒரு நாளைக்காவது அவன் வீட்டை விட்டு ஒழிய மாட்டானா என்று நானும் பார்த்துப் பார்த்துத் தவித்திருக்கிறேன். கடைசியாக இன்றைய தினந்தான் அவனும் அவனுடைய சிநேகிதர்களும் கூடிக்கொண்டு எங்கேயோ ஊருக்குப் போய் சந்தோஷமாக இரண்டு நாட்கள் இருந்துவிட்டு வரப்போகிறார்கள் என்று உணர்ந்து இன்று காலையில் அந்தக் கடிதத்தை எழுதி உங்களுக்கு அனுப்பினேன். கீழே படுத்திருக்கும் வேலைக்காரர்கள் நீங்கள் வந்ததைக் கண்டார்களோ?'' என்று கவலையோடு வினவினாள்.

அந்தக் கள்ளப்புருஷன், ''கீழே இருக்கும் வேலைக்காரர் களெல்லோரும் நன்றாக குறட்டைவிட்டுத் தூங்குகிறார்கள்; எவரும் என்னைப் பார்க்கவில்லை. இன்றைய காலையில் உன்னுடைய கடிதத்தைப் பார்த்த உடனே எனக்கு உண்டான சந்தோஷத்தை என்னவென்று சொல்லப்போகிறேன்! ஆனால் இந்த இரண்டு தினங்களும் இரண்டு நொடிபோல ஓடிப் போய்விடுமே யென்றும், உடனே நான் உன்னை விட்டுப் பிரிந்துபோய்விட நேருமே யென்றும், அதன் பிறகு உன்னைப் பார்க்கும்படியான இப்படிப்பட்ட சந்தர்ப்பம் எப்போது வாய்க்குமோவென்றும் நினைத்து என் மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது. தொலைந்தவன் எப்போதும் திரும்பாமலே ஒரேயடியாக ஒழிந்து போகக்கூடாதா என்று நான் எத்தனை தடவை சுவாமியைக் குறித்து வேண்டிக்கொண்டேன். அவன் ஒருவேளை தனது ஏற்பாட்டை மாற்றிக்கொண்டு, ஊரை

விட்டுப் போகாமலிருந்து விடுவானோ என்ற சந்தேகமும் இன்னொரு புறத்தில் என்னை வதைத்துக் கொண்டிருந்தது. கொஞ்சநேரத்துக்குமுன், கீழே நின்று நிமிர்ந்து ஜன்னலை நான் பார்த்தபோது அடையாளத்துக்காக நீ வைத்திருக்கிறதாக எழுதியிருந்த விளக்கைப் பார்த்தபிறகுதான் எனக்கு உயிர் வந்தது. ஏதோ தெய்வாநுகூலத்தினாலேதான் நாம் இப்போதாவது ஒன்றாகக் கூடி சந்தோஷப்படுகிறோம்'' என்று மிகுந்த மனநெகிழ்வோடு கூறி, அவளை விடாமல் ஆலிங்கனம் செய்ய, அவள் தேன்குடித்த நரிபோல இன்பப் பெருக்கைத் தாங்கமாட்டாமல் அவனிடத்தில் லீலைகள் புரியத் தொடங்கினாள்.

அந்தச் சமயத்தில், கீழேயிருந்து மேன்மாடத்திற்கு வரும் படிக்கட்டின் வழியாக யாரோ திடுதிடென்று அடி வைத்து ஓசை செய்து கொண்டு மேலே வந்த சப்தமும், அப்படி வந்தவர் மேன்மாடக் கதவைத் தடதடவென்று தட்டிய ஓசையும் உண்டாகவே ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்தபடி மெய்மறந்து ஆனந்த சுகத்தில் ஆழ்ந்துகிடந்த கள்ளக்காதலர் இருவரும் திடுக்கிட்டுப் பிரிந்து கட்டிலை விட்டுக் கீழே இறங்கினர். இருவரது மனதிலும் பெருத்த திகில் குடி கொண்டது. குலைநடுக்கம் உண்டாகக் கைகால்களெல்லாம் வெடவெடவென்று ஆடுகின்றன.

உடனே அந்தப் பெண் பதறித் தவித்துக் கைகளைப் பிசைந்து கொண்டு, ''ஐயோ! அந்தக் கிழவன் வந்துவிட்டானே! என்னசெய்கிறது! கண்ணாடியைத் திறந்து கொண்டு கீழே இறங்க நேரமில்லையே! அப்படித் திறந்தாலும், அந்த ஓசையைக்கேட்டு அவன் உடனே சந்தேகம் கொண்டு என்னைக் கொன்று போட்டு விடுவானே! ஐயோ தெய்வமே! என்ன செய்யப் போகிறேன்?'' என்று பிரலாபித்துத் தவிக்க, அதைக் கேட்ட அந்த மனிதர், ''கண்ணே! பயப்படாதே, தைரியமாக இரு. நான் இங்கே வந்திருக்கிறேன் என்பது அவனுக்குத் தெரிந்திருக்காது. நீ தூங்குகிறவள்போலப் பேசாமல் இரு; நான்

ஒரு நொடியில் கீழே இறங்கிவிடுகிறேன். உடனே நீ மெதுவாகக் கண்ணாடிக் கதவை மூடிவிட்டு, நூலேணியையும் மறைத்து வைத்துவிட்டு விளக்கைக் கொளுத்திக்கொண்டு போய்க் கதவைத் திறந்துவிடு'' என்று மிகவும் பதைபதைப்பாகக் கூறினார்.

அப்போது, கீழே இருந்த வேலைக்காரர்கள் வேலைக்காரிகள் முதலிய எல்லோரும் விழித்துக்கொண்டு பேசிய குரல் மேலே கேட்டது. ஏதோ சாமான்கள் உருட்டப்படும் ஓசைகள் மேலே கேட்டன. அவற்றை உணர்ந்த அந்த வடிவழகி, ''ஐயையோ! எல்லாரும் விழித்துக்கொண்டார்களே! நீங்கள் கீழே இறங்கும்போது அங்கே இருக்கும்வேலைக்காரர்கள் உங்களை அவசியம் பிடித்துக்கொள்வார்கள். ஆகையால், நீங்கள் கீழே இறங்குவது சரியல்ல'' என்று கூறி அந்த மகா அபாயகரமான நிலைமையில் என்னசெய்வதென்பதை உணராமல் தவிக்க, உடனே அந்த மனிதர், ''கண்ணே! நேரமாகிவிட்டது. கதவை முன்னிலும் வலுவாக இடிக்கிறான். நான் இனிமேல் கீழே இறங்க நேரமில்லை. என்னை எங்கேயாகிலும் ஒளிய வைத்துவிடு. அவன் வெளியில் போகிறவரையில் நான் ஓசை செய்யாமல் ஒளிந்துகொண்டிருக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட யௌவனஸ்திரீ, ''ஆம். அப்படித்தான்செய்ய வேண்டும். இதோ பக்கத்தில் ஸ்நானம் செய்யும் அறை இருக்கிறது. அங்கே அடுப்பின்மேல் பெருத்த வெந்நீர் அண்டா வைத்து அடுப்போடு கட்டப்பட்டிருக்கிறது; அதற்குள் இறங்கி ஒளிந்து கொண்டிருங்கள். அவர் கடுமை யான நித்திரை செய்யும்போது மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் போய் விடுங்கள்'' என்றாள்.

அந்த ஏற்பாட்டிற்கு அவரும் இணங்க உடனே அவர்களிருவரும் ஸ்நான அறைக்குப் போயினர். அந்த மனிதர் வெந்நீர் அண்டாவிற்குள் இறங்கி மறைந்து கொண்டார்; அதன் மேலே மூடப்படும் ஒரு தட்டினால் அண்டாவின் வாய் உடனே மூடப்பட்டது.

அடுத்த நிமிஷத்தில் அந்த அழகிய ஸ்திரீ விளக்கைக் கொளுத்திப் பிடித்துக்கொண்டு தூக்கத்திலிருந்து அப்போதே விழித்துக்கொண்டு எழுபவள் போல, ''ஆ! யார் அது? நீங்களா! இதோ வந்தேன்'' என்று குரல் கொடுத்தவண்ணம் தனது இமைகளால் அரைப்பாகம் கண்களை மூடிக்கொண்டு அப்போதும் தூக்கக் கலக்கத்தில் இருப்பவள் போலப் பாசாங்கு செய்தபடி கதவைத் திறந்து விட்டாள். அவன் தனது செய்கை யைக் கண்டுகொண்டிருப்பானோ என்ற திகிலினால் அந்த நிமிஷ நேரமும் அவளுக்குப் பெருத்த நரக வேதனையாக இருந்தது. தன் கணவனது முகத்தைப் பார்க்க அவளது கண்கள் கூசினவானாலும், அவள் கடைக்கண் பார்வையால் அவரது முகத்தைக் கபடமாக நோக்கினாள். அந்த முகம் மிகுந்த கலக்கத்தையும், ஆத்திரத்தையும் பதைப்பையும் காண்பித்தது. அதைக் கண்ட அந்த ஸ்திரீயின் நெஞ்சு திடுக்கிட்டது. தேகம் கிடுகிடென்று ஆடுகிறது; வாய் குழறுகிறது; தூக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருந்துகிறவள்போல் அவள் ஜாலம் செய்து நடிக்க, உடனே அந்த மனிதர் சொன்ன சில வார்த்தைகளிலிருந்து தங்களுடைய காரியத்தை அவர் கண்டு கொள்ளவில்லை யென்று யூகித்துக்கொண்டாள். உடனே அவளுக்கு ஒருவிதத் துணிவும் பேசும்படியான தைரியமும் பிறந்தன. அவள் அப்போதும் அவரை நேருக்குநேர் பாராமல் விளக்கைப் பார்த்தபடியே இருந்து, ''திரும்பி வர இரண்டு தினம் ஆகுமென்று சொன்னீர்களே; சிநேகிதர்கள் விருந்து நடத்த வில்லையா?'' என்று நயமாகக் கேட்டாள்.

அந்தச் சயன மாளிகையின் கதவைமூடி உட்புறத்தில் தாளிடாமல் வைத்துவிட்டு அவளைத் தொடர்ந்து வந்த அவளது புருஷர், ''பெண்ணே! பயப்படாதே; இன்றைய தினம் விருந்துக்குத்தான் போயிருந்தேன். அங்கே மிகவும் விபரீதமான ஒரு காரியம் நடந்துபோய்விட்டது. அதனால் நான் புறப்பட்டு உடனே வந்துவிட்டேன். நாம் இப்போதே இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட வேண்டும். பொழுது விடிவதற்குள்,

நாம் இந்த மகாராஜாவின் ராஜியத்து எல்லையைவிட்டு மைசூர் ராஜ்ஜியத்துக்குள் போய் இந்த உபத்திரவம் ஒரு மாதிரியாகத் தீருகிறவரையில் ஏதேனும் ஓர் ஊரில் இருந்துவிட்டு வந்துவிடுவோம்; நம்முடைய பெட்டி வண்டிகள் இரண்டையும் பூட்டிவைக்கும்படி உத்தரவு செய்து விட்டு வந்திருக்கிறேன். உனக்கு எந்தெந்த சாமான்கள் அவசியமாக வேண்டுமோ அவைகளை மாத்திரம் எடுத்து இரண்டு மூன்று பெட்டிகளில் வைத்துப் பூட்டிக்கொள். இங்கே இருக்கும் வேலைக்காரர்கள் நாம் திரும்பி வருகிறவரையில், வீட்டையும் மற்ற சாமான்களையும் பார்த்துக்கொள்வார்கள்'' என்று மிகவும் பதைப்போடு பேசினார்.

அவரது சொற்களைக்கேட்ட அந்த யௌவனப்பெண் மிகுந்த வியப்பும் திகைப்பும் அடைந்து, அது கனவோ நினைவோவென ஐயமுற்று, ''என்ன இது! நீங்கள் சொல்வது இன்னதென்று எனக்கு விளங்கவில்லையே! அப்படி என்ன விபரீதம் நேர்ந்தது?'' என்று கேட்டவண்ணம், தனது கணவரது முகத்தை உற்று நோக்கினாள். சுமார் ஐம்பது வயதடைந்தவரும், அவளுக்குத் தகப்பன் முறையிலிருக்கத் தகுந்தவருமான அவளது புருஷர் அவளை அன்பாக நோக்கி, ''பெண்ணே! என்னுடைய சிநேகிதருள் ஒருவனான கோபண்ணா ராவுக்கும் எனக்கும் விளையாட்டாக ஒரு சண்டை ஏற்பட்டது. அது வாய்ச்சண்டையிலிருந்து முற்றிக் கைச்சண்டை ஆயிற்று; அவன் என்னைக் குத்தினான். நானும் அவனைக் குத்தினேன்; என்னுடைய குத்து அவனுடைய ஈரல் குலையில் பட்டு, அதனால் அவன் ஸ்மரணை தப்பிக் கீழே விழுந்தவன் கொஞ்ச நேரத்தில் இறந்துபோய்விட்டான். அவ்வளவுதான் சங்கதி. என்னுடைய மற்ற நண்பர்கள் எல்லாரும், உடனே புறப்பட்டு ஊரைவிட்டு ஓடிப்போகும்படி என்னை அனுப்பி விட்டார்கள்; நான் வந்துவிட்டேன். இனி நாம் இவ்விடத்தில் கொஞ்சநேரம் கூடக் காலதாமதம் செய்வது பிசகு; ஆகட்டும், சீக்கிரம் ஆகட்டும்; நீ உன்னுடைய சாமான்களையெல்லாம் எடுத்துப்

பெட்டியில் வைத்துப் பூட்டு; உடனே புறப்பட வேண்டும்; வண்டிகள் தயாராக நிற்கும்'' என்று கூறித் துரிதப்படுத்தினார். அதைக் கேட்ட அந்த யௌவனப்பெண் மிகுந்த குழப்பமும் கலவரமும் அடைந்து சிறிது நேரம் யோசனை செய்து, ''இவ்வளவு தடபுடலாக நான்கூட ஏன் புறப்படவேண்டும்? நீங்கள் மாத்திரம் முன்னால் போய்,நல்ல இடமாகப் பார்த்து இருந்து கொண்டு எனக்குச் செய்தியனுப்பினால், அதற்குள் நான் சகலமான ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, நமக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு சாவகாசமாக வருகிறேனே'' என்று நயமாக மன்றாடிக் கூறினாள்.

அதைக்கேட்ட புருஷர், ''இல்லை இல்லை. அப்படிச் செய்வது யுக்தமான காரியமல்ல. நான் ஊரைவிட்டு ஓடி விட்டேன் என்பது நாளையதினம் காலையில் தெரிந்து போம். பின்னால் நீ புறப்படும்போது என்னிடத்திற்கு வரத்தான் நீ புறப்படுகிறாயென்று சந்தேகித்து நமது பகைவர்கள் உன்னோடு ரகசியமாகத் தொடர்ந்து வந்து, நானிருக்கும் இடத்தைக் கண்டு கொள்வார்கள். ஆகையால், நீயும் இப்போதே வந்துவிடுவதே நல்லது'' என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் மேலும் அவள் ஆட்சேபித்துப் பேசாதபடியும் கூறி முடித்தார்.

அதற்குமேல் தான் பிடிவாதமாகப் பேசுவது சந்தேகத்திற்கு இடங்கொடுக்கு மென்று நினைத்த அந்த யௌவனப் பெண் தன் கணவனது விருப்பத்திற்கு மாறாக நடக்காத மகா பதிவிரதா சிரோன் மணி போல நடித்து மிகவும் பணிவாகவும் நிரம்பவும் அநுதாபப் படுகிறவள் போலவும் பேசத் தொடங்கி, ''அப்படி யானால் நானும் இப்போதே வந்துவிடுகிறேன். இதோ ஒரு நொடியில் என்னுடைய சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு பிரயாணத்துக்குத் தயாராகிறேன்; நீங்கள் கீழேபோய் வேலைக்காரிகளுள் இரண்டு பேரை இங்கே அனுப்பிவிட்டு, உங்களுடைய சாமான்களையெல்லாம் கட்டச் சொல்லுங்கள்'' என்றுமிகவும் சிரத்தையாகப் பேசினாள்.அவளது புருஷர், ''நான்

மேலே வரும்போதே, என்னுடைய சாமான்களையெல்லாம் ஐந்து நிமிஷத்தில் கட்டிவைக்கும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இந்நேரம் எல்லாவற்றையும் கட்டி வண்டியில் ஏற்றியிருப்பார்கள். உன்னுடைய சாமான்களையெல்லாம் கட்ட இரண்டு வேலைக்காரிகள் வருவார்கள்; நான் ஏற்கெனவே சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்'' என்று கூறியவண்ணம், அங்கே கிடந்த ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டார். அவர் அவ்வாறு பேசி வாய்மூடுமுன் இரண்டு வேலைக்காரிகள் மேலே வந்து சேர்ந்தார்கள். சில நிமிஷங்களில், அந்தச் சயன அறையிலும் ஸ்நான அறையிலும், மற்ற இடங்களிலும் பெட்டிகளும் பேழைகளும் பாய்களும் படுக்கைகளும் தட்டுமுட்டு சாமான்களும் தாறுமாறாக எடுத்துப் போடப் பட்டன. அந்த அவசரத்தில் எதை எடுப்பது, எதை விடுவது என்பதை உணராமல், வேலைக்காரிகளும், எஜமானியர்களும் அங்குமிங்கும் ஓடி நாட்டியமாடுகிறார்கள். பெட்டிகளிற் குள்ளிருந்த வஸ்துக்கள் எல்லாம் பிரயாணம் புறப்பட்டு விட்டன. வேலைக்காரிகளாவது, தனது புருஷராவது தற்செயலாக வெந்நீர் அண்டாவைத் திறந்து பார்த்து விடப் போகிறார்களோ என்ற அச்சத்தினால் தூண்டப்பட்டவளாய், அந்த அழகிய மங்கை, தனது ஆபரணங்களில் இருந்த ஒரு டிரங்குப்பெட்டியை எடுத்து வேண்டுமென்றே வெந்நீர் அண்டாவின்மேல் வைத்து அதற்குள் நகைகள் இருப்பதால், எவரும் அதைத் தொடவேண்டாமென்று சொல்லி வைத்தாள். தனது கள்ளப்புருஷரை அதிகநேரம் வெந்நீர் அண்டாவிற்குள் வைத்து வருத்தக்கூடாதென்ற நினைவினால் அந்த ஸ்திரீதனக்கு வேண்டிய ஆடையாபரணங்கள் சாமான்கள் முதலியவைகளை மிகவும் துரிதமாகவே பொறுக்கிப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டச் செய்து சகலமான முஸ்தீபுகளையும்விரைவாகச் செய்து முடித்துக் கொண்டாள்.

சிறிதும் காலதாமதமின்றி உடனே புறப்பட்டு ஊரைவிட்டுப் போய்விட வேண்டுமென்ற உறுதியும் ஆவலும் கொண்டு

துடிதுடித்திருந்த அவளது புருஷர் கீழேயிருந்த ஆட்களுள் ஒருவனை அழைத்துத் தமது பெட்டிகளெல்லாம் ஆயத்தமாகி விட்டனவாவென்று விசாரிக்க, அவன் சகலமான சாமான்களும் வண்டியில் வைத்துக் கட்டப்பட்டனவென்றும், உடனே புறப்படலாமென்றும் மறுமொழி கூறினான். அவர் உடனே அங்கிருந்த வேலைக்காரிகளை நோக்கி, அங்கே தயாராகப் பூட்டிவைக்கப்பட்டிருந்த தமது மனைவியின் பெட்டிகளையும் படுக்கைகளையும் எடுத்துக்கொண்டு போய் வண்டியில் வைத்துவிட்டு வரும்படி உத்தரவுசெய்ய, அவர்கள் அவ்வாறே எடுத்துக்கொண்டு போகத் தொடங்கினர். கால்நாழிகை யில் மேன்மாடத்திலிருந்த பிரயாண சாமான்களெல்லாம், வண்டிக்குப் போய்ச் சேர்ந்து விட்டன. வெந்நீர்த் தவலையில் இருந்த நகைப்பெட்டியும் போய்ச் சேர்ந்தது. ஆனால், அவர்களால் எடுத்துக்கொண்டு போகப்படாமல் மிகுதியாக நின்ற சாமான்களையெல்லாம் எடுத்து ஒழுங்காக வைக்கும் படியும், தாங்கள் திரும்பி வருகிற வரையில் எல்லாவற்றையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படியும், அந்த வீட்டின் எஜமானர் பணிமக்களுக்கு உத்தரவு செய்தவராய்ப் புறப்பட்டு வரும்படி தமது மனைவியை அழைத்தார். ஆனால், அந்தப் பெண் புறப்பட்டு அவரோடு வராமல், அங்குமிங்கும் ஓடி, அவ்விடத்தில் சிதறிக்கிடந்த சாமான்களையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தவளாய் காலஹரணம் செய்து கொண்டிருந்தாள். அவளது புருஷர் வரவர அதிகமாகத் துடித்து, ''ஆய்விட்டதா? இன்னமும் என்ன பாக்கி இருக்கிறது? நேரமாகிறதே! புறப்படு!'' என்று துரிதப்படுத்தப்படுத்த, அவள் அங்கு மிங்கும் ஓடுவது அதிகரித்தது. மூன்றாவது நான்காவது துரித காலத்தில் பாட்டுப் பாடுவது போல, அவள் முன்னிலும் அதிக சுறுசுறுப்பாகப் போய்ப் பெட்டியைத் திறந்து, படுக்கையைப் புரட்டி, பாத்திரத்தைக் கவிழ்த்து, சாமான் களைக் கொட்டி பட்சி பறப்பதுபோலப் பாய்ந்து பாய்ந்து மிகவும் கவனமாகத் தேடுகிறாள். அவள் மறைத்து வைத்திருந்த

நூலேணி, அந்த அமர்க்களத்தில் எங்கேயோ காணாமல் போய்விட்டது; அதைத் தேடி எடுத்து வெந்நீர் அண்டாவிற்குள் போட்டுவிட்டால், அதற்குள்ளிருக்கும் கள்ளப் புருஷர், சில நாழிகை நேரம் கழித்து, மேன் மாடத்திலிருந்து வேலைக்காரர் களுக்குத் தெரியாமல் தப்பிப்போக அது உபயோகப்படு மென்பது அவளது கருத்து; அதுவுமின்றி, அந்த நூலேணி அவ்விடத்திலேயே கிடந்து, தாங்கள் புறப்பட்டுப்போனபிறகு, பணி மக்களிடம் அகப்படுமானால், அவர்கள் தனது கற்பைப் பற்றிச் சந்தேகங் கொண்டு தன்னை இழிவாக மதிப்பார் களென்றும், அந்த விஷயத்தைத் தனது கணவரிடத்தில் தெரிவித்து விடுவார்களென்றும், அந்த யௌவன ஸ்திரீ நினைத்து அச்சங்கொண்டு, அதனால் தூண்டப்பட்டவளாய், விடாமுயற்சியோடு அந்த நூலேணியை அவ்வாறு தேடிக் கொண்டிருந்தாள்.

அதுகாறும் மிகவும் சாந்தமாகப் பொறுத்துக் கொண்டிருந்த அந்தப் புருஷர் நிரம்பவும் ஆத்திரமடைந்து , "அடீ! என்ன இது? நாடகமா ஆடுகிறாய்? நீ புறப்படுவதற்குள் பொழுது விடிந்து போகும்போல இருக்கிறதே! எல்லாச் சாமான்களையும் தான் கொண்டு போய் விட்டார்களே! இன்னம் எதைத் தேடுகிறாய்?" என்று மிகவும் கோபமாகக் கேட்க,அவள் அந்தக் கேள்வியைச் சிறிது நேரத்திற்கு முன்னரே எதிர்பார்த்து, தனது கையிலிருந்த ஒரு மோதிரத்தைக் கழற்றி வெந்நீரண்டாவின் பக்கத்தில் போட்டிருந்தவளாதலால், அவர் கேட்டவுடனே கொஞ்சமும் யோசனை செய்யாமல், "இரண்டு நாளைக்கு முன் நீங்கள் வாங்கிக்கொடுத்த பச்சைக்கல் மோதிரம் எங்கேயோ விழுந்து விட்டது. அதைத்தான் தேடுகிறேன்" என்று சடேரென்று மறுமொழி கூறினாள். அதைக் கேட்ட புருஷர், "மோதிரம் கிடந்தால் கிடக்கட்டும். அதை வேலைக்காரர்கள் எடுத்து வைப்பார்கள். அதை விட உயர்வான இன்னொரு மோதிரம் மைசூரில் வாங்கித் தருகிறேன். புறப்பட்டு வா; நேரமாகிறது" என்று அழுத்தமாக அதட்டிக் கூறினார்.

அந்த ஸ்திரீ அவரை நோக்கிப் பல்லைக்காட்டி நயமாகக் கொஞ்சி, ''இல்லை இல்லை. அது இங்கேயே தான் இருக்கும்; இதோ எடுத்துக்கொண்டு ஒரு நொடியில் வந்து விடுகிறேன். நீங்கள் போய் வண்டியில் உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்று இனிமையாகக் கூறி அவரை ஏமாற்ற நினைத்தாள். அவளது புருஷர், ''சரி சரி; நான் இங்கேயிருந்து இவ்வளவு கடுமையாகத் துரிதப்படுத்தும்போதே, ஒரு ஜாம நேரம் ஆகிவிட்டதே! நான் கீழே போய்விட்டால்,நீ நாளைய தினந்தான் வண்டிக்கு வருவாய். பெண்டுகளின் சங்கதி எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பிரயாணம் புறப்படுவதென்றால், ஒரு மலையே நகருவது போல இருக்குமே'' என்றார்.

அந்தச் சமயத்தில், அவள் பட்டு நூலேணியைக் கண்டுபிடித்து, அதைத் தன் கணவர் அறியாதபடி சுருட்டி எடுத்துக்கொண்டவளாய் அப்போதே ஏதோ ஒரு விஷயத்தை நினைத்துக் கொண்டவள் போல, ''சரி; இந்த அறையில் இல்லை. நான் காலையில் ஸ்நானஞ் செய்தபோது வெந்நீர்த் தவலையண்டை அதைக் கழற்றி வைத்ததாக ஒரு நினைவு உண்டாகிறது; எடுத்துக் கொண்டு இதோ வந்துவிட்டேன்'' என்று கூறிய வண்ணம் ஸ்நான அறைக்குள் ஓட்டமாக ஓடி, அண்டாவின் மேல் மூடப்பட்டிருந்த தட்டை ஓசையின்றித் தூக்கி, அதற்குள் பட்டு நூலேணியைப் போட்டு, மறுபடியும் தட்டால் வாயைச் சரியாக மூடிவிட்டு ''இதோ கிடக்கிறது மோதிரம்; இனி நாம் புறப்பட்டுப் போகலாம்'' என்று கூறியவண்ணம், அங்கே கிடந்த மோதிரத்தை எடுத்துக்கொண்டு ஓடிவந்தாள். தனது புருஷர் ஸ்நான அறைக்குள் வராமல் தடுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தினால் பொறித் தட்டுவதுபோல, அதிசீக்கிரத்தில் அண்டாவைத் திறந்து ஏணியை போட்டுவிட்டு மோதிரத்தை எடுத்துக்கொண்டு ஓடி வந்தாளாதலால் வெந்நீரண்டாவிற்குள் எட்டிப் பார்க்கவாகிலும், தனது கள்ளப் புருஷரிடத்தில் ஏதேனும் இரண்டொரு வார்த்தை சொல்லவாகிலும், அல்லது தனது

கரத்தை அண்டாவிற்குள் விட்டு, அவரைத் தடவிக் கொடுக்கவாகிலும், அவகாசம் இல்லாமல் போய்விட்டது. நூலேணி இன்ன காரணத்திற்காக அண்டாவிற்குள் போடப்பட்ட தென்பதைத் தனது கள்ளப்புருஷர் எளிதில் யூகித்துக் கொள்வாரென்ற நினைவைக் கொண்டு நிரம்பவும் திருப்தியடைந்தவளாய் அந்த மடந்தை தனது நடலங்களை அவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, தனது கணவரண்டை வந்து சேர்ந்து, தான் தேடி எடுத்துவந்த மோதிரத்தை அவரிடத்தில் காட்டி மிகுந்த சந்தோஷமும் முகமலர்ச்சியும் கொண்டவளாய் அதைத் தனது விரலில் அணிந்துகொண்டு புறப்படலானாள். உடனே கணவரும் மனைவியும் மேன்மாடத்தை விட்டுக் கீழே இறங்கினார்கள். அந்த மடந்தை மேன்மாடத்தின் கதவை மூடி வெளியில் தாளிட்டுக்கொண்டு கீழே இறங்க, இருவரும் வெளியில் ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த சவாரி வண்டியில் ஏறி உட்கார்ந்துகொள்ள, அதுவும் சாமான் வண்டியும் புறப்பட்டு விசையாகப் போகத்தலைப்பட்டன.

## 3-வது அதிகாரம்

# பெண்மான் வேட்டை

தஞ்சைபுரியை மகாராஷ்டிர அரசர்கள் தங்களது ராஜதானிப் பட்டணமாகச் செய்து அந்த நகரில் இருந்து வந்த காலத்தில், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட பெருத்த பெருத்த ஜெமீந்தார்களும், மிட்டாதார்களும், பாளையக்காரர்களும், ஜாகீர்தார்களும், இனாம்தார்களும், மிராசுதார்களும் அந்த ஊரில் பெருத்த பெருத்த மாளிகைகளை இயற்றிக்கொண்டு அவ்விடத்தில் இருந்து, அரசரோடும் அவரது அரண்மனையிலிருந்த அவரைச் சேர்ந்த உறவினர்களோடும் நட்பாக இருந்து, வருஷத்தில் முந்நூற்றறுபத்தைந்து நாட்களிலும் பண்டிகை கொண்டாடிக் குதூகலமாகப் பொழுதை போக்கிக் கொண்டிருப்பது வழக்கம். மேலே குறிக்கப்பட்டவர்களுள்

ஜெமீந்தார் பதவியிலுள்ளவர்கள் அரசருக்கு அடுத்தபடியாக மதிக்கப்பட்டு வந்தார்கள்; மற்றவர்கள் எல்லோரும் மிட்டாதார், பாளையக்காரர், இனாம்தார், மிராசுதார் என்பவர் வரிசையான ஏற்றத்தாழ்வை உடையவர்கள்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏராளமான கிராமங்கள் ஏகபோகமாக விடப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து மலைமலையாக நெல் முதலிய தானியங்களும், பணக்குவியல்களும், மற்ற சகலமான சாமான்கள் காய்கறி பழவகைகள் யாவும் வந்து ஒவ்வொருவரது மாளிகையிலும் குவிந்து கொண்டிருக்கும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மகாராஜன் போலத் தமக்குள் ஆயிரக்கணக்கான சிப்பந்திகள் முதலிய ஆடம்பரங்களை எல்லாம் வைத்துக் கொண்டிருந்தனர். அரசன் முதல் சகலமானவர்களுக்கும் தாலிகட்டின மனைவியைத் தவிர எண்ணிறந்த தாசிகளும் வேசைகளும் இருந்து வந்தனர். இராக்காலங்களில் எங்கு பார்த்தாலும் கேளிக்கைகளும், பாட்டுக் கச்சேரிகளும், கூத்துகளும், பண்டிகைகளும், விருந்துகளுமே மயமாக நடத்தப்பட்டன. இந்தக்கதை தொடங்கிய காலத்தில் இருந்த அரசர் கிழவராதலால் அவரது புத்திரரான இளவரசர் சதாகாலமும் சந்தோஷ புருஷராகவும், சித்திரசேன கந்தருவனைப் போல, எப்போதும் எண்ணிறந்த யௌவனப் பாவையருக்குள் புதைபட்டே இருப்பதில் மிகுந்த பிரேமை கொண்டவராகவும் இருந்தார். அந்த ஊரிலிருந்த ஜெமீந்தார்கள் முதலிய எல்லோரும் அவரை அடிக்கடி அழைத்துப் போய்த் தங்களது மாளிகைகளுக்குள் வைத்துக் கொண்டு அவருக்காகப் பிரமாதமான விருந்துகளை நடத்தி, ஒருத்தியைவிட ஒருத்தி விசேஷமான அழகுடையவளாகப் பார்த்து, புதிய புதிய தாசிகளைக் கொணர்ந்து கேளிக்கை பாட்டுக் கச்சேரி முதலியவைகளை நடத்தி அவரை மகிழ்விக்க முயலுவார்கள். ஆனால், அவருக்கு மிகவும் அருமையான தோழர்களாக இருந்து வந்த பெரிய மனிதர்கள் சுமார் பதின்மர் இருந்தனர். அவர்களோடு தனியாக இருந்து, ஸ்திரீ விஷயமான

வார்த்தைகளையே எப்போதும் பேசி, ஆசியமாக சம்பாஷித்துப் பொழுதைப் போக்குவதிலும், அந்த நகரத்தில் புதுமையாகவும் அழகாகவும் யாராவது பெண்கள் வந்திருந்தால் அவர்களைப் பற்றிப் பேசி மகிழ்ச்சி யடைவதிலுமே அந்த இளவரசருக்கு அத்தியந்தப் பிரியம்.

அந்த இளவரசர், முன் அதிகாரங்களில் விவரிக்கப்பட்ட விநோத சம்பவங்கள் நிகழ்ந்ததற்கு சில மாதகாலத்திற்குப் பிறகு ஒருநாள் இரவு ஒரு பெருத்த விருந்திற்காக அழைக்கப்பட்டு, அதற்குப் போயிருந்தனர். அந்த ஊரிலிருந்த மற்ற எல்லா ஜெமீந்தார்களையும்விட, அதிக வருமானமும் பெருமையும் வாய்ந்தவரான மருங்காபுரி ஜெமீந்தாரது அழகிய மாளிகையில் அந்த விருந்து நடைபெற்றது. அந்த விருந்திற்கு அவர் இளவரசரையும் அந்தரங்க நண்பர்களான வேறு நால்வரையும் வருவித்திருந்தார். ஆகவே, அவர்கள் அறுவர் மாத்திரமே தனியாக இருந்து அந்த விருந்தை உண்டனர். மருங்காபுரி ஜெமீந்தாரது மாளிகை ஓர் அரசனது மாளிகையென மதிக்கத் தக்கதாக அவ்வளவு அதிக உன்னதமாகவும் விஸ்தாரமாகவும் இருந்தது. அந்த ஜெமீந்தாருக்கு வயது ஐம்பதிற்குமேலாகி யிருந்தது. அவரது மனைவி இறந்துபோய்விட்டமையால், அவர் எவ்விதக் கால்கட்டும் இல்லாமல், சுயேச்சையாக இருந்து, தமது மனம் போனபடியெல்லாம் செய்து கொண்டிருந்தார். இந்த உலகத்திலுள்ளவரையில் சகலவிதமான சுகபோகங் களையும் சம்பூர்ணமாக அநுபவித்துத் தீர்த்துவிட வேண்டு மென்பது அவரது பாலிய காலத்திலிருந்தே அவர் அநுஷ்டித்து வந்த முக்கியமான கொள்கை, அவர் தம்மை மன்மதனது அவதாரமென்றே எண்ணிக்கொண்டிருந்தார். அவரது தாடைகள் ஒட்டிக் குழிந்து போயிருந்தனவானாலும், அவர் உயர்ந்த வைரக் கடுக்கன்களையும் தங்க விளிம்புள்ள மூக்குக் கண்ணாடி யும் அணிந்து முகத்தின் களையையும் ஜ்வலிப்பையும் அதிகப்படுத்திக் கொண்டிருந்தார். அவரது பற்கள் முழுவதும் தேய்ந்து ஆடிப்போயிருந்தமையால் அவைகளையெல்லாம்

அறவே பிடுங்கி எடுத்துவிட்டு, கட்டுப்பற்களை வைத்து வாயை நிறைத்துக்கொண்டிருந்தார். நரைத்து வெள்ளிக் கம்பிகள்போல இருந்த தலைமயிர், மீசைமயிர் முதலியவைகளிற்கு சாயம் ஏற்றி அவைகளைக் கறுப்பு மயிராக்கிக்கொண்டிருந்தார்; அவரது உடம்பு குட்டையாகவும் கட்டுத்தளராததாகவும் இருந்த தாகையால், அவரது மீசை நரைத்திருந்தது ஆனாலும் ஆசை மாத்திரம் நரைக்காமல், அப்போதும் யௌவன பருவத்திலேயே இருந்தது.

அவரைப் போல இளவரசரும் நாற்பத்தைந்து வயதடைந்தவராக இருந்தார். அவரது தேகம் வாதசரீரமாகப் பொதிர்ந்து சிவந்திருந்ததன்றி, அவரது மூக்கு முழிகள் புருவ வில்கள் வாய் கன்னங்கள் முதலிய யாவும் அதிக செழிப்பாகவும் எடுப்பாகவும் இருந்தன. அவரது முகம் யௌவன பருவத்தில் மிகவும் அழகாகவும் வசீகரமாகவும் இருந்ததானாலும் வயதேற ஏற, அதிக சுகத்தினாலும் புஷ்டியான போஜனத்தி னாலும் எல்லா அங்கங்களும் பூதாகாரமாக பெருத்திருந்தன. ஆகவே, அவர் பெருத்த அரசரது புதல்வரென்ற பயத்தினாலும், மரியாதையினாலும் செல்வாக்கினாலும் அவரிடத்தில் ஸ்திரீகள் அணுகி அவரைக்கண்டு தாம் மிகவும் மோகித்துப் போனதாகப் பாசாங்கு செய்தனரே யன்றி, உண்மையில் அவர்கள் தம் மனதிற்குள்ளாக அருவருப்பும் அச்சமுமே கொண்டவராக இருந்தனர்.

மேலே குறிப்பிக்கப்பட்ட விருந்தில் கூடியிருந்த அறுவரில், மேலே விவரிக்கப்பட்ட இருவர் தவிர, மற்ற நால்வர்களுள் கலியாணபுரம் மிட்டாதார் ஒருவர். அவரது வயது முப்பது! அவர் மிகுந்த அழகு வாய்ந்த தேகமும் வசீகரமான வதனமும் பெற்றவர். அவருக்கு மிகவும் அழகான யௌவன மனையாட்டி ஒருத்தி இருந்தாளானாலும், அவர் அவளிடத்தில் அதிக வெறுப்பை அடைந்தவராய், இக்கரைக்கு அக்கரை பச்சையென்ற கொள்கைக்கு இணங்க, அயலார் மனைவிகளே

அழகானவர்களென நினைத்து, எவ்வித துன்மார்க்கத்திலும் இறங்கப் பின்வாங்காதவராக இருந்தார்.

இன்னொரு விருந்தினர் சூரக்கோட்டைப் பாளையக்காரர். அவருக்கும் வயது முப்பது. அவர் சதைப்பிடிப்பில்லாத மெல்லிய உயரமான சரீரத்தைக் கொண்டவர். அவருக்குப் பூர்விகமான சொத்து எதுவுமில்லை. ஆகையால், அவர் பாளையக்காரர் என்ற புராதன கௌரதையை மாத்திரம் விடாமல் வகித்துக்கொண்டு லக்ஷப்பிரபுவான ஒரு வியாபாரியின் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். ஆனால், பாளையக்காரர் வமிசத்தைச் சேர்ந்த நாம், வியாபாரியின் பெண்ணை மதிப்பதா என்ற மமதையினால், அந்தப்பெண்ணை வெறுத்து இம்சித்து விலக்கி இப்படிப்பட்ட சந்தோஷப் புருஷர்களோடு சேர்ந்து பொழுதைப் போக்கிக் கொண்டு வந்தனர். அவர் சேனைகளை நடத்துவதில் கைதேர்ந்தவராதலால், பல சண்டைகளுக்குப் போய் அவர் கீர்த்தியும் நற்பெயரும் பெற்றவராக இருந்தார். அவரிடத்தில் முரட்டுத்தனமும் சொற்பம் இருந்துவந்தது. இன்னொரு விருந்தினர் சேரங்குளம் இனாம்தார். அவரது வயது இருபத்தாறு அல்லது இருபத்தேழிற்கு மேலிராது. அவருக்கு ஏராளமான மானியநிலங்களின் வருமானம் வந்துகொண்டிருந்ததனாலும், அவற்றின்பொருட்டு அவர் அரசனுக்கு ஒரு காசுகூடக் கிஸ்தி செலுத்தாதவராதலால், அவர் அவ்வளவு பணத்தையும் பலவகையில் விரயம் செய்து கொண்டிருந்தார். அவர் பார்ப்பதற்கு அழகும் வசீகரமும் பொருந்தியவராக இருந்தார். ஆனாலும், இரவில் நெடுநேரம் கண்விழிப்பதாலும், மட்டுக்கு மிஞ்சிய சிற்றின்ப நாட்டத்தினாலும், அவர் இளைத்து இரத்தம் செத்து வெளுத்து வியாதியஸ்தர் போலக் காணப்பட்டார். அவர் தமது ஆயுட்காலம் முழுதும் கலியாணம் செய்துகொள்ளாமல் பிரம்மசாரியாக இருந்துவிடுவதே உசிதமென்று நினைத்து அவ்வாறே இருந்து வருபவர்.

மற்றொரு விருந்தினர் சாமளராவ் என்ற ஒரு யௌவன புருஷர். அவருக்குச் சுமார் இருபது வயதிருக்கலாம்; அவர் மிகவும் அழகான தேகத்தையுடையவர். அந்த ஊரில் அம்மணிபாய் என்று ஓர் அழகிய ஸ்திரீ இருந்து வந்தாள். அவள் ஆரம்பத்தில் பரம ஏழையாக இருந்தவள். அவளது அற்புதமான அழகைக்கண்டு இளவரசர் அவளிடத்தில் சிலகாலம் நட்பாக இருந்து அவளை லக்ஷாதிபதி யாக்கிவிட்டாரென்று வதந்தி கூறுகிறது. ஆனால் அவளுக்கு இப்போது முப்பத்தைந்து வயதிற்கு மேலாவதால் இளவரசர் அவளுக்கு ஓய்வு கொடுத்து விட்டதாகவும் வதந்தி கூறுகிறது. மேலே குறிக்கப்பட்ட சாமளராவ் என்பவர் மேற்படி அம்மணிபாயின் அண்ணன் மகனென்று அவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், அவர் அம்மணிபாயின் சொந்தப்பிள்ளையென்று சில ஜனங்கள் ரகசியமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அந்த சாமளராவிடத்தில் இளவரசருக்கு அத்தியந்த பிரியமிருந்து வந்ததாகையால், இளவரசர் விருந்திற்குப் போகுமிடத்திலெல்லாம் சாமளராவை யும் காணலாம். அவருக்கு ஜெமீந்தார் முதலிய எவ்விதப் பட்டமும் இல்லாவிட்டாலும், அவர் இளவரசரிடத்தில் அந்தரங்க நட்பினராக இருப்பது பற்றி, மற்ற எல்லோரும் அவரையும் ஒரு பெரிய மனிதராக மதித்து வந்தனர். அவர் சங்கீதத்தில் நல்ல நிபுணராதலால், இளவரசர் குதூகலமாக இருக்கும் வேளைகளில், சாமளராவ் சுகமாகப்பாடி இளவரசரை மகிழ்விப்பார். ஆகவே, இளவரசர் அவரை அன்பாக நடத்தி அவருக்கு அடிக்கடி பெருத்த பணத்தொகைகளைச் சன்மானமாகக் கொடுத்துத் தமது அபிமான புத்திரன்போலப் பாதுகாத்து வந்தார்.

இவ்வாறு விவரிக்கப்பட்ட அறுவரும் ஒன்றுகூடி வடக்கு ராஜ வீதியிலுள்ள மருங்காபுரி ஜெமீந்தாரது மாளிகைக்குள் சிங்காரமான ஒரு மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு விருந்துண்டபிறகு அழகான இரண்டு தாசிகள் நாலைந்து நாழிகை நேரம் வரையில் மனதைக் கவரும்படி நடனம்

செய்தனர். அதன்பிறகு, வேறொரு பிரபலமான தாசி வீணைக்கச்சேரி வைத்து நெடுநேரம்வரையில் பாடி அவர்களை ஆனந்த பரவசம் அடையச் செய்தாள். அறுவரும் ஏகாந்தமாக உட்கார்ந்துகொண்டு குதூகலமாகவும் ஆனந்தமாகவும் பேசத் தொடங்கி, ''என்ன போங்கள்; பொழுது விடிந்தால் பொழுது போனால், பார்த்த முகங்களையே பார்த்துக்கொண்டு, கேட்ட பாட்டுகளையே கேட்டுக்கொண்டிருப்பது எனக்குச் சீயென்று போய்விட்டது. இத்தனை வருஷகாலமாக நானும் எவ்வளவோ அழகான ஸ்திரீகளைப் பார்த்தாய்விட்டது. இப்போது கிடைக்கும் ஸ்திரீகளிடத்தில் அவ்வளவு பிரியம் உண்டாகமாட்டேனென்கிறது. இதுவரையில் நாம் பார்த்திராத அவ்வளவு புதுமையான அழகுடைய ஸ்திரீ ஒருத்தி கிடைப்பாளானால், ஆகா! அப்போது தான் என் மனம் உண்மையில் ஆனந்தமடையும். முன்னொரு காலத்தில் பாரசீக தேசத்து மகாராஜன், இதுவரையில் மனிதரால் கண்டுபிடிக்கப்படாத புதிய சுகம் ஒன்றை யாராகிலும் கண்டுபிடித்துச் சொன்னால், அவனுக்குத் தம்முடைய ராஜ்ஜியத்தில் பாதியை இனாம் கொடுப்பதாகச் சொன்னாராம். அதுபோல, இதுவரையில் நான் பார்த்திராத அதியற்புத தேஜஸோடு கூடிய ஸ்திரீயை யாராவது காட்டினால், அவர் கேட்கும்பொருளை நான் உடனே கொடுத்துவிடுவேன்'' என்றார்.

சூரக்கோட்டை பாளையக்காரர்:- அப்படியானால், இந்த ஊரில் தாங்கள் விவரிக்கும்படி புதுமையான அழகுடைய ஸ்திரீகள் இல்லவே இல்லையென்றல்லவா அர்த்தமாகிறது!

இளவரசர்:- ஆம்; அப்படித்தான் இருக்கிறது. சந்தேகமென்ன? நாம் பார்க்காத அப்படிப்பட்ட அபாரமான அழகுடைய புதிய ஸ்திரீ எவள் இருக்கிறாள்?

மருங்காபுரி ஜெமீந்தார்:- நம்முடைய இளவரசர் சொல்வது சரியான வார்த்தை. அவருக்குப் பத்து வருஷ காலத்துக்கு

முன்னால் நான் பிறந்தவன்; அது முதல் நானும் புதிய புதிய பெண் பிள்ளைகளின் முகத்தைப் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். ஆனால், சென்ற சில வருஷ காலமாகக் கிடைப்ப தெல்லாம் அவ்வளவு சிலாக்கியமானதாக இல்லை.

*கலியாணபுரம் மிட்டாதார்:-* ஆகா நன்றாகச் சொல்லுகிறீர்கள்! இந்த உலகமே எப்போதும் புதுமை புதுமையாக மாறிக் கொண்டே இருக்கிற சுபாவமுள்ளது அல்லவா! இந்த நிமிஷத்தில் இதே ஊருக்குள் எத்தனை ஊர்வசி, ரம்பை, திலோத்தமைகள் நம்முடைய கண்ணில் படாமல் மறைந்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? அங்கங்கு போய்ப் பழகுகிறவர்களுக்குத்தான் புதிய உருப்படிகளெல்லாம் தென்படும்; நீங்கள் உங்களுடைய அரண்மனைக்குள்ளாகவே இருந்தால் எப்படித் தெரியும்? இதோ எனக்குத் தெரிந்து சில காலமாக நான் ஒரு புதிய பெண்ணைப் பார்த்தேன். ஆகா! நடசத்திரச் சுடரென்றாலும் அவளுக்குத் தான் தகும்!

*சேரங்குளம் இனாம்தார்:-* ஆம், ஆம். நீர் யாரைக் குறிக்கிறீரென்பதும் எனக்குத் தெரியும். இன்றையதினம் காலையில்கூட அவள் ஸாரட்டு வண்டியில் உட்கார்ந்து கொண்டு வெண்ணாற்றங்கரைக்கு வந்திருந்தாள்.

*சூர.பாளையக்காரர்:-* வம்புலாம் சோலைக்குள் அவள் ஒருநாள் வண்டியில் வந்திருந்தபோது, ஒருவர் அவளை எனக்குக் காட்டினார். ஆகா! அவள் உண்மையிலேயே கந்தருவ ஸ்திரீதான்!

*சேர.இனாம்தார்:-* நானும் இதுவரையில் எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்திருக்கிறேன். அவளைப்போல ஜெகத்ஜோதியாக டால்வீசும் பெண்கள் இந்தப் பூலோகத்தில் இருப்பார்களென்று நான் நம்பவே இல்லை. அவள் பெருத்த மண்டலேசுவரனுடைய அந்தப்புரங்களில் நவரத்ன மயமான மணி மண்டபத்தில் கொலுவீற்றிருக்கத் தகுந்த அவ்வளவு அபாரமான ஜ்வலிப்பைக் கொண்டவளாக இருக்கிறாள்.

*இளவரசர்:-* (மிகவும் வியப்பும் திகைப்பும் அடைந்து) என்ன ஆச்சரியம்! நீங்கள் மூன்றுபேரும் சேர்ந்து கொண்டு என்னைப் புரளி செய்கிறீர்களா,அல்லது நிஜமாகவே பேசுகிறீர்களா? அப்படிப்பட்ட புதிய பெண் வந்திருந்தால் அந்தச் சங்கதி இதுவரையில் எனக்கு எப்படியும் எட்டியிருக்குமே?

*மருங்காபுரி ஜெமீந்தார்:-* இவர்கள் சிறியவர்கள்; இவர்களுக்கு எல்லாம் புதுமையாகத்தான் இருக்கும். இவர்கள் இப்படித்தான் புகழுவார்கள். நாம் நேரில் பார்த்தால், அவளுடைய உண்மையான யோக்கியதை எவ்வளவு என்பது உடனே தெரிந்துபோகும்.

*கலி.மிட்டாதார்:-* அது நூற்றில் ஒரு பேச்சு; மருங்காபுரிக் கிழவர் அவளைப் பார்த்தால், உடனே சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து கன்னத்தில் போட்டுக்கொண்டு அப்படியே பிரமித்து நிற்பார். அவளுடைய பெயரைக்கேட்டாலே காதிலும் மனதிலும் ஆனந்தம் ஊறாதா!

*சோ.இனாம்தார்:-* ஆம்; உண்மைதான். பூர்ணசந்திரோதயம் என்று தாசிகள்தான் பெயர் வைத்துக்கொள்ளுவார்களென்று நான் கேள்வியுற்றிருக்கிறேன். அந்தப்பெண் வடதேசத்திலுள்ள தார்வார் மகாராஜாவின் அபிமான புத்திரியாம். அவளும் பூர்ணசந்திரோதயம் என்று பெயர் வைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து அவளும் தாசி வகுப்பைச் சேர்ந்தவளாக இருப்பாளோ என்ற சந்தேகம் உதிக்கிறது.

*கலி.மிட்டாதார்:-* அவளைப் பார்த்தவர்களெல்லோரும் அவள் மகா பரிசுத்தமானவள் என்று எவ்வளவு அபாரமாகப் புகழுகிறார்கள் தெரியுமா? அத்தனைக்கும் அவள் இன்னமும் கலியாணமே செய்து கொள்ளவில்லையாம்! அவளுக்கு ஆசை நாயகனும் ஏற்படவில்லையாம்.

*சேர. இனாம்தார்:-* இந்த ஊரிலுள்ள எல்லோரும் அவளுடைய அழகைப்பற்றித்தான் பிரமாதமாகப்

பேசுகிறார்கள். ஆனால் அவள் எந்த மனிதரிடத்திலும் பேசுகிறதே இல்லையாம். அவளுடைய வரலாறெல்லாம் அவளுடன் இருக்கும் வேலைக்காரரிடத்திலிருந்து மிகுந்த பிரயாசையின்மேல் அறிந்துகொள்ளப்பட்டதுதானாம்.

*சூர. பாளையக்காரர்:-* இந்த ஊரிலுள்ள ஒரு ஜெமீந்தார் அவளுக்கு ஒரு கடிம் எழுதினாராம். அவர் அதற்குள் ஒரு லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு வைர ஜடை பில்லையை வைத்து அனுப்பினாராம். அவள் அந்த நகையைப் பார்த்து விட்டு அதையும் கடிதத்தையும் அப்படியே திருப்பி அனுப்பி விட்டாளாம். இருந்தாலும் பெண்டுகளுக்கு அப்படிப்பட்ட மனோதிடம் இருக்க வேண்டும்.

*இளவரசர்:-* (மகிழ்ச்சியினால் மலர்ந்த முகத்தினராய்) ஏதேது! நீங்களெல்லோரும் சொல்வதைப் பார்த்தால் என்னுடைய நாக்கில் இப்போதே தேன் ஊறுகிறதே! அவளுடைய பெயர் பூர்ணசந்திரோதயமா! அடடா! எவ்வளவு சொகுஸான பெயர்! அந்தப் பெயரை வாயில் வைத்துப் பத்துதரம் ஜெபித்தால்கூட, உடனே உடம்பு முழுவதும் ஆனந்தபரவசம் அடையும்போல இருக்கிறதே! நீங்கள் எல்லோரும் மகா வஞ்சகர்கள். இந்த ஊர் முழுவதும் தெரிந்திருக்கும் இந்த விஷயத்தை இதுவரையில் என்னிடத்தில் சொல்லாமல் தானே மறைத்து வைத்திருக்கிறீர்கள்! நான் ஒருவேளை போட்டிபோட ஆரம்பித்தால் உங்களுக்கெல்லாம் கிடைக்காமல் போய்விடுமே என்ற பயம் போல் இருக்கிறது.

*சாமளராவ்:-* அதெல்லாம் இல்லை. நான் நன்றாக விசாரித்துப் பார்த்துவிட்டேன். அவள் எப்பேர்ப்பட்ட கோடீசுவரனாக இருந்தாலும், கலியாணம் செய்துகொள்ளவாவது வைப்பாக இருக்கவாவது இணங்கவில்லையாம். அவளுடைய நோக்கம் ஒருவேளை பெருத்த மகாராஜா, அல்லது இளவரசர் அப்படிப்பட்ட இடங்களாக இருந்தால்

சிநேகம் செய்ய இடம் கொடுக்கலாம் என்பது போல இருக்கிறது.

*இளவரசர்:* (மகிழ்ந்து புன்னகைசெய்து) நீ பேசுகிறதைப் பார்த்தால், இந்த விஷயத்தில் நான் முயற்சிக்க வேண்டுமென்று தூண்டுகிறதுபோல இருக்கிறது. அப்படித்தானா? திறந்து பேசு.

*சாமளராவ்:* - (சிரித்துக்கொண்டு) ஆம் அப்படித்தான். நாங்கள் எல்லோரும் எவ்வளவுதான் முயற்சித்தாலும், இந்தக் காரியத்தில் ஜெயமுண்டாகும் எனத் தோன்றவில்லை. அவள் மசிந்தால் தங்கள் ஒருவருக்குத்தான் மசியவேண்டும்.

*இளவரசர்:*- அப்படியல்ல; இந்த மாதிரி அபூர்வமாகக் கிடைப்பதையெல்லாம் நான் ஒருவனே அடைவது நியாயமும் ஆகாது; அது சிநேகிதத்துக்கும் லக்ஷணமல்ல; நீங்கள் எல்லோரும் எனக்கு முன்பாகவே அவளைப் பார்த்து ஆசைப்பட்டிருக்கிறீர்கள். மருங்காபுரிக் கிழவருக்கு இப்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறது. ஆகையால், நான் ஒருவன் மாத்திரம் ரகசியமாக முயன்று அவளை அடைவது அவ்வளவாக ருசிக்காது. எதிலும் போட்டியும் பந்தயமும் இருந்தால்தான் சுகப்படும். ஆகையால், நாம் ஆறுபேரும் தனித்தனியாக முயற்சித்துப் பார்ப்போம். அவள் யாரிடத்தில் பிரியம் கொள்ளுகிறாளோ கொள்ளட்டும். அதுதான் பிரம்மாநந்தமாக இருக்கும்.

*மரு. கிழவர்:* - பேஷ்!பேஷ்! இப்போதுதான் நம்முடைய இளவரசர் நடுநிலைமை தவறாத நியாயஸ்தர் என்பது வெளியாகிறது. அப்படியே செய்வோம். எனக்கும் அவள் விஷயத்தில் மனசு ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது.

*கலி.மிட்டாதார்:*- பந்தயம் போட்டு ஜெயித்தால்தான் பெருமைக்குப் பெருமை, சந்தோஷத்துக்குச் சந்தோஷம்.

*சூர. பாளையக்காரர்:*- அதுதான் சரியான காரியம்; நானும் அப்படித்தான் நினைத்தேன்.

*சேர. இனாம்தார்:* - இங்கே இருப்பவர்களுள் நானும் சாமளராவுந்தான் பாலியர்கள். அவள் ஆசைப்பட்டால், எங்களிருவருள் ஒருவர்மேல்தான் ஆசைப்பட வேண்டும். ஆனால், நான் ஒருநாளும் சாமளராவுக்குத் தோற்றவனல்ல.

*சாமளராவ்:-* எல்லாம் முடிவில் தெரிந்துபோகிறது. நாம் இப்போதே ஏன் சண்டை போட வேண்டும்.

*இளவரசர்:-* சரி; நான் சொன்னதை நீங்கள் ஐந்துபேரும் ஒப்புக்கொண்டது எனக்கு நிரம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. நாம் அப்படி செய்வதே முடிவான தீர்மானம் . ஆனால் நாம் இந்த விஷயத்தில் ஒருவர் மேல் ஒருவர் பகைமை கொண்டு மனஸ்தாபம் படக்கூடாது. அதுதான் முதல் விஷயம். இந்த விஷயத்தில் அவரவர்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றுகிறபடி தனித்தனி முயற்சி செய்ய வேண்டும். ஒருவர் செய்யும் முயற்சியை இன்னொருவர் கெடுக்கக் கூடாது. அப்படிச் செய்தால், காரியம் தாறுமாறாகப் போய்க் குழப்பம் உண்டாகிவிடும். ஆகையால், நாம் இந்த விஷயத்தில் சில நிபந்தனைகளை ஏற்படுத்திக்கொண்டு அவைகளின் படியே கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

*மற்றவர் எல்லோரும்:-* சரி சரி; அதுவே சரி.

*இளவரசர்:-* முதலாவது நிபந்தனை; நாம் இந்த மாதிரியான உடன்படிக்கை செய்து கொண்டு முயற்சிக்கிறோமென்பது எவருக்கும் தெரியாமல் ரகசியமாகவே இருக்க வேண்டும்.

இரண்டாவது, அவளிடத்தில் போய் ஒருவர் முயற்சிக்கும் காலத்தில் இன்னொருவர் முயற்சிக்கக் கூடாது. ஒரே காலத்தில் இரண்டு மூன்று பேர்கள் போய் மேல்விழுந்தால், அவள் சந்தேகப்படுவாள்; காரியமும் கெட்டுப்போகும். ஆகையால், ஒவ்வொருவர் ஒவ்வொரு நாள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

*கலி.மிட்டாதார்:-* அதை எப்படி ஏற்படுத்திக்கொள்ள முடியும்?

*இளவரசர்:* வெகு சுலபமாக ஏற்படுத்திக் கொள்ளலாம். நாம் ஆறுபேர் இருக்கிறோம். திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரையில் ஆறு தினங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவர் ஒவ்வொரு கிழமையில் முயற்சிப்பதென்று வைத்துக் கொள்வோம்.

*சூர.பாளையக்காரர்:-* நல்ல ஏற்பாடுதான். திங்கட்கிழமை நான்தான் முயற்சிப்பேன்.

*கலி.மிட்டாதார்:-* எல்லோரும் திங்கட்கிழமை தான் போவேன் என்பார்கள். ஒரே காலத்தில் ஆறு திங்கட்கிழமைகளுக்கு எங்கே போகிறது? அது உதவாது; அவரவர்களுடைய பட்டத்தின் வரிசைப்படி நாட்களை வைத்துக்கொள்வோம். முதல்நாள் இளவரசர்; இரண்டாவது நாள் கிழவர்; மூன்றாவது நாள் நான்; அந்த மாதிரி வைத்துக்கொள்வோம்.

*மரு.கிழவர்:-* அப்படியானால், இளவரசருக்குத்தான் ஜெயம் கிடைக்கும். இந்தப் பந்தயமும் அர்த்தமில்லாத பந்தயமாகி விடும். நாம் போகாமலே இருந்துவிடலாம்.

*இளவரசர்:-* (மகிழ்ச்சியோடு சிரித்து) கிழவர் சொல்வதும் நிஜந்தான். அதெல்லாம் வேண்டாம்; திருவுளச்சீட்டுப் போட்டு யார்யாருக்கு எந்தெந்தக் கிழமை வருகிறதோ, அந்தப்படி போவோம். அடே சாமளராவ்! கொஞ்சம் காகிதம் கொண்டுவா-என்றார்.

உடனே காகிதம் கொண்டுவரப்பட்டது. ஆறு துண்டுக் காகிதங்களில் ஆறு கிழமைகளின் பெயர்கள் தனித்தனியாக எழுதப்பட்டு மடிக்கப்பட்டன. அவ்வாறு மடிக்கப்பட்டவை கள் ஒரு பாத்திரத்தில் போட்டுக் குலுக்கப்பட்டன. உடனே இளவரசர் தங்களுடைய பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே வர, உடனுக்குடன் ஒவ்வொரு சீட்டும் எடுத்துப் படிக்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் அடியில் கண்டபடி கிழமைகள் ஏற்பட்டன-

| | |
|---|---|
| திங்கட்கிழமை | கலியாணபுரம் மிட்டாதார் |
| செவ்வாய்க்கிழமை | சேரங்குளம் இனாம்தார் |
| புதன்கிழமை | சூரக்கோட்டைப் பாளையக்காரர் |
| வியாழக்கிழமை | இளவரசர் |
| வெள்ளிக்கிழமை | மருங்காபுரி ஜெமீந்தார் |
| சனிக்கிழமை | சாமளராவ் |

மேலே குறிக்கப்பட்டபடி ஒவ்வொருவருக்கும் இன்ன கிழமை யென்று படிக்கப்பட்டபொழுது எல்லோரும் குதூகலமாகச் சிரித்து விளையாட்டாக ஒருவரையொருவர் பரிகாசம் செய்து கொள்ளத் தொடங்கினர். எல்லோருக்கும் கிழமைகள் குறிக்கப்பட்டுப் போனவுடனே, இன்னார்தான் ஜெயிப்பார்கள் இன்னார் தோற்றுப் போவார்கள் என்ற சில யூகங்களும் செய்யப்பட்டன. சிலர் வேறு சிலரை நோக்கிப் புரளி செய்தனர். உடனே இளவரசர் மற்றவர்களை நோக்கி, ''சரி; முக்கியமான விஷயம் ஒருமாதிரியாக முடிந்தது. மேலே ஒப்புக் கொள்ளப்பட்டவைகள் போக, இன்னமும் இரண்டொரு நிபந்தனைகள் இருக்கின்றன. என்னவென்றால், நம்முள் யாராவது ஒருவர் அவளை வென்றுவிட்டால், அதன்பிறகு மற்றவர்கள் தங்களுடைய முயற்சியை அவ்வளவோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்படி வென்றவருக்கே அவள் நிரந்தரமாக உரியவளாகி விடவேண்டுமன்றி, மற்றவர் அந்த விஷயத்தில் தலையிட்டு அவர்களிருவரது சுகத்தையும் குலைக்கக் கூடாது. அதற்காக,என்ன செய்ய வேண்டு மென்றால், யார் வெல்லுகி றாரோ அவர் உடனே நமக்கு அந்த விஷயத்தைத் தெரிவித்து, அவர் உண்மையிலேயே ஜெயித்து விட்டாரென்பதை நாம் நம்பும்படி மெய்ப்பிக்க வேண்டும். ஏனென்றால், மற்றவர்கள் தலையிடாமல் இருக்கட்டும் என்று நினைத்துப் பொய்யாகத் தாம் வென்றுவிட்டதாக யாராகிலும் சொல்லிவைத்து விட்டு,

மேன்மேலும் முயற்சி செய்யலாமென்ற ஒரு யுக்தி யாருக்காவது தோன்றும். இதனால் உங்களையெல்லாம் பொய்யர்களென்று நான் சொல்வதாக நினைக்கக்கூடாது. விஷயம் நிரம்ப மனதைக் கவரக் கூடியது. ஆகையால், முதலில் நானே இந்த விஷயத்தில் பொய் சொல்லுவேன்'' என்றார்.

*சூர. பாளையக்காரர்:-* அந்த நிபந்தனை தான் நிரம்பவும் முக்கியமானது. இதில் எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. ஜெயிக்கிறவன் பூர்ணசந்திரோதயத்தை மாத்திரம் ஜெயிப்பது போதுமா? அவன் என்னைப்போல ஏழையாக இருந்தால், அவளுக்குச் செய்ய வேண்டிய செலவுகளுக்கெல்லாம் பணம் வேண்டாமா? ஆகையால், நாமெல்லோரும் தலைக்கு ஐயாயிரம்ரூபாய் வீதம் போட்டு மொத்தம் சேரும் முப்பதினாயிரத்தையும், வெற்றி பெறுகிறவனுக்கு உடனே கொடுத்துவிட வேண்டுமென்று நினைக்கிறேன்.

*இளவரசர்:* பேஷ்! நல்ல முதல்தரமான யோசனை. அந்த நிபந்தனையையும் வைத்துக்கொள்வோம். நம்முடைய மருங்காபுரிக்கிழவர் பொக்கிஷதாரராக இருக்கட்டும். நாளைக்குப் பகல் 12மணிக்குள் எல்லோரும் தத்தம் பணத்தைக் கிழவரிடத்திற்கு அனுப்பிவிடவேண்டும். சாமளராவின் பணம் கொஞ்சம் இப்போது என் வசத்தில் இருக்கிறது. ஆகையால், அவனுக்காகவும் எனக்காகவும் நான் நாளையதினம் காலையில் பதினாயிரம் ரூபாய் அனுப்பி விடுகிறேன்- என்றார்.

அதைக்கேட்ட சாமளராவ் தன்னிடத்தில் பணமில்லை யென்று கண்ட இளவரசர் தன்மீது மிகுந்த அன்பும் அபிமான மும் கொண்டு, தனது கௌரதைக்குக் குறைவு ஏற்படாதபடி பக்குவமாகப் பேசித் தனக்கும் பணம் அனுப்புவதாகச் சொன்னதையுணர்ந்து நன்றியறிதலின் பெருக்கும் மன வெழுச்சியும் கொண்டவனாய், மிகுந்த பக்தி விநயத்தோடு இளவரசரைப் பார்த்தான்.

மறுநாள் திங்கட்கிழமை யாதலால், கலியாணபுரம் மிட்டாதார் பூர்ணசந்திரோதயமாகிய அந்த உயிர்க் கோட்டையை முற்றுகை போடத் தொடங்க வேண்டுமென்றும், அவ்வாறே, மற்றவரும் அவரவர்களுக்குக் குறிக்கப்பட்ட தினத்தில் முயலவேண்டும் என்றும், கடைசியில் அந்தக் கோட்டையின் எஜமானி தன்னை அடைக்கலமாக ஒப்புக் கொடுத்தவுடனே, வெற்றி பெற்றவன் மற்ற ஐவருக்கும் ஒரு விருந்து அளிப்பதென்றும், அந்த விருந்தில், பந்தயத் தொகையாகிய முப்பதினாயிரமும் அவருக்குக் கொடுப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டபின், அந்த உல்லாஸ புருஷர்கள் தத்தம் இருக்கைக்குச் சென்றனர். கலியாணபுரம் மிட்டாதார் அந்தப் பெண்மான் வேட்டைக்குப் புறப்பட அப்போதே ஆயத்தமானார்.

## 4-வது அதிகாரம்

## பூர்ண சந்திரோதயம்

மறுநாளாகிய திங்கட்கிழமை காலை ஒன்பதுமணி சமயமாயிற்று. தஞ்சைபுரியில் தெற்கு ராஜவீதியிலிருந்த ஜெகன்மோகன விலாசத்தின் மேன்மாடத்தில் வெகு சிங்காரமாக அமைக்கப்பட்டிருந்த பல நிறங்களைக் கொண்ட பூத்தொட்டிகளினிடையில் பூர்ணசந்திரோதயம் என்ற வசீகர மான பெயர்கொண்ட பெண்ணரசி ஒய்யாரமாக நின்றும், ஒயிலாக நடந்தும், அவ்விடத்தில் தொங்கவிடப்பட்டிருந்த தங்கமுலாம் பூசப்பெற்ற கிளிக்கூண்டுகளிலிருந்த பச்சைக்கிளி, பஞ்சவர்ணக்கிளி, பாரசீகத்துக் கொஞ்சுங்கிளி முதலியவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றைத் தனது இடது கரத்தின் பின்புறத்தில் உட்கார வைத்துக்கொண்டு, வலக்கரத்தால் தடவிக் கொடுத்து அவற்றோடு கொஞ்சிக் குலாவிக் கிள்ளைபோல மழலைமொழி மிழற்றிக் கொண்டிருந்தாள்.

அந்த அற்புதமான மாளிகையின் முன்புறத்தில், ரதிதேவியும், மன்மதனும் வஸந்த காலத்தில் களிகொண்டு உலாவும் சிங்காரத் தோட்டம் போன்ற ஒரு சிறிய உத்யானவனம் இருந்தது. அதற்குள், வெண்கலச் சிலைகளின் தலையிலிருந்து தாமரை மலர் போலவும், மல்லிகை மலர் போலவும், பளிங்கெனத் தெளிந்த தண்ணீரைச் சொரியும் ஊற்றுகளும், வாழை, கமுகு, தென்னை, மா, பலா, மாதுளை, கமலா முதலிய கனிகளைக் குலைகுலையாகத் தொங்கவிட்டிருந்த பழ மரங்களும், சம்பங்கி, ரோஜா, ஜாதி, மல்லிகை, மனோ ரஞ்சிதம், பன்னீர் முதலிய நறுமலர்களைச் சொரிந்து அந்த வீதி முழுதும் பரிமள கந்தத்தையும் மகரந்தத்தையும் அள்ளி பூசிய பூச்செடிகளும் அழகிய கொடிகள் ஏற்றிவிடப்பட்டிருந்த வளைவு பந்தல்களும் நிறைந்து, அந்த அதியற்புத மனோகரச் சோலை, அந்த ராஜபாட்டையின் வழியாகச் செல்வோரது மனதைக் கொள்ளைகொண்டு, ஐம்புலன்களும் பிரம்மாநந்த சாகரத்தில் தோய்ந்து பரவசமடையச் செய்யத்தகுந்ததாக இருந்தது.

அப்படிப்பட்ட மேம்பாடு வாய்ந்த ரமணீயமான பூங்காவிற்கு மேலிருந்த சிங்கார உப்பரிக்கையில் பவழப்பந்தலின் கீழ்ப் பஞ்சவர்ணக் கிளியை வைத்துக் கொஞ்சிக் குலாவியவண்ணம் பூர்ணசந்திரோதயம் சொகுசாக நின்ற காட்சி திவ்ய தேஜோமயமான தெய்வலோகக் காட்சியாக இருந்தது.

அந்தப் பெண்பாவையின் வயது பதினெட்டு அல்லது பத்தொன்பதிற்கு மேல் இராது எனத் துணிந்து சொல்லலாம். அவளது சரீரம் மெருகு கொடுக்கப்பட்ட பத்தரைமாற்றுத் தங்கம்போலக் காணப்பட்டு, இயற்கையான மினுமினுப்பும் ஜ்வலிப்பும் நிரம்பியதாக இருந்தது. அவளது அழகான பெயருக் கிணங்க அந்த மின்னாளின் முகம் பூர்ணசந்திர பிம்பம்போலவே காணப்பட்டு அமிர்தத்தையும், குளிர்ச்சியையும் கிரணங்களாக

எங்கும் பரப்பினதானாலும், அந்த முகம் முழுதும் வட்டவடிவமாக இல்லாமல் அகண்டாகாரமாக் சொற்பம் நீட்டுப் போக்காகவும், எவ்விதமான குற்றம் குறைபாடு கூறுவதற்கும் இடமில்லாததான மகா அபாரமான சிருஷ்டியாகவும் இருந்ததன்றி, அவளது சிரத்தில் அடர்ந்து கறுத்து நெளிந்து சுருண்டு நீண்டு கற்றையாகச் சென்று கணைக்காலைத் தொட்டுக் கொண்டிருந்த அளகபாரமானது பின்னப்பட்டு அரைச்சாண் அகலத்தில் தொங்கிக் கொண்டிருந்த பின்புறக் காட்சி, இராகு வென்னும் கருநாகம், பூர்ண சந்திரனாகிய அவளது சுந்தரவதனத்தை மறைக்க மாட்டாமல் பயந்து பின்புறத்தில் ஒளிந்து நிற்கிறதோவென நினைக்கத் தக்கதாக இருந்தது. அவ்வாறு தொங்கிய விசாலமான ஜடையில் நட்சத்திரக் கூட்டங்கள் போல வைரக் கற்கள் டால் வீசிய ஜடை பில்லைகள் ஆங்காங்கு காணப்பட்டு அவளது பின்னழகைக் காண்போர் யாவரும், அப்படியே மயங்கித் தயங்கி மோகலாகிரியின் வயத்தராய்ச் சொக்கிப்போய் நிலைகலங்கி நிற்கச் செய்வதாக இருந்தன. கமான்கள் வளைத்துவிடப்பட்டது போல இயற்கையாகவே வளைந்து வளைந்து சென்றிருந்த கூந்தலும், அதன் கீழ் தந்தத்தகடுபோலக் காணப்பட்ட நெற்றியும், அந்த வடிவழகியின் முகமான பூர்ண சந்திரன் கொலுவீற்றிருக்குமாறு கட்டப்பட்ட அஸ்மானகிரிப் பந்தல் போல இருந்தன. கருத்தடர்ந்து காமன்கை வில்போல உயிரைக் கொள்ளை கொண்ட புருவ வில்களும்,கடல்போல ஆழ்ந்து பரந்த கறுப்பு விழிகளும், சிவந்து கனிந்து தேன் பிலிற்றும் அதரங்களும், முல்லையரும்பின் பத்திகள் போன்ற மாசுமறுவற்ற பல்வரிசைகளும், கம்பீரமாக நிமிர்ந்து நின்ற அன்னப் பறவையின் வெண்ணிறக் கழுத்தும், வனப்பும் நிமிர்வும் நிறைவும் பொருந்திய ஏந்தெழில் மார்பும், உண்டோ இல்லையோ என ஐயுறத்தக்க இடையும், நவரத்ன சிங்கார ரதத்தின் அடிப்பாகம் போன்ற அரையும்,கரணை கரணையாகவும் கட்டுமஸ்தாகவும் இருந்த கைகால்களும்

பெற்றவளாய், அந்த அதிரூப மோகனாங்கி அப்போதே தெய்வலோகத்திலிருந்து பூஞ்சோலையோடு கீழே இறங்கிய அப்ஸர ஸ்திரீபோலக் காணப்பட்டாள். இடையில் அணியப் பெற்றிருந்த வைரக்கற்கள் நிறைந்த தங்க ஒட்டியாணம், அவளது தேகத்தின் இயற்கை அமைப்பு எவ்வளவு சொகுஸாக இருந்தது என்பதை நன்றாக எடுத்து வெளிப்படுத்தும் சாதனமாக அமைந்திருந்தது. அவளது உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வைரக்கற்களும், நவரத்னங்களும், ஜரிகையும், பட்டுமே மயமாக நிறைந்த நீலம், பச்சை, சிவப்பு, ஊதா, வெளுப்பு முதலிய பல வர்ணங்களைக் காட்டி, அவளும் அந்த வனத்தில் இயற்கையில் பூத்த எழில் மலரோ, அல்லது, அவ்விடத்தில் காய்த்துப் பழுத்துக் கனிந்த தீங்கனியோ, அல்லது, புதுமையாகப் படைக்கப்பட்ட கொஞ்சுங் கிள்ளையோவென, வாக்காலும், மனத்தாலும் உள்ளபடி அளப்பரிய மனமோகன வசீகர சிருஷ்டியாக இருந்தாள். அவ்வாறு ஜெகன்மோகன விலாசத்தின் மேன்மாடத்தில் காலை ஒன்பது மணிக்கே உதயமாகிக்காட்சிக் கொடுத்துக் காண்போர் மனத்தைப் பரவசப் படுத்தி மின்னற் கொடிபோல நின்ற பூர்ணசந்திரோதயம் என்ற பெண்மணியை அந்த ராஜவீதியில் சென்ற கிழவர் முதல் குழந்தைகள் ஈறாக உள்ள சலக ஜனங்களும் பார்த்து, மதிமயங்கி, நிலைகலங்கி, பிரமித்து ஸ்தம்பித்து அப்படியே சிறிதுநேரம் சொக்கிப்போய் நின்று, அவள் கோபித்துக் கொள்வாளோ என்ற அச்சத்தினாலோ, அல்லது, பிறர் தம்மை கவனிப்பார்களோ என்ற நினைவினாலோ தூண்டப்பட்ட வர்களாய், அவ்விடத்தை விட்டு நடந்து நெடுந்தூரம் போய் மறையும் வரையில் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றனர். அவ்வாறு எல்லோர் மனதையும் காந்தம்போல ஒரு நொடியில் கவர்ந்தவளாய் நின்றிருந்த அந்த வாமக்களஞ்சியம், ராஜபாட்டையில் சென்ற எவரையும் கவனிக்காமல் கிளிகளோடு விளையாடிக்கொண்டிருப்பவள் போலக் காணப்பட்டாளானாலும், அவளது கடைக்கண் பார்வை

அடிக்கடி ராஜபாட்டைக்குச் சென்று, அங்கே நடந்தவர்களை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தது, அவளுக்கு மாத்திரமே தெரிந்ததன்றி மற்ற எவருக்கும் தெரியாமலிருந்தது.

அவ்வாறு அந்த அதிமனோக்கிய அணங்கு நின்றிருந்த சமயத்தில், யாரோ ஒரு யௌவன புருஷர் அந்த மாளிகையின் முன்பக்கத்திலிருந்த வசீகரச் சோலையின் முள்வேலிக்கு அருகில் மறைந்து நின்று அவளது அழகினால் மோகிக்கப்பட்டுத் தன்னையே கூர்ந்து நோக்கியபடி நின்றதை அவள் உணர்ந்து கொண்டாள். உடனே அவளது உருண்டைக் கன்னங்களிலும், கயல்விழிகளிலும், ஒருவித ஜ்வலிப்பு உண்டாயிற்று. ஆனால், அவள் அந்த யௌவன புருஷரைப் பார்க்காதவள் போல நடித்து, கூண்டிலிருந்த ஒரு பஞ்சவர்ணக்கிளியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அடக்கவொண்ணாத பிரமையோடு அதன் முகத்தில் முத்தமிட்டு, அதனிடத்தில் மழலையாகப் பேசிக் கொஞ்சத் தொடங்கினாள். அவ்வாறு திருட்டுத்தனமாகக் கடைக் கண்ணால் பார்த்தபடியே அந்தக் கோமளாங்கி, தோட்டத்தின் வேலியண்டை நின்ற யௌவன புருஷர் சுமார் முப்பது வயதடைந்தவரென்றும், நல்ல அழகான தோற்றமுடைய வரென்றும், யாரோ பெரிய மனிதரது வீட்டுப் பிள்ளையென்றும் உணர்ந்துகொண்டாள்.

அவ்வாறு வேலியண்டை மறைந்துநின்ற அந்தயௌவன புருஷர், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அந்த மனோகர வடிவத்தை முகத்திலிருந்து நகம்வரையில் ஆயிரம் தரம் பார்த்தும், ஆவலடங்காமல் அதிகரிக்கப் பெற்றவராய் மெய்மறந்து நின்றாரானாலும் , அவள் தன்னைக் கவனிக்கிறா ளென்பதை உணராமல் நிலைகலங்கி நெக்கு நெக்குருகி அந்த அதிவிநோதச் சோலையில் சிங்கார மாடத்தில் பஞ்சவர்ணக் கிளியோடு அந்த யௌவன மடவன்னம் கொஞ்சி நின்றதான தெய்வலோகக் காட்சியில் ஈடுபட்டு, சுவர்க்க லோகத்தின்

வாசலில் நின்று உட்புறத்தைப் பார்த்து மயங்கி நிற்பவர் போல உடல் சோர உயிர் ஊசலாட நின்றார்.

அப்போது திடீரென அவளது வாயிலிருந்து, ''ஐயோ!'' என்ற ஒரு கூக்குரலுண்டாயிற்று. அது புல்லாங்குழலின் ஓசைபோல அவரது மனதில் சரேலென்று பாய்ந்து இன்ப ஊற்றைப் பெருக்கியது. அந்தத் தோகை மயில் அவ்வாறு கூக்குரலிட்ட காரணமென்னவென அவர் கவனித்து பார்த்தார். அவளது கையில் அழகாக வீற்றிருந்த பஞ்சவர்ணக்கிளி கையைவிட்டுப் பறந்து இறகை அடித்துக் கொண்டு முன்புறத்திலிருந்த தோட்டத்திற்குள்போய் அதன் வேலியின் மீது உட்கார்ந்து கொண்டது. அப்போது அந்த வேலியின் அருகில் நின்று கொண்டிருந்த யௌவன புருஷர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அந்த அழகிய பஞ்சவர்ணக் கிளியைப் பிடித்துக் கொண்டார். தான் அருமையாக வளர்த்த அந்தக்கிளி பறந்து வேறு எங்கேயினும் ஓடிப்போகுமுன் அந்த யௌவன புருஷர் அதை ஜாக்கிரதையாகப் பிடித்துக்கொண்டதைக் கண்டு மிகவும் நன்றியறிதல் செலுத்துகிறவள்போல, அவள் தனது வசீகரமான முகத்தில் புன்னகை தோன்ற, வணக்கமாக அவரை நோக்கினாள். தாம் எதிர்பாராவிதம் நேர்ந்த அந்தச் சிறிய சம்பவம், தமக்கும் அந்தப் பெண்மணிக்கும் நட்புண்டாக ஓர் ஏதுவாக இருந்ததைக்கண்டு,ஆனந்தபரவசம் எய்தி மட்டுக் கடங்காப் பூரிப்பை அடைந்த அந்த யௌவன புருஷர், தாம் ஜெபம் பெறுவது நிச்சயமென்றும், கடவுளே தோன்றாத் துணைவராக இருந்து தமக்கும் அவளுக்கும் இவ்வாறு நட்பு செய்து வைக்கிறார் என்றும் நினைத்துக் கொண்டார். தாம் எப்படி அவளிடத்தில் பழக்கம் செய்துகொள்ளப் போகிறோம் என்று தவித்துத் தத்தளித்திருந்த சமயத்தில், நான் அபயஸ்தங் கொடுக்கிறேனென்று சொல்வதுபோல அந்தக் கிளி பறந்து வந்ததை நினைக்க, அவரது மனம் பரவச மெய்திப் பாகாய் உருகி ஒடியது. தமக்குப் பெருத்த பாக்கியம் கிடைக்குமென்பதற்கு அது ஒரு நல்ல சகுனமென்று நினைத்த

அந்த யௌவன புருஷர் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது மெய்யோ பொய்யோவென அப்போதும் சந்தேகித்தவராய், தோட்டத்தின் நடுவிலிருந்த வாசலண்டை போய், அங்கிருந்த கதவைத் திறந்து கொண்டு சோலையின் நடுவிற் சென்ற பாதையின் வழியாக நடந்து, அவளிருந்த மாளிகையின் வாசற் படிக்குப் போய்ச் சேர்ந்தார். அதுகாறும் மூடி உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்த கதவு உடனே திறக்கப்பட்டது. அவ்வாறு கதவைத்திறந்தவன் மிகவும் விகார ரூபத்தோடு இருந்த ஒரு கிழவன். அவன் ஒரு மகாராஜனது மெய்க்காவலன் போல மிகவும் படாடோபமான ஆடைகளையும், டாலி டவாலிகளையும் அணிந்திருந்தான். அவன் கதவைத்திறந்து வைத்துவிட்டு வெளியில் வந்து அவருக்கு உபசார வார்த்தை சொல்லி, ''இந்தக் கிளி ஓடிப்போகாமல் நல்ல வேளையாகத் தாங்கள் பிடித்துக் கொண்டீர்களே! தாங்கள் செய்தது பெருத்த உபகாரம். இந்தப் பஞ்சவர்ணக் கிளியை எங்களுடைய எஜமானியம்மாள் ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கி உயிருக்குயிராக வளர்த்து வருகிறார்கள்; இது எங்கேயாவது ஓடிப்போயிருந்தால் அவர்களுக்கு உயிரே போனபடிதான்; இப்படி கொடுங்கள். நான் கொண்டுபோய் எஜமானியம்மாளிடத்தில் கொடுக்கிறேன். அவர்கள் நிரம்பவும் ஆவலோடு இருக்கிறார்கள்'' என்று நயமாகக் கூறினான். ஆனால் அந்த யௌவன புருஷர் தெய்வச் செயலாகத் தமக்கு வந்து வாய்த்த அந்த மகா அதிர்ஷ்டகரமான சந்தர்ப்பத்தை அவ்வளவோடு இழந்துவிட்டுப் போகக் கூடியவரல்ல. புன்னகை செய்து தமது மனதை மலர்த்தித் தமக்கு அபயஸ்தம் கொடுத்த அந்த ஜெகன்மோகினி தேவியின் ஆலயத்திற்குள் நுழைந்து அவளிடத்தில் வரம் வாங்குவதே உறுதியெனத் தீர்மானம் செய்துகொண்ட அந்த யௌவன புருஷர் அந்த மெய்க்காவலனை நோக்கி, ''அப்பா! நானே நேரில் இதைக் கொண்டுபோய் உன்னுடைய எஜமானியம்மாளிடத்தில் கொடுத்துவிட்டுத் திரும்பிப் போகிறேன். இவ்வளவு தூரம்

இந்தக் கிளியைப் பிடித்துக்கொணர்ந்த எனக்கு இன்னும் கொஞ்ச தூரம் நடந்துபோய் இதை இதன் நாயகியிடத்தில் சேர்ப்பது ஒரு பிரயாசையாகாது. நானே நேரில் போகிறேன்'' என்று கூறினார்.

அதைக்கேட்ட காவலன் அதற்குமேல் தான் ஆட்சேபிப்பது தவறென நினைத்து, அவருக்கு வழிகாட்டி முன்சென்று அவரை அழைத்துக் கொண்டு மேன்மாடத்திற்கு நடந்தான். அவனைத் தொடர்ந்து பின்னால் சென்ற மகா அதிர்ஷ்டசாலியான அந்த யௌவன புருஷர், ஏதோ கனவில் இன்பக்கடலில் நீந்திப் பறந்து மேலே செல்வபர்போல மெய்மறந்து ஆனந்தபரவசம் அடைந்தவராய் மேலே ஏறிச் சென்றார். அடுத்த நிமிஷத்தில் அவர் தமது மதியை மயக்கி மனதை இளக்கி உயிரைக் கொள்ளைகொண்டு அறிவை யழித்துத் தம்மைப் பித்தனைப் போலாக்கிய காமரூபிணியான அந்த மடவன்னத்தின் முன்னர் போய் நின்றார். அவளது அற்புத ஜோதியைக் காணமாட்டாமல், அவரது கண்கள் கூசின. அவர் நாணிக் கோணித் தயங்கிப் புன்னகை செய்தவண்ணம், அவளுக்கருகில் சென்று பஞ்சவர்ணக் கிளியை நீட்ட, அவள் மிகுந்த நாணமும், மடமும், அச்சமும், பயிர்ப்பும் தோற்றுவித்தவளாய், அதை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு தனது முகத்தைக் கீழே கவிழ்த்த வண்ணம், ''தாங்கள் யாரோ என்னவோ தெரியவில்லை. வழியோடு போகிற தங்களுக்கு இந்தப் பொல்லாத கிளி இவ்வளவு தூரம் பிரயாசை கொடுத்துவிட்டது. மன்னிக்க வேண்டும். தாங்கள் யாரென்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்'' என்று சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போல மிகவும் மாதுரியமாகப் பேச, அதைக் கேட்ட அந்த யௌவன புருஷர் புன்னகை செய்து, ''இது ஒரு பெரிய பிரயாசையா? இதற்கு மன்னிப்புகூடக் கேட்க வேண்டுமா? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இந்த ஊருக்கு வடக்கில் கலியாணபுரமென்று ஒரு மிட்டா சமஸ்தானம் இருக்கிறது. அதற்கு நான்தான் மிட்டாதார்; ஒரு வேலையாக

வழியோடு போனபோது இந்தக்கிளி பறந்துவந்ததைக் கண்டு ஓடிவந்து பிடித்துக் கொணர்ந்தேன்'' என்றார்.

## 5-வது அதிகாரம்

## திங்கட்கிழமை - முதல்வலை

அந்த யௌவன புருஷர் தாம் கலியாணபுரத்து மிட்டாதாரர் என்று சொன்னதைக் கேட்டவுடனே, பூர்ண சந்திரோதயத்தின் முகம் சட்டென்று மாறியது. அவர் யாரோ சாதாரண மனிதரென்று அதுகாறும் நினைத்து அசட்டை யாக மதித்திருந்தவள், அவரது மேம்பாட்டை யுணர்ந்து அவரிடத்தில் மரியாதை காட்டுகிறவள்போல திடுக்கிட்டுத் தனது சிரத்தைக் கீழே கவிழ்த்துக்கொண்டாள். நாணத்தினாலும், வெட்கத்தி னாலும் அவளது நுட்பமான சரீரம் மந்தமாருதத்தில் அசையும் மாந்தளிர்போல நடுங்கியது. இருந்தாலும், அவள் தனது மனவெழுச்சிகளையும் உணர்வுகளையும் வெளியில் காட்டாமல் மறைத்துக்கொண்டவளாய்த் தனது அரிய கிள்ளை திரும்பவும் தன்னிடத்தில் வந்து சேர்ந்தது பற்றி மட்டுக்கடங்கா மகிழ்ச்சியும், தனக்கு நல்ல தருணத்தில் உதவி செய்த அந்தப்பெரிய மனிதரிடத்தில் மிகுந்த நன்றி விசுவாசமும் தோற்றுவித்தவளாய், அடக்கமாக அவரைப் பார்த்துப் புன்னகை யோடு பேசத் தொடங்கி, ''இந்த துஷ்டக்கிளி செய்த காரியத்தினால், நான் எவ்வளவு தூரத்திற்கு அபராதி ஆகிவிட்டேன்! மகாப் பிரபுவாகிய தங்களுக்கு நான் இப்படிப்பட்ட இழிவான வேலையும் சிரமமும் கொடுத்து விட்டதைப் பற்றி எனக்கு நிரம்பவும் விசனமுண்டாகிறது. தாங்கள் தயைபுரிந்து மன்னித்துக் கொள்ள வேண்டும்'' என்று தேன்போல மாதுரியமாகப் பேசினாள்.

அவளது கனிமொழியைக் கேட்ட கலியாணபுரம் ஜெமீந்தார் ''அடடா! இது ஒரு பெரிய சிரமமா! அப்படி ஒன்றுமில்லை. இது

உனக்குத் துஷ்டக்கிளியாகத் தோன்றினாலும், நான் இதை நற்குணமுள்ள கிளியென்றே நினைக்கிறேன். தெருவோடு போன என்னை இந்தக் கிளி பார்த்தவுடனே, நான் உன்னோடு பேசி, உன்னுடைய சிநேகத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கு யோக்கியதையுடையவனென்று கண்டு, உடனே பறந்துவந்து, என்னை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறதே, அப்படிப்பட்ட மகா உபகாரியான கிளியை நீ தூஷிப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. நீ என்னுடைய மன்னிப்பைக் கேட்பதைவிட அந்தக் கிளியின்மேல் கோபங்கொள்ளாமல் நீ அதை மன்னிக்க வேண்டுமென்று நான் உன்னிடத்தில் கேட்டுக்கொள்வதே பொருத்தமாக இருக்கும். நான் உன்னிடத்தில் பேசிப் பழகும்படியான இன்பமும், பெருமையும் எனக்குண்டாக்கி வைத்த அந்தக் கிளியை நான் என் உயிருள்ள வரையில் மறக்கமாட்டேன்'' என்று வேடிக்கையாகவும் குதூகலமாகவும் கூறினார். அவர் சொன்ன வார்த்தைகளின் உள் கருத்தைக் கவனியாதவள் போலக் காட்டிக்கொண்ட பூர்ண சந்திரோதயம் கூண்டில் விடப்பட்ட பஞ்சவர்ணக் கிளியண்டை போய்நின்று மிகவும் செல்லமாகப் பேசி அதைக் கண்டிக்கத் தொடங்கி, ''ஓகோ! உனக்கு அவ்வளவு கொழுப்பா! மகாராஜாக்கள் எல்லாரும் இந்தக் கையைத் தொடுவதற்கு மன்றாடித் தவம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட என்னுடைய கையின்மேல் நான் உன்னை உட்காரவைத்துக் கொண்டு தடவிக் கொடுத்துக் கொஞ்சுகிறேன். நீ அதைவிட்டுப் போய் முள்கள் நிறைந்த வேலியின்மேல் உட்கார்ந்து கொள்ளுகிறாயா? உன்மேல் குற்றமில்லை. காலம் அப்படிக்கெட்டுப் போயிருக்கிறது; எவருக்கும் நல்லது கெட்டது தெரிகிறதில்லை. எப்போதும் நிழலிலேயே இருப்பவருக்கு அதன்அருமை தெரியாது. வெயிலைக் கண்டால் அங்கே போகவேண்டும்போல இருக்கும்; ஆனால், அங்கே போய்க் கொஞ்ச நேரமிருந்தால், அதன் பிறகு நிழலின் அருமை தெரியும். போக்கிரிக் கிளியே! என்ன

பார்க்கிறாய்? நான் உன்னை வைகிறேனென்பதைத் தெரிந்து கொண்டாயா? ஓகோ! ஜாக்கிரதை! இனி உன்னை வெளியில் எடுப்பேன் என்று நினைக்காதே! ஜெயிலிலேயே அடைபட்டுக்கிட; அதுதான் உன் தலையெழுத்து; உன்னுடைய கூண்டின் வாசலுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டு வைக்கிறேன்'' என்று கிள்ளை மொழிவது போலக் கொஞ்சலாக அதனிடத்தில் பேசி, ஒரு கைக்குழந்தையை வாஞ்சையாகக் கண்டித்து அதனோடு விளையாடும் தாய் போல நயமாகக் கண்டித்த வண்ணம் குனிந்து அந்தக் கூண்டின் கதவை மூடி அதன் தாழ்ப்பாளை மாட்டி, ஒரு சிறிய குச்சியை எடுத்துச் சொருகினாள்.

அவ்வாறு அந்த நளினசிங்காரி குனிந்து கிளியோடு கொஞ்சிய அற்புக் காட்சி, கலியாணபுரம் மிட்டாதாரது உயிரைக்கொள்ளைகொண்டு, அவரைக் கரை கடந்த வேதனையிலும் சஞ்சலத்திலும் ஆழ்த்தியது. அவள் அவ்வாறு குனிந்திருந்த போது, அவளது மார்பு, இடை,துடை முதலிய அங்கங்களின் அமைப்பும் எழிலும் மிகவும் எடுப்பாகத் தெரிந்தன. அந்த ரமணீயமான ஸ்தலங்களில் தமது கவனத்தையெல்லாம் செலுத்தி மிகுந்த மனவெழுச்சி யும், ஆவேசமும் கொண்டவராக நின்ற கலியாணபுரம் மிட்டாதார், ''பூர்ணசந்திரோதயம்! இப்படிப்பட்ட அற்புதமான அழகு வாய்ந்த பஞ்சவர்ணக்கிளியை நீ கோபித்துக் கொள்வது எனக்குச் சகிக்கவில்லை. என் பொருட்டாகிலும் நீ அதன் மேல் வருத்தம் வைக்கக் கூடாது. இந்த இடத்தில் இத்தனை கிளிகளும், பட்சிகளும் இருப்பதைப் பார்த்தால் உனக்கு இந்த ஆகாய வாஸிகளிடத்தில் நிரம்பவும் பிரியம்போலத் தோன்றுகிறது'' என்று நயமாகவும் நைவாகவும் பேசி வினவினார்.

அதைக்கேட்ட அந்த சுந்தராங்கி அப்போதும் அவரது முகத்தைப் பார்க்காமல் கிளியையே பார்த்த வண்ணம்,

''உலகத்தில் அழகும் குணமும் எங்கே நிறைந்திருக்கின்றனவோ, அங்கே மனிதருடைய மனம் செல்வது இயற்கை தானே. அப்படியிருக்க இந்தக் கிளிகளிடத்தில் பிரியமுண்டாவென்று கூடக் கேட்கவேண்டுமா? இந்தக் கிளிகளினிடத்திலும் சரி, நல்ல புஷ்பங்களிடத்திலும் சரி, எனக்கு அத்தியந்தப் பிரியம்'' என்று மிருதுவாகக் கூறினாள்.

கலியாணபுரம் மிட்டாதார் மறுபடியும் அவளை நோக்கி, ''ஓ அப்படியா! அதனால்தான் எங்கு பார்த்தாலும் அழகான கிளிகளும் புஷ்பங்களுமே மயமாக நிறைந்து கிடக்கின்றன. ஆனால், அதில் இன்னொரு விஷயமிருக்கிறது. நாம் ஒரு வஸ்துவினிடத்தில் பிரியம் வைத்தால், அந்த வஸ்து நம்முடைய பிரியத்தை உணர்ந்து, பரஸ்பரம் அதுவும் நம்மிடத்தில் பிரியம் வைத்தால்தான், நமக்கு ஆனந்தமாக இருப்பதன்றி நாம் பிரியம் வைத்ததற்கும் ஸார்த்தமாக இருக்கும். ஆனால், புஷ்பங்கள் உயிரில்லா வஸ்துக்கள்; அவைகளின் மேல் நாம் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறோமென்பதை உணர அவைகளுக்கு அறிவில்லை; இந்தக் கிளிகள் கொஞ்சமாவது உணர வேண்டியது நியாயந்தான்; ஆனால், எல்லாம் ஒரே மாதிரியாக இருக்காது. அதனதன் அறிவின் முதிர்ச்சிக்குத் தக்கபடி ஒவ்வொன்றும் பரஸ்பர அன்பைக்காட்டும். இந்த விஷயத்தில் நாய் ஒன்றுதான் நிரம்பவும் சிலாக்கியமானது. ஆனால், நாய் மனிதரிடத்தில் வைக்கும் பிரியத்துக்கும் மேலானதாக ஒரே ஒரு பிரியத்தைத்தான் சொல்லலாம். மனமொத்த காதலனும் காதலியும் ஒருவர் மேல் ஒருவர் பரஸ்பரம் வைக்கும் பிரேமைதான் இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் மேலான சுகம்'' என்று இனிமையான குரலில் கூறினார்.

அப்போது பூர்ணசந்திரோதயம் தான் இருந்த மாளிகையின் எதிர்ப்பக்கத்தில் இருந்த ஒரு பெருத்த சத்திரத்தின் மேன் மாடத்தைத் தற்செயலாகப் பார்த்தாள். அவ்விடத்தில், யாரோ ஒரு மனிதர் நின்று, தானும், அந்த யௌவன புருஷரும்

நின்று பேசியதை உற்றுக் கவனித்துத் தங்களையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருப்பதைக் கண்டுவிட்டாள். உடனே அவளது மனம் ஒருவித சஞ்சலமுற்றது. அவளது பார்வை அடிக்கடி சத்திரத்தின் மேன்மாடத்திற்கும், கிளிக்கூண்டிற்கும், கலியாணபுரம் மிட்டாதாரிடத்திற்குமாகச் சென்று வட்டமிடத் தொடங்கியது. அவர் நிற்பதைவிட உட்கார்ந்து கொண்டால், சத்திரத்திலிருந்து கவனித்த மனிதனுக்கு அவரிருந்தது தெரியாமல் போய்விடுமென்ற எண்ணம் அவளது மனதில் உதித்தது. உட்கார்ந்துகொள்ளும்படி அவரை உபசரித்தால் தான் அவர் மேல் பிரியம் கொண்டுவிட்டதாக அவர் எண்ணிக் கொள்ளப் போகிறாரே என்ற நினைவினால், அவ்வாறு உபசரிப்பதற்கும் அவள் பின்வாங்கினாள். உடனே செலவு பெற்றுக்கொண்டு போகாமல், தயங்கித்தயங்கி நிற்கும் அந்தப் பிரபுவைத்தான் அப்படியே நிறுத்தி வைப்பதாவது, போகும்படி சொல்வதாவது அவளுக்கு அவமரியாதையாகத் தோன்றியது. அவ்வாறு தத்தளித்த நிலைமையிலிருந்த பூர்ணசந்திரோதயம் அவர் கடைசியாகச் சொன்னதற்கு மறுமொழியாகப் பேசத் தொடங்கி, "சுயேச்சையாகத் தன்னுடைய பந்துமித்திரர்களோடு கூடி ஆகாயத்திலெல்லாம் திரிந்து குதூகலமாக இருக்கும் இந்தக் கிளியைக் கொணர்ந்து சொற்பமான இடமுள்ள தங்கமுலாம் பூசப்பட்ட கிளிக்கூண்டாகிய இந்தச் சிறைச்சாலையில் போட்டு வைத்து, அதன் இயற்கைக்கு மாறாக ஒரே இடத்தில் உட்கார வைத்து நாம் ஒடுக்குவதற்கு, அது இப்படித் தப்பி ஓடுவதைத் தவிர வேறே கைம்மாற்றை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? நாம் அதனிடத்தில் எவ்வளவு அபாரமான வாஞ்சை வைத்து, அதை உண்பித்துக் காப்பாற்றினாலும் அவைகள் எல்லாம், அது சுயேச்சையாகத் திரியும் அந்த ஓர் ஆனந்தத்துக்கு ஈடாகாதல்லவா! தன் ஜோடியும் குஞ்சுகளும் தன்னிடத்தில் பிரியம் வைப்பது அதற்கு இன்பமாக இருக்குமா? நாம் பிரியம் வைப்பது இன்பமாக இருக்குமா? நாம் எவ்வளவுதான் பிரியம் வைத்தாலும், அவ்வளவும் அதற்குப் பெருத்த வதைதான்" என்றாள்.

அதைக்கேட்ட கலியாணபுரம் மிட்டாதார் அவளது அற்புதமான வனப்பையும் ஜ்வலிப்பையும் கண்டு கரும்பு மொழிகளைக்கேட்டு இளகி உருகி மிகவும் நயமாகவும் வாத்சல்யத்தோடும் அவளைக் கபடமாக உற்று நோக்கி, "அப்படியானால், நீ இந்தக் கிளிகளையெல்லாம் கொணர்ந்து இப்படி வைத்துக் காப்பாற்றுவதெல்லாம், ஈவிரக்கமில்லாமல் இவைகளை வதைக்கிறதென்றா அர்த்தம்!" என்று மிகவும் இளக்கமாக வினவினார்.

உடனே பூர்ணசந்திரோதயம், "ஆம்; அப்படித்தான் அர்த்தமாகிறது. இருந்தாலும் இந்தப் பட்சிகளையெல்லாம் எடுத்துப் பறக்க விட்டுவிடமாத்திரம் என் மனம் இடங்கொடுக்கமாட்டேனென்கிறது.இவைகளை நான் பறக்க விட்டுவிடுவதாக வைத்துக் கொண்டாலும், இவைகள் வேறே யாரிடத்திலாவது அகப்பட்டுக்கொண்டால், அவர்கள் என்ன செய்வார்களோ? இவைகளைக் கறியாக்கித் தின்றாலும் தின்றுவிடுவார்கள். அப்படி மடிவதைவிட இந்தச் சிறைச்சாலையிலிருப்பதே மேலானதெனவும் ஒரு சமயத்தில் தோன்றுகிறது" என்றாள்.

அதைக் கேட்ட மிட்டாதார் கண்களைச் சிமிட்டிக்கொண்டு கபடமாகப் பேசத் தொடங்கி, "அப்படியானால் இந்தப் பஞ்சவர்ணக் கிளியினிடத்தில் நான் மிகுந்த வெறுப்பைத்தான் கொள்ள வேண்டும்" என்றார்.

பூர்ணசந்திரோதயம் வியப்புற்றவளாய், "நான் அபாரமாக பிரியம் வைத்துள்ள இந்தக் கிளியைத் தாங்கள் வெறுக்கவேண்டிய காரணமென்ன?" என்று நயமாக வினவினாள்.

உடனே கலியாணபுரம் மிட்டாதார் அவளது முகத்தைக் கபடப் பார்வையாகப் பார்த்துப் புன்னகை செய்தவண்ணம், "ஆம்; வெறுக்கத்தான் வேண்டும். ஏனென்றால், அதனிடத்தில் அபாரமான வாத்சல்யத்தை வைத்திருக்கும் உன்னிடத்தில் அது நன்றிகெட்ட காரியம் செய்கிறதே. அதற்காகத்தான் அதை

வெறுக்க வேண்டும். ஆகா! நான் மனிதனாகப் பிறந்து இப்படி அவஸ்தைப்படுவதைவிட, அந்தக் கிளியாகப் பிறந்திருந்தால், உன்னுடைய பிரேமைக்கும் வாஞ்சைக்கும் நான் பாத்திரனாயிருப்பேன் அல்லவா!'' என்று வாழைப் பழத்தில் ஊசியைச் சொருகுவது போல மிருதுவாகப் பேசினார்.

அவரது சொல்லைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் ஒருவித மகிழ்ச்சியடைந்து கலகலவென்று நகைத்துவிட்டு அந்தப் பஞ்சவர்ணக்கிளியை மிகவும் பிரியமாக நோக்கி, ''ரங்க ரங்கா! கஸ்தூரி ரங்கா! காவேரி ரங்கா! எங்கே? சொல் பார்ப்போம். உன்னைவிட்டு விடுவேன் என்று பார்த்தாயா? இப்பேர்ப் பட்ட பெரிய பிரபுக்களெல்லாம் உன்னை வெறுக்கும்படியான காரியத்தை ஏன் செய்தாய்? இனிமேல் செய்யமாட்டே னென்று கன்னத்தில் போட்டுக்கொள். எங்கே? அக்கா! அக்கா! அக்கா! சொல் பார்ப்போம்'' என்று கூறி அதனோடு கொஞ்சத் தொடங்கினாள்.

அவள் அவ்வாறு நடித்ததைக் கண்ட கலியாணபுரம் மிட்டாதாரது முகம் வாட்டமடைந்தது. மனம் தவித்தது. அவளது வார்த்தைகளின்மேல் தாம் மிகவும் தந்திரமாகப் பேச்சைக்கொடுத்து அவளது மனத்தின் ஆழத்தைப் பார்க்க வேண்டுமென்று, அவர் செய்த முயற்சிக்கு அந்த அணங்கு இடங் கொடுத்துப் பேசாமல் அவரது கபடக் கருத்தை அறிந்து கொண்டவள்போலக் காட்டிக்கொள்ளாமல், அவரது சொற்களை விளையாட்டாக மதித்து அவ்வாறு கிளியினிடத்தில் பேசியது அவரது மனதை அறுத்தது. ஒரு வித அவமானமும், விசனமும் அடைந்தவராய், அந்த யௌவன புருஷர் கலங்கி நிற்க, அவள் அவர் சொன்ன வார்த்தையை மறுபடியும் நினைத்துக் கொண்டு மகிழ்ச்சிகொண்டு நகைப்பவள்போல நடித்து, ''பேஷ்! தாங்கள் சொன்ன வார்த்தை மிகவும் புதுமையாக இருக்கிறது!'' என்று கூறி நகைத்தவளாய், அதுகாறும் நின்றதனால், அலுத்துப் போனவள் போல

பக்கத்திலிருந்த ஒரு ஸோபாவின் மேல் கிளியைப் பார்த்த வண்ணம் மெதுவாக உட்கார்ந்து கொண்டாள்.

உடனே கலியாணபுரம் மிட்டாதார் முன்னிலும் பன்மடங்கு அதிக உருக்கமாகவும் அன்பாகவும் அவளை நோக்கிப் புன்னகை செய்து, ''நான் சொன்னதில் புதுமை ஒன்று மில்லையே! என்னுடைய கருத்தை நன்றாக விளக்கிச் சொல்லட்டுமா?'' என்று நயமாகக் கூறினார்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம், ''தாங்கள் சொன்னது தான் நன்றாக விளங்குகிறதே! அதை இன்னமும் அதிகமாக விளக்கும் சிரமம் தங்களுக்கு ஏன்? இந்த மனித ஜென்மத்தை இழந்து பஞ்சவர்ணக்கிளியின் ஜென்ம மெடுக்க ஆசைப்படு வதாகச் சொன்னீர்கள். அவ்வளவுதானே?'' என்று குறும்பாக வும் நயமாகவும் மறுமொழி கூறியவண்ணம் எதிர்ச்சாரியி லிருந்த சத்திரத்தின் மேன்மாடத்தை நோக்கினாள்.

அவளோடு தாம் நெடுநேரம் சம்பாஷிக்க நேர்ந்திருப்பதைக் கண்டு உட்காருகிறவர்போல அந்த யௌவன புருஷர் சிறிது தூரத்திற்கப்பால் கிடந்த ஒரு நாற்காலியின் மேல் மெதுவாக உட்கார்ந்துகொண்டு, ''அடடா! நான் அப்படியா சொன்னேன்! பொதுவாக நான் பஞ்சவர்ணக்கிளியின் ஜென்ம மெடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லையே. உன்னுடைய பஞ்சவர்ணக் கிளியாக மாறவேண்டு மென்றல்லவா நான் சொன்னேன்'' என்று கூறி, ''உன்னுடைய'' என்ற சொல்லை அழுத்திப் பேசினார்.

அதைக்கேட்ட அந்த மடமங்கை சிறிது நாணி மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து, ''ஓகோ அப்படியா! என்னுடைய பஞ்ச்வர்ணக் கிளியாகவா மாற விரும்புகிறீர்கள்? ஏன், தாங்களும், என்னுடைய அன்பையும் போஷணையும் பெற்றுக்கொண்டு இந்தக் கிளி செய்ததுபோல நன்றிகெட்ட தனமாக ஓடிப்போய்ப் பார்க்க வேண்டுமென்ற எண்ணமோ? எனக்கு இந்த ஒரு பஞ்சவர்ணக் கிளியே போதுமானது. இனி

எப்பேர்ப்பட்ட அருமையான மனிதர் பஞ்சவர்ணக்கிளி வடிவெடுத்தாலும், நான் இந்த ஒரு கிளிக்கு மேல் அதிகமாக வைத்துக்கொள்ளப் போவதில்லை. என்னுடைய மனசிலுள்ள வாஞ்சை இந்த ஒரு கிளியினிடத்தில் வைப்பதற்கே போதுமானதாக இல்லையே. இன்னமும் பல கிளிகளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்கிறது? அத்தனை கிளிகளும் இது கொஞ்ச நேரத்துக்கு முன் செய்ததுபோலத் தப்பித்துக் கொண்டு ஓடுமானால், அத்தனை கிளிகளையும் பிடித்துக் கொடுக்க தங்களைப் போன்ற அத்தனை புண்ணியவான்களுக்கு நான் எங்கே போவேன்?'' என்று குதூகலமாகப் பேசினாள்.

அவளது புத்தி சாதுர்யத்தைக் கண்டு மிகுந்த களிப்பும் வியப்பும் கொண்ட அந்த யௌவன புருஷர், ''அடடா! என்னுடைய கருத்தை இன்னமும் நீ சரியானபடி உணர்ந்து கொள்ளாமல் பேசுகிறாய்! நீ இவ்வளவு பிரியமாக இருப்பதைக் கவனியாமல் இந்தக் கிளி இப்படி நன்றி கெட்டத்தனமாக ஓடுகிறதே. நான் இந்தக் கிளியாக இருந்தால் இப்படி ஓடாமல் பரஸ்பரம் உன்மேல் வாஞ்சைவைத்து எப்போதும் உன்னை சந்தோஷப்படுத்த முயன்றுகொண்டிருப்பேனே யென்று நான் சொல்லக் கருதினேன். அப்படியிருக்க நானும் இதைப்போல ஓடிப்போய் விடுவேனென்று நீ சொல்வதற்கே இடமில்லையே'' என்றார். அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் மறுபடியும் பேசத் தொடங்கி, ''தம்மிடத்தில் பிரியம் வைப்போரிடத்தில் தாமும் பரஸ்பரம் பிரியம் வைத்து நன்றி மறக்காமல் நடக்க வேண்டுமென்ற கொள்கை மனிதருடைய பகுத்தறிவுக்குத்தான் தெரியும். ஆகையால், தாங்கள் மனித வடிவத்தோடு இருக்கும் வரையில் தாங்கள் இப்படிச் சொல்லலாம். ஆனால் தாங்கள் கிளியாக மாறிவிட்டால், தங்களுக்குக் கிளியின் அறியாமையும், அக்ஞானமும் உண்டாகிவிடும். ஆதலால், தாங்களும் மற்ற கிளிகள் மாதிரியே நடந்துகொள்வீர்களன்றி வேறுவிதமாக நடக்கமுடியுமா? கிளியின் வடிவத்தோடிருந்து, மனிதருடைய பகுத்தறிவை

மாத்திரம் அடைய வேண்டுமானால், அது நிறைவேறுமா? ஆகையால், தாங்கள் கிளியாக மாறுவது எப்படி சாத்திய மில்லாத காரியமோ, அதுபோல தாங்கள் கிளியாக மாறியபின் மனிதருடைய பகுத்தறிவைக் கொள்வதும் சாத்தியமில்லாத விஷயம்'' என்று வேடிக்கையாகப் பேசினாள்.

அதைக்கேட்ட கலியாணபுரம் மிட்டாதார் அவளை நோக்கி, நகைத்து வேடிக்கையாகப் பேசத் தொடங்கி, ''அடடா! அப்படியா நினைக்கிறாய்! உன்னுடைய இனிமையான வடிவத்தை மனதிற்குள் பதிய வைத்துக்கொண்டு ஒரு மனிதன் முயற்சி செய்ய ஆரம்பிப்பானாகில், அவனுக்குச் சாத்திய மில்லாத காரியமிருக்குமா? ஒருநாளுமிருக்காது. உன்னுடைய பெயரை ஒருதரம் ஜெபித்தால் எவராலும் சாத்தியமில்லாத காரியமெல்லாம் சாத்தியமாகிவிடாதா! உன் பொருட்டு மனிதன் உயிரோடு இருந்தாலும், அவன் இந்தப் பிறவியிலேயே சாயுஜ்ய பதவியை அடைந்தவன் போலாவான்; உன் பொருட்டு இறந்தாலும், அவனுக்கு உடனே சொர்க்க போகம் சித்தித்து விடும்'' என்று தமது வார்த்தைகளி லெல்லாம் மிகுந்த பிரியத்தையும் உருக்கத்தையும் புகுத்திப் பேசினார்.

அதைக் கேட்ட பெண்ணரசி மிகுந்த வியப்பும் திகைப்பும் தோற்றுவித்தவளாய்ச் சந்தேகத்தோடு அவரது முகத்தை உற்று நோக்கி, ''மகாப்பிரபுவே! தாங்கள் கடைசியாகச் சொன்ன வார்த்தை என் மனசை நிரம்பவும் வருத்துகிறது. என்னால் ஓர் ஈ, எறும்பு கூட உயிர்விட நான் சகித்திரேன். ஆகையால் எனக்காக எந்த மனிதரும் உயிரை விடவேண்டாம்'' என்றாள்.

உடனே அந்த யௌவன புருஷர் மிகவும் இளக்கமாகவும் இறைஞ்சிய குரலாகவும் பேசத் தொடங்கி, ''அப்படியானால் இறந்து போகவேண்டாம். பிழைத்துப்போமென்று நீ எனக்கு அபயஸ்தம் கொடுக்கிறாயா?'' என்று கூறிக் கண் சிமிட்டினார்.

அந்த வார்த்தையைக் கேட்ட பெண்மணி தனது ஸோபாவை

விட்டுச் சடக்கென்று எழுந்து முறுக்காக நிமிர்ந்து நின்றவளாய்க் கீழ் நோக்கிய பார்வையாகப் பார்த்தவண்ணம், "மகாப் பிரபுவே! ஆரம்பத்திலிருந்து தாங்கள் என்னைப் பிரமாதமாக ஸ்தோத்திரம் செய்தே பேசிக்கொண்டு வருகிறதன்றி, ஏதோ மனதில் வைத்துக்கொண்டு ஜாடையாக மூடி மூடிப் பேசுகிறீர்கள். தங்களுடைய கருத்து இன்னதென விளங்கவில்லை. தயவு செய்து வெளிப்படையாகப் பேசுங்கள்" என்று அழுத்தமாகவும் நயமாகவும் கேட்கலானாள்.

உடனே மிட்டாதாரும் எழுந்து நின்ற வண்ணம் தமது மனத்தின் உணர்ச்சிகளையெல்லாம் நன்றாக முகத்தில் புலப்படுத்தி அவளை நோக்கி, "பெண்ணே! உன்னுடைய அழகு எப்பேர்ப்பட்ட அபாயமான அழகென்பதையும், அது ஆண் பிள்ளைகளின் மனதை எவ்வளவு தூரம் உருக்கிக் கருக்குகிறது என்பதையும் நீ கொஞ்சமாவது உணர்ந்திருந்தால், என்னுடைய வார்த்தைகளின் உள் கருத்து இன்னது என்பது உனக்கு ஏற்கெனவே தெளிவுபட்டிருக்கும்" என்று நயமாக மொழிந்தார்.

அதுகாறும் தரையைப் பார்த்தபடியே பேசிய அந்த உன்னத மங்கை மெதுவாகத் தனது கண்களை உயர்த்தி முறுக்காகவும் அமர்த்தலாகவும் அவரது முகத்தை உற்று நோக்கி, கடுமையாக ஒருதரம் விழித்தாள்.

அந்தக்கொடிய பார்வை அவரை ஒரே நொடியில் பஸ்மீகரம் செய்துவிடக் கூடியதாக இருந்ததானாலும், மிட்டாதார் பின் வாங்காமல் நின்று மேலும் அவளைப் பார்த்துக் கெஞ்சி மன்றாடிய குரலாகப் பேசத்தொடங்கி, "பூர்ணசந்திரோதயம் கோபித்துக்கொள்ளாதே; ஆகா! நீ நிமிர்ந்து நின்று கோபத்தோடு என்னைப் பார்ப்பது, எவ்வளவு சொகுசாக இருக்கிறது தெரியுமா? உன்னைப் பார்த்தால், மண்டலேசுவரருடைய பட்டத்து ராணியோ, அல்லது தேவேந்திர லோகத்திலுள்ள இந்திராணியோ என்று சந்தேகப்படும்படியாக இருக்கிறது.

உன்னுடைய கண்களின் பார்வை ஜிலுஜிலென்று எவ்வளவு குளிர்ச்சியாகவும் இனிமையாகவும் இருக்கிறது! நீ பார்க்கும் ஒரு பார்வையில் ஆண்பாலருடைய மனசும், உடம்பும் அனலில் வைத்த வெண்ணெய்போல ஓர் இமைப் பொழுதில் கரைந்துபோய் விடுகிறதே! அப்படி இருக்க, உன்னுடைய மனசும் நல்ல இளகிய மனசாகவே இருக்கவேண்டு மன்றி வேறு விதமாக இருக்காது. அடைக்கலமென்று உன்னிடத்தில் யாசகம் கேட்க வந்திருக்கும் என்னிடத்தில் நீ கடுமையாகப் பேசுவது தரும மாகாது. நான் சொல்வதைத் தயை கூர்ந்து கொஞ்சம் கவனிக்க வேண்டும். அதுதான் நான் கேட்டுக்கொள்ளும் முதல் தியாகம்'' என்று மிகவும் நயமாகக் கூறினார்.

அதைக்கேட்ட பெண்பாவை கம்பீரமாகவே தனது ஸோபா வின் மேல் மறுபடியும் உட்கார்ந்து கொண்டவளாய் அவரை நோக்கி ''சரி; கவனித்தே கேட்கிறேன். சொல்லலாம்'' என்று அமர்த்தலாகப் பேசினாள்.

உடனே அந்த யௌவன புருஷர் தமது பற்களையெல்லாம் காட்டிக் கெஞ்சியவண்ணம், ''பெண்ணே! நான் பேசுவதை நடுவில் தடுக்காமல், கடைசிவரையில் பொறுமையோடு கேட்கிறதாக நீ முதலில் வாக்களிக்க வேண்டும்'' என்றார்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம், ''அப்படிப்பட்ட வாக்குறுதி கொடுக்க நான் தயாராக இல்லை. தாங்கள் பேசுவது மிகவும் ஆச்சரியமாகவும், நான் இதுவரையில் கேட்டிராத தாகவும் இருக்கிறது. என்னுடைய கிளி தப்பி ஓடியதைப் பிடித்துக் கொணர்ந்ததான தற்செயலான ஒரு சிறிய சம்பவத்தி லிருந்து எனக்கும் தங்களுக்கும் இப்போதுதான் பழக்கம் ஏற்படுகிறது. நானும் தாங்களும் முதன்முதலாகச் சந்தித்து இன்னும் அரை நாழிகை நேரம்கூட ஆகவில்லை. அப்படிப் பட்ட முகமறியாத மனிதர்களான நம்மிருவருக்குள் இப்படிப் பட்ட ஆட்சேபகரமான விஷயங்களைக் குறித்த பேச்சு நடப்பது

சுத்த அசம்பாவிதமாக இருக்கிறது'' என்று கண்டிப்பாகக் கூறினாள்.

உடனே கலியாணபுரம் மிட்டாதார், ''பெண்ணே! இன்னமும் நீ கோபமாகவே பேசுகிறாய்! நீ அப்படிக் கோபித்துக்கொள்ளும் படியாக நான் என்ன தவறு செய்துவிட்டேன்! ஒன்றுமில்லையே. நான் சொல்லப்போகும் வார்த்தைகளைப் பொறுமையாகக் கேட்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நீ எனக்கு இந்த ஓர் அற்பமான வரத்தைக் கொடுக்கக்கூடாதா? நான் பேசும் வார்த்தைகள் உனக்கு ஆச்சரியமாகவும் எதிர்பாராதவையாகவும் இருக்கலாம். இருந்தாலும், நான் என்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறேன். அதைக் கேட்பாயானால், உடனே உன் மனம் திருப்தி யடைந்து விடுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்'' என்றார்.

பூர்ணசந்திரோதயம் ''கொஞ்ச நேரத்துக்கு முன் தாங்கள் என் விஷயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசையையும் செய்த உதவியையும் கருதியே, நான் தங்களிடத்தில் இதுவரையில் மிகவும் பொறுமையாக நடந்துகொண்டிருக்கிறேன். அப்படி இல்லாதிருந்தால் இவ்வளவு தூரம் தாங்கள்பேச இடமே கொடுத்திருக்க மாட்டேன். சரி; சொன்னதை யெல்லாம் சொல்லிவிட்டீர்கள். இனி என்ன பாக்கியிருக்கிறதோ, அதையும் சொல்லி விடுங்கள். நான் இன்னமும் கொஞ்சநேரம் பொறுமையோடு கேட்கிறேன்'' என்று வேண்டா வெறுப்பாகப் பேசினாள்.

உடனே கலியாணபுரம் மிட்டாதார், அவளை மிகவும் உருக்கமாகவும் பரிதாபமாகவும் நோக்கி, ''பெண்ணே! நான் உன்னை இப்போதுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன் என்று நினைக்க வேண்டாம். நீ என்றையதினம் இந்த ஜெகன் மோகன விலாசத்தில் வந்து இறங்கினாயோ, அன்றைய தினமே நான் உன்னைக் கண்டேன். அது முதல் இந்த நிமிஷம் வரையில் நான்

ஒரு நொடி நேரமாவது உன்னை மறந்தவனேயல்ல. உன்னுடைய வடிவம் புகைப்படம் பிடித்ததுபோல, என் மனசில் அப்போது முதல் உறுதியாகப் பதிந்து போயிருப்பதால், பகலெல்லாம் அதுவே தியானமாகச் செய்து இரவெல்லாம் அதுவே கனவாகக் கண்டு நான் நெருப்பின் மேல் விழுந்த புழுப்போலத்தவித்துக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் காலைமுதல் நடு இரவு வரையில் இந்த ராஜவீதியிலேயே நான் அலைந்தலைந்து நீ எப்போது உப்பரிக்கைக்கு வந்து எனக்குக் காட்சி கொடுப்பாயோ என்று பார்த்துப் பார்த்து என்னுடைய கண்கள் எப்படிப் பூத்துப் போய்விட்டன வென்பது உனக்குத் தெரியுமா? இந்த ஜாகைக்கு வந்து வெளியில்போன ஒவ்வொரு மனிதரோடும் நான் பழக்கம் செய்துகொண்டு, உன்னுடைய வரலாற்றை யெல்லாம் விசாரித்து அறிய எவ்வளவு பாடுபட்டிருப்பேன் தெரியுமா? உன்னிடத்தில் சிநேகம் செய்துவைக்கும்படி அவர்களை யெல்லாம் நான் எவ்வளவு தூரம் எத்தனைகாலம் கெஞ்சி மன்றாடி இருப்பேன் தெரியுமா? இந்த ஊரிலுள்ள ஒவ்வொருவரும் உன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள். உன்னுடைய குணாதிசயங்களையெல்லாம் எடுத்தெடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால், ஒருவராகிலும் உன்னிடத்தில் வந்து நெருங்கிப் பேசமாட்டாமல் அஞ்சிக் கழித்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, நான் பைத்தியங் கொண்டவன் போல மாறி, ராப்பகல் உன் வீட்டு வாசலே கதியாகச் சுற்றி வந்து கொண்டிருந்தேன். கடைசியாக இன்றைய தினம், நான் வழக்கம்போல வந்து வேலியண்டை மறைந்து நின்றபோது, நீ தற்செயலாக எனக்குக் காட்சி கொடுத்தாய். உன்னை நான் ஒரு தெய்வமாக மதித்து அப்படியே ஸ்தம்பித்து நின்று உன்னை என்னுடைய இருதயகமலத்தில் வைத்துப் பூஜை செய்தவனாய், ஈசுவரனை நோக்கித் தியானம் செய்து என் மனசைக் கொள்ளைகொண்ட இந்த ஸ்திரீ ரத்னத்தோடு பேச, ஒரு மார்க்கம் காண்பிப்பது உனக்கு அரிதா என்று நான்

கடவுளை நினைத்து வருந்தி ஸ்தோத்திரம் செய்திருந்த காலத்தில், கருணை வள்ளலான கடவுள் பஞ்சவர்ணக் கிளியின் மூலமாக உடனே நம் இருவருக்கும் பழக்கம் செய்து வைத்தார். நான் எண்ணியபடி பஞ்சவர்ணக் கிளி என்னிடத்தில் வந்ததை நான் ஒரு நல்ல சகுனமாக மதித்து மிகுந்த நம்பிக்கை கொண்டவனாக இங்கே வந்திருக்கிறேன்'' என்று கூறிச் சிறிது நிறுத்தினார்.

உடனே பூர்ணசந்திரோதயம் மிகுந்த மமதை கொண்டவளாய்க் கொடூரமான பார்வையாக விழித்து அவரைப் பார்த்து ''ஓகோ! அப்படியா சங்கதி! பசுவின் தோலுக்குள் புலி மறைந்திருக்கிறதோ! இப்படிப்பட்ட கருத்தோடு தாங்கள் வந்து அலைந்துகொண்டிருக்கிறீர்களென்பதாவது, கொஞ்ச நேரத்துக்குமுன் வேலியண்டை வந்து ஒளிந்துகொண்டிருந்ததாவது எனக்குத் தெரிந்திருந்தால், நான் இந்த மெத்தையின் முன்பக்கத்துக்கே வந்திருக்கமாட்டேனே. அடாடா! இது நல்ல கூத்தாக இருக்கிறதே! அது இருக்கட்டும். தாங்கள் என்னைக் கண்டவுடனே ஏதோ மதிமயங்கிப் போய் அவஸ்தைப்படுவதாகச் சொல்லுகிறீர்களே! முதலில் நான் யார் என்பதைத் தாங்கள் தெரிந்து கொண்டீர்களா?'' என்றாள்.

கலியாணபுரம் மிட்டாதார், ''ஓ! தெரிந்து கொண்டேன். நீ தார்வார் தேசத்து மகாராஜாவின் அபிமான புத்திரி என்பதையும், உனக்கு இன்னம் கலியாணமாகவில்லை என்பதையும் நான் சந்தேகமறத் தெரிந்து கொண்டேன்'' என்று மிகவும் இனிமையாகக் கூறினார். அதைக் கேட்ட அந்தப் பேடன்னம் மிகவும் புரளியாகப் பேசத் தொடங்கி, ''ஓ! அப்படியா! அவ்வளவுதூரம் தெரிந்துகொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் பரவாயில்லை. நான் யாரென்பதைத் தாங்கள் சரியாகவே தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். அதிருக்கட்டும். தாங்கள் சகல மரியாதையும் தெரிந்த பெரிய மனிதர். நான் ஒரு மகாராஜாவின் மகளென்று தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

அப்படியிருக்க, என்னிடத்தில் தாங்களே நேரில் வந்து இப்படிப்பட்ட தகாத வார்த்தைகளைச் சொல்லலாமா? இந்த ஊரில் மகாராஜனுடைய பெண்ணிருக்கிறாளே, அவளிடத்தில் தாங்கள் போய் இப்படிப் பேசுவீர்களா? நான் கலியாணம் ஆகாதவளென்பது நிஜமாகவே இருக்கட்டும். அப்படி இருந்தாலென்ன? கலியாணம் ஆகாத குடும்ப ஸ்திரீகளெல்லாம் தேவடியாளுக்குச் சமமென்பது தங்களுடைய எண்ணமா? என்னுடைய உண்மையான யோக்கியதை எப்படிப்பட்டதென்பதையும், நான் இப்பேர்ப்பட்ட துன்மார்க்க வார்த்தைகளை எல்லாம் விரும்பக்கூடியவளா அல்லவா என்பதையும் அறிந்துகொள்ளாமல், தாங்கள் இப்படி வந்து என்னிடத்தில் தாறுமாறாகப் பேசலாமா? அன்னிய புருஷர்கள், கலியாணமான ஸ்திரீகளோடு ஒருவேளை பேசினாலும் பேசலாம்; எங்களைப்போன்ற கலியாணமாகாத கன்னிகா ஸ்திரீகளோடு பேசுவதே கூடாதே; ஏதோ ஆபத்துக்குப் பாபமில்லையென்று இப்படிப்பட்ட எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போது கட்டாயமாகப் பேச நேர்ந்தாலும் எது காரியமோ அதைப்பற்றி மரியாதையாகப் பேசிவிட்டுப் போவதே தகுமன்றி, வேறு வித்தியாசமான வார்த்தைகளை உபயோகிப்பது, தங்களைப்போன்ற தக்க பிரபுக்களுக்குக் கொஞ்சமும் அடாத காரியம். நான் நெடுநேரமாகத் தனியாக இருந்து பேசுவதைக் கண்டு என்னுடைய சிப்பந்திகளும் வழிப்போக்கர்களும் என்னைப்பற்றி ஏதாவது தவறான அபிப்பிராயம் கொள்வார்கள். ஆகையால், நான் உள்ளே போக உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன். தாங்களும் தயைகூர்ந்து போய் வாருங்கள்'' என்று கூறியவண்ணம் தனது ஸோபாவை விட்டெழுந்து அப்பால்போகும் கருத்தோடு கானமயில் அடி பெயர்த்து வைப்பதுபோல இரண்டோரடி யெடுத்துவைத்து அன்னநடை நடக்கலானாள். அந்தச் சமயத்தில் கலியாணபுரம் மிட்டாதாரின் மோகவெறி உச்சநிலையை அடைந்திருந்தமையால், அவரது தேகம் கட்டுக் கடங்காமல் துடிதுடித்துப்

பறக்கிறது. மனம் பொங்கிப் பதறுகிறது. காமன் கணைகள் ஒன்று பத்து நூறாயிரம் கோடியாக வந்து அவரது மார்பில் தைத்து ஊடுருவிப் பாய்ந்து அவரது நெஞ்சை சல்லடைக் கண்ணாகத் துளைக்கின்றன. அந்த நிலைமையில் அவர் முற்றிலும் மெய்மறந்து ஆவேசம் கொண்டவராய், ஒரே பாய்ச்சலாக அவளுக்கெதிரில் பாய்ந்து, ''என் உயிரைக்கொள்ளை கொண்ட என் கண்மணியே! எவ்வளவோ பகீரதப் பிரயத்தனம் செய்து நான் இங்கே வந்து, புதையலெடுத்த தனம் போல உன்னோடு பேசும் பாக்கியத்தைப் பெற்றபின் நான் அபஜெய மடைந்து வெளியில் போய் இனி ஒரு நொடிகூட உயிர் சுமந்திருக்க மாட்டேன். குற்றுயிரும் குலை உயிருமாக வைத்து என் ஆயுசுகாலம் முடிய என்னை நீ சித்திரவதைக்கு ஆளாக்குவதை விட உன் கையாலேயே நீ என்னைக் கொன்று போட்டுவிடு. அந்தக் காரியம் செய்ய உன் மனம் துணியாவிட்டால் நானே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உன் பாதத்தடியில் விழுந்து இறந்து போகிறேன்'' என்று கூறி மிகவும் உருக்கமாகப் பேசிக் கண்ணீர் விடுத்துக் கலங்கி யழுது நைந்திளகி அவளுக்கெதிரில் உட்கார்ந்து, குனிந்து அவளது அழகுவழிந்த பொற்பாத கமலங்களைத் தொட்டுத் தடவி மாறி மாறித் தனது கண்களில் ஒற்றிக்கொண்டார்.

## 6-வது அதிகாரம்

## கூத்தாடி அன்னத்தம்மாள்- கட்டாரித்தேவன்

தஞ்சைமா நகரத்திற்கு வடக்கிலுள்ள திருவையாறு என்ற ஸ்தலத்திற்குச் செல்லும் ராஜபாட்டையின் மீது சுமார் நான்கு மைல் தூரத்தில் அம்மன் பேட்டை என்ற ஒரு சிறிய ஊர் இருக்கிறது; நமது கதை நிகழ்ந்த காலத்தில் அந்த ஊரில் சுமார் இருநூறு வீடுகளுள்ள நான்கு வீதிகளும், அவற்றினிடையில் ஓர் அம்மன் கோயிலும் இருந்தன. அவற்றுள் சுமார் ஐம்பது வீடுகளில் மிராசுதார்களும், மிகுதியிருந்த பெரும்பாலான வீடுகளில் கூத்தாடிச்சிகள் என்று சொல்லப்

பட்ட ஒருவகை தாசிகளும் வசித்து வந்தனர். அந்தக் கூத்தாடிச்சிகள் பரம்பரையாக வேஷங்கள் போட்டு நாடகம் ஆடுவதையே வெளிப்படையான பிழைப்பாக வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் கண்ணைக் கவரும் அழகும், மனதை மயக்கும் சங்கீதப் பயிற்சியும் உடையோராக இருந்தமையால், அந்த ஜில்லாவில், நூறு வேலி, ஆயிரம் வேலி நிலங்களையுடைய மிராசுதார்களும், பெருத்த பெருத்த ஜமீந்தார்களும், தனவந்தர்களும், இவர்களது மோக வலையில் சிக்கி, தத்தம்பெண்டு பிள்ளைகளை உல்லங்கனம் செய்து இந்தக் கூத்தாடிச்சிகளின் வீடே கதியாக இருந்து, தங்களது ஏராளமான செல்வத்தையெல்லாம் விரயம் செய்துவந்தனர். இந்தக் கூத்தாடிச்சிகள் காலிற்குக் காலாய்த் தாய்க்குப்பின் மகளும், மகளுக்குப்பின் பேர்த்தியும் அந்தத் தொழிலைப் பரம்பரையாக எப்படி நடத்தி, பொதுஜன ரம்மியமான அந்தப் பரோபகார ஊழியத்திற்குத் தங்களது சரீரங்களைப் பயன்படுத்தி வந்தார்களோ, அதுபோல அந்தப் பெரிய மனிதர்களும், அவர்களது பிள்ளைகளும், பேரன்மார்களும் காலிற்குக் காலாக அவர்களை வைத்து பட்சம் மறவாமல் காப்பாற்றி வந்தனர். ஒவ்வொருத்தியும் பதினாயிரம் ஐம்பதினாயிரம் பெறும் ஆடையாபரணங்களையும், நிலங்களையும், வீடுகளையும் சம்பாதித்து நல்ல நிலைமையிலிருந்து அமோகமாக வாழ்ந்து வந்தனரானாலும், அதுபற்றிச் செருக்கென்பதையே கொள்ளாமல், ஒரேமாதிரியான பணிவும், பிரியமும் காட்டித் தங்களது குலத்தொழிலிற்கு எவ்விதப் பங்கமும் நேராமல் ஒழுவி வந்தனர். அந்த ஊரிலிருந்த கூத்தாடிச்சிகள் யாவரிலும் ஒரு வீட்டுக்காரி செல்வாக்கு, அழகு, நாடகம் ஆடும் திறமை, சங்கீதத் தேர்ச்சி, குணத்தழகு, நடத்தையழகு முதலிய சிறப்புகளால் மிகவும் கீர்த்திவாய்ந்து அந்தப் பெண் மலையாளத்திற்கே ஒரு சக்கரவர்த்தினிபோல இருந்து வந்தாள். அவளது மாளிகை ஓர் அரண்மனைபோல அதியுன்னதமாகக் கட்டப்பட்டிருந்த தன்றி, அவளுக்கு

லக்ஷக்கணக்கில் பணமும், நிலங்களும், ஆடையாபரணங்களும் இருந்துவந்தன. அவளது வீட்டையெல்லோரும் பெரியவீடு என்று குறிப்பிடுவது வழக்கம். பெரிய வீட்டுக்காரியிடத்தில் மற்ற எல்லோரும் மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்து அவளது சொற்படி நடந்துவந்தனர். மற்றவர்களது வீடுகளில் சாமான்ய ஜெமீந்தார்களையும், மிராசுதார்களையும் காணலாமென்றால், பெரிய வீட்டு அன்னத்தம் மாளி ஊண்டையில் மகாராஜாக்கள், அல்லது அவர்களது மந்திரிமார்களை மாத்திரமே காணமுடியும். அம்மன்பேட்டை அன்னமென்றால் அரசர்களெல்லோரும் திக்கு நோக்கித் தெண்டனிடுவார்கள். நமது கதை நிகழ்ந்த காலத்தில் அந்த அன்னத்திற்கு வயது சுமார் முப்பத்தைந்து இருக்கலாம். அவள் அழகுவழிந்த சொகுசான மேனியும், ஒரு கண்ணாடியில் உலகையெல்லாம் மயக்கத்தக்க முக வசீகரமும், கந்தருவப் பெண்ணோவென யாவரும் கலங்கக் குயில் போலப் பாடி மயில்போல நடிக்கும் மகா அருமையான திறமையும், தனது வலையில் வீழ்ந்தோரிடத்தில் அமிர்தம் போல அதிமனோக்கியமாக ஒழுகி அவர்களது மனம் பரவசமடையச் செய்யும் ஸரஸகுணமும் வாய்ந்தவளாக இருந்தாள். அவள் வள்ளியம்மை நாடகத்தில், வள்ளி வேஷம் போடுவதிலும், அரிச்சந்திர நாடகத்தில் சந்திரமதி வேஷம் போடுவதிலும் மகா கீர்த்தி வாய்ந்தவள். ஓர் இரவில் அந்த வேஷம் தரித்து நடிப்பதற்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த தொகையை அவள் பெறுவதில்லை. அந்தத் தொகையை வைத்துக் கொண்டு சில ஊரார் அவளை நாடகத்திற்கு அழைத்தாலும், சில சமயங்களில், அவள் தனக்குத் தேக அசௌக்கியமாயிருக்கிற தென்று சொல்லி அனுப்பி விடுவாள். அவளுக்கும், முன்னதிகாரங்களில் குறிக்கப்பட்ட தஞ்சை நகரத்தின் இளவரசருக்கும் நீண்டகாலமாக அந்தரங்க நட்பு இருந்து வந்தது. அவர் எப்போதாவது நினைத்துக் கொண்டால், இராக்காலத்தில் ஒரு பெட்டி வண்டியில் ரகசியமாகப்

புறப்பட்டு அம்மன்பேட்டை அன்னத்தின் வீட்டிற்குப்போய், மேன்மாடத்தில் உல்லாஸமாக இனிது வீற்றிருந்து அவளது பாட்டுக்கச்சேரியைக்கேட்டு, அவளது நடனத்தைக் கண்டு ஆனந்த பரவசமடைந்திருந்து அவளுக்கு ஆயிரம் இரண்டாயிரம் கொடுத்துவிட்டு விடியற்காலையில் அரண்மனைக்குத் திரும்பி வந்துவிடுவார். அந்த அன்னத்திற்கு ஐந்துபெண்கள் பிறந்திருந்தார்களானாலும், அவள் தனது உடம்பின் கட்டுத் தளராமலும், மேனி குலையாமலும் அதிக ஜாக்கிரதையாகத் தனது உடம்பைக் காப்பாற்றி வந்தாளாதலால், அவள் குழந்தைகளையே பெறாத இருபத்தைந்து வயது யௌவன ஸ்திரீ போலவே காணப்பட்டாள். அவளது புதல்விகளில் மூத்தவளுக்கு வயது இருபது நடந்தது. மற்றவர்கள் முறையே இரண்டிரண்டு வயது குறைந்தவர்கள்; ஆகவே, ஐந்தாவது பெண்ணின் வயது பன்னிரெண்டென்பது சொல்லாமலே விளங்கும். அந்த ஐந்து மடந்தையரும் தாயைப் போல ஒரே அச்சில் கடைந்தெடுக்கப்பட்ட சித்திரப்பாவைகள் போலவும், ஒரே கொத்தில் காய்த்துக் கனிந்த பழங்கள்போலவும், ஒரே கொடியில் மலர்ந்த ரோஜா மலர்கள் போலவும் மகா அற்புதமான அழகோடு காணப்பட்டு மன்மதனது பஞ்ச பாணங்களோ, அல்லது மனிதரது பஞ்சேந்திரியங்களைப் பரவசப்படுத்த சிருஷ்டிக்கப்பட்டுள்ள ஐந்து புதிய இன்பக் களஞ்சியமோ என ஐயுறும் வண்ணம் மிகவும் நேர்த்தியாக இருந்தனர். அவர்களுக்கு முறையே அம்மாளு, தனம், சிவபாக்கியம், அபிராமி, செல்லம் என்று பெயர் வைக்கப் பட்டிருந்தது. அவர்கள் சாதாரணக் கல்வி கற்பிக்கப்பட்டிருந்த தன்றி, வீணை, பரத நாட்டியம், நாடகம் முதலியவற்றிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் எவ்விதக் கவலையும் கொள்ளாதபடி மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டிருந்தமை யால், அவர்கள் ஐவரும் எப்போதும் குதூகலமாகவே இருந்து வேடிக்கையாகப் பேசிச் சிரித்து எல்லோரிடத்திலும் அன்பாகவும் பிரியமாகவும் ஒழுகிவந்தனராதலால்,

அவர்களைக் கண்டு விரும்பாத மனிதரே இல்லையென்று சொல்லலாம். அப்படி இருந்தும், அன்னத்தம்மாள் தனது குடும்ப வழக்கத்தின்படி இராஜனது குடும்பத்துச் சிறுவர்களன்றி மற்ற எவரும் தனது புதல்வியரிடத்தில் நெருங்கிப் பேசக்கூடாதென்ற ஒரு நிர்ணயத்தில் அவர்களை வைத்துக் காத்து வந்தாள். அந்தப் பெண்களின் அபூர்வமான அழகைப்பற்றியும் குணாதிசயங்களைப் பற்றியும் கேள்வியுற்ற எத்தனையோ பெருத்த பெருத்த மனிதர்களெல்லாரும் அவர்களிடத்தில் நெருங்கி ஒரு வார்த்தை பேசுவதற்கு ஆயிரம் பதினாயிரம் கொடுக்கவும் தயாராக இருப்பதாகச் செய்தி சொல்லி யனுப்பிப் பலவகையில் கண்ணிவைத்துப் பார்த்ததெல்லாம் பயனற்றுப் போயிற்று. அந்தக் கிள்ளைகளுள் ஒன்றேனும் அவர்களது வலையில் வீழாமல் உயர உயரப் பறந்து கொண்டிருந்தது.

அம்மன்பேட்டை அன்னத்தம்மாளின் குடும்ப வரலாறு இவ்வாறு இருக்க, தஞ்சையில் தெற்கு ராஜவீதியில் வந்திருந்த பூர்ணசந்திரோதயத்திற்கும் கலியாணபுரம் மிட்டா தாருக்கும் சந்திப்பு நேர்ந்த தினமாகிய திங்கட்கிழமை இரவு எட்டுமணி நேரமாயிற்று. அம்மன்பேட்டை அன்னத்தம்மாளது மாளிகையின் மேன்மாடத்திலிருந்த நிலைக்கண்ணாடி மண்டபம் மன்மதனது சயனக் கிரகம்போல மிகவும் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்னத்தம்மாள் மிகுந்த உற்சாகமும் ஊக்கமும் கொண்டவளாய் அங்குமிங்கும் சென்று ஏதேதோ ஏற்பாடு களையெல்லாம் செய்து கொண்டிருந்தாள். அவளது புதல்வியான பஞ்சவர்ணக் கிளிகள் ஐவரும் பட்டும், ஜரிகையும் நிறைந்த வெவ்வேறு நிறங்களைக் கொண்ட உயர்ந்த ஆடைகளையணிந்து, மையிட்டுப் பொட்டிட்டு ஜவ்வாதணிந்து, குழல் வனைந்து, நறுமலர் சூடி, கலியாணப் பந்தலில் அமர ஆயத்தமாக இருக்கும் புதுமணப் பெண்கள் போல அழகும் அலங்காரமும் நிரம்பப்பெற்றவராக

இருந்தனர். அவர்கள் ஐவரும் ஒரே மாதிரியாக முடிமுதல் அடி வரையில் சகலவிதமான ஆபரணங்களையும் அணிந்திருந்தன ரானாலும் ஒருத்தி வைரம், ஒருத்தி பச்சை, ஒருத்தி சிவப்பு, ஒருத்தி நீலம், இம்மாதிரியான வெவ்வேறு நிறங்களைக் கொண்ட ஜோடிப்பு நகைகளையே அணிந்திருந்தமையால், அவர்களது ஆடைகளின் வேறுபாடும், நகைகளின் வேறுபாடும் ஒன்றுகூடி அற்புதக்காட்சியாகத் தோன்றி, அது கந்தருவ லோகமோ, அல்லது, தெய்வ லோகமோ என்று சந்தேகிக்கும்படி செய்தன. அவ்வாறு அந்த மடமயிலார் காண்போர் மனதையும் கண்களையும் கொள்ளை கொள்ளும்படி அதிநேர்த்தியாகவும் ஆடம்பரமாகவும் சிங்காரித்துக் கொண்டு சதிர் நடத்த ஆயத்தமாக இருப்பவர்போல ஸோபாக்களில் வீற்றிருந்த சமயத்தில், மணி சரியாக எட்டு அடித்தது. அதே சமயத்தில் அவர்களது மாளிகையின் வாசலில் ஒரு பெட்டிவண்டி வந்து நின்றது. உடனே தஞ்சை இளவரசர் வண்டியிலிருந்து கீழே இறங்கினார். அவரைத் தொடர்ந்து மருங்காபுரி ஜெமீந்தாரான கிழவரும் கீழே இறங்கினார். வாசலில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த வேலைக்காரிகள் அவர்களுக்கெதிரில் தோன்றிக் குனிந்து வணங்கிக் கும்பிடு போட்டு அவர்களுக்கு வழிகாட்டி முன்னே நடக்க, விருந்தினரிருவரும் மேன்மாடத்திற்குச் சென்றனர். அவர்களது வண்டி பின்புறத்திலிருந்த லாயத்திற்குக் கொண்டு போகப்பட்டது.

அந்த வண்டி மிகவும் சாதாரண ஜனங்கள் உபயோகிக்கத் தகுந்த வண்டியாக இருந்ததன்றி, இளவரசரும், ஜெமீந்தாரும் சிறிதும் படாடோபமின்றிப் பரம ரகசியமாக அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தனரானாலும், அந்த மாளிகையின் பக்கத்திலிருந்த தென்னந்தோப்பில் ஒரு மரத்தின் மறைவில் இருளில் ஒளிந்திருந்த விகாரரூபமுள்ள ஒரு மனிதன் அவர்கள் வந்ததைக் கண்டு இன்னார்தாம் வந்தனர் என்பதை உடனே உணர்ந்து கொண்டவனாகக் காணப்பட்டான். அவனுக்கு

முப்பது அல்லது முப்பத்தைந்து வயதிருக்கலாம். அவனது சரீரம் இரும்பினால் ஆனதோ, எஃகினாலானதோ, அல்லது கருங்கல்லினால் ஆனதோவெனக் காண்போர் ஐயுறத்தக்கபடி மிகவும் உறுதியானதாக இருந்ததானாலும், முகம் மாத்திரம் அரக்கனது முகம் போலப் பயங்கரமாக இருந்தது.

வழிப்போக்கர் எவ்வளவு அபாரமான பலமும் துணிபும் பொருந்தியவராக இருந்தாலும், அந்த மனிதனைத் தனிமையில் காண்பாராயின் திகிலும் குலைநடுக்கமும் கொள்வரென்பது திண்ணம். அந்த முரட்டு மனிதன் மரத்தின் மறைவில் நின்றவண்ணம் இளவரசர் வந்து இறங்கியதைக் கண்டு களி கொண்டானானாலும் அவரோடு கூட மருங்காபுரி ஜெமீந்தாரும் வந்ததைக் காண அவனது சந்தோஷம் சடக்கென்று கவலையாக மாறியது. தான் கருதிவந்த காரியத்திற்கு இடையூறாக அந்தக் கிழவனும் வந்து சேர்ந்து விட்டானே என்ற ஆத்திரமும், பதைப்பும், அதிருப்தியும் கொண்டவனாய் அவன் அந்த மாளிகையின் பின்புற வாசலைப் பார்த்துக்கொண்டே யாரோ ஒருவரது வருகையை எதிர்பார்த்து நின்றான்.

அவ்வாறு கால் நாழிகை நேரம் சென்றது. அன்னத்தம்மாளது மாளிகையின் பின்புற வாசலின் வழியாக வெளிப்பட்ட ஒரு வேலைக்காரன் ஓசை செய்யாமல் விரல்களை ஊன்றி நடந்து தன்னை யாராகிலும் பார்த்துவிடப் போகிறார்களே என்ற அஞ்சுகிறவன் போல, அங்குமிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தென்னந்தோப்பிற்குள் புகுந்து அவ்விடத்தில் ஒளிந்து நின்ற முரட்டு மனிதனண்டை போய்ச் சேர்ந்து, ‘‘என்ன, அப்பா கட்டாரி! இளவரசர் வந்துவிட்டார். இந்த ராத்திரிக்குள் அவர் எப்படியும் திரும்பி அரண்மனைக்குப் போய்தான் தீருவார். ஆகையால் நீ போய் உங்களுடைய காரியத்தை நிறைவேற்றலாம். சமயத்துக்கு நானும் அங்கே வந்து சேருகிறேன்’’ என்று ரகசியமாகக் காதோடு கூறினான்.

அதைக் கேட்ட கட்டாரி என்ற விநோதமான பெயரைக் கொண்ட அந்த முரட்டு மனிதன், "அடே கந்தா! ராஜாவோடு கூட இன்னொரு கிழக்குரங்கு வந்திருக்கிறதே, அது யாரென்பது தெரியவில்லையே!" என்றான்.

*வேலைக்காரக் கந்தன்:-* அவன் தான் மருங்காபுரி ஜெமீந்தார். அவனை நீ இதுவரையில் பார்த்ததில்லையா?

*கட்டாரி:-* நான் பார்த்திருந்தால், உன்னை ஏன் கேட்கிறேன்? அதிருக்கட்டும். ராஜாமாத்திரம் வருவாரென்று நீ சொன்னாயே யன்றி இந்தக் கிழவனும் வருவானென்று என்னிடத்தில் சொல்லவில்லையே?

*கந்தன்:-* இவனும் வரப்போகிறானென்பது, இந்த வீட்டு எஜமானியம்மாளுக்கும் தெரியாது; பெண்களுக்கும் தெரியாது. ராஜா மாத்திரம் வருவாரென்றுதான் பெண்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்தக் கிழவனுக்கும் ராஜாவுக்கும் அதிக சிநேகமுண்டு. ஆகையால், ராஜாவே இவனையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கலாம். அதனால் உனக்கென்ன பயமா? காலால் ஓர் உந்து உந்தினால் கிழட்டுநாய் எட்டுக் குட்டிக்கரணம் போட்டுக்கொண்டுபோய் வெட்டாற்றில் விழாதா? அவனைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?

*கட்டாரி:-* (ஏளனமாகப் புன்னகை செய்து) அப்படி இல்லை தம்பீ! நான் அதுக்காக பயப்படவில்லை. எத்தனையோ வீராதி வீரர்களான பயில்வான்களையும் வஸ்தாதுகளையும் வாயில் போட்டுக்கொண்ட காசாநாட்டுச் சிங்கமாகிய இந்தக் கட்டாரித்தேவனைப் பார்த்து நீ அந்தப் பேச்சைச் சொல்லலாமா? மதயானையை யெல்லாம் கதற அடிக்கிற எனக்கு இந்த ஆட்டுக்குட்டி ஒரு பொருட்டா? நான் அதைச் சொல்லவில்லை. நாம் செய்யப்போகிற வேலையை ராஜா வெளியிட மாட்டார். இந்தக்கிழவன் ஒருவேளை வெளியிட்டு, அந்தச் செந்தலைப் புலிகளை ஏவிவிட்டுத்

துப்பு விசாரிக்க விட்டாலும் விடுவான். அதுக்காகத்தான் யோசித்தேன்.

*கந்தன்:-* அப்படி ஒன்றும் நடக்காதண்ணே! ராஜாவும் இதிலே சம்பந்தப்படுகிறார். அவர் தன்னுடைய பெயர் வெளியில் வரக்கூடாதென்று கவலைப்பட்டு இந்த விஷயத்தை அடக்கிவிடுவாரே யன்றி வெளிப்படுத்த விடமாட்டார். ஆகையால், அதைப்பற்றி உனக்குக் கவலையே வேண்டாம். இந்தக் கிழவன் மகா டம்பாச்சாரி. இன்னமும் இவனுக்குக் கூத்தியார் பைத்தியம் அடங்காமலே இருக்கிறது. இவன் நகை நட்டுகள் பணங்கள் எல்லாம் நிரம்பக்கொண்டு வந்திருப்பான். ஆகையால், இவனும் வந்து சேர்ந்ததில் நம்முடைய வருமானம் அதிகரிக்கிறதே யொழிய நஷ்டம் ஒன்றுமில்லை.

*கட்டாரி:-* அப்படியானால் நல்லது; இவனையும் சரிப்படுத்தி விடுவோம். அதிருக்கட்டும்; இவர்கள் ஒரு சுமார் எத்தனை நாழிகைக்கு இங்கே இருந்து புறப்படுவார்கள்?

*கந்தன்:-* சுமார் 2 - மணி 3 -மணிக்குப் புறப்படலாம்; எனக்கு நேரமாகிறது; எஜமானியம்மாள் என்னைக் கூப்பிட்டாலும் கூப்பிடுவாள். நான் இங்கே நிற்க நேரமில்லை. நீ போய்க் காரியத்தை நடத்து. சௌகரியப்பட்டால் நானும் வந்து சேருகிறேன்- என்றான்.

உடனே கட்டாரித்தேவன் கந்தனுக்கு விடை கொடுத்தனுப்ப அவன் வந்ததுபோலவே திரும்பவும் எச்சரிப்பாக நடந்து அந்த மாளிகையின் முன்புறமாகப்போய் அதற்குள் நுழைந்து விட்டான். கட்டாரித்தேவனும் இருளில் மாயமாக மறைந்து போய்விட்டான். அந்த விஷயம் அங்ஙனமிருக்க, இளவரசரும், மருங்காபுரி ஜெமீந்தாரும் மேன்மாடத்தை அடைய படிக்கட்டின்மீது ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த கூத்தாடி அன்னமும், அவளது புதல்வியரான ஐந்து மடவன்னங்களும் வெகு சொகுஸான அலங்காரங்களோடு ஜெகஜ் ஜோதியாக

நின்று, புன்னகையும், பிரேமையும் குளிர்ந்த கிரணங்களாகச் சொரிந்த தங்களது சந்திரபிம்ப வதனங்களைப் பணிவாகவும், உருக்கமாகவும், மரியாதையாகவும் வளைத்துத் தங்களது அழகிய கைகளைக் குவித்து, நமஸ்கரித்து, ''வரவேண்டும்; வரவேண்டும்'' என்று அந்தரங்கமான அன்போடு உபசரித்து வரவேற்று, விருந்தினர் இருவரையும் அழைத்துக்கொண்டு நிலைக் கண்ணாடி மண்டபத்திற்குப்போய் இரண்டு உன்னதமான ஸோபாக்களைக் காட்டி, அவற்றின்மீது அமர்ந்து கொள்ளும்படி உவப்போடு கூறி வேண்டிக்கொள்ள விருந்தினர் இருவரும் உள்ளங் குளிர்ந்தவராய் உட்கார்ந்து கொண்டனர்.

உடனே இளவரசர் சந்தோஷமும் புன்னகையும் வழிந்த முகத்தினராய் அன்னத்தை நோக்கி, ''அன்னம்! இன்றைய தினம் எவ்வளவு இருளாக இருக்கிறது பார்த்தாயா. பெட்டி வண்டிக்குள் தனியாக உட்கார்ந்து கொண்டு வருவது நிரம்பவும் கஷ்டமாக இருந்தது. ஆகையால், நம்முடைய மருங்காபுரி ஜெமீந்தாரையும் கூட அழைத்துக் கொண்டு வந்தேன். இவர் உனக்குத் தெரிந்த மனிதராகையால், இவர் இருப்பதைப்பற்றி நீ கொஞ்சமும் லஜ்ஜைப்படவே தேவையில்லை. இவரையும் என்னைப்போலவே நீங்கள் பாவிக்கலாம்'' என்றார்.

அப்போதும் குவித்த கையை எடுக்காமலும், அடக்கிய மூச்சை அதிகமாக விடாமலும் வணக்கமாக நின்று கொண்டிருந்த அம்மன் பேட்டை அன்னம், அவரை நோக்கி, ''மகாராஜாவின் சித்தத்தின்படி நடக்க அடியாள் காத்திருக்கிறேன்'' என்றாள். உடனே இளவரசர், ''சரி, இன்றையதினம் என்னென்ன கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருக் கிறாய்?'' என்று கேட்க, அன்னம், ''முதலில் பாட்டுக் கச்சேரி யும், பிறகு கோலாட்டமும் நடத்த உத்தேசித்திருக்கிறோம். அதற்குமேலும் சாவகாசம் இருக்குமானால், கேளிக்கை

வைத்துக் கொள்ளலாமென்று நினைக்கிறேன். மகாராஜாவின் கட்டளை எப்படியோ அப்படியே நடந்து கொள்ளுகிறோம்'' என்றாள்.

உடனே இளவரசர் மருங்காபுரி ஜெமீந்தாரை நோக்கி, ''என்ன ஐயா! உம்முடைய பிரியம் எப்படி?'' என்றார்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் அசட்டு நகை நகைத்து, ''எனக்குச் சங்கீதத்தில் எவ்வளவு பிரியமென்பது தங்களுக்கே தெரிந்த விஷயம். அப்படியிருக்க நான் என்ன சொல்லப் போகிறேன்? ஒன்றுமில்லை. எல்லாம் அன்னத்தின் ஏற்பாட்டுப்படியே நடக்கட்டும்'' என்றார்.

உடனே அன்னம் பணிவாக இளவரசரைநோக்கி, ''பாட்டுக் கச்சேரி ஆரம்பமாகுமுன் ஏதாவது கொஞ்சம் தாகத்துக்குச் சாப்பிட்டால், அதன் பிற்பாடு எவ்வளவுநேரம் வேண்டுமானாலும் தமாஷாக உட்கார்ந்திருக்கலாம்'' என்று கூறி நயமாக வேண்ட, அதைக்கேட்ட இளவரசர், ''இப்போது தான் நாங்களிருவரும் சாப்பிட்டு விட்டு வருகிறோம். பதினோரு மணிக்குமேல் வேண்டுமானால், கொஞ்சம் அதையும் பார்த்துக் கொள்ளுவோம்; பாட்டுக் கச்சேரியை ஆரம்பிக்கலாம்'' என்றார்.

அதைக்கேட்ட அன்னம், ''சித்தம்; அப்படியே ஆகட்டும்'' என்று கூற, அதற்குள் அவளது புதல்வியர் ஐவரும் பாட்டுக் கச்சேரிக்குத் தேவையான வாத்தியங்களை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தனர். மூத்தபெண்ணான **அம்மாளு** தம்புராவை எடுத்துச் சுருதி கூட்டினாள். இரண்டாவது மகளான **தனம்** என்பவள் வீணையை எடுத்துக்கொண்டாள். மூன்றாவது புத்திரியான **சிவபாக்கியம்** என்பவள் புல்லாங்குழலை வைத்துக்கொண்டாள். நான்காவது புதல்வியான **அபிராமி** என்பவள் மத்தளத்தைச் சரிப்படுத்தத் தொடங்கினாள். ஐந்தாவது குமாரியான **செல்லம்** என்பவள் பிடிலை வைத்துக்கொண்டு

சுருதி கூட்டினாள். அவர்களது தாயான அன்னம் வெள்ளித் தாம்பாளங்களில் வாசனைத் தாம்பூலாதி சாமான்களையும் கலவைச் சந்தனக் கிண்ணத்தையும் பன்னீர்ச் செம்பையும் ரோஜாவும் ஜாதியும் சேர்த்துக் கட்டப்பட்ட புஷ்பத்தையும் கொணர்ந்து இளவரசருக்கு அருகில் ஒன்றுமாக, ஜெமீந்தாருக் கருகிலொன்றுமாக வைத்துவிட்டுத் தனது கடைக்குட்டி மகளை நோக்க, அவள் சுருதி கூட்டப்பட்ட தனது பிடிலைக் கீழே வைத்துவிட்டு எழுந்துவந்து சந்தனத்தை எடுத்து இளவரசருக்குப் பூசிவிட்டுப் புஷ்பத்தை அவரது சிகையில் சூட்டிப் பன்னீர் தெளித்துவிட்டுச் செல்ல, அன்னம் தாம்பூல சாமான்களை எடுத்துக்கொடுத்து, வெற்றிலைச் சுருளை ஒவ்வொன்றாகக் கொடுத்துக்கொண்டே இருக்க, இளவரசர் கடைசிப் பெண்ணைப் பார்த்து நகைத்து, ''என்ன , செல்லம்! இப்படி பந்திவஞ்சனை செய்யலாமா? எனக்குச் சந்தனம் பூசி எல்லாக் காரியத்தையும் செய்தவள் ஜெமீந்தாரை அலட்சியமாக விட்டுவிடலாமா? எங்கே பார்ப்போம், அவருக்கும் பூசிவிடு, நீ குழந்தை; அவர் உன்னுடைய தாத்தா; பரவாயில்லை'' என்றார். மருங்காபுரி ஜெமீந்தார் சந்தோஷமாகக் கலகலவென்று நகைத்து, ''இல்லை, இல்லை; பாட்டுக் கச்சேரி நடக்கட்டும். நானே சந்தனம் பூசிக் கொள்ளுகிறேன். செல்லத்துக்கு ஏன் தொந்தரவு கொடுக்கிறீர்கள்'' என்று கூறித் தாமே சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியவற்றை எடுத்து அணிந்து கொண்டார். சந்தனத்தின் பரிமள கந்தமும், புஷ்பத்தின் மணமும் அந்த மண்டபம் முழுதும் சூழ்ந்து கமகமவென்று கமழ்ந்து எல்லோரையும் ஆனந்தசாகரத்தில் ஆழ்த்தின. அவர்கள் இருவரும் பூரித்துப் புளகாங்கித மடைந்து மிகவும் குதூகலமாக வீற்றிருந்த சமயத்தில் மடந்தையர் ஐவரும் தத்தம் வாத்தியங்களுக்குச் சுருதிகூட்டி வாசிக்கத் தொடங்கினர். தம்புராவை வைத்திருந்த அம்மாளு என்னும் மூத்தபெண் கோகிலத்வனியைப் பழித்த குரலைக் கிளப்பி

வாதாபி கணபதிம்பஜே! என்ற ஹம்ஸத்வனி கீர்த்தனையை எடுத்துப்பாடி அமிர்த துளிகளை அள்ளி அள்ளிவீச வீணை, புல்லாங்குழல், பிடில் முதலிய வாத்தியங்கள் யாவும் அதே பாட்டை ஒரே காலத்தில் பாட ஆரம்பித்தன. அந்தச் சங்கீதம் தேவர்களும், மூவர்களும் கேட்டு மூக்கில் விரலை வைத்து ஆச்சரியமுற்று நைந்துருகத்தக்க மகா மாதுரியமான தேவகானத்தைவிட அதிசிரேஷ்டமானதாக இருந்தது. அந்த மடமயிலார் ஐவரும் தத்ரூபம் ஊர்வசி, மேனகை, திலோத்தமை, ரம்பைகள் போல அழகே வடிவாக ஜ்வலித்ததைக் கண்டும், அவர்களால் பொழியப்பெற்ற தேவாமிர்த ஊற்றைப் பருகியும், அந்த இரண்டு புருஷரும் பிரமித்து, வியப்புற்று, ஸ்தம்பித்து, மோகித்து நெக்குவிட்டு இளகி, உருகிப் பரவசம் அடைந்து மெய்மறந்து உட்கார்ந்திருந்தனர். சகிக்கவொண்ணாத ஆனந்தப்பெருக்கினால் அவர்களது உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் உரோமம் சிலிர்த்து நின்று, அந்தச் சங்கீதத்திற்கு ஒத்தபடி ஆனந்தத் தாண்டவ மாடின. அவர்களிருவரும் இந்திர விமானத்தில் அமர்ந்து சுவர்க்க லோகத்தில் புகுவோர் போல இன்பத்தில் மூழ்கி மதிமயங்கி உணர்வு கலங்கிக் கிடந்தனர்.

அவ்வாறு அந்த இன்பகரமான சங்கீதக் கச்சேரி இரண்டு மணி நேரம் வரையில் நடைபெற்றது. பெண்கள் மேலும் இன்னொரு பாட்டை எடுத்துப் பாடத் தொடங்க, உடனே இளவரசர், "அடீ அன்னம்! பாட்டுக் கச்சேரி இவ்வளவோடு நிற்கட்டும்; உன்னுடைய பெண்கள் சங்கீதத்தினாலேயே என்னைக் கொன்றுவிடுவார்கள் போலவிருக்கிறது. ஐந்து பெண்களும் சேர்ந்து வாரி வீசும் இன்பத்தைத் தாங்க என்னுடைய காதுக்குச் சக்தி போதவில்லை. இதோ பார், தாத்தா மயங்கி விழுந்து கிடக்கிறார்" என்று வேடிக்கையாகக் கூற, அதைக்கேட்ட அன்னம், தனது பெண்களைப் பார்த்து, மங்களம் பாடும்படி சொல்ல, அவர்கள் சிறிய மங்களமொன்றைப் பாடி நிறுத்தினார்கள். அதன்பிறகு மேலே கொக்கியில் மாட்டப்

பட்டிருந்த கோலாட்டக் கயிறுகள் அவிழ்த்துவிடப் பட்டன அவர்களுள் நால்வர் பாட்டுப் பாடிக்கொண்டு பின்னல் கோலாட்டம் போடத் தொடங்கினர். மிகுதியிருந்த ஒருத்தியும் அன்னமும் சுருதிபோட்டுப் பின்பாட்டுப் பாடத் தொடங்கினர். அவ்வாறு அவர்கள் அடித்த கோலாட்டத்தில், அந்த வடிவழகிகள் நால்வரும் அற்புதமாகவும், அழகாகவும், புதுமையாகவும் வளைந்து வளைந்து குனிந்து நிமிர்ந்து ஒருவருக்குள் ஒருவர் நுழைந்து சென்றபோது, அவர்களது மேனியின் அமைப்பும் அழகும் ஆயிரமடங்கு அதிகரித்துத் தோன்றி அந்த இரண்டு புருஷர்களது மனதிலும் காமத்தீயை மூட்டின. அவ்வாறு இரண்டுமணி நேரம் நடத்தப்பட்ட பிறகு அந்தக் கோலாட்டத்தையும் அவ்வளவோடு நிறுத்தும் படி இளவரசர் உத்தரவு செய்ய, பெண்கள் அதையும் உடனே நிறுத்தினார்கள். இளவரசரும் ஜெமீந்தாரும் அப்போதும் ஆனந்தசாகரத்தில் கிடந்து தத்தளித்து ஆழ்ந்து மிதந்து பரவசம் அடைந்திருந்தனர். அந்தச் சமயத்தில் அன்னம் இளவரசரைப் பார்த்து, "தாகத்துக்கு ஏதாவது கொஞ்சம் பார்க்கலாமா? மணி பன்னிரண்டாகிறது. நிரம்ப நேரமாக உட்கார்ந்திருந்தது அலுப்பாக இருக்குமே" என்றாள்.

உடனே இளவரசர் அவளைப் பார்த்துப் புன்னகை செய்து, "ஓகோ! சுகம் அநுபவித்துக்கொண்டு சும்மா உட்கார்ந்து கொண்டிருந்த எங்களுக்குத்தான் நிரம்ப சிரமம் போல விருக்கிறது! நீயும் உன்னுடைய பெண்களும் 8மணி முதல் பாட்டுப்பாடிக் கோலாட்டம் அடித்து எவ்வளவோ பிரயாசைப் படுகிறீர்கள். ஆகையால், உங்களுக்குத்தான் அலுப்பாக இருக்கும். நீங்கள் போய் ஏதேனும் ஆகாரம் பார்த்துக்கொண்டு வாருங்கள். இந்த அகாலத்தில் நான் எதையேனும் சாப்பிட்டால், அது உடம்புக்குக் கெடுதல் செய்யும். நம்முடைய ஜெமீந்தாரை அழைத்துக்கொண்டு போய், எனக்குச் செய்யும் மரியாதைகளை யெல்லாம் அவருக்குச் செய்தனுப்பு" என்றார்.

அப்போது மருங்காபுரி ஜெமீந்தார் இளவரசரை நோக்கி, ''இவ்வளவுநேரம் உட்கார்ந்திருந்ததனால் எனக்குக் கொஞ்சம் தலைவலி உண்டாகியிருக்கிறது. நான் போய், கொஞ்சம் பால் சாப்பிட்டு விட்டு ஒரு பக்கமாகப் படுத்துக் கொஞ்சம் தூங்குகிறேன். நாம் புறப்பட்டுப் போகவேண்டிய சமயத்தில் யாராவது வந்து என்னை எழுப்பட்டும்'' என்றார்.

உடனே இளவரசர் அன்னத்தை நோக்கி, ''சரி, நீ இவரை அழைத்துக்கொண்டுபோய் இவருக்கு வேண்டியவை களைக் கொடுத்து நல்ல சுகமான ஒரு படுக்கையில் படுக்கச் செய்து விட்டு வா; அதற்குள் நாங்கள் கொஞ்சம் விளையாடு கிறோம்'' என்றார்.

அதைக்கேட்ட அன்னம் அப்படியே செய்வதாகக் கூறி மருங்காபுரி ஜெமீந்தாரையும் அழைத்துக்கொண்டு அப்பால் போய்விட்டாள். மருங்காபுரி ஜெமீந்தாருக்கும் அன்னத்திற்கும் அதற்குமுன் பழக்கமில்லையென்று இளவரசர் நினைத்திருந்தார். ஆனால் உண்மையில் அவர்களிருவருக்கும் அந்தரங்கமான சிநேகம் எவருக்கும் தெரியாமல் இருந்து வந்தது. ஆகவே, தாம் அந்தக் கும்பலில் குதூகலமாக இருக்கமாட்டாமல் தவித்திருந்ததைவிட அன்னத்தோடு தனியாகப் போவதைப்பற்றி ஜெமீந்தார் பரமசந்தோஷம் அடைந்தவராய், அவ்விடத்தைவிட்டு அப்பால் நடந்தார்.

அவ்வாறே அதுவரையில் இளவரசரையும், அந்தப் பெண் பாவையரையும் பீடித்திருந்த கிலேசமும் உடனே விலகியது. பெண்களோடு தனிமையில் விடப்பட்ட இளவரசர் புதிய ஊக்கமும், உற்சாகமும், குதூகலமும், மகிழ்ச்சியும் அடைந்தவராய்ப் புன்னகை தவழ்ந்த இளக்கமான முகத்தோடு மூத்த பெண்ணைப் பார்த்து, ''அம்மாளு! நீங்கள் பாடியது போதும். இப்படி வாருங்கள்'' என்று அழைக்க அந்த மடந்தையர் ஐவரும், மிகுந்த சந்தோஷமும் குதூகலமும்

கொண்டவர்களாய் ஓடிவந்து இளவரசரைச் சூழ்ந்து கொண்டனர். அதுவரையில், ஜெமீந்தார் இருந்ததைக் கருதி நாணிக்கோணி விலகி யிருந்ததற்கு முற்றிலும் மாறாக, அந்த ஐவரும் கலைமானைச் சூழ்ந்து நிற்கும் பேடுகள் போல வந்து நெருங்க, உடனே இளவரசர் அவர்களை நோக்கி, "சரி; நான் புறப்பட்டுப்போக இன்னம் இரண்டு மணிநேர மிருக்கிறது. அதற்குள் நாம் என்ன விளையாட்டு விளையாடலாம்? அம்மாளு! நீ தான் மூத்தவள். நீ சொல்" என்றார்.

அம்மாளு அவரைப் பார்த்துக் குழந்தை போலக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசத் தொடங்கி, "தங்களுடைய கண்களைக் கட்டி விடுகிறோம். தாங்கள் எங்களைப் பிடிக்க வேண்டும்" என்றாள். அதைக் கேட்ட மற்ற மடந்தையரும் களிகொண்டு, "ஆம். அதுதான் நல்ல விளையாட்டு. நம்முடைய மகாராஜா குருடனைப் போலத் தடவவேண்டும். நாங்கள் தலையில் குட்ட வேண்டும்" என்று வேடிக்கையாகக் கூறினர். அதைக் கேட்ட இளவரசர் தேன் குடித்த நரி போல மகிழ்ந்து பல்லிளித்து, "சரி; அதுதான் நல்ல விளையாட்டு. ஆனால் நீங்கள் இந்த மண்டபத்தை விட்டு வெளியில் மாத்திரம் போகக் கூடாது. முதலில் இதன் நான்கு பக்கத்துக் கதவுகளையும் மூடித் தாளிட்டு விடுங்கள். இதற்குள்ளாகவே ஓடிப் பிடிக்க வேண்டும்" என்றார்.

உடனே கதவுகள் யாவும் மூடி உட்புறத்தில் தாளிடப் பட்டன. ஒரு சிறிய பட்டுத்துணியைக் கொண்டு இரண்டு பெண்கள் இளவரசரது கண்களைக் கட்டிப் பின்புறத்தில் இறுக முடிந்துவிட்டு அவரது தலையில் மெதுவாக ஒரு குட்டுப் போட்டுவிட்டு அப்பால் விலகிக்கொண்டு, "எங்கே, பிடியுங்கள் பார்க்கலாம்" என்று நகைத்துக்கொண்டே கூற, இளவரசர் எழுந்து தமது கைகளை நீட்டிய வண்ணம் குருடனைப் போல அங்குமிங்கும் பாயத் தொடங்கினார்.

பள்ளிக்கூடத்துச் சிறுவன் எவ்வளவு குதூகலமாகவும், சந்தோஷத்தோடும் விளையாட்டில் இறங்குவானோ, அதுபோல இளவரசர் அதிபாலியராக மாறி அந்தப் பெண்மான்களின் இடையே புலிபோலப் புகுந்து வேட்டையாடத் தொடங்கினார். அவர் யாரையாவது ஒருத்தியைப் பிடித்துக் கொண்டால், அவ்வளவோடு தமது குருட்டு உத்தியோகம் தமக்கில்லாமல் போய்விடுமென்கிற எண்ணங்கொண்ட இளவரசர் எவரையும் பிடித்துக்கொள்ள விரும்பவில்லை. அந்தப் பெண்கள் அதிக தூரத்தில் போய்விடாமல், அவரது பக்கங்களிலும் பின் பக்கத்திலும் உராய்ந்து கொண்டு நின்று, அவரைத் தொடுவதும், பிடித்திழுப்பதும், மெதுவாகக் குட்டுவதும், அவர் தமது கையை நீட்டிப் பிடிக்க முயன்றால், கலகலவென்று இனிமையாக நகைத்துக்கொண்டு அப்பால் நகர்ந்து கை கொட்டிப் புரளி செய்வதுமாக இருந்தனர். அடிக்கடி அவர்களுக்குள் ஒருத்தி அவரது கையில் அகப்பட்டுக்கொண்டே இருந்தாலும், அவளை அவர் இறுகப் பிடித்துப் பிரியமாக மார்போடணைத்து முத்தமிட்டு மெதுவாக நழுவ விட்டுவிடுவார். அவள் தப்பித்துக்கொண்டு அப்பால் போய்விடுவாள். அவ்வாறு அந்தத்தோகை மடமயிலாரது கும்பலில் இளவரசர் புகுந்து கட்டிப்பிடித்துக் குருடனைப் போல நடித்துச் சரச லீலைகள் புரிந்த காட்சி மகா அற்புதக் காட்சியாகவும், ஐம்புலன்களையும் வென்று உலகைத் துறந்த தபோதனர்களையும் மோகலாகிரி கொள்ளத் தகுந்த மனமோகனக் காட்சியாகவும் இருந்தது. இளவரசருக்கு அந்த விளையாட்டு மிகவும் வேடிக்கையாகவும் சந்தோஷ கரமாகவும் இருந்தமையால், அவர் பத்து வயதுக் குழந்தைபோலத் தம்மை மறந்து ஓடி விளையாடுகிறார். பூத் தொட்டிகளையும், ஸோபாக்களையும், கண்ணாடிகளையும் உடைத்துவிடாமல் ஜாக்கிரதையாகத் தடவிக் கொண்டே அவர் அவர்களைப் பிடிக்க முயல, அவர்கள், கைவளையல்களும் காலிலிருந்த சலங்கைகளும் கலீர்

கலீரென்று சங்கீதம் பாடி ஒலிக்க ஸோபாக்களின் மீதும் மேஜைகளின் மீதும் கட்டில்களின் மீதும் ஏறி ஏறி இறங்கிக் குயில் போன்ற குரலால் கணீர்கணீரென்று பேசிக் கலகலவென்று வாய்விட்டு நகைத்து அங்குமிங்கும் பாய்ந்து அவரை விடாமல் சூழ்ந்து அவரைப் பலவகையில் இன்பகரமாக வருத்திக் கொண்டிருந்தனர். இளவரசரது கை ஒரு சமயத்தில் ஒருத்தியின் பட்டுப் புடவையில் படும்; இன்னொரு சமயத்தில் ஒருத்தியின் முகத்தில் உராயும்; இன்னொரு சமயத்தில் அவர்களது இடை, முதுகு, தோள், மார்பு முதலிய பற்பல இடங்களில் போய்ப் படும். இன்னொரு சமயத்தில் அவரது கை, அவர்களது ஜடைப் பின்னலைப் பிடித்துக்கொள்ளும்; ஒவ்வொருத்தியும் அவரது கையில் பிடிபட்டவுடனே, அவர் ஆசையோடு அவளைக் கட்டி மார்போடு சேர்த்தணைத்து முத்தமிடுவார். அவள் உடனே தப்பித்துப் போய்விடுவாள். இம்மாதிரி அந்த மனோரம்மியமான கண்கட்டுவிளையாட்டு நெடுநேரம் நடந்தேறியது. இளவரசர் தமது கண்களைத் திறந்து கொண்டிருந்த காலத்தில் இன்பமாய்த் தோன்றாத அந்தப் பெண்பாவையரின் அங்கங்கள்கூட அப்போது பரமாநந்தத்தை கொடுத்துக்கொண்டிருந்தன. ஒருத்தியை இன்னாரென்று உணர்ந்து தொடுவதைவிட, அவள் இன்னாரென்பதை அறியாது தொடுவதில் பன்மடங்கு அதிக இன்பமுண்டென்பது இளவரசரது எண்ணமாகையால், அந்த விளையாட்டு இரண்டு மணி நேரம் வரையில் நடைபெற்றது. அதற்குமேல் இளவரசரது கண்கள் நோக ஆரம்பித்தமையால் அவர் தமது முகத்திலிருந்த கட்டைவிலக்கி அப்பால் விசிறி எறிந்துவிட்டு, ''அப்பாடா! விளையாட்டு நல்ல விளையாட்டு'' என்று கூறிய வண்ணம் ஒரு ஸோபாவின் மேல் உட்கார்ந்து கொண்டு அவர்களையெல்லாம் சந்தோஷமாகப் பார்த்து விலாபுடைக்கக் கலகலவென்று நகைக்க, அந்தப் பெண்பாவை யரும் அவரை நோக்கித் தங்களது அற்புதமான பல்வரிசை

களைக் காட்டி நகைத்த வண்ணம் மூலைக்கொருவராக உட்கார்ந்து கொண்டனர். ஒருத்தி அந்த மண்டபத்துக் கதவுகளின் தாளை விலக்கி முன்போலத் திறந்து வைத்தாள்.

அப்போது கடிகாரத்தில் மணி சரியாக இரண்டடித்ததை உணர்ந்த இளவரசர், "அடி அம்மாளு! நாங்கள் புறப்பட்டுப் போக வேண்டும். அன்னத்தைக் கூப்பிடு. ஜெமீந்தாரையும் எழுப்பி அழைத்துக்கொண்டு வரச்சொல்" என்று மூத்தவளை நோக்கிக்கூற அவள் போய்த் தனது தாயையும், ஜெமீந்தாரையும் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். இளவரசர் தாம் கொணர்ந்திருந்த விலையுயர்ந்த சில ஆபரணங்களை அன்னத்தினிடத்தில் கொடுத்துவிட்டு தமக்கு நேரமாகிற தென்று சொல்லி விடைபெற்று ஜெமீந்தாரையும் அழைத்துக் கொண்டு மேன்மாடத்திலிருந்து கீழே இறங்கி, வாசலில் ஆயத்தமாக நின்றுகொண்டிருந்த பெட்டி வண்டிக்குள் ஏறிக்கொள்ள, வண்டி புறப்பட்டு ராஜபாட்டை வழியாகத் தஞ்சையை நோக்கிச் சென்றது. உள்ளே இருந்த இருவரைத் தவிர, வண்டியின் முன்பக்கத்தில் சாரதி ஒருவனும், பின்பக்கத்தில் காசாரி ஒருத்தனும் ஆக இருவரே இருந்தனர். அந்த இரவு மிகவும் இருண்டிருந்தது. ஆகாயத்தில் மேகங்களும் அடர்ந்து பயமுறுத்திக் கொண்டிருந்தன. காற்று விசையாக மோதி மழை பெய்யாமல் தடுத்துக்கொண்டிருந்தது. பெட்டி வண்டியின் முன்பக்கத்திலிருந்த பிரகாசமான இரண்டு லாந்தர்களின் வெளிச்சத்தினால் குதிரைகளிரண்டும் வழியை அறிந்துகொண்டு நாற்கால் பாய்ச்சலில் ஓடின. உட்புறத்தில் இருந்த இளவரசரும் ஜெமீந்தாரும் அம்மன்பேட்டை அன்னத்தின் மாளிகையில் நடந்த பாட்டுக்கச்சேரி, கோலாட்டம் முதலிய வற்றைப் பற்றி வேடிக்கையாக சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்குப் பூர்ணசந்திரோதயத்தின் நினைவும் அவளை வெல்வதற்காகத் தாங்கள் ஏற்படுத்தியுள்ள பந்தயத்தைப் பற்றிய நினைவும் உண்டாயின. அன்றைய தினம்

கலியாணபுரத்து மிட்டாதார் அவளிடத்திற்குப் போனாரோ இல்லையோ என்பதையும், அவருக்கு ஜெயமுண்டாயிற்றோ அபஜெயம் உண்டாயிற்றோ என்பதையும் அறியத் தாம் ஆவல் கொண்டிருப்பதாக இளவரசர் கூறிக்கொண்டு வந்தார். அந்தச் சமயத்தில், சாலையின் ஓரத்திலிருந்த மரங்களின் மறைவிலிருந்து சரசரவென்று ஓசை யுண்டானதைக் கேட்ட அவர்கள் இருவரும் திடுக்கிட்டு, அந்த ஓசை உண்டான இடத்தை நோக்கினர். அவர்களது உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் உரோமம் சிலிர்த்து நிற்க, அதோடு பேரச்சம் அவர்களது உடம்பு முழுதும் பரவியது. அடுத்த நிமிஷத்தில் பனைமரங்கள் போலவிருந்த நாலைந்து முரட்டு மனிதர்கள் குபீரென்று வண்டியின் மீது பாய்ந்தனர். குதிரையின் முகத்தில் படேரென்று ஓர்அடி விழுந்தது; குதிரை துள்ளிக் குதித்து சடேரென்று பின்னுக்கு வாங்க, வண்டிக்குள் முன்பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஜெமீந்தார் தமக்கு எதிர் முகமாக உட்கார்ந்திருந்த இளவரசரின் மீதுபோய் வீழ்ந்து மோதினார். உடனே வண்டி நின்றுபோய் விட்டது. முன் பக்கத்திலிருந்த சாரதியும், பின் பக்கத்திலிருந்த காசாரியும் கட்டப்பட்டுத் தரையில் உருட்டி விடப்பட்டனர். அவர்களது வாயில்துணிப்பந்து அடைக்கப்பட்டுப் போனதாகையால், அவர்கள் பேசமாட்டாமலும், மூச்சு விடமாட்டாமலும் திணறித் தத்தளிக்கின்றனர். வண்டியின் இரண்டு பக்கங்களிலுமிருந்த கதவினண்டையில் இரண்டிரண்டு முரட்டாள்கள் வந்து நின்றனர். அவர்களது முகங்கள் முகமூடியால் மறைக்கப் பட்டிருந்தன. கண்களிற்காக விடப்பட்டிருந்த தொளைகள் தவிர, மற்ற பாகமே தெரியாமலிருந்தது. அவ்வாறே திடீரென்று வந்தவர்கள் வழிப்பறி செய்யும் கொள்ளைக் காரர்களென யூகித்துக்கொண்ட இளவரசர் துணிவாகப் பேசத் தொடங்கி, ''அடா! துஷ்டப் பயல்களா! என்ன வேலை இது? நான் யாரென்று அறிந்து கொண்டீர்களா?'' என்று அதட்டிக் கூறினார். அவருக்கு அருகில் நின்றவனும், அந்த

முரட்டாள்கள் யாவரிலும் பெரியவனாகத் தோன்றியவனுமான ஒருவன் தனது கையிலிருந்த கைத்துப்பாக்கியை அவருக் கெதிரில் நீட்டி, ''வாயைத் திறந்து பேசினால், உடனே உங்கள் இருவரையும் சுட்டுக்கொன்று விடுவோம்''என்று அதட்டிக் கூறினான்.

உடனே இளவரசர், ''அடா திருட்டுநாயே! நான் இந்தத் தேசத்து ராஜாமகனென்பது உனக்குத்தெரியவில்லையா? என்னைக் கூட வழிமறித்துக் கொள்ளை யடிக்கும்படியான அவ்வளவு துணிவு உங்களுக்கு உண்டாகிவிட்டதா? ஜாக்கிரதை; கிட்ட வரவேண்டாம்'' என்று கூறி அவனை மிரட்டிப் பார்த்தார். அவன் அந்த வார்த்தையை இலட்சியம் செய்யாதவனாய், ''நீங்கள் ராஜாமகனென்பது எங்களுக்குத் தெரியும். அதனாலேதான், உங்கள் உடம்பில் அடிவிழாமலிருக்கிறது. வேறே மற்றவர்களாக இருந்தால், நாங்கள் முதலில் அடித்துவிட்டுத்தான் பிறகு பேசுகிறது வழக்கம். நீங்கள் வாய் திறக்காமல் இருந்தால், உங்களுக்கு ஒரு துன்பமும் உண்டாகப் போகிறதில்லை. வாயைத் திறந்தால் ராஜாமக னென்பதைக் கூட நாங்கள் மறந்து விடுவோம்'' என்றான்.

அந்தப் பயமுறுத்தலான வார்த்தையைக் கேட்ட இளவரசர், அதற்குமேல் பேசுவது தவறென நினைத்துத் தமது வாயை மூடிக்கொண்டார்.

உடனே அந்த வண்டியின் ஒரு பக்கத்துக் கதவு திறக்கப்பட்டது. கைகால்கள் கட்டப்பட்டு ராஜபாட்டையில் கிடந்த சாரதி காசாரி ஆகிய இருவரையும், அந்த முரட்டாள்கள் தூக்கிக்கொணர்ந்து பெட்டிவண்டிக்குள் திணித்துவிட்டுக் கதவை மறுபடியும் மூடித்தாளிட்டனர். அந்த முரட்டு மனிதர்களின் தலைவனான கட்டாரி என்பவன் உடனே இளவரசரைப் பார்த்து, ''குதிரைக் காசாரியையும் வண்டி ஓட்டுகிறவனையும் உள்ளே வைக்கிறதைப்பற்றி, மகாராஜா கோபித்துக் கொள்ளக்கூடாது. கொஞ்சதூரம் போகிறவரையில்

இவர்களும் இங்கேயே இருக்கட்டும். அதோடு ஜன்னலின் கதவுகளையும் மூடி உள்ளேயிருக்கும் திரையையும் விட்டுவிட வேண்டும்'' என்று கூறியவண்ணம் இரண்டு பக்கங்களிலு மிருந்த திறப்புகளிற்குள்ளே இருந்த திரைகளைப் பிரித்துத் தொங்கவிட்டு பக்கப் பலகைகளையும் இழுத்து நன்றாக மூடிவிட்டான். உடனே வண்டியின் உட்புறமெல்லாம் ஒரே இருளாகச் சூழ்ந்துகொண்டது. அந்த முட்டாள்கள் தங்களுக்கு எவ்விதமான துன்பம் செய்யப் போகிறார்களோ என்ற அச்சம் கொண்டவர்களாய், இளவரசரும், ஜெமீந்தாரும் பெருத்த திகில் கொண்டு நடுநடுங்கி மௌனமாக உட்கார்ந்திருந்தனர்.

அடுத்த நிமிஷத்தில் பெட்டிவண்டி போகத் தொடங்கியது. அந்த முரட்டாள்களெல்லாரும் வண்டியின் நாற்புறங்களிலும் கூண்டின்மேலும் உட்கார்ந்தும் தொற்றிக்கொண்டும் இருந்தனர். ஒருவன் சாரதியாக அமர்ந்து, வண்டியை விசையாக ஓட்டிக்கொண்டு சென்றான். வண்டியின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் இருந்த விளக்குகள் அணைக்கப்பட்டு போயின. இருளில் அந்த வண்டியில் யார் இருக்கிறார்கள் என்பதே எவருக்கும் தெரியக்கூடாதென்ற எண்ணத்தோடு அவர்கள் அவ்வாறு விளக்குகளையும் அவித்துவிட்டனர். அவ்வாறு பெட்டிவண்டி அம்மன்பேட்டையிலிருந்து தஞ்சைக்கு வந்த ராஜபாட்டையிலேயே நெடுந்தூரம் வந்து அதன் பிறகு வேறே ஏதோ ஒரு வழியாகத் திரும்பி எங்கேயோ போவதாகத் தோன்றியது. அவ்வாறு இரண்டு நாழிகை நேரம் சென்றபின் வண்டி ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. பக்கத்திலிருந்த ஒரு மாளிகையின் முன்புறக் கதவுகள் திறக்கப்பட்டதன் ஓசை உண்டாயிற்று. வண்டி அதற்கு மேலும் செல்லத் தொடங்கியது. சக்கரங்கள் கருங்கல் பதிக்கப்பெற்ற தரையில் கறகறவென்று ஓசையோடு சென்றது. வெளிக்கதவுகள் மறுபடியும் மூடிப் பூட்டப்பட்டன. அப்படிச் சென்றது ஒரு பங்களாவின் முன்புறத்தோட்டம் போலத் தோன்றியது. அவர்கள் தங்களை எங்கே கொண்டு

போகிறார்கள் என்பதையும், என்ன செய்யப் போகிறார்களோ என்பதையும் இளவரசரும் ஜெமீந்தாரும் யூகித்துப் பார்த்ததெல்லாம் பலனற்றுப் போயிற்று. அவர்கள் வண்டியின் உட்புறத்தில் காரிருளிற்குள் புதைபட்டிருந்தமையால், வெளிப்புறத்தின் குறிப்புகளில் எதையும் அவர்கள் கவனிக்க முடியாமல் இருந்தது. அவ்வாறு கருங்கல் தரையில் சென்ற வண்டி சிறிது தூரத்திற்கு அப்பால் போய் நின்றது. உடனே அந்த முரட்டாள்கள் வண்டியைவிட்டுக் கீழே இறங்கினார்கள். கட்டாரி ஒரு பக்கத்துக் கதவினண்டையில் வந்து, பக்கப் பலகைகளை நகர்த்திவிட்டு உட்புறத்தில் கையைக் கொடுத்து தாழ்ப்பாளைத் திருப்பிக் கதவைத் திறந்துவிட்டு, ''சரி, கீழே இறங்குங்கள்'' என்று அதிகாரமாகக் கூறினான். இளவரசர் முதலில் கீழே இறங்கினார். அவருக்குப் பிறகு மருங்காபுரி ஜெமீந்தார் இறங்கினார். உடனே சாரதி, காசாரி ஆகிய இருவரது கட்டுகள் அவிழ்த்து விடப்பட்டன. அவர்களும் கீழே இறங்கினார்கள், முகமூடி தரித்துப் பனைமரங்கள் போல விகாரமாக நின்ற ஏழெட்டு முரட்டாள்களும் கைகளில் கத்தி, பிஸ்டல் என்ற கைத்துப்பாக்கிகள், தடிகள் முதலிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு நாற்புறங்களிலும் சூழ்ந்து நின்றதைக் கண்ட இளவரசர் முதலிய நால்வருக்கும் குலைநடுக்க மெடுத்தது. அவர்களது கைகால்களெல்லாம் வெடவெட வென்று ஆடுகின்றன. அந்த இடம் மரங்கள் நிறைந்ததாகக் காணப்பட்டமையால், எங்கும் ஒரே அந்தகாரம் சூழ்ந்திருந்தது. ஆனால், எதிரில் பிரம்மாண்டமான ஒரு கட்டிடம் நின்றதாகத் தெரிந்தது. உடனே கட்டாரித்தேவன் இளவரசர் முதலிய நால்வரையும் பார்த்து, ''நடவுங்கள்'' என்று அதிகாரமாக அதட்டிக் கூற உடனே எல்லோரும் நடந்து அந்தக் கட்டிடத்தண்டை நெருங்கினர். அவ்விடத்திலிருந்த ஒரு கதவு உடனே திறந்துவிடப்பட்டது. அந்தக் கதவிற்கு அப்பால் மங்கலாக எரிந்துகொண்டிருந்த ஒருவிளக்கு காணப்பட்டது.

மிகுந்த வியப்பும் பிரமிப்பும் கொண்ட இளவரசர் முதலியோர் அந்த விளக்கு இருந்த இடத்தை நோக்க, அது ஒரு பெருத்த அறையாகத் தோன்றியது. அந்த முரட்டாள்கள் அவர்கள் நால்வரையும் அந்த அறைக்குள் அழைத்துச் சென்றனர். அந்த அறையின் மேல்புறம் தவிர, மற்ற நான்கு பக்கங்களிலும் கறுப்பு நிறப் படுதாக்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆகையால், அறையின் சுவர்களாவது மற்ற எந்தச் சாமானாவது அவர்களது திருஷ்டிக்குத் தோன்றவில்லை. அவர்கள் யாவரும் அந்த அறைக்குள் நுழைந்தவுடனே அதன் கதவு மூடி உட்புறத்தில் தாளிடப்பட்டது. ஒரே கறுப்பாக இருந்த அந்த விநோதமான இடத்தைக் காண, எதற்கும் அஞ்சாத இளவரசரது நெஞ்சம் திடுக்கிட்டுக் கலங்கியது. மருங்காபுரி ஜெமீந்தார் பெருத்த திகிலினால் கதிகலங்கி நின்றார். சாரதி, காசாரி ஆகிய இருவரும் மற்ற இருவரைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமான பீதியில் கலகலத்து நடுநடுங்கி நின்றனர். அவர்கள் கொள்ளைக்காரர்களாக இருந்தால், ராஜபாட்டையிலேயே தங்களை அடித்துத் தங்களது பொருட்களையெல்லாம் பறித்துக்கொண்டு போயிருப்பார்களே. அப்படிச் செய்யாமல், அவர்கள் தங்களை இங்கே அழைத்துவர வேண்டிய காரணமென்ன? அவர்கள் திருடர்களல்லவென்றால், வேறு யாராக இருப்பார்கள்? தாங்கள் அப்போது இருந்த அறைமுழுவதும் கறுப்புத் திரைகளால் மறைக்கப்பட்டிருந்த காரணமென்ன? என்ற பலவகையான கேள்விகள் இளவரசர் முதலிய நால்வரது மனத்திலும் பிறந்து கொண்டிருந்தனவானாலும், அவர்கள் எதையும் நிச்சயமாக அறிந்து கொள்ள மாட்டாதவர்களாகத் தவித்து மிகுந்த ஆவலோடு அந்த முரட்டு மனிதர்களது முகங்களைப் பார்த்துக் கொண்டு நின்றனர். உடனே இளவரசர் கட்டாரித் தேவனை நோக்கி, ''அடேய் ஆளே! வழியோடு போன எங்களை மறித்து நீங்கள் பலவந்தமாக இங்கே கொண்டுவந்த காரணம் இன்னதென இன்னமும் விளங்கவில்லையே?'' என்று வினவ,

அதைக்கேட்ட கட்டாரித்தேவன், ''மகாராஜா! இப்படிப்பட்ட தடிப்பான வார்த்தைகளை உபயோகிப்பதில் பிரயோசனமே இல்லை. நாங்கள் பைத்தியக்காரர்களல்ல. காரணமில்லாமல் எவரும் ஒரு காரியத்தைச் செய்யமாட்டார்கள். பாட்டையிலிருந்து இப்போதுதானே வீட்டுக்குள் வந்திருக்கிறோம். இதற்குள் இப்படி அவசரப்பட்டால், என்ன செய்கிறது? இங்கே வந்த காரணத்தை அறிந்துகொள்ள மற்றவரைவிட மகாராஜாவே அதிகமாக அவசரப்படுகிற படியால், மகாராஜா மாத்திரம் என்னோடு கூட இன்னோர் அறைக்கு வரட்டும். அவர் திரும்பி வருகிறவரையில் நீங்கள் மூன்றுபேரும் இங்கேயே இருங்கள்'' என்று நிதானமாகவும் அழுத்தமாகவும் கூறினான்.

அந்த வார்த்தையைக் கேட்ட இளவரசர் மற்ற மூவரையும் விட்டுப் பிரிந்துபோக மனமற்றவராய், கட்டாரித்தேவனை நோக்கி, ''நீ உன்னோடு கூடத் தனியாக வரும்படி என்னைக் கூப்பிடுகிறாயே. நீ எனக்கு எவ்விதத் துன்பமும் செய்யமாட்டாயென்பதை நான் எப்படி உறுதியாக நம்புகிறது?'' என்றார்.

உடனே கட்டாரித்தேவன் அவரைப் பார்த்து, ''இதே இடத்தில் நாங்கள் உங்களுடைய மண்டையைப் பிளந்துவிட எங்களுக்கு வல்லமை இருக்கிறது. அப்படிச் செய்யாமல் நாங்கள் உங்களை உயிரோடு வைத்திருப்பதே பெரிய உறுதியல்லவா?'' என்றான்.

அதைக்கேட்ட இளவரசர் ஒருவாறு துணிவடைந்து, ''சரி; அப்படியானால் உன்னோடு கூட வர எனக்குச் சம்மதந்தான்'' என்று மறுமொழி கூறினார்.

உடனே கட்டாரி, ''உங்களுக்குச் சம்மதமிருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் உங்களை அழைத்துக்கொண்டு தான் போகப் போகிறேன். ஐயா! ஜெமீந்தாரே! நீரும் இரண்டு ஆட்களும் தயவுசெய்து கொஞ்சநேரம் இவ்விடத்திலேயே இருங்கள். நான் சீக்கிரத்தில் திரும்பி வருகிறேன்''என்று கூறி,

அவ்விடத்திலிருந்த லாந்தரை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு பக்கமாகப் போய்த் திரையைக் கொஞ்சம் விலக்கிப் பிடித்துக்கொண்டு, ''சரி; மகாராஜா இப்படி வரட்டும்'' என்றான். உடனே இளவரசர் திரைக்கு அப்பால் சென்றார். கட்டாரித்தேவன் திரையை மறுபடியும் முன்போல மூடிவிட்டு லாந்தரும் கையுமாக அவரோடு அப்பால் கடந்தான். மருங்காபுரி ஜெமீந்தாரும் மற்றவரும் இருந்த இடம் ஒரே இருளாக நிறைந்து போய்விட்டது.

திரைக்கு அப்பால் சென்ற கட்டாரித்தேவனும், இளவரசரும் அவ்விடத்தில் காணப்பட்ட மேன்மாடப் படிகளின்மீது ஏறிச் சென்றனர். அந்தப் படிகளும், கைப்பிடிச் சுவர்களும், கறுப்புத் துணிகளால் உறை போடப்பட்டிருப்பதுபோல, அவற்றின் அடையாமே தெரியாதபடி மறைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு எங்கும் ஒரே கறுப்புத்துணியாக இருந்ததைக் காண, அதன் கருத்து இன்னதென்று உணர்ந்துகொள்ள மாட்டாத இளவரசர் கரைகடைந்த சஞ்சலமும் கலக்கமும் பிரமிப்பும் கொள்ளலானார். அவரது முடி முதல் அடிவரையிலுள்ள உரோமமெல்லாம் சிலிர்த்து நின்றது. அவர் கட்டாரித் தேவ னைப் பார்த்து, ''இதென்ன விநோதம்! எங்கே பார்த்தாலும் வீட்டின் உருப்படியே தெரியாமல் கறுப்புத் துணிகளால் மறைக்கப்பட்டிருக்கிறதே! விஷயம் இன்னதென்று சொல்லி விடேன்?'' என்றார்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன், ''நீங்கள் என்னிடத்தில் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பதில் உபயோகமில்லை. வாயைத் திறக்காமல் என்னோடுகூட வருவதைத் தவிர நீங்கள் வேறு எதையும் செய்யவும் கூடாது; கேட்கவும் கூடாது'' என்று கண்டிப்பாக மறுமொழி கூறினான்.

அதைக் கேட்ட இளவரசர் ஒருவாறு கலகலத்துப் போய்விட்டார். ஒருகால் அந்த முரட்டு மனிதர்களின் தலைவனாகிய வேறு எவனிடத்திலாகிலும் தம்மை அவன்

அழைத்துக்கொண்டு போகிறானோ என்ற ஒரு நினைவு இளவரசரது மனதில் தோன்றியது. அவர்களது தலைவர் யாராக இருப்பானென்றும், தாம் இளவரசரென்பதை உணர்ந்திருந்தும், அந்த முரட்டு மனிதர்கள் தம்மை அந்த இடத்திற்குக் கொண்டு வரவேண்டிய முகாந்திரம் என்னவாக இருக்குமென்றும் பலவிதமாக எண்ணமிட்டவராய் இளவரசர் அந்த மேன் மாடப் படியில் ஏறிச்சென்று அதன் உச்சியை அடைந்தார். அவ்விடத்தில் ஒரு கறுப்புத் திரை தொங்கிக்கொண்டிருந்தது. கட்டாரித்தேவன் இளவரசரை நோக்கி, ''திரைக்கு அப்பால் போங்கள்'' என்று கூறிய வண்ணம் அதைக் கொஞ்சம் ஒதுக்கிப் பிடித்துக் கொண்டான். இளவரசர் அவனது சொல்லை மீறுவதில் பயனில்லை என்பதை உணர்ந்ததன்றி, அவர்களது விநோத நடவடிக்கையின் முடிவு இன்ன தென்பதை அதி சீக்கிரத்தில் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டவராக இருந்தாராகையால், அவனது விருப்பப்படி அவர் திரைக்கு அப்புறம் சென்றார். திரைக்கு அப்புறத்தில் மூடப்பட்டிருந்த ஒரு கதவு இருந்தது. கதவிற்கும் திரைக்கும் நடுவில் இளவரசரை நிறுத்தித் தான் திரைக்குவெளியில் நின்றுகொண்டிருந்த கட்டாரித்தேவன், ''மகாராஜா! கதவைத் திறந்து கொண்டு தைரியமாக உள்ளே நுழையுங்கள்'' என்று கூறினான். அதைக்கேட்ட இளவரசர் கதவின்மீது கை வைக்கவே, அது சரேலென்று திறந்து கொண்டது. உட்புறத்தில் கோடி சூரியப் பிரகாசம்போல விளக்குகள் பளிச்சென்று பிரகாசித்தன. மகா அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு சயனக்கிரகம் எதிரில் காணப்பட்டது. அவ்விடத்திலிருந்த ஒரு ஸோபாவின் மீது மகா புதுமையான அழகோடு ஜெகஜ் ஜோதியாகவும் உல்லாஸ மாகவும் சாய்ந்திருந்த ஒரு யௌவனப் பெண் பாவையை இளவரசர் கண்டு திக்பிரமை கொண்டு கலங்கி அப்படியே நின்றார்.

## 7-வது அதிகாரம்

## பாரசீகத்துப் பைங்கிளி

அவ்வாறு திடீரென்று தோன்றிய அந்த மனமோகன ரூபிணியின் அபாரமான அழகும் காந்தியும் பளிச்சென்று இளவரசரது திருஷ்டியில் வந்து மோதவே, அதுகாறும் அவரது மனதில் நிறைந்து வதைத்துக் கொண்டிருந்த பெருந்திகிலும், கலக்கமும், வியப்பும், கவலையும் ஒரே நொடியில் பறந்துபோக, அந்தத் துன்பகரமான சம்பவம் முடிவில் இன்பகரமானதாக மாறியதைப் பற்றி, அவரது மனதில் மட்டிலடங்கா மகிழ்ச்சியும் பூரிப்பும் பொங்கியெழுந்தன. அவர் அவள்மீது வைத்த விழியை எடுக்காமல் ஸ்தம்பித்து மயங்கிக் கல்லாகச் சமைந்து அசையாமல் அப்படியே நின்றார்.

அந்த மடந்தைக்குச் சுமார் இருபது வயதிற்கு அதிகம் இராதென்பது நிச்சயமாகத் தெரிந்தது. அவள் பார்சீ ஜாதி ஸ்திரீ போல ஆடையாபரணங்களை அணிந்திருந்தாள். அவளது உடம்பு தந்தத்தினால் செய்து மெருகு கொடுக்கப்பட்டது போலவும், சிறிதும் குற்றம் குறைபாடு கூறுதற்கு இடமில்லாமல் உருட்சி திரட்சியாகவும், அழகும் இனிமையுமே வடிவெடுத்து வந்ததுபோலவும் இருந்தது. அவள் வெள்ளை நிறப் புடவை யொன்றை அணிந்து கொண்டிருந்தாள். அந்தப் புடவை பட்டு நூலினால் நெய்யப்படாமல் பட்சிகளின் இறகிற்குள் உடம்பின்மீது காணப்படும் மகா நுட்பமான பூமயிரினால் நெய்யப்பட்டதோ, அல்லது, காற்றினால் நெய்யப்பட்டதோ அல்லது, சொப்பனத்தினால் நெய்யப் பட்டதோ என்று சந்தேகிக்கத் தகுந்தபடி, கனமே இல்லாமல் மிகமிக நுட்பமாக இருந்ததன்றி, பளிங்குபோல அப்புறத்திலிருந்த வஸ்துக்களை இப்புறத்தில் காட்டியது. அவள்மீது ஓர் ஆடை இருக்கிறதாக, அதன் நிறத்தினால் தெரிந்துகொள்ள

லாமேயன்றி கையினால் தொட்டுப் பார்ப்பதற்கு வஸ்துவே இல்லாமல் இருந்தது. தங்கப்பதுமை போல சிருஷ்டிக்கப் பட்டிருந்த அவளது அற்புதமான சரீரம் அந்த மகா நுட்பமான ஆடைக்குள்ளிருந்தது, வெண்மையான மேகத்தினால் சூழப்பட்டு அப்படியே வெளியில் தெரியும் கந்தருவ ஸ்திரீயின் தேகம்போலவும், பளிங்கெனத் தெளிந்த தண்ணீரில் நீராடும் பெண்பாலாரின் சரீரம் போலவும் காணப்பட்டது. அந்த சல்லாய்ப் பட்டின் ஓரங்களில் எல்லாம் கறுப்புப் பட்டினாலும் ஜரிகையினாலும் பூவேலைகள் செய்யப்பட்டிருந்தன. அந்தச் சேலையின் உடலில் தூரதூரமாகச் சிவப்புப் பட்டினாலும், ஜரிகையினாலும் ரோஜாப் புஷ்பங்கள் நெய்யப்பட்டிருந்தன. அந்தத் தோகைமயிலாள் தனது சேலையின் தலைப்பைத் தலையின் பின்புறமாகக் கொணர்ந்து, அழகாக முக்காடிட்டிருந்ததும், வைரக்கற்கள் நிறைந்த ஸரங்களை நெற்றிக்குமேலும் தலை முடிச்சிற்கு மேலும் சேர்த்துக் கட்டி அலங்கரித்திருந்ததும், நெற்றியில் செஞ்சாந்துத் திலகமிட்டிருந்ததும், அவளது இடையில் வைரக்கற்கள் பதிக்கப்பட்ட தங்க ஒட்டியாணம் அணிந்திருந்ததும், தந்தம் போன்ற அழகிய பாதங்களில், ரோஜாப்பூக்கள் நிறைந்த வெல்வெட்டு சிலிப்பரை அணிந்திருந்ததும் ஒன்றுகூடி அவள் முடிதரித்த மண்டலேசுவரியோ, அல்லது ரதிதேவியின் செருக்கை அடக்கவந்த ஒரு புதிய மோகனசிருஷ்டியோவென ஐயமுற்றுப் பிரமிக்கும்படி செய்தன. அவளது சுந்தர வதனத்தில் எவருக்கும் இல்லாத களையும், ஜொலிப்பும், வசீகரமும், கவர்ச்சியும் ஏராளமாக நிறைந்து ஒரே பார்வையில் ஆடவரது உயிரைக்கொள்ளை கொண்டன. அவ்வாறு அபார சிருஷ்டியாகக் காணப்பட்ட அந்தப் பேடன்னம் வீற்றிருந்த அறையின் அலங்காரம் நவராத்திரிக் கொலுவில் அரசர்களது கொலுமண்டபம் எவ்வித அலங்காரத்தோடு இருக்குமோ அப்படியே காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் படங்களும், நிலைக்கண்ணாடிகளும்,

பூத்தொட்டிகளும், ஸோபாக்களும், பஞ்சணைகளும், வெண்கலச் சிலைகளும், முத்துத் தொங்கல்களும், வால்ஷேட்குளோபுகளும் நிறைந்து அந்தச் சக்கரவர்த்தினி வீற்றிருப்பதற்கு முற்றிலும் பொருத்தமான இடமாகத் தோன்றியது. அவ்வாறு காணப்பட்ட ஜெகன்மோகன சிங்கார விடுதியில் வெல்வெட்டு ஸோபாவின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து மந்தஹாஸம் செய்த முகத்தோடு தனது பார்வையைத் தனக்கெதிரிலிருந்த ஒரு பதுமையின்மீது செலுத்திய வண்ணம் சித்திரப்பாவைபோல அந்தப் பார்சீ ஜாதி அணங்கு வீற்றிருக்க, இளவரசர் இமைகொட்டாமல் கால் நாழிகை நேரம் வரையில் அசையாது அப்படியே நின்று அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த அதிரூப மோகனாங்கியின் முகம் முதல் நகம் வரையிலுள்ள ஒவ்வோர் அங்கத்தின் அபூர்வ அமைப்பும் அவரது ஐம்புலன்களையும் மயக்கி ஒருவித வெறியும் போதையும் கொள்ளச் செய்ததாகையால், அவர் நிலைகலங்கி, தாம் என்ன செய்வதென்பதை உணராதவராய் ஸ்தம்பித்து நின்றார்.

அவர் வந்ததை அவள் ஆரம்பத்தில் உணராமலே இருந்தாளோ அல்லது உணராதவள்போல நடித்தாளோ, ஆனால், அவள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பவள்போல அந்த ஸோபாவில் ஒய்யாரமாகச் சாய்ந்து, சுவரில் தீட்டப்பட்ட சித்திரம்போல அசைவற்று வீற்றிருந்தாள். அவள் பிறர் வந்திருப்பதைக் கருதி நாணிக்கோணி உடம்பை விகாரப்படுத்திக் கொள்ளாமல் சுயேச்சையாகத் தனது இயற்கைப்படி தனது தேகத்தை இருக்கவிட்டிருந்ததனால், அவளது வசீகரத்தன்மையும் இயற்கை எழிலும் பன்மடங்கு சிறந்து தோன்றின. அவ்வாறு அழகின் திரளாக வீற்றிருந்த பெண்மணி இரண்டொரு நிமிஷத்தில் தனது சிரத்தை இளவரசரிருந்த பக்கமாக மெல்லத் திருப்பினாள். அவளது விசாலமான கருவிழிகள் அவரது முகத்தைப் பார்த்தனவானாலும் அவள் திடுக்கிடவுமில்லை;

வியப்பையாவது அச்சத்தையாவது காட்டவும் இல்லை. ஆனால் அவளது முகத்தில் ஒரு வித இளக்கமும் ஆனந்தமும் பரவத் தொடங்கின. ஆகையால், ரோஜாப் புஷ்பம்போன்ற செந்நிறம் அவளது முகத்திலிருந்து உடம்பு முழுவதும் பரவி, அவளது மனவெழுச்சியை நன்றாகக் காட்டியது. அப்படியிருந்தும், அவள் அவர்மீது செலுத்திய பார்வையை விலக்காமலே இருந்தாள். கரைகடந்த மோகவிகாரம் கொண்டு உருகுகிறவள் போல, அவளது கண்களும் முகமும் உடம்பும் மிகுந்த இளக்கத்தையும் ஆவலையும் காண்பிக்கவே, அவளது நிலைமையை உணர்ந்த இளவரசர் பிரம்மாநந்த சுகத்தில் கிடந்து மிதப்பதாகக் கனவு காண்பவர்போல அவளது அழகில் அப்படியே லயித்துப்போய் நின்றார். அடுத்த நிமிஷத்தில் அந்தப் பெண்பாவையின் அதரங்களில் புன்னகை பூத்துத் தனது மனத்திலுள்ள மையலின் பெருக்கையும், தனது ஆத்திரத்தையும் ஆவலையும் பல்வரிசைகளின் கண்கொள்ளா வனப்பையும் வெளிப்படுத்தி ஆயிரம் நாக்குகள்கொண்டு அவரை அழைப்பது போலத் தோன்றியது.

அதைக்கண்ட இளவரசர் அதற்குமேல் சும்மா நிற்கமாட்டாதவராய், அவள் யாரென்பதையும், அவர்கள் தம்மை அவ்விடத்தில் கொணர்ந்துவிட்ட காரணம் என்னவென்பதையும், தம்மை அழைத்து வந்த மனிதரிடத்தில் கேட்டு உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நினைவைக் கொண்டவராய், சடக்கென்று பின்புறம் திரும்பித் திரையைத் தூக்கிப் பார்க்க, அந்த முரட்டு மனிதன் காணப்படவில்லை. ஆகவே, அந்த முரட்டு மனிதன் அந்த வடிவழகியோடு தனிமையிலிருக்கும் பொருட்டு தம்மை அவ்விடத்தில் விட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டான் என்பதை இளவரசர் உடனே யூகித்துக் கொண்டார். இன்னதென்று சொல்லமுடியாத ஒருவித அச்சம் சிறிது நேரம் வரையில் அவரது மனதில் குடிகொண்டது. அவர்கள்

அவ்வளவு தந்திரமாகவும், ரகசியமாகவும் தம்மை அங்கே கொணர்ந்த விஷயம் அவரது மனதில் பலவகையான சந்தேகங்களையும் பிரமிப்பையும் உண்டாக்கி, அவர்கள் தம்மை எவ்விதமாக வஞ்சிக்க எண்ணுகிறார்களோ என்றும், தமக்கு ஏதேனும் துன்பம் இழைக்கப் போகிறார்களோ என்றும் அவர் நினைக்கும்படி செய்தது. அவர் மறுபடியும் அவளது முகத்தை உற்று நோக்கினார். அந்த முகம் அப்போதும் முன்போலவே மோகலாகிரியினால் நைந்திருப்பது நன்றாகத் தெரிந்தது. அவளது அற்புதமான ஒவ்வோர் அங்கமும், அவரது கண்களைக் குளிர்வித்து மனதை ரமிக்கச் செய்ததாகையால் அவர் மிகுந்த ஆவேசம் கொண்டவராய் அவளை நோக்கி, ''இவ்வளவு சிரமப்பட்டு என்னை வருந்தியழைத்து எனக்குக் காட்சி கொடுக்கும் இந்தப் பெண் தெய்வம் யாரென்பது தெரியவில்லையே! கல்லினாலும் செம்பினாலும் செய்யப்பட்ட தெய்வமெல்லாம் பேசாத தெய்வங்கள். அந்தத் தெய்வங்களை யெல்லாம் மனிதர் வணங்குவதைவிட இந்தப் பேசுந் தெய்வத்தை வணங்கினால், இது உடனே மோக்ஷம் கொடுத்து விடும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகையால், என்னை வரவழைத்த தெய்வம் இல்லை என்னாமல் எனக்குப் பரிபூரணமான வரங்களை யெல்லாம் கொடுக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்'' என்று கூறியவண்ணம் அவளிருந்த ஸோபாவை நோக்கி நடந்து அவளுக்கு அருகில் நெருங்கினார்.

அந்த மடந்தை முன்னிலும் அதிகரித்த மகிழ்ச்சியும், மனவெழுச்சியும் கொண்டு அவரை நோக்கி நன்றாகப் புன்னகை செய்தவளாய் சடக்கென்று ஸோபாவைவிட்டு எழுந்து சற்று விலகிநின்று நாணிக்குனிந்து, ''மகாராஜா நிற்கக் கூடாது. முதலில் உட்கார்ந்து கொள்ள வேண்டும்'' என்று அந்தரங்கமான அன்போடு உபசரிக்க, அவளது கனிமொழியைக் கேட்டு ஆனந்தபரவசமடைந்த இளவரசர் அவர் உட்கார்ந்திருந்த இடத்தில் உல்லாஸமாக அமர்ந்து

கொண்டார். அந்த மின்னாள் மறுபடியும் பேசத் தொடங்கி, "மண்ணுலகத்துக்கு எல்லாம் மகாராஜாக்களே தெய்வமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகையால் எங்களுக்கெல்லாம் பேசும் தெய்வமும், வரம் கொடுக்கும் தெய்வமும் தாங்களாக இருந்தும், மனித ஜென்மத்தில் இரண்டாவது படியான கேவலம் பெண் ஜென்மம் எடுத்துள்ள என்னைப் பார்த்துத் தாங்கள் பெண் தெய்வமென்று இவ்வளவு அபாரமான பெருமை கொடுப்பது தகுமா? தகா விட்டாலும், ஒரு தெய்வம் பார்த்து, இன்னொரு மனிதனைத் தெய்வத்தின் நிலைமைக்கு உயர்த்திவிட்டால், அந்த மனிதர் அதை வகிக்காமல் விலக்க அவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? ஆகையால் தாங்கள் அருளிய பெருமையை நிரம்பவும் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டேன். ஆனால், தாங்கள் பேசிய வார்த்தையில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. முதலில் நான் யார் என்று கேட்டீர்கள்; பிறகு தங்களுக்கு வேண்டிய வரங்களையெல்லாம் இந்தத் தெய்வம் கொடுக்குமா வென்று சந்தேகப்பட்டீர்கள். நான் யாரென்பது மிகவும் ரகசியமான விஷயம் ஆதலால், அதை மாத்திரம் வெளியிடும்படி தாங்கள் என்னை வற்புறுத்தக் கூடாது. தாங்கள் இரண்டாவதாகக் கேட்டதான வரங் கொடுக்கும் விஷயத்தில் நான் என்ன சொல்லப் போகிறேன். பக்தர்களுடைய பரிபக்குவ நிலைமைக்கும் மனோவுறுதிக்கும் தகுந்தபடி தெய்வம் வரங்களைக் கொடுக்குமென்பது தங்களுக்குத் தெரியாத சங்கதியல்ல. ஆகையால், அதைப் பற்றித் தாங்கள் ஏன் சந்தேகப்பட வேண்டும்" என்று பாகோ, தேனோ, அமிர்தமோவென இனித்த குரலால் பேசினாள்.

அதைக்கேட்ட இளவரசர் அவளது விநயத்தையும் புத்தி நுட்பத்தையும் கண்டு, மட்டுக்கடங்கா மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்தவராய் மிகவும் உருக்கமாகவும் பிரேமை யோடும் அவளை நோக்கி, "நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் நீ மனிதப் பிறப்பைச் சேர்ந்தவளல்ல

வென்பதையும், தெய்வாம்சமாகப் பிறந்தவள் என்பதையும் நன்றாக நிரூபிக்கிறது. ஆகவே, இப்பேர்ப்பட்ட வழிப்பறி நடத்தும் கள்வரோடு நீ சம்பந்தப்பட்டவளல்ல என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இருந்தாலும் என்னை இங்கே பலவந்தமாகக் கொண்டுவந்த மனிதர்கள் யாராக இருக்கலாமென்பது எனக்கு இன்னமும் நிச்சயமாகத் தெரியவில்லை'' என்றார். அதைக் கேட்ட அந்தப் பார்சீ மடந்தை கைகுவித்துக் குனிந்து அவரை வணங்கி, ''மகாராஜா கோபித்துக் கொள்ளக்கூடாது; தங்கள் விஷயத்தில் நாங்கள் பெருத்த அபராதியாகி விட்டோம். எல்லாவற்றையும் மகாராஜா மறந்து க்ஷமித்துக் கொள்ள வேண்டும்'' என்று நயமாகவும் பணிவாகவும் பிரியமாகவும் கூறி வேண்டிக் கொண்டாள்.

அதைக்கேட்ட இளவரசர் அவளது சுந்தர வதனத்தை உற்று நோக்கி, மிகுந்த திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டவராய், ''பெண்ணே! உன்னை உத்தேசித்து நான் எதையும் க்ஷமித்துக் கொள்ளுவேன் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம். அது போகட்டும். என்னை உன்னிடத்தில் அழைத்து வருவதற்கு, நீ இப்படிப்பட்ட தந்திரம் செய்ய வேண்டிய காரணமென்ன?'' என்று வினவினார்.

உடனே அந்தப் பெண்பாவை மிகுந்த வெட்கமும் நாணமும் அடைந்தவளாய்க் கீழே குனிவதும் அவரை உருக்கமாகப் பார்ப்பதும் தனது மனதை வெளியிட மாட்டாமல் இரண்டொரு நிமிஷம் தத்தளித்து, அவரது முகத்தை ஆசையோடு பார்த்து ஏதோ சொல்ல முயல்வதும், உடனே கிலேசமுற்றுக் கீழே குனிவதுமாக இருந்து, கடைசியில் வாயைத் திறந்து, ''மகாராஜா கேட்ட கேள்விக்கு நான் எப்படி மறுமொழி சொல்வதென்பது எனக்கே தெரிய வில்லை. காதலுக்குக் கண்ணில்லை என்று ஜனங்கள் பழமொழி சொல்லுவார்கள். கண் என்றால் அகக்கண் புறக்கண்

இரண்டையும் குறிக்கிறது. ஒரு புருஷர் ஒரு பெண்ணினிடத்தில் காதல்கொண்டு விடுவாராகில், அவளது தேகத்தில் காணப்படும் குற்றங் குறைபாடுகளெல்லாம் அவருக்கு அத்தனை அழகுகளாகத் தோன்றும்; அதோடு அவளை அடைவதற்குத் தாம் எப்படிப்பட்ட கேவலமான காரியங்களைச் செய்கிறோமே யென்பதும் அவருடைய மனசுக்குப் படாது. இது ஆண் பெண் ஆகிய இரண்டு வகுப்பாருக்கும் ஒத்த நியாயம். அதுபோலவே, இப்போது இந்தக் காரியமும் நடத்தப்பட்டிருக்கிறது. எவ்வளவோ உன்னத பதவியிலிருக்கும் மகாராஜாவுக்கு இந்த ஏழையினிடத்தில் தயை பிறக்குமோ பிறக்காதோ வென்றும், வேறுவிதமாக அழைத்தால், வருவாரோ மாட்டாரோ வென்றும் நினைத்தே, இந்தக் காரியம் நடத்தப்பட்டது. ஈசுவரரை ஒரு பக்தன் கல்லால் அடித்தான்; இன்னொருவன் அவர் மேல் எச்சிலை உமிழ்ந்து செருப்பைத் தலையில் வைத்தான். ஈசுவரர் அவைகளெல்லாம் அன்பின் பெருக்கினால் செய்யப்பட்ட காரியங்கள் என்று எண்ணி, அவற்றையெல்லாம் நல்ல காரியங்களாக ஏற்று அவர்களின் மேல் சந்தோஷம் கொண்டு அவர்களுடைய பக்திப் பெருக்கை மாத்திரம் கருதி மோக்ஷம் கொடுக்கவில்லையா? அதுபோல, தாங்கள் எங்களுடைய நல்ல எண்ணத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு மற்றவைகளை மறந்துவிட வேண்டும்''என்று குயில்வாய் திறந்து பேசுவது போலக் கூறினாள்.

அதைக் கேட்ட இளவரசர், ''ஆகா! பேஷ்! பேஷ் ! நீ பேசுகிற பேச்சின் அழகே ஒரு கோடி பெறும்போல இருக்கிறதே! ஏன் அவ்வளவு தூரத்தில் நிற்கிறாய்? முதலில் நீ வந்து இப்படி ஸோபாவில் உட்கார்ந்துகொள். நீ நிற்பதைக் காண என் மனம் பதறுகிறது. உனக்கு என்னிடத்தில் ஒருவித ஆசை ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறாய். அப்படியிருந்தும், அவ்வளவு தூரத்தில் நிற்க வேண்டிய தென்ன? மரக்கொம்பி லிருக்கும் பழத்தைப் பார்த்து மனிதர் ஆசைப்பட்டு, தொரட்டைக்கொண்டு முயன்றோ கல்லால் அடித்தோ,

மரத்தின்மேல் ஏறியோ அந்தப் பழத்தைப் பறித்து அதைத் தமது கைவசத்துக்குக் கொண்டுவந்தால், உடனே ஆவலோடு அதை உண்ணப் பிரியப்படுவார்கள். அதுபோல, நீ அடைய விரும்பிய பொருள் உன் கைக்குப் பக்கத்தில் வந்திருந்து, எடுத்துக்கொள், எடுத்துக்கொள் என்று உன்னை வருந்தியழைக்கையில் நீ தூர நிற்பதேன்? உன்னைப் பார்த்தால் பார்சீ ஜாதிப் பெண்போல இருக்கிறது. நீ யார் என்பதைச் சொல்லாவிட்டாலும் நீ இருப்பது எந்த ஊர் என்பதை யாவது சொல்லக்கூடாதா? நீ என் மேல் காதல் கொண்டிருப்பதாகச் சொல்வதிலிருந்து நீ என்னை இதற்கு முன் பார்த்திருக்கிறாய் என்பதும் தெரிகிறது. என்னை இதற்கு முன் நீ எப்போது பார்த்தாய், எவ்வளவு காலமாக என்னிடத்தில் ஆசை வைத்திருக்கிறாயென்பதை யெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம் மிகவும் தாகப்படுகிறது. நீ அவ்வளவு தூரத்தில் நிற்பதையும், உன்னுடைய இடை தள்ளாடுவதையும் பார்த்தால், என்னுடைய உயிரே துடிக்கிறது. நீ இப்படி வந்து எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து என்னென்ன விவரத்தை வெளியிடலாமோ அதைச் சொல்லி நான் உன்னிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அதையும் வெளியிட்டால், நான் எப்போதும் உன்னுடைய அடிமையாக இருக்கத் தடையில்லை. நீ காலால் இடும் வேலையை நான் தலையால் செய்யக் காத்திருக்கிறேன்'' என்று மிகவும் கனிவாகவும் பதைப்போடும் கூறி, மிகுந்த ஆவலைக் காண்பித்தார். அவருக்கு அருகிலிருந்த பிரமாதமான ஆவேசத்தில் தாம் எழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அவளைக் கட்டித் தூக்கிக்கொண்டு வந்துவிடலாமா என்ற எண்ணம் தோன்றியதானாலும், அவள் முரட்டாள்களை உதவிக்கு வைத்திருப்பவளாதலால், தாம் ஆத்திரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக்கொண்டு துன்பத்திலும் மாட்டிக் கொள்வதைவிட, அவளது மனப்போக்கின்படி நடந்து அவளை

வசப்படுத்திக் கொள்வதே உசிதமாகத் தோன்றியது. ஆகையால், இளவரசர் அவளை நோக்கி மரியாதையாகவும் நயமாகவும் பேசித் தானாகக் கனியச் செய்து கொண்டிருந்தார்.

அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட அந்தப் பார்சீ ஜாதி அணங்கு மிகவும் உருக்கமாகவும், வாஞ்சையாகவும் அவரைப் பார்த்துப் புன்னகை செய்து, ''நான் நிற்பது எனக்கு நிரம்பவும் பிரயாசையாக இருக்குமென்று மகாராஜா நினைக்கிறது சரியல்ல. பெண்பிள்ளை ஜென்மம் எடுத்தவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கும், கணவருக்கும், தாய் தகப்பன்மாருக்கும் எவ்வளவு பிரயாசைப்பட்டுப் பணிவிடை செய்தாலும், அவ்வளவும் அவர்களுக்கு ஆனந்தமாகவும் இன்பகரமாகவும் இருக்குமேயன்றி, ஒரு நாளும் துன்பமாகவே தோன்றாது. தான் காதல் கொண்ட புருஷருடைய மனசைப் பலவகையிலும் சந்தோஷப்படுத்த முயல்வதே பெண்பாலுக்கு ஒரு பெருத்த சுகம். ஆகையால், தங்களிடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டால், அப்படி உட்கார்ந்திருப்பது நம்முடைய யோக்கியதைக்குத் தகாத காரியமாயிற்றே என்ற ஓர் எண்ணம் மனசில் உதித்துத் துன்பத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கி வைத்துக்கொண்டே இருக்கும். இப்படி நிற்பதனால், நான் தங்களிடத்தில் காட்டவேண்டிய மரியாதையைச் சரியானபடி காட்டுகிறேன் என்ற ஆனந்தமும் பூரிப்பும் இப்போது என் மனசில் பொங்கியெழுந்து எனக்கு இன்பம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அவரவர்கள் தத்தம் நிலைமைக்குத் தகுந்தபடி நடப்பதே சுகமன்றி, அதை மீறித் தகாதகாரியம் செய்தால், அது முதலில் சுகமாகத் தோன்றினாலும், எப்போதும் நீடித்து நிற்காமல் கெட்டுப் போய்விடும். ஆகையால், நான் இன்னும் கொஞ்சநேரம் இப்படியே நின்று பேசுகிறேன். என்னுடைய தேகம் தங்களுக்கருகில் அவசியமாக வந்துதான் தீர வேண்டுமென்ற சந்தர்ப்பம் ஏற்படும்போது, நான் இங்கே நிற்பேனா? இந்த விஷயத்தில் இன்னொரு விசேஷமும்

இருக்கிறது. புத்திசாலி ஸ்திரீகளாக இருப்பவர்கள் தங்களுடைய புருஷரிடத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்றால், புருஷர்களுக்கு அருகில் அதிகமாக நெருங்காமல், அவர்களுக்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் செய்து, அவர்களது மனம் ஆநந்த பரவசமடையும்படி நடந்து கொள்ளுவார்கள். புருஷர்களால் தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை யெல்லாம் தூரத்திலிருந்தபடியே பெற்றுக்கொண்டுதான், பிறகு சமீபத்தில் நெருங்குவார்கள். மூடப் பெண்பிள்ளைகள் கூப்பிடச் செய்யாமல், புருஷர்களிடத்தில் அதிகமாக நெருங்கிப் பழகித் தங்களது மதிப்பைக் குலைத்துக் கொண்டு தங்களது சரீரத்தை மிகவும் கேவலமாக அவர்கள் வசத்தில் ஒப்புவித்து, கடைசியில் அவர்கள் வெறுத்து விலகும்படி செய்து கொள்ளுவார்கள். ஆகையால், ஸ்திரீகள் புருஷர்கள் சொல்லும் வேறு எதையும் அதிக துரிதத்தில் செய்யலாம்; சமீபத்தில் நெருங்கும் விஷயத்தை மாத்திரம் அவர்கள் அவ்வளவு சாதாரணமாக நினைத்தவுடனே செய்வது தனக்குத்தானே தீம்பு தேடிக்கொள்வது போலாகும். அந்தக் காரணத்தைக் கருதியும் நான் இப்போது தூரத்தில் நிற்க வேண்டியிருக்கிறது. இதைப் பற்றித் தாங்கள் ஆயாசப்படக்கூடாது. கிணற்றுநீரை வெள்ளங் கொண்டுபோகப் போகிறதில்லை. மகாராஜாவின் தரிசனமும் பழக்கமும் பிரியமும் அபிமானமும் எப்போது ஏற்படுமென்று நான் இதுவரையில் தவம் புரிந்து வந்தவளாயிற்றே. அப்படியிருக்க பருத்தி துணியாகவே காய்ப்பது போலத் தாங்களே என்மேல் பிரியப்பட்டு அழைக்கும்போது, நான் எப்படியும் வராமல் இருக்கப் போகிறதில்லை. நானோ பார்சீ ஜாதியைச் சேர்ந்த பெண். என்னுடைய சொந்த ஊர் பம்பாய். நானும் என்னுடைய தாய்தகப்பன் மார்களும், இன்னம் சிலரும் ராமேஸ்வரம் வரையில் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தோம். என்னுடைய தகப்பனாருக்குக் கோடிக்கணக்கில் பொருளிருக்கிறது. அவர் தக்க மகாராஜா யாருக்காகிலும்

என்னைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். நான் இந்த ஊருக்கு வந்தபிறகு தங்களுடைய அழகு, படிப்பு, புத்திசாலித்தனம், பேசுந்திறம், ஈவிரக்கம், தயை தாக்ஷண்யம் முதலிய நற்குணங்களையெல்லாம் கேள்விப்பட்டேன். தங்களைப் பார்க்கவேண்டுமென்ற விலக்கமுடியாத ஓர் ஆசை என் மனசில் உண்டாகிவிட்டது. நானோ கோஷாஸ்திரீ யாகையால் வெளியில் வந்து தங்களைப் பார்க்கமுடியாமல் இருந்தது. ஆகையால், நான் ஒரு சித்திரக்காரனை அழைத்துத் தங்களைப்போலவே திருவுருவப் படமொன்று தயாரித்துக்கொண்டு வரும்படி சொல்லி அவனுக்கு ஏராளமான பணம் கொடுத்தேன். அவன் அப்படியே தயாரித்துக்கொண்டுவந்து கொடுத்தான். அந்தத் திருவுருவப் படத்தைப் பார்த்ததுமுதல் எனக்குத் தங்களுடைய பைத்தியமே பெரிய பைத்தியமாகப் பிடித்துக்கொண்டது. புருஷரென்று அணைந்தால், தங்களைத்தான் அணைகிறது; இல்லையானால், இந்த உடம்பை இந்த ஊரின் மண்ணுக்கே இரையாக்கி விடுகிறதென்று நான் தீர்மானித்துவிட்டேன். என்னுடைய மனநிலைமையை அறிந்துகொண்ட என்னுடைய தாயாரும் தகப்பனாரும் என்னைப் பார்த்து, ''குழந்தாய்! நாம் பார்சீ ஜாதியைச் சேர்ந்தவர்கள். இந்த ஊர் மகாராஜா மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவர். நமக்கும் அவர்களுக்கும் கிரமப்படி கலியாணம் செய்யமுடியாது. அவர் உன்னை வைப்பாட்டி யாகத்தான் வைத்துக்கொள்வார். நாங்கள் எவ்வளவோ அருமையாக வளர்த்த எங்களுடைய ஒரே பெண்ணான உன்னை அப்படிப்பட்ட கேவல நிலைமையில் விட எங்களுக்குச் சம்மதமே இல்லை. ஆகையால், நீ இந்த ஆசையை விட்டுவிடு'' என்று நயமாகக் கண்டித்துக் கூறினார்கள். அவர்கள் சொன்ன வார்த்தை என்னுடைய மனசில் படவேயில்லை. நான் எப்படியாகிலும் பிரயாசைப்பட்டு, தங்களைப் புருஷராக அடைவேனே தவிர, வேறே யாரையும் நான் கண்ணாலும் பார்க்க மாட்டேனென்று ஒரே பிடிவாத

மாகச் சொல்லிவிட்டேன். பம்பாய்க்குப் போய்விட்டுத் திரும்பி வரலாமென்று என்னை அவர்கள் அழைத்தார்கள். நான் வரமாட்டேனென்றும், இந்த ஊரிலேதான் இருப்பேன் என்றும் சொல்லிவிட்டேன். என்னுடைய தாய்தந்தையர் இருவரும் மனமுடைந்து வருந்தினார்களானாலும், என் மனசை அதிகமாகப் புண்படுத்த விரும்பாதவராய், இந்த ஊரில் ஒரு மாளிகையை உடனே விலைக்கு வாங்கி அதில் என்னை வைத்து எனக்கு வேண்டிய ஆள்மாகாணங்களையும் ஏராளமான திரவியத்தையும் வைத்தார்கள். பம்பாயிலுள்ள எங்களுடைய வீடுகள், நிலங்கள் முதலிய சொத்துகளையெல்லாம் பார்த்துவிட்டு வரும் பொருட்டு, அவர்கள் அங்கே போய்விட்டுத் திரும்பிவந்து மறுபடியும் என்னை ஊருக்கு அழைத்தார்கள். நான் என்னுடைய மனோ உறுதியை மாற்றவே மாட்டேன் என்று சொல்லி விட்டேன். அவர்கள் இந்த ஊரில் கொஞ்ச காலமும், பம்பாயில் கொஞ்ச காலமுமாக இருந்து வருகிறார்கள். நான் தங்களை அடைவதற்கு இந்த ஒன்றரை வருஷகாலமாக எத்தனையோ வகைகளில் முயற்சி செய்து பார்த்தேன்; எதுவும் பலிக்காமல் போய்விட்டது. தங்களை நேரில் கண்டு பேசும்படியான சந்தர்ப்பமே எனக்கு வாய்க்காமல் போய்விட்டது. ஆகையால், நான் தங்களின்மேல் கொண்ட கட்டிலடங்காத பிரேமையினால் மதியிழந்து நிலைகலங்கி வேறேவழியறியாமல் துணிந்து இப்படிப்பட்ட காரியம் செய்து தங்களைப் பலவந்தமாகக் கொண்டு வரும்படி செய்தேன். இவ்வளவுதான் என்னுடைய வரலாறு. இந்த ஏழையைத் தாங்கள் எந்த வழியில் விட்டாலும், அது எனக்குச் சம்மதமே. எப்படியாவது தாங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நாளையதினம் பொழுது விடிவதற்குள் நான் பிணமாகப் போய்விடுகிறது நிச்சயம். இந்தப் பெண் பாவத்தைத் தேடிக்கொள்ளத் தங்களுக்குச் சம்மதம் இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்'' என்று மிகவும் உருக்கமாகவும் கரைகடந்த காதலோடும் மொழிந்தாள்.

அவளது அபூர்வமான வரலாற்றைக் கேட்ட இளவரசர் ஆச்சரியமும் பூரிப்பும் புளகாங்கிதமும் அடைந்தவராய் இனிமையாய் புன்னகை செய்து, "ஆகா! என்ன ஆச்சரியம்! மன்னாதி மன்னர்களான மண்டலேசுவரர்களுக்கும், தேவர்களுக்கும், மூவர்களுக்கும் கிடைக்காத நிதிக் குவியலான இப்படிப்பட்ட ரதிதேவி இந்த ஒன்றரை வருஷகாலமாக என்னை அடையத் தவம் புரிவதென்றால் என்னுடைய பாக்கியத்தை என்னவென்று சொல்வது! இருந்தாலும், இந்த ஒன்றரை வருஷகாலமாக இந்தச் சங்கதி என்னுடைய காதுக்கு எட்டாமல் போனது என்னுடைய துர்ப்பாக்கியமென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த விஷயம் மாத்திரம் எனக்கு எட்டியிருந்தால் நான் அடுத்த நிமிஷத்தில் உன்னிடத்திற்கு வந்து சேர்ந்து உனது கவலையையும் துயரத்தையும் தீர்த்துவைத்து என்னைப் பலவந்தமாகக் கொண்டுவந்ததான இந்தத் துன்பமும் உனக்கில்லாமல் செய்திருப்பேன். என்னிடத்தில் கைம்மாறு கருதாமல் இவ்வளவு பிரமாதமாக என்னைக் காதலித்து உருகி என் பொருட்டு தாய்தகப்பன்மாரையும் ஏராளமான ஐசுவரியத்தை யும் உல்லங்கனம் செய்து, தனது உயிரையும் இழக்க உறுதி கொண்டிருக்கும் அருங்குணமணியான உன்னை அடைந்து சுகப்படுவதைவிட மேலான இன்பம் இந்த மண்ணுலகி லாவது விண்ணுலகிலாவது இருக்கப் போகிறதா? ஒரு காலும் இல்லை. நீ எந்த ஜாதியிற் பிறந்தவளாக இருந்தாலும், அதைப்பற்றிக் கவலை இல்லை. ஒருவருக்கொருவர் மாறாத காதலுண்டாகிவிடுமானால் ஜாதி, மதம் முதலிய எந்த வேறுபாடும் பறந்து போய்விடும். ஆகையால், உன்னுடைய அற்புதமான அழகையும், நற்குணத்தையும், புத்திசாலித் தனத்தையும், நீ என்மேல் வைத்திருக்கும் நிகரில்லாத பிரியத்தையும் கண்டு உன்னுடைய வரலாறுகளை யெல்லாம் கேட்க, இதுவரையில் வேறு எவர் விஷயத்திலும் உண்டாகாத அவ்வளவு அதிகமான பிரியமும், மோகமும் என் மனசில்

உண்டாகிவிட்டன. ஆனால், நான் உன்னை மனிதர் அறியத் தாலி கட்டி சம்சாரமாக்கிக் கொள்ளமுடியாமல் போனாலும், தெய்வம் சாட்சியாக நான் உன்னை என்னுடைய பட்டமகிஷி ஆக்கிக்கொள்ளுகிறேன் என்பதற்கு நான் எவ்வித உறுதி வேண்டுமானாலும் செய்து கொடுக்கிறேன். என்னுடைய பட்ட மகிஷிக்கெல்லாம் மேலானவளாக உன்னை நான் மதித்துச்சகல காரியங்களிலும், நான் உன்னுடைய மனம்போல நடந்து கொள்ளுவேன் என்பதை நீ பிரமாணமாக நம்பலாம். இவ்வளவுதானே உனக்கு வேண்டியது? இனிமேலாகிலும் நீ எனக்குச் சமீபத்தில் வந்து இன்பம் கொடுக்கலா மல்லவா? ஏன் இன்னமும் அவ்வளவு தூரமாக நிற்கிறாய்?'' என்று கூறியவண்ணம் கட்டிலடங்காக் காம வெறி கொண்டவராய் எழுந்து அவளைப் பிடிக்கப் பாய, அவள் தனது வசீகரமான அழகிய பல் வரிசைகளைக்காட்டி கெஞ்சி நயந்தவளாய், ''கொஞ்சம் பொறுங்கள்; பொறுங்கள். தாங்கள் என்னை நாடி வரும்படியான சிரமமில்லாமல், நானே இன்னம் இரண்டொரு நிமிஷநேரத்தில் தங்களிடத்திற்கு வந்து சேருகிறேன். உட்காருங்கள் உட்காருங்கள்'' என்று பணிவாகவும் குழைவாகவும் வேண்டிக்கொள்ள, அவர் அதை மீறமாட்டாதவராய்த் திரும்பி வந்து ஸோபாவின் மேல் உட்கார்ந்து கொண்டு, ''அடீ! என் தங்கமே! எல்லா விஷயமும் முடிந்துபோயும், நீ இன்னமும் ஏன் என்னை இப்படிக் கொல்லுகிறாய்? உன்னை ஆலிங்கனம்செய்து கொள்ள வேண்டுமென்று என்னுடைய உடம்பு பறக்கிறது. என் மனசிலுள்ள ஆசையானது மார்பைக் கிழித்தெறிந்து விடும்போல இருக்கிறது. இன்னமும் இரண்டொரு நிமிஷம் பொறுக்க வேண்டிய காரணமென்ன? இன்னமும் உனக்கு என்ன சந்தேகம் இருக்கிறது?'' என்று மிகுந்த பதைப்போடு பேசினார்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீ, ''எனக்கு வேண்டிய உறுதியை எல்லாம் தாங்கள் செய்து கொடுத்துவிட்டீர்கள்

என்பது வாஸ்தவந்தான். இன்னமும் நான்கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு சிறிய சங்கதி இருக்கிறது; அதை மாத்திரம் தாங்கள் செய்துவிட்டால், அதுவே போதும்; நான் உடனே தங்களுக்கு மனைவியாகி விடுகிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட இளவரசர் தமது ஆவேசத்தில் தம்மையும் உலகையும் மறந்தவராய், ''கண்ணே! உனக்கு என்ன வேண்டுமானாலும் கொடுத்துவிட ஆக்ஷேபனை இல்லை; என்னுடைய உயிர்வேண்டுமா? அல்லது, இந்த ராஜ்ஜியத்தை உனக்குப் பட்டங்கட்டி விட வேண்டுமா? அல்லது, நான் இனி என்னுடைய ஆயிசுகால பரியந்தம் உனக்கு அடிமையென்று முறி எழுதிக்கொடுக்கட்டுமா? என்ன வேண்டும்? ஒரே வார்த்தையில் சொல்; உடனே தருகிறேன்'' என்றார்.

அதைக் கேட்ட இளநங்கை வியப்புற்று நடுநடுங்கி அஞ்சியவளாகக் காணப்பட்டு, ''அடேயப்பா! அவ்வளவு அமிதமான ஆசைகளை நான் கொள்ளக்கூடியவளல்ல. என்னுடைய யோக்கியதைக்குத் தகுந்த பதவி எனக்குக் கிடைப்பதே போதுமானது. நான் கேட்க விரும்புவது வேறொன்றும் இல்லை. இப்போது ஆரம்ப மோகத்தில் தாங்கள் என்மேல் நிரம்பவும் அபிமானம் வைப்பீர்கள். அதைப்பற்றிச் சந்தேகமில்லை. காலக்கிரமத்தில் இப்போது இருக்கும் புதுமோகம் மாறிவிடும். பிறகு தாங்கள் ஒரு சமயத்தில் என்னைப் பார்த்து, ''நீ திருடர்களை விட்டு என்னைப் பலவந்தமாகக் கொண்டு வந்த திருடியல்லவா?'' என்று கேட்டு என்னைத்தூற்றி இழிவாக நடத்த நேர்ந்தாலும் நேரும். ஆகையால், தாங்கள் இப்போது ஒரு காரியம் செய்ய வேண்டும். நான் தங்களைப் பலவந்தமாகக்கொண்டு வந்ததை மனப்பூர்வமாக மன்னித்து விட்டதாகவும், இனி இந்த விஷயத்தைப்பற்றி என்னிடத்தில் பேசுகிறதாவது என்னை இழிவு படுத்துகிறதாவது இல்லையென்று பிரமாணமாகச் சொல்வதாகவும் ஒரு

காகிதத்தில் நான் எழுதுகிறேன். அதனடியில் தாங்கள் கையெழுத்துச் செய்து கொடுக்க வேண்டும். தாங்கள் அப்படிக் கையெழுத்துச் செய்த அதே க்ஷணத்தில் நான் தங்களுடைய ஆசைநாயகி ஆகிவிடுகிறேன்'' என்று சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்வதுபோல அதிமாதுரியமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட இளவரசர் மிகவும் வியப்புற்று, ''இவ்வளவு தானா! நான் என்னவோ பெரிய காரியமென்றல்லவா பயந்துவிட்டேன். நீ எதை எழுதிக்கொண்டு வந்தாலும் நான் கையெழுத்துச்செய்யத் தடையில்லை. காகிதமிருந்தால் எடுத்து எழுதிக்கொண்டு வா; தாமசம் செய்யாதே'' என்று மிகுந்த ஆவேசத்தோடு கூறினார்.

உடனே அந்தப் பெண், ''இதோ எழுதியே தயாராக வைத்திருக்கிறேன். தாமசமே ஆகாது'' என்று மறுமொழி கூறியவண்ணம் சடக்கென்று பாய்ந்து சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு மேஜையின் சொருகுபெட்டியைத் திறந்து, அதற்குள் ஆயத்தமாக எழுதிவைத்திருந்த காகிதத்தையும் மைக்கூட்டையும் இறகையும் கொணர்ந்து கொடுத்தாள். இளவரசர் அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்ததைப் படிக்க, அது, அவள் சற்றுமுன் சொன்னது போலவே இருக்கக்கண்டு, இறகை வாங்கி அலட்சியமாக அதன் அடியில் தமது கையெழுத்தைச் செய்துவிட்டு, ''இதோ ஆய்விட்டது; எடுத்துக்கொள்'' என்று கூறிப் பேனாவைக் கீழே வைத்து விட்டு அவள்மீது கைபோடத் தொடங்கினார். அவள் அப்போதும் இடங்கொடுக்காமல் நகர்ந்துகொண்டு, ''தங்களுடைய முத்திரை மோதிரத்தால், இதனடியில் ஓர் அரக்குமுத்திரை வைத்துக்கொடுக்க வேண்டும். அவ்வளவுதான். அதற்குமேல் நான் தங்களுக்குச் சிரமம் கொடுக்கிறதில்லை. அதன்பிறகு தங்களுடைய பிரியப்படி நடந்து கொள்ளுங்கள்'' என்று கெஞ்சி மன்றாடிக் கூற, இளவரசர், ''ஏதேது, நீ எவ்வளவு முன்

ஜாக்கிரதையாகக் காரியத்தை முடித்துக் கொள்ளுகிறாய்! என்னுடைய வெறுங் கையெழுத்திருந்தால், நாளைய தினம், ஆதை நான் போடவில்லையென்று சொல்லிவிடுவேன் என்று நினைக்கிறாயா? உன்னுடைய பிரியப்படியே ஆகட்டும். இதோ இருக்கிறது முத்திரை மோதிரம். எடுத்து எத்தனை முத்திரை வேண்டுமானாலும் போட்டுக்கொள். நீ என்னுடைய மனுஷி ஆகிவிட்டா யென்பதற்கு உன்னுடைய நெற்றியில் வேண்டுமானாலும் இரண்டு முத்திரைகள் போட்டுக்கொள்'' என்று மிகவும் குதூகலமாகப் பேசிக்கொண்டே தமது முத்திரை மோதிரத்தைக் கழற்றிக் கொடுக்க, அவள் பூரித்து மகிழ்வடைந்து புன்னகை செய்தவளாய், அவரை நோக்கி, ''நான் தங்களுடைய மனுஷி ஆகிவிட்டேன் என்பதற்கு என் முகத்தில் இந்த மோதிரத்தால் முத்திரை போட்டால் அதோடு நான் திருப்தியடைந்து விடுவேனோ? அந்த முத்திரை போட இந்த மோதிரத்துக்கு யோக்கியதை இல்லை. தங்களுடைய அதரங்களினால் அல்லவா அந்த முத்திரையைப் போட வேண்டும். இருக்கட்டும்; நான் உங்களை இலேசில் விடப்போகிறேனா? இதோ வந்துவிட்டேன்'' என்ற பரிகாசமாகப் பேசிக்கொண்டே சற்று தூரத்திற்குப் போய், அரக்கை எடுத்து அந்தக் காகிதத்தினடியில் முத்திரை போட்டு அந்தக் காகிதத்தை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு மோதிரத்தை எடுத்துக் கொண்டு திரும்பி இளவரசரிடம் வந்து, மோதிரத்தைக் கொடுத்தாள். தமது கையை நீட்டி அதை வாங்கிய இளவரசர் அப்படியே அவளையும் பிடித்துக்கொள்ளுமாறு தமது கையை நீட்ட, அவள் இனிமையாகவும், மோகலாகிரி கொண்டவள்போலவும் தோன்றி நகைத்து, ''அந்தக் காகிதத்தை அங்கே வைத்திருக்கிறேன். அது பறந்து எங்கேயாகிலும் காணாமல் போய்விடும். இவ்வளவு சிரமப்பட்டு சம்பாதித்த விலையற்ற அந்த வஸ்துவை இழக்க மனம் வருமா? ஒரே நொடிநேரம் பொறுத்துக் கொள்ளுங்கள். அதை எடுத்துப்

பெட்டியில் வைத்துவிட்டு ஓட்டமாக ஓடி வருகிறேன்'' என்று குதூகலமாகக் கூறியவண்ணம் மகிழ்ச்சியே வடிவாக அவ்விடத்திலிருந்து விரைவாகப் பாய்ந்து அந்தக் காகிதத்தை எடுத்துக்கொண்டு சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். போனவள் அந்தப் பக்கத்திலிருந்த பீரோக்களின் இடையில் புகுந்து சென்றதாகத் தெரிந்தது. இளவரசர் அவள் சென்ற பக்கமே தமது விழியை வைத்து அவளது இனிய வடிவத்தைப் பார்த்தபடியே ஆவலோடு காத்திருக்க, அந்த வடிவத்தை ஒரு பீரோ மறைத்துக்கொண்டது. அவள் அந்தக் காகிதத்தை வைத்துவிட்டு அதிசீக்கிரத்தில் வருவாள் என்று நினைத்து மிகுந்த பதைப்பும் ஆவேசமும் கொண்டவராய் இளவரசர் உட்கார்ந்திருந்தார்.

மேன்மாடத்தில் இளவரசரது அதிர்ஷ்டம் இவ்வாறிருக்க கீழே இருட்டறையிலிருந்த மருங்காபுரி ஜெமீந்தாருக்கும் இரண்டு ஆட்களுக்கும் நேரிட்ட விஷயத்தைக் கூறுவோம். அந்த மூவரது நிலைமையும் மகா பரிதாபகரமாகவும், பயங்கர மாகவும் இருந்தது. இளவரசர் அவர்களைவிட்டுப் போனபிறகு ஜெமீந்தாரும் மற்ற இருவரும் மிகுந்த திகிலும் கலக்கமும் கொண்டு நடுங்கலாயினர். விளக்கில்லாமல், கறுப்புத் திரைகளால் மூடப்பட்டு அந்தகாரத்திற்குள் ஆழ்ந்து கிடக்கும் தங்களை அந்த முரட்டு மனிதர்கள் எவ்விதமான கொடுமைக்கும் சித்திரவதைக்கும் ஆளாக்குவார்களோ என்ற கவலையும் அச்சமும் எழுந்து அவர்களை உலப்பத் தொடங்கின. எந்த நிமிஷத்தில் அந்த முரட்டாள்கள் தங்கள்மீது பாய்ந்து தங்களை வதைப்பார்களோ என்ற நினைவினால், அவர்கள் நிரம்பவும் வேதனைக்கு உள்ளாகி இருந்தனர். தனியராகப் பிரிந்துபோன இளவரசருக்கு அவர்கள் எவ்விதமான பொல்லாங்கு இழைக்கப் போகிறார்களோ என்ற சந்தேகமும், அவர்கள் கள்வர்களோ, அல்லது வேறு யாரோ என்ற சந்தேகமும் எழுந்து

அவர்களைப் பலவகையில் சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தன. அவ்வாறு அரைக்கால் நாழிகை நேரமாயிற்று. அந்த அறையை நோக்கிக் காலடி ஓசையும், வெளிச்சமும் வருவதாகப் புலப்பட்டது. அடுத்த நிமிஷத்தில் கையில் விளக்கோடு கட்டாரித்தேவன் அங்கே வந்து சேர்ந்தான். இளவரசர் அவனோடு வராமல், அவன் தனிமையில் வந்ததும், போனவன் அதிகநேரம் தாமதியாமல் உடனே திரும்பி வந்ததும், பெருத்த வியப்பையும், திகிலையும், சஞ்சலத்தையும் ஜெமீந்தார் முதலிய மூவரது மனத்திலும் உண்டாக்கின. அவன் இளவரசரை ஒருக்கால் கொன்றிருப்பானோ, அல்லது எங்கேயாகிலும் சிறைப்படுத்தி இருப்பானோ என்ற பலவகையான எண்ணங்கள் அவர்களது மனதில் தோன்றின. இளவரசரது கதியே அப்படியிருந்தால், தங்கள் மூவரையும் அவர்கள் எப்பாடு படுத்தமாட்டார்களென்ற பெருத்த கிலியும் நடுக்கமும் உண்டாயின.

அப்படியிருந்தாலும், மருங்காபுரி ஜெமீந்தார் சிறிது துணிவடைந்தவராய்க கட்டாரித்தேவனை நோக்கி, "ஏனப்பா! இளவரசரை எங்கே காணோம்? அவர் திரும்பி வருவாரா மாட்டாரா? அவர் இந்தத் தேசத்து மகாராஜனுடைய புத்திரர் என்று நினைவிருக்கட்டும்" என்று நயமாகக் கூறினார்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன் ஏளனமாக நகைத்துப் புரளியாகப் பேசத் தொடங்கி, "அவர் மகாராஜாவுடைய மகனாயிருந்தால் எங்களுக்கென்ன? பிச்சைக்காரனுடைய மகனாயிருந்தால் என்ன? எங்களுக்கு எல்லோரும் சமமான மனிதர்கள்தான். உங்களுடைய நியாயம் பெரிய மனிதருக்கொன்று; ஏழைகளுக்கொன்று; எங்களுடையது அப்படியல்ல. யாராக இருந்தாலும் நாங்கள் எங்களுடைய நியாயத்தை நிறைவேற்றியே தீருவோம். யோக்கியர் களாக இருப்பவர்கள் எவரிடத்திலும் நடுநிலைமை தவறாமலே தான் இருப்பார்களென்பது உமக்குத்

தெரியாதா? இளவரசருக்கு ஏதாவது துன்பம் சம்பவித்து விட்டதோ என்று நீர் கொஞ்சமும் அஞ்சத் தேவையில்லை. அவர் ஸொகுஸான ஓர் இடத்தில் சந்தோஷமாக இருக்கிறார். அவரைப்பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம்'' என்று துடுக்காகப் பேசினான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், "அப்படியானால் அவர் திரும்பி வர இன்னும் எவ்வளவு நேரம் பிடிக்கும்?'' எனறார்.

கட்டாரித்தேவன், "தயவுசெய்து உம்முடைய கடிகாரத்தை எடுத்துப் பார்த்து இப்போது மணி என்னவென்பதைச் சொல்லும். அதற்குமேல் மற்ற சங்கதியைத் தெரிவிக்கிறேன்'' என்று கூறினான்.

உடனே ஜெமீந்தார் தமது சட்டைப் பையிலிருந்த வைரங்கள் பதிக்கப்பட்டதும், சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறத்தக்கது மான தமது தங்கக் கடிகாரத்தை வெளியில் எடுத்துப் பார்த்து, "மூன்றுமணிக்குப் பத்து நிமிஷம் இருக்கிறது'' என்றார்.

அந்த வார்த்தையைக் கேட்ட கட்டாரித்தேவன், "நீர் சொல்வது சரியல்ல. உமக்குத் தூக்கக்கண். அதிலும் இருள். ஆகையால், முள்கள் உமக்குச் சரியாகத் தெரியவில்லை. அதை இப்படிக்கொடும்; நான் லாந்தரின் கிட்ட வைத்துப் பார்க்கிறேன்'' என்று நிதானமாகக் கூறினான்.

அதைக்கேட்ட மருங்காபுரி ஜெமீந்தார் தமது கடிகாரத்தைத் தங்கச் சங்கிலியோடு எடுத்து அவனிடத்தில் கொடுக்க, அவன் அதை வாங்கி வைத்துக்கொண்டு விளக்கண்டையில் பிடித்துப் பார்த்து, "ஆகா! கடிகாரம் நிரம்பவும் சொகுஸாக இருக்கிறது! இதை நீர் எத்தனை ரூபாய்க்கு வாங்கினீர்?'' என்றான்.

ஜெமீந்தார், "நான் இரண்டாயிரத்துக்கு வாங்கினேன்'' என்றார்.

உடனே கட்டாரித்தேவன், "சரி; இருக்கும் இருக்கும். உருப்படி நிரம்பவும் உயர்வானதாகத்தான் இருக்கிறது. இது

போகட்டும்; இன்னமும் உம்மிடத்திலிருக்கும் மோதிரங்கள், பணம் முதலிய எல்லாச் சாமான்களையும் எடுத்து இப்படிக் கொடும். அவைகளையெல்லாம் தூக்கிச் சுமக்கும் படியான கஷ்டத்தை உமக்கேன் வைக்க வேண்டும்'' என்று மிகவும் நிதாதனமாகவும் அழுத்தமாகவும் கூறினான்.

அந்த வார்த்தையைக் கேட்ட ஜெமீந்தார் மட்டுக்கடங்கா வியப்பும் திகைப்பும் திகிலும் கொண்டவராய் அவனை நோக்கி, ''என்ன இது? உங்களைப்பற்றி நான் மிகவும் மதிப்பாக அல்லவா நினைத்திருந்தேன்! கடைசியில் நீங்கள் கொள்ளைக்காரர்கள்தானா?'' என்று கூறினார்.

கட்டாரித்தேவன், ''அப்படியானால் எங்களை வேறு யாரென்று தான் எண்ணினீர்?'' என்றான்.

மருங்காபுரி ஜெமீந்தார்: நீங்கள் இன்னாரென்பது தான் தெரியாமலிருந்தது. ராஜபாட்டையில் நீங்கள் எங்களிடத்தில் இருந்த பொருள்களைக் கொள்ளை யடிக்காததிலிருந்து நீங்கள் கொள்ளைக் காரர்களல்ல என்றும், வேறே ஏதோ கருத்தோடு எங்களைக் கொண்டு வருகிறீர்கள் என்றும் நினைத்தோம்.

கட்டாரி:- நீர் சொல்வது உண்மையான சங்கதிதான். இந்தக் காலத்தில் ஒரே வியாபாரம் செய்தால் கட்டிவருகிறதில்லை யல்லவா. அதனால் நாங்கள் பலவகையான வியாபாரம் செய்து வருகிறோம். எங்கே? எடும் எடும்; நேரமாகிறது; கை விரல்களிலுள்ள வைர மோதிரங்களை யெல்லாம் கழற்றி இப்படிக் கொடும். அவைகள் எவ்வளவு விலை பெறுமென்று மதிப்புப் போட வேண்டும். அதோடு சட்டைப் பையிலுள்ள பணப்பையையும் வெளியில் எடும். எங்களுடைய யோக்கியதையைப்பற்றி நீர் வேறுவிதமாக நினைத்தால், அதற்கு நாங்கள் உத்தரவாதியல்ல. வீணாக வார்த்தைகளை வளர்ப்பதில் பயனில்லை. எடும்'' என்றுஅதட்டிக் கூறினான்.

அதைக்கேட்ட அந்த ஜெமீந்தார் தமது பணப்பையை யும் கையிலிருந்த மோதிரங்களையும் உடனே எடுத்து

அலட்சியமாக அவனிடத்தில் கொடுத்துவிட்டார். அவருக்கு அபாரமான செல்வமிருந்ததாகையால், அந்த நகைகளும், பணமும் போனது அவருக்கு அவ்வளவாக விசனம் உண்டாக்க வில்லை. தவிர, அவர் அந்த முரட்டு மனிதர்களுடைய வசத்தில் நன்றாக அகப்பட்டுக்கொண்டிருந்தமையால், அவ்வாறு கொடுக்காமல் இருக்க அவர் விரும்பினாலும், அது சாத்தியப்பட்டிருக்காது. அவரை அந்த முரடர்கள் நையப் புடைத்து அந்தப் பொருள்களைப் பலவந்தமாகப் பிடுங்கிக்கொண்டிருப்பார்கள். ஆகவே அவர் மரியாதையாக அவைகளை எடுத்துக் கொடுத்துவிட்டார்.

உடனே கட்டாரித்தேவன் மோதிரங்களைப் பத்திரப்படுத்திக் கொண்டு பணப்பையைக் கவிழ்த்து எண்ணிப் பார்த்துவிட்டு அவரைநோக்கி, "சே! இவ்வளவுதானா! நீர் கோடீசுவரர்; ஜெமீந்தார்; உம்முடைய பணப்பையில் நூற்றைம்பது ரூபாய்தானே இருக்கிறது! சே! எனக்கே வெட்கமாக இருக்கிறது. ஒரு கோடீசுவரரிடத்தில் கொள்ளையடித்து நூற்றைம்பது ரூபாய்தான் கொண்டு வந்தாயா என்று என்னுடைய பெண்டாட்டி முகத்தில் இடிப்பாளே; உம்மிலும் தாழ்ந்த ஏழைகள் எல்லாம் எவ்வளவோ அதிமான பணத்தை வைத்துக்கொண்டு வந்து என்னிடத்தில் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். என்ன பெரிய மனிதரையா நீர்? அது போகட்டும். இன்னொரு பையில் தினசரி டைரிப் புஸ்தகம் வைத்திருக்கிறீரே; அதை இப்படிக் கொடும். அதற்குள் ஏதாகிலும் இருக்கும்" என்று மிகவும் நிதானமாகவும், தனக்கு நியாயமாகச் சேரவேண்டிய கடனைக் கேட்பவன் போல அதிகாரமாகவும் பேசினான்.

உடனே ஜெமீந்தார், தமது சட்டைப்பையிலிருந்த தினசரி டைரியை எடுத்து அவனிடத்தில் கொடுத்தவராய், "இந்தப் புஸ்தகத்தில் ஆயிரம் ரூபாய் நோட்டுகள் இரண்டு இருக்கின்றன. அந்த நோட்டுகளை நீ சந்தோஷமாக

எடுத்துக்கொள். ஆனால், அந்தப் புஸ்தகத்துக்குள் ரகசியமான காகிதங்கள் ஏதேனும் இருக்கலாம். அந்தக் காகிதங்களினால், உனக்கு எவ்விதப் பிரயோசனம் இல்லை. ஆகையால், அந்த இரண்டு நோட்டுகளை மாத்திரம் நீ எடுத்துக்கொண்டு புஸ்தகத்தை என்னிடத்தில் கொடுத்துவிடு'' என்றார்.

கட்டாரி: உம்முடைய ரகசியமான காகிதங்கள் இருந்தால் அவைகளினால் எனக்கு ஏன் பிரயோசனமில்லை? நீர் அப்படிச் சொல்லக்கூடாது. நீர் சொல்லுகிறபடி நான் இதோ உமக்கெதிரிலேயே அந்த இரண்டு நோட்டுகளையும் எடுத்துக் கொண்டேன். மற்ற எந்தக் காகிதத்தையாவது டைரியையாவது நான் படிக்காமல் இப்படியே திருப்பிக்கொடுத்து விடுவதற்கு நீர் எனக்கு எவ்வளவு ரூபாய் சன்மானம் செய்வீர்.

ஜெமீந்தார்: (அவன் சொன்ன ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள ஆவலுள்ளவராய்ப் பேசத் தொடங்கி) சரி; அப்படியானால் அந்தப் புஸ்தகத்தை இப்போதே என்னிடத்தில் கொடுத்துவிடு. நாளைய தினம், நீ யாரையாகிலும் என்னிடத்தில் அனுப்பி வைத்தால், இன்னொரு ஆயிரம் ரூபாய் கொடுத்தனுப்புகிறேன்.

கட்டாரி: (மிகுந்த மகிழ்ச்சி யடைந்தவனாய்) சரி; உம்முடைய மதிப்புக்கே இது ஆயிரம் ரூபாய் பெறத்தக்கது என்பது தெரிகிறது. அப்படியானால், அந்தத் தொகையை விடப் பலமடங்கு அதிகமான தொகை பெறும்படியான ரகசியங்கள் இந்தப் புஸ்தகத்தில் அடங்கி இருக்கிறது என்பது நிச்சயமாகிறது. உம்மிடத்தில் இருந்ததையெல்லாம் சந் தோஷமாகவும் பெருந்தன்மையோடும் நீர் எடுத்து என்னிடத் தில் கொடுத்ததைக் கருதி நான் உம்மிடத்தில் அதிகமான கடுமை காட்டவும், அநாவசியமான பெருத்த தொகையைப் பெறவும் ஆசைப்படவில்லை. லாபம் எந்தப் பக்கத்துக்காவது இருக்கட்டும். ஆயிரம் என்பதை இரண்டாயிரமாக வைத் துக்கொள்வோம். அதோடு நான் திருப்தியடைந்து விடுகிறேன்.

ஜெமீந்தார்:- (திகைப்பும் தடுமாற்றமும் அடைந்து) என்னப்பா! பன்னிரண்டு அணா பெறத்தக்க ஒரு டைரிப் புஸ்த கத்துக்கு வாய் கூசாமல் இரண்டாயிரம் ரூபாய் கேட்கிறாயே! சரி; போனால் போகிறது. நீ கேட்கிறதுபோல இரண்டாயிரம் ரூபாய் நாளைய தினம் கொடுக்கிறேன்; புஸ்தகத்தை என் னிடத்தில் இப்போதே கொடுத்துவிடு.

கட்டாரி: (புரளியாக நகைத்து) எங்களிடத்தில் கடன்கட்டு வியாபாரமே கிடையாதென்பது உமக்குத் தெரியாதா? கையிலே காசு வாயிலே தோசை என்கிறபடி வெள்ளையப்பனை இந்தக் கையில் போடும்; புஸ்தகத்தை அந்தக் கையில் போடுகிறேன். ஒரே பேச்சு, மறு பேச்சில்லை.

ஜெமீந்தார்:- நான் ஜெமீந்தார் என்பதையும், பெருத்த பணக்காரன் என்பதையும் நீ எப்படியோ தெரிந்து கொண்டி ருக்கிறாய். அப்படியிருந்தும், நீ இந்த இரண்டாயிரம் காசுக்கு என்னை நம்பமாட்டேன் என்கிறாய்? நாளைய தினம் காலையில் நீ யாரை அனுப்பினாலும் உடனே இரண்டாயிரம் ரூபாய் தடையில்லாமல் வந்து சேரும்.

கட்டாரி: - (புரளியாக) நான் அனுப்பும் ஆளிடத்தில் பணம் மாத்திரமா வந்து சேரும்? போலீஸ்காரன் ஒருவனும் தடை யில்லாமல் வந்து சேருவான். அது உறுதியான சங்கதியென்பது உம்முடைய மனசுக்கே தெரியும். அதெல்லாம் என்கிட்டப் பலிக்காது தாத்தா! நாங்கள் அப்படிப்பட்ட கோணல் வழியி லேயே தொழில் செய்வதில்லை. அடே காத்தான்! நீ போய், ஒரு கடுதாசித் தாளும் அரக்கும், விளக்கும் கொண்டுவா- என்றான்.

உடனே ஒரு முரட்டாள் அந்த அறையை விட்டு விரைவாகப் போய் அந்த வஸ்துக்களைக்கொணர்ந்து கட்டாரி யிடத்தில் கொடுக்க அவன் அவைகளை ஜெமீந்தாரிடத்தில் நீட்டி, ''ஐயா! இந்தக் காகிதத்தில் ஓர் உறை செய்து, அதற்குள் இந்த டைரிப் புஸ்தகத்தை வைத்து வாயை ஒட்டி, உம்முடைய முத்திரை மோதிரத்தால் அரக்கு முத்திரைகள்

வைத்து என்னிடத்தில் கொடும். அந்த முத்திரைகள் கெடாமல் அப்படியே புஸ்தகத்தைக் கொண்டுவந்து நாளையதினம் உம்மிடத்தில் சேர்க்கிறோம்.

ஜெமீந்தார்:- நான்தான் எல்லா மோதிரங்களையும் உன்னிடத்தில் கொடுத்துவிட்டேனே. என்னிடத்தில் முத்திரை மோதிரம் ஏது?

கட்டாரி:-நீர் சொல்வது நிஜந்தான். உம்முடைய பெயரின் முதலெழுத்துக்கள் செதுக்கப்பட்டிருக்கும் மோதிரத்தை இப்போது நான் உம்மிடத்தில் கொடுத்துவிடுகிறேன். முத்திரை போட்டுவிட்டு அந்த மோதிரத்தை நீரே வைத்துக்கொண்டிரும். நாளைக்குப் புஸ்தகத்தை வாங்கிப்பார்த்து முத்திரைகள் சரியாக இருந்தால் பணத்தையும் இந்த மோதிரத்தையும் கொடும்- என்றான்.

ஜெமீந்தார்: சரியான ஏற்பாடு. அப்படியே செய்வோம்- என்று கூறிய வண்ணம் டைரிப் புஸ்தகத்தை வாங்கி உறைக்குள் போட்டு அரக்கு முத்திரை வைத்து அதை அவனிடத்தில் கொடுத்து விட்டு மோதிரத்தைத் தமது கையில் அணிந்து கொண்டவராய் கட்டாரியை நோக்கி, "இதெல்லாம் சரிதான். இந்தப் புஸ்தகம் எப்போது யார் மூலமாக என்னிடத்தில் வருகிறது? நான் எப்படி அந்தத் தொகையைக் கொடுத்தனுப்புகிறது?" என்றார்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன், "நீர் ஒரு காரியம் செய்யும்; வருகிற புதன்கிழமை தினம் முழுதும் நீர்வெளியில் போகாமல் உம்முடைய மாளிகையிலேயே இரும். இரண்டாயிரம் ரூபாயை உம்முடைய கை வசத்தில் தயாராக வைத்துக்கொண்டிரும். மற்ற விஷயங்களையெல்லாம் எனக்குவிட்டுவிடும். நான் பக்குவமாக முடித்துவிடுகிறேன்" என்றான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் சிறிது தயங்கியபின், அந்த ஏற்பாட்டிற்குத் தாம் இணங்குவதாகச் சொல்லி ஒப்புக் கொண்டார். உடனே கட்டாரித்தேவன் அவரை அவ்வளவோடு

விட்டுவிட்டு, "சரி; நேரமாகிறது; நான் போய் மகாராஜாவை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு லாந்தரை கையிலெடுத்துக்கொண்டு திரைக்கு அப்பாலிருந்த படிகளின் வழியாக மேன்மாடத்திற்குச் சென்றான். வண்டிக் காரனையும் வேலைக்காரனையும் கொள்ளையடிப்பது தனது கண்ணியத்திற்குக் குறைவென்று நினைத்த கட்டாரித்தேவன் அவர்களை எவ்விதத்திலும் வருத்தாமல் சும்மாவிட்டு விட்டு அப்பால் சென்றான். தாங்கள் தப்பினதைப் பற்றி அந்த ஆட்கள் இருவரும் மிகுந்த சந்தோஷமடைந்தவராய் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

லாந்தரும் கையுமாக மேலே ஏறிச்சென்ற கட்டாரித்தேவன் உச்சியை அடைந்து கதவை மெதுவாகச் சிறிதளவு திறந்து பார்க்க, உட்புறத்தில் இளவரசர் மாத்திரம் காணப்பட்டார். அவர் கட்டில்கள், பீரோக்கள் முதலிய சாமான்களின் அப்பால் போய் எதையோ தேடிப் பார்த்துக்கொண்டிருந்தார். அதைக்கண்ட கட்டாரித்தேவன் புரளியாகப் புன்னகை செய்தவனாய், "மகாராஜா அவ்வளவு ஆவலாக எதைத் தேடுகிறார்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். அவன் வந்ததைக் கண்டு திடுக்கிட்டு இளவரசர் திரும்பினார். அவரது முகம் மிகுந்த துயரத்தையும் ஏமாற்றத்தையும் குழப்பத் தையும் காட்டியது. அப்போது தாம் கண்ட காட்சி கனவோ நினைவோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. இரண்டொரு நிமிஷ நேரம் இளவரசர் அப்படியே திகைத்து ஸ்தம்பித்து நிற்க, அதற்குள் அவருக்கு அருகில் போய் நின்ற கட்டாரித்தேவன், "ஏன் மகாராஜா! போகலாமல்லவா? ஏதாகிலும் சாமானை எங்கேயாவது வைத்து விட்டீர்களா? என்ன தேடுகிறீர்கள்?" என்று குறும்பாக மொழிந்தான். அவனது வார்த்தை தீயின் மேல் நெய்யைச் சொரிவது போல அவரது மனதைத் தகித்தது. அவர் சிறிதுநேரம் தயங்கி, "ஆ டேய் ஆளே! நீ எனக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டு என்னை இங்கே கொண்டு வந்து இந்தப் பார்சீ ஜாதிப்

பெண்ணினிடத்தில் சேர்த்துவிட்டாய். அவளும் நானும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். நீங்கள் என்னை இப்படி பலவந்தமாகக் கொண்டுவந்ததை மன்னிப்பதாக ஒரு காகிதத்தில் எழுதி என்னுடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டு, அதைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டு வருவதாகப் போனாள். அவள் திரும்பி வருவாள் வருவாள் என்று அதுமுதல் இதுவரையில் நான் பொறுத்திருந்தேன். அவள் வரவே இல்லை. நான் எழுந்துவந்து பார்க்கிறேன். இந்த இடத்திலிருந்து வெளியில் போகக்கூடிய வாசலாவது வேறே வழியாவது காணப்படவில்லை. அவள் எங்கே தான் போனாள் என்பது தெரியவில்லையே! கண்கட்டு வித்தையில் மறைவது போல மாயமாக மறைந்து போயிருக்கிறாளே! அவள் எங்கே போனாள் என்பது உனக்குத் தெரியுமா? திடீரென்று ஏதாகிலும் தேகபாதை ஏற்பட்டதனால், அவள் ஒருவேளை அப்பால் போயிருப்பாளா? அப்படிப் போவதற்கு வழியே இல்லையே! ஒரு கால் இந்த பீரோக்களில் எதிலாகிலும் நுழைந்துகொண்டு உட்புறத்தில் பூட்டிக் கொண்டிருப்பாளா? இவ்வளவு பிரயாசைப்பட்டு என்னை இங்கே கொணர்ந்து இவ்வளவுதூரம் பேசிவிட்டு பீரோவுக்குள் போய் ஒளியக் காரணமில்லையே! இந்த அற்புதத்தை என்னவென்று சொல்லுகிறது! ஒருவேளை எனக்குத் தெரியாமல் இங்கே சுவரில் மறைவான வழி ஏதாகிலும் இருக்கிறதா? உனக்குத் தெரிந்திருந்தால், சொல்'' என்று மிகவும் நயமாகவும், இளக்கமாகவும் பேசினார்.

அதைக் கேட்ட கட்டாரித்தேவன் ஏளனமாகப் புன்னகை செய்த முகத்தோடு அவரை நோக்கி, ''என்ன ஆச்சரியம்! இங்கே ஒரு பெண்ணா இருந்தாள்! அது எனக்குத் தெரியாதே! மகாராஜா வுடைய சாமர்த்தியம் இவ்வளவுதானா? உங்களுடைய கண்ணுக்கு எதிரிலே இருந்த பெண் எங்கே போனாள் என்று என்னைக் கேட்டால், அதற்கு நான் என்ன பதில் சொல்லுகிறது? சரி; மகாராஜாவுக்கு அவ்வளவுதான்

அதிர்ஷ்டம். முக தரிசனமாவது கிடைத்ததல்லவா; அவ்வளவோடு சந்தோஷப்பட வேண்டியதுதான். நேரமாகிறது; தயவுசெய்து மகாராஜா என்னோடு கூட வெளியில் வரவேண்டும். உங்களை அழைத்துக்கொண்டு போய், நீங்கள் போகவேண்டிய வழியைக் காட்டுவதொன்றுதான் மகாராஜாவுக்கு என்னால் இனி செய்யக்கூடிய உதவி; வாருங்கள் போவோம்'' என்று புரளியாகப் பேசினான்.

அவனது குறும்பான வார்த்தை ஒவ்வொன்றும் அவரது மனத்தில் ஈட்டிகொண்டு குத்துவதுபோல இருந்தது. வெட்கத்தினாலும், துக்கத்தினாலும், ஏமாற்றத்தினாலும் அவரது தேகம் மிகவும் குன்றிப்போனது. அந்தப் பெண் தம்மை எந்த விஷயத்திலும் வஞ்சிக்கவில்லையென்று அவர் உறுதியாக நினைத்தார். ஆகையால், அவள் எப்படித்தான் மறைந்து போயிருப்பாள் என்ற ஒரே சந்தேகமும் வியப்பும் அவரது மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன. அவர் உடனே கட்டாரியைப் பார்த்து, ''அப்பா! அடேய்! அவசரப்படாதே; எனக்கு அரண்மனைக்குப் போக இப்போது அவசரம் ஒன்றும் இல்லை. நான் இன்னமும் கொஞ்ச நேரம் இவ்விடத்திலேயே இருந்து பார்க்கிறேன். அவள் எப்படியும் திரும்பி வருவாள். அவள் என்னிடத்தில் கொண்டிருக்கும் மோகம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அப்படிப்பட்ட அருமையான பெண்ணினிடத்தில் சொல்லிக் கொள்ளாமல் நான் இதைவிட்டுப் போவது பிசகு. நீ போய் அவள் எங்கே இருக்கிறாள் என்பதைப் பார்த்து எனக்குச் சங்கதியைத் தெரிவி. உன்னுடைய பிரயாசைக்குத் தக்கபடி நான் உனக்குப் பெருத்த சன்மானம் செய்கிறேன்; தயவுசெய்'' என்று கெஞ்சி மன்றாடிக் கூற, அதைக் கேட்ட கட்டாரித்தேவன் கலகலவென நகைத்து, ''அவள் பெருத்த மந்திரவாதியாயிற்றே. அவளாவது இனிமேல் உங்களிடம் திரும்பி வருவதாவது. வருகிறவளாக இருந்தால் அவள் இந்நேரம் திரும்பி வந்திருக்கமாட்டாளா? இனி நீங்கள் உங்களுடைய ஆயிசுகாலம் முடிய இங்கே

உட்கார்ந்திருந் தாலும் அவள் வரப்போகிறதில்லை. நிற்பதில் உபயோகம் ஒன்றுமில்லை. வாருங்கள் போகலாம்'' என்றான்.

அதைக்கேட்ட இளவரசர் கரைகடந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்து, ''என்ன ஆச்சரியம்! அவள் மந்திரவாதி தானா? உனக்கு நிச்சயமாகத் தெரியுமா? அப்படியானால், அவள் என்னை இங்கே எதற்காக வரவழைத்தாள்? அப்படி வரவழைத்ததைப்பற்றி எழுத்து மூலமான மன்னிப்பு வாங்கிக்கொண்டு போகவேண்டிய காரணமென்ன? எனக்கு ஒன்றும் நன்றாக விளங்கவில்லையே!'' என்றார்.

கட்டாரித்தேவன், ''எனக்கு எவ்வித விவரமும் தெரியாது. நீங்கள் எந்த விஷயத்தையும், என்னிடத்தில் கேட்பதில் பயனில்லை. அவள் உங்களை எதற்காக வரவழைத்தாளோ, அது அவளுக்குத்தான் தெரியவேண்டும். அவள் மன்னிப்புத்தான் எழுதி வாங்கினாளோ, வேறே பெரிய சங்கதி எதாகிலும் எழுதி அதில் உங்களுடைய கையெழுத்து வாங்கினாளோ, அதுவும் அவளுக்குத்தான் தெரிய வேண்டும். ஆனால், உங்களை இப்போது உங்களுடைய பாதையில் கொண்டுபோய் விடும் காரியம் ஒன்றுதான் எனக்குத் தெரியும்'' என்றான்.

அதைக்கேட்ட இளவரசர் கனவில் இருப்பவரைப் போல மயங்கிக் கலங்கி திக்பிரமைகொண்டு நின்று, ''அவள் எழுதிக் காட்டிய மன்னிப்பை நான் வாசித்துப் பார்த்தேனே! அதில் எவ்வித வித்தியாசமும் தெரியவில்லையே!'' என்றார்.

கட்டாரித்தேவன், ''அதுதான் சாமர்த்தியம். எவ்வித வித்தியாசமும் தெரியாதபடி ஏமாற்றுவதுதான் சரியான தந்திரம். அது அந்தப்பெண்ணின் புத்திசாலித்தனத்தையும் மகாராஜாவின் முட்டாள்தனத்தையும் காட்டுகிறதேயன்றி வேறல்ல. அது எப்படியாவது போகிறது. இனி நான் உங்களோடு பேசத் தயாராக இல்லை. பேச்சு இவ்வளவோடு நிற்கட்டும். வரலாம்'' என்று கண்டித்துப் பேசினான்.

உடனே இளவரசர், ''அடேய்! நீ செய்யும் உதவியை நான் எப்போதும் மறக்கமாட்டேன். இவள் யார் என்பதையும், எங்கே இருப்பவள் என்பதையும் என்ன கருத்தோடு என்னை இங்கே வரவழைத்தாள் என்பதையும் நீ வெளியிடுவாயானால் நான் உனக்கு பதினாயிரம் ரூபாய் இனாம் தருகிறேன். அது போதாவிட்டால் பதினைந்தாயிரம் வேண்டுமானாலும் தருகிறேன்'' என்றார்.

கட்டாரி, ''மகாராஜா பதினைந்தாயிரம் கொடுத்தால் இவர் அதற்கு இரட்டித் தொகையான முப்பதாயிரம் ரூபாய் கொடுக்கத் தயாராக இருப்பாள். ஆகையால், உங்களிடத்தில் நான் ஒப்பந்தம் செய்துகொள்வதைவிட இவளிடத்தில் ஒப்பந்தம் செய்துகொள்வதே லாபமானது. ஆகையால், என்னுடைய வாயிலிருந்து நீங்கள் ஒரு வார்த்தைகூட வருவிக்க முடியாது. நீங்கள் மகாராஜாவாயிற்றே என்கிற மரியாதைக்காக நான் இவ்வளவுதூரம் பொறுத்து உங்களிடத்தில் பேசினேன். இனி நான் பலவந்தமாக உங்களை அழைத்துப் போகும்படியாக இருக்கும். அப்படிப்பட்ட இழிவான காரியத்தில் நான் இறங்காமல் மகாராஜா தயவுசெய்து தாமாகவே மரியாதை யாக நடந்து வெளியில் வரவேண்டும். இது உறுதியான வார்த்தை நடவுங்கள்'' என்று கண்டித்து நிர்த்தாக்ஷண்யமாகப் பேசினான்.

அதற்குமேல் இளவரசர் வாய்திறந்து பேசாமல், அந்த மேன்மாடத்தை விட்டுக் கீழே இறங்கலானார். இரண்டொரு நிமிஷ நேரத்தில் கட்டாரித்தேவனும் இளவரசரும் படிகளை விட்டிறங்கி மருங்காபுரி ஜெமீந்தார் முதலியோர் இருந்த இருட்டறைக்கு வந்து சேர்ந்தனர். கட்டாரித் தேவனும் மற்ற முரட்டுமனிதரும் இளவரசர் முதலிய நால்வரையும் அழைத்துக்கொண்டு அந்த அறையை விட்டு வெளியிலே வந்து அவ்விடத்தில் ஆயத்தமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெட்டி வண்டிக்குள் முன்போல அவர்கள் நால்வரையும்

உட்கார வைத்து கதவுகளையும், பக்கப்பலகைகளையும் மூடி இருளுண்டாக்கினர். உடனே வண்டி புறப்பட்டுப் போகத் தொடங்கியது. அந்த முரட்டு மனிதர்களுள் சிலர் வண்டிக்கூண்டின் மேலும் முன்புறத்திலும் உட்கார்ந்திருப்பதாகத் தெரிந்தது. அந்த வண்டி வந்த வழியாகவே திரும்பி விரைவாய்ப் போகத் தொடங்கியது. அவ்வாறு அது இரண்டொரு மைல் தூரம் போவதற்குள் வண்டியின் மேலிருந்த முரட்டு மனிதர்களின் தொகை குறைவாகத் தோன்றியது. கடைசியாக வண்டி நெடுந்தூரம் போய் நின்றுவிட்டது. வண்டிக்குள்ளிருந்த இளவரசரும் ஜெமீந்தாரும் மற்ற இருவரும் வாய்திறந்து பேசவும் அஞ்சியவர்களாய், அந்த முரட்டு மனிதர்கள் தங்களை எவ்விடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்ற ஐயமும் அச்சமும் கொண்டு தவித்திருந்ததன்றி அவர்களது தலைவன் வந்து கதவைத் திறப்பான் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறு கால்நாழிகை நேரமும் சென்றது. எவனும் வந்து கதவைத் திறக்கவுமில்லை. அந்த வண்டியின்மீது மனிதர் இருந்த ஓசையாவது, கிசுகிசுவென்று பேசிக்கொண்டதால் அதற்குமுன் உண்டான ஓசையாவது புலப்படவில்லை. இளவரசர் மிகுந்த வியப்படைந்து மெதுவாகத் திரைகளை விலக்கிவிட்டு ஒரு பக்கத்துக் கதவைத் திறந்து தலையை வெளியில் நீட்டிப் பார்த்தார். வண்டி ராஜபாட்டையின்மேல் தனியாக நின்று கொண்டிருந்ததேயன்றி, மனிதர் அவரது திருஷ்டியில் படவில்லை. உடனே இளவரசர் எழுந்து வண்டியை விட்டுக் கீழே இறங்கி நாற்புறங்களிலும் திரும்பிப் பார்க்க, அந்த முரட்டு மனிதர்களுள் ஒருவனாகிலும் அங்கே காணப்படவில்லை. வண்டியை ஓட்டும் சாரதி உட்காரும் இடமும் காலியாக இருந்தது. அவர் உடனே அந்த ராஜபாட்டையின் இருபுறங்களையும் உற்று நோக்கி, அதே இடத்தில் அதற்குமுன் அந்த முரட்டாள்கள் தங்களைப் பிடித்து பலவந்தமாக அழைத்துக்கொண்டு போனார்கள் என்பதை உணர்ந்து

கொண்டார். ஆகவே, அந்த முரட்டு மனிதர்கள் தங்களைத் தங்களுடைய பாட்டையில் கொணர்ந்து சேர்த்து விட்டு, ஓடிப்போய்விட்டார்களென்பதை இளவரசர் யூகித்துக் கொண்டவராய், தமது ஆட்கள் இருவரையும் வெளியில் அழைத்து வண்டியை மறுபடியும் தஞ்சைக்கு ஓட்டும்படி உத்தரவு செய்துவிட்டு, வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். உடனே வண்டி தஞ்சையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. அந்த வண்டிச் சுவடு போன வழியாகவே சென்று அவர்கள் தங்களைக் கொண்டு போன மாளிகையின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கலாமென்ற நினைவு அவரது மனதில் உண்டான தானாலும் அந்தப் பாதை கப்பிக் கல்லினாலான இறுகிய கட்டாந்தரைப் பாதையாகையால், அதன் மேல் வண்டிச்சுவடே காணப்படாமல் இருந்ததனால் அவர் அந்த எண்ணத்தின்படி நடக்கமுடியாமல் போனது. ஆகவே, பொழுது விடிவதற்குள் தாம் தமது அரண்மனைக்குப் போய்விட வேண்டுமென்ற அவாவைக் கொண்டவராய், இளவரசர் வண்டியை விசையாக ஓட்டும்படி சாரதிக்கு உத்தரவு பிறப்பித்தார். அவ்வாறே அவன் குதிரைகளை முடுக்கி நாற்கால் பாய்ச்சலில் ஓட்டிக்கொண்டி ருந்தான். அப்போதே இளவரசரும் ஜெமீந்தாரும் வாய்திறந்து ஒருவரோடொருவர் பேசத்தொடங்கி, தத்தமக்கு நேர்ந்த விஷயத்தை வெளியிடத் தொடங்கினர். நெடுநேரமாக அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் பேசி, விவரங்களை அறிந்துகொள்ள ஆவலுற்றிருந்தனர். ஆனாலும், தங்களது வண்டிக்காரன், காசாரி ஆகிய இருவரும் உள்ளே இருப்பதையும் முரட்டுமனிதர்கள் வெளியிலே இருப்பதை யும் கருதி, அவர்கள் தங்களது அவாவை அடக்கிக் கொண்டிருந்து தனியாக இருக்க நேர்ந்தவுடனே சம்பாஷிக்க லாயினர். ஜெமீந்தார் சொன்னது மிகவும் சுருக்கமானதாக இருந்தது. ஆனாலும், அது இளவரசரது மனத்தில் அளவிறந்த வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கி அவர் அந்தப் பார்சீ ஜாதிப் பெண்ணைப் பற்றி மதிப்பாகவும் இன்பகரமாகவும்

எண்ணியிருந்த எண்ணத்தையெல்லாம் மண்ணாகச் செய்தது. அதுவரையில் இளவரசர் அந்த முரட்டாள்கள் கொள்ளைக்காரர் களல்லரென்றும், அந்த மடந்தையின் பொருட்டுத் தங்களைப் பலவந்தமாகக் கொண்டு போவதைத் தவிர வேறு எவ்வித நோக்கமும் இல்லாதவர்கள் என்றும் எண்ணியிருந்தார். அவர்கள் வழிப்பறி செய்யும் கள்வரென்பதை உணரவே அந்தப் பெண்ணும் அவர்களைச் சேர்ந்தவள் என்பதும், அவள் தம்மிடத்தில் அந்தரங்கமான காதல்கொண்டிருப்பதாகவும் வேறு பலவாறாகவும் அவள் தெரிவித்த சங்கதியெல்லாம் கட்டுக்கதையென்பதும் இளவரசருக்குத் தெளிவுபட்டன. ஆகையால், அவள் தம்மை ஏமாற்றிவிட்டுத் திடீரென்று மாயமாக மறைந்துபோனபிறகும் அவரது மனத்தில் தணியாமல் கொந்தளித் தெழுந்துகொண்டிருந்த மோகவெறி, இந்தப் புதிய செய்தியைக்கேட்க, சடக்கென்று தணிவடைந்தது. இருந்தாலும் அவளது ஜாஜ்வல்லியமான அழகும், வசீகரத் தோற்றமும், புத்தி நுட்பமும், வாக்குநயமும், இன்பமயமான வடிவமும் அவரது உணர்வைவிட்டு விலகாமல் உறுதியாகப் பதிந்து அப்போதும் அவரது அறிவையும் பஞ்சேந்திரியங்களையும் மயக்கி உருக்கி ஆனந்தவெறியில் ஆழ்த்திக்கொண்டி ருந்தமையால், இளவரசர் தாம் அந்த முரட்டுமனிதனோடு தனியாகப் பிரிந்துபோய் மேன்மாடத்தை அடைந்ததுமுதல், மறுபடியும் திரும்பி வந்தவரையில் நிகழ்ந்த வரலாறு முழுதையும் அப்படியே எடுத்துக்கூற மருங்காபுரி ஜெமீந்தார் மிகுந்த வியப்பும், திகைப்பும், ஆனந்தமும் கொண்டவராய் நிரம்பவும் சிரத்தையாக அதைக் கேட்டு வந்தார். அந்த மின்னாளின் தேஜோமயமான கட்டழகையும், காந்தியையும், அலங்காரச் சிறப்பையும், குணாதிசயங்களையும் இளவரசர் எடுத்துச் சொன்னபோது அந்த ஜெமீந்தாரது மனதும் தேகமும் ஆனந்த சாகரத்தில் மூழ்கியதன்றி அவரது நாக்கிலும் அமிர்தரசம் அப்போதும் ஊறிப் பெருக்கெடுத்தது. ஆனால், அவள் முடிவில் மாயமாக மறைந்துபோனாளென்ற

செய்தியைக் கேட்க, அளவிறந்த கலக்கமும், அநுதாபமும் அடைந்தவராய்ச் சிறிது நேரம் வாயைத் திறந்து பேசமாட்டாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தபின், ''தாங்கள் சொல்லுவது எவரும் என்றைக்கும் கேளாத ஆச்சரியமாக இருக்கிறதே! அவ்வளவு பிரமாதமாக தங்களிடத்தில் அவள் பிரேமை வைத்திருப்பதாகச் சொல்லி, எவ்வளவோ பாடுபட்டுத் தங்களுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொண்டவள் அப்படி மறைந்து போகவேண்டிய காரணம் இன்னதென்பது கொஞ்சமும் விளங்கவில்லையே! அப்படிச் செய்ததில் அவளுடைய அந்தரங்கமான கருத்து என்னவாக இருக்கும் என்பதே யூகிக்க முடியாததாக இருக்கிறதே! அவள் தங்களிடத்தில் நடந்து கொண்டவரையில் அவளிடத்தி நாம் எவ்வித சம்சயமும் கொள்ள இடமே இல்லாதிருக்கிறதே! ஒருவேளை இந்தத் திருடர்கள் நம்மைக் கொள்ளையடித்ததோடு, கடைசியில் அவளையும் கொள்ளையடித்து அவளுக்கு ஏதேனும் தீங்கு செய்துவிட்டு ஓடிப்போயிருப் பார்களோ! நமக்கு இன்று நடந்த சம்பவம் முழுதும் சொப்பனத்தில் கண்டகாட்சி போல இருக்கிறதேயன்றி வேறல்ல. ஆனால் இதில் ஒரு தாரதம்மியம் பார்த்தீர்களா? உங்களுக்கு நல்ல முதல் தரமான பார்சீ ஜாதிப்பெண்ணின் தரிசனம் கிடைத்தது. அவளுடைய சிநேகமும் அன்னியோன்யமான பழக்கமும் ஏற்படா விட்டாலும் அவளைப் பார்ப்பதும், அவள் உங்களோடு பேசுவதுமான எவருக்கும் கிடைக்காத இன்பமாவது உங்களுக்குக் கிடைத்ததே; அது எவ்வளவு பெரிய லாபம் பார்த்தீர்களா? எனக்கென்ன கிடைத்தது? என் மேலிருந்த நகைகளும் பணமும் போனதன்றி ரகசியமான காகிதங்கள் எல்லாம் அவர்களுடைய வசத்தி லகப்பட்டுக் கொண்டி ருக்கின்றன. எங்கே போனாலும் அவரவர்களுடைய அதிர்ஷ்ட மும் கூடவே தொடர்ந்து வருகிறது பார்த்தீர்களா?'' என்றார்.

இளவரசர் புன்னகை செய்தவராய், ''அது இருக்கட்டும்; அவள் எப்படித்தான் மறைந்துபோயிருப்பாள் என்பது

தெரியவில்லையே! அதுபோனாலும் போகட்டும் என்றால், நாம் அம்மன்பேட்டைக்கு வந்திருக்கிறோம் என்பதை அறிந்து ஆள்களைவிட்டு இவ்வளவு சாமர்த்தியமாக நம்மைக் கொண்டுவரச் செய்தவள் தன்னுடைய வரலாற்றையெல்லாம் சொல்லிவிட்டு என்னுடைய மன்னிப்பையும் எழுதி வாங்கிக் கொண்டு போகவேண்டிய காரணமென்ன என்பது தெரியவில்லையே; உமக்குப் போனதுபோல என்னிடத்தில் இருக்கும் சொத்துக்களையெல்லாம் அவர்கள் பிடுங்கிக் கொண்டு அதோடு நம்மை விட்டிருந்தால்கூட அதைப்பற்றி எனக்குக் கொஞ்சமும் விசனமும் உண்டாயிருக்காது. இவ்வளவு பிரமாதமாக என் மதியை மயக்கி, என்னுடைய ஆசையைக் கிளப்பிவிட்டுக் கடைசியில் போய்விடுகிற தென்றால், அது சகிக்க முடியாத விசனமாக அல்லவா இருக்கிறது. அவள் என்னை வஞ்சமாக ஏமாற்றிவிட்டுப் போயிருந்தால், அதைவிட அதிகமான அவமானமும் வெட்கக்கேடும் உண்டாகப் போகிறதில்லை. அப்படி இல்லாமல் திடீரென்று ஏற்பட்ட அபாயத்தினாலோ, அல்லது, வேறே தக்க காரணத்தினாலோ அவள் மறைந்து போயிருந்தால், அதைப்பற்றி நாம் அவள் மேல் வருத்தம் கொள்ளவாவது, அவளைப்பற்றி இழிவான அபிப்பிராயம் கொள்ளவாவது நியாயமே இல்லை. எப்படியிருந்தாலும், அவளைத் தேடிப்பிடித்து இன்னொரு தரம் பார்க்காவிட்டால் என்னுடைய தாகவிடாய் தணியாதுபோல இருக்கிறது. அவள் நம்மை வஞ்சித்திருந்தால் நாம் அவளுக்குத் தகுந்த சிக்ஷை நடத்தியே தீரவேண்டும். அல்லது, அவளை மீறிய காரணத்தினால், அவள் மறைந்துபோயிருந்தால், நாம் அவளை மறுபடியும் கண்டு, எனக்கும் அவளுக்கும் பரஸ்பரம் ஏற்பட்டுள்ள காதலின் பலனை நாங்கள் அடைந்தே தீரவேண்டும். ஆகையால், நாம் இந்த விஷயத்தை இவ்வளவோடு விட்டுவிடாமல், பலவகையில் முயற்சி செய்து அவளைக் கண்டுபிடிக்கும் மார்க்கத்தைத் தேட வேண்டும். இந்த விஷயத்தில் எல்லாம்

உமக்குத்தான் அநுபோகம் அதிகம். அதுவும் தவிர, இந்த விஷயத்தில் என் பெயர் வெளியில் வராமல் வேலை செய்ய வேண்டும். ஆகையால், இதற்குத் தகுந்த ஆள்களைப் பிடித்து இந்த விஷயத்தைப் பக்குவமாக அவர்களுக்கு நீரே சொல்லவேண்டும். என்ன சொல்லுகிறீர்?'' என்றார்.

அதைக்கேட்ட மருங்காபுரி ஜெமீந்தார், ''நீங்கள் சொல்வதெல்லாம் நியாயமான சங்கதிதான். ஆனால், இந்த விஷயத்தில் முயற்சி செய்ய நமக்குச் சாவகாசந்தான் அகப் படாது போலிருக்கிறது. நாமெல்லோரும் சேர்ந்து ஏற்கெனவே ஒரு பந்தயம் வைத்திருக்கிறோம். நம்முடைய கவனமெல்லாம் இப்போது அந்தப் பூர்ணசந்திரோதயத்தை ஜெயிக்கும் விஷயத்தில் செல்லவேண்டியிருக்கிறது. ஆகையால், இந்த வாரம் முழுதும் கழிந்துபோனால், பூர்ணசந்திரோதயத்தின் விஷயம் ஒருவிதமாகத் தீர்ந்து போகும். உடனே நான் என்னாலான முயற்சி செய்து இவள் இருக்குமிடம் முதலிய விவரங்களைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்கிறேன். அது உதவாதென்று நீங்கள் கட்டாயப்படுத்தினால், நான் இன்னொரு ஏற்பாடு சொல்லுகிறேன். தாங்கள் அதற்கு இணங்குவதானால், நான் இன்று முதலே இந்த விஷயத்தில் முயற்சி செய்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட இளவரசர், ''ஆறின கஞ்சி பழங்கஞ்சி ஆகிவிடும். இந்த ஒருவாரம் முழுதும் நாம் இந்த விஷயத்தைப் பேசாமல் விட்டுவிட்டால், அதன்பிறகு அசிரத்தை ஏற்பட்டுவிடும். இவ்வளவு அருமையான பெண்ணை அப்படி விட்டுவிட எனக்கு இஷ்டமில்லை. நீர் என்னவிதமான ஏற்பாட்டைச் சொன்னாலும் அதன்படி நான் நடந்து கொள்ளு கிறேன். நீர் இந்த நிமிஷம் முதலே இவளுடைய விஷயத்தில் முயற்சி செய்யவேண்டியதே முக்கியமான காரியம்'' என்று நயமாக வற்புறுத்திக் கூறினார்.

உடனே ஜெமீந்தார் இளவரசரை நோக்கி, ''அப்படியே

செய்யத் தடையில்லை. தங்களுக்கு எப்படி இந்தப் பார்சீ ஜாதிப் பெண்ணை விட மனசில்லையோ, அதுபோல, எனக்கு அந்தப் பூர்ணசந்திரோயத்தைவிட மனமேயில்லை. ஆகையால், நான் இன்றுமுதல் என்னுடைய முழு கவனத்தையும் இந்த விஷயத்தில் செலுத்தி, தக்கமுயற்சி செய்து, இவளைத் தாங்கள் அடையும்படி செய்கிறேன். தாங்கள் தங்களுடைய கவனத்தை யெல்லாம் செலுத்தி முயற்சி செய்து பூர்ணசந்திரோதயத்தை ஜெயித்து எனக்குக் கொடுத்து விடுங்கள். இரண்டு பேரையும் நீங்களே அடையப் பிரியப்பட மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதுவும் தவிர, பூர்ணசந்திரோதயத்தின் விஷயத்தில் நாங்கள் பகீரதப்பிரயத்தனம் செய்வதாக வைத்துக்கொண்டாலும், தாங்கள் சொற்ப பிரயாசை எடுத்துக்கொண்டால்கூட, வெற்றி தங்களுக்குத்தான் ஏற்படும். அப்படியிருக்க, நான் அந்த விஷயத்தில் சுத்தமாக முயற்சியே செய்யாமல் சும்மா இருந்துவிட்டால், எனக்கு ஜெயம் கிடைக்குமென்று நான் கனவில்கூட நினைக்கமுடியாது. அப்படியானால், இந்தப் பந்தயத்தில் நான் சேர்ந்திருப்பதற்கும் சேராமலிருப்பதற்கும் வித்தியாசமே இல்லை. ஆகையால், அந்த விஷயத்தில் தாங்கள் பிரயாசைபட்டுக் காரியத்தை எனக்கு அனுகூலப்படுத்தி வையுங்கள். நான் என்னாலான வரையில் முயன்று இதை முடித்து வைக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட இளவரசர் சிறிதுநேரம் யோசனை செய்து, ''நீர் சொல்லும் சங்கதி நியாயமாகத்தான் இருக்கிறது. உம்முடைய ஏற்பாட்டை நான் ஒப்புக்கொள்ளவும் தடையில்லை. எனக்கு இந்தப் பார்சீ ஜாதிப் பெண் கிடைப்பதாக இருந்தால், நான் அந்தப் பூர்ணசந்திரோதயத்தின் மேல் கொண்ட ஆசையை விலக்கிவிடவும் சம்மதம்தான். ஆனால் அவளுடைய மனசை என்மேல் திருப்புவதற்கு நான் முயற்சிக்காமல் வேண்டுமானால் சும்மா இருக்கலாம்; அவளுடைய மனசை உம்மீது எப்படித் திருப்புவதென்பது எனக்குத் தெரியவில்லையே! அவள் பணத்துக்காகக் காதலிக்கும் தாசியாக இருந்தால், நான்

சொல்வதை எல்லாம் அவள் செய்வாள். அவள் என்மேல் உண்மையான காதல்கொண்டு தானாகக் கனிந்து வருவாளானால், அவளிடத்தில் நான் இப்படிப்பட்ட செய்தியைச் சொல்வது ஆண்மையல்ல. அவளும் என் சொற்படி நடக்கமாட்டாள். அந்த ஒரு விஷயம்தான் பெருத்த இடையூறாக விருக்கிறது'' என்றார்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், ''வாஸ்தவந்தான். இருந்தாலும், இந்த விஷயங்களில் தங்களுக்குத் தெரியாத யோசனையை நானா சொல்லிக்கொடுக்கப் போகிறேன். தாங்கள் பார்த்து மனசு வைத்தால், எப்படியாவது சமயோசிதமாக நடந்து தந்திரம் செய்துவிட முடியும். அவ்வளவு அபாரமான சாமர்த்தியம் தங்களிடத்தில் இருக்கிறது. அந்தப் பூர்ணசந்திரோதயத்தை கலியாணபுரம் மிட்டாதார் முதலிய எவரும் அடையாமல் நாம் செய்துவிட வேண்டியது முதல் காரியம். அதுவே ஓர் ஆனந்தம். வெளிப்பார்வைக்குத் தாங்களே ஜெயித்ததாக இருக்கட்டும். பந்தயப் பணமாகிய முப்பதினாயிரம் ரூபாயை நான் தங்களுக்கே கொடுத்துவிடுகிறேன். உள்வயணமாகத் தாங்கள் அவளை மாத்திரம் எனக்குக் கொடுத்துவிடுங்கள். இப்படிச் செய்வது தங்களுக்கு ஒரு பொருட்டல்ல. தங்களுக்கு மற்றவர்களுடைய சிநேகத்தைவிட என்னுடைய பழைமை யான சிநேகிதம். நாமிருவரும் இதைவிட அதிசயமான எத்தனையோ காரியங்களை இதுவரையில் செய்திருக்கிறோம். ஆகையால், தங்களுடைய கண்ணியத்துக்கும் ஆண்மைத்தனத் துக்கும் பழுதுவராமல் தாங்கள் இந்தக் காரியத்தை முடித்து வைப்பீர்களென்ற ஒரு நம்பிக்கை எனக்கு உண்டு'' என்றார்.

அதைக்கேட்ட இளவரசர் சிறிது நேரம் யோசனை செய்தபின் ஜெமீந்தாரைப் பார்த்து, ''சரி; அந்த விஷயத்தில் நான் என்னுடைய ஜெயத்தை உமக்கு மாற்றி வைத்து விடுவதாக வைத்துக்கொள்வோம். இந்தப் பார்சீ ஜாதிப்பெண் எங்கே இருக்கிறாள் என்பதை நீர் எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறீர்?

அவர்கள் செய்த தந்திரத்தைப் பார்த்தால், அவர்கள் யார் என்பதை நாம் எளிதில் கண்டுபிடிக்க இடங்கொடுக்காமல் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு அவர்கள் நடந்து கொள்ளுவார்கள் என்பதைப்பற்றிக் கொஞ்சமும் சந்தேக மில்லை. அப்படியிருக்க, மகா பூடகமாக இருக்கும் இந்த விஷயத்தில் நீர் என்ன விதமான முயற்சி செய்யப் போகிறீர்?'' என்றார்.

ஜெமீந்தார் இளவரசரைப் பார்த்துப் புன்னகை செய்து, ''புதன்கிழமை தினம் எங்கேயும் வெளியில் போகாமல் நான் என்னுடைய ஜாகையிலேயே இருந்தால், என்னுடைய தினசரி டைரிப் புஸ்தகத்தைக் கொண்டு போவதாக, இந்தத் திருடன் சொல்லியிருக்கிறான். மிகவும் தந்திரசாலியான ரகசியப் போலீஸ்காரன் ஒருவனை அமர்த்தி அவனை இந்தத் திருடனுக்குத் தெரியாமல் வெளியில் வைத்திருக்கப் போகிறேன். இந்தத் திருடன் வந்து பணத்தை வாங்கிக்கொண்டு போகும்போது, அந்தப் போலீஸ் காரனும், இவனுக்குத் தெரியாமல் தொடர்ந்துபோய், திருடனுடைய ஜாகையைக் கண்டுபிடிக்கும்படி செய்யப்போகிறேன். அதோடு என்னிடத்திற்கு வரும் திருடனுக்கும் ஏராளமான பணம் கொடுத்து இவன் மூலமாகவும் உண்மையைக் கிரகிக்கப் போகிறேன். இந்த இரண்டு வழியிலும் முயன்று எப்படியாகிலும் தேடிப்பிடித்து அவளுடைய இருப்பிடத்தைக் கண்டு அவளைச் சரிப்படுத்தி தங்களுடைய வசத்தில் நான் ஒப்புவிப்பேன் என்பதைத் தாங்கள் நிச்சயமாக நம்பலாம். பூர்ண சந்திரோதயம் எனக்குக் கிடைக்கப் போகிறாள் என்ற உறுதி ஏற்பட்டால், அந்த உற்சாகத்தில் நான் மலையைக் கூடப் புரட்டி விடுவேன். அவள் எனக்குக் கிடைக்கமாட்டாள் என்ற எண்ணம் என் மனசில் வருத்திக்கொண்டே இருக்க, நான் இந்தப் புதிய விஷயத்தில் இறங்குவேனானால், அவ்வளவு ஊக்கம் ஏற்படாது'' என்றார்.

இளவரசர், ''சரி; நீர் செய்யப்போவது நல்ல யுக்திதான். ஆனால், இந்தத் திருடனுக்கு எவ்வளவோ பணம் கொடுப்பதாக நான் சொல்லிப் பார்த்துவிட்டேன். இவனை அசைக்க முடியாமல் போய்விட்டது. ஆகையால், இவன் உமக்கும் மசியமாட்டான் என்றே நினைக்கிறேன். இருந்தாலும், இன்னொரு தரம் முயற்சி செய்து பார்ப்பதில் நஷ்டமொன்று மில்லை. ஆனால், அந்தப் போலீஸ்காரனைக்கொண்டு செய்யப் போவதாகச் சொன்ன தந்திரம் பலிக்கலாம் என்று நினைக்கிறேன். அந்த வழியில் முயற்சித்துப் பார்க்க வேண்டியதைத் தவிர, வேறே வகையில்லை. ஆனால், என்னுடைய பெயரையே நீர் இந்தப் போலீசாரிடத்தில் எடுக்கக் கூடாது'' என்றார்.

ஜெமீந்தார், '' அந்த விஷயத்தைத் தாங்கள் எனக்குச் சொல்லவும் வேண்டுமா? தங்களோடு இதுவரையில் பழகாத புதிய மனிதனுக்குச் சொல்லுவதுபோலப் பேசுகிறீர்களே'' என்றார்.

உடனே இளவரசர், ''நிரம்ப சந்தோஷம். நீர் உம்முடைய முழுக் கவனத்தையும் இந்த விஷயத்தில் செலுத்தி என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து, இந்தப் பார்சீ ஜாதிப் பெண்ணின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து, இவளுடைய கருத்தையறிந்து, இவள் என்னை அடையும்படி செய்யவேண்டியது உம்மைச் சேர்ந்த பொறுப்பு. அதுபோல, நான் என்னாலான சாமர்த்தியத்தை யெல்லாம் உபயோகப் படுத்தி, பூர்ணசந்திரோதயத்தை வென்று, அவள் உம்மை அடையும்படி செய்யவேண்டியது என்னைச் சேர்ந்த பொறுப்பு. இந்த ஏற்பாடு நம்முடைய சிநேகிதர்களுக்குக் கூடத் தெரியக் கூடாது. ஆனால், நாம் அடிக்கடி சந்தித்து நம்முடைய பிரயத்தனம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதை நாம் ஒருவருக்கொருவர் அறிவித்துக் கொள்ள வேண்டும். அதற்கு நான் மனப்பூர்வமாக இணங்குகிறேன். இந்த உறுதி போதுமல்லவா?'' என்றார்.

மருங்காபுரி ஜெமீந்தார் மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, ''ஆகா! போதும். இந்த நிமிஷம் முதல் நான் அந்த ஒரு விஷயத்தைத் தவிர, சகலமான நினைவுகளையும் என்னுடைய மனசை விட்டு ஓட்டி விடுகிறேன். அதோ நம்முடைய கலியாணபுரம் மிட்டாதாருடைய மாளிகை இருக்கிறது. நாம் அங்கேபோய், அவருக்கும் பூர்ணசந்திரோதயத்துக்கும் நடந்த சம்பாஷணையின் முடிவை அறிந்து கொண்டு போவோம்'' என்றார். அதற்கு இளவரசர் இணங்க, அவர்களது பெட்டிவண்டி கலியாணபுரம் மிட்டாதாருடைய மாளிகைக்குள் நுழைந்தது.

## 8-வது அதிகாரம்

## காளையும் - கொம்பேறி மூக்கனும்

கலியாணபுரம் மிட்டாதார் தன்னை வழிமறித்துத் தனது பாதத்தடியில் உட்கார்ந்து கெஞ்சி மன்றாடியதைக் கண்ட பூர்ண சந்திரோதயம் தான் என்ன செய்வதென்பதை உணராதவளாய்ச் சிறிதுநேரம் தடுமாறி மௌனமாக நின்றாள். அவரது துணிகரமான செய்கையைக் கண்டு, அவள் கடுங்கோபமும் ஆத்திரமும் கொண்டவளாகத் தோன்றினாள் ஆனாலும், அவர் தக்க பெரிய தனிகர் என்பதைக் கருதி தனது பதைப்பை ஒருவாறு அடக்கிக்கொள்பவள் போல நடித்து அவ்விடத்தை விட்டு அப்பால் நகர்ந்து நின்று, அவரை நோக்கி அருவருப்பாகப் புன்னகை செய்து, ''ஐயா! என்ன இது? கல்லுளி மங்கன் வேலையா? அல்லது சண்டி வழக்கா? உமது சித்தக் கிறுக்கு, அல்லது, புத்திமாறாட்டம் அப்போதைக்கப்போது ஏற்படுவதுண்டா? முதலில் எழுந்திரும்; யாராவது வேலைக்காரர்கள் வரப் போகிறார்கள். அவர்கள் வந்தால், உம்முடைய பாடு ஆபத்தாக முடிந்துவிடும். உம்மைப்போன்ற பெரிய ஜமீந்தார்கள் மரியாதையான ஸ்தானத்தில் உட்கார்ந்து ஒழுங்காகப் பேசிவிட்டுப்

போகவேண்டியதன்றி, இப்படி ஆண்மையையும் மானத்தையும் விட்டு, ஒரு பெண்பிள்ளையின் காலைப் பிடிக்க எப்படித்தான் அந்த மனசு இணங்கியதோ தெரியவில்லையே! நீர் செய்த இந்த மகா கேவலமான காரியத்தைக் காண, என்னுடைய சர்வாங்கமும் குன்றிப் பதறிப் போய்விட்டதே. எழுந்திருமையா! காலைப் பிடித்துவிட்டது போதும், எனக்குக் கால் பிடித்துவிட எத்தனையோ தாதிகள் இருக்கிறார்கள். எழுந்து அந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு உம்முடைய மனசிலுள்ள கருத்து இன்னதுதா னென்பதை இரண்டே வார்த்தையில் சுருக்கமாகச் சொல்லும். நீர் உம்முடைய மனசில் நினைத்துக்கொண்டிருப்பது இன்னதென்று நான் அறிந்து கொள்ளுகிறேன்'' என்று கண்டிப்பாகவும் நயமாகவும் பேசினாள்.

அவளது வார்த்தைகள் ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவன போல இருந்தாலும், அவளது குரலின் நயமும் புன்னகையின் இனிமையும் அவளது எழில்வழிந்த அங்கங்களின் குலுக்கும் பிலுக்கும் ஒன்றுகூடி மோகனாஸ்திரங்கள்போலப் பாய்ந்து அவரது உணர்வைக் கலக்கி மதியை மயக்கிவிட்டன வாதலால், தாம் அவமானம் அடைந்துவிட்டதாக அவர் கொஞ்சமும் நினைக்காமல், தரையைவிட் டெழுந்து பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்து கொண்டார்.

அவரது மனதில் அந்த ஒரு நிமிஷ நேரத்தில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மின்னல்கள்போல மறைந்தன. தாம் அவ்வளவுதூரம் பணிவாகவும் உருக்கமாகவும் நயந்து வேண்டிக் கொண்டதைக் கண்டு அவளது மனம் இளகியிருக்குமோ? தமது இளகிய பார்வைகளும், கனிவான நன்னய மொழிகளும் அவளது மனத்தைக் கவர்ந்திருக்குமோ? வசீகரமான தளுக்கையும், வெளிப்பகட்டான பதிவிரதைக் குணத்தையும், பொய்த்தோற்றமான கோபத்தையும் கொஞ்ச நேரம் வரையில் காட்டி, தான் நல்ல குலஸ்திரீபோலவும்

உண்மையிலேயே கோபங் கொண்டவள் போலவும் நடித்துக் கடைசியில் அவள் தனது விருப்பத்திற்கு இணங்க நினைத்து அவ்வாறு செய்திருப்பாளோ? தான் அளவு கடந்து நடலம் செய்துவிட்டதாக அவள் உணர்ந்து இப்போது தன் மனதை உள்ளபடி வெளியிட நினைக்கிறாளோ? எளிதில் இணங்காமல், அகப் பிரயாசையின்மேல் இணங்கினால், அவளது வசீகரத் தன்மையும் மதிப்பும் இன்பமும் அதிகரிக்கும் என்ற நினைவினால், அவள் அவ்வாறு நடிக்கிறாளோ? அல்லது, அவள் உண்மையிலேயே சுத்தமான நடத்தையுடைய ஸ்திரீயாக இருந்தும், தம்மைக் கண்டிக்க லஜ்ஜைப்பட்டு அவ்வாறு தயங்குகிறாளோ? என்பவைபோன்ற எண்ணிறந்த சந்தேகங்களும் யூகங்களும் எழுந்தெழுந்து அவரது மனத்தை வதைக்கலாயின. முற்றிலும் கனவிலிருப்பவர் போலத் தோன்றிய கலியாணபுரம் மிட்டாதார் மயங்கித் தயங்கி மட்டுக் கடங்கா வியப்போடு அந்தப் பெண்மணியின் முகத்தை நோக்கி, அவளது வாயிலிருந்து எவ்விதமான சொல் வரப் போகிறதோ என்று மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்தவராய் அவள்மீது வைத்த விழியை எடுக்காமல் இருந்தார். அவளது நடை நொடி பாவனையிலிருந்தும், அவள் உள்ளொன்றும் புறமொன்றுமாக நடிக்கிறாள் என்றும், அவள் உண்மையான பதிவிரதையல்ல வென்றும், கண்டிப்பாக மறுத்துத் தம்மை அனுப்பிவிட அவள் கருதவில்லை என்றும், மிட்டாதாரது மனதில் எதனாலோ ஒருவிதச் சந்தேகம் உதித்துக்கொண்டே வந்தது. அவர் வியப்பும் திகைப்பும் கலக்கமும் அடைந்து அந்த மின்னாளை உற்று நோக்கியவண்ணம் மௌனமாக இருக்க, அதைக் கண்ட பூர்ணசந்திரோதயம் மறுபடியும் அவரை நோக்கி, ''நான் கடைசியாகக் கேட்ட கேள்விக்கு சீக்கிரம் மறுமொழி சொல்லும்; எனக்கு நேரமாகிறது. நான் போய் வேறொரு காரியத்தைக் கவனிக்கவேண்டும்'' என்றாள்.

அதைக் கேட்ட மிட்டாதார், "பெண்ணே! நான் என்ன மறுமொழி சொல்லப் போகிறேன்! நீதான் எனக்குச் சரியான வாக்குக் கொடுக்க வேண்டும். நீ இப்போது ஒரு பெரிய நியாயாதிபதியைப் போல இருக்கிறாய். என் விஷயத்தில் நீ எவ்விதமான தீர்மானம் சொல்லப் போகிறாயோ என்று நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன்னிடத்திலிருந்து வந்து மோதி என்னைப் பித்தனாக்கியிருக்கும் உன்னுடைய மோகனாஸ்திரங்களினால் கட்டுண்டு தத்தளிக்கும் என்மேல் நீ பூரணமான அருள் பாலிக்க வேண்டும். நீ சொல்லப்போகும் 'தீர்மானம் என்னை ஒரே நொடியில் சுவர்க்க லோகத்தில் வைத்தாலும் வைக்கும்; அல்லது, ஆயுட்காலம் முடியத் தீராத நரகவேதனையில் ஆழ்த்தினாலும் ஆழ்த்திவிடும். ஆகையால், என்னை ஆக்குவதும் அழிப்பதும் உன்னுடைய கையில் இருக்கிறது. ஆகையால், நீதான் என்னுடைய தெய்வம்; உன்னுடைய காலில் விழுந்து வணங்குவது எனக்குக் கொஞ்சமும் அவமானமாகவே தோன்றவில்லை" என்றார்.

அவரது சொற்களைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் அவரைப் பார்த்து இனிமையாகவும் ஏளனமாகவும் நகைத்து, "அன்னிய ஸ்திரீகளினிடத்தில் துராசை கொண்டிருக்கும் புருஷர்கள் அவர்களை மயக்கி வசப்படுத்துவதற்கு இப்படித்தான் வாய் கொண்ட மட்டும் ஸ்தோத்திரமாகப் பேசுவார்களென்று நான் பல தடவைகளில் கேள்வியுற்றிருக்கிறேன். அது சரியாக இருக்கிறது. கள் குடித்து வெறி கொண்டு பேசுகிறவனுடைய பேச்சுக்கும், மோகவெறி கொண்டு பேசுகிறவனுடைய பேச்சுக்கும், வித்தியாசமே கிடையாது. அவைகளுக்கு அர்த்தமும் கிடையாது. ஆகையால், இந்த வெறும் பேச்சுகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்க நான் தயாராக இல்லை. ஆகையால், எது காரியமோ

அதைப் பேசும் ; அநாவசியமான வார்த்தைகளை வளர்க்க எனக்கு நேரமில்லை'' என்று மிகவும் வசீகரமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட மிட்டாதார் புன்னகை செய்து, ''இரட்டை சந்தோஷம். எது காரியமோ அதைத்தான் நானும் விரும்பு கிறேன். வெறும் வார்த்தைகளில் எனக்கும் அவ்வளவு பிரியமில்லை. அதுவும், காதல்நோய் கொண்டு தவித்திருக்கும் மனிதனுக்கு அதற்கு எது மருந்தோ அது கிடைத்தாலன்றி, சங்கநிதி பதுமநிதி முதலிய பெருத்த தெய்வநிதிக் குவியல்கள் கிடைப்பதானாலும் திருப்தியும் பொறுமையும் உண்டாகுமா! ஆகையால், நானும் என் மனசை முற்றிலும் கவர்ந்துள்ள காதல் விஷயத்தைத் தவிர வேறே எதைப் பற்றியும் உன்னை வருத்தத் தயாராக இல்லை'' என்று கொஞ்சலாக மொழிந்தார்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகவும் நிதானமாகவும், அமர்த்தலாகவும் சலனமற்ற முகத்தோற்றத்தோடும் பேசத் தொடங்கி, ''அப்படியானால், உமக்கு என்மேல் அப்படிப்பட்ட ஆழ்ந்த காதல் உண்டாகியிருப்பது உண்மைதானா?'' என்று ஏதோ ஒருவித மனவுறுதியோடு வினவினாள்.

உடனே மிட்டாதார் கரைகடந்த உருக்கமும் நெகிழ்வும் மோகாவேசமும் கொண்டவராகப் பேசத் தொடங்கி, தமது வலக்கரத்தைத் தமது மார்பின்மீது வைத்து மிகவும் பரிதாபகரமாகத் தோன்றி, ''கண்ணே! நான் பிரமாண மாகச் சொல்லுகிறேன். நான் பிறந்தபிறகு இதுவரையில் வேறே எந்தப் பெண்ணினிடத்திலும் இவ்வளவு அபாரமான மோகம் ஏற்பட்டதே இல்லை. நீ என்னுடைய உயிரையே கேட்பதானாலும் நான் இந்த க்ஷணத்தில் எடுத்து உன்னுடைய பாதத்தடியில் வைக்கத் தடையில்லை. அதைப் பற்றி நீ எவ்விதமான உறுதியையோ ருஜுவையோ கேட்டாலும், நான் செய்து கொடுக்கத் தடையில்லை'' என்று கரைகடந்த மோகா வேசத்தோடு கூறினார்.

பூர்ணசந்திரோதயம் முன்போலவே நிதானமாகவும் அமர்த்தலாகவும் பேசத் தொடங்கி, "அப்படியானால் கொஞ்ச நேரத்துக்கு முன் நீர் என்னுடைய பஞ்சவர்ணக் கிளியைப் பிடித்து வாசலிலுள்ள வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பாமல் நீரே நேரில் உள்ளே வந்தது, என்னைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புவதாக என்னிடம் வெளியிட்டு, என்னை கௌரவிக்கும் எண்ணத்தோடு தானோ?" என்று வினவினாள்.

அவளது வார்த்தையைக் கேட்ட மிட்டாதார் வியப்பும் திகைப்பும் அடைந்து தமது கருத்தை அவள் தப்பாக உணர்ந்து கொண்டாளென்பது தோன்றவும் தமது அந்தரங்கமான எண்ணம் இன்னதுதான் என்பதை தாம் எப்படி வெளியிடுவது என்ற கவலை கொண்டவர் போலவும் அவளைப் பார்த்து, "என்ன! என்ன! கலியாணமா?" என்று ஆச்சரியமாக வினவினார்.

பூர்ணசந்திரோதயம் மிகுந்த வியப்பும் திகைப்பும் அடைந்தவளாகக் காணப்பட்டு, "நீர் இப்போது அதைப்பற்றித் தானே பேசினீர். என்மேல் பிரமாதமான காதல் கொண்டிருப்பதாகவும், என் பொருட்டு உயிரைக் கூடக் கொடுத்துவிடத் தயாராக இருப்பதாகவும் நீர் சொன்னீரே; அதன் கருத்தென்ன? பெரிய அந்தஸ்திலுள்ள உம்மைப்போன்ற ஒரு மனிதர், மகா பரிசுத்தமான நடத்தையுள்ளவளும், ஒரு மகாராஜாவின் புத்திரியுமான என்னிடத்தில் வந்து காதல் கொண்டிருப்பதாகத் தெரிவித்தால் அதன் கருத்து நீர் என்னை கிரமப்படி கலியாணம் செய்துகொள்ள ஆசைப் படுகிறீர் என்று தான் ஆகும். இதே வார்த்தைகளை நீர் ஒரு தாசியினிடத்தில் சொல்லியிருந்தால், அப்போது கலியாணம் என்ற அர்த்தம் தொனிக்காது; ஆகையால், நீர் என்னை குலஸ்திரீ என்று மதித்தீரா? அல்லது தாசியென்று மதித்தீரா?" என்றாள்.

அதைக் கேட்டவுடனே கலியாணபுரம் மிட்டாதார் திருட்டு விழி விழித்து, அசட்டு நகை நகைத்து, இன்ன மறுமொழி சொல்வதென்பதை உணராமல் பல்லைப் பல்லைக்காட்டி ஏதோ வார்த்தைகளைச் சொல்லியும் சொல்லாமல் அடக்கியும் தவித்து அவளை நோக்கி, ''நீ மகா சூட்சும புத்தியுடையவளாக இருக்கிறாய்; அப்படியிருந்தும், என்னுடைய சொல்லின் உட்கருத்தை அறிந்து கொள்ளாதவள்போல நடிக்கிறாயே! ஓர் ஆணும் பெண்ணும் ஒருவர் மேலொருவர் கடுங்காதல் கொண்டுவிட்டால், அவர்கள் கலியாணம் செய்து கொண்டால் தான் அந்தக் காதல் பலிதமாகுமென்று சொல்லலாமா? உண்மைக் காதலைத் தடுக்க எவரால் ஆகும்? ஒரு ஸ்திரீயினால் காதலிக்கப்பட்ட மனிதன் அவளைக் கிரமமாகக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாத நிலைமையில் இருக்கலாம். இப்போது எனக்கு வேறே ஒரு சம்சாரம் இருக்கிறாள்; அவளிடத்தில் எனக்கு உண்மையான காதலே கிடையாது. அது என்னுடைய தாய் தகப்பனாரால் ஏற்படுத்தப்பட்ட கால் கட்டு; இப்போது எனக்கு உன்னிடத்தில் ஏற்பட்டுள்ளதே உண்மையான காதல். ஏற்கெனவே ஒரு பெண்ஜாதி இருக்கிறாளே யென்று என் மனதில் இயற்கையாக பொங்கிப் பெருகும் வேட்கையை அடக்குவது சாத்தியமாகுமா? அப்படி நான் இந்தக் காதலை அடக்குவதாகவே வைத்துக்கொண்டாலும் இந்தக் காதல் முழுதும் இப்படியே என்னுடைய சம்சாரத்தின்மேல் திரும்பிவிடப் போகிறதா? என்னுடைய உண்மைக் காதலை நிறைவேற்றிக் கொள்ளும் விஷயத்தில் அவள் ஒரு பெருத்த இடையூறாக இருக்கிறாளே என்ற எண்ணத்தினால் அவளிடத்தில் வெறுப்பும் பகைமையும் தான் உண்டாகும்; என் மனசில் வேறே மனிதரிடத்தில் உண்டாகும் உண்மையான காதலை நான் சுயேச்சையாக நிறைவேற்றிக் கொள்வேனானால், தாலிகட்டின சம்சாரமாயிற்றே என்ற மதிப்பும் ஏற்கெனவே உள்ள பிரியமும் குறையாமல் இருக்கும். ஆகையால், மனிதன் ஒரே பெண்ஜாதியைத் தவிர வேரு ஒருத்தியை அடையக்

கூடாது என்று நிர்ப்பந்தம் செய்வதனால், கட்டின பெண் ஜாதிக்குத் துன்பமே யன்றி நன்மை யுண்டாகாது. ஆகையால், முட்டாள் ஜனங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள கலியாணம் என்ற பைத்தியக்காரத்தனமான கட்டுப்பாட்டை நான் ஒரு நாளும் இலட்சியம் செய்வதே இல்லை. நீ மகா விவேகி யாகையால் நீயும் இந்த விஷயத்தில் என்னைப்போலவே அபிப்பிராயப்படுவா யென்றே நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று மிகவும் நயமாகக் கூறினார்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகுந்த வியப்பும் திகைப்பும் பதைப்பும் கோபமும் கொண்டவளாகத் தோன்றி, ''ஐயா! நீர் இப்போது பேசிய வார்த்தைகளெல்லாம் காமாதுரர்களான துராத்மாக்களின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளே யன்றி, ஓர் நிர்ணயத்தில் நிற்கக்கூடிய மனோதிடமுடைய யோக்கியமான மனிதர் சொல்லத்தக்கவை யல்ல. நான் உம்முடைய சம்சாரத்தைவிட அதிக அழகாக இருப்பதால், இப்போது நீர் என்னிடத்தில் பிரமாதமான காதல் கொண்டிருப்பதாகவும், எனக்காக உயிரைக் கொடுத்து விடுவதாகவும் சொல்லுகிறீர்; நாளையதினம் என்னைவிட அதிகமான அழகுள்ள வேறொருத்தியைக் கண்டால் என்னைவிட்டு அவளைப்பிடித்துக் கொள்வீர். இப்படி அடிக்கடி மாறும்படியான சபலசித்தமுள்ள மனிதர்களை எந்த ஸ்திரீயும் நம்புவதும் காதலிப்பதும் கூடவே கூடாது. இப்படிப்பட்ட வர்களை எவரும் கலியாணம் செய்வதே தகாத காரியம். உமக்குச் சம்சாரமாக ஏற்பட்டிருக்கும் அந்தப் பெண் பூர்வ ஜென்மத்தில் என்ன பாவம் செய்தாளோ தெரியவில்லை. அதனாலேயே அவள் உமக்குப் பெண்ஜாதியாக வந்து மாட்டிக் கொண்டிருக்கிறாள். உம்மைப் பார்ப்பதும், உம்மோடு பேசுவதும் மகாகொடிய பாவம். ஆகையால், நீர் இவ்விடத்தை விட்டு மரியாதையாக வெளியில் போகப்போகிறீரா? அல்லது, உமக்கு வழிகாட்ட என்னுடைய வேலைக்காரனை அழைக்க வேண்டுமா? என்ன

சொல்லுகிறீர்? ஒரே வார்த்தை. மறுவார்த்தை இல்லை'' என்று மகா கண்டிப்பாகவும் கடூரமாகவும் பேசிக்கொண்டு யாரையோ கூப்பிட எண்ணுகிறவள்போல வாசலின் பக்கம் திரும்பினாள். அவள் சொன்ன வார்த்தைகளைக்கேட்டு மிகுந்த வெட்கமும், துக்கமும், கோபமும், பதைபதைப்பும் கொண்டவராகத் தோன்றிய கலியாணபுரம் மிட்டாதார் கதிகலங்கிப்போய் அவளை நோக்கி, ''என்ன பூர்ணசந்திரோதயம்! நீ உண்மையாகத் தான் இப்படிப் பேசுகிறாயா? அல்லது, இன்னமும் என்னைச் சோதிக்கிறாயா? நீ என்னை எவ்வளவுதான் வெறுத்தாலும் அலட்சியமாய்ப் பேசினாலும் நான் உன்னிடத்தில் வைத்துள்ள பிரேமை மாத்திரம் ஒருநாளும் குறையாது. உன்னுடைய உயிருள்ளவரையில், என்னுடைய உயிருள்ளவரையில் நான் உன்னை விடப்போகிறவனல்ல. எப்படியும் நான் உன்னை அடைந்தே தீரவேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டிருக்கிறேன். கிழக்கு மேற்காகப் போகும் சூரியன் தெற்கு வடக்காகப் போனால்கூட என்னுடைய உறுதி மாத்திரம் மாறாது. விண்ணுலகத்திலுள்ள சகலமான தேவதைகளின் பக்கபலமும் உனக்கிருந்து அவைகள் உன்னைக் காத்துக் கொண்டிருந்தாலும், என்னுடைய துஷ்டகணங்களின் உதவியைக் கொண்டு நான் என்னுடைய மனோரதத்தை நிறைவேற்றியே தீருவேன் என்பதை நீ திண்ணமாக எண்ணலாம். இப்போது என்னை நீ மிகவும் கேவலமாகவும் இளக்காரமாகவும் மதித்துப் பேசுவதைப் பற்றிப் பின்னால் நீயே விசனப்பட நேரிடும்; ஆகையால் எந்த விஷயத்தையும் இரண்டாந்தரம் எண்ணிச் செய்'' என்று நயமாகவும் பயமுறுத்தலாகவும் மறுமொழி கூறினார். அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் தனது முகத்தை ஒரு பக்கமாகச் சாய்த்து, கம்பீரமாகவும் அலட்சியமாகவும் அவரது பக்கம் திரும்பி அவரைக் கேவலம் ஒரு பதருக்குச் சமானமாகத் தான் மதிப்பவள் போல மிகவும் அருவருப்பாக அவரைப் பார்த்து, ''ஓகோ! அப்படியா! பயமுறுத்துகிறீரோ! இருக்கட்டும். நீர்

முகத்தில் மீசையுள்ள ஆண் பிள்ளையானால் உம்முடைய கைவரிசையைக் காட்டலாம். எங்கே நீர் என்னை அடைகிறீரோ வென்பதை நான் அறிகிறேன். நீர் சுத்த விளக்கெண்ணெய் மனிதராக இருக்கிறீர்; பதினைந்து வருஷமானாலும் ஓயாமல் இப்படியே வழவழ கொழகொழவென்று பேசிக் கொண்டே இருப்பீர்'' என்று கூறிவிட்டு வாசற்படியை நோக்கி, ''அடேய், யாரடா வேலைக்காரன்?'' என்றாள்.

அவள் உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசுகிறாளோ வென்று அதுவரையில் எண்ணி மனப்பால் குடித்துக் கொண்டிருந்த கலியாணபுரம் மிட்டாதார், அவள் உண்மையாகவே தன்னை வெறுத்து இளக்காரம் செய்கிறாள் என்பதை அப்போதே உணர்ந்தவராய் அதற்குமேல் தாம் அங்கே இருந்தால், தமக்கு அவமானம் நேருமென்று நினைத்து, ''சரி; நீ ஏராளமான வேலைக்காரர்களை வைத்திருக்கிறவள் என்பது எனக்குத் தெரியும். உன்னுடைய பெருமையை நீ வெளிப்படுத்திக்கொண்டது இவ்வளவோடு நிற்கட்டும். இன்னாரிடத்தில் வாலை ஆட்டுகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் நீ பேசுகிறாய்; இருக்கட்டும். அதிசீக்கிரத்தில் நான் உனக்கு நல்ல அறிவு பிறக்கும்படி செய்கிறேன்'' என்று கூறியவண்ணம் நாற்காலியை விட்டெழுந்து வாசற்படியை நோக்கி நடந்து அப்பால் சென்று கீழே இறங்கிப்போய்விட்டார்.

அவரும் பூர்ணசந்திரோதயமும் இருந்து சம்பாஷித்துக் கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்திலிருந்த ஓர் அறைக்குள் ஒளித்திருந்து அவர்களது சச்சரவு முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்த பணிப்பெண்ணான **தையனாயகி** என்பவள், மிட்டாதார் அந்த மாளிகையை விட்டு ராஜபாட்டைக்குப் போய்விட்டார் என்பதை உணர்ந்தவுடனே மகிழ்ச்சியும் புன்னகையும் பிரகாசித்த முகத்தோடு உள்ளேவர, அவளைக் கண்ட பூர்ணசந்திரோதயம் சந்தோஷமும் களிப்பும்

தோற்றுவித்த முகத்தினளாய்க் குலுங்கக் குலுங்க நகைத்து, ''அடி தையனாயகீ! எல்லாச் சங்கதியையும் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா? எப்படி இருக்கிறது நாடகம்?'' என்று வேடிக்கையாகக் கேட்ட வண்ணம் பக்கத்தில் இருந்த ஒரு ஸோபாவின் மீது சயனித்துக் கொண்டாள்.

உடனே அந்தப் பணிப்பெண் தனது எஜமானியின் கால்பக்கத்தில் ஸோபாவின் மீது உட்கார்ந்து, ''நான் எல்லாச் சங்கதியையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆள் சுத்தப் பெட்டை மோகினி பிடித்தவன்போல இருக்கிறான். இவன் போய் ஏதோ செய்து விடுவதாகப் பயமுறுத்தி விட்டுப் போயிருக்கிறான். போகட்டும் போகட்டும்'' என்று கூறிய வண்ணம் தனது எஜமானியின் காலைத் தொட்டு அன்பாக வருடத் தொடங்கினாள்.

அவர்கள் அங்ஙனம் இருக்க, அந்த மாளிகையை விட்டு வெளிப்பட்ட கலியாணபுரம் மிட்டாதார் தமது மனதில் பொங்கி யெழுந்த ஆத்திரத்தையும், பதைப்பையும், துக்கத்தையும் அடக்கிக்கொண்டவராய் ராஜபாட்டையை அடைந்து, இப்புறமும் அப்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்து, அவ்விடத்தில் ஏதாவது வாடகை வண்டி அகப்படுமோ வென்பதை கவனித்ததன்றி, தாம் எங்கே போகிறதென்று தீர்மானம் செய்யமாட்டாமல் தடுமாறி நின்ற சமயத்தில், எதிர்ப்பக்கத்திலிருந்த சத்திரத்திற்குள்ளிருந்து வெளிப்பட்ட ஒரு மனிதன், ''எஜமானுக்கு என்ன வேண்டும்? யாரைப் பார்க்கிறீர்கள்?'' என்று பணிவாகக் கேட்டுக்கொண்டு மிகவும் அடக்கவொடுக்கமாக அவரண்டை நெருங்கினான்.

அந்தக் குரலைக்கேட்டுத் திரும்பிப் பார்த்த கலியாண புரம் மிட்டாதார் திடுக்கிட்டு, ''ஓகோ! பஞ்சண்ணாராவா? என்ன சமாசாரம்? இங்கே சத்திரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று வினவினார்.

அவர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணையை விவரித்துச் சொல்லுமுன் பஞ்சண்ணாராவ் என்பவன் யாவனென்பதையும், அவனது குணாதிசயங்களையும் ஒருவாறு விளக்க வேண்டியது அவசியமாகத் தோன்றுகிறது. அவன் சுமார் நாற்பது வயதடைந்த ஒரு முரட்டு மனிதன். அவன் நடுத்தரமான உயரமும், மல்லக ஜெட்டியின் உடம்பு போன்ற ஆஜாநுபாகுவான சரீரமும் உடையவன். அவனது முகத்தில் நீண்ட மீசைகளும், கேரா, கிருதாக்களும் அடர்த்தியாக நிறைந்து அவனது தோற்றத்தை மிகவும் பயங்கரமானதாக்கின. அவன் அந்த ஊரிலுள்ள மகா பிரபலமான ஒரு போக்கிரி. சிலம்பம் பழகுவது, குஸ்தி செய்வது, பாணாத்தடி விளையாடுவது, புலிவேஷம் போட்டு ஆடுவது, தண்டால், பஸ்கி ஆகிய அருமையான வேலைகள் செய்வது முதலிய தேகப்பயற்சி வித்தைகளில் அவன் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருந்தான். ஒரே காலத்தில் நூறு மனிதர்கள் சேர்ந்து அவனை எதிர்த்தாலும் அவன் அவர்களையெல்லாம் ஒரு நொடியில் வென்றுவிடக் கூடியவன். அவ்வளவு சிறப்புகளிலிருந்தும் அவனுக்கு ஒழுங்கான வருமானம் இல்லாமையால், அவன் ஒரு பாழும் மண்டபத்தைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு அதற்குச் சிலம்பக் கூடமென்ற பெயர் கொடுத்து, சோம்பேறிகள், அயோக்கியர்கள், குடியர்கள் முதலிய பலரைக் கூட்டி வைத்துக்கொண்டு தனக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பயிற்றுவித்து அவர்களால் கொடுக்கப்படும் சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு ஓயாமல் கஞ்சா குடித்து, அந்த போதையில் மயங்கியே இருப்பான். மூன்று நாளைக்கு ஒருதரம் அவனுக்கு அவனது மாணாக்கருள் எவனாவது ஆகாரம் கொண்டுவந்து கொடுத்தால் அவன் அதைத் தின்றுவிட்டு ஊர் சுற்றிக்கொண்டு திரிவான். அப்படி இருந்தும், அவனது தேகம் இரும்பினால் செய்யப்பட்டது போலவும், மதயானையின் பலத்தை யுடையதாகவும் இருந்தது.

அவனது குணாதிசயம் இவ்வளவோடு நிற்கவில்லை. அவனை யாராவது பகைத்துக்கொண்டால், அன்றைய இரவிலேயே அந்தப் பகைவனது காலையோ, கையையோ அவன் முறித்தெறிந்து விடுவான். ஏதாவது பலகாரக் கடைக்காரன், அல்லது, சோற்றுக்கடைக்காரன், பஞ்சண்ணாராவ் கேட்டதைக் கொடுக்காவிட்டால் அந்த இரவிற்குள் அந்தக் கடை முழுதும் வண்டிக்கணக்கில் அசங்கியமான வஸ்துக்கள் வந்து நிறைந்துபோகும். அதுமாத்திரமல்ல; வேறே யாராவது அவனிடத்தில் வந்து பணங்கொடுத்துத் தமது பகைவருக்கு ஏதாவது துன்பம் இழைக்கும்படி கேட்டுக்கொண்டால், அதையும் பஞ்சண்ணாராவ் உடனே நிறைவேற்றி வைத்து விடுவான். பணம் கொடுத்தவன் தனது பகைவனது ஒருகாலை முறிக்கச் சொன்னால், பஞ்சண்ணாராவ், அதை ஒன்றுக்கு நான்கு மடங்காக நிறைவேற்றி, அந்தப் பகைவனது கால்களிரண்டையும் கைகளிரண்டையும் அறவே ஒடித்தெறிந்து விடுவான். இதுநிற்க, அவன் அந்த ஊரிலுள்ள மிட்டாதார்கள், ஜெமீந்தார்கள் முதலிய பிரபுக்களிடத்திற்கெல்லாம் அப்போதைக்கப்போது போய்க் கூழைக்கும்பிடு போட்டு நிற்பான். அவர்கள் அவனுக்கு ஏதாவது நான்கணா எட்டணா பணம் கொடுத்து மரியாதையாக அனுப்பி வைப்பார்கள். யாராவது அப்படிக் கொடுக்கத் தவறினால், அவன் அதை மனதில் வைத்துக்கொண்டு அவருக்கு ஏதேனும் தீங்கிழைத்து விடுவான். அவனது குணவிசேஷங்கள் அந்த ஊரிலுள்ள எல்லோர்க்கும் நன்கு தெரியுமாதலால், அவனிடத்தில் யாவரும் ஒருவித பயமும் மரியாதையும் கொண்டிருந்ததன்றி, அவன் யாருடனாவது பேசினால், அவன் ஏதோ பணம்பெற விரும்புகிறானென்று உணர்ந்து, தம்மிடமுள்ள தொகையை எடுத்துக் கொடுத்துவிடுவர். ஆனால், அவன் பெருத்த பணத் தொகையின்மேல் ஆசை வைப்பவனல்ல. அப்போதைக்கப் போது கஞ்சாச் செலவுக்குத் தேவையான

இரண்டனா நான்கணா முதலிய அற்பத் தொகையே அவனது மனதில் திருப்தியை உண்டாக்கிவிடும்.

அவனது உத்தரவுகளை உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பதற்கு அவனுக்கு ஒரு தோழன் இருந்து வந்தான். அந்தத் தோழனுக்கு ராமன் என்று பெயர். அவனுக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம். அவன் தடித்த சரீரமுடையவன் அல்ல. ஆனாலும், அவனது தேகம் கம்பிபோல அழுத்தமும், உறுதியும், வளைந்து கொடுக்கும் தன்மையும் பொருந்தியது. ஒரு வஸ்துவும் அதன் நிழலும் எப்படி ஒன்றாகவே இருக்குமோ, அதுபோல, பஞ்சண்ணாராவ் எங்கே சென்றாலும், சிறிது தூரத்திற்கப்பால் ராமன் பூனைபோல வந்து கொண்டே இருப்பான். உயிரும் உடலும் ஒன்றை விட்டு ஒன்று எப்படிப் பிரிந்திருக்காதோ, அதுபோல அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தே காணப்பட மாட்டார்கள்.

ஆனால், அவர்களது நடையுடை பாவனைகளில் சில வேறுபாடுகள் காணப்பட்டன. பஞ்சண்ணாராவ் தனக்கு மிஞ்சியவன் எவனுமில்லையென்றும், தன்னைக் கண்டு எல்லோரும் அஞ்சுகிறார்கள் என்றும் நினைத்து மமதையும் இறுமாப்பும் கொண்டு எவர் வந்தாலும் இலட்சியம் செய்யாது, மதயானை போல ஆடி அசைந்து ராஜபாட்டையின் நடுவிலே நடப்பான். ராமனோ பூனை, அல்லது பாம்பு முதலிய துஷ்ட ஜெந்துக்கள் பதுங்குவதுபோல, ஒதுங்கிப் பதுங்கி சுவரோரமாகவும், மரத்தில் மறைந்தும் தான் வருவது பிறருக்குத் தெரியாதபடி நடப்பான். ஆனால், வெளிப்பார்வைக்கு ராமன் அவ்வாறு மறைந்து கொள்ளும் குணமுடையவனாக இருந்தாலும், அவன் மகா கூர்மையான புத்தியும், சூட்சுமமான யூகமும், ஆழ்ந்த கபடமும் நிறைந்தவனாக இருந்ததன்றி, நான்கு பக்கங்களிலும் என்ன நடக்கிறதென்பதை அதி ஜாக்கிரதையாகக் கவனித்து எந்தச்

சமயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி எப்போதும் எச்சரிப்பாகவே இருப்பான். சமயம் வருமானால், அவன் தனது தாயின் கழுத்தைக்கூட அறுத்துவிடக் கூடியவன். சில சமயங்களில் பஞ்சண்ணாராவ், ஒரு காரியத்தைச் செய்யலாமோ செய்யலாகாதோவென அஞ்சித் தயங்குவான்; ராமனோ ஒரே நொடியில் அந்த விஷயத்தை அஞ்சாநெஞ்சத்தோடு நிறைவேற்றி வைத்துவிடுவான். ராமனோ செடி கொடிகளுக்குள் மறைந்து பதுங்கிக் கடித்து உயிர் குடிக்கும் கொம்பேறி மூக்கனென்னும் பாம்புபோல இருப்பான். பஞ்சண்ணாராவோ கொழுத்துத் திமிர்கொண்டு இறுமாப்படைந்து மதோன்மத்தமாகத் திரியும் விருஷபராஜன் போல, எவரையும் மதியாமல் ராஜபாட்டையாகச் செல்பவன். அன்பாக ஊட்டி வளர்க்கப்படும் நாய்க்குட்டி அதன் எஜமானனிடத்தில் எவ்வளவு அந்தரங்கமான அபிமானத்தோடும் பற்றோடும் ஒழுகுமோ அதைவிடப் பன்மடங்கு அதிக பயபக்தி விசுவாசத்தோடும் உண்மையாகவும், ராமன் பஞ்சண்ணா ராவிடத்தில் நடந்து கொண்டான்.

இப்படிப்பட்ட குணமுடைய பஞ்சண்ணாராவ், மேலே குறிக்கப்பட்டபடி சத்திரத்திற்குள்ளிருந்து வெளிப்பட்டு கலியாணபுரம் மிட்டாதாரைக் கண்டபோது அவனது உயிர்த் தோழனான ராமன் சத்திரத்தின் வாசற்கதவிற்கு அப்பால் மறைந்து நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். கலியாணபுரம் மிட்டாதார், "ஓகோ பஞ்சண்ணாராவா! என்ன சமாச்சாரம்? இங்கே சத்திரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டதற்கு மறுமொழியாகப் பஞ்சண்ணாராவ் பணிவாக நின்று புன்னகை செய்து, "நான் நேற்று காலையில் சாப்பிட்டது; வயிறு பசிக்கிறது; கஞ்சாவுக்குக்கூடக் காசு இல்லை. இந்தச் சத்திரத்தில் ஏதாவது சாப்பாடு மிச்சமிருந்தால் கேட்டுப் பார்க்கலாம் என்று உள்ளே போய் மணியக்காரரிடத்தில் கேட்டுப் பார்த்துவிட்டு வெறுங்கையோடு திரும்பி வருகிறேன். தாங்கள்

இங்கே யாரைப் பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? தங்களுக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டுமானால் சொல்லுங்கள்; நான் செய்கிறேன்'' என்றான்.

அதைக்கேட்ட கலியாணபுரம் மிட்டாதார், ''ஓகோ அப்படியா! நேற்றுமுதல் சாப்பிடவில்லையா! அப்படியானால் நான் பணம் தருகிறேன். அதைக்கொண்டுபோய் ஆகாரம் பார்த்துக் கொள்'' என்று கூறினார்.

உடனே பஞ்சண்ணாராவ் நன்றி விசுவாசத்தோடு அவரைக் கும்பிட்டு, ''நான் எப்போதும் எஜமானுடைய மனிதன். என்னால் ஏதாவது காரியம் ஆகவேண்டுமானால் உடனே முடிக்கத் தடையில்லை. எனக்குப் பணம் அதிகமாக ஒன்றும் வேண்டியதில்லை; கஞ்சாவுக்கு நாலணா கொடுத்தால், அதுவே பரிபூரணமாகிவிடும்'' என்றான். அவனது வார்த்தைகளைக் கேட்கவே, கலியாணபுரம் மிட்டாதாரது மனதில் ஒரு யோசனை தோன்றியது. அவர் இரண்டொரு நிமிஷநேரம் ஏதோ விஷயத்தைப் பற்றி யோசனை செய்தபின், அவனை நோக்கி, ''பஞ்சண்ணாராவ்! நீ நான்கு அணாவல்லவா கேட்கிறாய். நான் உனக்கு நானூறு ரூபாய் தருகிறேன். நீ எனக்கு ஓர் உபகாரம் செய்வாயா?'' என்றார்.

அதைக்கேட்ட பஞ்சண்ணாராவ் மிகுந்த மகிழ்ச்சியும் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு, அவரை நோக்கி, ''நான் எப்போதும் எஜமானுடைய அடிமை. உங்களுடைய பிரியம் எப்படியோ அப்படியே நடக்கக் காத்திருக்கிறேன். காரியம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அது முடிந்து போனதாகவே எண்ணிக்கொள்ளலாம்'' என்றான்.

உடனே மிட்டாதார் தணிவான குரலில் பேசத் தொடங்கி, ''சரி; அந்த விஷயத்தை நாம் இங்கே இருந்து பேசுவது சரியல்ல; மறைவுக்குப் போவோம்; வா!'' என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு சத்திரத்திற்குள்ளிருந்த ஓர் அறைக்குள் போய் நின்று கொண்டு பஞ்சண்ணாராவை நோக்கி, ''நான் இப்போது

எந்த வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வந்தேன் என்பதை நீ கவனித்தாயா?'' என்று ரகசியமாக வினவினார்.

உடனே பஞ்சண்ணாராவ், ''ஆம் தெரியும். ஜெகன்மோகன விலாசத்திலிருந்து வந்தீர்கள்'' என்றான்.

*கலியாணபுரம் மிட்டாதார்:-* அந்த ஜாகையில் இருப்பது யார் என்பது உனக்குத் தெரியுமா?

*பஞ்சண்ணா:* யாரோ ஒரு பெண் அந்த ஜாகையின் மேல் மாடத்தில் நின்றுகொண்டிருந்ததை நாலைந்து தடவைகளில் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அவள் யார் என்பதை நான் விசாரிக்கவில்லை.

*க.மிட்டாதார்:-* சரிதான், அவளுடைய பெயர் பூர்ணசந்திரோதயமாம். அவள் தார்வார் தேசத்து மகாராஜாவின் அபிமான புத்திரி என்று ஜனங்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

*பஞ்சண்ணா:-* அபிமான புத்திரியென்றால், அந்த மகாராஜா வைப்பாட்டியாக வைத்திருந்த தாசியின் மகளோ?

*க.மிட்டாதார்:-* (சிறிது யோசனை செய்து) அப்படித்தான் இருக்கவேண்டும். வேறுவிதமாக இருந்தால், அவள் தனியாக இவ்விடத்திற்கு வரும்படி அந்த மகாராஜா விடமாட்டார். அதுவும் தவிர, தாசிகள்தான் பூர்ணசந்திரோதயமென்ற பகட்டான பெயரை வைத்துக்கொள்ளுகிற வழக்கம். ஒழுங்கான குடும்ப ஸ்திரீயாக இருந்தால், இவள் இப்படிப் பட்ட ஆடம்பரமான பெயரை வைத்துக்கொண்டும் இருக்க மாட்டாள்; இப்படி மேன்மாடத்தின்மேல் வந்து நின்று தன்னுடைய அழகை எல்லோரும் பார்க்கும்படி விளம்பரப்படுத்திக் கொள்ளவும் மாட்டாள்.

*பஞ்சண்ணா:-* நீங்கள் உள்ளே போய் அவளோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்திருந்தும், இப்படிச் சந்தேகமாகப் பேச வேண்டிய காரணமென்ன? இவளுடைய உண்மையான வரலாறு இன்னதென்று தங்களுக்குத் தெரியாதென்றால்,

இவளுக்கும் தங்களுக்கும் இதுவரையில் பழக்கமாக வில்லையென்று நினைக்க வேண்டியிருக்கிறது; அப்படியிருக்க, தாங்கள் உள்ளே போய் விட்டு வந்ததிலிருந்து, தங்களுக்கு அவளிடத்தில் கொஞ்சம் ஆசை ஏற்பட்டிருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. அவள் தங்களுக்கு என்ன மறுமொழி சொன்னாள்?

க. மிட்டாதார்: அவள் பேசுவதைப் பார்த்தால் இந்த உலகத்துப் பெண் அல்ல போலவும் ஆகாயத்திலிருந்து இப்போதுதான் நேராகக் குதித்து வந்தவள் போலவும், மகா அலட்சியமாகப் பேசுகிறாள். அவளை எப்படியும் நான் என் வசப்படுத்துகிறேன் என்று சபதம் கூறிவிட்டு வந்திருக்கிறேன். அந்த விஷயத்தில்தான் நான் உன்னுடைய உதவியை நாடுகி றேன். உன்னுடைய சேனாதிபதி ராமன் எங்கே காணோம்? அவன்தான் என்னுடைய கருத்தை நிறைவேற்றத் தகுந்த மனிதன்.

பஞ்சண்ணா:- ராமன் இதோ இந்த வாசற்படியின் பக்கத்திலே தான் நிற்கிறான். இந்த விஷயத்தில் ஆனாலும் சரி; இன்னும் வேறே எந்த விஷயத்தில் ஆனாலும் சரி; தங்களுக்கு எந்த விதமான உதவி தேவையானாலும், அதை நானும் ராமனுமாகச் சேர்ந்து முடித்து வைக்கிறோம். விஷயத்தைத் தெரிவிக்கலாம்.

க. மிட்டாதார்:- சரி; நிரம்பவும் சந்தோஷம். நீங்கள் இப்போது வேறொன்றும் செய்ய வேண்டாம். நீயாவது ராமனாவது அவளுடைய ஜாகைக்குப் பக்கத்தில் எங்கே யாவது மறைந்திருந்து அந்தப் பெண் என்ன செய்கிறாள் என்பதையும், எங்கெங்கே போகிறாள் என்பதையும், இந்த ஜாகைக்குள் யார் யார் வந்துவிட்டுப் போகிறார்கள் என்பதையும், இதற்குள் இருக்கும் வேலைக்காரர்கள் எங்கே போய்விட்டு வருகிறார்கள் என்பதையும் ஒன்றுவிடாமல் கவனித்து உடனுக்குடன் எனக்குச் சங்கதி சொல்லியனுப்ப

வேண்டும். அவ்வளவுதான் இப்போது நீங்கள் செய்ய வேண்டிய காரியம். வேறே செய்ய வேண்டிய காரியத்தை நான் பின்னால் தெரிவிக்கிறேன்.

*பஞ்சண்ணா:* அப்படியே செய்யக் காத்திருக்கிறேன். அவள் எத்தனை தரம் இருமுகிறாள்; எத்தனை தரம் தும்முகிறாள் என்பதைக் கூட விடாமல் நான் தங்களுக்குத் தெரிவித்து விடுகிறேன். போதுமா?

*க.மிட்டாதார்:* பேஷ் பேஷ்! அவ்வளவு கவனமாகவும் நுட்பமாகவுந்தான் நீங்கள் பார்த்திருக்கவேண்டும். அவளிடத்தில் வரும் மனிதர் இன்னாரென்று உனக்குத் தெரியாதிருந்தால், அவர் எப்படி இருப்பாரென்ற அடையாளங்களை யெல்லாம் நன்றாகப் பார்த்துக்கொள். அவர்கள் எப்போது வருகிறார்கள், எவ்வளவு நேரம் உள்ளே இருக்கிறார்கள், வெளியில் போகும்போது சந்தோஷமாகப் போகிறார்களா, ஏமாறிப்போய் விசனத்தோடு போகிறார்களா என்பவை போன்ற சகலமான விவரங்களையும் நீங்கள் அறிந்து எனக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும்.

*பஞ்சண்ணா:-* அப்படியே! அப்படியே! தாங்களே இவ்விடத்தில் இருந்தால், என்னென்ன விஷயங்களைக் கண்டு அறிந்து கொள்வீர்களோ, அதைவிட அதிகமாகத் தாங்கள் தெரிந்து கொள்ளும்படி செய்கிறேன். ராமன் ஒருவனே இந்த விஷயத்தை மகா திறமையாகச் செய்து முடிக்கக் கூடியவன். அவனை இங்கேயே வைத்துவிடுகிறேன். இன்னமும் அநேகம் ஆள்களையும் வைத்து இங்கே இருந்து புறப்பட்டுப் போகும் ஒவ்வொரு மனிதரையும் தொடர்ந்து சென்று எவ்வளவு சங்கதிகள் தெரிந்து கொள்ள முடியுமோ அவ்வளவையும் தெரிந்துகொள்ளச் செய்கிறேன். அவளே நேரில் எங்கேயாவது போனால், அப்போது ராமனே அவளுக்குப் பின்னால் போகும்படி செய்கிறேன். தாங்கள் இந்த விஷயத்தைப்பற்றி இனிக்

கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். என்னுடைய உயிரே இதில் இருப்பதாக நினைத்து நான் வேலை செய்கிறேன். தாங்கள் இனிப் போகலாம்.

க. மிட்டாதார்:- சரி; சந்தோஷம். ஆனால், இதில் இன்னொரு விஷயம் இருக்கிறது. நீங்கள் எனக்காக இப்படிப் பட்ட காரியம் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதே எவருக்கும் தெரியக்கூடாது. அதுவும் இன்னம் யாராவது பிரபுக்கள் வந்து இவளை அடையும் விஷயத்தில் தமக்கு உதவி செய்யும்படி உன்னிடத்தில் கேட்டுக் கொள்ளுவார்கள். அதற்கெல்லாம் நீ இணங்கவே கூடாது. எனக்கு மாத்திரமே நீ கடைசி வரையில் ஒத்தாசை செய்ய வேண்டும். மற்றவர்கள் உனக்கு எவ்வளவு பணம் கொடுப்பதாகச் சொன்னாலும், அதைப்போல இரண்டு மடங்கு பணம் நான் உனக்குக் கொடுக்கத் தடையில்லை. என்ன சொல்லுகிறாய்? இந்த விஷயங்களில் நீ கடைசி வரையில் உறுதியாக இருப்பாயா? இருப்பேன் என்று கையடித்து எனக்கு பிரமாணம் செய்துகொடு.

பஞ்சண்ணா:- ஓ! தடையில்லை. பிரமாணமாக நான் தங்களுக்கே ஒத்தாசை செய்கிறேன். தாங்கள் என் பேச்சை உறுதியாக நம்பலாம்- என்று கூறி, அவரது கையில் அடித்துப் பிரமாணம் செய்து கொடுத்தான். உடனே கலியாணபுரம் மிட்டாதார் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார்.

## 9-வது அதிகாரம்

## காளையும் - கொம்பேறி மூக்கனும்

மறுநாளைய பிற்பகல் மூன்றுமணி சமயமாயிற்று. பூர்ணசந்திரோதயம் மேன்மாடத்தில் பவழக்கொடிப் பந்தலின் கீழ் போடப்பட்டிருந்த ஸொகுசான ஒரு ஸோபாவின் மீது உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

அவ்விடத்தில் வேறே எவரும் காணப்படவில்லை. அவள் முதல் நாள் அலங்கரித்துக் கொண்டிருந்ததைக் காட்டிலும் பதின் மடங்கு சிறப்பாகவும், வசீகரமாகவும் அன்றையதினம் தன்னை அலங்கரித்துக்கொண்டு யாரோ ஒருவரது வருகையை எதிர்பார்த்தவளாய்த் தனியாக உட்கார்ந்திருந்தாள். அவள் வழக்கமாகச் செய்து கொண்டிருப்பதுபோல, புஸ்தகம் படித்தல், கிளிகளோடு கொஞ்சுதல், பலவகைப்பட்ட நூல்களினால் பூப்போடுதல், புஷ்பங்களைக் கொய்து முகர்ந்து பார்த்தல் முதலிய எந்தக் காரியத்திலும் தனது கவனத்தைச் செலுத்தாமல், ராஜபாட்டையில் ஏதேனும் வண்டி சென்றால், அது தனது மாளிகையின் வாசலில் நிற்கிறதோ என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளிருந்த இடம் ராஜபாட்டையின் பக்கத்தை நோக்கியதாக இருந்தாலும், அவள் அங்கே இருந்த ஜன்னல்களின் கதவுகளை மூடி வைத்திருந்தாள். அவளது மனமும் தேகமும் ஒருவிதமாக சஞ்சலமடைந்து கொண்டிருந்தன. ஆனால், அன்றையதினம் எதிர்பார்க்கும் மனிதரைச் சந்திப்பதில், அவள் அதிக இன்பத்தையோ, துன்பத்தையோ எதிர்பார்த்த வளாகக் காணப்படாவிட்டாலும், தான் அதிக திறமையா கவும் தந்திரமாகவும் நடந்து, காரியசித்தி பெற வேண்டுமே என்ற எண்ணத்தினால் அந்த அணங்கு ஒருவித மன எழுச்சி அடைந்திருந்தமையால், அவளது மனமும், உடம்பும் சலனப்பட்டு ஒருவிதமான துடிப்பைக் கொண்டிருந்தன.

அப்போது அவளது பார்வை, எதிர்ப் பக்கத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தின் மீது சென்றது. மணி சரியாக மூன்று ஆகியிருந்தது. அவள் உடனே தனது ஆசனத்தை விட்டு எழுந்து பக்கத்திலிருந்த ஒரு மேஜையண்டை போய், அதன் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்து அதைப் படிக்கலானாள்.

அத்தரின் வாசனை கமழ்ந்து கொண்டிருந்த அந்தக் கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

மகாராஜ ராஜேஸ்வரி மகாகனம் தங்கிய பூர்ணசந்திரோதயத் தம்மாள் அவர்கள் சமூகத்துக்கு சேரங்குளம் இனாம்தார் மிகவும் பட்சமாக எழுதிக் கொள்ளும் லிகிதம். உபய குசலம்.

நீங்கள் குடியிருந்துவரும் ஜெகன்மோகன விலாசம் என்ற மாளிகையை நான் நேற்றையதினம் விலைக்கு வாங்கியிருக்கிறேன். அதைத்தவிர, எனக்கு இந்த ஊரில் இன்னமும் பல வீடுகளும் சொந்தமாக இருக்கின்றன. நான் ஒவ்வொரு வீட்டுக்கும் போய்ப் பார்த்து, இன்னமும் என்னென்ன சௌகரியங்களும், வசதிகளும் தேவையென்பதைப் பார்த்தும், கேட்டும் அறிந்துகொண்டு அவைகளை உடனே செய்துகொடுக்க எண்ணங்கொண்டிருக்கிறேன். தங்களைப் போன்ற தக்க குடித்தனக்காரர்கள், என்னுடைய வீடுகளில் இருப்பதை நான் நிரம்பவும் பெருமையாகவும், கண்ணியமாகவும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஆகையால், இப்போது இருப்போரைப் போகச் செய்ய வேண்டுமென்ற எண்ணமே நான் கொள்ளவில்லை. அவர்களோடு கலந்து பேசி, அவர்கள் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்கிறார்களோ அவைகளை எல்லாம் உடனே பூர்த்தி செய்து கொடுத்து அவர்கள் சந்தோஷமாக இருக்கும்படி செய்ய உத்தேசிக்கிறேன். இது சம்பந்தமாக நான் தங்களோடு சில நிமிஷ நேரம் பேசும்படி தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். இன்றையதினம் பிற்பகல் இரண்டு மணி முதல் மூன்று மணிக்குள் நான் வந்து தங்களைக் காணலாம் என நிச்சயித்து இருக்கிறேன்.

-என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்த பூர்ணசந்திரோதயம் அதை மடித்து மறுபடியும் முன்போல வைத்து விட்டு, ''இரண்டு முதல் மூன்று மணிக்குள் வருவதாய் நன்றாகக் குறித்து எழுதியிருக்கிறார். மணி சரியாக

மூன்றாகிறது. அவர் இன்னமும் வரவில்லையே! வராத காரணம் என்னவோ தெரியவில்லையே!'' என்று நினைத்த வளாய், அந்த விடுதியில் அங்கும் இங்கும் உலாவத் தொடங்க, அதே நிமிஷத்தில் அவளது வேலைக்காரன் ஒருவன் ஓடிவந்து, ''சேரங்குளம் இனாம்தார் வந்திருக்கிறார்'' என்றான்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் அவரை அழைத்துக் கொண்டு வரும்படி உடனே உத்தரவு கொடுத்துச் சேவகனை அனுப்ப, அடுத்த நிமிஷம் சேரங்குளம் இனாம்தார் புன்னகை தவழ்ந்த முகத்தினராய், அந்த விடுதிக்குள் வந்து சேர்ந்தார். இவர் இருபத்தாறு, அல்லது இருபத்தேழு வயது அடைந்தவர் என்றும், வசீகரமான அழகு வாய்ந்தவர் என்றும், ஆனால் வரம்பு கடந்த சிற்றின்ப நாட்டத்தால் இளைத்து வெளுத்துப்போன தோற்றமுடையவர் என்றும் நாம் முன்னரே கூறியிருக்கிறோம். அவர் அன்றையதினம் விலை உயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்து, ஜரிகைகளும், வைரங்களும் ஜ்வலிக்க, மிகவும் ஆடம்பரமாகவும் வசீகரமான தோற்றத்தோடும் வந்து சேர்ந்தார். அவர் நல்ல தீக்ஷண்யமான புத்தியுடையவர் என்பதை அவரது முகத் தோற்றமே காண்பித்தது. அவர் அந்த விடுதிக்குள் நுழைந்த போது பூர்ணசந்திரோதயம் நின்று கொண்டிருந்தாள்; அவரைக் கண்டவுடனே அவள் மரியாதையாகவும் கம்பீரமாக வும் அவரை வரவேற்று எதிரிலிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி, அதன்மேல் உட்கார்ந்துகொள்ளும்படி கூறிவிட்டுத் தானும் சிறிது தூரத்தில் ஒரு ஸோபாவின் மீது உட்கார்ந்து கொண்டு, தனது கடைக்கண் பார்வையால் ஒரு நொடியில் அந்த யௌவன புருஷரை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் பார்த்து, ''சரி; நான் கேள்விப்பட்ட படிதான் இவருடைய தோற்றமும் இருக்கிறது'' என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள். அதுபோலவே சேரங்குளம் இனாம்தாரும் ஒரே பார்வையில் அவளது சர்வாங்கத்தையும் நோக்கி ஒவ்வோர் அழகையும் கண்டு களிகொண்டு

பூரித்துப் புளகாங்கித மடைந்தவராய், ''அடாடா! என்ன அழகு! என்ன சொகுசு! ஐயோ! இப்படிப்பட்ட தெய்வ கன்னிகையை அடையும்படியான பாக்கியம் எந்தப் புண்ணியவானுக்குக் கிடைக்கப் போகிறதோ? நான் தூரத்திலிருந்து பார்த்ததைவிட இப்போது இவளுடைய அழகு ஆயிரமடங்கு விசேஷமாகத் தோன்றுகிறதே! இவளுடைய ஒவ்வொரு அங்கத்தையும் பார்த்து ஆனந்திக்கப் பதினாயிரங் கண்கள் வேண்டும்போல இருக்கிறதே! ஆகா! எவ்வளவு அபாரமான சிருஷ்டி! இப்படிப்பட்ட மோகனாங்கியை நான் இதுவரையில் கண்டதே இல்லை'' என்று தமக்குள் எண்ணிக் கொண்டவராய் அவளை நோக்கி, ''பூர்ணசந்திரோதயம்! எந்த இடத்திலும் வீட்டின் சொந்தக்காரருக்கும், குடியிருப் போருக்கும் அந்தரங்கமான பிரியம் இருப்பதே வழக்கமில்லை. ஆகையால், நான் வீட்டின் சொந்தக்காரன் என்கிற முறைமையில் உன்னைச் சந்திக்க நேர்ந்ததைப் பற்றி நிரம்பவும் விசனம் உண்டாகிறது. அழகே வடிவாக நிறைந்துள்ள அம்பாளின் சன்னிதியில் தரிசனம் பெற ஒரு பக்தன் வரும் முறைமைப்படி நான் வந்திருக்கிறேன் என்று சொல்வதே மிகவும் பொருத்தமான வாக்கியம்'' என்றார்.

அதைக் கேட்ட பெண்மணி மிகவும் குறும்பாகவும் குத்தலாகவும் பேசத்தொடங்கி, ''நீங்கள் சொல்வது அழகாக இருக்கிறதே; இந்த ஜெகன்மோகன விலாசத்தைப் பற்றி நீங்கள் எனக்கு விக்கிரய சாசனமோ, அல்லது வாடகைப் பத்திரமோ எழுத நேருமானால் அந்தப் பத்திரத்திலும் நீங்கள் இப்படிப்பட்ட பெருமைப்பாடான வார்த்தை களையும் முகஸ்துதியான வார்த்தைகளையும் எழுதுவீர்கள் போலிருக்கிறதே!'' என்று கூறினாள்.

உடனே அந்த யௌவன புருஷர் சந்தோஷத்தினால் மலர்ந்த முகத்தினராய் ''ஓ! தடையென்ன!அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம்

நேரிடும் பட்சத்தில் அந்தப் பத்திரத்தை நான் தான சாசனமாக எழுதிவிட எண்ணுகிறேன். ஏனென்றால் உன்னுடைய யோக்கியதைக்கு அதுதான் சரியான மரியாதையாக இருக்கும்'' என்று கூறிக் கண் சிமிட்டினார்.

உடனே பூர்ணசந்திரோதயம் வேடிக்கையாகப் பேசத் தொடங்கி, ''சரிதான். நீங்கள் இதேமாதிரி உங்களுடைய ஒவ்வொரு வீட்டுக்கும் போய், அதில் குடியிருக்கும் மனிதர்களுக்கு எல்லாம் தான சாசனம் எழுதிக் கொடுத்து விட்டு வந்தால், உங்களுக்குச் சரியான லாபந்தான் கிடைக்கும். நீங்கள் போட்ட முதலையெல்லாம் இழந்து போவதோடு, உங்களுடைய வீடுகளுக்குப் போகும் உரிமையையும் அதில் உள்ளவர்களைப் பார்த்து அவர்களோடு பேசும் சந்தர்ப்பங்களையும் கூட இழந்துவிட நேருமே?'' என்றாள்.

**சேரங்குளம் இனாம்தார்:-** அப்படி எல்லோருக்கும் எழுதிக் கொடுக்க எனக்கென்ன பைத்தியமா? நான் கொடுப்பதாகச் சொன்னது உனக்கு மாத்திரம்தான். ஏனென்றால் நீ மற்றவர்களைப் போல் அல்லாமல் கொடுத்தவரிடத்தில் நன்றி விசுவாசம் பாராட்டுவது அன்றி, அவர்களை விலக்கவும் மாட்டாய் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

**பூர்ணசந்திரோதயம்:-** நான் எப்போதும் எந்தப் பொருளையும் எனக்கு மாத்திரம் பெற்றுக்கொள்ளுகிற வழக்கமே கிடையாது. ஏனென்றால், பிறருக்கு இல்லாமல் நான் மாத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொண்டால், என் விஷயத்தில் பிறருக்குப் பொறாமை ஏற்படும். ஆகையால், எனக்கு மாத்திரம் செய்வதானால், தாங்கள் கனகாபிஷேகம் செய்வதானாலும், அதை நான் ஒரு திரணமாக மதித்து விலக்கக் கூடியவள்.

**சே. இனாம்:** (புன்னகையோடு) நான் உனக்கு தான சாசனம் எழுதிக் கொடுக்கும் விஷயம் பிறருக்குத் தெரிந்தால்

அல்லவா, அவர்கள் பொறாமைப்படப் போகிறார்கள். அவர்களுக்குத் தெரியாமலேயே வாங்கிக் கொண்டால், அது சரியாகப் போகிறது.

**பூர்ண:-** நாம் எதை மறைத்தாலும் மறைக்கலாம், ஒருவர் வழங்கிய தானதருமங்களை மாத்திரம் மறைத்து வைக்கக் கூடாது. அப்படி மறைத்து வைத்தால் கொடுத்தவர்களுக்கு இந்த உலகத்தில் புகழ் இல்லாமல் போகும். அது பலருக்குத் தெரிய வேண்டும்; அவர்கள் நல்ல கொடையாளி கொடையாளி என்று புகழ வேண்டும். அப்படிப்பட்ட வெகுஜனவாக்கு ஏற்பட்டால், இகலோகத்தில் பெருமையும் திருப்தியும் உண்டாவதோடு அடுத்த லோகத்திலும் புண்ணியம் பலிதம் ஆகும். அந்த விஷயம் இவ்வளவோடு நிற்கட்டும். நாம் இப்படி ஆசியமாகப் பேசிக்கொண்டே போனால், நீங்கள் கருதிவந்த காரியத்தைப் பேச, சாவகாசம் இல்லாமல் போய்விடும். ஆகையால், நாம் விளையாட்டுப் பேச்சைவிட்டு சாராம்சமான பேச்சைப் பேசுவோம். நீங்கள் இந்த வீட்டை நேற்றைய தினம்தான் விலைக்கு வாங்கினீர்கள்போல இருக்கிறது. இதில் இன்னம் என்னென்ன சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்பதைக் கேட்பதற்காக நீங்கள் இங்கே வந்ததல்லவா?

**சே. இனாம்:** ஆம், உண்மைதான்; அதே விஷயமாகத்தான் நான் இப்போது பேசுகிறேன். உனக்கு என்னவிதமான சௌகரியம் செய்து கொடுக்கலாம் என்று கேட்பதற்காக நான் இங்கே வந்தேன். வந்து உன்னை நெருங்கிப் பார்த்தவுடனே என் மனசில் ஒரு யோசனை தோன்றியது. எப்போதும் இந்த மாளிகையில் நீ இருப்பதற்குத் தக்க மேம்பாடுடையவளாக இருக்கிறாய் ஆகையால், இந்த மாளிகையை உனக்கே கொடுத்துவிட்டால், அதுதான் உன்னுடைய யோக்கியதைக்குத் தக்க சௌகரியம் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகையால் தானசாசனம் எழுதி, இந்த

மாளிகையையே உனக்குக் கொடுத்துவிட நினைத்து, அந்த விஷயத்தை உன்னிடத்தில் பிரஸ்தாபித்தேன்.

**பூர்ண:-** ஓகோ! அப்படியா! இந்த மாளிகையில் இருப்பதற்குத் தகுந்த யோக்கியதை என்னிடத்தில் இருக்கிறது ஆகையால், நீங்கள் இதை எனக்கு தானம் செய்துவிட நினைக்கிறீர்களோ! இந்த மாளிகையில் இருக்கத் தகுந்த யோக்கியதை எனக்கு இருக்கிறது என்றால், இதை விலைக்கு வாங்கத் தக்க யோக்கியதை எனக்கு இருக்கிறது என்றுதான் அர்த்தமாகும். இதை நீங்கள் ஒரு பிச்சைக்காரனுக்குக் கூட தானமாகக் கொடுத்து விடலாம். அவனும் இதில் இருக்க அருகமானவன் ஆகி விடுவான். தானமாகக் கொடுத்தால், எப்படிப்பட்டவனும் இதில் இருக்கத்தக்கவனாகி விடுவான். இதை விலைக்கு வாங்கும் யோக்கியதை யாருக்கு இருக்கிறதோ, அவன்தான் உண்மையில் இதில் இருக்கத் தகுந்தவன். ஆகையால், நீங்கள் எனக்கு இதை விலைக்குக் கொடுப்பதனால் நான் வாங்கிக் கொள்ளத் தடையில்லை.

**சே. இனாம்:** நான் உன்னிடத்தில் வியாபார சம்பந்தமாகவே வரவில்லை. உனக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கவும் உன்னோடு பழகி உன்னுடைய சிநேகத்தைச் சம்பாதித்துக் கொள்ளவுமே நான் வந்தது.

**பூர்ண:-** வசதிகள் என்றால், வீட்டை எனக்கே தானம் செய்து விடுவது என்று ஒருநாளும் அர்த்தமாகாது. என்னோடு பழகி என்னிடத்தில் சிநேகம் செய்யவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுவதாகச் சொல்வது மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. என்னைப் போன்ற குடும்பஸ்திரீ உங்களைப் போன்ற அன்னிய புருஷரிடத்தில் சிநேகம் செய்வது நம்முடைய தேசத்தில் நடக்கத்தகாத விஷயமல்லவா?

**சே. இனாம்:** ஏன் அப்படிச் சொல்கிறாய்? நம்முடைய தேசத்தில் முன்பின் பழகி அறியாத ஸ்திரீ புருஷர்களுக்குள்

சிநேகம் உண்டாவதில்லையா? நம்முடைய தேசத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து அன்னிய புருஷன் ஆசைப்பட்டுக் காதலிப்பது இல்லையா? கலியாணம் செய்து கொள்வதில்லையா? கலியாணம் செய்துகொள்ளும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் அதற்குமுன் பழகினவர்களாகத்தான் இருக்க வேண்டுமா?

பூர்ண:- ஏதேது! நீங்கள் கருதிவந்த காரியத்திற்குச் சம்பந்தம் இல்லாத புதிய புதிய சங்கதிகளை எல்லாம் எடுத்துப் பேசுகிறீர்களே! முதலில் வீட்டை தானம் செய்வதாகச் சொன்னீர்கள். இப்போது அதிலிருந்து சிநேகம், காதல், கலியாணம் முதலிய விஷயங்களைப்பற்றி எனக்கு வியாக்கியானம் செய்யத் தொடங்கி விட்டீர்கள். இந்த சம்பாஷணை நம்மை எந்தெந்த விஷயத்தில் கொண்டுபோய் விடுமோ தெரியவில்லை.

சே.இனாம்: (மகிழ்ச்சியும் புன்னகையும் கொண்டு) ஆம், நீ சொல்வது உண்மைதான்; இந்த மாளிகையிலுள்ள பெண் அரசிக்கு அருகில் வந்து தரிசனம் பெற்ற உடனே, என் மனம் பரவசம் அடைந்து தானாகவே இப்படிப்பட்ட பிரஸ்தாபங்களை எல்லாம் செய்யும்படியாகத் தூண்டிவிட்டது. அதற்கு இந்தப் பெண் தெய்வத்தின் அபாரமான மகிமையே காரணமின்றி வேறல்ல. பல பல பேசுவதில் பயனென்ன? என்னுடைய மனசிலுள்ள விருப்பத்தை நான் சுருக்கமாக இரண்டே வார்த்தைகளில் சொல்லிவிடுகிறேன். இந்த ஜெகன்மோகன விலாசத்தை மாத்திரம் உனக்குக் கொடுப்பது மரியாதைக் குறைவு. இதைப்போல இன்னம் இருபத்தைந்து ஜெகன்மோகன விலாசங்களும், ஏராளமான நிலங்களும், ஆபரணங்களும், இதர சொத்துகளும் எனக்கு இருக்கின்றன. அவைகளை எல்லாம் நான் இந்தப் பெண் தெய்வத்துக்குப் பாத காணிக்கையாக இப்போதே சமர்ப்பித்து விட்டதன்றி, என்னுடைய உடலையும், உயிரையும்கூட உன்னுடைய

வசத்தில் ஒப்புவித்துவிட்டேன்; இனி என்னை ஆக்குவதும் அழிப்பதும் உன்னைச் சேர்ந்த பொறுப்பு.

**பூர்ண:** *(வியப்பும் திகைப்பும் கொண்டு நகைத்து)* என்ன ஆச்சரியம் இது? இதற்குமுன் நீங்கள் ஜெகன்மோகன விலாசத்தை மாத்திரம் கொடுப்பதாகச் சொன்னீர்கள்; இப்போது உங்களுடைய உடல், பொருள், ஆவி முதலியவைகளை எல்லாம் கொடுத்து விடுவதாகச் சொல்லுகிறீர்கள். நாம் இதற்குமுன் ஒருவரையொருவர் கண்டறியோம். அப்படிப்பட்ட அன்னிய மனிதருக்குள் இவ்வளவு அபாரமான தான தருமம் ஏற்படுவது நான் இதுவரையில் சொப்பனத்திலும் கண்டறியாத புதுமையாக இருக்கிறதே அன்றி வேறல்ல.

**சே. இனாம்:** *(நயமாகவும் கொஞ்சலாகவும் பேசத் தொடங்கி)* என்ன பூர்ணசந்திரோதயம்! நான் எவ்வளவோ வெளிப்படையாகப் பேசுகிறேன். இன்னமும் என்னுடைய கருத்தை அறியாதவள் போல நீ நடித்து என் மனசை வதைக்கிறாயே; இது உனக்கு தருமமாகுமா? நான் என்னுடைய சகலமான சம்பத்தையும் உடைமைகளையும் உனக்கே கொடுப்பதாகச் சொன்னால் அதற்குப் பதிலாக நான் உன்னை அடைய விரும்புகிறேன் என்பது அர்த்தமாக வில்லையா? அதை நான் வெளிப்படையாக எடுத்துச் சொல்லவேண்டுமா?

**பூர்ண:** *(முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த வியப்பையும் திகைப்பையும் அடைந்து)* ஓகோ! நீங்கள் என்னை அடையவா விரும்புகிறீர்கள்? அந்த விருப்பம், இங்கே வந்தபிறகு ஏற்பட்டதா? அல்லது வந்ததற்கு முன்பாகவே ஏற்பட்டதா?

**சே. இனாம்:** இங்கே வந்ததற்கு முன்பாகவே ஏற்பட்டுவிட்டது. உன்னிடத்தில் நெருங்கி எப்படிப்பேசி என்னுடைய கருத்தை வெளியிடுவதென்று யோசித்து யோசித்துப் பார்த்துக் கடைசியில் அதற்காகவே நேற்றையதினம் இரண்டு மடங்கு விலைகொடுத்து இந்த மாளிகையை வாங்கினேன்; உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து

கொடுக்கும் முகாந்திரத்தை வைத்துக்கொண்டு நான் உன்னிடத்தில் நெருங்கிப்பேசி என்னுடைய மனசை வெளியிட எண்ணியே நான் இங்கே வந்தேன். நான் இப்போதுதான் புதிதாக உன்னைப் பார்க்கிறவன் அல்ல. நீ என்றைய தினம் இந்த மாளிகைக்கு வந்தாயோ அதுமுதல் ஒவ்வொருநாளும் எத்தனை தடவை நான் உன்னைப் பார்த்துப் பார்த்து உன்னுடைய அபாரமான அழகைக் கண்டு மயங்கி அறிவு இழந்து பைத்தியம்கொண்டவன் போல அலைந்து திரிந்தேன்! நான் இதுவரையில் எவ்வளவோ அற்புதமான அழகுள்ள ஸ்திரீகளை எல்லாம் பார்த்திருக்கிறேன். இருந்தாலும், உன்னைக் கண்டு என் மனம் கலங்கியதுபோல அவ்வளவு கட்டுக்கு அடங்காமல், வேறே எவளைக் கண்டும் கலங்கவில்லை. நான் கலியாணமே செய்து கொள்ளக் கூடாதென்று இதுவரையில் உறுதி செய்து கொண்டிருந்தேன். உன்னைப் பார்த்தபிறகு, அந்த உறுதியெல்லாம் இருந்த இடம் தெரியாதபடி பறந்துபோய்விட்டது. உன்னைக் கல்யாணம் செய்துகொண்டு என்னிடத்தில் அளவில் அடங்காமல் குவிந்து கிடக்கும் செல்வத்தை எல்லாம் உன்னுடைய பிரியப்படி செலவிட்டு இந்த உலகத்திலுள்ள சகலவித இன்பங்களையும் நாம் இருவரும் அநுபவித்து சதாகாலமும் ஆனந்தமாக இருக்கும்படி செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. அந்த முக்கியமான விஷயத்தை உன்னிடத்தில் பிரஸ்தாபிக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் நான் இன்றையதினம் இங்கே வந்தது. நான் உன்னிடத்தில் வந்து சம்பாஷிக்கும் படியான சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொள்ள நான் இப்படிப்பட்ட தந்திரம் செய்ததைப்பற்றி நீ என்மேல் ஆயாசப்படக் கூடாது. நான் நல்ல எண்ணத்தோடு இப்படிச் செய்தேனே அன்றி, உன் விஷயத்தில் எவ்விதமான கெட்ட எண்ணமும் கொண்டு இப்படிச் செய்யவில்லை. என்னுடைய மனசையும் பிரியத்தையும் உயிரையும் ஒரே நொடியில் நீ கவர்ந்து

கொண்டாய்; உன்னை நான் கலியாணம் செய்துகொண்டு என்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளா விட்டால், அந்த துக்கம் என்னுடைய ஆயிசுகால பரியந்தம் நீங்காது. அதே ஏக்கத்தினால், நான் இளைத்து அகால மரணம் அடைந்துவிடுவேன் என்பது நிச்சயம். ஆகையால், நீ என் விஷயத்தில் இரங்கி, என்னைக் கடைத்தேற்ற விரும்புகிறேன் - என்று மிகவும் உருக்கமாகவும் விநயமாகவும் கூறிக் கெஞ்சி மன்றாடினார்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயத்தின் மனதும் கண்களும் கலங்கின. சேரங்குளம் இனாம்தாரான அந்த அழகிய யெளவன புருஷர், தன்னிடத்தில் அந்தரங்கமான காதலும் பிரேமையும் கொண்டு கபடமில்லாமல் உண்மையை வெளியிடுகிறார் என்பதை அவள் உணர்ந்தாள் ஆகையால், அவரது சொற்கள் அவளது மனத்தில் சுறுக்கென்று தைத்தன. அவள் இரண்டொரு நிமிஷநேரம் மெளனமாக நின்று ஏதோ சிந்தித்து ஒருவித முடிவிற்கு வந்தவளாய் அவரை நோக்கி, ''ஐயா! நீங்கள் சொன்ன வரலாற்றைக் கேட்க, உங்களுடைய விஷயத்தில் என் மனசில் நிரம்பவும் இரக்கமும் பச்சாதாபமும் ஏற்படுகின்றன. என் பொருட்டு நீங்கள் வீண்பொருள் நஷ்டமடைந்ததன்றி, அநாவசியமான முயற்சிகளை எல்லாம் செய்திருக்கிறீர்கள். நீங்கள் என்னிடத்தில் உண்மையான காதல் கொண்டிருக்கிறீர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. அதோடு நீங்கள் என்னைக் கிரமப்படி கலியாணம் செய்து கொள்ள எண்ணுகிறீர்கள் என்பதும் சந்தேகமற விளங்குகிறது. அப்படி இருந்தும், இது ஒருதலைக் காமமாக இருக்கிறது. நான் உங்களை இப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன். உங்களுடைய மனசில் உண்டாகியிருக்கும் காதலும் நெகிழ்வும் பிரேமையும் என் மனசிலும் உண்டானால் அல்லவா, நான் உங்களுடைய ஏற்பாட்டிற்கு இணங்கலாம். என் மனசில் அப்படிப்பட்ட மாறுபாடுகள் ஒன்றும் இன்னமும் ஏற்படவே இல்லை. நான் உங்களுடைய

மனசைக் கவர்ந்துவிட்டேன் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், நீங்கள் என்னுடைய மனசைக் கொஞ்சமும் கவரவே இல்லை. அதிலிருந்து என்னுடைய மனசைக் கவரக்கூடிய புருஷர் வேறே ஒருவர் இருக்கிறார் என்பது தெரிகிறது. ஆகையால், அப்படிப்பட்ட புருஷரை நான் கண்டால்தான் என் மனம் காதல் கொள்ளும்; அவருக்கும் என்னிடத்தில் பரஸ்பரமான மோகம் ஏற்பட வேண்டும். அப்போதுதான் என்னுடைய கலியாணம் நிறைவேறும். அதற்குமுன் நான் கலியாணப் பேச்சை எடுப்பதே சரியல்ல. ஆசையால், நீங்கள் தயவுசெய்து அந்தப் பிரஸ்தாபத்தை விட்டு, வேறே விஷயம் ஏதாவது இருந்தால், அதைப்பற்றிப் பேசுங்கள். இப்படி நீங்கள் என்னிடத்தில் தந்திரம் செய்த விஷயத்தை நான் வேறே எவரிடத்திலும் வெளியிடமாட்டேன் என்ற உறுதியை நான் உங்களுக்குச் செய்துகொடுக்கிறேன். அது ஒன்றுதான், நீங்கள் இவ்வளவு பாடுபட்டதற்கு நான் செய்யக்கூடிய உதவி'' என்றாள்.

அதைக்கேட்ட இனாம்தார் முன்னிலும் பன்மடங்கு அதிக உருக்கமாகவும் நைவாகவும் நயமாகவும் பேசத் தொடங்கி, ''பெண்மணி! நீ சொல்வதெல்லாம் உண்மையான சங்கதிதான். என் மனசில் ஏற்பட்டிருப்பதுபோல உன் மனசிலும் காதல் ஏற்பட்டால் அன்றி கலியாணம் செய்ய முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதோடு நீ என்னை இப்போதுதான் முதன் முதலாய்ப் பார்க்கிறாய் என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், நான் அடிக்கடி இங்கே வந்து உன்னோடு பேசிப் பழகி நட்பாக இருப்பதற்கு நீ அநுமதி கொடுப்பாயானால், என்னுடைய குணாதிசயங்களையும் நடவடிக்கைகளையும் காணக் காண உனக்கும் என்மேல் அன்பும், பிரியமும் ஏற்பட்டு விடும் என்பது நிச்சயம். ஆகையால், நீ சொல்லுகிறபடி கலியாணப்பேச்சை நாம் இப்போது பேசத் தேவையில்லை.

நான் அடிக்கடி இங்கே வரவும், உன்னோடு பேசிக் கொண்டிருக்கவும் நீ இப்போது சம்மதித்தால், அதுவே போதுமானது.இந்தச் சிறிய வேண்டுகோளுக்கு நீ எப்படி யாவது இணங்கித்தான் தீரவேண்டும்'' என்று கூறிக் கெஞ்சி மன்றாடினார்.

பூர்ணசந்திரோதயம்,'' அது எப்படி முடியும்? இதற்குமுன் பழக்கம் இல்லாத புதிய மனிதர் அடிக்கடி என்னிடத்தில் வந்து பேசிப் பழகும்படி நான் விட்டிருந்தால், அதைப்பற்றி என்னுடைய வேலைக்காரர்களும், மற்ற ஜனங்களும் தவறான அபிப்பிராயம் கொள்ளுவார்கள். அது என்னுடைய கற்புக்கே தீராத ஒரு களங்கமாக வந்து சேரும். நான் உங்களோடு பழகுவதாக வைத்துக் கொள்வோம். அப்படிப் பழகியபின், உங்களுடைய குணமும் நடத்தையும் எனக்குப் பிடிக்காமல் போனால், நான் உங்களை விலக்கி விட்டு வேறே ஒரு புருஷருடைய சிநேகத்தை நாட வேண்டும். அதுவரையில் நான் உங்களோடு பழகியதைப் பற்றி எல்லோரும் தவறான அபிப்பிராயம் கொண்டு என்னுடைய கற்பைப் பற்றிச் சந்தேகம் கொள்ளுவார்களானால், யோக்கியமான வேறே எந்தப் புருஷரும் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள முன் வரமாட்டார்கள். ஆகையால், நீங்கள் கோரும் விஷயத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது'' என்று உறுதியாகவும் நயமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட சேரங்குளம் இனாம்தாரின் முகம் வாட்டம் அடைந்தது. அவர் தமது சிரத்தைக் கீழே கவிழ்த்து இரண்டொரு நிமிஷநேரம் சிந்தனை செய்தபின், நிமிர்ந்து பரிதாபகரமாக அந்த அணங்கை நோக்கி, ''அப்படியானால் இனிமேல் எப்போதாவது நான் இந்த மாளிகைக்கு வந்தால்கூட, என்னை உள்ளே விட வேண்டாமென்று நீ சொல்லி விடுவாய் போலிருக்கிறதே?'' என்றார்.

உடனே பூர்ணசந்திரோதயம் குறும்பாகப் புன்னகை செய்து "நீங்கள் இப்பேர்ப்பட்ட பொய்யான முகாந்திரத்தைச் சொல்லிக் கொண்டு இங்கே வந்தால், அந்த மாதிரியாகத்தான் சொல்லும்படியாக இருக்கும். அதைப்பற்றி ஏன் சந்தேகப்படுகிறீர்கள்? உங்களுக்குச் சேரவேண்டிய வீட்டு வாடகை அந்தந்த மாசம் முதல் தேதி உங்களுடைய வீட்டைத் தேடி வந்துவிடுகிறது. அதைத்தவிர, என்னிடத்தில் உங்களுக்கு இந்தவீடு சம்பந்தமாக வேறே ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால், கடிதத்தின் மூலமாக அதை எழுதி அனுப்பினால், அதற்குத் தகுந்தபடி நான் நடந்து கொள்ளுகிறேன். நீங்கள் நேரில் இங்கே வந்து என்னிடத்தில் இனிப்பேச வேண்டும் என்ற எண்ணத்தை இன்றோடு முடிவாக விட்டுவிடுங்கள். எனக்கு நேரமாகிறது. நீங்கள் வந்த காரியம் இவ்வளவுதானே?" என்று கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டு அப்பால் போக எண்ணுகிறவள் போல எழுந்தாள்.

அதைக் கண்ட சேரங்குளம் இனாம்தார் அதற்குமேல் எதையும் சொல்ல அறியாமல் குன்றிப்போய் இரண்டொரு நிமிஷநேரம் நின்றபின், "சரி; பிறகு உன்னுடைய தயவு. நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று கீழே குனிந்தபடி கூறிவிட்டு நிமிர்ந்து அவளைப் பார்க்காமல் அப்படியே நடந்து அவ்விடத்தை விட்டு வெளியில் சென்றார்.

சென்றவர் சகிக்க இயலாத வெட்கமும், அவமானமும் விசனமும் கொண்டவராய், "ஐயோ!என்ன அழகு! என்ன புத்தி தீக்ஷண்யம்! இப்படிப்பட்ட காணக்கிடைக்காத மாணிக்கத்தைக் கண்ட என்னுடைய கண்கள் இனி வேறே பெண்களைக் காணுமா? இப்படிப்பட்ட மகா சிலாக்கியமான பெண்மயிலை நாடிய என் மனம் இனி வேறே ஸ்திரீகளை நாடுமா? இப்படிப்பட்ட தேவாமிருதத்தை உண்ணக் கருதிய மனிதன் இதைவிட்டு இனிக் கிடைக்கும் கேழ்வரகுக் கூழைக்

குடிப்பது சாத்தியமாகுமா! சே! அடைந்தால் இவளைத்தான் அடைய வேண்டும். இல்லையானால், இனிமேல் சந்நியாசம் வாங்கிக்கொள்ள வேண்டும். இருக்கட்டும். நான் இவளை இவ்வளவோடு விட்டுவிடக்கூடாது. இன்னம் வேறே பலவகையில் தந்திரம் செய்து முயன்று பார்க்கிறேன்'' என்று தமக்குள் சிந்தனை செய்தவண்ணம் அந்த மாளிகையின் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த தமது வண்டியண்டை போய் அதற்குள் ஏறி உட்கார்ந்து கொண்டார். வண்டிக்காரன் வண்டியை ஓட்டத் தொடங்கிய சமயத்தில், ''அடேய் வண்டிக்காரா! நிறுத்து, போகலாம்'' என்று பலமாக யாரோ கூறிய குரலுண்டாயிற்று. நமது மல்லகஜெட்டியான பஞ்சண்ணாராவ் அடுத்த நிமிஷத்தில் அவ்விடத்திற்கு வந்து தனது தலையை வண்டிக்குள் நீட்டிக் கபடமாகப் புன்னகை செய்து, ''எஜமானைப் பார்த்து நிரம்ப காலமாகிறது. எல்லாம் சௌக்கியந்தானே! இந்த ஏழையின் மேல் எஜமானுக்குத் தயவில்லை. எஜமான் இந்த ஜெகன்மோகன விலாசத்திலா இருப்பது? மேன்மாடத்தில் வேறே யாரோ இருக்கிறார்களே?'' என்று பேசிக் கொண்டே போக, அதைக்கேட்ட இனாம்தார் அவனிடத்தில் பேச்சை வளர்க்க மனம் அற்றவராய் அவசரத்தைக் காட்டி, ''ஓகோ! பஞ்சண்ணாராவா! என்னப்பா முகம் வாட்டமாக இருக்கிறது? கஞ்சாவுக்கு இன்னமும் வழி ஏற்படவில்லை போலிருக்கிறது! அதற்காக ஏதாவது நாலணா எட்டணா வேண்டுமானால் தருகிறேன்'' என்றார்.

பஞ்சண்ணாராவ் அவரது வார்த்தையைக் கேட்டு, ஒருவாறு ஆயாச மடைந்தவன் போலக் காண்பித்துக்கொண்டு, ''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்; எஜமானுடைய தயவு மாத்திரம் இருந்தால், அதுவே போதுமானது'' என்றான்.

அப்போது சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு விளக்குக் கம்பத்தில் மறைந்தும் மறையாமலும்

கோட்டான் போலத் தூங்கி வழிந்து எதையும் கவனிக்காதவன்போல நின்ற ராமன் இனாம்தாரது திருஷ்டியில் பட்டான். அவனைக் கண்ட இனாம்தார், ''பஞ்சண்ணா! உன்னுடைய தோழனான ராமனைப் பார்த்தவுடனே அவனுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. அந்த வேலையை அவன் செய்து முடிப்பானானால், அவனுக்கு நூற்றுக்கணக்கில் பணம் கிடைக்கும்படி செய்கிறேன். நீ ஒரு காரியம் செய்கிறாயா?'' என்றார்.

பஞ்சண்ணாராவ், ''என்ன காரியம் வேண்டுமானாலும் நான் எஜமானுக்குச் செய்யத்தடையில்லை; சொல்லலாம்'' என்றான்.

சேரங்குளம் இனாம்தார், ''அந்த விஷயம் மிகவும் ரகசியமானது. ஆகையால், இந்த இடத்தில் சொல்லக் கூடியது அல்ல. இன்றைய தினம் ஒன்பது மணிக்கு ராமனை என்னுடைய ஜாகைக்கு அனுப்பிவை. நான் விஷயத்தைச் சொல்லி அனுப்புகிறேன்'' என்றார்.

பஞ்சண்ணாராவ், ''ஓ! அப்படியே தவறாமல் ஒன்பது மணிக்கு வந்து பார்க்கும்படி செய்கிறேன். தாங்கள் எப்படிப்பட்ட அலுவல் கொடுத்தாலும் தங்களுக்குத் திருப்தி உண்டாகும்படி ராமன் முடித்து வைப்பான். தாங்கள் அதைப்பற்றி யோசிக்கவேண்டியதில்லை. எனக்கு இப்போது சில்லறையாக ஒன்றும் வேண்டாம். முழு ரூபாயாக இருந்தால் ஒரே ஒரு ரூபாய் கொடுங்கள். ஒருவனுக்கு நான் அவசரமாகக் கொடுக்க வேண்டும். பிறகு கணக்கில் கழித்துக் கொள்ளலாம்'' என்று மிகவும் நிதானமாகக் கூறினான்.

அதைக் கேட்டவுடனே இனாம்தார் ஒரு ரூபாய் பணத்தை எடுத்து அவனிடத்தில் கொடுத்துவிட்டு, ராமனைத் தவறாமல் அனுப்பும்படி சொல்லிவிட்டுத் தமது வண்டியை ஓட்டச் சொல்ல, வண்டி உடனே புறப்பட்டுப் போய்விட்டது.

## 10 - வது அதிகாரம்

# தினசரி டைரி - செப்பிடு வித்தை

செவ்வாய்க்கிழமை கழிய, புதன்கிழமை தினம் வந்து சேர்ந்தது. தஞ்சையில் வடக்கு ராஜவீதியிலுள்ள அற்புதமான தமது மாளிகையில் சயனித்திருந்த மருங்காபுரி ஜெமீந்தார் அன்றைய தினம் அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்து தமது காலைக் கடன்களை முடித்துக் கொண்டார். கொள்ளைக்காரனான கட்டாரித்தேவன் தமது தினசரி டைரிப் புஸ்தகத்தை தம்மிடம் சேர்ப்பதற்காக அன்றையதினம் முழுதும் தமது மாளிகையிலேயே இருக்கும்படி சொல்லி இருந்தான் ஆகையால், அந்த விஷயத்தில் தாம் செய்ய நினைத்திருந்த ஏற்பாடுகளையெல்லாம் சரியான காலத்தில் முடித்துவைத்துக்கொண்டு ஆயத்தமாக இருக்கும் பொருட்டே, அவர் அவ்வாறு அதிகாலையில் எழுந்தார். எழுந்தவர் தமது அந்தரங்க வேலைக்காரனான கோவிந்தசாமியை அழைத்தார். அவன் உடனே தோன்றி அவருக்கு அருகில் வந்து வணக்கமாக நின்றான். அவனுக்குச் சுமார் முப்பது வயது இருக்கலாம். அவன் மகா கூர்மையான புத்தியும், நாயக விசுவாசமும் உள்ளவன். அந்தக் கிழ ஜெமீந்தாரது சகலமான ரகசியங்களும், அந்தரங்க சமாசாரங்களும் அவன் ஒருவனுக்கு மாத்திரம் நன்றாகத் தெரியும். அவர் எப்படிப்பட்ட ரகசியமான காரியத்தை முடிக்கக் கருதினாலும் அவனிடத்திலேயே அதைத் தெரிவிப்பார். அவன் மிகவும் கவலையாகவும் சிரத்தையாகவும் அந்தக் காரியத்தைச் செய்து முடிப்பான். ஆனால், அவர் தன்னிடத்தில் நம்பிக்கையும் அந்தரங்க அபிமானமும் வைத்திருக்கிறார் என்பதைக் கருதி, அவன் தனது சுயேச்சைப்படி எதையும் செய்கிறவன் அல்ல. அவராக அழைத்து ஏதாவதொரு காரியம் ஆக வேண்டு மென்று சொன்னால் அன்றி, அவன் அவரிடத்தில் எதைப்

பற்றியும் தானாகக் கேட்கிறதில்லை. அவர் எதை வெளியிடுகிறாரோ அதை மாத்திரம் கேட்டுக்கொள்வான்; எதைச் சொல்லவில்லையோ, அதைக் கேட்க விரும்ப மாட்டான். அப்படிப்பட்ட விநய குணமுள்ள கோவிந்தசாமி என்ற அவரது அந்தரங்கக் காரியதரிசி புதன்கிழமை காலையில் ஜெமீந்தாருக்கு எதிரில் வந்து நின்றான்.

மற்ற தினங்களில் ஜெமீந்தார் நிம்மதியாகவும், நிச்சலனமாக வும் இருந்ததற்கு மாறாக அன்றையதினம் ஏதோ விஷயத்தைக் கருதி ஒருவித பதைப்பையும், அளவுகடந்த சலனத்தையும் கொண்டிருந்ததைக் கண்ட கோவிந்தசாமி ஒருவாறு ஆச்சரியம் அடைந்து திகைத்தானானாலும் அவரது வாயைப் பார்த்தவனாய் மௌனமாக நின்றான். ஜெமீந்தார் அப்போது உட்கார்ந்திருந்த விடுதிக்கு வெல்வெட்டு மாட மென்று பெயர். அது அந்த மாளிகையின் முன் பக்கத்தில் இருந்த முதல் உப்பரிகையிலுள்ள நடுமத்தியான இடம். அவரைப் பார்க்கும்பொருட்டு யாராவது வெளியிலிருந்து வந்தால், வாசலிலுள்ள மேன்மாடப் படிகளின் வழியாக ஏறிச் சென்றால், அந்தவழி அவரை நேராக வெல்வெட்டு மாடத்தில் கொண்டுபோய்விடும். அந்த மாடத்தின் சுவர்கள், நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள், மெத்தைகள், தரை முதலிய பல நிறங்களைக் கொண்ட வெல்வெட்டுத் துணிகளாலேயே நிரப்பப்பட்டிருந்தமையால், கீழே நடந்தாலும், சுவர்களில் சாய்ந்தாலும், நாற்காலியில் உட்கார்ந்தாலும் எல்லா இடமும் ஒரே வழுவழுப்பாக இருந்து, அங்கே செல்வோரைப் பரம ஆனந்த சுகத்தில் ஆழ்த்தியது. அந்த மாடத்திற்குள் யாராவது நுழைந்தால் அவர்களதுதேகத்திற்கு ஏற்படும் சுகத்தினால், உணர்வு கலங்கி ஆனந்தமான தூக்கம் உண்டாகும். அந்த இடத்தில் எங்கு பார்த்தாலும் வாசனைப் புஷ்பங்கள் மலர்ந்து குலுங்கி நின்ற பூத்தொட்டிகளும், நிலைக்கண்ணாடிகளும், ஸோபாக்களும், ரதம்போன்ற கண்ணாடி விளக்குகள் முதலிய அற்புதமான

விநோத வஸ்துக்களும் நிறைந்து மயன் என்னும் தெய்வத் தச்சனால் நிர்மாணம் செய்யப்பட்ட மனமோகன மணி மண்டபமோ எனக் காண்போர் ஐயுறத்தக்கதாக இருந்தது.

அந்த வெல்வெட்டு மாடத்தின் முன்பக்கத்து வாசலிற்கு எதிரில் ரகசியமான இன்னொரு வாசல் இருந்தது. அந்த வாசலைத் திறந்து கொண்டு உள்ளே சென்றால், அவ்விடத்தில் அவரது ரகசியமான ரதிகேளி விலாச மண்டபம் இருந்தது. அவரையும், கோவிந்தனையும் தவிர, வேறு எவரும் அந்த ரதிகேளி விலாசத்திற்குள் சென்று அறியார்கள். பரம ரகசியமாக அமைக்கப்பட்டிருந்த அந்த விநோத சயனக் கிருகத்தின் அமைப்பையும் அலங்காரத்தையும் விவரமாக வர்ணிக்கும் சந்தர்ப்பம் பின்னால் ஏற்படும் ஆதலால், இப்போது அதை விடுத்து மேல் விஷயத்தை நாம் கவனிப்போம்.

மேலே குறிப்பிட்ட வெல்வெட்டு மண்டபத்தில் வெகு ஸொகுஸாக அமைக்கப்பட்டிருந்த வழுவழுப்பான ஒரு ஸோபா வின் மீது ஜெமீந்தார் எப்போதும் உட்கார்ந்திருப்பார். அந்த ஸோபாவில் மறைவான இரண்டு இடங்களில் இரண்டு பொத்தான்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பொத்தான்களுள் ஒன்றை அழுத்தினால், அந்த உப்பரிக்கையின் கிழேயுள்ள ஓர் அறையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு மணியை அது அசைக்கும். அந்த மணி உடனே கிணுகிணுவென்று அடித்துக்கொள்ளும். அவ்விடத்தில் எப்போதும் ஆயத்தமாகக் காத்திருக்கும் சேவகர்கள், ஜெமீந்தார் தங்களை அழைப்பதாக நினைத்து உடனே எழுந்து விரைவாக வந்து ஜெமீந்தாருக்கு எதிரில் நிற்பார்கள். அதுபோல, இரண்டாவது பொத்தானை அழுத்தினால், அந்த விசை வெல்வெட்டு மாடத்திற்குப் பக்கத்திலுள்ள கோவிந்தனது இருப்பிடத்தில் போய், அங்கே உள்ள மணியை அசைக்கும். அவன் உடனே எழுந்து ஜெமீந்தாரிடத்திற்கு வருவான். ஆனால், ஜெமீந்தார் பொத்தானை அழுத்துவதும், மணி ஓசை செய்வதும்

வெல்வெட்டு மண்டபத்தில் அவரோடுகூட இருப்பவருக்குத் தெரியாமல் இருக்கும். ஆகவே, ஜெமீந்தார், சமயத்துக்குத் தகுந்தபடி அந்தப் பொத்தான்களை உபயோகித்து கோவிந்தனையோ, மற்ற வேலைக்காரரையோ அழைத்துத் தமது குற்றேவல்களை நிறைவேற்றிக் கொள்வது வழக்கம். அவர் புதன்கிழமையன்று காலையில் எழுந்து தமது ஸ்நானம், சிற்றுண்டி முதலியவற்றை முடித்துக்கொண்டு தமது வழக்கப்படி பகட்டாக அலங்காரம் செய்து கொண்டனர். முதல்நாள் இரவு முற்றிலும் பன்னீரில் ஊறப்போட்டு வைக்கப்பட்டிருந்த தமது கட்டுப்பல்லை எடுத்து அவர் தமது பொக்கைவாயைச் சரிப்படுத்திக்கொண்டார்; மீசைமயிர், தலைமயிர் முதலியவற்றிற்கு கறுப்புச்சாயம் ஏற்றி, தைலம், அத்தர் முதலியவைகளால் மெருகும் வாசனையும் கொடுத்துக் கொண்டார்; வைரக் கடுக்கன்கள், நவரத்ன மோதிரங்கள், தங்க மூக்குக்கண்ணாடி முதலியவற்றை அணிந்து கொண்டார். வைரங்கள் பதிக்கப்பட்ட தங்கச்சங்கிலியுள்ள கைக்கடிகாரத்தை எடுத்து மார்பில் சொருகிக் கொண்டார்; பட்டும் ஜரிகையும் நிறைந்த துல்லியமான ஆடைகளைத் தரித்துக் கொண்டார்; உரலில் இடிக்கப்பட்ட வெற்றிலை, பாக்கு, வாசனைத் திரவியங்கள் முதலியவற்றின் துகையலை வாயில் போட்டு மென்றுகொண்டு வாயில் சிவப்பு நிறம் நன்றாகப் பற்றி இருக்கிறதா என்று அடிக்கடி தமது முகத்தை நிலைக் கண்ணாடியில் பார்த்துத் திருப்தியடைந்தவராய், ஸோபாவின் பக்கத்தில் இருந்த பொத்தானை அழுத்த, முன் சொல்லப்பட்டபடி அவரது அந்தரங்க காரியதரிசியான கோவிந்தன் வந்து நின்றான்.

அவனைக் கண்ட ஜெமீந்தார், "கோவிந்தா! முக்கியமான சில சங்கதிகள் உன்னிடத்தில் சொல்லவேண்டும். அதற்காகத்தான் நான் உன்னை வரவழைத்தேன்" என்றார்.

கோவிந்தன் வணக்கமாக நின்று, "என்ன சங்கதி? சொல்லுங்கள்" என்றான்.

*ஜெமீந்தார்:* இன்றைய தினம் முழுதும் நான் இந்த மாடத்திலேயே இருக்கப் போகிறேன். என்னைப் பார்ப்பதற்கு இன்றைய தினம்யார் வந்தாலும் சரி,எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல், அவர் யார் என்பதைக் கேட்காமல், அவரை என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும். அப்படி வருகிறவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, பெரிய மனிதராக இருந்தாலும் சரி, பிச்சைக் காரனாக இருந்தாலும் சரி, அவரிடத்தில் எவ்விதமான பேச்சும் கொடுக்காமல் அவரை என்னிடத்தில் அனுப்பிவிட வேண்டும் தெரிகிறதா?

*கோவிந்தன்:* ஓ!தெரிகிறது. அப்படியே செய்யச் சொல்லுகிறேன்.

*ஜெமீந்தார்:* இதோ எனக்குப் பக்கத்தில் ரோஜாப்பூக்கள் நிறைந்துள்ள இரண்டு பூத்தொட்டிகள் இருக்கின்றன அல்லவா. இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிஸ்டலை மறைத்து வைக்க வேண்டும். இரண்டு பிஸ்டலும் தோட்டாக்கள் போடப்பட்டு, வெடிப்பதற்கு ஆயத்தமானவையாக இருக்க வேண்டும். சுலபத்தில் எடுக்கும்படி அவைகளின் கைப்பிடிகள் மேலே இருக்கவேண்டும். பிஸ்டல் இருக்கிறது என்பது வெளியில் தெரியாதபடி ரோஜாப் புஷ்பச் செண்டுகளை அவற்றின்மேல் வைத்து மூடி வைக்க வேண்டும். தெரிகிறதா?

*கோவிந்தன்:* (வியப்போடு) கிட்டிக்கப்பட்ட பிஸ்டல் களையா அப்படி மறைத்துவைக்கச் சொல்லுகிறீர்கள்?

*ஜெமீந்தார்:* ஆம்.ஆம். பிஸ்டல்களைத்தான். தோட்டாக்கள் அல்லாமல் வெறும் பிஸ்டல்களை வைத்துவிடப் போகிறாய்; ஜாக்கிரதை. அதிலிருந்து எனக்கு ஏதாவது பெருத்த அபாயம் நேருமோ என்று நீ கொஞ்சமும் பயப்படவேண்டாம். நான் இன்றைய தினம் எதிர்பார்க்கும் மனிதர் ஒருவேளை மூர்க்கத்தனமாக நடந்துகொண்டால், அப்போது உபயோகப் படுத்தலாம் என்ற கருத்தோடு அவைகளை வைக்கச்

சொல்லுகிறேன். வேறொன்றும் இல்லை. அதைப் பற்றி நீ கொஞ்சமும் யோசிக்க வேண்டாம்.

**கோவிந்தன்:** சரி; உத்தரவுப்படியே வைக்கிறேன்.

**ஜெமீந்தார்:** அவைகள் மாத்திரமல்ல. நீ இன்னும் சில காரியம் செய்யவேண்டும். யாராவது மனிதர் என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருந்தால், நீ இருக்கும் அறையின் ஜன்னலில் படுதாவை விட்டு ஜன்னலை மூடிவிடவேண்டும். ராஜபாட்டையிலிருந்து உன்னுடைய அறையின் ஜன்னலைப் பார்த்தால், அது படுதாவினால் மூடப்பட்டிருக்கிறது என்பது வெளியில் இருப்போருக்குத் தெரியவேண்டும். நீ ஜன்னலின் படுதாவை மூடிவிட்டு அந்த அறையை விட்டு எங்கேயும் போகாமல் அவ்விடத்திலேயே இருக்க வேண்டும். உன் அறையிலிருக்கும் மணி ஒருதரம் அடித்தால், நீ உடனே அந்தப் படுதாவை விலக்கிவிட வேண்டும்; தெரிகிறதா?

**கோவிந்தன்:** ஓ! நன்றாகத் தெரிகிறது.

**ஜெமீந்தார்:** ஆனால், உன்னுடைய அறையிலுள்ள மணி இரண்டுதரம் அடித்துக்கொண்டால், நீ உடனே புறப்பட்டு அவசரமாக என்னிடத்திற்கு வரவேண்டும். நீ இங்கே வருவதில் கொஞ்சமும் தாமசம் ஏற்படக்கூடாது. இப்போது நான் சொன்னவைகளை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வாயா?

**கோவிந்தன்:** அப்படியே! அப்படியே!

**ஜெமீந்தார்:** சரி; அவ்வளவுதான் நீ செய்யவேண்டியது. நீ போய் வாசல் காப்போனிடம் சொல்லி, உள்ளே வரும் மனிதர் யாராக இருந்தாலும் தடுக்காமல் விடும்படி சொல்லிவிட்டு வந்து உன்னுடைய அறையில் போய் இரு. நமக்கு வேண்டிய ஆகாரங்களை எல்லாம் அந்தந்தக் காலத்தில் இங்கேயே கொண்டுவந்து வைத்துவிடும்படி பரிசாரகனிடத்தில் சொல்லி வைத்துவிடு - என்றார்.

அவர் சொன்னவைகளை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்ட கோவிந்தசாமி, அவ்வாறே நடந்து கொள்வதாக உறுதி கூறியபின், அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டான்.

ஜெமீந்தார் உடனே தமது இரும்புப்பெட்டியைத்திறந்து அதற்குள் இருந்து நூறு ரூபாய் நோட்டுகளில் இருபது நோட்டுகள் எடுத்து, அவைகளில் அச்சியற்றப்பட்டிருந்த நம்பர்களை ஒரு காகிதத்தில் குறித்து பத்திரமாக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு இருபது நோட்டுகளையும் கற்றையாக சேர்த்துக் கட்டித் தமது சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார். அவ்வாறு அவர் அன்றைக்கு வேண்டிய சகலமான ஏற்பாடுகளையும் ஒழுங்குப் படுத்தி வைத்துவிட்டு மிகவும் திருப்தி அடைந்தவராய் உட்கார்ந்திருக்க, கடிகாரம் 8 மணி அடித்தது. ஒவ்வொருநாட் காலையிலும் தபாற்காரனால் கொண்டுவந்து கொடுக்கப்படும் கடிதங்களை யெல்லாம் ஒரு வேலைக்காரன் வாங்கிக் கொணர்ந்து காலை 8 மணிக்கு அவரிடத்தில் கொடுப்பது வழக்கம். ஆகையால், அந்த வேலைக்காரன் வாசற்படிக்கு வெளியில் நின்றபடி, ‘‘தபால் வந்திருக்கிறது; எஜமானே!'' என்றான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் உள்ளே வரும்படி அவனுக்கு அநுமதி கொடுக்க, அவன் ஒரு வெள்ளித்தட்டில் இருபது முப்பது கடிதங்களை வைத்துக்கொண்டு வணக்கவொடுக்கமாக உள்ளே நுழைந்து அதை அவருக்கு எதிரிலிருந்த மேஜையின் மீது மரியாதையாக வைத்துவிட்டு வெளியில் சென்றான்.

ஒவ்வொரு நாளும் அதேமாதிரி அவருக்கு எண்ணிறந்த கடிதங்கள் வருவது உண்டு. அவைகளுள் பெரும்பாலானவை அவரது அந்தரங்க நண்பர்களால் எழுதப்படுபவையாகவே இருக்கும். அவரோடு கூட இருந்து சந்தோஷமாக விருந்துண்டு பொழுது போக்கிவிட்டுப் போவதற்காக, அவரது நண்பர்கள் ஒவ்வொரு நாளும் அவரது மாளிகைக்கு வருவது வழக்கம். தாங்கள் எத்தனை மணிக்கு வருகிறோம் என்பதை அவர்கள்

கடிதத்தின் மூலமாக எழுதி முன்னதாகவே அனுப்புவது வழக்கம். அதுவுமின்றி, அந்த ஜெமீந்தாரையும் தங்களது வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு வரும்படியாகஅழைப்ப தற்கும் சில கடிதங்கள் வருவது உண்டு. ஒவ்வொரு நாளிலும் சராசரி அவரைப் பார்க்க பத்து நண்பராவது வருவர். ஆனால், அன்றைய தினம் அத்தனை கடிதங்கள் வந்ததைக் கண்ட ஜெமீந்தார் மிகுந்த கவலை கொண்டு அன்றையதினம் தமது மாளிகைக்கு எவரும் வராமல் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டவராய் அந்தக் கடிதங்களை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

அவரால் படிக்கப்பட்ட முதல் கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது-

மகாகனம் பொருந்திய பெரியப்பா அவர்களுடைய பொற்பாத கமலங்களில் அடியாள் லீலாவதி அநந்தமான தெண்டன் சமர்ப்பித்து எழுதிக்கொள்ளும் விக்ஞாபனம்; உபயக்ஷேமம்.

இந்தக் கடிதத்திலுள்ள என்னுடைய எழுத்தைப் பார்க்க உங்களுக்கு நிரம்பவும் ஆச்சரியம் உண்டாகும் என்றே நான் நினைக்கிறேன். அதோடு நான் இந்த ஊருக்குத் திரும்பி வந்து விட்டேன் என்ற செய்தியைக்கேட்பது உங்களுக்கு வியப்பாகவே இருக்கும். நான் சென்ற ஞாயிற்றுக்கிழமை சாயுங்காலம் இந்த ஊருக்கு வந்தேன்; வந்தவள் வெளியில் போய் யாரையும் பார்க்காமல் மறைவாக இருக்கிறேன். அதன் காரணத்தை நீங்கள் எளிதில் யூகித்துக்கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன். நாளைய தினமாகிய புதன்கிழமை பகல் 12 மணிக்கு நான் வந்து உங்களைப் பார்த்துவிட்டுப் போக உத்தேசித்து இருக்கிறேன். அப்போது நான் உங்களிடத்தில் மிக வும் முக்கியமானசில விஷயங்களைக் குறித்துப் பேசவேண்டி யிருக்கிறது. ஆகையால், நீங்கள் அவசியம் ஜாகையில் இருக்கவேண்டுமாய் மிகவும் பணிவாகக் கேட்டுக்

கொள்ளுகிறேன். மற்ற விவரங்களை எல்லாம் முகதாவில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உங்களிடம் உண்மையும் பணிவும் உள்ள பெண்
லீலாவதி

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த ஜெமீந்தார் கரை கடந்த மகிழ்ச்சியும் மன இளக்கமும் கொண்டவராய், ''ஆகா! லீலாவதியைப் பார்க்க வேண்டும் என்று நான் எவ்வளவு காலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். அவள் இருக்கிற இடம் தெரியாமல் அல்லவா இருந்தது. நல்ல வேளையாக அவளே வருகிறாள். வரட்டும். எனக்கு வேறே நாதி யார் இருக்கிறார்கள்? என்னுடைய சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள இந்த லீலாவதியையும் இவளுடைய அண்ணனான கலியாண ராமனையும் தவிர, வேறு யார் இருக்கிறார்கள்? எனக்கோ பெண்டு பிள்ளைகள் ஒருவரும் இல்லை. என்னுடைய அபாரமான சொத்துகள் எல்லாம் கடைசியில் இவளுக்கும், கலியாணராமனுக்குமே போய்ச் சேரப்போகிறது. என் குழந்தைகளாக இருந்தால் என்ன? என்னுடைய தம்பியின் குழந்தைகளாக இருந்தால் என்ன? அவர்களுக்கும் தாய் தகப்பன் முதலிய யாருமில்லை. நான் ஒருவன்தானே அத்திப் பூத்ததுபோல அவர்களுக்குப் பெரியப்பனென்று இருக்கிறேன். இவளும் இவளுடைய அண்ணனும் என் மனசுக்குப் பிடிக்காத சில தவறுகளைச் செய்திருக்கிறார்கள் ஆனாலும், அதற்காக நான் எவ்வளவு காலம்தான் இவர்களிடத்தில் வருமம் பாராட்டுகிறது. இந்த லீலாவதி என்னிடத்தில் வைத்துள்ள வாத்சயல்யத்துக்கும் பய பக்திக்கும் அளவுண்டா? இந்த உலகத்தில் இவளொருத்தி விஷயத்திலேதான் என் மனசில் எப்போதும் குறையா வாஞ்சை இருந்து வருகிறது. சில வருஷங்களுக்கு முன் நான் கடுமையான நோயில் பட்டு, படுத்த படுக்கையாகக் கிடந்த காலத்தில் என்னைக் காப்பாற்றுவதற்கு இவள் இரவுபகல்

பட்டபாட்டை நான் மறக்க முடியுமா? ஒரு நாளும் முடியாது. அப்படிப்பட்ட அன்பு நிறைந்த என் அருமை லீலாவதியை நான் இனியும் புறக்கணிப்பது சுத்த மிருகத்தனம். நான் தேடிக் கண்டு பிடிக்கும் சிரமம் இல்லாமல் அவளே வருகிறாள். அதுதான் என்னுடைய அதிர்ஷ்டம். நல்ல வேளையாக நான் இன்றையதினம் வீட்டிலேயே இருக்கும்படி நேர்ந்திருக்கிறது. ஒரு வேளை அவள் வந்து என்னோடு பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில், அந்தத் திருடன் வந்துவிடுவானோ என்னவோ, அப்படி வந்தால் என்ன? லீலாவதியை உள்ளே அனுப்பி விடுகிறேன்'' என்று பலவாறு தமக்குள் எண்ணமிட்டவராய், இரண்டாவது கடிதத்தை எடுத்துப் படிக்கலானார். அது அவரது சமஸ்தானத்தைச் சேர்ந்த குடியானவன் ஒருவனால் நிலவரி சம்பந்தமாக எழுதப்பட்ட கடிதமாக இருந்தது. அதன்பிறகு படிக்கப்பட்ட நாலைந்து கடிதங்களும் இரண்டாவது கடிதத்தைப்போல சமஸ்தான சம்பந்தமானவையாக இருந்தன. அவர் அவைகளை எல்லாம் ஒருபுறமாக வைத்துவிட்டு இன்னொரு கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

மகாகனம் பொருந்திய பெரியப்பாவின் சமூகத்துக்கு அடியேன் கலியாணராமன் வணக்கமாக எழுதிக்கொள்ளும் லிகிதம் உபய க்ஷேமம். உங்களுக்கு நான் இந்தக் கடிதத்தை எழுதி அனுப்பும்படியான அவசியம் ஏற்பட்டதைப் பற்றி என் மனம் நிரம்பவும் வருந்துகிறது. ஆனாலும், சில முகாந்திரங்களை முன்னிட்டு நான் அவசியம் நாளைய தினம் உங்களைக் கண்டு பேசவேண்டியதாக நேர்ந்துபோய் விட்டது. நாளை தினமாகிய புதன்கிழமை பகல் ஒரு மணிக்கு நான் அங்கே வந்து உங்களைப் பார்க்கலாம் என்று உறுதியாக நம்பியிருக்கிறேன்.

இங்ஙனம் பணிவுள்ள
கலியாணராமன்

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த ஜெமீந்தாரது மனதில் மிகுந்த ஆத்திரமும் அருவருப்பும் உண்டாயின. அவர் தனது கையிலிருந்த கடிதத்தை மேஜையின்மீது அலட்சியமாக எறிந்தவராய், ''போக்கிரிப் பையன்! அயோக்கியன்! என்னுடைய உறவையே வெறுத்து என்னை அலட்சியம் செய்து விலக்கிவிட்டுப் போனான்; இப்போது என்னிடம் வருவதாக எழுத இவனுக்குக் கொஞ்சமும் வெட்கமில்லை. இருக்கட்டும். அவ்வளவு முறுக்காகப் போனவன் என்ன காரணத்தினால் திரும்பவும் என்னிடம் வருகிறான் என்பதை நான்அறிந்துகொள்ள வேண்டும். சரி; வரட்டும். ஆனால் ஒரு விஷயம் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. என்னைவிட்டுப் போன அண்ணனும் தங்கையும் என்னிடம் திரும்பி வருவது ஒரே நாளில் ஒத்துக்கொண்டது மிகவும் அதிசயமாக இருக்கிறது. கொஞ்சகாலமாக இவர்கள் இருவருக்குமே மன ஒற்றுமை இல்லை என்பது எனக்குத் தெரிகிறது. இப்போதும் இவர்கள் ஒருவரையொருவர் கலக்காமல் தனித்தனியாகவே தான் வருகிறார்கள் போல இருக்கிறது'' என்று எண்ணியபடி இன்னம் சில கடிதங்களை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்து அவைகள் அவ்வளவு முக்கியமான விஷயங்களல்ல என்று உணர்ந்து அவைகளை அலட்சியமாகப் போட்டுவிட்டு கடைசியாக இன்னொரு கடிதத்தை எடுத்துப் படித்தார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

எனது அந்தரங்க நண்பரும், மகாப்பிரபுவுமான ஜெமீந்தார் துரை அவர்களுடைய திவ்விய சமுகத்திற்கு தங்களுடைய அடியாரான **அம்மணிபாயி** மிகவும் தாழ்மையாக எழுதிக் கொள்ளும் விண்ணப்பம்.

மிகவும் அவசரமான ஓர் உதவியை நான் தங்களிடத்தில் நாடுகிறேன். அதைத்தாங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த விஷயம் இன்னதென்று

வெளிப்படையாகக் கடிதத்தில் எழுத எனக்கு இஷ்டமில்லை. ஆகையால், நான் நாளையதினம் மத்தியானம் மூன்று மணிக்குத் தங்களுடைய அரண்மனைக்கு வர உத்தேசிக்கிறேன். இந்த ஏழையின்மேல் தயை கூர்ந்து எஜமானவர்கள் எனக்குத் தரிசனம் கொடுத்து என்னுடைய கோரிக்கையையும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் அந்தரங்க சிநேகிதை
அம்மணிபாயி.

- என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த ஜெமீந்தார் மிகுந்த குதூகல மடைந்தவராய், "பேஷ்! பலே! இன்றைய தினம், எதிர்பார்க்கக்கூடாத மனிதர்களெல்லாரும் வருகிறார் கள்! நான் இன்று முழுதும் வெளியில் போகாமல் இங்கே இருந்தது நிரம்பவும் அநுகூலமாகப் போய்விட்டது. ஆனால், இந்த அம்மணிபாயி என்னிடத்தில் பணம் கடன் வாங்கத்தான் வருகிறாள் என்பது நிச்சயம். அவள் எப்போதாவது திருப்பிக் கொடுக்கிறவளாக இருந்தாலல்லவா அதைக் கடன் என்று சொல்லலாம். அவள் என்னிடத்தில் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு போய்ச் சரியாக இரண்டுமாச காலம் ஆகவில்லை; மறுபடியும் கடன்கேட்க வருகிறாள்போல இருக்கிறது. அந்த ஆயிரம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு போக அவள் ஒருகால் வருகிறாளோ என்று சந்தேகிப்பதற்குக் கூட இடமில்லை; ஏதோ அவசரமான ஒரு காரியம் என்னால் ஆக வேண்டுமென்று அவள் நன்றாக எழுதியிருக்கிறாள். அழகான பெண் பிள்ளை களுக்குக் கணக்கில்லாமல் கடன் கொடுக்க என்னைப் போன்ற மருங்காபுரி ஜெமீந்தார் இருக்கையில் அம்மணிபாயி போன்றவர்களுக்கு நல்ல அதிர்ஷ்டந்தான்" என்று தமக்குள் சிந்தித்துக் கொண்டவராய், மிகுதியிருந்த கடிதங்களை யெல்லாம் ஒன்றன்பின் னொன்றாகப் படித்து முடித்தார். அவைகள் நமது கதைக்குச் சம்பந்தமற்றவை ஆகையால்,

அவற்றின் விவரத்தை நாம் அறிந்து கொள்வது அநாவசிய மான விஷயம்.

அவ்வாறு ஜெமீந்தார் தமது அன்றைய தபால்களை யெல்லாம் படித்து முடித்து எல்லாக் கடிதங்களையும் எடுத்து மேஜைக்குள் வைத்துவிட்டு ஸோபாவை விட்டு எழுந்து எதிர்ப்பக்கத்திலிருந்த ஜன்னலண்டை போய் நின்றுகொண்டு ராஜபாட்டையை நோக்கினார். தமது பங்களாவிற்கு அடுத்த பங்களாவின் எதிர்ப்பக்கத்தில் பாட்டை யோரமாக ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்து, ''கண்ணில்லாக் கபோதியாச்சே தாயீ! இரண்டு கண்ணுமில்லாத குருடனைப் பார்த்து ஒரு தருமம் செய்யுங்க ஐயமாரே!'' என்று மிகவும் பரிதாபகரமாகக் கூவிப் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். ஜெமீந்தார் திடுக்கிட்டு மிகுந்த பிரமிப்பும் ஆச்சரியமும் அடைந்தவராய் அவனை உற்று நோக்கினார். அவன் உடம்பு முழுதும் அழுக்குப் படிந்த கந்தைத் துணிகளைத் தாறுமாறாகப் போட்டுக் கொண்டிருந்தான். அவனது தலைமயிர் முழுதும் அசங்கியமான சடைகளாக அவனது தலையில் நாற்புறங்க ளிலும் விகாரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அவன் தனது கையில் ஒரு திருவோட்டை வைத்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தபடி பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அந்தத் திருவோட்டிலும், அவனுக்கு முன்னால் விரிக்கப்பட்டிருந்த கந்தைத்துணியின் மேலும் அரிசியும் பைசாக்களும் கிடந்தன. அவனது கண்களைச் சுற்றிலும் வெள்ளையான ஏதோ மருந்து பூசப்பட்டிருந்ததன்றி, கண்கள் அரைப்பாகம் இமைகளால் மூடப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட பரிதாபகரமான கோலத்தோடு காணப்பட்ட அந்தப் பரதேசியைக் கண்ட ஜெமீந்தார் வியப்படைந்து மூக்கின்மீது விரலை வைத்து ''ஆகா! தத்ரூபம் பிச்சைக்காரன் போலவே இருக்கிறதே! ஆகா! இந்த இன்ஸ்பெக்டருடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! போலீஸ் இன்ஸ்பெக்டர் இந்த மாதிரி பிச்சைக் காரன் போல உருமாறி உட்கார்ந்திருக்கிறார் என்று

கண்டுபிடிக்க ஈசுவரனாலும் முடியாது'' என்று தமக்குத்தானே நினைத்து ஆனந்தம் கொண்டு பூரிப்படைந்தவராய் நிற்க, அந்தச் சமயத்தில் ஒரு பெட்டிவண்டி வந்து அவரது மாளிகையின் வாசலில் நின்றது. அந்த வண்டியில் வந்தது யாரென்பதை அந்தமேன்மாடத்திலிருந்து அறிந்துகொள்ளக்கூடவில்லை ஆகையால், அவர் அவ்விடத்தைவிட்டுப் போய்த் தமது ஸோபாவின் மீது முன்போல உட்கார்ந்து கொண்டு வண்டியில் வந்த மனிதரது வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்.

அந்தப் பெட்டிவண்டி, அவரது மாளிகைக்குள் நெடுந்தூரம் சென்று அவ்விடத்தில் காணப்பட்ட தெற்றுவாச (திட்டிவாச) லண்டையில் நின்றது. அந்த வண்டிக்குள்ளிருந்து ஒரு மடந்தை கீழே இறங்கினாள். அவள் சுமார் இருபது வயதடைந்தவளாகவும், அற்புதமான அழகு வாய்ந்தவளாகவும் இருந்தாலும், அவளது முகம் மிகுந்த விசனத்தைக் காண்பித்தது. அவ்வாறு அவளது வதனம் துயரத்தைக் காண்பித்தமையால், அவளது தோற்றம் காண்போர் மனதை உருக்கிக் கலக்கக் கூடியதாக இருந்தது.

அவ்விடத்திலிருந்த வாசல்காப்போன், அந்த ஸ்திரீ இன்னார் என்பதை உடனே அறிந்து மிகவும் மரியாதையாகவும் வணக்கமாகவும் குனிந்து ஒரு கும்பிடுபோட்டு உள்ளே அனுப்ப, கதவிற்கு உட்புறத்தில் ஆயத்தமாக நின்ற இன்னொரு வேலைக்காரன் அவளை வணங்கி வரவேற்று மேன்மாடத்திலுள்ள வெல்வெட்டு மாடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், லீலாவதியம்மாள் வந்திருப்பதாக மருங்காபுரி ஜெமீந்தாரிடத்தில் தெரிவிக்க, அவர் மிகுந்த மகிழ்ச்சியும் ஆனந்தமும் கொண்டவராய், உடனே எழுந்து புன்னகை தவழ்ந்த முகத்தோடு ஓடிவந்து அந்தப் பெண்மணியைக் கண்டு ''வா; அம்மா! லீலாவதி!'' என்று கரைகடந்த வாத்சல்யத்தோடு அவளை வரவேற்று உள்ளே அழைத்துக்

கொண்டுபோக, அவளும் மட்டுக்கடங்கா மகிழ்ச்சியும் வாஞ்சையும் கொண்டவளாய் அவரை வணங்கி உள்ளே வந்து அவரது ஸோபாவிற்குப் பக்கத்தில் பெண்பாலார் உட்காருவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் ஆசனத்தின் மீது உட்கார்ந்து கொண்டாள். கிழஜெமீந்தார் தமது ஸோபாவை அவளுக்கு அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கரைபுரண்ட அன்பும், ஆதரவும் கண்களின் வழியாக ஜ்வலிக்க அவளது விசனகரமான முகத்தைப் பார்த்துக் கலங்கி உருகினார். ஒருமனிதன் உலகத்திலுள்ள மற்ற மனித வகுப்பை வெறுத்து, சுயநலம் பாராட்டி, அறுத்த கைக்குச் சுண்ணாம்பு கொடுக்காத பரமலோபியாக இருந்தாலும், அவனால் வளர்க்கப்படும் நாய்க்குட்டியினிடத்திலாவது அவனுக்கு அளவிறந்த பிரியம் இருக்கும். அதுபோல, ஈவிரக்கம் இல்லாமல் கொள்ளை கொலை முதலியவற்றை நடத்தும் பரம சண்டாளனான கிராதகன்கூட தனது வைப்பாட்டியிடத்தில் தாசாநு தாசனாக இருப்பான். வெடுவெடுப்பும் கடுகடுப்பும் பொறாமையும் அகங்காரமுமே நிறைந்தவளான ஒரு மலட்டுப் பெண்பிள்ளை உலகிலுள்ள மற்ற மனிதரையெல்லாம் வெறுத் தாலும், ஒரு பூனைக்குட்டியையாவது எடுத்து வளர்த்து அதை அன்பாக ஊட்டி வளர்த்து அதற்கு நகைகள் போட்டு அலங்கரித்து மகிழ்ச்சி யடைவாள். கள்ளனுக்கும் கன்னக்கோல் சார்த்த ஓர் இடம் உண்டு என்பதுபோல, மனித இயற்கை என்னவெனில், ஒருவன் எவ்வளவு தான் கடின ஹிருதயம் உடையவனாக இருந்தாலும் அவன் தனது பிரியத்தை எவரிடத்திலாவது அல்லது எந்த வஸ்துவினிடத்திலாவது வைத்திருப்பான். அதுபோல, நமது மருங்காபுரி ஜெமீந் தாருக்குப் பெண்டுபிள்ளைகள் உறவினர் முதலிய எவருமில்லை. ஆகையால், அவர் நெடுங்காலமாக ஏகாங்கியாக இருந்து வந்தார். நல்ல அழகான யௌவன ஸ்திரீகளைக் கண்டால், அவரது மனதில் சந்தோஷமும், ஆனந்தமும் உண்டாகும். ஆனால், அந்த உணர்ச்சி நீடித்து

நிற்காது. அவர் ஒருத்தியோடு ஒருநாள் பழகுவாரானால், மறுநாள் அவள் அவருக்கு வேப்பங்காய் போல ஆகிவிடுவாள். அவர் அப்படிப்பட்ட அற்பசித்தமுடையவர். ஆனாலும், தமது தம்பியின் மகளான லீலாவதியிடத்தில் மாத்திரம் ஆழ்ந்த வாத்சல்யமும் என்றைக்கும் மாறாத உறுதியான பற்றும் இருந்து வந்தன. அவளது அண்ணனான கலியாணராமனை அவர் விஷம் போல வெறுத்தார். ஆனால், லீலாவதியின் விஷயத்திலோ அவர் குழந்தைப் பருவத்திலிருந்து அவளிடத்தில் ஆழ்ந்த பிரியம் வைத்து அவளை அருமையாக வளர்த்து வந்தார். ஆனால், அவள் புஷ்பவதியாகிச் சில வருஷகாலத்தில் அவர் விரும்பாத ஒரு புருஷனைக் காதலித்து, கிழவருக்குத் தெரியாமல், அந்தக் காதலனது வீட்டிற்குப் போய்விட்டாள். கிழவர் அவளுக்கு எவ்வளவு தூரம் புத்திமதி சொல்லியும் கேளாமல், அவள் அந்தக் காதலனையே மணந்து கொண்டாள். அதன்பிறகு சில காலம் வரையில், அவர் அவளைத் தமது ஆயுட்கால பரியந்தம் பார்ப்பதில்லை என்றும், அந்தக் கலியாணத்தைச் சரியான கலியாணமாக ஒப்புக்கொள்வதில்லை என்றும் அவளதுகணவனோடு பேசுவதில்லை என்றும் உறுதி செய்துகொண்டார். ஆனால், வருஷம் செல்லச் செல்ல அவரது உறுதி தளர்ந்து கொண்டேவர, அவரது இயற்கை வாத்சல்யம் திரும்பிப் பொங்கி யெழுந்து அவரை வதைத்துக் கொண்டே இருந்தது. அந்தக் கலியாணத்தின் பிறகு அவள் தனது கணவனோடு வெளியூர் களுக்குப் போயிருந்ததாக, அவர் கேள்வியுற்றிருந்ததன்றி, எப்படியாவது அவளை மறுபடியும் தாம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தார். அவ்வாறு அவரை விட்டுப் பிரிந்து போன லீலாவதி தானாகவே இப்போது திரும்பி வந்தாள். ஆகையால், அவளைக் காண்பது அவருக்குப் பரமாநந்த சுகமாக இருந்தது. ஆதிகாலத்தில் அவர் அவளிடத்தில் கொண்டிருந்த அளவில் அடங்காத அன்பும் உருக்கமும் ஒரே நொடியில் ஆற்று வெள்ளம்போலப் பொங்கித் திரும்பின.

அவர் மிகவும் உருக்கமாக அவளைப் பார்த்து, "லீலாவதி! இப்போதாவது வந்தாயே! நிரம்பவும் சந்தோஷமாயிற்று. ஆகா! உன்னைப் பார்த்து எத்தனை வருஷ காலம் ஆகிறது! முழுதும் புது மனுஷியாக அல்லவா நீ மாறிப்போயிருக்கிறாய். நீ நல்ல ராஜாத்தி போல இருப்பதைக் கண்டு உன்னை நான் தக்க இடத்தில் கொடுத்து நல்ல செல்வத்திலும் செல்வாக்கிலும் வைக்க நினைத்ததை எல்லாம் நீ கெடுத்துக் கொண்டாய். இப்போதும் உன்னைப் பார்த்தால் ஒரு சக்கரவர்த்தினி போலவே இருக்கிறாய். இவ்வளவு உன்னதமாக இருக்கும் நீ எவனோ ஒரு பரம ஏழையைக் கட்டிக்கொண்டு தவிக்கிறாய். உன்னுடைய முகம் பெருத்த விசனத்தைக் காட்டுகிறது. நீ தக்க இடத்தில் கலியாணம் செய்து கொண்டிருந்தால், உன் முகம் கோண, அந்தப் புருஷன் பார்த்துச் சகித்திருப்பானா? நடந்த விஷயங்களைப்பற்றி இனிப் பேசுவதில் பயன் என்ன? அது போகட்டும். உன்னுடைய முகம் மிகவும் துக்ககரமாக இருக்கிறதே! என்ன சமாசாரம்? நீ எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை. உனக்கு எவ்விதமான இடர் ஏற்பட்டது? அதை வெளியிடு; என்னால் ஆகக்கூடிய உதவியை எல்லாம் நான் செய்து, உன்னைச் சந்தோஷிப்பிக்கிறேன்" என்றார்.

மிகவும் அந்தரங்கமான அன்போடு பேசப்பட்ட அவரது சொற்களைக்கேட்ட லீலாவதியின் கண்கள் கலங்கின. தான் என்ன மறுமொழி சொல்வது என்பதை உணராமல் அவள் வெட்கிக் கீழே குனிந்தவளாய் சிறிதுநேரம் இருக்க, அதைக் கண்ட ஜெமீந்தார், "அம்மா லீலாவதி! என்னிடத்தில் கூட லஜ்ஜைப் படுகிறாயே! என்னால் உனக்கு எவ்விதமான உதவி தேவையானாலும் அதை நீ சொல்லத் தடை என்ன? ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றி என்னிடத்தில் பேச வேண்டும் என்று நீ உன் கடிதத்தில் எழுதியிருந்தாயே. அது என்ன விஷயம்? ஆனால், அந்த ஒரு மனிதனைப் பற்றிய விஷயத்தை மாத்திரம் நீ என்னிடத்தில் பிரஸ்தாபிக்கவே

கூடாது. அவனுக்கு நான் எவ்வித உதவியும் செய்யமுடியாது. நீ சம்பந்தப்படுகிற வரையில் உனக்கு என்னவேண்டுமோ அதை மாத்திரம் தெரிவி'' என்றார்.

அதைக்கேட்ட லீலாவதி மேலும் இரண்டொரு நிமிஷ நேரம் அஞ்சித் தயங்கி, ''நான் கேட்கப்போகும் உதவி, எனக்காகவே அன்றி வேறே எவருக்காகவும் இல்லை'' என்றாள்.

ஜெமீந்தார், ''அப்படியானால் நீ தைரியமாகக் கேட்கலாம். உனக்காக என்னுடைய உயிரை வேண்டுமானாலும் நான் கொடுக்கத் தயார். நீ வெட்கப்படாமல் சொல்லலாம்'' என்று வற்புறுத்திக் கேட்க, லீலாவதி, ''எனக்கு இப்போது கொஞ்சம் பணம்தான் வேண்டும். வேறே எந்த உதவியும் எனக்கு வேண்டாம்'' என்றாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் கண் கலக்கம் அடைந்தவராய் அன்பாக அவளை நோக்கி, ''அதுதான் கேட்பாய் என்று நானும் நினைத்தேன். ஆனால், இன்னொரு விஷயம். நீ பணத்தை வாங்கிக் கொண்டு போய் அந்த மனிதனிடத்தில் கொடுப்பாய்; அவன் சூதாட்டத்திலும் மற்ற துன்மார்க்கங் களிலும் செலவிட்டு எல்லாவற்றையும் விரயம் செய்து விடுவான். அப்படிச் செய்வதாக இருந்தால், அது என் மனசுக்குக் கொஞ்சமும் சகிக்காது'' என்றார்.

லீலாவதி, ''அப்படியெல்லாம் நடக்காது. தாங்கள் கொடுக்கும் பணத்தை நான் எனக்கே உபயோகப்படுத்திக் கொள்ளுகிறேன். என் வார்த்தையைத் தாங்கள் நிச்சயமாக நம்பலாம்'' என்று உருக்கமாக மொழிந்தாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்து, ''சரி, அப்படியானால் உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, அதை நான் தருகிறேன். நீ போகும்போது அதை வாங்கிக் கொண்டு போகலாம். இனிமேலாவது நீங்கள் இந்த

ஊரிலேயே இருக்கப் போகிறீர்களா? அல்லது, இன்னமும் ஊர் ஊராக அலைந்து திரியப் போகிறீர்களா?'' என்றார்.

லீலாவதி மிகுந்த கிலேசமும் துயரமும் அடைந்தவளாய் நாணித் தலை குனிந்து, ''பெரியப்பா! நான் இன்னமும் ஒரு மணி நேரந்தான் இந்த ஊரில் இருப்பேன். அதற்குள் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று அவசரமாக வந்தேன். இன்றையதினம் புறப்பட்டுப் போனால் நான் திரும்பி வந்து உங்களைப் பார்க்க வருஷக் கணக்கில் பிடிக்கும்'' என்று மிகுந்த விசனத்தோடு கூறினாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் கலக்கமும் சங்கடமும் அடைந்து, ''என்ன குழந்தாய்! நீ பேசுவது ஆச்சரியமாக இருக்கிறதே! இவ்வளவு காலம் கழித்து வந்தாய். இப்போது புறப்பட்டுப் போனால் திரும்பிவர வருஷக் கணக்கில் பிடிக்கும் என்கிறாய். அப்படி இருந்தும் என்னோடுகூட நாலைந்து நாளாவது சந்தோஷமாக இருந்துவிட்டுப் போகாமல் இப்படி அவசரப்பட்டுக் கொண்டு ஓடுகிறாயே. நீ வராமலே இருப்பதை விட நீ வந்து இப்படிப் போவதனால் என் மனம் படும் வேதனை பிரமாதமாக இருக்கிறதே! நல்ல வேளையாக இன்றையதினம் ஒரு மணிக்கு உன்னுடைய அண்ணனும் இங்கே வருவதாகக் கடிதம் எழுதியனுப்பி இருக்கிறான். நீ அவனையும் பார்க்க வேண்டாமா? அவனும் நீயும் சண்டையிட்டுப் பிரிந்தவர்களாக இருந்தாலும், அவன் உன்னோடு கூடப் பிறந்த அண்ணன் அல்லவா? வந்ததுதான் வந்தாய்; இன்றையதினம் முழுவதுமாக இருந்துவிட்டுப் போகலாகாதா?'' என்று அன்பொழுகக் கூற, அதைக் கேட்ட லீலாவதி பணிவாகவும் மரியாதையாகவும் பேசத் தொடங்கி, ''இல்லை பெரியப்பா! இன்று பகல் ஒன்றரை மணிக்கு இந்த ஊரிலிருந்து நாங்கள் புறப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. என்ன செய்கிறது? ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டபிறகு, அவர் சொல்லுகிறபடிதானே நான்

நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நான் இன்னம் கால்மணி நேரத்தில் திரும்பி அங்கே போய்ச்சேரா விட்டால், அமர்க்களம் ஆகிவிடும். அதுவும் தவிர, கடைசியாக நானும் அண்ணனும் சண்டையிட்ட பிறகு அவருடைய முகத்தில் விழிக்க எனக்கு நிரம்பவும் வெட்கமாக இருக்கிறது. நான் அவரோடு பேசினாலும், அவர் என்னோடு பேசமாட்டார் என்றே நினைக்கிறேன். பிறகு நான் இன்றையதினம் முழுதும் இங்கேயிருந்து அவரைச் சமாதானப்படுத்த நேரும். அதனால், எங்களுடைய பிரயாணம் தவங்கிப்போகும். ஆகையால், நான் இப்போது அண்ணன் வருவதற்கு முன்பாகவே போய்விட வேண்டும். இன்னொரு தடவை நான் வரும்போது அவரைப் பார்த்துச் சாவகாசமாக அவரோடு பேசிக்கொள்ளுகிறேன்'' என்று நயமாகவும் இறைஞ்சிய குரலாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார் மிகுந்த விசனமும் ஏமாற்றமும் அடைந்தவராய், ''சரி; உன்னுடைய சௌகரியம் போலச் செய். நீ ஏற்கெனவே பலவித இடுக்கண்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய். என்னால் உனக்கு இன்னமும் அதிகமான துன்பமும் சஞ்சலமும் உண்டாகவேண்டாம். நீ இவ்விடத்தி லேயே இரு. நான் போய் பணம் எடுத்துக் கொண்டு வருகிறேன்''என்று கூறிவிட்டுத் தமது ஆசனத்தை விட்டு எழுந்து, சற்று தூரத்திற்கு அப்பால் இருந்த இரும்புப் பெட்டியண்டைபோய் நூறு ரூபாய்நோட்டுகளில் ஐம்பது நோட்டுகளை எடுத்துக் கற்றையாய் கட்டிக்கொண்டு திரும்பி வந்து ''குழந்தாய்! இதோ ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது. இதைக் கொண்டுபோய், வீண் செலவு செய்யாமல், உனக்கே உபயோகப்படுத்திக் கொள்'' என்று அன்பாக மொழிந்த வண்ணம் அந்தக் கற்றையை லீலாவதியிடத்தில் கொடுக்க, அவள் தனது பெரிய தகப்பனாரது கரை கடந்த வாத்சல்யத்தை யும், அளவிறந்த தயாள குணத்தையும் கண்டு கலங்கிக் கண்ணீர் சொரிந்தவளாய், அதை வாங்கிக் கொண்டு தனது மனவெழுச்சியையும் அழுகையையும் அடக்க மாட்டாத

வளாய், தனது முன்தானையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அதைக் கண்ட ஜெமீந்தாரும் தமது விசனத்தையும் மனவெழுச்சியையும் தாங்க மாட்டாமல் தத்தளித்தார். கரை கடந்து பொங்கிப் பெருகி அவரது கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் வழிந்தன. அவர் லீலாவதியை மறுபடியும் நோக்கி, ''அம்மா லீலாவதீ! நீ எப்படியாவது முயற்சி செய்து மறுபடியும் அதிசீக்கிரத்தில் இந்த ஊருக்குத் திரும்பி வந்துசேர். எனக்கும் வயசாகிவிட்டது. நீ என்னுடைய அரண்மனையில் இருக்கமுடியாவிட்டாலும், இந்த ஊரிற்குள்ளாவது நீ இருந்தால், அடிக்கடி நீ என்னைப் பார்க்கவும், நான் என்னால் இயன்ற உதவியை அப்போதைக்கு அப்போது உனக்குச் செய்யவும் அநுகூலமாக இருக்கும்'' என்று மிகவும் உருக்கமாகவும் வாஞ்சையோடும் கூற, லீலாவதி அப்படியே முயற்சி செய்வதாக மறுமொழி கூற, அவரிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு வெல்வெட்டுமாடத்தைவிட்டுக் கீழே இறங்கித் தனது வண்டியில் ஏறிக்கொண்டு போய் விட்டாள்.

அவள் வந்து பிரிந்துபோனதனால் கிழவரது மனதில் ஏற்பட்ட கலக்கமும் சஞ்சலமும் ஒருவாறு அடங்கிய சமயத்தில் அவர் இருந்த வெல்வெட்டு மாடத்தின் முன் கதவைத் திறந்து கொண்டு அவரது தம்பியின் புத்திரனான கலியாணராமன் வந்து சேர்ந்தான்.

அவனது முகம் சந்தோஷத்தையாவது உற்சாகத்தையாவது காட்டாமல், கற்சிலையின் முகம்போல, சலனமற்றதாக இருந்தது. அதைக் காண மருங்காபுரி ஜெமீந்தாரது முகமும் வாட்டம் அடைந்து சுருங்கியது. இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட காட்சி, மிகவும் விசனகரமான இழவைக் குறித்துத் துக்கம் விசாரிப்பதற்காக இருவர் சந்திக்கும் காட்சி போல இருந்தது. கலியாணராமன் என்ற யௌவன புருஷனுக்கு சுமார் இருபத்திரண்டு வயதிருக்கலாம். அவன் மிகவும் வசீகர

மான அழகும், கூர்மையான அறிவும், கண்ணிய புத்தியும், மேலான குணங்களும் வாய்ந்த உத்தம புருஷன் என்பது ஜிலு ஜிலுவென்று ஜ்வலித்த குளிர்ச்சியான அவனது முகத்தோற்றத்தி லிருந்தே நன்றாக விளங்கியது. அப்படி இருந்தும் அவன் தனது பெரிய தகப்பனாரிடத்தில் அளவிறந்த அருவருப்பும் குரோதமும் கொண்டவன்போலக் காணப்பட்டவனாய், அவரிருந்த இடத்திற்கு அருகில் போய், ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு, ''பெரியப்பா! நான் உங்களிடம் மறுபடியும் வரும்படியாக நேர்ந்தது எனக்கு நிரம்பவும் விசனமாக இருக்கிறது. இருந்தாலும் வேறே வழியில்லா திருப்பதால், நான் வந்திருக்கிறேன்'' என்று நயமாகக் கூறினான்.

அந்த வார்த்தையைக்கேட்ட மருங்காபுரி ஜெமீந்தாரது முகம் கோபத்தினால் கருத்தது. கண்கள் கோவைப்பழம்போலச் சிவந்தன. தேகம் படபடவென்று துடித்தது. இருந்தாலும் அவர் தமது கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, ''ஏனப்பா! என்னிடத்தில் வந்தால், என்னுடைய உடம்பி லிருந்து ஏதாவது பயங்கரமான தொற்றுவியாதி கிளம்பிவந்து உன்னைப் பிடித்துக் கொள்ளும் என்று எண்ணுகிறாயா? கடுகு சிறுத்தாலும், காரம் குறையாது என்றபடி நீ பேசுகிறாய் போலிருக்கிறதே!'' என்று மனத்தாங்கல் அடைந்தவர்போலப் பேசினார்.

அதைக்கேட்ட கலியாணராமன், ''பெரியப்பா! நான் சாதாரணமாகப் பேசும்போதே நீங்கள் இப்படிக் கொடூரமாகப் பேசுகிறீர்கள். கடைசியில் நான் சண்டையிட்டேன் என்று ஆயாசப் பட்டுக் கொள்வீர்கள். பெரியப்பா, பெரியப்பா வென்று நான் அதிக வாஞ்சையோடு உங்களிடம் ஒட்டிக் கொண்டு உங்களுக்குப் பிரமாதமான மரியாதை செய்யா விட்டாலும், நான் உங்களை ஒரு நாளும் அவமரியாதை யாகவாவது அலட்சியமாகவாவது நடத்தக் கூடியவனல்ல. அப்படிஇருக்க, இல்லாத பொல்லாத வார்த்தைகளை எல்லாம் ஏன் உபயோகிக்க வேண்டும்?'' என்றான்.

*ஜெமீந்தார்:-* நீ என்னிடத்தில் வருவதைப்பற்றி வரும்போதே ஏன் சமாதானம் சொல்லிக்கொண்டு வரவேண்டும்? நீ என்னிடத்தில் வரக்கூடாதென்று நான் எப்போதாவது சொன்னதுண்டா? அல்லது, நீ வருவதைப் பற்றி நான் சங்கடப்பட்டேனா? ஒன்றுமில்லையே. அப்படி இருக்க, நீ சமாதானம் சொல்லவேண்டிய காரணமென்ன?

*கலியாணராமன்:* இதுவரையில் வராதவன் இப்போது திடீரென்று வருவது உங்களுக்குப் புதுமையாகவும் வியப்பாகவும் இருக்கும் என்று நினைத்து நான் சமாதானம் சொன்னேன். அற்ப விஷயத்தைப்பற்றி வீண் வார்த்தை வளர்க்க எனக்கு விருப்பமில்லை.நான் வந்த காரணத்தை உடனே சொல்லிவிடுகிறேன். எனக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறது. நான் செட்டிமார்களிடத்தில் போய்க்கடன் வாங்கினால், அது உங்களுக்கு அதிருப்தியாக இருக்கும் என்று நினைத்து நான் உங்களிடத்திலேயே கேட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்து இங்கே வந்தேன்.

*ஜெமீந்தார்:* சரியான வார்த்தை. உன் மனசில் உள்ளதை உள்ளபடி வெளியிட்டது எனக்கு நிரம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், நீ எப்போதும் தரும நியாயம் எல்லாம் எடுத்துப் பேசுவாய்; ஒழுங்கான நெறியை விட்டுப் பிறழ மாட்டாய். அப்படிப்பட்ட சுத்தமான நடத்தையுள்ள மனிதனான உனக்கு, செட்டிமார்களிடத்தில் கடன் வாங்குவது தவறு என்பது தோன்றவில்லையா?

*கலியாணராமன்:-* அது தவறு என்று நினைத்துத்தான், நான் செய்துகொண்ட பிரதிக்ஞையை மீறி மறுபடியும் நான் இங்கே வந்திருக்கிறேன். நீங்கள் பணம் கொடுக்காவிட்டால், கடன் வாங்கித் தான் ஆகவேண்டும். திருடக்கூடாது, பொய் சொல்லக் கூடாது. நமக்கு அவசியமான செலவுகளை நடத்தப் பணம் இல்லாவிட்டால் வட்டிக்குக் கடன் வாங்குவது தவறாகுமா? ஒரு நாளும் ஆகாது.

*ஜெமீந்தார்:-* சரி; அப்பா! இதோ தருகிறேன். வாங்கிக் கொண்டு போய்ச் சேர் - என்று கூறியவண்ணம் தமது ஆசனத்தை விட்டு எழுந்து இரும்புப் பெட்டியண்டை போய் இரண்டாயிரம் ரூபாய்க்கு நோட்டுகளை எண்ணி எடுத்துக் கொண்டு திரும்பி வந்து சேர்ந்தார். வந்தவர், கலியாணராமன், ரோஜாப் புஷ்பத் தொட்டியில் பூச்செண்டின் மறைவில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பிஸ்டல்களில் ஒன்றை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு மிகுந்த வியப்பும் முனிவும் அடைந்தவராய் குரூரமாக அவனை நோக்கி, ''அப்பா கலியாணராமா! உன்னுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எல்லாம் மிகவும் கண்ணியமாகவும் கம்பீரமாகவும் இருக்கின்றன. நீ செய்யும் காரியத்தைப் பார்த்தால் விளையாட்டுப் பிள்ளையின் அசட்டுக் காரியமாக இருக்கிறதே! நான் இங்கே இருந்த வரையில் மிகவும் பெருந்தன்மையாகப் பேசினாய்; நான் இவ்விடத்தைவிட்டுப் போனவுடன் இங்கே என்னென்ன சாமான்கள் இருக்கின்றன என்று சோதனை போட ஆரம்பித்துவிட்டாயே!

*கலியாணராமன்:* (மிகவும் கிலேசமடைந்து) பெரியப்பா! கோபிக்க வேண்டாம். எனக்கு ரோஜாப் புஷ்பத்தைக் கண்டால், ஆசை அதிகம் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். எனக்குப் பக்கத்தில் அழகாகக் கட்டிவைக்கப்பட்டிருந்த இந்த செண்டைப் பார்த்தவுடனே, அதை எடுத்து மோந்து பார்க்க வேண்டும் என்று ஓர் ஆசை உண்டாயிற்று. அதை எடுத்தேன். அதன் கீழே இந்தப் பிஸ்டல் இருந்தது. இது ஏதாவது வேடிக்கைப் பொருளாக இருக்குமோ என்ற எண்ணத்தோடு இதை எடுத்துப் பார்த்தேன். அதற்குள் நீங்கள் வந்தீர்கள். அவ்வளவே நடந்தது. நான் அந்தப் புஷ்பச் செண்டை எடுத்தது என் மேல் குற்றந்தான். மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் வேறே நவரத்னக் குவியலை இங்கே போட்டிருந்தால் கூட, நான் அதைக் கண்ணாலும் பார்த்திருக்க மாட்டேன் - என்றான்.

அந்தச் சமாதானத்தைக் கேட்ட மருங்காபுரி ஜெமீந்தார் தமது கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டவராய், அவன் வேண்டுமென்றே அவ்வாறு செய்யவில்லை என்று உறுதி செய்து கொண்டார். உடனே கலியாணராமன் அந்தப் பிஸ்டலை முன்னிருந்த இடத்தில் வைத்து, பூச்செண்டினால் முன்போல அதை மறைத்தான். அதே காலத்தில் ஜெமீந்தார் தாம் எடுத்து வந்த நோட்டுகளை அவனுக்கு எதிரில் வைத்து, ''இதோ இருக்கிறது நீ கேட்ட இரண்டாயிரம் ரூபாய். எடுத்துக்கொள். செட்டிமாரிடத்தில் போய்க் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகும்'' என்று குத்தலாக மொழிந்தார்.

அவரது உட்கருத்தை சரியானபடி உணராதவன்போல சாந்தமாகக் காணப்பட்ட கலியாணராமன், அந்த நோட்டுக் கற்றையை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டவனாய், ''சரி; நான் இப்படி அடிக்கடி இங்கே வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பது என் மனசுக்கே சங்கடமாக இருக்கிறது. இனிமேலாவது உங்களுக்கு இப்படிப்பட்ட தொந்தரவு இல்லாமல் போகும்படி என்னால் கூடியவரையில் முயற்சிக்கிறேன். உங்களுக்கு எவ்வளவோ அலுவல் இருக்கும். நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன்'' என்று கூற, அவர் மிகவும் முறுக்காகவும் அலட்சியமாகவும் அவனுக்கு உத்தரவு கொடுக்க அவன் அவ்விடத்தை விட்டு வெளியில் சென்றான்.

அதன்பிறகு ஜெமீந்தார் தமது பகற்போஜனத்தை அவ்விடத்திற்கே வரவழைத்து விரைவாக உண்டபின் எழுந்து, முன்பக்கத்திற்குச் சென்று பார்த்தார். அடுத்த பங்களாவிற்கு எதிரில் ராஜபாட்டையில் கண்ணில்லாக் கபோதி போல வேஷம்போட்டு உட்கார்ந்து பிச்சை வாங்கிக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்போதும் அவ்விடத்திலேயே இருந்ததை ஜெமீந்தார் கண்டு மிகுந்த மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தார். அந்த இன்ஸ்பெக்டர் அபாரமான வல்லமை வாய்ந்தவர் என்றும், அந்தத் திருடன் வரும் பக்ஷத்தில்

அவனோடு சென்று அவனது வரலாறுகளை எல்லாம் அவர் எப்படியும் அறிந்துகொண்டு விடுவார் என்றும் உறுதியாக எண்ணக் கொண்டவராய், அவ்விடத்தை விட்டு உள்ளேபோய் தமது ஸோபாவின் மீது முன்போல உட்கார்ந்து கொண்டார். அவரது மனம்முற்றிலும் சிறிது நேரத்திற்கு முன் தமக்கும் லீலாவதிக்கும், கலியாணராமனுக்கும் நடந்த சம்பாஷணை களிலேயே சென்று லயித்துப் போயிருந்தமையால், அவர் மற்ற விஷயங்களையெல்லாம் மறந்தவராக உட்கார்ந்திருந்த சமயத்தில் மணி மூன்று அடித்தது.

அதேகாலத்தில் அவரது மாளிகையின் வாசலில், மிகவும் உன்னதமான ஒரு பெட்டிவண்டி வந்து நின்றது. விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்திருந்த அழகான ஒரு ஸ்திரீ அந்த வண்டியிலிருந்து கீழே இறங்கினாள். அவளது வயது முப்பத்தைந்திற்குக் குறையாமல் இருக்கலாம். அவள் தனது மங்கைப்பருவத்தில் ஆடவரது கண்களையும் மனதையும் கவர்ந்து அவர்கள் மோகவெறி கொண்டு அலையச் செய்யக்கூடிய அபாரமான கட்டழகு வாய்ந்தவளாக இருந்தவள் என்பது அப்போதும் நன்றாகத் தெரிந்தது. அவளது தேகம் சிறிதளவு சதைப்பிடிப்பும் தழைப்பும் பெற்றிருந்தது. ஆனாலும், அவள் அப்போதும் யௌவன ஸ்திரீபோலவே மிகவும் வசீகரமாகக் காணப்பட்டாள்.

அந்த அழகிய மாதைக் கண்ட மருங்காபுரி ஜெமீந்தார் கரைகடந்த களிப்பும் குதூகலமும் அடைந்தவராய், தமது ஆசனத்தை விட்டு சடக்கென்று எழுந்து, ''அம்மணிபாயீ! வா வா'' என்று மிகுந்த அன்போடும் புன்னகைபூத்த முகத்தோடும் எதிர்கொண்டு அவளை வரவேற்றுத் தமது ஸோபாவிலேயே அவளையும் உட்காரச் செய்ய, அவள் மிகவும் ஜிலுஜிலுப்பாக இருந்த தனது வசீகரமுகத்தை மகிழ்ச்சியினாலும் புன்னகையாலும் இனிமையாக மலர்த்தித் தனது அழகிய பல்வரிசைகளை இன்பகரமாக வெளியில்

காட்டி, ''எஜமானுடைய விஷயத்தில் நான் நிரம்பவும் அபராதி யாகிவிட்டேன்; தங்களுக்கு அநேகம் இடங்களுக்குப் போகும்படியான எத்தனையோ ஜோலிகள் இருக்கும்; அவைகளையெல்லாம் நான் கெடுத்தது அன்றி, எனக்காக காத்திருக்கும்படியும் செய்துவிட்டேன். தங்களுக்கும் எனக்கும் சிநேகம் ஏற்பட்ட இந்த இருபது வருஷ காலத்தில் நான் தங்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட தவறுகளை லக்ஷக் கணக்கில் செய்திருப்பேன். அத்தனை தவறுகளையும் பொறுத்துக் கொண்டு எப்போதும் ஒரே மாதிரியாக இந்த ஏழையைக் காப்பாற்றிவரும் பெருவள்ளலான தாங்கள் இந்த ஒரு தவறையும் மன்னித்துக் கொள்ளவேண்டும்'' என்று மிகவும் நயமாகவும் தேன் ஒழுகும்படியாகவும் இனிமையாகக் கூறி, அவர் இருந்த ஸோபாவின் மீது மரியாதையாக ஒதுங்கி உட்கார்ந்து கொண்டாள்.

அவளது இனிய வசனத்தைக்கேட்ட ஜெமீந்தார் நிரம்பவும் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தவராய் அவளைப் பார்த்து மனங் குளிர்ந்து நகைத்து, ''என்ன அம்மணிபாயீ! நீ கூட எனக்கு உபசார வார்த்தை சொல்ல ஆரம்பித்து விட்டாயே! நீயும் நானும் இருந்து வந்த அன்னியோன்னிய சிநேகத்துக்கு நான் இதைக் கூடச் செய்யாவிட்டால் உனக்கு நான் வேறே எதைத்தான் செய்யப் போகிறேன். அதுபோகட்டும். எனக்கு ஒரு விஷயந்தான் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நான் யௌவன பருவத்தில் எவ்வளவோ அழகாக இருந்தேன். அப்போது என்னைக் கண்டு ஆசைப்படாத ஸ்திரீகளே இல்லை. என்னுடைய பாலிய பருவம் வெகு சீக்கிரமாக ஓடிப்போய் விட்டது; நான் இப்போது குடுகுடு கிழவனைப் போல இருக்கிறேன். என்னுடைய பழைய அழகெல்லாம் எங்கேயோ போய்விட்டது. நீ மாத்திரம் எப்போதும் யௌவனப் பெண்ணாகவே இருக்கிறாயே! நீ ஒருவேளை தெய்வ லோகத்திலிருந்து தேவாமிருதம் வரவழைத்துச் சாப்பிட்டாயா? உன்னுடைய பதினாறாவது வயதில், நான்

முதன்முதலில் உன்னைக் கண்டு உன்மேல் மோகம் கொண்டு உன்னுடைய சிநேகிதத்தை அடைந்தபொழுது, நீ எப்படி இருந்தாயோ அதுபோலவே இப்போதும் இருக்கிறாயே! அதன்பிறகு நீ என்னிடத்தில் நான்கு வருஷகாலம் இருந்திருக்கிறாய்; அதன்பிறகு இளவரசரிடத்தில் பதினைந்து வருஷகால மிருந்தாய். அவர் இப்போது உன்னை விட்டு இரண்டு மூன்று வருஷ காலம் ஆகிறது. ஆகக்கூடி உனக்கு இப்போது கிட்டத்தட்ட நாற்பது வயசாவது இருக்கலாம். முதன்முதலில் நீயும் நானும் சந்தித்தது எந்த இடம் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? நீயும்நானும் உல்லாசமாக இந்த இடத்தில் இருந்த காலத்தில், திடீரென்று இளவரசர் வந்துவிட்டாரே; அப்போது அதோ இருக்கும் கதவைத் திறந்து அதற்கப்பால் இருக்கும் ரதிகேளி விலாசத்துக்குள்ளே போய் ஒளிந்து கொண்டிருந்தாயே. அது நினைவிருக்கிறதா? அந்தக் காலமும் அந்த விளையாட்டுகளும் அந்த சந்தோஷமும் திரும்பிவரப்போகின்றனவா! எல்லாம் இப்போது சொப்பனம் போல அல்லவா இருக்கிறது. நீயும் நானும் முதன் முதலில் சந்தித்தது இப்போதுதான் நடந்ததுபோல இருக்கிறது. எத்தனை வருஷங்கள் கழிந்து போய்விட்டன. பார்த்தாயா!'' என்று மிகவும் உருக்கமாகவும் ஒருவித விசனத்தோடும் கூறி, பழைய நினைவுகளை எல்லாம் எண்ணிப் பெருமூச்சு விட்டார்.

அவரது சொற்களைக்கேட்ட அம்மணி பாயியும் மிகுந்த கலக்கமும், விசனமும் அடைந்தவள்போல நடித்து, ''ஆம்; தாங்கள் சொல்வது எல்லாம் உண்மைதான். இருந்தாலும் தாங்கள் சொல்லும் ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். தாங்கள் குடுகுடு கிழவனைப் போல ஆகிவிட்டதாக நினைப்பது சரியல்ல. தங்களுக்குத்தான் இப்போது அப்படியென்ன பிரமாதமாக வயதாகிவிட்டது? ஒன்றுமில்லை. தாங்களும் முன்போலத்தான் அழகாக இருக்கிறீர்கள். தங்களுக்கென்ன ஆண்பிள்ளைச்சிங்கம், பெண் பிள்ளைகளுக்குத்தான் சதைப் பிடிப்பும் மேனியும் முகக்களை

யும் வேண்டும்.ஆண் பிள்ளைகள் எப்படி இருந்தால் என்ன? அதைப்பற்றி ஒருவரும் குறை கூறமாட்டார்கள். தாங்கள் இன்னம் 50,60 வருஷங்களுக்குக் குறையாமல், நல்ல திடகாத்திரத்தோடு இருப்பீர்கள் என்பது நிச்சயம்; என்னைப் போன்ற யௌவன ஸ்திரீகளை ஒருத்திபின் ஒருத்தியாக இன்னம் இரண்டுபேரைக் கட்டிக்கொண்டு ஆளும் திறமையும் ஆண்மையும் தங்களுக்கு இருக்கிறது. ஆனால், அவர்களுடைய உண்மையான நிலைமை அவர்களுக்கே தெரியாது. மற்றவர்களுக்குத்தான் தெரியும். ஆனால், என் விஷயத்தில் மாத்திரம் தாங்கள் ஒரு பெருத்த அநியாயம் செய்துவிட்டீர்கள். நான் தங்களிடத்தில் இருந்தாலாவது இப்போதும் தங்களிடத்திலேயே இருப்பேன். இளவரசருடைய பேச்சுக்கு இணங்கி தாங்கள் என்னை அவருக்குச் சேர்த்து வைத்தீர்கள். அவர் இதுவரையில் என்னை வைத்திருந்த எனக்கு வயசாகிவிட்டதென்று என்னை இப்போது அலட்சியம் செய்து புறக்கணித்துவிட்டார். எனக்கு அவர் ஏராளமான செல்வம் கொடுத்திருக்கிறார் என்பது உண்மைதான். அப்படி இருந்தாலும், அவர் என்னை விட்டுவிட்டது பிறர் கண்டு ஏளனமாகப் பேசுவதற்கு இடம் கொடுக்கிறது அல்லவா? நான் இன்னமும் யௌவனப் பெண்ணாகவே இருக்கிறேன் என்று நீங்கள் என்னைப் புகழுகிறீர்கள். இளவரசரோ நான் கிழவியாகி விட்டேன் என்று என்னைப் புறக்கணித்து விட்டார். எதை உண்மையென்று மதிக்கிறது?'' என்று மிகவும் கொஞ்சலாகப் பேசினாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், ''இளவரசர் உன்னைப்பற்றி எவ்வளவு பிரியமாகவும் புகழ்ச்சியாகவும் மதிப்பாகவும் பேசுகிறார் தெரியுமா? அவருக்கு உன் மேல் இருந்த பிரியம் எல்லாம் போய்விட்டது என்று நினைக்கவே நினைக்காதே'' என்றார்.

அம்மணிபாயி புன்னகை செய்து, ''இருக்கலாம். இருந்தாலும் வெறும் பேச்சுப் பேசினால், வயிறு நிறைந்து

போகுமா? அவர் முன்போல எப்போதும் என்னிடத்திலேயே இருக்க வேண்டாம். ஒரு மாசத்துக்கு இரண்டொரு நாளாவது என்னுடைய ஜாகைக்கு வந்து அவர் என்னிடத்தில் சந்தோஷமாக ஒரு பேச்சுப் பேசிவிட்டுப் போனால், அதுவே எனக்குக் கனகாபிஷேகம் செய்ததுபோல இருக்கும். அப்போது பார்ப்பவர் என்னை எப்போதும்போல கண்ணியமாக மதிப்பர். இப்போது என்னைப் பார்த்து எல்லோரும் ஏளனமல்லவா செய்கிறார்கள்; அதுபோகட்டும். எனக்கும் இளவரசருக்கும் உள்ள மனஸ்தாபங்களை எல்லாம் சொல்லித் தங்களுடைய சந்தோஷத்தை நான் இப்போது கெடுப்பது சரியல்ல. அது எப்படியாவது போகட்டும். முறிந்துபோன பால் இனிமேல் ஒன்றாகச் சேரப் போகிறதில்லை. நான் தங்களிடத்தில் வந்த காரியத்தைவிட்டு நான் வேறே எதையோ பேசி உங்களை வருத்துகிறேன். நான் வந்தது தங்களிடத்தில் ஓர் உபகாரம் பெறவல்லவா?'' என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், ''என்னவிதமான உதவி வேண்டும்?'' என்றார்.

அம்மணிபாயி, ''என்னவிதமான உதவியென்று கேட்பதை விட நீ கேட்பதைக் கொடுத்துவிட்டேன் என்றே தாங்கள் சொல்லியிருக்க வேண்டும்'' என்று மிகவும் நயமாகவும் கொஞ்சலாகவும் பேசினாள்.

ஜெமீந்தார், ''சரி; அப்படியே கொடுத்துவிட்டேன்'' என்று மகிழ்ச்சியோடு சிரித்துக்கொண்டு மறுமொழி கூறினார்.

அம்மணிபாயி, ''வேறொன்றும் இல்லை. இதற்குமுன் அன்றைய தினம் தாங்கள் ஓர் ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தீர்கள். அதை நான் திருப்பிக்கொடுக்க நாள் ஆகி விட்டது. அப்படி இருந்தும் நான் மறுபடியும் தங்களிடம் கொஞ்சம் பணம் கடன் கேட்கும் படியான சந்தர்ப்பம்

உண்டாகிவிட்டது. இப்போது அவசரமாக மூவாயிரம் ரூபாய் வேண்டும் அவ்வளவுதான். எல்லாவற்றையும் சேர்த்து நான் மொத்தமாக அதிசீக்கிரத்தில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றாள்.

ஜெமீந்தார், ''சரி; அப்படியே தருகிறேன்.ஏது உனக்கு அவ்வளவு பெரியதொகை தேவையானது? ஏதாவது நகைகள் வாங்கினாயா?'' என்றார்.

அம்மணிபாயி, ''அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு இருக்கும் நிலத்திலிருந்தும் வட்டிக்குப் போட்டிருக்கும் பணத்திலிருந்தும் எனக்கு எதேஷ்டமாகப் பணம் வருகிறது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். இருந்தாலும் சென்ற இரண்டொரு மாசகாலமாக நான் எதிர்பார்க்காத ஏதேதோ செலவு எல்லாம் வந்து சேர்ந்து விட்டது. எல்லாம் உருப்படி யில்லாத சிறுசிறு செலவுகளே'' என்றாள்.

ஜெமீந்தார், ''ஒருவேளை சாமளராவ் வீண் டம்பச் செலவு செய்ய ஆரம்பித்து விட்டானோ?'' என்றார்.

அம்மணிபாயி, ''அவனுக்கும் கொஞ்சம் செலவு அதிகமாகத் தான் பிடிக்கிறது. அவன் தக்க பெரிய மனிதர்களோடு சிநேகமாக இருப்பது பற்றி அவனும் கொஞ்சம் பெரிய மனுஷத்தனம் வகிக்க வேண்டியதாகத்தானே இருக்கிறது. இருந்தாலும், அவன் நல்ல பையன்; நான் கஷ்டப்பட அவன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்'' என்றாள்.

ஜெமீந்தார், ''ஓ! அவன் நல்ல தங்கமான பிள்ளையல்லவா! அவன் எங்களிடத்திலும், உயிருக்குயிராக அல்லவா நடந்து கொள்ளுகிறான். சரி; எப்படியாவது இருக்கட்டும். நீ இங்கே இரு; நான் போய்ப் பணம் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டு எழுந்து இரும்புப் பெட்டியண்டை போய், மூவாயிரம் ரூபாய்க்கு நோட்டுகள் எடுத்துக்கொண்டு திரும்பி வந்தார்.

அதற்குள் அம்மணிபாயி எழுந்து அந்த இடத்திலிருந்த விலை உயர்ந்த விநோதப் பொருட்களையும் பூத்தொட்டி களிலிருந்த பூக்களையும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். ஜெமீந்தார் திரும்பி வந்தவுடனே அவள்மிகுந்த குதூகலமும் ஆனந்தமும் அடைந்தவளாய், ''நான் நம்முடைய இளவரச ருடைய அந்தரங்க மணிமாடத்துக்குள்கூட ஒருதரம் போய்ப் பார்த்திருக்கிறேன். அதன் அழகுகூட இந்த இடத்தின் அழகுக்கு இணை சொல்ல முடியாது. இந்த மாடம் அவ்வளவு சிங்காரமாகவும் ஸொகுசாகவும் இருக்கிறது. தங்களுக்கு அநுபவ முதிர்ச்சியும் யூகமும் அதிகமாகையால், தாங்கள் இந்த இடத்தை தேவேந்திர னுடைய கொலுமண்டபம் போல ஜோடித்திருக்கிறீர்கள்'' என்று மிகவும் முகஸ்துதி யாகப் பேசினாள்.

அதைக்கேட்ட கிழ ஜெமீந்தார் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தவராய் தாம் கொணர்ந்திருந்த நோட்டுகளை அவளிடத்தில் கொடுக்க அவள் நன்றியறிதலும் களிப்பும் தோற்றுவித்தவளாய், அதை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அதன்பிறகு அவள் அதற்குமேல் அரைநாழிகை நேரம் வரையில் அவ்விடத்தில் அவரோடு ஆனந்தமாக இருந்தபின், அவரிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு வெளியில்போய்விட்டாள்.

அப்போது கடிகாரத்தில் மணி நாலரை ஆகியிருந்தது. அந்தத் திருடன் அன்றையதினம் தமது தினசரி டைரியைக் கொண்டு வருவானோ மாட்டானோ என்ற சந்தேகம் அவரது மனதில் ஜனிக்க ஆரம்பித்தது. அவர் மறுபடியும் எழுந்து ஜன்னலண்டை போய்ப் பார்த்தார். கண்ணில்லாக் கபோதியாக நடித்துக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்போதும் முன்போலவே பிச்சை கேட்டபடி உட்கார்ந்திருந்தார். அவரது முகம் ஆகாயத்தைப் பார்ப்பது போல மேலே

திருப்பப்பட்டிருந்த தானாலும், அவரது பார்வை, வெல்வெட்டு மாடத்தின் பக்கத்தில் இருந்த கோவிந்தனது அறை ஜன்னலின் திரையிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஜெமீந்தார் காலையிலிருந்து ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டே இருந்தா ராகையால், அவர்தமது காலின் கடுப்பைத் தீர்த்துக் கொள்ளும் எண்ணத்தோடு அந்த வெல்வெட்டு மாடத்திலேயே அங்கும் இங்கும் உலாவத் தொடங்கினார். மணி ஐந்து, ஆறு கூட அடித்துவிட்டது.அப்போதும் அந்தத் திருடன் வரவில்லை. அவரது மனதில் கவலையும் கலக்கமும் உண்டாகத் தொடங்கின. அந்தத் தினசரி டைரிக்குள் மிகவும் ரகசியமான சில காதல் கடிதங்கள் இருந்தமையால் அவைகள் வெளியானால், மிகவும் பெரிய மனிதர்களான சிலரது மனைவிமார்களின் கற்பிற்குப் பெருத்த களங்கமும், அவமானமும் ஏற்படக்கூடியதாக இருந்தமையால், அவரது கலவரம் அதிகரித்தது. அவை மாத்திரமல்ல. இளவரசரால் அவருக்குப் பல தடவைகளில் எழுதப்பட்ட மிகவும் விகாரமான சில கடிதங்களும் அதற்குள் இருந்தன.

ஆகையால், அந்த டைரிப் புஸ்தகத்தை எப்படியும் திரும்ப வாங்கியே தீரவேண்டும் என்ற ஒரே உறுதியை ஜெமீந்தார் கொண்டிருந்தார். ஆதலால், அந்தத் திருடன், ஒருகால் பகலில் வர அஞ்சி இரவு தோன்றியவுடனே வருவானோ என்ற சந்தேகித்தவராய், அவர் அந்த மாடத்தைவிட்டுப் போகாமலேயே அன்று ராத்திரி முழுதும் இருந்து பார்த்துவிட வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்தைச் செய்து கொண்டவராய், அவ்விடத்திலேயே இருந்தார். அவர் சிறிதுநேரம் ஸோபாவின் மீது உட்காருவதும், சிறிது நேரம் எழுந்து உலாவுவதுமாக இருந்து, மாறிமாறிப் பற்பல விஷயங்களை நினைத்து நினைத்துப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார். அவரது நினைவு பூர்ணசந்திரோதயத்தின் விஷயத்திலும் பார்சீ ஜாதிப் பெண்ணின் விஷயத்திலும் அன்றையதினம் வந்த லீலாவதி, அம்மணிபாயி,

கலியாணராமன் முதலியோரது விஷயத்திலும் மாறி மாறிச் சென்றுகொண்டே இருந்தது. அவ்வாறு அவர் சிந்தனை செய்து திருடனது வருகையை எதிர்பார்த்தவராய்த் தமக்குப் பக்கத்திலிருந்த ரோஜாப் புஷ்பத் தொட்டியண்டை போன போது, கலியாணராமன் அதற்குள்ளிருந்த பிஸ்டலை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்த சம்பவம் அவரது நினைவிற்கு வந்தது. ''பூச்செண்டுக்குள் பிஸ்டல் இருந்ததைக் கண்டு பையன் மிகவும் பயந்திருப்பான். அவன் வருவதாக எழுதியிருந்ததைக் கருதியே நான் இந்தப் பிஸ்டலை ஒளித்து வைத்திருப்பதாக அவன் எண்ணினாலும் எண்ணியிருப்பான். மகாகர்வம் பிடித்தவன். தறுதலைப் பையன். அவன் எப்படியாவது நினைத்துக் கொள்ளட்டும். நேற்று முளைத்த முளையாகிய அவன் எனக்கு ஹிதோபதேசம் பண்ணவல்லவா ஆரம்பிக்கிறான். நான் பரஸ்திரீ கமனத்தில் நாட்டமாக இருக்கிறேனாம். அதனால், அவனுக்கு என்னோடு கூட இருக்க இஷ்டம் இல்லையாம். முன்காலத்தில் ஸ்ரீராமர் ஏகபத்தினி விரதராக இருந்தாராம்; அவருக்குப் பதிலாக இந்தக் கலிகாலத்தில் இந்தக் கலியாணராமன்அவதார புருஷனாகத் தோன்றியிருக்கிறான் போலிருக்கிறது. சுத்தக் குறும்பன்! உலகத்தையெல்லாம் அவன்தான் சீர்திருத்த வந்திருக்கிறானோ! முழுமுட்டாள்!மடையன்'' என்று தமக்குத்தாமே எண்ணமிட்ட வண்ணம் அந்தப்பூத்தொட்டியிலிருந்த புஷ்பச் செண்டை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, பிஸ்டல் சரியான இடத்திலிருக்கிறதா என்பதைப் பார்க்கும் பொருட்டு, தமது கையை நுழைத்து அங்கே இருந்த பிஸ்டலை எடுத்துப் பார்த்து முன்போலவே வைத்துவிட்டு, அப்படியே அடுத்த பூத்தொட்டியில் வைக்கப்பட்டிருந்த இன்னொரு பிஸ்டலையும் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும் என்ற விருப்பம் கொண்டவராய், அவர் அந்தப் பூத்தொட்டி யண்டை போய், மேலே இருந்த பூச்செண்டை எடுத்தார். என்ன ஆச்சரியம்! அந்தச் செண்டிற்கு அப்பாலிருந்த பிஸ்டல்

காணப்படவில்லை. அதற்குப் பதிலாக அந்த இடத்தில் அவரது தினசரி டைரிப் புஸ்தகம் இருந்த உறை அவரால் சீல் செய்யப்பட்டபடி கொணர்ந்து வைக்கப்பட்டிருந்தது! அது என்ன விநோதம்! என்ன செப்பிடு வித்தை! அவர் அந்தப் பூத்தொட்டிக்குள் தமது கையை விட்டு நன்றாகத் தடவிப் பார்த்தார். பிஸ்டல் போய்விட்டதென்பது நிச்சயமாகத் தெரிந்தது. அவர் மிகுந்த பிரமிப்பும் திகைப்பும் அடைந்தவராய், அளவிறந்த ஆவலோடு பார்த்தார்; எல்லாம் ஒழுங்காகவே இருந்தது. அவர் மிகவும் பதைப்பாக அந்த சீல்களை நீக்கிவிட்டு உறையைக் கிழித்து உள்ளே இருந்த தினசரி டைரியை இழுத்துப்பார்க்க அது தமது புஸ்தகமாகவே இருந்தது. அதையும் அவர் பிரித்து அதற்குள் தம்மால் வைக்கப்பட்டிருந்த கடிதங்கள் எல்லாம் போகாமல் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்தார். எல்லாக் கடிதங்களும் தாம் வைக்கப்பட்டபடியே இருந்ததைக் காண, அந்த ஜெமீந்தாருக்கு உண்டான ஆநந்தத்திற்கும் ஆச்சரியத்திற்கும் அளவே இல்லை. கண்கட்டு வித்தையில் கண்ணிற்கெதிரிலேயே புதிய புதிய சாமான்கள் தோற்றுவதுபோல தாம் அதே இடத்தில் இருக்கையில் அந்த டைரிப் புஸ்தகம் அந்த இடத்தில் எப்படி வந்திருக்கும் என்ற சந்தேகமும், திகைப்பும், குழப்பமும் எழுந்தன. அவர் கால்மணி நேரம்வரையில் ஸ்தம்பித்து சித்திரப்பதுமை போல அப்படியே ஓய்ந்து நின்று விட்டார்.

அவர் தமது கண்களையே நம்பாமல் அந்தப் புஸ்தகத்தையும் கிழிபட்ட உறையையும் எடுத்து எடுத்து நாலைந்து தரம் உற்று நோக்கினார்; மறுபடியும் கையைத் தொட்டிக்குள் நுழைத்து அந்தப் பிஸ்டலைத் தேடிப் பார்த்தார்; அவர் தமது சட்டைப் பைக்குள் திருடனுக்காக ஆயத்தமாக வைத்துக்கொண்டிருந்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக் கற்றையை வெளியில் எடுத்து அதை அவிழ்த்து எண்ணிப் பார்த்தார். ஏனென்றால், அவருக்கு அவரை மீறி ஒரு சந்தேகம் உண்டாயிற்று. தாம் ஒருகால் இடையில் கொஞ்சநேரம் தூங்கிவிட்டோமோ என்றும்,

அந்தச் சமயத்தில் திருடன் வந்து தமது சட்டைப்பையிலிருந்த நோட்டுக் கற்றையையும் பிஸ்டலையும் எடுத்துக்கொண்டு தினசரி டைரியை வைத்துவிட்டுப் போயிருப்பானோ என்றும் அவருக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. தமது மேஜையின் மேலாவது பூத்தொட்டியிலாவது தமக்கு அந்தத் திருடன் ஏதாவது கடிதம் வைத்திருப்பானோ என்று சந்தேகித்தவராய் அவர் அந்த இடங்களையெல்லாம் மிகவும் ஜாக்கிரதை யாகத் தேடிப் பார்த்தார். வேறே எந்தக் கடிதமும் அங்கே காணப்படவில்லை.

அவர் உடனே ஒரு விசையை அழுத்தி, தமது அந்தரங்கக் காரியதரிசியான கோவிந்தனை வரவழைத்து, ''கோவிந்தா! இன்று காலையில் நீ பிஸ்டலையும் பூச்செண்டுகளையும் வைத்தாயே! எந்தெந்தத் தொட்டிகளில் வைத்தாய்?'' என்றார். ''இதோ தங்களுடைய மேஜைக்கு இரண்டு பக்கங்களிலும் உள்ள இரண்டு தொட்டிகளிலும்தான் வைத்து பூச்செண்டுகளை மறைவாக வைத்தேன்'' என்றான் கோவிந்தன்.

ஜெமீந்தார், ''அப்போது இந்தத் தொட்டிகளுக்குள் நீ கையை விட்டுப் பார்த்தாயா? வேறே ஏதாவது வஸ்துக்கள் தொட்டிக்குள் இருந்தனவா?'' என்று பதைப்பாகக் கேட்டார். கோவிந்தன், ''எஜமானே! நான் இரண்டு தொட்டிகளிலும் கையை விட்டு நன்றாகப் பார்த்துவிட்டுத்தான் பிஸ்டல்களை வைத்தேன்; சந்தேமில்லை'' என்று உறுதியாகக் கூறினான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், தாம் காண்பது கனவோ, அல்லது உண்மையோ என்ற ஐயமுற்றவராய், ''என்ன விநோதம் இது!'' என்று கூறிக்கொண்டே மறுபடியும் ஜன்னலண்டை போய்ப் பார்க்க, அப்போதும் அந்தக் கண்ணில்லாக் கபோதி முன் போலவே உட்கார்ந்துகொண்டிருந்தது தெரிந்தது. ஜெமீந்தார் உடனே கோவிந்தனை நோக்கி, ''கோவிந்தா! அதோ ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்திருக்கிறான் பார்த்தாயா? அவனண்டை

நீ போய், நான் இங்கே அழைத்துக்கொண்டு வரச் சொல்வதாக ரகசியமாகச் சொல்லி அவனை உடனே அழைத்துக்கொண்டு வா'' என்று கூற அவர் அன்று காலையிலிருந்து மூடுமந்திரம் போலச்செய்துவந்த காரியங்களின் கருத்தை இன்னதென்று அறியாமல் வியப்பும் பிரமிப்பும் அடைந்திருந்த கோவிந்தன் உடனே அவ்விடத்தைவிட்டுக் கீழே இறங்கி வெளியில் போய் விட்டான்.

ஜன்னலண்டை நின்ற ஜெமீந்தார், அவ்விடத்தைவிட்டு நடந்து தமது ஸோபாவை அடைந்து, அதன்மேல் உட்கார்ந்து கொண்டு சிந்திக்கலானார். ''என்ன ஆச்சரியம் இது! காலையில் கோவிந்தன் இரண்டு பூத்தொட்டிகளையும் சோதித்துப் பார்த்துவிட்டு பிஸ்டல்களையும் செண்டுகளையும் வைத்திருக் கிறான். அப்போது நானே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒருவேளை இந்த கோவிந்தனே காலையில் பிஸ்டல் வைக்கும்போது டைரியையும் வைத்திருப்பானா? இவனுக்கும் திருடனுக்கும் நட்பிருக்குமா? சே! ஒருநாளும் இருக்காது. ஒரு நாளா இரண்டு நாளா! எத்தனை வருஷ காலமாக இவன் என்னுடைய அந்தரங்க மனிதனாக இருந்து, எத்தனையோ பெரிய உதவிகளையெல்லாம் செய்திருக்கி றானே. இவன் திருடனிடத்தில் நட்பாக இருந்தால், இரண்டாயிரம் ரூபாயைப் பெறாமல் தினசரி டைரியைத் திருப்பிக் கொடுத்திருக்க மாட்டான் அல்லவா! ஆகையால், நான் கோவிந்தனைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகம் கொள்ளவே காரணமில்லை. இவன் வைத்துவிட்டுப் போனபிறகு இதுவரையில் நான் இந்த இடத்திலேயே இருந்திருக்கிறேன்; நடுவில் மூன்றுதரம் இரும்புப் பெட்டிக்குத்தான் போனேன்; வேறே எங்கேயும் போகவில்லை; அப்படிப் போன காலத்திலும் இங்கே மனிதரை வைத்துவிட்டுப் போயிருக்கிறேன். முதலில் லீலாவதி வந்தாள். அவள் தன்னுடைய விசனக் கடலில் ஆழ்ந்து குன்றிப்போய் உட்கார்ந்திருந்துவிட்டு வெகு சீக்கிரத்தில் போய்விட்டாள். அவள் ஒருக்கால் கொண்டு வந்து

வைத்திருப்பாளோ என்று நினைப்பது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது போலாகும். அதன்பிறகு கலியாணராமன் வந்தான். சே! நான் அயோக்கியமான நடத்தை யுடையவன்! அதை அவன் கண்டிருக்கிறான் என்ற எண்ணத்தினால் நான் அவனை வெறுக்கிறேன். அவன் மேலான நடத்தையுள்ள பரமயோக்கியன் அல்லவா! அவன் திருடர்களோடு சேரக்கூடியவனே அல்ல. அப்படி அவன் கொண்டுவந்து வைத்திருந்தால், இந்த இன்னொரு தொட்டியில் இருந்த பிஸ்டலை எடுத்து எனக்கு எதிரில் வியப்போடு பார்த்துக் கொண்டிருக்காமல், ரகசியமாக வைத்துவிட்டு ஒன்றையும் அறியாதவன் போலல்லவா உட்கார்ந்திருப்பான். ஆகையால், அவன்மேலும் சந்தேகம் கொள்ள ஏதுவில்லை. அதன்பிறகு அம்மணிபாயி அல்லவா வந்தவள். இத்தனை வருஷகாலமாக இல்லாமல் அவள் இப்போதுதானா திருடர்களோடு சேர்ந்து கொள்ளப் போகிறாள். அவளுக்கு என்ன குறை! அளவற்ற செல்வம் இருக்கிறது! அவள் இப்படிப்பட்ட இழிவில் ஒருநாளும் இறங்கக் கூடியவளே அல்ல! ஆகவே, இன்றைய தினம் இங்கே வந்த மூன்று பேரும் இந்தக் காரியத்தில் சம்பந்தப்படக் கூடியவர்களே அல்ல. அப்படியானால், என்றைக்கும் கேட்டறியாத அற்புத சம்பவமாக வல்லவா இருக்கிறது! பணத்தை வாங்கிக் கொள்ளாமல் தினசரி டைரியை என்னிடம் திருப்பிக் கொடுக்க அந்தத் திருடன் இந்த புதன் கிழமையை ஏன் குறிக்க வேண்டும்? இதை அவன் சுலபமாகத் தபாலில் அனுப்பி இருக்கலாமே! என்னவோ இது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!'' என்று கிழவர் எண்ணமிட்டிருந்த சமயத்தில், கோவிந்தன் பிச்சைக்கார வேஷம் தரித்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை அழைத்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தான்.

## 11 - வது அதிகாரம்

## கபட சந்நியாசி

கமலம் என்ற அழகிய மடந்தை தனது தங்கையான ஷண்முக வடிவு என்னும் அருங்குணமணியைத் தனியாக விடுத்துப் பிரிந்து தஞ்சைமா நகரத்திற்குச் சென்றபிறகு இரண்டு மாதகாலம் கழிந்தது. அந்தக் காலத்தில் ஷண்முகவடிவு எப்படி இருந்தாள் என்பதைக் கவனிப்போம். அந்த இளையநங்கை, தனது அக்காள் தனிமையில் தூரதேசத்திற்குப் போன விஷயத்தில் மிகுந்த கவலையும் சகிக்க இயலாத வேதனையும் கொண்டவளாய் அன்றைய தினமும் மறுநாள் முழுதும் ஏங்கித் தவித்திருந்து மூன்றாம் நாட் காலையில் தபால்காரனது வருகையை மிகுந்த ஆவலோடு எதிர் பார்த்தவளாய் சஞ்சலக் கடலில் மூழ்கியிருந்தாள். ஒவ்வொரு நாளும் காலை பத்து மணிக்குத்தான், தபாற்காரன் அந்த வழியாகப் போவது வழக்கம் என்பதை அறிந்தவளானாலும், அந்த அழகிய மடமான், நெடுநேரத்திற்கு முன்னாகவே, ராஜபாட்டையின் பக்கத்தில் போய்நின்று, அவன் வரக்கூடிய திக்கிலேயே தனது பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தாள். அவளது தேகம் கட்டிலடங்காமலும் வீட்டின் அலுவல்களைச் செய்யமாட்டா மலும் தத்தளிக்க அவளது மனம் முழுவதும் அவளது அக்காளின் விஷயத்திலேயே லயித்துநின்றது.

அப்படிப்பட்ட மகா பரிதாபகரமான நிலைமையில் ஷண்முகவடிவு நிற்க நெடுந்தூரத்திற்கு அப்பால் தபாற்காரன் வந்தது தெரிந்தது. உடனே ஷண்முகவடிவின் மனம் ஆனந்தத்தால் பொங்க அவளது சரீரம் கட்டிலடங்காமல் பூரித்தது. ஆனால், அப்படி ஏற்பட்ட மகிழ்ச்சி அடுத்த நிமிஷத்தில் இல்லாமல் போய்விட்டது. தனது அக்காளிடத்தி லிருந்து அவன் தனக்கு ஏதேனும் கடிதம் கொண்டுவருகிறானோ இல்லையோ என்ற சந்தேகம் வலுவாக எழுந்து அவளது

சந்தோஷத்தைப்போக்கிவிட்டது. அந்தத் தபால்காரன் அவளிடத்திற்கு அருகில் வருகிறவரையில் அவள் தீத்தணலின் மீது நிற்பவள்போல மட்டுக்கடங்கா வேதனைக்கு ஆளாகி நின்றாள். அவளது ஹிருதயம் தடதடவென்று அடித்துக் கொள்ளுகிறது; பாட்டையோடு சென்ற தபாற்காரன் அவள் இருந்ததைக்கண்டு நின்று தனது கைநிறைய அடுக்கி வைத்துக்கொண்டிருந்த கடிதங்களைத்தள்ளித் தள்ளிப்பார்த்து ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு அவளண்டை நெருங்கி வருகிறான். ஆகா! அந்த ஒரு நிமிஷமும் ஷண்முகவடிவிற்கு ஒரு பெருத்த கற்பகாலமாகத் தோன்றுகிறது. அவளது ஆவலும், சந்தேகமும் அவளால் சகிக்கக்கூடிய வரம்பை மீறிப்பெருகிக் போயின. கடைசியில் அவள் ஆவலோடு எதிர்பார்த்த கடிதத்தை அவள் வாங்கினாள்.

மேல் விலாசத்தில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துகள் தனது அருமைச் சகோதரியின் எழுத்துகள் என்பதை உணரவே, வெடவெடவென ஆடிய கைகளும், தடதடவென அடித்துக் கொண்ட ஹிருதயமும் உடையவளாய், அந்தப் பூங்கோதை அதன் உறையைக் கிழித்து உள்ளே இருக்கும் கடிதத்தை எடுக்கிறாள். அதற்குள் ஓர் உண்டியல் இருக்கக் காணவே, தனது அக்காள் போன காரியம் பலித்துவிட்டதென்றே எண்ணம் அவளது மனதில் தோன்றியதானாலும் அவளது நினைவுகளும் ஆவலும்; தனது அக்காள் எப்போது திரும்பிவருகிறாள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய தாகவே இருந்தன. ஆகவே, அவள் அந்த உண்டியலோடு கூட இருந்த கடிதத்தை எடுத்துப் படிக்கலானாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

அருமைத் தங்கையான சௌபாக்கியவதி ஷண்முகவடிவுக்கு தீர்க்க சுமங்கலியமும் சர்வாபீஷ்டமும் உண்டாவதாக.

நான் சுகமாகவும் பத்திரமாகவும் இங்கே வந்து சேர்ந்து, சௌக்கியமாக இருக்கிறேன். அதுபோல, அவ்விடத்தில் நீ

அத்தை முதலியோர் செளக்கியமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். உனக்கு எல்லா விஷயங்களையும் விஸ்தாரமாக எழுதியனுப்ப எனக்கு இன்றையதினம் அவகாசப்படவில்லை. ஆகவே, நீ என் விஷயத்தில் கொண்டிருக்கக்கூடிய ஆவலைத் தீர்ப்பதற்குரிய முக்கியமான சங்கதியைச் சுருக்கமாகத் தெரிவித்து விடுகிறேன். சோமசுந்தரம் பிள்ளை என்ற நமது உபகாரியை நான் கண்டுபிடித்துவிட்டேன். அவர் அன்பும், சரஸகுணமும், கண்ணியமும் வாய்ந்த ஒருதக்க பெரிய மனிதர்; நம்முடைய விஷயத்தில் அவர் வைத்திருக்கும் பட்சத்திற்கும் ஆதரவிற்கும் அளவில்லை. அவர் என்னைக் கண்டு அடைந்த ஆனந்தத்திற்கும் அளவே இல்லை. நமக்கு வந்துகொண்டிருந்த பணம் நின்றுபோனது என்பதைக் கேட்டு, அவர் கரைகடந்த விசனம் அடைந்ததன்றி, அந்தத் தவறு வேண்டுமென்று செய்யப்பட்டது அல்ல என்று கூறி, அதனால் நமக்கு ஏற்பட்ட அசெளகரியங்களையும் கஷ்டங்களையும் குறித்து, அவர் நிரம்ப வருந்துவதாகவும் தெரிவித்தார். உங்களுடைய அவசரச் செலவுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளும்படி நூறு ரூபாய்க்கு ஓர் உண்டியல் எழுதிக் கொடுத்து, அதை முதலில் உங்களுக்கு அனுப்பும்படி அவர் என்னை வற்புறுத்தினார். ஆதலால், அவருடைய விருப்பத்திற்கிணங்க, அதை நான் இந்தக் கடிதத்திற்குள் அடக்கம் செய்து அனுப்பி இருக்கிறேன். அவரைவிட அவருடைய சம்சாரம் பதின்மடங்கு அதிக அன்பும் நன்மையும் நிறைந்தவளாக இருக்கிறார்கள். அவர்கள் இருவரும், நான் உடனே ஊருக்குப் போகக் கூடாது என்று வற்புறுத்தித் தடுக்கிறார்கள். ஆகையால், நான் இன்னம் சில வாரங்கள் வரையில் அவர்களோடு கூட இருந்துவிட்டுத்தான் புறப்பட்டு வரும்படியாக இருக்கிறது. நம்மிடத்தில் அளவிறந்த அன்பை வைத்துள்ள பரம நண்பர்களும் இதுவரையில் நம்மைக் காப்பாற்றிவந்த பேருபகாரிகளுமான அவர்களுடைய பிரியத்துக்கு மாறாக, நான் எப்படி நடக்கிறது? அவர்களுக்கும் நமக்கும் எவ்வித உறவுமுறையாவது பாத்தியமாவது

இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனாலும் நம்முடைய அத்தையின் புருஷருக்கும் இவருக்கும் இருந்த பழைய நட்பைக் கருதி, நிராதரவாக இருக்கும் நம்மைக் காப்பாற்றும் படியான தருமத்தை அவர் ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நமக்கு அவர்கள் கட்டாயமாக உதவி செய்தே தீரவேண்டும் என்ற ஓர் உரிமை எதுவும் நமக்கு இல்லை. ஆகையால், இதுவரையில் அவர்கள் நமக்குச் செய்துள்ள கோடானுகோடி நன்மைகளைக் கருதியும், இனியும் நமக்கு அவர்களைத்தவிர வேறே புகலிடம் இல்லை என்பதைக் கருதியும், நான் அவர்களுடைய மனம் கோணாதபடி நடந்து கொள்வது அவசியமாதலால், இன்னம் கொஞ்சகாலம் நான் இங்கே இருந்துவிட்டு வருவது தள்ளமுடியாத காரியமாக இருக்கிறது.

நம்முடைய அத்தையை ஜாக்கிரதையாகவும் அன்பாகவும் காப்பாற்றி போஷித்து வரும்படி நான் உனக்கு எழுதுவது அவசியம். ஏனென்றால், அந்த விஷயத்தை எப்போதும் கவனித்து அதற்காகத் தன்னுடைய திரேகத்தை அர்ப்பணம் செய்து வருகிற நற்குணவதியான உனக்கு இந்த விஷயத்தில் நான் சொல்லிக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. இருந்தாலும் நான் பிரிந்து போனதனால், நீ தனியாக இருப்பதைப் பற்றி அதிக விசனத்தில் ஆழ்ந்து அதனால், நீ உன்னுடைய தேக செளகரியங் களைச் செய்துகொள்ளவும், அத்தைக்குத் தேவையான வைகளைச் செய்யவும் மறந்துபோய் விடப்போகிறாயே என்ற ஒரு கவலை என் மனசில் தோன்றி வதைக்கிறது. ஆகையால், நீ என்னை நினைத்து நினைத்து அதிகமாகக் கவலையுறாமல், வீட்டு விஷயங்களை யெல்லாம் வழக்கம் போல கவனித்து, உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி நான் உன்னைப் பன்முறையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அவர்கள் இப்போது மேற்கு ராஜவீதி, 20வது இலக்கமுள்ள

வீட்டில் வசிக்கவில்லை. சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்க முள்ள வீட்டில் இருக்கிறார்கள். அந்தப் புதிய மேல் விலா சத்துக்கே இனி நீ கடிதம் எழுதவேண்டும். உங்களுடைய க்ஷேம சமாசாரத்தை அறிய நான் நிரம்பவும் ஆவல் கொண்டிருப்பதால் உன்னுடைய கடிதத்தை மறு தபாலிலேயே எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு பிரியமுள்ள அக்காள்,
கமலம்.

-என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கவே ஷண்முக வடிவின் மனதில் சந்தோஷமும் துக்கமும் மாறிமாறிப் பொங்கி எழுந்தன. கண்கள் ஆனந்த பாஷ்பமும், துக்கக் கண்ணீரும் பொழிகின்றன. தனது அக்காள் திரும்பிவர, சில வாரங்கள் பிடிக்கும் என்ற செய்தி, மிகுந்த விசனத்தை யுண்டாக்க, அவள் கருதிப்போன காரியம் எளிதில் பலித்ததும் சோமசுந்தரம் பிள்ளையும் அவரது சம்சாரமும் நிரம்பவும் நல்ல மனிதர்கள் என்பதும் தங்கள் விஷயத்தில் மட்டுக்கடங்கா அபிமானம் உள்ளவர்கள் என்பதுமான செய்தி அளவுகடந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. ஷண்முகவடிவு அந்தக் கடிதத்தை இரண்டு மூன்று முறை திருப்பித் திருப்பிப் படித்தவளாய், அவ்விடத்தை விட்டு மாளிகைக்குப் போய் அங்கே இருந்த வேலைக்காரியான முத்தம்மாளை அழைத்து, அந்தக் கடிதத்தை அவளுக்குப் படித்துக் காட்டினாள். மனிதரது இளம் பிராயத்தில் அவர்களது மனம் இயற்கையிலேயே சந்தோஷமாக இருப்பதும், துக்கம் நீடித்து நிற்காமல் துரிதத்தில் மறைவதுமே மனித இயல்பு. ஆதலால், ஷண்முக வடிவு ஒருவாறு தேறுதலடைந்து, தனது அக்காளுக்கு அனுப்புவதற்கு ஒரு கடிதம் எழுதலானாள்.

அந்தக் கடிதம் மிக உருக்கமாகவும், சகோதரி வாஞ்சை நிரம்பப் பெற்றதாகவும், விரிவாக எழுதப்பெற்றதாகவும் இருந்தமையால், அவள் அதை எழுதி முடிக்க, பகல் ஒருமணி வரையில் பிடித்தது. அது எழுதி முடிவுற்ற உடனே அதை யார்

எடுத்துக்கொண்டு போய் திருவாரூரிலிருந்த தபாற் பெட்டியில் போட்டுவிட்டு வருவது என்ற கேள்வி உண்டாயிற்று. அப்படிப்பட்ட குற்றேவல்களை எல்லாம் எப்போதும் முத்தம்மாளே செய்து வருவது வழக்கம். ஷண்முகவடிவு ஒருபோதும் வீட்டை விட்டுத் தனியாகப் போனவளே யன்று. ஆனால், அந்த உண்டியலை ஷண்முகவடிவே எடுத்துப்போய் செட்டியாரது பாங்கியில் கொடுத்து நேரில் கையெழுத்துச் செய்தாலன்றி பணம் கொடுக்கப்பட மாட்டாது. ஆகையால், அதற்கு அவளே நேரில் போக வேண்டியிருந்தது. அவள் வேலைக்காரியையும் தன்னோடு கூட அழைத்துக் கொண்டு போவதற்கு இயலாமலிருந்தது. ஏனெனில், பாயும் படுக்கை யுமாக இருந்த நீலலோசனியம்மாளை அநாதரவாகத் தனிமையில் விடுத்துப்போவதும் சரியல்லவெனத் தோன்றியது. ஆகவே, முத்தம்மாள் வீட்டிலிருந்து நீலலோசனி அம்மாளைப் பார்த்துக் கொண்டிருப்பது என்றும் ஷண்முகவடிவு திருவாரூருக்குப்போய் கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டு உண்டியலைப் பணமாக மாற்றிக்கொண்டு வருவது என்றும் அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டனர்.

உடனே ஷண்முகவடிவு தனது போஜனத்தை முடித்துக் கொண்டு அந்த மாளிகையை விட்டுப் புறப்பட்டு திருவாரூருக்குப் போய்ச் சேர்ந்தாள். கந்தருவ ஸ்திரீயின் அழகும், தோகை மயிலின் சாயலும், பிணைமானின் மருண்ட பார்வையும், அன்னத்தின் நடையும், பதிவிரதா ஸ்திரீகளின் அடக்கம், ஒழுக்கம், நாணம் மடம் அச்சம் முதலிய வசீகரமான ஆபரணங்களும், சுத்தமான எளிய உடைகளும், சகலமான உத்தம லக்ஷணங்களும் ததும்பிய மனதும், மகா பரிசுத்தமான சரீரமும் வாய்ந்தவளாக இருந்த அந்தப்பெண்மணி, தனது அடிகள் கொப்புளிக்க, இடை நோக, வியர்வை முத்துக்கள் முகத்தில் அரும்ப, வெயிலில் தனி வழி நடந்து திருவாரூரை அடைந்து தனது கையிலிருந்த கடிதத்தைத் தபாற் பெட்டியில் போட்டுவிட்டு, நேராக பாங்கிக்குப் போய், செட்டியாரைக்

கண்டு தனது அக்காளிடத்திலிருந்து கடிதம் வந்த சந்தோஷச் செய்தியையும் அதன் சாராம்சத்தையும் எடுத்துக்கூற செட்டியாரும் தமது சந்தோஷத்தை வெளியிட்டு அவளை அன்பாக உபசரித்து அவளால் கொடுக்கப்பட்ட உண்டியலுக்கும் பணம் கொடுத்து அவளை அனுப்பிவைத்தார்.

அப்போது அந்த பாங்கியில் மேற்படி செட்டியாருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து, அவருக்கு ஆருடம் சொல்லிக் கொண்டிருந்த ஒரு பண்டாரம், நமது ஷண்முக வடிவு அங்கே தோன்றி செட்டியாரிடத்தில் பேசி உண்டியலுக்குப் பணம் பெற்றுக்கொண்டு போகும்வரையில் அவளை வியப்பாக உற்று நோக்கியவண்ணம் மௌனமாக இருந்தவர், அவள் வெளியில் போனவுடனே, தமக்கு நேரமாகியது என்று கூறி செட்டியாரிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் வந்தார். ஷண்முகவடிவு வீதியோடு சிறிது முன்னால் போய்க்கொண்டிருந்தவள், தற்செயலாகத் திரும்பிப் பார்க்க, காஷாய வஸ்திரம் அணிந்திருந்த ஒரு பண்டாரம் தனக்குப் பக்கமாக வந்துகொண்டிருந்ததைக் கண்டு மிகவும் கிலேசமடைந்து, பாட்டையின் ஒரு பக்கமாக விலகி நடக்கலானாள். அந்தப் பண்டாரத்தைத் தான் எவ்விடத்திலோ பார்த்ததாக ஞாபகம் உண்டாயிற்று. அவள் சிறிது ஆழ்ந்து நினைத்துப் பார்க்க, பாங்கியில் செட்டியாருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து ஜோசியம் சொல்லிக்கொண்டிருந்த பண்டாரமே தனக்குப் பின்னால் வருகிறவர் என்பது அவளது மனதில் உடனே பட்டது; ஒருகால் அவர் செட்டியாரிடத்தில் தமது அலுவலை முடித்துக்கொண்டு வேறே எங்கேயாவது போகிறாரோ என்ற எண்ணம் அவளது மனதில் உதித்தது. ஆகையால், அவள் அந்தப் பண்டாரத்தைப் பற்றிய நினைவை அவ்வளவோடு நிறுத்தி, வேறு விஷயத்தில் தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டு நடந்தாள். தான் வீட்டுக்குப் போகுமுன், தங்களுக்கு மிகவும் அவசரமாக வேண்டியிருந்த இரண்டொரு முக்கியமான சாமான்களை

வாங்கிக்கொண்டு போகவேண்டும் என்ற ஓர் எண்ணம் தோன்றியது. ஆகையால் அவள், நாலைந்து தெருக்களுக்கு அப்பாலிருந்ததும், தாங்கள் வழக்கமாகக் கடன் வாங்குவதுமான ஒரு மளிகைக் கடைக்குள் நுழைந்து, சில சாமான்களை வாங்கி எடுத்துக் கொண்டு, கடையைவிட்டு பாட்டைக்கு வர, அந்தப் பாட்டையின் எதிர்பக்கத்தில் நின்று கொண்டிருந்த காஷாய வஸ்திரம் பண்டாரம் அவளது திருஷ்டிக்குத் தென்பட்டார். பாங்கியிருந்த தெருவை விட்டுத்தான் வேறொரு தெருவில் திரும்பியபோதே அந்தப் பண்டாரம் பிரிந்து போயிருப்பார் என்று அவள் நினைத்திருந்தாள் ஆதலால், அவர் அந்த நாலைந்து தெருக்களிலும் நடந்து தன்னோடு மளிகைக்கடை வரையில் வந்திருந்த விஷயம் அவளது மனதில் சுருக்கென்று உறைத்தது. அந்தப் பண்டாரம், மேலே போயிருந்தால் அவரும் அவ்விடத்தில் ஏதோ காரியார்த்தமாகப் போகிறார் என்று நினைக்க ஏதுவிருந்தது. அவர் கடைக்கெதிரில் நின்ற விஷயமே அவளது மனதில் மிகுந்த கவலையையும் கலக்கத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கியது. இருந்தாலும் அவள் தனது மனோசஞ்சலத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் குனிந்த தலையோடு நடக்கலானாள்.

அந்தப் பெண்பாவை வெளியில் வருகிற வரையில் பாட்டையின் ஓரமாக ஒதுங்கி வேறே எதையோ கவனிப்பவர் போல நின்ற பண்டாரம், அவள் வெளியில் வந்து நடந்ததைக் கண்டு, ''அம்மா! குழந்தாய்! ஒரு வார்த்தை'' என்று கூறி, அவளை அழைத்தவண்ணம், அவளை நோக்கி விரைவாக நடந்துவர, ஷண்முகவடிவு திடுக்கிட்டு நடுநடுங்கி நாணத்தோடு குனிந்து நின்று, பண்டாரத்தை நோக்கி, ''ஐயா என்னையா கூப்பிடுகிறது? ஏன்?'' என்று மிருதுவாக வினவினாள். அதற்குள் அவளுக்குப் பக்கத்தில் வந்து நின்ற பண்டாரம், ''அம்மா! நீதானே இப்போது செட்டியார் பாங்கியில் பணம் வாங்கிக்கொண்டு வந்தது?'' என்று அருளும், அன்புச் சொட்டச் சொட்டத் தேன்போல மொழிய, அதைக் கேட்ட

மடந்தை, ''ஆம்; நான்தான். ஏன் கேட்கிறீர்கள்?'' என்று மரியாதையாக வினவினாள். உடனே பண்டாரம், ''இல்லையம்மா! நீ அறியாத சின்னக் குழந்தையாக இருக்கிறாய்; வேறே ஆண்துணையில்லாமல் அவ்வளவு பெருத்த தொகையோடு நீ தனியாகப் போகிறாயே; இந்தத் திருவாரூர் சுத்தப்போக்கிரி பட்டணமாயிற்றே. பணத்தை ஜாக்கிரதையாகத் துணியில் முடிந்து மடியில் சொருகிக் கொள். எங்கேயாவது கடையிலாவது வழியிலாவது போட்டுவிடப் போகிறாய். நீ பணம் வைத்திருப்பது முடிச்சுமாறிகளுக்குத் தெரிந்தால், பிற்பாடு பணம் உன்னுடையதல்ல. ஜாக்கிரதையாக மறைத்து வைத்துக்கொள். இந்த விஷயத்தை உன்னிடத்தில் சொல்லி எச்சரிப்பதற்கும், யாராவது துஷ்டர்கள் வந்து இடக்குப் பண்ணாமல் பார்த்துக்கொள்வதற்குமே நான் உன்னைத் தொடர்ந்து இவ்வளவு தூரம் வந்தேன்'' என்று தேனும்பாலு மாகவும் மகா உருக்கமாகவும் அளவற்ற கரிசனத்தோடும் கூறினார்.

அவரது அன்பான சொற்களைக் கேட்கவே, ஷண்முகவடிவிற்கு உயிர் வந்தது. அவள் சரியாக மூச்சுவிடத் தொடங்கி அவரது பரோபகார குணத்தையும், உண்மையான அருளையும் கண்டு நன்றியறிதலும் பக்தி விநயமும் கொண்டவளாய், ''சுவாமிகள் சொல்லுகிறபடியே நான் பணத்தைப் புடவைத் தலைப்பில் முடிந்து இடுப்பில் சொருகிக் கொண்டுதான் இருக்கிறேன். இவ்வளவு பெரிய பட்டணத்தில் பட்டப்பகலில் போக்கிரிகள் இடக்குப் பண்ணினால் ஜனங்கள் விட்டுவிடுவார்களா? அதெல்லாம் ஒன்றும் நடவாது'' என்று அழுத்தமாகக் கூறினாள்.

உடனே பண்டாரம், ''இல்லையம்மா! அப்படிச் சொல்லக் கூடாது. உன்னைப்போல இருக்கும் பெண் குழந்தைகள் கொஞ்சம் எச்சரிப்பாகத்தான் இருக்க வேண்டும். நீ இந்த ஊருக்குள் இருக்கிறவரையில் பயமில்லைதான். ஆனால், நீ

இந்த ஊரைவிட்டு நாகப்பட்டணம் ரஸ்தாவில் இரண்டொரு மைல் தூரம் நடந்துபோக வேண்டியவள் என்று பாங்கியின் செட்டியார் சொன்னார். அங்கே நீலலோசனி அம்மாளுடைய பங்களாவைத் தவிர வேறே வீடு இல்லை. ஆகையால், நீ அந்த அம்மாளுக்குச் சொந்தமானவள் போல இருக்கிறது. அந்த அம்மாளுக்கும் எனக்கும் நெடுங்காலப் பரிச்சயம் உண்டு. நான் இருக்கும் மடத்துக்கும் அதே சாலையின் வழியாகத்தான் போக வேண்டும். ஆகையால், நான் உனக்கு வழித்துணையாக வந்து உன்னை ஜாக்கிரதையாக உங்களுடைய ஜாகையில் கொண்டு போய் விடுகிறேன். நான் வந்த காரியமெல்லாம் முடிந்து விட்டது. இனி நான் திரும்பி மடத்துக்குப் போக வேண்டியவனாக இருக்கிறேன்; நேராக நீ அங்கேதானே போகிறாய்?'' என்றார்.

அவரது சொற்களைக்கேட்ட ஷண்முகவடிவு உடனே மறுமொழி சொல்லாமல் தயங்கி மௌனமாக நின்றாள். அவள் உலகத்தின் வஞ்சகத்தையும், சூதையும் கபடத்தையும் சிறிதும் அறியாத பரிசுத்த ஸ்வரூபிணியாக இருந்தாலும், அதற்குமுன் பழக்கமில்லாத ஒரு பண்டாரத்தைத் துணையாக அழைத்துக் கொண்டு தான்போவது சரியல்லவென்ற எண்ணம் தோன்றியது. ஆகையால், அவள் கீழே குனிந்தவளாய், ''எனக்கு இன்னம் சில இடங்களுக்குப் போகவேண்டிய அலுவல் இருக்கிறது. அதையெல்லாம் பார்த்துக் கொண்டு நான் ஜாக்கிரதையாகப் போய்ச் சேருகிறேன். சுவாமியாருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. தாங்கள் முன்னால் போகலாம். எனக்காக வீணில் காத்திருக்க வேண்டாம்'' என்று கூறியவண்ணம் நடந்து, இரண்டொரு வீடுகளிற்கு அப்பாலிருந்த இன்னொரு ஜவுளிக் கடைக்குள் நுழைந்து விட்டாள்.

அவ்வாறு நுழைந்தவள் அந்தக் கடையில் வாங்கவேண்டிய சில உடைகளை வாங்கிக்கொண்டு வெளியில் வர அரை நாழிகை நேரம் ஆயிற்று; வெளியில் வந்த ஷண்முகவடிவு

அந்தத்தெருவில் இருபுறங்களிலும் தனது பார்வையைச் செலுத்திப் பார்க்க, பண்டாரம் காணப்படவில்லை. ஆகவே அவர் முன்னால் போய்விட்டார் என்று அந்த மடந்தை நினைத்து, அந்தச் சம்பவத்தை அவ்வளவோடு மறந்தவளாய், அவ்விடத்தை விட்டு நடந்து மேலும் சில இடங்களிற்குப் போய்த் தங்களுக்குத் தேவையான சிற்சில வஸ்துக்களை வாங்கிக்கொண்டு திருவாரூரைவிட்டு நாகைப்பட்டணத்திற்குச் செல்லும் பாட்டையோடு தனது மாளிகையை நோக்கி நடக்கலானாள். அந்தச் சாலையின் இருபக்கங்களிலும் தோப்புகளும், ஆலமரப் பத்திகளும் அடர்ந்து, குளிர்ச்சியும் நிழலும் நிறைந்ததாக இருந்தது. ஆங்காங்கு கால்வாய்களின் பாலங்களும், பாழ் மண்டபங்களும் இருந்தன. ஷண்முகவடிவு தனது பங்களாவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது மாலை 6 மணி சமயமாகி இருந்ததாகையால் சூரியன் மேற்றிசையில் மறையும் சமயத்தில் இருந்தான். சூரியன் இருந்த திக்கில் மஞ்சள்வெயில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. மற்ற திசைகளில் எல்லாம் மாலை மயங்கிக் கொண்டிருந்தது. தான் இருந்த மாளிகை அதிக சமீபத்தில் இருந்தது ஆகையாலும் அந்தப் பாட்டையில் திருடர் பயம் அவ்வளவாக இல்லாது இருந்தமையாலும், ஷண்முக வடிவு விரைவாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

திருவாரூருக்கு வெளியில் கால்மைல் தூரத்தில் ரஸ்தாவின் ஓரத்தில் பனைமட்டையால் வேயப்பட்ட ஒரு குடிசை இருந்தது. அவ்விடத்தில் கள் விற்கப்பட்டு வந்தது. ஆகையால் அந்த ஓரிடத்தில் மாத்திரம் இரவுபகல் எப்போதும் சண்டையும், பூசலும், சச்சரவுமாக இருப்பது வழக்கம். ஆனால், ஷண்முக வடிவு அதற்குமுன் இரண்டொரு தரம் அந்த ரஸ்தாவின் வழியாகப் போயிருந்தாளானாலும் அந்தக் கள் கடையிலிருந்த குடியர்கள் எவரையும் அவள் கடைக்கு வெளியில் பார்த்ததில்லை; ஆகையால், அவள் இப்போதும் எவ்வித அச்சமும் இன்றி, ரஸ்தாவிற்கு அருகிலிருந்த

கள்கடையைக் கடந்து அப்பால் சென்றாள். அப்போது வழக்கப்படி கூச்சலும் பாட்டும், கூத்துமாகவே ஜனங்கள் உட்புறத்தில் இருந்தனர். ஆனால் வெளிப்புறத்தில் ஒரு சாணாத்தி மாத்திரம் உட்கார்ந்து தனது மகளுக்குப் பேன் பார்த்துக்கொண்டிருந்தபடி உட்புறத்தில் இருந்த ஒருவன் கேட்ட ஏதோ ஒரு கேள்விக்கு மறுமொழி சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் என்ன பேசினாள் என்பது ஷண்முகவடிவின் காதிற்கு எட்டவில்லை. தான் தனது வீட்டிற்குச் சீக்கிரமாகப் போக வேண்டும் என்ற ஆவலினால் தூண்டப்பட்டவளாய், ஷண்முகவடிவு தனது முழுக் கவனத்தையும், வீட்டிலிருந்த நீலலோசனியம்மாளின் மீது வைத்தவளாய் நடந்து கொண்டிருந்தாள். அவ்வாறு அந்த மடந்தை கள்கடைக்கு அப்பால் அரைக்கால் மைல் தூரம் போன சமயத்தில், அவளுக்குப் பின்னால் ரஸ்தாவில் யாரோ மனிதர்கள் பேசிய குரலைக்கேட்ட அந்தப் பெண்மணி திடுக்கிட்டு அச்சங் கொண்டு திரும்பிப்பார்க்க, நாலைந்து முரட்டு மனிதர்கள் குடிவெறி கொண்டு மயங்கி ஆடி விழுந்தவர்களாய், அதிக விசையாக நடந்து வந்து கொண்டிருந்தனர். அவள் திரும்பிப் பார்த்த போது, சுமார் 25கஜ தூரத்தில் வந்துகொண்டிருந்த அந்தக் குடியர்கள் அவளை நோக்கிக் குழறிக் குழறிப்பேசி, ''ஆர் அங்கே போறது? நில்லு அப்பிடியே; போகாதே'' என்று அதட்டிக் கூறி, நிற்கும்படி கையமர்த்திய வண்ணம், அவளை நோக்கி விரைவாக நடந்துவர, அந்தமெல்லியலாள் வேடர்களைக் கண்ட மான்போல மருண்டு கலங்கித் திகைத்து நடுநடுங்கி வியர்த்து விருவிருத்து மெய்மறந்து அப்படியே நின்றுவிட்டாள். அந்தக் குடியர்கள் தனக்கு எவ்விதமான தீங்கு செய்வார்களோ என்ற திகில் அவளது மனதில் பொங்கி எழுந்தது. தன்னிடத்திலிருந்த பணம் முதலிய பொருட்களை அபகரிப்பதற்காக அவர்கள் வருகிறார்களோ, அல்லது, தேக சம்பந்தமான பொல்லாங்கையோ, இழிவையோ செய்ய

வருகிறார்களோ என்ற சந்தேகம் ஓங்கியது. அந்த ஒரு நிமிஷ நேரமும், அவளுக்குச் சகிக்க இயலாத நரக வேதனையாக இருந்தது. அடுத்த நிமிஷத்தில், அந்த முரடர்கள் மயங்கி மயங்கிக் கீழே சாய்ந்து சாய்ந்து நிமிர்ந்து தட்டுத் தடுமாறி நடந்து அவள் இருந்த இடத்திற்கு வந்து அவளை வளைத்துக் கொண்டனர். குடிவெறியினால் அவர்களது கண்கள் இரத்தமாகச் சிவந்திருந்தன; அவர்கள் அவளைப் பார்த்துப் பேச முயன்றால், விழிகள் வேறொரு திக்கை நோக்கின; அவர்கள் இன்னதுதான் பேசுகிறார்களென்பதும், அவர்களது விருப்பம் என்ன வென்பதும் தெரியாதபடி, அவர்கள் எல்லோரும் தாறுமாறாகக் குழறிப் பேசிக்கொண்டு, அவளைத் தொட்டுப் பிடிக்க யத்தனித்தனர். மகா அபாயகரமான தனது நிலைமையை உணர்ந்துகொண்ட ஷண்முகவடிவு கதிகலங்கிக் குடல்நடுக்கம் அடைந்து ஒரு பக்கமாக ஒதுங்க முயன்றவளாய், ''யாரையா நீங்கள்? என்னை ஏன் இப்படி உபத்திரவிக்கிறீர்கள்? நான் தனியாக வருகிறேன் என்று நினைத்து இப்படிச் செய்கிறீர்களா? என்னைச் சேர்ந்த மனிதர்கள் இதோ பின்னால் வருகிறார்கள். தூர விலகிப் போங்கள். கிட்ட வரவேண்டாம்'' என்று அதட்டிக் கூறி விரைவாக நடக்கலானாள்.

அவர்கள் அவளை விடாமல் சூழ்ந்துகொண்டு மிகுந்த இறுமாப்பும், களிவெறியும் கொண்டு அவளைச் சுற்றிச்சுற்றி வந்து கெக்கலிகொட்டி ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். ஒருவன், ''அடி என் கூத்தியாரே! நீ இப்படி ஓடினா, ஒன்னே உட்டுடுவேனுன்னு பார்த்துக்கிட்டியா? எடுடி முட்டாயிப் பொட்டலத்தே வெளியே'' என்றான். இன்னொருவன், ''பொடவெத் தலப்பிலே எம்பிட்டு ரூவா முடிஞ்சு வச்சிருக்கே? அவிரு முடிச்செ'' என்றான். வேறொருவன், ''மரியாதெயா, எல்லாத்தியும் கீளே வச்சிடு; இல்லாமெப்போனா, மென்னியை ஒறந்துடுவோம்'' என்றான். மற்றொருவன், ''பொண்ணு பஞ்சவருணக் கிளி கணக்கா இருக்கறாடா! ரூவாகீவாயெல்லாம் நீங்க எடுத்துக்கிட்டு பொண்ணே மாத்தரம் எனக்கு

உட்டுடுங்கடா! நான் இவளே அதோ தெரியுதே அந்த மண்டவத்துக்குத் தூக்கிக்கிட்டு போயிட்றேன்'' என்றான். இவ்வாறு அந்தக் குடியர்கள் தாறுமாறாக உளறிக்கொண்டு அவளைப் பிடிக்க யத்தனிக்க, அவள் அவர்களது கையில் பிடிபடாமல் இடுக்கில் நுழைந்து அங்குமிங்கும் பாய்ந்து ஓட முயன்றாள். அந்தக் குடியர்களது கைகால்களெல்லாம் கட்டி லடங்காமல் தாறுமாறாகச் சென்றமையால் அவள் அவர்களது கையில் அகப்படாமல் மான்குட்டி துள்ளுவது போலத் தப்பி ஓட, கடைசியாக அவர்கள் முன்னிலும் அதிக ஊக்கத்தோடு பாய்ந்து நெருங்கி, அவளை விடாமல் தடுக்க, அவர்களுள் ஒருவன் கடைசியாக அவளது இடுப்பின் புடவையை இறுகப் பிடித்துக்கொள்ள அவள் உடனே, ''ஐயோ! ஐயோ! அக்கிரமம் செய்கிறார்களே! யாருமில்லையா? ஓடிவாருங்கள்'' என்று பிரமாதமாகக் கூச்சலிட்டுத் தத்தளித்துத் தன்னை விடுவித்துக் கொள்ள முயல, அதற்குள் அந்த முரடர் யாவரும் நெருங்கி, அவளது கைகளிலும் மடியிலும் இருந்த மிட்டாயிப் பொட்டலம் முதலிய சாமான்களையும் மிகுதியிருந்த பணத்தையும் பறித்துக் கொண்டிருந்தனர். அவர்களது கையில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டு கூக்குரல் செய்திருந்த மெல்லியலாளான ஷண்முக வடிவு, ''ஐயா, என்னை விட்டு விடுங்கள்; என்னிடம் இருக்கும் பணம், சாமான்கள் எல்லாவற்றையும் நானே கொடுத்து விடுகிறேன். என்னைத் தொடவேண்டாம்'' என்று எவ்வளவோ பாடுபட்டுக் கதறியதெல்லாம் செவிடனது காதில் ஊதப்பட்ட சங்கநாதம் போலாயிற்று. அவளை மண்டபத்திற்குத் தூக்கிக்கொண்டு போவதாகச் சொன்ன முரடன் அவள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மிகுந்த மூர்க்கமும் ஆவேசமும் கொண்டு, ''ஓ! நீ பணத்தையெல்லாம் குடுத்துட்டா, ஒன்னே உட்டுடுவோமின்னு பாத்துக்கிட்டியா? அது பலிக்காது ஆத்தா! அதோ தெரியுது பாரு மண்டவம். அதுலே, ஒன்னெக் கொண்டு போயி இன்னக்கி ராத்திரி முளுதும், வச்சிருந்து விடியக் காந்தாலேதான்

அனுப்பப்போறோம். நீ கெண்டக் குஞ்சு கணக்காத் துள்ளிக் குதிக்கறத்துலே பெரயோசனம் ஒண்ணுமில்லே தங்கமே! நல்ல ஒடம்பெக் கெடுத்துக்காமே, நீயே நடந்து வந்துடு'' என்று கூறியவண்ணம், அவளது மாராப்புச் சேலையைப் பிடித்து இழுக்க அவள் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகத் துள்ளிக் குதித்து, ஓங்கிக் கூச்சலிட்டுக் கதறலானாள். குடியர்களும் முன்னிலும் அதிக ஊக்கமாக அவளிடத்தில் நெருங்கி அவளது புடவையை மூலைக்கொருவராகப் பிடித்து இழுக்க, இன்னம் ஒரு நிமிஷத்தில் தனது மானம் போய்விடுமென்ற பெருந் திகிலும், திகைப்பும் கொண்டவளாய், அந்த மடந்தை புலிக் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொண்ட மான் போல உயிருக்கு மன்றாடி ஓலமிட்டு அலறிய தருணத்தில் கள் கடை இருந்த திக்கிலிருந்து யாரோ ஒருவர் பெருத்த கூக்குரல் செய்து அதட்டிக்கொண்டு அவர்களை நோக்கி ஓடிவந்தது தெரிந்தது. அப்படி ஓடிவந்த மனிதர், ''அடே பயல்களா! ரஸ்தாவில் போகிறவர்களையெல்லாம் இப்படித்தானா வழிமறித்து அக்கிரமம் செய்கிறது? விடுங்கள் அந்தப் பெண்ணை; தொடாதீர்கள்! குடிகார நாய்களா! பட்டப் பகலிலேயே கொள்ளையடிக்க ஆரம்பித்து விட்டீர்களா? ஆகா இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டதா?'' என்று கூறி அதட்டிக் கொண்டே வர, தனக்கு யாரோ ஒருவர் துணை செய்ய வருகிறார் என்பதைக் காணவே, ஷண்முகவடிவிற்கு உயிர் திரும்பியது. அவள் நல்ல மூச்சாக விடுத்தது அன்றி, மிகுந்த துணிவும், வலுவும் கொண்டவளாய், முன்னிலும் அதிகமாகத் திமிறத் தொடங்கினாள்.

அப்போது அந்தத் திருடர்களுள் ஒருவன், ''அடேய்! ஆள் வருதுடோய். இன்னமே நிக்கப்படாது. வாங்கடா ஓடிப் போவோம்'' என்று கூற, உடனே அந்தக் குடியர்கள், அந்த மடந்தையி னிடத்திலிருந்து பிடுங்கிய சாமான்களை எடுத்துக் கொண்டு மூலைக்கொருவராகப் பிரிந்து ஓடத்தலைப்பட்டனர். ''விடாதே விடாதே பிடி பிடி'' என்று ஓங்கிக் கூச்சலிட்டவராய்,

கையில் ஒரு பெருத்த தடிக் கம்போடு அந்தத் திருடரை அதட்டிக்கொண்டு அவளை நோக்கி ஓடிவந்த மனிதர் யார் என்பதை அறிய ஆவல் கொண்டவளாய், நமது இளந் தோகையான ஷண்முகவடிவு, அந்தப் பக்கம் திரும்பிப்பார்க்க, அவளுக்கு உண்டான வியப்பும் மகிழ்ச்சியும் அளவில் அடங்கா தனவாக இருந்தன. யாரோ பல மனிதர்கள் திருடரைத் துரத்து கிறார்கள் என்று அவள் அதுவரையில் நினைத்திருந்ததற்கு மாறாக, ஒரே ஒரு மனிதர் அங்கே வந்து சேர்ந்ததையும், அப்படி வந்த மனிதர் திருவாரூர் பாங்கியிலிருந்து ஜவுளிக்கடை வரையில் தன்னைத் தொடர்ந்து வந்தவரான காஷாய வஸ்திரப் பண்டாரமாக இருந்ததையும் காண, அவள் மிகுந்த ஆச்சரியம் அடைந்ததன்றி, தனக்கு மிகவும் ஆப்தரான ஒரு நண்பரைக் கண்டவள்போல, மிகுந்த தைரியமும் மகிழ்ச்சியும் கொள்ளலானாள். அந்த முரட்டுக் கள்வர், தனது பொருட்களை அபகரித்துத் தனது திரேகப் பரிசுத்தத்தைக் கெடுக்கப்போன மகா அபாயகரமான அந்த நல்ல தருணத்தில் ஈசுவரன்போலப் பிரத்தியக்ஷமாகித் தனது மானத்தையும் உயிரையும் காப்பாற்றிய புண்ணியவானான அந்தப் பண்டாரத்தைக் கண்டவுடனே, அவளது மனதில் நன்றியறிதலும், மகிழ்ச்சியும் பொங்கி எழுந்தன. அவள் தன்னை அறியாமலேயே தனது இரு கரங்களையும் எடுத்துக்குவித்து, பண்டாரத்தைக் கும்பிட்டு, "சுவாமிகள் செய்த உபகாரம் மகா பெரியது; இந்தச் சமயத்தில் தாங்கள் வந்திராவிட்டால் இந்நேரம் என்னுடைய மானம் போயிருக்கும். நான் உடனே என் பிராணனை மாய்த்துக் கொண்டிருப்பேன். அநாதரவாக வீட்டில் படுத்திருக்கும் என்னுடைய அத்தையும் நாதியற்று அகால மரணம் அடைந்து விடுவார்கள். தாங்கள் செய்த இந்தப் பேருதவியினாலேதான், நாங்கள் தப்பிப் பிழைத்தோம். சுவாமிகள் இந்தப் பெரிய புண்ணியத்தைக் கட்டிக்கொண்டீர்கள்" என்று மிகமிக உருக்கமாகவும் அந்தரங்கமான பக்தி விநயத்தோடும் கூறி வணங்கினாள்.

அவளது சொற்களைக் கேட்ட பண்டாரம், அன்பாகப் புன்னகை செய்து, ''பெண்ணே! பயப்படாதே! இனிமேல் உனக்கு எவ்விதக் கெடுதலும் உண்டாகாது; நானிருக்கிறேன். ஆயிரம் மனிதர் வந்தால்கூட நான் ஒரு கை பார்த்து விடுகிறேன். என்னுடைய உயிர் இருக்கிறவரையில் நீ பயப்படத் தேவையில்லை. நான் அப்போதே சொன்னேன். அதை நீ கேட்கமால், தனிவழி நடந்து வந்தாய். இந்த இடத்தில் இந்தக் குடியர்கள் இப்படி அடிக்கடி செய்கிறார்கள் என்று நான் கேள்வியுற்றிருக்கிறேன். உனக்கு ஏதாவது இடைஞ்சல் உண்டாகப் போகிறதே என்ற கவலையோடு தான் நான் வந்தேன். நீ வருவாய் என்று, நான் வழியில் நெடுநேரமாக இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். இவ்வளவு பொழுது சாய்ந்தும் நீ வராததைக் கண்டு, ஒருகால் யாராவது பந்துக்களின் வீட்டில் நீ ராத்திரிக்குத் தங்கியிருப்பாய் என்று நினைத்துத் தேறுதல் அடைந்தேன். அதற்குள் என்னுடைய உடம்பில் ஒருவித உபாதை உண்டாயிற்று. இதோ பக்கத்திலிருக்கும் ஆற்றங்கரைக்குப்போய் கை கால் சுத்தி செய்து கொண்டு ரஸ்தாவோடு வந்து கொண்டிருந்தேன். கள் கடையண்டையில் வந்தபோது, தற்செயலாக நான் இங்கே பார்க்க, இவர்கள் உன்னை வளைத்து உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தது தெரிந்தது. நான் உடனே கள் கடையண்டை போய் தடிக்கம்பை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடி வந்தேன். என்னைக் கண்டவுடனே இவர்கள் நல்ல வேளையாக ஓடிப் போய் விட்டார்கள். நான் இன்னம் கொஞ்சநேரம் வராதிருந்தால், நீ சொன்னபடி இந்நேரம் இவர்கள் உன்னை என்ன கோலத்துக்கு ஆளாக்கி யிருப்பார்களோ தெரியவில்லை. என்னவோ தெய்வச் செயல்தான் இந்த அபாயம் இவ்வளவோடு நீங்கியது. இனிமேல் நீ திருவாரூருக்கு வரவேண்டுமானால், யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமே அன்றி இப்படித் தனியாக வரவேண்டாம். அது போகட்டும்;

இப்போது இவர்கள் உன்னிடத்தில் இருந்த எல்லா சாமான்களையும் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்களா? மிகுதிப்பணம் பத்திரமாக இருக்கிறதல்லவா?'' என்றார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு மிகுந்த கிலேசமும் சஞ்சலமும் அடைந்தவளாய் வெட்கமுற்றுக் கீழே குனிந்து, ''ஆம்; பணம் சாமான்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். தங்களுடைய வார்த்தையை லட்சியம் பண்ணாமல், நான் தனியாக இப்போது இங்கே வந்தது தவறுதான். எதுபோனாலும் போகட்டும். இவர்கள் வேறுவிதமாக என்னை இழிவுபடுத்தாமல், சொத்தோடு போனார்களே, அதுவே போதுமானது'' என்றாள்.

பண்டாரம், ''சொத்து போனால் போகட்டும். இந்த ஆட்களெல்லாம் இன்னார் என்பது எனக்குத் தெரியும்; என்னுடைய மடம் இதோ பக்கத்தில் இருக்கிறது. அதற்கடுத்தாற்போல் வீடுகள் இருக்கின்றன. அங்கே இந்த ஊர்ப் பண்ணை மிராசுதார் சிதம்பரநாதபிள்ளை என்று ஒரு தனிகர் இருக்கிறார். அவருக்கு இருநூறு வேலி நிலமிருக்கிறது. இந்தப் பக்கத்துக்கே அவர்தான் மகா பிரபலமான பெரிய மனிதர். அவருக்கு நிரம்பவும் செல்வாக்கு உண்டு. இந்தக் குடியர்கள்கூட அவருடைய பண்ணையாட்களாகத்தான் இருக்க வேண்டும். நான் உடனே போய், அவரிடத்தில் இந்தச் சங்கதியைச் சொன்னால் அவர் உடனே இந்த நாய்களைப் பிடித்துத் தொழுக்கட்டையில் அடித்து, சாமான்களையும் பணத்தையும் வாங்கிக்கொடுத்து விடுவார். ஆகையால், நீ இப்போது என்னோடு கூடவே வருவாயானால், இன்னம் அரை நாழிகைக்குள் பணமும் சாமான்களும் உன்னிடம் வந்து சேர்ந்துவிடும். அவர் சில ஆட்களையும் உனக்குத் துணையாக உன்னோடு அனுப்பி, உன்னைப் பத்திரமாக உன்னுடைய ஜாகையில் கொண்டுபோய் விடச் செய்வார். ஆகையால் நீ என்னோடு கூடவே வா; இதோ கூப்பிடு தூரத்தில் என்னுடைய மடம் இருக்கிறது'' என்றார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு தான் என்ன செய்வது என்பதை அறியாமல் சிறிதுநேரம் தயங்கிநின்றபின், ''சுவாமிகள் கோபிக்கப்படாது. என்னுடைய வீட்டில் என் அத்தை தேக அசௌக்கியமாகப் படுத்திருக்கிறார்கள். அவர்கள் நகருகிறதும் இல்லை, பேசுகிறதும் இல்லை; ஆகாரத்தை அவர்களுடைய வாயில் போட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில் உள்ள அவர்களை நான் வேலைக்காரி வசம் விட்டு வந்து நெடுநேரமாகிவிட்டது. நான் உடனேபோய் அவளை அனுப்ப வேண்டும். பணமும் சாமானும் போனால் போகட்டும். நான் அவசரமாக ஜாகைக்குப் போக வேண்டும்.இந்தத் திருட்டைப் பற்றித் தாங்கள் யாரிடத்திலும் பிரஸ்தாபிக்க வேண்டாம். ஆனால், சுவாமிகளுக்கு நான் ஒரே ஒரு விஷயத்தில் சிரமம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவுதூரம் காரியம் நடந்தபிறகு இனி தனியாக ஜாகைக்குப் போக எனக்குப் பயமாக இருக்கிறது. தாங்கள் என்னை என்னுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டால், அது இப்போது செய்தது போன்ற இன்னொரு பெரிய உதவியாகும்'' என்று நயமாக வேண்டிக் கூறினாள்.

அதைக் கேட்ட பண்டாரம், ''அம்மா! குழந்தாய்! உன்னை இந்த இடத்தில் தனியாக விட்டுவிடுவேனா? உன்னுடைய ஜாகையில் கொண்டுபோய் விடும்படி நீ என்னிடத்தில் கேட்டுக் கொள்ளவும் வேண்டுமா? நீ கொஞ்சமும் கவலை கொள்ள வேண்டாம்; உன்னை நான் பத்திரமாக உன்னுடைய ஜாகையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்; ஆனால் இன்னொரு விஷயம் இருக்கிறது. இந்தக் குடியர்களை இப்போது நாம் சும்மா விட்டுவிடுவோமானால் பிறகு அவர்களுக்கு இளக்காரம் ஆகிவிடும்; ஒருவித துணிவும் ஏற்பட்டு விடும். அவர்கள் நாளையதினம், உன்னுடைய ஜாகைக்குள் புகுந்து கொள்ளையடித்து, இல்லாத பொல்லாத அக்கிரமங்களை யெல்லாம் செய்யத் தலைப்படுவார்கள். ஆகையால், இப்போதே நாம் போய்ப் பெரிய பண்ணை பிள்ளையிடத்தில்

இதைத்தெரிவித்து வைத்தால், அவர் அவர்களைக் கடுமையாகத் தண்டித்து, இனி அவர்களால் உனக்கு எவ்விதமான பொல்லாங்கும் நேராத வழியைத் தேடுவார். அதோடு உன்னிடத்திலிருந்து அபகரிக்கப்பட்ட பொருளும் வந்து சேரும். இப்போது நீலலோசனி அம்மாளைக் கவனிப்பதற்காக நீ அவசரமாக உன்னுடைய ஜாகைக்குப் போகவேண்டு மாதலால் பெரிய பண்ணைப் பிள்ளையிடத்தில் நாளைக்குக் காலையில், நாம் சொல்லிக் கொள்ளலாம் என்று நீ ஒரு வேளை நினைக்கலாம். உங்களுடைய ஜாகை இன்னம் அரைமைல் தூரத்தில் இருக்கிறது. நீயும் நானும் வேறே துணையில்லாமல் தனியாக அவ்வளவு தூரம் போவதும் அபாயகரமான விஷயம். எப்படி என்றால், இப்போது இந்த ஆள்கள், நான் செய்த பெருத்த கூக்குரலைக் கேட்டு, யாரோ பல மனிதர்கள் துணைக்கு வருகிறார்கள் என்று நினைத்துப் பயந்து ஓடியிருக்கிறார்கள். அவர்கள் ஓடினாலும் இப்போது எங்கேயாவது பக்கத்தில்தான் ஒளிந்திருந்து நம்மைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள்; நான் ஒருவன்தான் துணைவந்திருக்கிறேன் என்பதையும், நீயும் நானும் தனியாகப் போகிறோம் என்பதையும் கண்டால், அவர்கள் மறுபடியும் திரும்பி வந்து ஏதாவது உபத்திரவம் செய்தாலும் செய்வார்கள். அவர்கள் எடுத்துக்கொண்டு போக என்னிடத்தில் யாதொரு பொருளும் இல்லையே என்று நீ சொல்லலாம். அவர்கள் முரடர்கள்; குடித்துவிட்டு மூர்க்கங் கொண்டு வந்திருப்பார்கள். நீயோ அழகும் யௌவனமும் நிறைந்தவளாய் இருக்கிறாய். அவர்கள் உன்னிடத்தில் ஏதேனும் துஷ்ட நினைவுகொண்டு திரும்பி வந்தாலும் வரலாம். இப்போது நான் வராவிட்டால், உனக்கு மானஹானியும், பிராணஹானியும் நேர்ந்திருக்கும் என்று நீயே சொன்னாய். அதிலிருந்து அவர்கள் அப்படிப்பட்ட சந்தேகாஸ்பதமான கெட்ட செய்கை ஏதேனும் செய்ய யத்தனித்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது. இப்போது நீயும் நானும் தனியாகப் போகிறோமென்பது

தெரிந்தால், அவர்கள் மறுபடியும் வந்து என்னை அடித்துப் போட்டுவிட்டு, உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்; எனக்குத் துன்பம் உண்டாகும் என்று நான் பின் வாங்க வில்லை. உன்னுடைய நன்மையைக் கருதியே நான் பேசுகிறேன். அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் காசு கொடுத்தாலும் வராதென்று உலகத்தார் சொல்லுவார்கள். சொத்துக்கள் போனதைப் பற்றிக் கவலை இல்லை. திரேகத்திற்கு எவ்வித பங்கமும் ஏற்படாமல் தப்பியதே பெருத்த அதிர்ஷ்டம் என்று நீயே கொஞ்ச நேரத்துக்குமுன் சொன்னாய். ஆகையால், நாம் இருவரும் இப்போது தனியாக உன்னுடைய ஜாகைக்குப் போவது நிரம்பவும் அபாயகர மானது. என்னுடைய மடமும் வீடுகளும் இதோ பக்கத்திலேதான் இருக்கின்றன. நாம் அங்கே போய்ச் சேர, அரைக்கால் நாழிகை நேரம் கூடப் பிடிக்காது. அங்கே போனவுடன் நான் நமக்கு இன்னம் சில ஆள்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன். உடனே நாங்கள் அங்கே இருந்து புறப்பட்டு உன்னை உன்னுடைய ஜாகையில் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டு வருகிறோம். நீ என்னுடைய சொந்த மகளைப் போலவே இருக்கிறாய். உனக்கு நேரும் விபத்தும் அவமானமும் எனக்கு நேர்ந்தவை மாதிரியல்லவா. நான் சொல்லுகிறபடி செய். உனக்கு ஒரு கெடுதலும் உண்டாகாது. நான் திருவாரூரில் சொன்ன புத்திமதியை நீ அலட்சியம் செய்ததன் பலன் கைமேல் பலித்து விட்டது. இப்போதும், நீ உன்னுடைய யோசனைப் படியே செய்வாயானால், வீண் துன்பங்களுக்கும், மானக்கேட்டுக்கும் நீ இலக்காவது நிச்சயம். இந்தப் பாதை மகா கெட்ட பாதை; சிறுபிள்ளை பயம் அறியாது என்கிறபடி நீ பேசுகிறாய். என்னவோ நான் சொல்லக் கூடியதைச்சொல்லி விட்டேன். பிறகு உன்னுடைய இஷ்டம்'' என்று தேன்போல இனிமையாகவும், மிகுந்த கரிசனத்தோடும், நிரம்ப உருக்கமாகவும் பேசினார்.

அவரது சொற்களைக் கேட்ட ஷண்முகவடிவு தான் என்ன செய்வது என்று ஒருவித முடிவிற்கு வரமாட்டாதவளாய்ச் சிறிது நேரம் தயங்கி நின்றபின், அவரைநோக்கி, "சுவாமிகள் சொன்னது எல்லாம் நியாயமான சங்கதியே; அந்த மாதிரியே நான் நடந்து கொள்ள வேண்டியதுதான் உசிதமாகத் தோன்றுகிறது. நான் என்னுடைய அத்தையம்மாளைத் தனியாக விட்டுவந்து நெடுநேரமாகிறது. அதற்காக அங்கே உடனே போய்ச் சேர வேண்டும் என்ற ஓர் ஆவலும் பதைப்பும் எழுந்து என்னைத் தூண்டிக் கொண்டே இருப்பதால் நான் நேராய்ப் போகவேண்டும் என்று சொல்ல வந்தது. இருந்தாலும் பரவாயில்லை. நான் தங்களுடைய மடத்துக்கு வந்து அங்கே அதிக நேரம் தாமதிக்காமல் உடனே புறப்பட்டுப்போய் விடும்படியான மார்க்கத்தைத் தாங்கள் செய்ய வேண்டும். நான் தங்களுடைய யோசனையின்படியே நடந்து கொள்ளுகிறேன். இவ்வளவு தூரம் எனக்கு உதவி செய்து என்னைக் காப்பாற்றிய மகா உபகாரியான தங்களுடைய மனம் கோணும்படியாக நான் பிடிவாதம் செய்வது தகாது. வாருங்கள் மடத்துக்கே போகலாம்" என்று பணிவாகவும் நயமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட பண்டாரம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவராய், "அம்மா! குழந்தாய்! நீ நல்ல விவேகியாகத் தோன்றுகிறாய். உன்னைப் போன்றவர்களுக்குக் கொஞ்சம் கோடி காட்டினால் அதுவே போதுமானது; முட்டாள்களுக்கு அல்லவா இடித்திடித்து இரண்டாயிரம் தரம் சொல்ல வேண்டும். நான் இந்த உலகத்தையெல்லாம் துறந்த பண்டாரம்; பரோபகாரத்தின் பொருட்டே நான் இந்த உடம்பைப் பயன்படுத்தி உழைத்து வருகிறேன்; ஆரூடம் ஜோசியம் முதலிய விஷயங்களெல்லாம் எனக்குக் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. நீ செட்டியாருடைய பாங்கிக்கு வந்தபோது, நீ யார் என்பதையும், உன்னுடைய கால பலனையும், எக்ஷணி தேவதையின் மூலமாக நான் அறிந்து கொண்டேன். உனக்கு நடுப்பாதையில் அபாயம் நேரிடப் போகிறது என்பதை

அறிந்து, அதைத் தடுப்பதற்காகவே நான் உன்னைத் தொடர்ந்து வந்தது. ஆகையால், நீ எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. உன்னை ஜாக்கிரதையாக உன்னுடைய ஜாகையில் கொண்டுபோய் விடுவது என்னைச் சேர்ந்த பொறுப்பு; வா போகலாம். நான் இருக்கும் ஊர் இதோ ஒரு கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறது'' என்று அவளுக்குத் தென்பான மொழிகள் கூறி, அவளை அழைத்துக்கொண்டு அந்த ரஸ்தாவோடு செல்லலானார். பண்டாரம் முன்னாலும் மடவரல் பின்னாலுமாக அவர்கள் அதே பாதையில் மேலும் அரைக்கால் மைல் தூரம் சென்றனர்; அதன்பிறகு அவ்விடத்திலிருந்து பிரிந்து தெற்குத் திக்கில் சென்ற ஓர் ஒற்றையடிப் பாதையின் வழியாக நடந்தே தமது மடத்திற்குப் போகவேண்டும் என்று பண்டாரம் கூறி, ஷண்முகவடிவையும் அழைத்துக்கொண்டு அந்தப் பாதையின் வழியாகச் சென்றார். அப்போது மாலை 7 மணி சமயம் ஆகிவிட்டது. ஆகையாலும், அது முன்னிருட்காலம் ஆனதாலும் எங்கும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. கண்காணும் தூரம்வரை வேறே மனிதரே காணப்படவில்லை. மனிதர் பேசிய குரலும் கேட்கவில்லை. பண்டாரம் ஷண்முக வடிவின் குடும்ப வரலாறுகளையும் யோக க்ஷேமங்களையும் பற்றி அந்தரங்க அன்போடு விசாரித்து, அவளுக்கு அநுதாபமான வார்த்தைகளைக் கூறிக்கொண்டே முன்னால் நடக்க, ஷண்முகவடிவின் ஹிருதயம் திடுக்கு திடுக்கென்று அடித்துக் கொண்டேயிருந்தது. உடம்பு அடிக்கடி நடுங்கி மயிர்க் கூச்சலுற்றது. என்றைக்கும் இல்லாத விபரீதமாக தான் அன்றைய தினம் அப்படிப்பட்ட விபத்தில் மாட்டிக் கொண்டிருப்பதையும், முன்பின் அறியாத ஒரு பண்டாரத்தோடு இருளில் தான் தனியாக எங்கேயோ போய்க்கொண்டி ருப்பதையும் நினைத்து அவளது மனது பெருத்த திகிலும் சஞ்சலமும் அடைந்து தத்தளித்து தான் அவ்வாறு போவதிலி ருந்து தனக்கு ஏதேனும் பெருத்த விபரீதம் சம்பவிக்குமோ என்ற அச்சம் அடிக்கடி தலைகாட்டிக் கொண்டிருந்தது. அவள்

அதற்குமுன் இருளில் அப்படிப்பட்ட மரம் அடர்ந்த நிலங்களைப் பார்த்தவளே இல்லை. ஆதலால், பெருத்த பேய்கள் போலத் தலைவிரித்து நின்ற தென்னை பனை முதலிய மரங்களை இருளில் பார்க்க, அவளுக்குக் குலைநடுக்கம் உண்டாயிற்று. புதருக்குள் கீரி, ஓணான், நரி முதலிய ஜெந்துக்கள் மடமடவென்ற ஓசையுடன் சென்றபோதெல்லாம் அவளது மெல்லிய மேனி கிடுகிடென்று ஆடியது. ஆந்தை கோட்டான் முதலிய நிராசரப் பறவைகளும், நரிகளும் காள் கூளென்று அரற்றி ஆரவாரம் செய்ததைக் கேட்கக் கேட்க, அவளது உயிரே தள்ளாடியது. அப்படிப்பட்ட் மகா பயங்கரமான நிலைமையில் வந்துகொண்டிருந்த ஷண்முகவடி வினிடத்தில் பண்டாரம் அடிக்கடி ஏதேதோ கேள்விகள்கேட்டு, அவளது பயத்தைத் தெளிவிக்க முயன்றவராய் அவளை நடத்திக்கொண்டு சென்றார். ஒற்றையடிப் பாதையில் அடிக்கடி பாம்புகள் சரசரவென்று நகர்ந்துபோன ஓசை உண்டான ஆகையால், அதைக்கேட்டு அந்தப்பெண்பாவை கிலி கொள்ளப் போகிறாளே என்கிற நினைவினாலும் அந்த துஷ்ட ஜெந்துக்கள் தம்மை கடித்துவிடப் போகிறதே என்கிற முன் ஜாக்கிரதையினாலும் தூண்டப்பட்டவராய், பண்டாரம் தமது கையிலிருந்த மூங்கில் தடியை முன் பக்கத்தில் லொட்டு லொட்டென்று தட்டிக்கொண்டே நடந்தார். அவ்வாறு நடந்து அவர்கள் தெற்குப் பக்கமாக அரைக்கால் மைல் தூரம் போக அவ்விடத்தில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதைக் கண்டவுடனே ஷண்முகவடிவு கட்டிலடங்காப் பெருந்திகிலும் கலவரமும் அடைந்தவளாய், ''என்ன இது? ஆறு மாதிரி இருக்கிறதே! ஜலம் அதிகமாக இருக்குமோ என்னவோ? இதைத் தாண்டி அப்புறம் போகவேண்டுமா?'' என்று மிகவும் பரிதாபகரமாகக் கேட்க, பண்டாரம் அவளுக்குத் தெம்பு உண்டாக்கத் தக்கபடி பேசத் தொடங்கி, ''ஆம் அம்மா! இது ஒரு சின்ன வாய்க்கால்; கொஞ்ச அகலந்தான். நாம் தாண்டின உடனே, இதற்கு அப்பால் நாலைந்து வயல்கள் இருக்கின்றன; உடனே என்னுடைய

மடம் வந்துவிடும். இனிப் பயம் இல்லை. இதோ வந்து விட்டது'' என்று கூறி, அவளை அழைத்துக்கொண்டு எதிரே இருந்த ஆற்றிற்குள் இறங்கிச்சென்றார். அது பெருத்த ஆறாகத் தோன்றியது. ஆனாலும், அவர் சொன்னபடி ஒரு பக்கத்தில் முழங்கால் அளவு தெளிந்த ஜலம் சலசலவென்ற இனிய ஓசையோடு சென்று கொண்டிருந்தது. ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் இருந்த படுகைகளில் நாணல், வாழை, இச்சி முதலிய மரங்கள் அடர்ந்து பெருத்த ஆரணியத்தின் தோற்றத்தை உண்டாக்கியது. ஆகையால், தான் அந்தப் பண்டாரத்தோடு நிர்மானுஷ்யமான அந்த ஆற்றிற்குள்ளிருந்தது ஷண்முகவடிவிற்கு சகிக்கமாட்டாத பரம வேதனையாக இருந்தது. ஆற்றில் ஓடிய ஜலம் அதிக ஆழமாக இருக்குமோ என்று அவள் பயந்து பின் தங்கினாள். ஆதலால், பண்டாரம் முன்னால் இறங்கி ஆழம் காட்டிக்கொண்டே போனதன்றி, தமது கையிலிருந்த மூங்கில் தடியைப் பின்பக்கத்தில் நீட்டி, அவள் அதைப் பிடித்துக்கொண்டு தொடர்ந்து வரும்படி செய்தார். குடியர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப் பட்டதாலும், அதன்பிறகு இருளில் தனியாக வருவதாலும் ஏற்பட்ட பெரும் பீதியினால், ஷண்முகவடிவிற்கு நெஞ்சு காய்ந்து போயிருந்தமையால், அந்தப் பெண்மணி நடக்கும்போதே இரண்டொரு கை தண்ணீர் எடுத்து அருந்தித் தனது தாகவிடாயைத் தணித்துக் கொண்டவளாய்த் தனது அத்தையின் நிலைமை எப்படி இருக்கிறதோ என்றும், தான் திரும்ப வராததைக் குறித்து வேலைக்காரி எவ்வாறு கவலையுற்று வருந்துகிறாளோ என்றும் நினைத்து மனம் ஆழ்கித் தவித்தவளாய், பண்டாரத்தைத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாள். அவ்வாறு அவர்களிருவரும் ஆற்றைக் கடந்து அக்கரை ஏறி அதற்கு அப்பாலிருந்த வயல்களின் வழியாகச் செல்லலாயினர். அங்கே தோன்றிய வயல்களில் கம்பு, சோளம் முதலிய பயிர்ச் செடிகள், ஓர் ஆள் உயரம் வளர்ந்திருந்த தாகையால், அவற்றின் இடையில் சென்ற

ஒற்றையடிப் பாதையில் வழியறிந்து நடப்பது மகா துர்லபமாக இருந்தது. பண்டாரம் அந்தப் பாதையை நன்றாக அறிந்தவராதலால், அவர் அலட்சியமாக அதற்குள் நுழைந்து செல்லலானார். ஒரே வனமாகக் காணப்பட்ட அந்தக் கொல்லைக்குள் செடிகளின் இடையில் நுழைந்துசெல்ல அஞ்சிய ஷண்முகவடிவு தயங்கித் தயங்கிப் பின் தங்கிச் சென்றாள். ஆதலால், சிறிது தூரம் நடக்குமுன் வழிதவறிப் போய்விட்டது. அவள் அந்த ஒற்றையடிப் பாதையை விட்டு விலகி பயிர்ச் செடிகளிற்குள் நுழைந்து நடக்கமாட்டாமல் தத்தளிக்கிறாள். செடிகளும், கொம்புகளும், பயிர்ச்செடிகளின் உயர்ந்த தாள்களும் அவளது வழியை மறைத்துச் சேலை முதலியவற்றைப் பிடித்து இழுக்கத் தொடங்கின. அதற்குள் பத்துப் பதினைந்து தப்படிகள் முன்னால் சென்ற பண்டாரம் சடக்கென்று பின்னால் திரும்பிப் பார்த்து, ''அம்மா! ஷண்முகவடிவு! வருகிறாயா?'' என்று கேட்க, அவள் வலது பக்கத்தில் நெடுந்தூரத்திற்கு அப்பால் நின்று, ''ஐயோ! நான் இங்கே அல்லவா இருக்கிறேன்! வழி இருக்கிற இடமே தெரியவில்லையே!'' என்று மிகுந்த கலவரத்தோடு கூற, அதைக்கேட்ட பண்டாரம் நிரம்பவும் விசனமுற்றவராய், ''அடாடா! வழியை விட்டு எங்கேயோ போய்விட்டாயே! அப்படியே நில்; இதோ நான் வந்து உன்னை அழைத்துக் கொண்டு வந்து வழியில் சேர்க்கிறேன்'' என்று அனுதாபத்தோடு கூறியவண்ணம் அவள் இருந்த இடத்தை நோக்கிச் சென்றார். ஒற்றையடிப்பாதையிலிருந்து அவள் இருந்த இடம்வரையில் பயிர்களை இரண்டு பக்கங்களிலும் வளைத்துச் சாய வைத்து வழி செய்துகொண்டே போய், தூரத்தில் நின்றபடி தமது தடிக்கம்பை நீட்டி அவளை மெதுவாக அதேவழியில் அழைத்து வந்து ஒற்றையடிப் பாதையில் விட்டு, ''பெண்ணே! நான் மெல்ல மெல்லப் போகிறேன். நீ வேறே எங்கேயும் போய்விடாமல், என் பின்னாகவே தொடர்ந்து வா!'' என்று மிகுந்த வாத்சல்யத்தோடும் பரிவோடும் கூற,

அதைக்கேட்ட பெண்பாவை, அந்தப்பண்டாரம் தனது விஷயத்தில் எவ்விதக் கைம்மாறும் கருதாமல் அவ்வளவு அதிகமான ஜீவகாருண்யமும் அன்பும் காட்டுவதைக் குறித்து அளவுகடந்த நன்றியறிதலும் பயபக்தியும், பணிவும் மரியாதையும் வைத்தவளாய், அவரைநோக்கி, ''அடடா! சுவாமிகளுக்கு இன்றையதினம் என்னால் எவ்வளவு பிரயாசை! தாங்கள் இல்லாவிட்டால் இன்றோடு நான் தீர்ந்துபோயிருப்பேன். தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பிறப்பு; இன்றைய தினம் நான் தப்பிப் பிழைத்தது, சுவாமிகளின் அருளினால் ஏற்பட்ட இரண்டாவது பிறப்பு; என்னவோ, தெய்வந்தான் இன்றைய தினம் தங்களைச் செட்டியாருடைய பாங்கியில் கொண்டுவந்து வைத்து என்னைச் சந்திக்கச் செய்தது. ஈசுவரன் இல்லாமலா எத்தனையோ சதகோடி ஜீவ ஜெந்துக்கள் எல்லாம் இந்த உலகத்தில் வாழ்கின்றன'' என்று பெரிய தத்துவம் பேசிய வண்ணம் பண்டாரத்திற்குப் பின்னால் நெருங்கி நடந்து வந்தாள்.

பண்டாரம், ''ஆம் அம்மா! நீ சொல்வது உண்மையான விஷயம். கடவுள் எங்கும் நிறைந்த பராபர வஸ்துவல்லவா? அவருக்குத் தெரியாத சங்கதி ஒன்றுமில்லை. அவர் இரவு பகல் எப்போதும் இமைகொட்டாமல் விழிப்பாகவே இருக்கிறார். மனிதரைப்போல அவர் மாத்திரம் ஒரு நொடிப்பொழுது கண் அயர்வாரானால், இந்த உலகம் ஓர் இமைப் பொழுது நிலை நிற்குமா! எளியோரை வலியோர் அடித்து வாயில் போட்டுக்கொண்டு விட மாட்டார்களா! ஆனால் கடவுளுடைய படைப்பில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. நல்ல வஸ்துக்களையும் அவர் தான் படைக்கிறார். கெட்ட வஸ்துக்களையும் அவர்தான் படைக்கிறார். அதுபோல, நல்ல மனிதர்களையும், துஷ்டர்களையும், நற்குணத்தையும், கெட்ட குணத்தையும், இன்பத்தையும், துன்பத்தையும் எல்லாவற்றையும் அவர்தான் படைக்கிறவர். உலகத்தில் கெடுதலே

இல்லாமல் சுத்த நன்மையாக இருந்தால், அது இன்பகரமாக இருக்காதோ என்னவோ, கடவுளுக்கும் இப்படிப்பட்ட திருவிளையாடல்களை எல்லாம் பார்த்து ஆனந்திப்பதில் ஒருவிதத் திருப்தி உண்டாகும் போல் இருக்கிறது. ஆகையால், இந்த உலகத்தில் திருடர்கள் எப்போதும் திருடிக்கொண்டு தான் இருப்பார்கள். விபசார நாட்டம் உள்ளவர்கள் அழகான ஸ்திரீ புருஷரிடத்தில் துராசை வைக்கத்தான் வைப்பார்கள். இந்த உலகமே ஒரு நாடக மேடை. கடவுள் பிரபஞ்ச லீலா விநோத நாடகத்தை ஆட்டி வைக்கிறார். நற்குணமுள்ள மனிதன் அவனுடைய வேஷத்தை ஒழுங்காக ஆடினால், அதைக் கண்டும் கடவுள் சந்தோஷப்படுகிறார். திருடன், குடியன், துஷ்டன், பைத்தியக்காரன், ஊமையன், நொண்டி முதலிய மற்ற எவரும் தத்தம் வேஷங்களை ஒழுங்காக ஆடினாலும் அதைக் கண்டும் நாடகத் தலைவர் சந்தோஷம் அடைகிறார். ஆகையால், நாம் இந்த உலக விஷயத்தில் கடவுளுக்குப் பிரியமானது எது, பிரியமற்றது எது என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியாது. மனசுக்கு மனசே சாட்சி யென்றபடி, அவனவனுக்கு எது சரியாகத் தோன்றுகிறதோ அதையே அவனவன் செய்கிறதே மனித தருமமாக இருக்கும். இந்த உலகத்தில் நாம் யாரைக் கண்டிக்கிறது, யாரைக் கொண்டாடுகிறது.இதெல்லாம் பூர்வ ஜென்மகரும பலனேயன்றி வேறல்ல. எந்தச் சமயத்தில் நமக்கு எப்படிப்பட்ட நிலைமையோ, துக்கமோ, சுகமோ, இழிவோ ஏற்பட்டாலும் அதை நாம் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். நாம் சுயேச்சை இல்லாமல், அம்புபோல எய்கிறவனுக்கு அடிமையாக இருக்கிறோம். கொஞ்ச நேரத்துக்கு முன் அந்தக் குடியர்கள் வந்து வழிமறித்து உன்னுடைய சொத்துக்களை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். கடவுள் அதைத் தடுக்காமல்தானே விட்டுவிட்டார். அதுபோல, இன்னம் கொஞ்ச நேரத்தில் முன் நேர்ந்ததைவிடப் பெருத்த அபாயம் நேருவதாக வைத்துக் கொள்வோம். அதைக் கடவுள் விலக்கினாலும்

விலக்கலாம்; இல்லாவிட்டாலும் இல்லை. ஆகையால், இந்த உலக வாழ்வில் எதுவும் நிலைத்ததல்ல. இந்த நிமிஷத்தில் சந்தோஷமிருக்கும்; அடுத்த நிமிஷத்தில் அது பரம துக்கமாக முடியும். ஆகையால், எதைப்பற்றியும் சந்தோஷமாவது விசனமாவது கொள்ளாமல் சும்மா இருப்பதே பரம சுகம். நான் பேசும் வேதாந்தத்தைக் கேட்டுக்கொண்டே நீ மெய்ம்மறந்து, வழி தவறி முன்போல எங்கேயாவது பயிருக்குள் நுழைந்துவிடப் போகிறாய். எனக்குப் பக்கத்திலேயே நடந்துவா!'' என்று கூறியவண்ணம் முன்னால் நடந்தார்.

ஷண்முகவடிவு நன்றாகப் படித்து உலக தத்துவங்களை யெல்லாம் சரியாக ஆராய்ச்சி செய்து பழகிய மனதையுடைய மேதையாகையால், அந்தப் பண்டாரம் கூறிய நியாயம் அவளது மனதிற்குத் திருப்திகரமாகத் தோன்றவில்லை. இருந்தாலும், தான் அவரிடத்தில் அந்த விஷயத்தில் அதிகமாகத் தர்க்கவாதம் செய்வது மரியாதை யல்லவென்றும், அவர் உலகைத் துறந்த சந்நியாசியாதலால், அவ்வாறு விரக்தியாகவும், நன்மை தீமைகளிடத்தில் சமநோக்கமாகவும் பேசுகிறார் என்றும் நினைத்து அந்த விஷயத்தை அவ்வளவோடு நிறுத்தி, அவரை நோக்கிப் பணிவாகப் பேசத் தொடங்கி, ''ஆம்; ஆம்; இந்த விஷயங்களில் சுவாமிகளுக்குத் தெரியாததற்கு நான் என்ன சொல்லப் போகிறேன், ஒன்றுமில்லை. அதிருக்கட்டும்; நாம் நிரம்பதூரம் வந்துவிட்ட மாதிரி இருக்கிறதே! தங்களுடைய மடம் இன்னம் அதிக தூரத்தில் இருக்குமா, கிட்டவே இருக்கிறதா? இந்த இருளைப் பார்த்தால், மணி எட்டுக்குமேல் ஆகியிருக்கும் போலத் தோன்றுகிறது. என்னுடைய அத்தையின் கதி எப்படி முடிந்ததோ தெரியவில்லை. வேலைக்காரி அவ்வளவு சமர்த்தியல்ல. அவள் பங்களாவில் தனியா இருக்க பயப்படுவாள். அவள் என்ன செய்கிறாளோ என்னவோ தெரிய வில்லை. என்னுடைய உயிரும் நினைவும் பங்களாவிலேயே இருக்கிறது. இனித் தாங்கள் பெரிய பண்ணைப் பிள்ளையை

எப்போது காண்கிறது? அவர்கள் ஆள் அனுப்ப, நான் எப்போது என்னுடைய ஜாகைக்குப் போய்ச் சேரப் போகிறேனோ தெரியவில்லையே!'' என்றாள்.

அதைக்கேட்ட பண்டாரம், ''குழந்தாய்! கவலைப்படாதே; என்னுடைய மடம் அதோ எதிரில் தெரிகிறது பார். அந்த மடத்துக்குப் பக்கத்திலேயே ஊரும், பெரிய பண்ணைப் பிள்ளையின் இருப்பிடமும் இருக்கின்றன. நான் ஒரு நிமிஷத்தில் அவரை அழைத்துக்கொண்டு வருகிறேன். அவருக்கு நல்ல பெட்டி வண்டி ஒன்று இருக்கிறது. அவர் உன்னை அதில் வைத்து இன்னம் அரை நாழிகைக்குள் உன்னை உன்னுடைய ஜாகையில் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடச் செய்வார். ஆகையால், உனக்கு எவ்விதமான யோசனையும் வேண்டியதே இல்லை. நாம் என்றைக்கும் இல்லாத அபாயத்தில் மாட்டிக் கொண்டோம். அதிலிருந்து ஜாக்கிரதையாகவும் கெடுதல் இல்லாமலும் சரியானபடி தப்பிப் போக வேண்டாமா? கொஞ்சம் காலதாமசம் ஆவதைப் பற்றி வருத்தப்பட்டால், முதலுக்கு அல்லவா மோசம் வந்துவிடும். இந்தத் திருடர்களால் உனக்கு இன்றைய தினம் உயிருக்கு ஹானி நேர்ந்திருந்தால் அப்போது அந்த வேலைக்காரி என்ன செய்வாள்? வீணாக அவரசப்படாதே அம்மா! உனக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு நான் பாடுபடுகிறேனே அல்லாமல், உன்னுடைய வேலைக்காரிக் காவது அத்தைக்காவது அநாவசியமான அசௌகரியம் உண்டாக்க வேண்டும் என்று எனக்கு ஆசையில்லை. சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுதவேண்டும். நீ இன்றைய தினம் பத்திரமாக உன்னுடைய ஜாகைக்குப்போய்ச் சேர்ந்தால் தானே, உன்னுடைய அத்தையை எப்போதும் காப்பாற்ற அநுகூலமாக இருக்கும்'' என்று கூறினார். அவர் சொன்ன சொற்கள் ஈட்டிகள் கொண்டு குத்துவதுபோல இருந்தன. ஆனாலும், அவர் தேனைச் சொட்ட விடுவதுபோல அந்த வார்த்தைகளை மிகவும் நயமாகவும் இன்பகரமாகவும் கூறி முடித்தார்.

அவர் தன்மீது அருவருப்படைந்து அவ்வாறு வருத்தமான சொற்களை உபயோகிக்கிறார் என்று உணர்ந்து கொண்ட ஷண்முகவடிவு, தான் அவசரப்படுத்தியது தவறு என்று நினைத்து, தன்னைத் தானே கடிந்துகொண்டு திரும்பவும் அவரிடத்தில் மரியாதையாகப் பேசத் தொடங்கி, ''சுவாமிகள் கோபித்துக்கொள்ளக்கூடாது. எண்ணறக் கற்றாலும், எழுத்தறப் படித்தாலும், பெண் புத்தி பேதைமை உடையது என்பது சுவாமிகளுக்குத் தெரியாதா? அநாதையாகப் படுத்திருக்கும் அத்தையை பற்றிய கவலை என் மனசை அவ்வளவு அதிகமாக வதைக்கிறது. அதனால்தான் அப்படிக் கேட்டேன். தாங்கள் சொல்லுகிறதுபோல முள்ளில் விழுந்து விட்டோம். உடம்பில் காயம் உண்டாகாமல் நிதானமாகத்தான் தப்பித்து வெளியில் வரவேண்டும். நேரம் ஆனது ஆகிவிட்டது. இன்னம் கொஞ்ச நேரத்தில் என்ன ஆகிவிடப் போகிறது'' என்ற பணிவாகவும் தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டது போலவும் பேசினாள்.

அவளது சொல்லைக்கேட்ட பண்டாரம் மகிழ்ச்சியோடு நகைத்து, ''ஐயோ! பாவம்! நீ எப்படிப்பட்ட சங்கடமான நிலைமையில் இருக்கிறாய் என்பது எனக்குத் தெரியாதா? நான் உலகைத் துறந்த பண்டாரம் ஆனாலும், ஈவிரக்கம், பச்சாதாபம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களையும்கூட நான் துறந்துவிட்டவன் அல்ல. நீ கவலைப்படாதே அம்மா! இன்னம் ஒரே நிமிஷம். அதோ ஒரு ரஸ்தா தெரிகிறது பார். மரம் பத்தியாக இருப்பது தெரியவில்லையா! இந்த ஒற்றையடிப்பாதை போய் அந்த ரஸ்தாவில் சேருகிறது. அந்த ரஸ்தாவின்மேல் என்னுடைய மடமும், பக்கத்தில் தாமரைக் குளமும் இருக்கின்றன. அதற்கு அடுத்தாற்போல ஊர் இருக்கிறது'' என்று கூறியவண்ணம் சிறிது தூரம் நடக்க, அவர்கள் நடந்த ஒற்றையடிப் பாதை, அவ்விடத்தில் குறுக்காகச் சென்ற ஒரு ரஸ்தாவில் கொண்டு போய்விட்டது.

அதைக் கண்டவுடனே ஷண்முகவடிவிற்கு ஒருவித மகிழ்ச்சியும் தைரியமும் உண்டாயின. பண்டாரம் நல்ல யோக்கியமான மனிதர் என்றும், அவர் சொன்னது எல்லாம் உண்மை என்றும் நினைத்தவளாய்த் தனது பார்வையை அந்தப் பாதையின் இரண்டு பக்கங்களிலும் செலுத்திக் கவனித்தாள். அப்போது இருள் நிறைந்திருந்தமையாலும், பாட்டையின் இரண்டு சாரிகளிலும் மரப்பத்திகள் நிறைந்திருந்தமையாலும் வீடுகள் முதலியவை காணப்படவில்லை. ஆனால், அவர்கள் அந்தப் பாதையில் சிறிது தூரம் நடந்து செல்ல, அவ்விடத்தில் ஒரு குளமும், ஒரு கட்டிடமும் காணப்பட்டன. அப்போதே ஷண்முகவடிவிற்கு உயிர் வந்தது; அவள் சிறிது உற்சாகமும் மகிழ்ச்சியும் கொண்டவளாய், "அதோ இருக்கிறதே, அதுதான் தங்களுடைய மடமோ?" என்று வினவினாள்.

அதைக் கேட்ட பண்டாரம், "ஆம் அம்மா! அதுதான் என்னுடைய மடம். அதுவும் பெரிய பண்ணைப் பிள்ளையைச் சேர்ந்ததுதான்; அவர் அதை என்னுடைய வசத்தில் விட்டு வைத்திருக்கிறார். அதற்குள் விக்கிரகங்கள் படங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நான் பூஜை செய்துவிட்டு எப்போதும் இவ்விடத்திலேயே இருப்பது வழக்கம்" என்றார்.

ஷண்முகவடிவு, "தங்களுக்கு ஆகவேண்டிய பணிவிடைகளைச் செய்ய சீஷர்கள், வேலைக்காரர்கள் முதலியவர்கள் இருப்பார்களே. அவர்களும் இப்போது இந்த மடத்திலே இருக்கிறார்களா?" என்றாள்.

பண்டாரம், "எல்லாரும் இருக்கிறார்கள். வா, உனக்குக் காட்டுகிறேன்" என்று கூற, அதற்குள் அந்தக் கட்டிடத்தின் வாசல் வந்து சேர்ந்தது. அது ஒரு சாவடிபோலக் காணப்பட்டது; அதன்முன் பக்கத்து வாசலின் கதவு மூடிப் பூட்டப்பட்டிருந்தது. முன்னால், விசாலமான இரண்டு திண்ணைகள் இருந்தன. பண்டாரம் தமது இடுப்பில் வைத்திருந்த ஒரு திறவுகோலை எடுத்துப் பூட்டை விலக்கிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே

போனார். உட்புறம் முழுதும் இருளே மயமாக இருந்தமையால் ஷண்முகவடிவும் அவரோடு தொடர்ந்து செல்ல அஞ்சி, வெளிப் பக்கத்திலேயே நின்றாள். உள்ளே நுழைந்த பண்டாரம் ஏதோ சாமான்களை உருட்டி ஓசை செய்து இரண்டொரு நிமிஷத்தில் ஒரு விளக்கைக் கொளுத்தி வைக்க, உடனே வெளிச்சம் பளிச்சென்று பிரகாசித்தது. உடனே பண்டாரம், "அம்மா! ஷண்முகவடிவு! வாசலிலேயா நிற்கிறாய்? உள்ளே வா!" என்று அன்பாக அழைக்க, அந்த மடமங்கை அச்சமும் நாணமும் அடைந்தவளாய்த் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தாள். உட்புறத்தில் தாழ்வாரம் கூடம் முற்றம் முதலியவைகள் காணப்பட்டன. கூடத்தின் ஒரு பக்கத்தில் படங்கள் விக்கிரகங்கள் முதலியவை வைக்கப்பட்டி ருந்தமையால், அது ஒரு மடம்போல இருந்தது. அதைக் கண்டவுடனே ஷண்முக வடிவின் மனதிலிருந்த சொற்ப சந்தேகமும் நிவர்த்தியாயிற்று. அந்தப் பண்டாரம் பரோபகார சிந்தையும், அருளும் நிறைந்த புண்ணியாத்துமா என்றும், அவர் சொன்ன வார்த்தைகள் எல்லாம் நிஜமானவை என்றும், தனக்கு அதன்பிறகு குடியர்களாலாகிலும் திருடர்களால் ஆகிலும் எவ்விதப் பொல்லாங்கும் நேராது என்றும் உறுதியாக நினைத்தவளாய், அவ்விடத்திலிருந்த விக்கிரகங்கள் படங்கள் முதலியவற்றின் முன்பாகப்போய் பயபக்தியோடு குனிந்து கைகுவித்து அஞ்சலி செய்து நின்றாள்.

உடனே பண்டாரம், "அம்மா! குழந்தாய்! உனக்கு வீட்டுக்குப் போக நேரமாகிறது அல்லவா, நீ இங்கேயே இரு; இவ்விடத்தில் எவ்விதப் பயமும் இல்லை. நான் போய் இதோ பக்கத்திலிருக்கும் பெரிய பண்ணைப் பிள்ளையை அழைத்துக் கொண்டு ஒரு நிமிஷத்தில் வந்து சேருகிறேன். வாசல் கதவை மூடி உள்பக்கத்தில் தாளிட்டுக்கொள்; இது முதல் கட்டு. இரண்டாவது கட்டு பின்பக்கத்தில் இருக்கிறது. அங்கே ஜனங்கள் இருக்கிறார்கள். நீ இங்கே தனியாக இருப்பதாக நினைத்து அச்சம் கொள்ளாதே!" என்று கூறிவிட்டு

வெளியில் நடக்க, அவரைத் தெய்வமாகவே மதித்து அவரது விஷயத்தில் எவ்விதச் சந்தேகமும் கொள்ளாமல் நம்பி இருந்த பெண்மணி கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டாள்.

அவ்வாறு தனியாக விடப்பட்ட அந்த யௌவன நங்கை தனக்கு எவ்வித இடரும் நேராது என்ற துணிபோடு இருந்தாள். ஆனாலும், அவளது பங்களாவிலிருந்த நீலலோசனி யம்மாளது நினைவு அடிக்கடி உண்டாகி வருத்திக் கொண்டிருந்தது. அவளது வேலைக்காரியான முத்தம்மாள் பங்களாவிலேயே சாப்பாடு முதலியவைகளை யெல்லாம் செய்துகொண்டு இரவுபகல் அங்கேயே இருந்து வந்தாளானாலும், நீலலோசனி அம்மாளைக் கவனிப்பதில் அவள் ஷண்முகவடிவைப் போல அவ்வளவு திறமை வாய்ந்தவள் அல்ல. ஆதலால், நெடுநேரமாகத் தான் இல்லாதிருப்பதால் முத்தம்மாள் அசட்டையாக இருக்கிறாளோ என்ற கவலை ஒரு பக்கத்தில் தோன்றி ஷண்முகவடிவை வருத்திக் கொண்டிருக்க அன்றையதினம் மாலையில் தனக்கு மலைபோல வந்து நேர்ந்த விபத்து ஒரு நொடியில் விலகிப் போகும்படி கடவுள் செய்ய, அந்தப் பண்டாரத்தை அனுப்பியதைப்பற்றி நினைத்து நினைத்து மகிழ்ந்து கடவுளது அருளைக் குறித்து பக்திப் பெருக்கு எய்தி மன இளக்கம் அடைந்தவளாய், அங்கே இருந்த படங்களையும் விக்கிரகங்களையும் ஒவ்வொன்றாகக் கூர்ந்துநோக்கி, தனது மனதிற்குள்ளாகவே ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்து கொண்டவளாய், பண்டாரத்தின் வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். பெரிய பண்ணைப் பிள்ளையின் வீடு பக்கத்தில் இருக்கிறது என்றும், தாம் போய் ஒரு நொடியில் அவரை அழைத்து வருவதாகவும் பண்டாரம் சொல்லி விட்டுப் போனார். ஆதலால், அவர்கள் அதிசீக்கிரத்தில் வந்து விடுவார்கள் என்று அந்தப் பூங்கொடி எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். நெடுங்காலமாக செலவிற்குப் பணம்

இல்லாமல் தான் தவித்துத் தனது நகைகளுள் சிலவற்றை அடகு வைத்துக் குடும்ப காலக்ஷேபத்தை நடத்தி அரும்பாடுபட்டுத் தனது அத்தையைச் சரியானபடி காப்பாற்ற மாட்டாமல் தவித்திருந்த சமயத்தில் புதையல் எடுத்த தனம் போலத் தனது அக்காளிடத்திலிருந்து வந்த நூறு ரூபாயும், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனது, அவளது மனதை அறுத்தது. ஆனாலும், பெரிய பண்ணைப்பிள்ளை, தான் அத்தைக்காகவும் தனக்காகவும் வாங்கிவந்த ஆடைகளையும் மற்ற சாமான்களையும் மிகுதிப்பணத்தையும் திருப்பி வாங்கிக் கொடுத்து விடுவார் என்ற ஒரு நிச்சயமும் துணிவும் அவளது மனதில் உண்டாகிக் கொண்டிருந்தன.

அவ்வாறு அவள் இன்பத்தினாலும் துன்பத்தினாலும் மாறிமாறி சஞ்சலமுற்றுப் பலவகைப்பட்ட உணர்ச்சிகளால் மனவெழுச்சி பெற்று, அந்தக் கூடத்தில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்று பார்த்துக் கொண்டே இருக்க, அரை நாழிகை நேரம் கழிந்தது. பண்டாரம் திரும்பி வரவில்லை; அதிசீக்கிரமாக வருவதாகச் சொல்லிவிட்டுப் போனவர் அவ்வளவு நேரமாயும் வரவில்லையே என்ற எண்ணமும் ஆவலும் தோன்ற ஆரம்பித்தன. பெரிய பண்ணைப் பிள்ளையின் ஜாகை நெடுந்தூரத்தில் இருக்குமோ, அல்லது, அவர் தமது ஜாகையில் இல்லாமல் எங்கேயாவது வெளியில் போயிருப்பாரோ, அல்லது, வேறே ஏதாவது அவசரமான காரியத்தைக் கவனித்துக்கொண்டிருப்பதால், கொஞ்சநேரம் பொறுத்து வருவாரோ என்று பலவித யூகங்கள் செய்தவளாய் ஓய்வற்று சஞ்சலமுற்று, அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். ஒரு நாழிகை ஆயிற்று; அப்போதும் பண்டாரம் திரும்பி வரவில்லை; ஷண்முகவடிவின் ஆவல் அதிகரித்தது. இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வேதனை மனதில் உண்டாகிக் கிள்ள ஆரம்பித்தது. அவள் வாசற் கதவிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு ஜன்னலண்டை போய் அதன் கதவை மெதுவாகத் திறந்து தன் பார்வையை

வாசற்பக்கம் செலுத்த, கன்னங்கரேலென இருளே மயமாக நிறைந்து மகா பயங்கரமாக இருந்தது. கண் கண்டதூரம் வரையில் மரங்களும் காடுகளும் ஒரே வனமாக நிறைந்திருந்ததைக் காண, அவளது நெஞ்சு திடுக்கிட்டது. உடம்பு கிடுகிடென்று ஆடியது. முடிமுதல் அடி வரையில் உரோமம் சிலிர்க்க, மயிர்க்காலிற்கு மயிர்க்கால் அக்கினிக் குழம்புபோல வியர்வை வெள்ளம் பெருகியது. பண்டாரம் திரும்பி வரவில்லையே என்றும், அவருக்கும் அந்த இருளில் ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்குமோ என்றும், தான் அப்படிப்பட்ட வனத்தைக் கடந்து அந்த மகா பயங்கரமான இரவில் எப்படித் தனது வீட்டிற்குப் போய்ச் சேருகிறது என்றும் கவலைக் கொண்டவளாய், அந்த நற்குண மங்கை தவித்து நின்று, தான் வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியில்போய்ப் பார்க்கலாமா என்று நினைத்தாள். கள்கடையண்டையில் தன்னை மறித்து வருத்திய குடியர்களோ, அல்லது வேறு திருடரோ வெளியிலிருந்து தனக்கு மறுபடியும் பொல்லாங்கு இழைத்தால் தான் என்ன செய்கிறது என்ற அச்சத்தினால், அவள் பின் வாங்கினாள். தனது உடம்பில் சொற்ப விலையுள்ள ஏதோ இரண்டொரு ஆபரணங்களே இருந்தது. ஆனாலும், விலை மதிப்பற்ற ஆபரணமான தனது கற்பிற்கு அபாயம் நேராமல் காப்பாற்றிக்கொள்வதே தனது முதற்கடமை என்ற நினைவைக் கொண்டவளாய், அவள் கதவைத் திறக்க வேண்டும் என்ற அவாவை அடக்கிக் கொண்டவளாய், பண்டாரம் திரும்பி வருகிற வரையில் தான் பொறுமையாக அவ்விடத்தில் காத்திருப்பதைத் தவிர, தான் செய்யக்கூடியது வேறு ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்தவளாய் உட்புறத்திலேயே இருந்தாள். பொழுது ஏற ஏற அவளுக்கு அவ்விடத்தில் இருக்கையே கொள்ளவில்லை. அவள் சிறிது நேரம் உட்காருவதும், சிறிது நேரம் நடப்பதுமாக இருக்க, அப்போது அவளது மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. பண்டாரம் வெளியிற் போகுமுன், சொன்ன ஒரு விஷயம்

வேண்டும் என்று அந்த இளந்தோகை எண்ணிக்கொண்டவளாய், அவ்விடத்தை விட்டு விக்கிரகங்கள் இருந்த இடத்திற்கு வந்து, அங்கே வைக்கப்பட்டிருந்த விளக்கை எடுத்துத் தனது இடக்கரத்தில் பிடித்துக்கொண்டு மறுபடியும் முற்றத்தில் இறங்கி இரண்டாவது கட்டின் கதவண்டை சென்று, அதன் தாழ்ப்பாளை மெதுவாகத் திறந்தாள். அந்தக் கதவு அப்புறத்திலும் தாளிடப் பெற்றிருக்குமோ என்ற சந்தேகம் அவளது மனதில் எழுந்தது. ஆனாலும், அது தவறான சந்தேகமாக முடிந்தது. ஏனெனில், கதவு உடனே திறந்துகொண்டது. அவள் நினைத்தபடி அந்தக் கதவின் அப்புறத்தில் இரண்டாவது கட்டின் நடை ஆரம்பமாயிற்று. ஷண்முகவடிவு கையில் பிடித்த விளக்கோடு அந்த நடையைக் கடந்து அப்பால் செல்ல, அவ்விடத்தில் இன்னொரு வாசற்படி இருந்தது. ஆனாலும், அதில் கதவு காணப்படவில்லை. ஆகையால், இன்னொரு கதவைத் திறக்கும்படியான பிரயாசையின்றி நமது மடவன்னம் அப்பால் நடந்தாள். முதற்கட்டில் இருந்ததுபோலவே இரண்டாவது கட்டிலும், தாழ்வாரம், கூடம், முற்றம் முதலியவை காணப்பட்டன. ஆனாலும், அவ்விடத்தில், மனிதராவது, மனிதர் வசிக்கும் குறிப்பை உணர்த்தக்கூடிய அடுப்பாவது சாமான்களாவது காணப்படவில்லை. அந்தக் கட்டு முழுதும் காலியாக இருந்தது. அவளது கையில் இருந்த விளக்கின் வெளிச்சத்தினால், அந்தக் கட்டின் அமைப்பு முழுதும் அவளுக்குத் தெரிந்துபோய் விட்டது. அந்த இரண்டாவது கட்டிலிருந்து கொல்லைப்பக்கம் போவதற்கு ஒரு வாசற்படி இருந்ததையும், அவள் கண்டுகொண்டாள். ஆனால், அந்த வாசலின் கதவும் மூடி உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. அவளது மனதில் உடனே பெருத்த திகிலும் கலவரமும் பொங்கி எழுந்தன. இரண்டாவது கட்டில் மனிதர் இருக்கிறார்கள் என்று பண்டாரம் சொன்னது பொய்ம்மொழி என்ற நிச்சயம் அவளது மனதில் உண்டாக உண்டாக, அதோடு அவர் குறிப்பிட்ட

காலத்தில் திரும்பி வராத விஷயமும் சேர்ந்து, அவளது மனதில் பலவகைப்பட்ட நினைவுகளையும் சந்தேகங்களையும் உண்டாக்கி அவளது மனதைக் கலக்கிப் புண்படுத்தின. முன் கட்டில் தனியாக இருப்பதைப்பற்றி தான் அச்சங் கொள்ளாமல் தைரியமாக இருக்கவேண்டுமென்று பண்டாரம் நினைத்து ஒருவேளை அவ்வாறு பொய் சொல்லி இருப்பாரோ என்ற யூகமும் உண்டாயிற்று. அதுதான் உண்மையாக இருக்க வேண்டுமென்றும், பண்டாரம் தனக்கு நன்மையை நாடியே அவ்வாறு பொய் சொல்லியிருக்கிறாரென்றும் தீர்மானித்துக் கொண்ட அந்தப் பெண்மணி கொல்லைப்பக்கம் வரையில் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்துவிட வேண்டுமென்ற விருப்பம் கொண்டவளாய்க் கையில் பிடித்த விளக்கோடு முற்றத்தின் வழியாக நடக்கலானாள். தான் அங்கே இருக்கும்போது, வெளியில் போன பண்டாரம் வாசலில் வந்து ஒருவேளை கதவைத் தட்டுவாரோ என்ற நினைவும் தோன்றியது. ஆகையால், அவள் அடிக்கடி பின்புறம் திரும்பிக் கதவு தட்டப்படுகிற ஓசை கேட்கிறதோ என்று உற்றுக் கவனித்தவளாய் முற்றத்தின் வழியாகக் கொல்லைக் கதவை நோக்கி நடக்க, அப்போது திடீரென்று வீசிய காற்றினால் அவளது கையிலிருந்த விளக்கு அணைந்துவிட்டது. அந்த இடம் முழுதும் இருள் கப்பிக்கொண்டது. மிகவும் இருண்டு பயங்கரமாக இருந்த அந்தக் கட்டிடத்திற்குள் தான் தனியாக நிற்க நேர்ந்ததைப்பற்றி நமது மெல்லியலாள் நடுநடுங்கித் தத்தளிக்கலானாள். தான் கொல்லைக் கதவைத் திறந்து பார்க்க இயலாது என்ற நிச்சயம் ஏற்பட்டது; தான் திரும்பி முன் கட்டிற்கே போய்விடவேண்டுமென்ற எண்ணம் தோன்றியதா னாலும், தான் கொல்லைக் கதவு வரையில் போய், அது எந்தப் பக்கத்தில் தாளிடப்பட்டிருக்கிறது என்பதையாகிலும் பார்த்தறிந்து கொண்டு போகவேண்டும் என்ற ஓர் அவா உண்டானது. ஆகையால், அவள் இருளில் தட்டுத்தடுமாறி மெதுவாக நடந்து கொல்லைக்கதவு இருந்த

இடத்திற்குப் போய்ச் சேர்ந்து அதன் தாழ்ப்பாளை தடவிப் பார்த்தாள். அந்தத் தாழ்ப்பாளும் உட்புறத்தில் தாளிடப் பட்டிருந்தது. அன்றி, அதன்மேல் ஒரு பூட்டும் பூட்டப்பட்டிருந்தது. அதைக் கண்டும், பண்டாரம் பொய்சொல்லி இருக்க மாட்டார் என்ற நினைவே அவளது மனதில் தோன்றியது. அந்த இரண்டாவது கட்டிற்குப் பின்னால் ஏதேனும் திண்ணை இருக்கலாம் என்றும், அங்கே யாராவது மனிதர் இருக்கலாம் என்றும் அவள் ஒருவிதமாக வியாக்கியானம் செய்துகொண்டவளாய், அங்கே இருந்த கதவின் இடுக்கால் வெளிப்பக்கத்தில் தனது பார்வையைச் செலுத்த, அவ்விடத்தில் விசாலமான திண்ணைகள் காணப்பட்டன. அந்தத் திண்ணையில் சிறிது தூரத்திற்கு அப்பால் ஒரு வெளிச்சம் இருந்ததாகையால் அதன் வெளிச்சத்தின் உதவியால் அங்கே திண்ணை இருக்கிறது என்பது அவளுக்குத் தெரிந்தது. விளக்கிருந்த இடத்தில் யாரோ மனிதர் பேசிக்கொண்டிருந்த தாகவும் தோன்றியது. ஆனால், அந்தக் கதவிலிருந்த இடுக்கின் வழியாக விளக்கையாவது மனிதரையாவது அவள் நேரில்பார்க்க இயலாமலிருந்தது. சிறிது நேரத்திற்குமுன் அவள் விளக்கு வெளிச்சத்தின் உதவியால், அந்த இரண்டாங்கட்டு முழுதும் தனது பார்வையைச் செலுத்தி ஆராய்ச்சி செய்தகாலத்தில் கொல்லைப்பக்கத்துக் கதவிற்கு இரண்டு பக்கங்களிலும் சுவரில் இரண்டு ஜன்னல்கள் இருந்ததையும், அவைகளின் கதவுகள் மூடப்பட்டிருந்ததையும் அவள் பார்த்ததாக அவளது மனதில் ஒரு நினைவு உண்டாயிற்று. ஆகவே, தான் அந்த ஜன்னலண்டைபோய் அதன் கதவைத் திறந்து பார்த்தால், வெளிப்புறத்தில் விளக்கு இருந்த இடத்தைப் பார்க்கலாம் என்றும், அங்கே இருக்கும் மனிதரோடு பேசலாம் என்றும் தீர்மானித்துக்கொண்ட ஷண்முகவடிவு இருளில் சுவரைப் பிடித்துத் தடவிக்கொண்டே தனக்கு இடது பக்கமாகச் சென்று, நாலைந்து கஜதூரத்திற்கு அப்பாலிருந்த ஜன்னலண்டை

போய்ச் சேர்ந்தாள். அதன் கதவுகள் முன் கூறப்பட்டபடி மூடித் தாளிடப்பெற்றிருந்தது. ஆனாலும், அவை எந்தப் பக்கத்தில் தாளிடப்பட்டிருந்தன என்பதை அவள் அந்த இருளில் அறிந்துகொள்ளக் கூடவில்லை. ஆகையால், அவள் தனது கையால் அந்தக் கதவு முழுதையும் தடவிப்பார்த்தே, அதன் தாழ்ப்பாள் இருந்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டி இருந்தது. ஆனால், அதன் இரண்டு கதவுகளும் ஒன்றாகப் பொருந்தி இருந்த இடத்தில் இடைவெளி பெரிதாக இருந்தது. ஆகையால், வெளிப்புறத்தில் இருந்த வெளிச்சம் அதன் வழியாகப் பளிச்சென்று பிரகாசித்தது. அதோடு, வெளிப்பக்கத்தில் இருந்த மனிதர் மனித இயற்கைப்படி சாதாரணமாகப் பேசாமல், திருடர்கள் பேசுவது போலத் தங்களது குரலை அடக்கிக் கொசகொசவென்று ரகசியமாகப் பேசுகிறார்கள் என்பதும் அவளுக்குத் தெரிந்தது. ஆகையால், தான் திடீரென்று தாழ்ப்பாளை நகர்த்திக் கதவைத் திறப்பதற்கு முன்பு இடைவெளியால் தனது பார்வையை வெளியில் செலுத்தி, அங்கே இருந்தவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பம் தோன்றியது. ஆகையால், அந்த மடவன்னம் கதவுகளின் இடைவெளியால் வெளிப்பக்கத்தை நோக்க, அவளது ஆச்சரியமும் திகைப்பும் அளவிலடங்காதவனாக இருந்தன. அவள் தனது கண்களையே நம்பாமல் பிரமித்துத் தான் கண்டது கனவோ நினைவோ என மயங்கிக் கலங்கிக் குழப்பமே வடிவாக ஸ்தம்பித்து நின்றாள். வெளிப்பக்கத்துத் திண்ணையில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நமது பண்டாரம் ஒரு கம்பத்தின் பக்கமாக உட்கார்ந்து அதில் சாய்ந்து திண்ணையின்மேல் தமது காலை நீட்டிவிட்டபடி உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிரில் சிறிது தூரத்தில் ஐந்து முரட்டு மனிதர்கள் அடக்கமாக வும் மரியாதையாகவும் உட்கார்ந்து கையில் மிட்டாய் தினுசுகளை வைத்துத் தின்றுகொண்டிருந்தனர். ஷண்முகவடிவு தனக்காகவும் தனது அத்தைக்காகவும் வாங்கி வைத்திருந்த

ஆடைகளும் மற்ற சாமான்களும் அவளிடத்திலிருந்து எந்த நிலைமையில் அபகரிக்கப்பட்டனவோ அதே நிலைமையில் திண்ணையின் மீது வைக்கப்பட்டிருந்தன. அவளிடத்திலிருந்து பிடுங்கப்பட்ட பணம் ஐந்து சமபாகங்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு எதிரில் வைக்கப்பட்டிருந்தது. கள்கடைக்குப் பக்கத்தில் தன்னை மறித்து வளைத்துக்கொண்டு தனது பொருட்களையெல்லாம் கொள்ளை அடித்துக்கொண்டு ஓடிய ஐந்து முரடர்களே அங்கே உட்கார்ந்திருந்தவர்களென்பதும் தான் தனது அத்தைக்காக வாங்கிக்கொண்டு வந்த மிட்டாய்ப் பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டே அவர்கள் தின்கிறார்கள் என்பதும் சந்தேகமற அந்த மடமயிலுக்குத் தெரிந்தன.

ஆனால், அப்போதும், அந்த நற்குணவதியின் மனது, நமது பண்டாரத்தைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொள்ள இடந்தரவில்லை. பண்டாரம் தன்னை மடத்தில் இருக்கச் செய்துவிட்டுப் பெரிய பண்ணைப் பிள்ளையிடத்தில் போனவர் கொல்லைப் பக்கத்தில் அந்த முரடர் திருட்டு சொத்தைப் பங்கு போட்டுக்கொண்டதைக் கண்டு அங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாரோ என்றும், பெரிய பண்ணைப் பிள்ளைக்கும் அவர்செய்தி சொல்லியனுப்பிவிட்டு அவரது வருகையை எதிர்பார்த்து அவ்வாறு உட்கார்ந்திருக்கிறாரோ என்றுமே அவளது தயாளமான மனம் முதலில் நினைத்ததன்றி, தனது பணமும் பொருட்களும் திரும்பிவந்து விடும் என்ற மனவெழுச்சியையும் கொண்டது. ஆனால், அவர் அந்த முரடர்களிடத்தில் சிநேகபாவமாக உட்கார்ந்திருந்ததும், அவர்கள் கூசாமல் அவருக்கு முன் மிட்டாயைச் சந்தோஷமாகத் தின்றுகொண்டிருந்ததும் இன்ன காரணத்தினால் என்பது அவளுக்குத் தெளிவுபடவில்லை. அந்தப் பண்டாரம் அப்படிப்பட்ட இழிவான காரியத்தில் சம்பந்தப்பட்டு இருப்பார் என்ற எண்ணமே அவளது மனதில் உண்டாகவில்லை. ஆதலால் மேற்படி சந்தேகங்கள் அவளது

மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன. ஆகவே, அவள் சொப்பன அவஸ்தையில் இருப்பவள் போலச் செயலற்று அயர்ந்து அப்படியே நின்று அங்கே நடந்த சம்பாஷணையைக் கவனிக்கலானாள். அவ்வாறு உட்புறத்தில் ஜன்னலின் பக்கமாக ஷண்முகவடிவு வந்து நின்று கவனிக்கிறாள் என்பதைப்பற்றி எள்ளளவும் சந்தேகியாமலிருந்த பண்டாரமும் மற்றவர்களும் தங்களது சம்பாஷணையை நடத்தலாயினர். அப்போது பண்டாரம் அவர்களைப் பார்த்து, "நான் இதற்குமுன் ஒருதரம் இவளுடைய அக்காளைப் பார்த்திருக்கிறேன். அப்போது அவள் வண்டியில் எங்கேயோ போய்க்கொண்டிருந்தாள். ஆகையால், அவளோடு பேசவாவது, அவள் யாரென்பதை அறிந்து கொள்ளவாவது கூடாமல் போய்விட்டது. அவளுடைய அற்புதமான அழகைக் கண்ட நிமிஷம் முதல் இதுவரையில் என்னுடைய மனம் கலங்கிப் போய் அப்படியே தாமரை இலைத் தண்ணீர்த் துளிபோலத் தவித்துக்கொண்டிருந்தது. அவளுடைய அழகு என் மனசை அடியோடு கெடுத்து என்னை வேஷதாரிப் பண்டார மாக்கிவிட்டது. அவள் எங்கே இருப்பவள் என்பதைப் பற்றி நானும் என்னாலான வரையில் விசாரித்துப் பார்த்துவிட்டேன். ஒரு விவரமும் தெரியாமல் இருந்தது. ஆகையால், ஊமையன் கண்ட கனவுபோல, நான் இந்த விஷயத்தை யாரிடத்திலும் வெளியிட மாட்டாமல் தவித்திருந்தேன். தற்செயலாக இன்றையதினம் மத்தியானம் இவளை நான் செட்டியாருடைய பாங்கியில் கண்டேன். இவளும் இவளுடைய அக்காளும் ஒரே மாதிரியான அழகும் வடிவமும் உடையவராக இருப்பதால், இவளை நான் முதலில், இவளுடைய அக்காள் என்றே நினைத்து, நெடுநாளாக என் மனசை வாட்டிக்கொண்டிருந்த பெண் தெய்வம் கடைசியில் தானாக வந்து காட்சி கொடுத்தது என்று நினைத்துப் பரம சந்தோஷம் அடைந்தேன். இவளுடைய அக்காள் தஞ்சாவூருக்குப் போயிருக்கிறாள் என்றும், இவள்

அவளுடைய தங்கை என்றும் சொன்னபிறகுதான், உண்மை தெரிந்தது. இவள் அக்காளாக இருந்தால் என்ன? தங்கையாக இருந்தால் என்ன? வித்தியாசம் ஒன்றுமில்லை. இருவருடைய வடிவமும் அழகும் ஒரே மாதிரியாக இருப்பதால், என் மனசிலிருந்து என்னைக்கொன்று கொண்டிருக்கும் தாகவிடாயைத் தீர்த்து வைக்க இவளும் போதுமானவள்தான். ஆனால், இவள் மகா நற்குணமுள்ள பரம சாதுவாக இருக்கிறாள். இவள் என்னைத் தெய்வமென்றே நினைத்துக் கடைசிவரையில் நம்பி இங்கே வந்திருக்கிறாள். நான் வேறே வித்தியாசமான வார்த்தையை எடுத்தால், இவள் சம்சயம் அடைந்து என்னோடுகூட இங்கே வராமல் போய்விடுவாளோ என்று நினைத்து, நான் இவளுடைய மனம் நம்பும்படி பக்குவமாகப்பேசி அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். இவள் கம்பங் கொல்லையில் பயிர்களுக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டு தவித்தபோது, நான் போய் இவளை அழைத்துக்கொண்டு வந்த சமயம், இவளை அப்படியே பிடித்து இழுத்துக் கட்டிக்கொள்ளவேண்டும் என்று என்னுடைய மனம் துடித்தது; உடம்பும் பதறியது. எனக்கு வேறே யாரும் துணையில்லாதிருந்தபடியால், அங்கே பலவந்தம் செய்தால், காரியம் பலியாமல் போய்விடுமோ என்று அஞ்சி இவளை மரியாதையாக அழைத்துக்கொண்டு வந்தேன். இப்போதும், நான் பெரிய பண்ணைப் பிள்ளையை அழைத்து வரப்போயிருப்பதாகத்தான் இவள் மனப் பூர்வமாக நினைத்துக் கொண்டிருப்பாள். நாம் இவ்வளவு தூரம் தந்திரம் செய்து அழைத்துக்கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், மேல் காரியத்தை எப்படி நடத்துகிறது என்பது தெரியவில்லை. என்னுடைய கருத்தை இவளிடத்தில் எப்படி வெளியிடுகிறது என்பதும் தெரியவில்லை. நான் துணிந்து வெளியிட்டாலும், இவள் அதற்கு இணங்கக் கூடியவளாகத் தோன்றவில்லை. நான் பலவந்தம் செய்தால், இவள் ஓங்கிக் கூச்சலிடுவாள்;

திமிறுவாள்; தத்தளிப்பாள்; அடிப்பாள்; உதைப்பாள்; தன்னால் இயன்ற உபாயம் எல்லாம் செய்வாள். ஆகையால், இவளை எப்படி வசப்படுத்துகிறது என்பது தெரியவில்லை. இதில் எனக்கு இன்னொரு விஷயத்தைப் பற்றியும் பயமாக இருக்கிறது. வந்தது வரட்டும் என்று நான் துணிந்து இவளைப் பலவந்தப்படுத்தி இந்த ராத்திரிக்குள் என்னுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொண்டு இவளை இவளுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடுவதாக வைத்துக் கொள்வோம். இங்கே பக்கத்தில் பெரிய பண்ணைப் பிள்ளையின் ஜாகை இருக்கிறது என்பதையும், இந்த மடம் அவருடையது என்பதையும், நான் இவளிடம் சொல்லி விட்டேன். நாம் செய்த வஞ்சகத்தை இவள் பெரிய பண்ணைப் பிள்ளையிடம் சொன்னால், அதன்பிறகு நான் சாமியாரென்று பெயர் வைத்துக் கொண்டு இந்த மடத்தில் இருக்க முடியாது. நான் உடனே ஊரைவிட்டு ஓடிப்போய்விட வேண்டியது தான் முடிபாகும்'' என்றார்.

அந்த வார்த்தைகளை எல்லாம் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த பெண்மணிக்கு உடனே அரை உயிர் போய்விட்டது என்றே சொல்லவேண்டும். அப்போதும் அவள் தனது செவிகளையே நம்பாமல் திக்பிரமை கொண்டு தான் இருந்தது பூலோகத்திலோ, ஆகாயத்திலோ என்பது தெரியாது. கிருகிரென்று மயங்கிச் சுழன்று அறிவு பேதுற்ற நிலைமையில் சித்திரப் பதுமைபோலப் பேச்சு மூச்சற்று அப்படியே நின்று கொண்டிருந்தாள். அவளது சரீரம் சருகுபோலப் பறக்கிறது. மனம் கூண்டில் அடைப்பட்ட கிளிபோலத் தவிக்கிறது. மலைபோலப் பொங்கியெழுந்த கிலியினால், உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வியர்வை பொங்கி வழிந்தோடுகிறது. மகா அபாயகரமான அந்த இடத்திலிருந்து தப்பிப்போய் விட வேண்டும் என்ற பேராவலினால் அவளது மெல்லிய சரீரம் துடி துடிக்கிறது. இருந்தாலும், அவர்கள் இன்னமும் என்ன பேசுகிறார்

கள் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தவளாய் அவள் அவர்கள் பேசியதை உற்றுக் கவனித்தாள்.

கபட சந்நியாசி கூறிய சொற்களைக் கேட்டிருந்த முரட்டு மனிதருள் ஒருவன் வணக்கமாக அவரைப் பார்த்து, ''நீங்கள் கள்கடையில் உட்கார்ந்துகொண்டு எங்களை அனுப்பி, இவளை மிரட்டும்படி செய்தீர்கள் என்பதைப்பற்றி இவள் கொஞ்சமும் சந்தேகமே கொள்ளவில்லை. மறுபடியும் நாங்கள் திரும்பி வந்து இவளுக்குத் தொந்தரவு செய்தாலும் செய்யலாம் என்றும் நீங்கள் இவளிடத்தில் சொல்லி பயமுறுத்தி வைத்திருக்கிறீர்கள். நீங்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள் என்பது கடைசி வரையில் இவளுக்குத் தெரியாதபடி நாம் தந்திரமாக இந்தக் காரியத்தை முடித்துக்கொள்வோம். நீங்கள் பெரிய பண்ணைப் பிள்ளையை அழைத்துக்கொண்டு சீக்கிரமாகத் திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டு வந்தீர்கள். நீங்கள் வந்து இப்போது சுமார் ஒரு நாழிகை நேரம் ஆகியிருக்கலாம். நீங்கள் இப்போது ஒரு காரியம் செய்யுங்கள். உடனே நீங்கள் முன் கட்டுக்குப் போய் கதவைத் தட்டித் திறந்துவிடச் செய்து, கதவை மறுபடியும் உட்புறத்தில் தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளுங்கள். பெரிய பண்ணைப் பிள்ளையின் ஜாகைக்கு நீங்கள் போனதாகவும், நாங்கள் வழி மறித்து உங்களைப் பிடித்து அடித்ததன்றி, பெரிய பண்ணைப் பிள்ளையிடத்தில் போய் இதைச் சொன்னால் கொன்று போட்டுவிடுவோம் என்று நாங்கள் பயமுறுத்திய தாகவும் சொல்லி விசனமாகப் பேசுங்கள். இவள் கலங்கிப் போய்த் தான் தன்னுடைய ஜாகைக்கு எப்படிப் போகிறது என்பதைப் பற்றி ஏதாவது கேட்பாள். அப்போது நீங்கள் கொஞ்சநேரம் பொறுத்து, மறுபடியும் ரகசியமாக இருட்டில் போய்ப் பெரிய பண்ணைப் பிள்ளையையும் ஆள்களையும் அழைத்து வந்து, இவளை உடனே இவளுடைய ஜாகையில் கொண்டுபோய் விட வழி செய்வதாகச் சொல்லுங்கள். அதற்குள் நாங்கள் ஓட்டின்மேல் ஏறிவந்து உட்கார்ந்து

கொண்டிருக்கிறோம். மறுபடியும் ரகசியமாக நீங்கள் பெரிய பண்ணைப் பிள்ளையிடம் போவதாகச் சொல்வதைக் கேட்டவுடனே நாங்கள் முற்றத்தில் குதிக்கிறோம். 'நாங்கள் அவ்வளவுதூரம் சொல்லியனுப்பியும் நீ ரகசியமாகப்பெரிய பண்ணைப் பிள்ளையிடம் போய்ச் சொல்லவா போகிறாய்?' என்று நாங்கள் உங்களைப் பார்த்து அதட்டிக் கேட்டுக்கொண்டு, மிகுந்த கோபத்தோடும் மூர்க்கத்தோடும் வந்து உங்கள் மேல் பாய்கிறோம். ஒருவன் உங்களைப் பிடித்து அடிப்பதாகப் பாசாங்கு செய்யட்டும். இன்னொருவன் உடனே விளக்கை ஊதி அணைத்து விடட்டும். இருள் எங்கும் சூழ்ந்து கொள்ளும். உங்களைப் பிடித்திருக்கும் ஆள் உடனே விலகிக் கொள்ளட்டும். நீங்கள் பெண்ணைப் பிடித்து அறைக்குள் இழுத்துக்கொண்டு போய்விடுங்கள். அவள் திமிறாமல் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். உங்களுடைய மனம் திருப்தி அடைந்தபிறகு நீங்கள் வெளியில் வந்து விடுங்கள். உடனே நாங்கள் உங்களைப் பிடித்துக் கம்பத்தோடு கட்டி வைத்துவிட்டு, கையில் அகப்பட்ட ஏதாவது சொத்துகளை எடுத்துக்கொண்டு ஓடிப் போய் விடுகிறோம். அதன்பிறகு நீங்கள் அந்தப்பெண்ணை அழைத்து மறுபடி விளக்கேற்றச் செய்து உங்களுடைய கட்டையும் அவிழ்த்துவிடச் செய்யுங்கள். திருடர்கள் உங்களை தாறுமாறாக அடித்துவிட்டதாகவும் சப்பை நகர்ந்து போய் விட்டதாகவும் சொல்லிப் பாசாங்கு செய்யுங்கள். பொழுது விடிந்தவுடனே நான் என்னுடைய மகனைத் தற்செயலாக வருகிறவன் போல இங்கே வரும்படி அனுப்பி வைக்கிறேன். அதன்மூலமாக நீங்கள் பெரிய பண்ணைப் பிள்ளைக்குச் செய்தி சொல்லி அனுப்புங்கள். அவர் வருவார்; வந்தவுடனே, எல்லா விஷயங்களையும் சொல்லிவிடுங்கள்; ஆனால், ஆள்கள் இன்னாரென்று சரியானபடி அடையாளம் தெரியவில்லை என்றும், ஆளைப் பார்த்தால் அடையாளம் கண்டுபிடிக்க முடியும் என்றும் பக்குவமாகச் சொல்லி, இவளை இவளுடைய ஜாகையில் கொண்டுபோய் விட்டுவிடும்படி

செய்யுங்கள். நாம் இப்படிச் செய்தால் இந்தப் பெண் கடைசிவரையில் உங்கள் மேல் சந்தேகங்கொள்ளவே இடமில்லை. இதுதான் சரியான தந்திரமாகத் தோன்றுகிறது. பெண்ணோடு சேர்ந்து நீங்களும் கண்ணீர்விட்டு அழுதால், நீங்கள் சொல்வது எல்லாம் உண்மையென்று எல்லோரும் நம்புவார்கள்'' என்று கூறினான்.

அதைக்கேட்ட பண்டாரம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவராய், ''சரி; நீ சொல்வதுதான் சரியான யோசனை; அப்படியே செய்து விடுவோம். ஆனால், இருட்டில், நான் பலவந்தம் செய்யும்போது அவள் பலமாகக் கூச்சலிட்டுக் கதறுவாள். அதைப்பற்றி சந்தேகமே இல்லை. ஆனால், வீடுகள் அரைக்கால் மைல் தூரத்துக்கு அப்பால் இருப்பதால், இவள் எவ்வளவு அதிகமாகக் கூச்சலிட்டாலும் அங்கே கேட்காது. ஆனால், இவள் கூச்சலிடுகிற சமயத்தில், ரஸ்தாவில் தற்செயலாக யாராவது மனிதர் போனால், அவருடைய காதில் அந்த ஓசை விழும். அந்த மனிதர் சந்தேகப்பட்டு வந்து பார்த்தால், அதனால் துன்பம் உண்டாகுமோ என்னவோ?'' என்றார்.

அதைக் கேட்டு முன் பேசிய முரட்டு மனிதன், ''இவள் கத்தினால் கத்தட்டும். அதைப்பற்றிக் கொஞ்சமும் பயமில்லை. இந்த அகாலத்தில் இந்த ரஸ்தாவில் எவரும் வருகிற வழக்கமே இல்லை. தப்பித் தவறி வந்தாலும், யாராவது ஒருவர் இருவர் வரப்போகிறார்கள். நான் ரஸ்தாவில் என்னுடைய ஆளில் ஒருத்தனை நிறுத்தி வைக்கிறேன். யாராவது மனிதர் வரும்போது இவளுடைய கூச்சல் ரஸ்தாவில் எட்டினால் வழிப்போக்கர் அதைக்கேட்டு அதென்ன கூச்சல் என்று ரஸ்தாவில் நிற்கும் நம்முடைய மனிதரிடத்தில்தான் கேட்பார்கள். ''பண்டாரத்தைய்யா ஒரு பெண்பிள்ளைக்குப் பிசாசு ஓட்டுகிறார். ஒருவரும் கிட்டே வரக்கூடாது'' என்று என்னுடைய ஆள் பக்குவமாகச் சொல்லி அவர்களை அனுப்பி விடும்படி செய்கிறேன். அந்த வழிப்போக்கர் அதை நம்பாது மடத்தண்டை நெருங்கிவந்தால், நாங்கள் எல்லோரும் சேர்ந்து,

அவர்களை அடித்துத் தவிடுபொடியாக்கி ஓட்டிவிடுகிறோம். அதைப்பற்றி நீங்கள் கவலையே கொள்ள வேண்டாம். நாம் சகிக்கமுடியாமல் அவ்வளவு அதிகமாக இந்தப் பெண் கத்தினால், இவளுடைய வாயை நான் இறுகப் பிடித்து அமுத்திக் கொள்ளுகிறேன். கூடத்து அறைக்குள் இவள் இருந்து கத்தினால், அந்த ஓசை அநேகமாக வெளியில் கேட்காது. இவள் கத்துகிறாளே என்றும், அதைக் கேட்டு யாராவது வந்துவிடப் போகிறார்களே என்றும், நீங்கள் கொஞ்சமும் கவலையே கொள்ளவேண்டாம். எங்களை மீறி பல மனிதர்களோ, அல்லது பெரிய பண்ணைப் பிள்ளையோ இங்கே வந்துவிட்டாலும், கதவு உட்புறத்தில் தாளிடப்பட்டிப்பதால், அவர்கள் உடனே உள்ளே நுழைந்துவிட முடியாது. நாங்கள் எங்களால் ஆனவரையில் அவர்களை அடித்துப் போட்டுவிட்டுக் கடைசியில் ஓடிப்போய்விடுகிறோம். திருடர்கள் வந்து உங்களை அடித்துப்போட்டுவிட்டு இந்தப் பெண்ணையும் பலவந்தப்படுத்தி உபத்திரவித்ததாகச் சொல்லி ஓலமிட்டு அழுங்கள். உங்களைப்பற்றி யாரும் எவ்வித சந்தேகமும் கொள்ள மாட்டார்கள்'' என்றான்.

அவனது புத்திசாலித் தனத்தையும் சமயோசித தந்திரத்தையும் கண்ட பண்டாரம் மிகுந்த துணிபும் குதூகலமும் கொண்டவராய், ''சரி; அப்படியானால் எனக்குப் பயம் இல்லை. உங்களுடைய பக்கபலம் இருக்கையில், எனக்கு இந்தக் காரியம் எளிதாகத்தான் தோன்றுகிறது. இன்று ராத்திரி இவள் நம்முடைய வலையிலிருந்து தப்பிப் போகமுடியாது. எப்படியும் நான் என்னுடைய மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்வேன் என்பது நிச்சயம். நீங்கள் எல்லாரும் சேர்ந்து கடைசி வரையில் எனக்கு உதவி செய்து இந்தக்காரியம் திருப்திகரமாக முடியும்படி மாத்திரம் செய்து வையுங்கள். நாளைய தினம் நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் தலைக்கு 25 ரூபாய் தருகிறேன். இப்போது இவளிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்டு வந்த பணத்தையெல்லாம் ஐந்து பங்காக

நீங்கள் எடுத்துக் கொண்டதுபோக, மிகுதியிருக்கும் சேலைகள் சாமான்கள் முதலியவைகளை எங்கேயாவது நாளையதினம் விற்று, அந்தப் பணத்தையும், ஐந்து பங்காகப்போட்டு எடுத்துக் கொள்ளுங்கள். அவ்வளவுதான் சங்கதி. நான் வந்து அதிக நேரமாகிறது. பெண் சந்தேகப்படுவதற்கு முன்பு நான் போய்விடவேண்டும். நான் போய் உள் பக்கத்தில் தாளிட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் இப்படியே ஓட்டின்மேல் ஏறிவந்து முற்றத்தின்மேல் ஆயத்தமாக உட்கார்ந்து கொண்டிருங்கள். ரஸ்தாவில் நிற்கப் போகிற மனிதன் முன்பக்கத்துக் கதவை வாசலில் தாளிட்டு வைத்துவிடட்டும். ஏனென்றால், நீங்கள் வந்து விளக்கை அணைத்தபிறகு, நானும் அவளும் தகராறு செய்கையில், அவள் தப்பித்துக்கொண்டு ஒருவேளை வாசற் கதவைத் திறந்து வெளியில் போனாலும் போய்விடுவாள். எழுந்திருங்கள் போகலாம்'' என்று கூறிய வண்ணம் திண்ணையை விட்டுக் கீழே இறங்கினார்.

உடனே அந்த முரட்டு மனிதன், ''சரி; நீங்கள் போய்க் கதவைத் தட்டுங்கள். அவள் வந்து கதவைத் திறப்பதற்குள், நாங்கள் இப்படியே ஓட்டின்மேல் ஏறி முன்கட்டு முற்றத்தில் வந்து ஆஜராக இருக்கிறோம். பயப்படாமல் போய்ப் பேசுங்கள். நாங்கள் வழிமறித்து அடித்து விட்டதாகப் பாசாங்கு பண்ணுங்கள்'' என்று கூறிவிட்டு, ''அடே! ஏறுங்கடா ஓட்டுலே'' என்றான். உடனே பண்டாரம் அவ்விடத்தை விட்டு முன் பக்கத்து வாசலிற்கு வந்து சேர்ந்தார். முரடர்களுள் ஒருவன் நீங்கலாக மற்றவர்கள் சரசரவென்று ஓட்டின்மேல் ஏறி ஓசை செய்யாமல் முன் கட்டை நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் சொன்ன சகலமான வார்த்தைகளையும் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த மடமானான நமது ஷண்முகவடிவின் மன நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்துக் கொள்வது எளிதேயன்றி விவரித்துச் சொல்வது மகா அசாத்தியமான காரியமாம். அதைப் பின்னால் விவரிப்போம்.

## 12 - வது அதிகாரம்

## *சீனத்துக்கிளி*

தஞ்சையில் மருங்காபுரி ஜெமீந்தார் புதன்கிழமை தினம் முழுதும் கட்டாரித்தேவனிடத்திலிருந்து தமது தினசரி டைரி வரும் வருமென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார் அல்லவா! அன்றைய தினம் மாலை ஐந்துமணி சுமாருக்கு ஜெகன்மோகன விலாசத்தில் பூர்ணசந்திரோதயம் என்னும் பெண்ணரசி விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களால் தன்னை வெகு ஸொகுசாக அலங்கரித்துக் கொண்டவளாய் மேன் மாடத்தில் பவழக் கொடிப் பந்தலின் கீழ் நின்று, கூண்டுகளிலிருந்த பஞ்ச வருணக்கிளி பாரசீகத்து வெள்ளைக்கிளி முதலிய தனது ஆப்த நண்பர்களை ஒவ்வொன்றாக வெளியில் எடுத்து மிகுந்த வாஞ்சையோடு அவைகளைத் தடவிக்கொடுத்து முத்தமிட்டு அவைகளோடு கொஞ்சிக் குலாவிய வண்ணம் நிற்க, அப்போது அவளது பணிமகள் அவளண்டையில் வந்துநின்று, "ஸாரட்டு வண்டி தயாராக நிற்கிறது; புறப்படலாம்" என்று கூறினாள். அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம், மிகுந்த மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்தவளாய், "ஓ! வண்டி தயாராகி விட்டதா? அப்படியானால் நான் இதோ வந்துவிட்டேன்" என்று கூறியவளாய்த் தனது கையிலிருந்த பஞ்சவருணக்கிளியை நோக்கி, "சரி; நீ இனிமேல் உன்னுடைய பங்களாவுக்குள் போக வேண்டியதுதான். ராத்திரி பகல் எப்போதும் நான் உன்னை எடுத்து என்னுடைய கையின்மேல் வைத்து உன்னோடு கொஞ்சிக்கொண்டிருந்தாலும் உனக்கு சந்தோஷமாகத்தான் இருக்கும். உனக்காக நான் எங்கேயும் வெளியில் போகாமல் இருக்கமுடியுமா? உள்ளேபோய் உட்கார்ந்து கொள். நான் வம்புலாம்சோலை வரையில் போய் விட்டு இதோ அரை நாழிகையில் வந்து விடுகிறேன்" என்று கரைகடந்த வாஞ்சையோடு கூறியவண்ணம் அந்தக் கிளியைக் கூண்டிற்குள் விடுத்து, கதவை மூடி வெளியில் தாளிட்டுக்கொண்டு,

சக்கரவர்த்தினிபோல நிமிர்ந்து அன்னநடை நடந்து மேன்மாடத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தாள். பூத்தொட்டிகளும், பவழக்கொடி சம்பங்கிக்கொடி முதலியவற்றின் பந்தல்களும் கமான்களும் விநோதமான பற்பல பதுமைகளும் படங்களும் மற்ற அலங்காரப் பொருட்களும் நிரம்பி அற்புத வனப்பு வாய்ந்த அந்த மேன்மாடத்திலிருந்து கீழே இருந்த ரமணீயமான பூங்காவனத்தில் அந்த மடமயிலாள் இறங்கி வந்த காட்சி, இந்திராணி புஷ்பக விமானத்தில் அமர்ந்து கீழே இறங்கிவரும் கண்கொள்ளா வசீகரக் காட்சி போல இருந்தது. எப்போதும் அவளோடுகூட இருந்து அவள் காலால் இடும் பணியைத் தலையால் நிறைவேற்றி வைப்பதற்கு ஆயத்தமாக இரு பக்கங்களிலும் இரண்டு யௌவனப்பணிப்பெண்கள்கந்தருவப் பெண்களின் வசீகரமான அழகோடு மரியாதையாகவும், அடக்க ஒடுக்கமாகவும் வந்து கொண்டிருந்தனர். அவ்வாறு மகா கம்பீரமாக வெளிப்பட்ட பூர்ணசந்திரோதயம் பூங்காவின் வெளியில் நிறுத்தப்பட்டிருந்த ஸாரட்டு வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொள்ள, அவளது பணிப்பெண்களும் ஏறி அவளுக்குப்பின்பக்கமாக உட்கார்ந்தனர். வண்டிக்காரன் உடனே குதிரையை ஊக்க, அது புறப்பட்டுத் தெற்கு ராஜவீதியின் வழியாகப் போய் அதன் கிழக்குக் கோடியை அடைந்து, அவ்விடத்திலிருந்து வடக்கு முகமாகக் கிளம்பி கிழக்கு ராஜவீதியின் வழியாகச் செல்லலாயிற்று.

பூர்ணசந்திரோதயம் என்ற வடிவழகி, ஒவ்வொரு நாளும் மாலை ஐந்துமணிக்கு ஸாரட்டில் அமர்ந்து, தஞ்சை நகருக்கு அரை மைல் வடக்கில் உள்ள வம்புலாம் சோலைக்குப் போவது வழக்கம். அந்த இடம் இப்போது காடுபோல விகாரமான தோற்றத்தோடு இருந்தாலும், நமது கதை நிகழ்ந்த காலத்தில், அங்கே செல்லும் வடவாற்றங் கரையின் இருபுறங்களிலும் சுமார் ஒரு மைல் சதுரத்திற்கு மகா உன்னதமான ஓர் உத்தியான வனம் இருந்தது. அந்த

அதிரமணீய அற்புதப் பூங்காவின் இடையில் சென்ற வடவாற்றிற்கு இரண்டு பக்கங்களிலும், நெடுந்தூரம் வரையில் சலவைக் கற்களால் படித்துறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த ஆற்றில் எக்காலத்திலும் வற்றாமல் பளிங்குபோலத் தெளிவாக இருந்த தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது அன்றி, எங்கும் தாமரை, அல்லி, நீலோற்பலம், செங்கழுநீர் முதலியவற்றின் இலைகளும் மலர்களும் நிறைந்து, அந்த இடத்தில் மிகுந்த குளிர்ச்சியையும் அழகையும் செய்து கொண்டிருந்தன. ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் தென்னை, கமுகு, மா, பலா, பன்னீர், செண்பகம், பாரிஜாதம் முதலிய இனிய தருக்கள் நிறைந்து, புஷ்பங்களையும் கனிகளையும் தேனையும் சொரிந்து, மகரந்தத்தையும் நறுமணத்தையும் அள்ளி இறைத்து, அந்த இடத்தை அதிமனோக்கியமாகச் செய்து கொண்டிருந்தன. வண்டுகளின் ரீங்காரமும், குயில், மணிப்புறா முதலியவற்றின் குதூகலமான கும்காரமும் ஒன்றுகூடி அந்த இடம் பூலோகமோ சுவர்க்கலோகமோ என்ற ஐயத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன. அத்தகைய இன்பகரமான உத்யான வனத்திற்குள் அவ்வூர் ஜனங்கள் காலையிலும் மாலையிலும் சென்று உலாவி, விளையாடி, சந்தோஷமாக இருந்து, பொழுதைப் போக்கிவிட்டுத் திரும்புவது வழக்கம்.

நமது பூர்ணசந்திரோதயமும் ஒவ்வொரு நாளும் மாலை சுமார் ஐந்துமணிக்குத் தனது ஸாரட்டு வண்டியில் ஏறிக்கொண்டு வம்புலாம் சோலைக்குப்போய், வடவாற்றங் கரையின் படித்துறைமீது நடந்து, அவ்விடத்தின் அழகைக் கண்டு ஆனந்தித்து, அங்கே உண்டாகும் வாசனையான குளிர்ந்த காற்றினால் பூரித்துப் பரவசமடைந்து, அவ்விடத்தில் குதூகலமாகக் குதித்து நீந்தி ஓடி விளையாடி நீராடும் சிறுவர் சிறுமியர்களை நோக்கியவண்ணம் மெய்ம்மறந்திருந்து சாயுங்காலம் ஆறுமணிக்குத் திரும்பித் தனது மாளிகைக்கு வருவது வழக்கம். அவ்வாறு அவள் ஒவ்வொரு நாளும் மாலையில் வம்புலாம் சோலைக்குப் போகும்போது, கிழக்கு

ராஜவீதியின் வழியாகப்போய்த் திரும்பிவரும்போது, வடக்கு ராஜவீதி மேற்கு ராஜவீதி முதலியவற்றின் வழியாகத் தனது மாளிகைக்குத் திரும்பி வருவது வழக்கம். ஆதலால், அவள் ஒவ்வொரு நாளும் அந்த ஊரின் நான்கு ராஜவீதிகளையும் ஒரு தரம் சுற்றி பவனி வருவாள். அவள் ஒரு மகா ராஜனது புதல்வி போலவும், தெய்வ லோகத்து மடந்தை போலவும் எவரிடத்திலும் இல்லாத வனப்பும் ஜ்வலிப்பும் பெற்றிருந்தாள். ஆதலால், ஒவ்வொரு நாளும், அவள் வரும் சமயத்திற்கு முன்னாகவே ஜனங்கள் வெளியில் வந்து அவளை நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு நின்று அவளைக்கண்டு ஒருவர்போல எல்லோரும் தங்களது வாய்கொண்ட மட்டும் அவளைப் புகழ்ந்தவராகவே வீட்டிற்குள் நடப்பார்கள்.

அத்தகைய நிகரற்ற மேம்பாடும் சிறப்பும் வாய்ந்தவளாக பூர்ணசந்திரோதயம் இந்த அதிகாரத்தின் முதலில் சொல்லப்பட்டபடி புதன்கிழமை மாலை ஐந்து மணிக்குத் தனது ஸாரட்டில் அமர்ந்து வழக்கம்போல வம்புலாம் சோலையை அடைந்து ஸாரட்டை விட்டுக்கீழே இறங்கித் தனது பணிமக்களை வண்டியின் பக்கத்தில் நிற்க வைத்துவிட்டுத் தான் மாத்திரம் படித்துறைமீது நடந்து, அந்த ஆற்றின் தண்ணீர்ப் பரப்பையும் இருபக்கங்களிலும் இருந்த இயற்கை அமைப்பையும் நோக்கி ஆனந்தபரவசம் அடைந்தவளாய் நடந்து மேற்கு முகமாக நெடுந்தூரம் சென்றுகொண்டிருந்தாள். எங்கு பார்த்தாலும் குதூகலமாக விளையாடும் மாதர்களும், களிவெறி கொண்டு பாடி ஆடும் பறவை முதலிய ஜீவஜெந்துக்களும், அழகிய புஷ்பங்களையும் கனிகளையும் தேனையும் நறுமணத்தையும் கொள்ளை கொள்ளையாக வெளிப்படுத்தித் தங்களுக்கு வேறு எவரும் நிகரில்லை என்ற பெரும் செருக்குற்று நிமிர்ந்து நின்ற மரஞ்செடி கொடிகளுமே மயமாக இருந்து, அவளது மனதையும் கண்களையும் குளிரச் செய்தமையால், அந்த இளந்தோகை, அத்தகைய சுகக்

களஞ்சியத்தில் ஆழ்ந்து தனது மனத்தை அவற்றில் லயிக்க விடுத்தவளாகச் சென்று கொண்டிருக்க, வேறே மனிதர் இல்லாத ஓரிடத்தில் தனியாக நின்று கொண்டிருந்த ஒரு மனிதன் தனது கையில் பிடித்து வைத்துக் கொண்டிருந்த அபூர்வமான தோற்றத்தையுடைய ஒரு கிளியை அவளுக்கு எதிரில் காட்டி, ''அம்மா! இதோ பார்த்தீர்களா இந்தக் கிளியை? இதற்குமுன் நீங்கள் எத்தனையோ வகையான கிளிகளைப் பார்த்திருக்கலாமே! இதைப் போலப் புதுமாதிரியாக இருக்கும் கிளியைப் பார்த்ததுண்டா?'' என்று கூற, எதிர்பாராத அந்தச் சம்பவத்தைக் கண்ட பூர்ண சந்திரோதயம் திடுக்கிட்டு நின்று, அந்தக் கிளியைப்பார்க்க, அதன் அபூர்வமான அமைப்பு ஒரு நொடியில் அவளது கவனம் முழுதையும் சடக்கென்று கவர்ந்துகொண்டது. அந்தக் கிளி பருமன் உருவம் முதலியவற்றில் குயில்போல இருந்தது. ஆனாலும், அதன் நிறமும் இறகுகளின் அழகும் மகா வசீகரமாகவும் புதுமையிலும் புதுமையாகவும் இருந்தன. அந்தக் கிளியின் முகம் முதல் கழுத்து வரையில் ஊதாநிறமாகவும், கால்கள் இரண்டும் மஞ்சள் நிறமாகவும், மற்ற பாகமெல்லாம் பச்சை நிறமாகவும் இருந்தன. அதில், ஒரு விசேஷம் என்னவென்றால், அதன் உடம்பு முழுதும் அதிமிருதுவான மயிர் அடர்ந்திருந்தது. தத்ரூபம் வெல்வெட்டுப் பட்டுப்போல இருந்ததன்றி சீட்டித் துணிகளில் இருப்பது போல, அற்புதமான சில புள்ளிகள் அதன் முகத்திலும் உடம்பிலும் அழகாக விழுந்திருந்தன. அந்தக் கிளியின் தோற்றம், மூன்று நிறமான விலையுயர்ந்த வெல்வெட்டு ஆடைகளை அணிந்திருந்த, வசீகரமும் அழகும் நிறைந்திருந்த ஒரு குழந்தையின் தோற்றம்போல இருந்தது. பட்சிகளின் இடத்தில் அருவருப்புடைய மனிதர்கள்கூட அதைக் கண்டு வியப்பும் திகைப்பு மடைந்து பிரமித்து சிறிது நேரம் ஆச்சரியம் அடைந்து நிற்கச் செய்யத்தக்க புதிய அமைப்பும் வசீகரத் தோற்றமும் பெற்றதாக அந்தக் கிளி காணப்பட்டது.

ஆகவே, இயற்கையிலேயே கிளிகளின் இடத்தில் அதிக வாத்சல்யம் உடையவளான பூர்ணசந்திரோதயம் அந்தக் கிளியைப் பார்த்தவுடனே அளவில் அடங்கா வியப்பும் ஆநந்தமும் அடைந்தவளாய், அதன்மேல் வைத்த பார்வையை எடுக்காமல் சிறிதுநேரம் பிரமித்து நின்றுவிட்டாள். அந்தக் கிளியை வைத்திருந்த மனிதன் யார் என்பதையாவது, எப்படிப்பட்ட தோற்ற முடையவ னென்பதையாவது அவளது மனம் அப்போது கவனிக்க வில்லை. அந்தக் கிளியைப் பார்க்கப் பார்க்க அந்தப் பூங்கோதையின் மனம் வாத்சல்யத்தினால் உருகியது. அதைத் தனது கையில் வாங்கி வைத்துக்கொண்டு முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவ வேண்டும் என்ற ஓர் ஆவலும், அதன் கிரயம் எவ்வளவு பெரிய தொகையாக இருந்தாலும் கொடுத்து, அந்தக் கிளியைத் தான் வாங்கிவிட வேண்டுமென்ற அடக்கமுடியாத ஓர் அவாவும் அவளது மனதில் எழுந்து உலப்பத் தொடங்கின. அவள் உடனே அந்தக் கிளியை மிகவும் மதிப்பாகப் பார்த்து, ''ஆகாகா! என்ன அழகு! என்ன அழகு! இந்தக் கிளி எவரும் பார்க்காத புதுமாதிரிக் கிளியாக இருக்கிறதே! இது எந்த தேசத்துக் கிளியப்பா! இது உனக்கு எங்கே கிடைத்தது? இது விலைக்கு விற்கிறதா? ஐயோ! முகமும் உடம்பும் எவ்வளவு சொகுஸாக இருக்கின்றன!'' என்று தன்னை மறந்து அதிக வியப்போடு மொழிந்தாள். அதைக்கேட்ட அந்த மனிதன் மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து, ''அழகுக்கு அழகைக் கண்டுபிடிக்கும் திறன் அவசியம் இருக்கும் அல்லவா? அதனால்தான் நீங்கள் இதைப் பார்த்து இவ்வளவு தூரம் ஆச்சரியம் அடைகிறீர்கள் போலிருக்கிறது'' என்று வேடிக்கையாகக் கூற, அதைக்கேட்ட பெண்பாவை திடுக்கிட்டு அப்போதுதான் அந்த மனிதனை உற்று நோக்கினாள். சாதாரணமாகக் கிளியைத் தனக்குக் காட்டிய அந்த மனிதன் அதைப்பற்றி மேலும் பேசாமல், தனது அழகைப்பற்றி மறைபொருளாகப் பேசத்துணிந்ததை உணர்ந்து, அப்படிப்பட்ட துடுக்கன் யாவன் என்பதை அறிய வேண்டும்

என்ற விருப்பமும் ஆவலும் உண்டானது. ஆகையால், அந்த மடவரல் அந்தக் கிளியைவிட்டு அவனைப் பார்த்தாள். அவனுக்குச் சுமார் முப்பது வயதாகி இருந்ததன்றி, அவன் மெல்லிய உயரமான சரீரத்தோடு பட்டிக்காட்டு முரட்டு மனிதன் போலக் காணப்பட்டான். ஆனால், அவனது முகத்தில் போக்கிரி களையும், குறும்பும், இறுமாப்பும் பூரணமாக ஜ்வலித்துக் கொண்டிருந்தன. அவனிடத்தில் தான் கம்பீரமாகவும் அலட்சியமாகவும் பேசினாலன்றி அவன் தனது இறுமாப்பை அதிகமாகக் காட்டுவான் என்று நினைத்துக் கொண்ட அந்த தோகைமயிலாள் அவனை நோக்கி, "என்னப்பா! நான் ஒன்று கேட்கிறேன். நீ ஒன்று சொல்லுகிறாயே! அழகுக்குத்தான் அழகு தெரியுமென்கிறாயே. நீ அழகாக இல்லையே. உனக்கு இதன் யோக்கியதை தெரியாது என்று நாங்கள் நினைத்துக் கொள்ள வேண்டும் என்கிறாயா? அப்படியானால், மற்ற பட்சிகளை எல்லாம் விட்டு, இதைப் பிடித்து வைத்துக் கொண்டு "இதன் அழகைப் பார்!" என்று கொஞ்ச நேரத்துக்கு முன் நீ என்னிடத்தில் இதைக் காட்டினாயே. அது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றாள்.

அதைக்கேட்ட அந்த மனிதன் என்ன மறுமொழி சொல்வது என்பதை அறியாமல் சிறிதுநேரம் தத்தளித்தவனாய், "எல்லாம் உங்களைப்போல அழகாயிருக்கும் மனிதர் சொல்லக் கேட்டுத்தான் நான் தெரிந்து கொண்டேன். அதுபோகட்டும்; நான் அழகில்லாதவன் என்று நீங்கள் இப்போது சொன்னீர்களே? அதை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? தாம் உயர்வான அழகுடையவள் என்ற நினைவும் செருக்கும் உங்கள் மனசில் நிறைந்திருப்பதானால் தானே உங்களுக்கு அப்படிப்பட்ட நினைவு உண்டாயிற்று" என்றான்.

பூர்ணசந்திரோதயம் ஆயாசமடைந்து, "ஏதப்பா நீ? ஆரம்பத்திலிருந்தே பெரிய கலகத்துக்குத் தொடங்கி விட்டாயே; நான் இதுவரையில் பார்த்தறியாத இவ்வளவு

அபூர்வமான கிளியைக் காட்டி என் மனசுக்கு ஆனந்தம் உண்டுபண்ணிய நீ உன்னுடைய வார்த்தைகளால், அந்த ஆனந்தத்தை யெல்லாம் ஓட்டி மனசைப் புண்படுத்துகிறாயே. முதலில் நீ சொன்ன தத்துவமே சரியானதல்ல. சாதாரணமாகப் பகுத்தறிவும், கண்பார்வையும் உள்ள எல்லாருக்கும் அழகுள்ள வஸ்து எது? அழகில்லாத விகாரமான வஸ்து எது? என்பது நன்றாக தெரியும். ஒரு வஸ்து அழகுள்ளது என்பது அழகுள்ள வர்க்குத்தான் தெரியும் என்றும், மற்றவர்க்குத் தெரியாது என்றும் நீ சொல்வது புதுமையான நியாயமாக இருக்கிறது. அப்படிப்பட்ட தப்பான எண்ணத்தை வைத்துக்கொண்டு நீ மேன்மேலும் வார்த்தைகளை அனாவசியமாக வளர்த்துக் கொண்டு போவதில் உபயோகம் என்ன? அந்த விஷயம் இவ்வளவோடு நிற்கட்டும். இந்தக் கிளியின் விஷயம் ஏதாவது சொல்ல இஷ்டமானால் சொல்லலாம்; இல்லாவிட்டால் உனக்குத் தொந்தரவு கொடுக்காமல் நான் போகிறேன்'' என்றாள்.

அந்த மனிதன், ''என்ன அம்மா! நீங்கள் பேசுவது கொஞ்சமும் நியாயமாக இல்லையே! நான் உங்களைப் பார்த்தவுடனே நீங்கள் அழகாக இருக்கிறீர்கள் என்று சொல்லி நான் உங்களை நிரம்பவும் புகழ்ச்சியாகப் பேசினேன். அதற்குச் சன்மானமாக நீங்கள் உடனே என்னைப் பார்த்து அழகில்லாதவன் என்று சொன்னீர்கள். அப்படியே இருக்கட்டும். உலகத்தில் நிரம்பவும் பணமுடைய தனிகர்கள்தானே ஏழையாய் இருப்பவரைக் காப்பாற்றுகிறார்கள். தனிகர்கள் தனிகர்களுக்கு யாசகம் கொடுப்பதில்லை அல்லவா? அதுபோல, அழகாக இருக்கிறவர்கள் தங்களுடைய அழகை அழகில்லாதவர்களுக்கு தானம் செய்து அவர்களும் அதை அனுபவித்துப் பிழைத்துப் போகும்படி செய்து காப்பாற்ற வேண்டுமேயன்றி, அவர்களைப் பார்த்து இழிவாகப் பேசி அவமதிப்பது தருமம் ஆகாது'' என்று குறும்பாகவும் இடக்காகவும் மறுமொழி கூறினான்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயத்திற்கு மிகுந்த கோபம் உண்டானதானாலும், தான் பூஞ்சோலைக்குள் அந்த முரட்டு மனிதனிடத்தில் தனியாக அகப்பட்டுக்கொண்டிருப் பதைக் கருதி, அதிகமாக சச்சரவை வளர்க்க விரும்பாதவளாய் தனது கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, அவன்பேசிய கருத்தைச் சரியானபடி அறிந்து கொள்ளாதவள் போல நடித்துப் புன்னகை செய்து, ''சரி; போனது போகட்டும். யார் அழகாக இருந்தால் என்ன; யார் அழகில்லாதவராக இருந்தால் என்ன; அதைப்பற்றித் தீர்மானிக்கவா நாம் இப்போது இந்த வம்புலாம் சோலைக்கு வந்தது? அதில்லை. இப்போது உம்முடைய கையில் இருக்கும் கிளியின் அழகாகிய பெருத்த தனம் உம்மிடத்தில் தான் இப்போது பூர்த்தியாக நிறைந்திருக்கிறது. நீர்தான் மற்றவருக்கு அந்த அழகை தானம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறீர்? ஆனால் அதை எனக்குத் தானம் செய்து விடும்படி நான் கேட்கவில்லை. அதை நீர் விலைக்கு விற்பதாக இருந்தால், நீர் எவ்வளவு பணம் கேட்கிறீரோ அதைக் கொடுத்து நான் வாங்கிக் கொள்ளுகிறேன். விற்பதில்லையானால், பரவாயில்லை அதை நீரே வைத்துக்கொண்டு சந்தோஷம் அடையலாம்'' என்றாள்.

அவள் தன்னிடத்தில் வார்த்தையில் அகப்பட்டுக் கொண்டாள் என்று அந்த மனிதன் நினைத்ததற்கு மாறாக, அவள் தந்திரமாகப் பேசித் தப்பித்துக் கொண்டதைக் காண அவன் அந்த வாதத்தை அவ்வளவோடு நிறுத்தினவனாய் அன்பாகவும், இளக்கமாகவும் அவளைப் பார்த்துப் புன்னகை செய்து, ''இந்தக் கிளி நம்முடைய தேசத்துக் கிளியல்ல; சீன தேசத்தில் தான் இந்த மாதிரிக் கிளிகள் ஏராளமாக இருக்கின்றனவாம். நான் தற்செயலாக வரும்போது, இது ஒரு மாதுளைச் செடியின்மேல் உட்கார்ந்து உல்லாசமாகப் பாடிக்கொண்டிருந்தது. நான் இதன் பின் பக்கத்தில் சந்தடி செய்யாமல் வந்தேன். இது தன்னுடைய பாடலின் சுகத்தில் மெய்மறந்திருந்தது. ஆகையால், நான் வந்ததை இது

கவனிக்கவே இல்லை. உடனே நான் சரேலென்று இதை மெதுவாகப் பிடித்துக் கொண்டேன். அவ்வளவுதான் விருத்தாந்தம்; நீங்கள் நினைக்கிறபடி, நான் குருவிக்கார னல்ல; இந்த அற்புதமான கிளியை விற்று, அதனால் நான் பணம் சம்பாதித்து வயிறு வளர்க்கவேண்டிய நிலைமையில் இருப்பவ னல்ல. எனக்கு சுவாமி கொடுத்த சொத்து கொஞ்சம் இருக்கிறது. இந்த அழகான சீனத்துக் கிளியின் அருமையை உணர்ந்து இதை அன்பாகவும் நாகரிகமாகவும் வைத்துக் காப்பாற்றக்கூடிய சிரேஷ்டமான மனிதருக்கு இதை நான் இனாமாகக் கொடுத்து விட வேண்டுமென்ற எண்ணத்தோடு வந்து கொண்டிருந்தேன். தற்செயலாக நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். இதுமகா நுட்பம் பொருந்திய மிருதுவான ஜெந்துவாகையால், இதை முரடர் தொட்டு வளர்த்தால், இது கசங்கிப் போய்விடும். இதைவிட அதிக நுட்பமும் மிருதுவும் பொருந்திய கையை உடைய உங்களைப் பார்த்தவுடனே, இதை வளர்க்கக்கூடிய யோக்கியதை உங்களிடத்தில் பூர்ணமாக இருக்கிறது என்று நினைத்து நான் இதை உங்களிடத்தில் காட்டினேன். நீங்கள் கிளிகளினிடத்தில் அத்யந்த வாத்சல்யமும் பிரேமையும் உள்ளவர்கள் என்பதும் எனக்கு ஏற்கெனவே நன்றாகத் தெரியும். ஆகையால், இதை நான் உங்களுக்கு இனாமாகக் கொடுக்க மனப்பூர்வமாக விரும்புகிறேன். இப்போதே கொடுத்து விடுகிறேன். வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால், ஒரு சிறிய நிபந்தனை இருக்கிறது. அதற்கு மாத்திரம் நீங்கள் இணங்க வேண்டும். இது மகா அருமையான கிளியாக இருக்கிறது. ஆகையால், இதனிடத்தில் எனக்கும் ஒருவிதப் பிரேமை ஏற்பட்டுவிட்டது. ஆகையால், தினம் ஒருதரம் நான் உங்களுடைய ஜாகைக்கு வந்து, இந்த சீனத்துக் கிளியை ஒரு தரம் பார்த்து விட்டுபோகும்படி நீங்கள் எனக்கு அநுமதி கொடுக்க வேண்டும். அவ்வளவுதான் வேறொன்றுமில்லை'' என்று நயமாக மொழிந்தான்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம், "அப்படியானால், இதை எனக்கு இனாமாகக் கொடுக்கிறதாக ஆகாது; இரவலாகக் கொடுக்கிற மாதிரி ஆகும். ஒரு பொருளை ஒருவருக்குத் தானமாகக் கொடுக்கிறது என்றால், அதன்பிறகு அந்தப் பொருளுக்கும் அதைக் கொடுக்கிறவருக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கக்கூடாது. அந்தப் பொருளை வாங்கிக் கொள்கிறவருக்கு சகலமான உரிமைகளும் ஏற்பட்டு விடவேண்டும். அதுதான் இனாமாகக் கொடுத்ததாகும். கொடுக்கப்பட்டுப்போன பொருளினிடத்தில் மறுபடி சொந்தம் பாராட்டி உரிமை கொண்டாடினால், அந்த தானத்துக்குக் கொஞ்சமும் பெருமை ஏற்படாது. அது தானத்திலும் சேர்ந்தது ஆகாது" என்றாள். அந்த மனிதன் குறும்பாகப் புன்னகை செய்து, "நீங்கள் மகா புத்திசாலி என்று நான் கேள்வியுற்றிருக்கிறேன்; அப்படி இருந்தும் இப்படிப் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது. இப்போது ஒரு மனிதன் அருமையாக வளர்த்த அழகான தன்னுடைய பெண்ணை ஒரு புருஷனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்து அவளைப் புருஷனுடைய வீட்டுக்கு அனுப்பி வைக்கிறான். அதன்பிறகு அவன் தன்னுடைய பெண்ணிடத்தில் உரிமை பாராட்டக் கூடாதென்றும், அந்தப் பெண்ணைப் பார்க்க அவன் வரக்கூடாதென்றும், அவர்களுக்கு - அதன்பிறகு எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும் சொல்வது நியாயமாகுமா? அல்லது, தகப்பன் பெண்ணினிடத்தில் இன்னமும் வாஞ்சை வைத்திருக்கிறானே யென்றும், அடிக்கடி பெண்ணைப் பார்க்க வருகிறானேயென்றும் நினைத்து, அவன் கன்னிகாதானம் செய்யவில்லை யென்றும், பெண்ணை இரவலாகக் கொடுத்து வைத்திருக்கிறான் என்றும் சொல்ல முடியுமா?" என்றான்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம், "ஒரு தகப்பன் தன்னுடைய பெண்ணை ஒரு புருஷனுக்குக் கட்டிக்கொடுத்து, அவளைத் தன்னிடத்திலிருந்து எப்போது அனுப்பி விடுகிறானோ, அதன்பிறகு அந்தப் பெண்ணைப்பற்றிய

சகலமான உரிமைகளும் புருஷனுக்கே சொந்தமாகி விடுகின்றன. அதன்பிறகு அந்தப் பெண்ணினிடத்தில் யாரும் வரக்கூடாதென்று சொல்லவும், அவளோடு யாரும் பேசக் கூடாதென்று சொல்லவும் புருஷனுக்குப் பூர்த்தியான அதிகாரம் இருக்கிறது. பெண்ணின் தகப்பன் தாய் முதலியோர் அந்தப் பெண்ணைப் பார்க்க வருவதெல்லாம் புருஷனுடைய சம்மதியையும், தயவையும் பொறுத்ததேயன்றி அதிகாரத்தின் மேலல்ல. தாய் தகப்பன் வந்து பார்க்கக் கூடாதென்று ஒரு புருஷன் கட்டுப்படுத்தி விடுவானாகில், அதை மீறி நடக்க அவர்களுக்கு அதிகாரம் உண்டா? இல்லவேயில்லை. அடுத்த வீட்டிலோ, எதிர்த்த வீட்டிலோ வந்திருந்து தூரத்திலிருந்தபடி பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகிற தாய் தகப்பன்மார் உலகத்தில் இல்லையா? அது எதைக் காண்பிக்கிறது? தாய் தகப்பனார் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டால், அதன்பிறகு, அவர்கள் பெண்ணைப் பார்க்கப்போவது, தங்களுடைய மனசிலுள்ள ஒரு வாஞ்சை யினாலேயே அன்றி, தங்களுக்குள்ள ஓர் அதிகாரத்தினால் அல்ல. அவர்கள் வந்து பார்ப்பது புருஷனுக்குச் சம்மதி இல்லாவிட்டால், அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. அது புருஷனுடைய மன ஒற்றுமையையும் பிரியத்தையும் பொறுத்த விஷயம்'' என்றாள்.

அதைக்கேட்ட அந்த மனிதன், ''உலகத்தில் மாமனார் மாமியாரிடத்தில் அவ்வளவு கொடுமை பாராட்டி கருணையில்லாமல் இருக்கும் மருமகப்பிள்ளை லக்ஷத்தில் ஒருவன்தான் இருப்பான். அப்படிப்பட்ட இரக்கமற்ற கொடிய பாவியையா நீங்கள் உதாரணமாகக்கொள்ள வேண்டும். உலகத்திலுள்ள பெரும்பாலோர் செய்கிறதே சட்டமாகையால், அதையல்லவா நீங்கள் செய்ய வேண்டும். பெண்ணைக் கொடுப்பது கண்ணைக் கொடுப்பதற்குச் சமம் என்று உலகத்தார் சொல்லுவார்களே. அப்படிப்பட்ட பேருதவி செய்யும் தகப்பன் தனது பெண்ணைப் பார்க்கவரக் கூடாதென்று சொல்வது

தர்மமாகுமா? மகா தயாள குணமுள்ள உங்களைப் போன்ற வர்கள் அப்படிப்பட்ட அக்கிரமத்தை ஆமோதிக்கலாமா?'' என்று நயமாகக் கூறினான். உடனே பூர்ணசந்திரோதயம், ''அப்படிப்பட்ட அக்கிரமத்தை நான் ஒருநாளும் செய்ய மாட்டேன். இந்தக் கிளியைப் பெற்ற தகப்பன் தாய் ஆகிய இரண்டு கிளிகளையும், நீர் இப்போதே கொண்டுவந்து கொடுத்தாலும், அது எனக்குச்சம்மதமே. தினம் ஒருதரமல்லவா பார்க்கவேண்டும் என்கிறீர்; அது போதாது. இந்தக் கிளி இதன் தாய்க்கிளி தகப்பன்கிளி ஆகிய மூன்றையும் எப்போதும் நான் ஒரே கூண்டில் வைத்து, ஒன்றைவிட்டு ஒன்றை ஒரு க்ஷணநேரம் கூடப் பிரிக்காமல் வைத்து நிரம்பவும் பட்சமாகவும் அன்பாகவும் காப்பாற்றுகிறேன். அதைப்பற்றி நீர் கொஞ்சமும் கவலை கொள்ளவே தேவையில்லை. பெற்ற தகப்பனும், தாயும் தங்களுடைய பெண்ணைப் பார்க்கக் கூடாதென்று யாராவது தடுப்பார்களா? புருஷன் சட்டப்படி தடுக்கலாமென்று சொல்ல வந்தேனேயொழிய அப்படித் தடுப்பதுதான் நியாயம் என்று நான் சொல்ல வரவில்லையே'' என்றாள்.

அவளது தந்திரமான வார்த்தையைக்கேட்ட அந்த மனிதன் மிகவும் குழம்பி சிறிதுநேரம் தயங்கியபின், நிரம்பவும் பரிதாபகரமாகவும் இளக்கமாகவும் அவளை நோக்கி, ''நான் உங்கள் விஷயத்தில் மிகுந்த அபிமானம் வைத்து அருமையான ஒரு வஸ்துவை உங்களுக்கு இனாமாகக் கொடுக்க எண்ணுகிறேன். நான் கொடுப்பதற்கு முன்பாகவே, நீங்கள் இவ்வளவு நிர்த்தாக்ஷண்யமாகப் பேசி இதை மறுபடியும் நான் கண்ணால் பார்க்கக்கூட விடமுடியாதென்று சொல்லுகிறீர்களே. இது தர்மமாகுமா? அல்லது, உங்களுடைய கண்ணியத்துக்கு அடுத்ததாகுமா? நான் உங்களுடைய கண்ணுக்கு அழகில்லாத வனாகத் தோன்றலாம். அப்படியிருந்தாலும், நான் உங்களுடைய ஜாகைக்கு வந்து உங்களுடைய கண்ணிலே படத்தகாத அவ்வளவு விகாரமான ரூபமுடையவனாகவா இருக்கிறேன். உங்களுடைய ஜாகையில் எத்தனையோ

வேலைக்காரர்கள் இருக்கிறார்களே. அந்த வேலைக்காரர்களுள் ஒருவனாக என்னையும் நீங்கள் மதித்தாவது நான் அங்கே வருவதற்கு அநுமதி கொடுக்கக் கூடாதா? உங்கள் விஷயத்தில் நான் என் மனசாலும் ஒரு தவறும் செய்யவில்லை. நான் யார் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டிருக்க மாட்டீர்கள். ஆனால், நீங்கள் இன்னார் என்று இந்த ஊர் ஜனங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆகையால் எனக்கும் தெரியும். உங்கள் விஷயத்தில் என் மனசிலிருந்து வரும் மதிப்பும், பிரியமும் கணக்கிலடங்குமா! இந்த சீனத்துக்கிளி என் கையில் அகப்பட்டவுடனே, இதை நான் பாதகாணிக்கையாக சமர்ப்பிக்க அருகமான மகாராணி நீங்கள்தான் என்று நான் நினைத்திருந்த சமயத்தில், இதை வாங்கிக்கொள்ள, நீங்களே இங்கே வந்துவிட்டீர்கள். அதுவே தெய்வச் செயலால் நேர்ந்த பாக்கியம் என்று நான் மதித்து எவ்வளவோ ஆனந்தம் அடைந்திருக்க, உங்களுடைய வார்த்தைகள் மகா கொடுமை யானவைகளாக இருக்கின்றன. உங்களுடைய குளிர்ந்த பார்வையால் இந்த உலகத்திலுள்ள மகா கொடிய விலங்குகளான புலி,கரடி முதலியவைகளின் ஹிருதயம் எல்லாம் ஒருநொடியில் வெண்ணெய்போல இளகிவிடும் போல் இருக்கிறதே. அப்படியிருக்க, உங்களுடைய சொந்த மனம் மாத்திரம், இளகாப் பாறைபோல இப்படிப்பட்ட இரக்கமற்ற எண்ணங்களைக் கொள்ளுகின்றனவே! வேண்டாம் நீங்கள் என்னை இப்படி அலட்சியம் செய்வது நியாயமல்ல. நான் இந்தக் கிளியை உங்களுக்குக் கொடுப்பதாகச் சொன்ன வாக்குறுதியை மீறி நடக்கப்போகிறதில்லை. இந்தக் கிளி உங்களுக்கு வேண்டியதில்லை என்று இனி நீங்கள் மறுத்தால் கூட, நான் இதை வேறே எவருக்கும் கொடுக்கப்போறதில்லை. இதற்காக தங்கத்தினால் ஒரு கூண்டு செய்து, அந்தக் கூண்டிற்குள் இதைவிட்டு, இன்றையதினம் ராத்திரியே உங்களுக்குத் தெரியாமல் உங்களுடைய ஜாகையில் கொண்டுவந்து கட்டித் தொங்கவிட்டு விடுவேன். நான் அப்படிச் செய்வதைவிட

நீங்களே இதை நேரில் சந்தோஷமாக வாங்கிக் கொள்வதனால் எனக்கு உண்டாகும் பெருமையும் ஆனந்தமும் இல்லாமல் போகும்படி ஏன் நீங்கள் செய்ய வேண்டும். இதை உங்களிடத்தில் கொடுத்த பிறகு நான் ஒரு நாளைக்கு ஒருதரம் உங்களுடைய ஜாகைக்கு வந்து இந்த சீனத்துக் கிளியைக் கண்டு சந்தோஷமடைந்து திரும்பி வருவதில் உங்களுக்கு எவ்வித நஷ்டமாவது, கஷ்டமாவது, குறைவாவது, அவமானமாவது உண்டாகப் போகிறதில்லை. ஒருவர் நமக்குப் பிரியத்தைச் சன்மானம் செய்தால், அதற்குப் பதிலாக வெறுப்பைத் தருவது உத்தம லக்ஷணமல்ல; நீங்கள் இல்லையென்று சொல்லாமல் இந்த ஏழையைக் காப்பாற்றி அபயஸ்தம் கொடுப்பது உங்களைச் சேர்ந்த பொறுப்பு'' என்று உருக்கமாகவும் தனது கண்களைச் சிமிட்டிக் கொண்டும் குறும்பாகப் பேசினான்.

அந்த மனிதனது மறைபொருளான வார்த்தைகளைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் தன்னிடத்தில் அவன் ஏதோ கபடமான நோக்கத்தோடு மறைத்து மறைத்துப் பேசுகிறான் என்பதை ஒரு நொடியில் கண்டுகொண்டவளாய், தனது முகத்தை மிகவும் கடுமையாக வைத்துக்கொண்டு கம்பீரமாகவும் அலட்சியமாகவும் நிமிர்ந்து நின்று, ''ஐயா! நான் இதுவரையில் இங்கே நின்று உம்மிடத்தில் பேசிக்கொண்டிருந்தது சுத்தப் பிசகு என்பது இப்போதுதான் தெரிகிறது. இந்தக் கிளியைக் கண்டு நான் ஆசைப்பட்டதும் தவறு என்று நினைக்கிறேன். நீர் தற்செயலாக என்னைக் கண்டு இந்தக் கிளியைக் கொடுத்தீர் என்றே நான் இதுவரையில் நினைத்தேன். இப்போது பார்த்தால், நீர் ஏதோ துஷ்ட நினைவோடு இந்தக் கிளியை வைத்துக்கொண்டு என்னுடைய வருகையை எதிர்பார்த்து இங்கே இருந்ததாகத் தெரிகிறது. உம்முடைய வார்த்தைகள் நிரம்பவும் கபடமாக இருக்கின்றன. ஆகையால், நான் இனி ஒரு நொடி நேரம் கூட இங்கே நின்று உம்மோடு பேசுவது மரியாதையல்ல. உம்முடைய கிளியை நீரே வைத்துக் கொள்ளும்; அல்லது, உம்முடைய கிளியை வாங்கிக்கொண்டு

அதற்குப் பதிலாக தினம் தினம் உம்மைத் தன் வீட்டுக்கு எவ அழைத்துக் கொள்ளுகிறாளோ அவளைப் பார்த்து நீர் இந்த கிளியைக் கொடும்'' என்று அமர்த்தலாகப் பேசியவண்ண முறுக்காக அப்புறம் திரும்பி நடக்கலானாள்.

உடனே அந்த மனிதன் மிகவும் குறும்பாக அவளை விளித்து ''அம்மா! ஏனம்மா இப்படி கோபித்துக்கொண்டு போகிறீர்களே நான் இப்போது என்ன தவறு செய்துவிட்டேன்? ஒன்றும் செய்யவில்லையே. இந்தக் கிளியைப் பார்த்து நீங்கள் ஆசைப்பட்டீர்கள். அந்தக் கிளியைத் தினம் தினம் பார்க்க நானும் ஆசைப்பட்டேன். இருவருடைய பிரியத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தகுந்த ஒரு யோசனையை நான் சொன்னேன். இதற்குள் இவ்வளவு ஆத்திரப்பட்டு என்மேல் கோபித்துக்கொண்டு பராமுகமாய்ப் போக ஆரம்பிக்கிறீர்களே! இன்னம் நான் மகா முக்கியமான ஒரு ரகசிய சங்கதியை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அதைக் கேட்பீர்களானால், இவ்வளவு பிரியம் வைத்துள்ள அருமையான ஒரு மனிதனை நாம் இவ்வளவு ஆத்திரமாக இளக்காரம் செய்து விட்டோமே என்று விசனப்படுவீர்கள். உங்கள் விஷயத்தில் சில மனிதர் பலமான ஒரு சதியாலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதை அறிந்து கொள்ளாமல் நீங்கள் இருப்பது அபாயகரமான விஷயம். அந்த விஷயத்திலும், உங்களுக்கு எவ்வித அபாயமும் நேராமல் காப்பதற்கு என்னுடைய உதவியும் உங்களுக்கு அவசியம் தேவையாக இருக்கும். தயவுசெய்து கொஞ்சம் நில்லுங்கள். போகலாம்'' என்று கூறியவண்ணம் அவளுக்கு முன்பாக வந்து வழிமறிப்பது போலக் குறுக்காக நின்று கொண்டான்.

அதைக் கண்ட பூர்ணசந்திரோதயம் அருவருப்பினால் தனது முகத்தைச் சுளித்துக்கொண்டு அப்படியே அவனைப் பார்த்து, ''என்ன ஐயா இது சண்டி வழக்கமாக இருக்கிறது! எனக்கு உம்முடைய கிளியும் வேண்டாம்; உம்முடைய ரகசியமும்

வேண்டாம். எனக்கு இந்த உலகத்திலேயே விரோதிகள் இல்லையாகையால், என் விஷயத்தில் எவரும் சதியாலோசனை செய்வார்கள் என்ற பயமே இல்லை. தப்பித்தவறி ஏதாவது துன்பம் நேர்ந்தால்கூட எனக்குத் தேவையான பக்கபலம் பூர்த்தியாக இருக்கிறது. நான் அந்த விஷயத்தில் உமக்குக் கொஞ்சமாவது பிரயாசை கொடுப்பேன் என்று நீர் நினைக்க வேண்டாம்'' என்று மிகவும் கண்டிப்பாகப் பேசினாள்.

அதைக்கேட்ட அந்த மனிதன், ''அம்மா! நான் சொல்வதை நீங்கள் இவ்வளவு அலட்சியமாக மதித்து என்னைத் தூக்கி எறிந்து பேசுவது சரியல்ல; நான் யாரோ குருவிக்காரன் என்று நீங்கள் இன்னமும் நினைத்துக்கொண்டே பேசுகிறது போல இருக்கிறது. அப்படி நினைக்க வேண்டாம்; என்னுடைய உடம்பின் தோற்றம் உங்களுக்கு அவ்வளவு வசீகரமாக இல்லையென்று, என்னுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் போனால், அதனால் உங்களுக்குத்தான் கெடுதல் உண்டாகும். இந்த ஊர் மகா பொல்லாத ஊர். இந்த ஊரில் நல்ல அழகும் யோக்கியமும் உள்ள பெண்கள் வெளியில் வரவே பயப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் கோஷாவைப் போல மறைவாகவே இருப்பார்கள். நீங்களோ இந்த ஊராரின் யோக்கியதையை அறிந்துகொள்ளாமல், கள்ளம் கபடமின்றி சாதாரணமாக சுயேச்சையாய் இருக்கிறீர்கள். நீங்கள் அழகிலோ எப்பேர்ப்பட்டவருடைய மனசையும் காந்தம்போல ஒரு நிமிஷத்தில் கவர்ந்து கொள்ளக்கூடிய நிகரற்ற அதிசுந்தரம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். ஆகையால், உங்களைக் கண்டு இந்த ஊரிலுள்ள பல துன்மார்க்கர்கள் துஷ்ட நினைவுகொண்டு சமயம் பார்த்து அலைந்து திரிகிறார்கள். ஆகையால், நீங்கள் எப்போதும் மிகவும் எச்சரிப்பாகவே இருக்க வேண்டும்'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், ''அப்படிப்பட்ட பெரிய மனிதர்களுள் நீரும் ஒருவரென்பது நன்றாகத் தெரிவதால், நீர்

சொல்லுகிறபடியே நான் இப்போதும் எச்சரிப்பாக நடந்து கொள்ள வேண்டுமென்று தான் இவ்விடத்தை விட்டுப் போகிறேன்'' என்று மிகுந்த அருவருப்போடு கூறினாள்.

அந்த மனிதன் மிகவும் கெஞ்சலாகப் பேசத் தொடங்கி, ''ஏதேது! நீ மகா பொல்லாதவளாக இருக்கிறாயே! நான் பேச ஆரம்பிக்கும்போதே பழியை என் தலையிலேயே போட ஆரம்பிக்கிறாயே! நானோதக்க பெரிய மனிதன். இப்படிப்பட்ட சதியாலோசனையில் எல்லாம் நான் சேரக்கூடியவனல்ல. ஆனால், நான் இப்போது குறிப்பிடும் மனிதர்களுள் ஐந்தாறு பேர் ஒன்றாகச் சேர்ந்து உன்னைக் கைவசப்படுத்த வேண்டுமென்று உறுதி செய்து கொண்டு அதற்காக முப்பதினாயிரம் ரூபாய் பந்தயம் கட்டி இருக்கிறார்கள். அவர்கள் எனக்குச் சிநேகமான மனிதர்கள்தான். ஆனால், இதற்காக நான் அவர்களுடைய சிநேகத்தை விடமுடியவில்லை. இருந்தாலும் உன் விஷயத்தில் அவர்கள் செய்வது என் மனசுக்கு சரியாக இல்லை. ஆகையால், இதை நான்தான் உன்னிடத்தில் சொன்னவன் என்பதை நீ வெளியிடாமல் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும்'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், ''ஓகோ! அப்படியா! உம்முடைய சிநேகிதர்களா பந்தயம் வைத்திருக்கிறார்கள்? நல்ல காரியம் செய்தார்கள்! அவர்கள் உம்முடைய ஆப்த சிநேகிதர்கள் என்கிறீர். அவர்களுடைய சிநேகத்தையும் தள்ளமுடிய வில்லை என்கிறீர். அப்படியானால், அவர்களுக்கு முன்னால், நீர் இந்த விஷயத்தை ஆமோதித்து அவர்களுக்குத் தெரியாமல் என்னிடத்தில் வந்து அவர்களைப் பற்றி தூஷணையாகப் பேசுகிறீரென்பது நன்றாகத் தெரிகிறது. ஒருவேளை அந்தப்பந்தயம் வைத்திருப்பவர்களுள் நீரும் ஒருவராக இருந்தாலும் இருப்பீர். நான் உம்மை மெச்சிக்கொள்வேன் என்று நினைத்து நீர் யோக்கியர் போல நடித்து, அவர்களைப் பற்றித் தூஷணையாகப் பேசுகிறீர் என்றும்

நினைக்க இடமிருக்கிறது. என்னைப்பற்றி இத்தனை சங்கதிகள் தெரிந்து கொண்டிருக்கும் நீர் இப்போது முதன் முதலாக என்னைக் கண்டபோதாவது, அல்லது, அந்தப் பந்தயம் வைக்கப்பட்ட உடனே என் ஜாகைக்கு வந்தாவது, இந்த ரகசியத்தை நீர் என்னிடத்தில் சாதாரணமாக வெளியிட்டிருந்தால், நீர் யோக்கியர் என்ற நம்பிக்கை உண்டாகும். அதைவிட்டு எங்கேயோ இருந்த ஒரு கிளியைப் பிடித்து வைத்துக் கொண்டு கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பதுபோல, என்னிடத்தில் பேசி என்னை ஏமாற்றப் பார்க்கிறீரே. இந்த வித்தையெல்லாம் நீர் எங்கே கற்றுக்கொண்ட வித்தை! ஒரு கிளிக்காக ஒரு பெண்பிள்ளை தன்னுடைய கற்பை இழந்துவிடுவாள் என்று நீர் நினைப்பது தான் நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் நீர் தக்க பெரிய மனிதரென்றும் சொல்லிக் கொள்ளுகிறீர். இந்த ஊரிலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் உம்மைப்போலத்தான் இருப்பார் களென்று தெரிந்திருந்தால், நாம் இந்த ஊரிலேயே தங்கியிருக்க மாட்டேன். இவ்வளவு சாமர்த்தியமாகக் கிளி கொடுத்துக் கொக்குப் பிடிக்கும் பெரிய மனிதராகிய நீர் இன்னார் என்பதையும் வெளியிடமாட்டேன் என்கிறீர். அதைச் சொன்னாலாவது நான் அதற்குத் தக்கபடி மரியாதையாக நடந்து கொள்ளலாம்'' என்று மிகவும் அருவருப்பாகப் பேசினாள்.

அதைக் கேட்ட அந்த மனிதன் தனது பொறுமையை இழந்து, மிகுந்த கோபமடைந்தவனாகப் பதறி, ''ஆகா! நானும் ஆரம்பத்திலிருந்து உன்னோடு பேசிக்கொண்டு வருகிறேன். உன்னுடைய இறுமாப்பும் எடுப்பும் மனிதன் சகிக்கக்கூடிய வரம்பை மீறியவையாக இருக்கின்றனவே! முதலில் தான் யாரோ குருவிக்காரனென்று என்னை அலட்சியமாக மதித்துப் பேசினாய். இப்போது நான் தக்க பெரிய மனிதனென்று சொல்லுகிறேன். இப்போதும், நீ கொஞ்சமாவது மரியாதை வைக்காமல் தூக்கி எறிந்து பேசுகிறாயே. இந்த ஊரில் என்னைத்

தெரிந்துகொள்ளாத மனிதரும் இருக்கிறார்களா! நீயும் என்னை இன்னனென்று அறிந்துகொண்டே இப்படிப் பேசுகிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது. உனக்குத் தெரியாதென்றே வைத்துக் கொள்வோம். என்னை சூரக்கோட்டைப் பாளையக்காரர் என்று சொல்லுவார்கள். நான் எப்படிப்பட்ட பராக்கிரமசாலி என்பதை எங்களுடைய ஊரின் பெயரே வெளிப்படுத்தும்; மகா பலசாலிகளான எத்தனையோ பகைவரை நான் சண்டையில் ஜெயித்துப் புகழ் பெற்றவன். ஆகையால், ஒரு பெண் விஷயத்தில் ரகசியத்தில் நடத்தப்படும் இந்த சதியாலோசனைப் போரில் நான் சேருகிறவனல்ல. நான் எதிலும் நேருக்கு நேர் நின்று வெல்லுகிறவன். உன்னிடத்தில் நான் முடிவாக ஒரு விஷயம் கேட்கிறேன். அதை நீ சொல்லிவிடு. உனக்கு என்னுடைய சிநேகம் வேண்டுமா? அல்லது என்னுடைய விரோதம் வேண்டுமா? இரண்டில் ஒன்று சொல்லிவிடு'' என்று கண்டிப்பாகப் பேசினார்.

அவரது சொல்லைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகுந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்தவளாய்க் காணப்பட்டு, ''ஓகோ! அப்படியா! நீர்தான் சூரக்கோட்டைப் பாளையக்காரரா? அது நீர் சொன்ன பிறகுதான் தெரிந்தது. உம்முடைய தோற்றத்தி லிருந்தாவது, உம்முடைய நடத்தையிலிருந்தாவது, உம்முடைய வார்த்தைகளிலிருந்தாவது நீர் இன்னார் என்பதையே நான் அறிந்து கொள்ளக்கூடவே இல்லை. போனது போகட்டும், நீர் சூரக்கோட்டைப் பாளையக்காரராக இருப்பதைப் பற்றியாவது, அல்லது, நீர் இந்த ஊருக்கே மகாராஜராக இருப்பதைப் பற்றியாவது எனக்குக் கொஞ்சமும் ஆட்சேபணையே இல்லை. நீர் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், நீர் எனக்குச் சிநேகிதராகவாவது, அல்லது, விரோதியாகவாவது இரண்டில் ஒன்றாக இருக்கத்தான் வேண்டுமென்பது என்ன கட்டாயமோ தெரியவில்லை! ஏன்? இரண்டும் இல்லாமல் சும்மா இருக்கமாட்டீரோ?'' என்றாள்.

அதைக்கேட்ட பாளையக்காரர் முன்னிலும் அதிகமாகப் பதைத்தவராய், ''ஆம்; அது கட்டாயந்தான். உன்னுடைய அற்புதமான அழகு என்னை அப்படிக் கட்டாயப் படுத்துகிறது. ஆகையால், ஒன்று சிநேகிதராக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் விரோதியாக இருக்க வேண்டும். மத்தியஸ்தமான ஏற்பாடென்பது கிடையாது. என்ன சொல்லுகிறாய்? என்னுடைய ஆசையெல்லாம் உன் மேல் பூர்த்தியாக வீழ்ந்துவிட்டது. என் வலையிலிருந்து நீ என்றைக்கும் தப்ப முடியாது. எவர் கையிலும் அகப்படாமல் ஆகாயத்தில் பறக்கும் இந்த சீனத்துக் கிளியைக் கூட நான் பிடித்து இதோ கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன். ஜெகன்மோகன விலாசத்தின் இரண்டாவது உப்பரிகையிலுள்ள பறக்கத் தெரியாத அந்த மாயாஜாலக் கிளியைப் பிடிப்பதற்கு அதிகநேரம் ஆகாது. இந்த விஷயத்தில் எல்லாம் தானாகக் கனிந்து வருவதே இன்பகரமானது. ஆகையால், கசக்கி மோர எனக்கு இஷ்டமில்லை. அதனாலேதான் நான் இவ்வளவு தூரம் நயந்து கேட்கிறேன். என்ன சொல்லுகிறாய்? நீ என்னுடைய இஷ்டத்துக்கு இணங்கியதற்கு அடையாளமாக இந்தக் கிளியை உன் கையில் வாங்கிக்கொள். இல்லாவிட்டால், அந்தக் கிளியை நான் பிடிக்கிற வழியில் பிடித்துக்கொள்ளுகிறேன்'' என்றான்.

பூர்ணசந்திரோதயம் முன்னிலும் அதிக வெறுப்போடு அவனைப் பார்த்து, ''நீர் கிளி பிடிக்கிற வழிகளை மாத்திரமே அறிந்தவர் என்பது நீர் சொல்வதிலிருந்தும் தெரிகிறது; உம்முடைய முகத்தைப் பார்த்தாலும் அப்படித்தான் இருக்கிறது. மனிதரைப் பிடிக்கும் யோக்கியதை உமக்குக் கொஞ்சமும் கிடையாது. ஆகையால், தயவு செய்து நீர் போய்விட்டு வாரும். உம்மிடத்தில் இனி ஒரு வார்த்தைகூடப் பேச, எனக்கு இஷ்டமில்லை'' என்று கூறியவண்ணம் அவ்விடத்தை விட்டு இரண்டோரடி நடக்க முயன்றாள்.

அவளது சொற்களைக்கேட்ட சூரக்கோட்டைப் பாளையக்காரர் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த ஆத்திரமடைந்தவராய் மறுபடியும் அவளுக்கு எதிரில் போய் நின்று வழிமறித்துக் குறும்பாகவும் புரளியாகவும் புன்னகை செய்து, "அடேயப்பா! நீ என்ன எவருக்கும் கிடைக்காத மகா சீமைச்சரக்காக இருக்கிறாயே! நீ என்ன இந்த பூலோகத்தில் எங்களைப் போன்ற சாதாரணமான மனிதர்களுக்குப் பிறந்து இந்த பூலோகத்திலேயே வளர்ந்து பூலோகத்திலேயே இருப்பவளாக நினைக்கவில்லை போலிருக்கிறது! நீ கலியாணம் செய்துகொள்ளக்கூடிய மனிதன் தெய்வ லோகத்தி லிருந்து நேராக இறங்கி வரப் போகிறானா? அவனுக்கு மாத்திரம் முகத்தில் இரண்டு கொம்புகள் முளைத்தி ருக்குமா? அவனும் எங்களைப் போலத்தானே மனுஷனாக இருப்பான். அவனுடைய தலை ஒருவேளை அவனுடைய வயிற்றில் முளைத்திருக்குமா? என்ன இருந்தாலும், உனக்கு இவ்வளவு கர்வமும், ஆணவமும் ஆகாது. நான் நல்ல வார்த்தை சொல்ல வந்தால் கூட, என்னவோ நான் உனக்குப் பெருத்த கெடுதல் செய்துவிட்டது போல நினைத்து மகா எரிச்சலாகவும், ஆத்திரமாகவும், அலட்சியமாகவும் பேசுகிறாயே! நான் ஒன்று கேட்டால், நீ வேறொன்று சொல்லுகிறாய். கடைசியாக நான் கேட்ட கேள்விக்கு நீ சரியான உத்தரம் சொல்லாமல், நான் கிளி பிடிக்கிற குருவிக்காரன் போலத்தான் இருக்கிறேன் என்றும், பெண்களைப் பிடிக்க எனக்கு வழி தெரியாது என்றும் மகா இறுமாப்பாகப் பேசிவிட்டு, பேய், பிசாசுகளைக் கண்டு ஓடுகிறவள்போலப் பயந்துகொண்டு பறக்கிறாயே! நான் இன்னானென்பதை நீ தெரிந்து கொண்டும் , கொஞ்சமும் மட்டுமரியாதை இல்லாமல் ஒரு பிச்சைக்காரனிடத்தில் பேசுவதுபோல எண்ணிப் பேசிவிட்டா யல்லவா? நான் பிறந்தது முதல் இந்த நிமிஷம் வரையில் இப்படிப்பட்ட அவமரியாதையான வார்த்தைகளை எப்பேர்ப்பட்டவ ரிடத்திலும் கேட்டறியேன். இப்படிப் பேசியவள், நீயாக

மாத்திரம் இல்லாமல் வேறே யாராக இருந்தாலும் அவள் படுகிற பாடு இந்நேரம் தெரிந்திருக்கும். இதே இடத்தில் உன்னை இப்போது நான் பலவந்தமாகப் பிடித்து மானபங்கம் படுத்தும் திறன் எனக்குப் பூரணமாக உண்டு. நூறு மனிதர் உனக்குப் பக்கபலமாக இங்கே வந்து உன்னை விடுவிக்க யத்தனிப்பதானாலும் அவர்கள் எல்லோரையும் ஒரு நொடியில் நான் தவிடு பொடியாக்கிவிடுவேன். நீ ஒரு பெரிய மனுஷி யென்று முகத்தை வைத்துக்கொண்டு அந்த ஜெகன் மோகனை விலாசத்து உப்பரிக்கையின்மேல் நின்று இனி இந்த ஊராரை மயக்க முடியாதபடி உன்னை இன்றோடு சரிப்படுத்தி அனுப்பி விடுவேன். ஆனால், நீதான் அறியாமையினால் ஏதோ இப்படி நடந்துவிட்டாயென்றால், அதற்காக நானும் உன்னிடத்தில் கடுமை காட்டுவது அழகல்ல. அதோடு எனக்கு உன்னிடத்தில் ஏற்பட்டிருக்கும் பிரியத்துக்கும், அந்தரங்கமான ஆசைக்கும் அளவு சொல்ல முடியாது. அதனால்தான், நீ என்னை எவ்வளவு தூரம் இழிவாகப் பேசினாலும், நான் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதை நீ தெரிந்து கொள்ளாமல் உனக்குத்தான் பேசத் தெரியும் என்று வார்த்தைகளை ஓட்டுகிறாயே! உனக்கு என்னுடைய சிநேகம் வேண்டுமா, அல்லது என்னுடைய பகைமை வேண்டுமா என்று நான் கேட்டதற்கு, சரியானபடி மறுமொழி சொல்லாமல் ஓடுகிறாயே! அப்படி ஓடிவிட்டால், நான் உன்னை இவ்வள வோடு மறந்து விட்டுப்போய் விடுவேன் என்று நினைத்துக் கொண்டாயா? அது ஒரு நாளும் பலிக்காது. இரண்டிலொன்றாக நாம் இருந்து தீர வேண்டும். என்ன சொல்லுகிறாய்? உனக்கு எதில் இஷ்டம்? சொல்லிவிடு!'' என்று கண்டிப்பாகக் கூறினான்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகவும் பதைபதைத்த வளாய் நிரம்பவும் கம்பீரமாக நிமிர்ந்து நின்று, ''உம்மோடு சிநேகமாக இருப்பதென்றால், அது இன்னதென்று எனக்குச் சரியாக விளங்கவில்லை. அதைக் கொஞ்சம் விவரித்துச் சொல்லும்'' என்றாள்.

சூரக்கோட்டைப் பாளையக்காரர் மிகுந்த வியப்போடு, ''என்ன ஆச்சரியம்! இந்த அற்பசங்கதியை நான் விவரித்துச் சொல்லவேண்டுமா? ஒரு யௌவனப் பெண்ணும் யௌவனப் புருஷனும் சிநேகமாக இருப்பதென்றால் தாலிகட்டுவது ஒன்று நீங்கலாக, மற்ற எல்லா நடவடிக்கைகளிலும் அவர்கள் புருஷன் பெண்ஜாதிபோல அன்னியோன்னியமாக இருப்பது என்று அர்த்தம். இது தெரியவில்லையா?'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், ''சிநேகமென்ற சொல்லுக்கு அவ்வளவு ஆழ்ந்த அர்த்தம் இருக்கிறது என்பதை நான் இப்போது உம்மிடத்தில் தான் கற்றுக்கொண்டேன். அதுபோகட்டும்; உம்மோடு பகையாக இருப்பதென்றால், அதன் வியாக்கியானம் என்ன?'' என்றாள்.

சூரக்கோட்டை பாளையக்காரர், ''நீ எளிதிலேயே என்னுடைய இஷ்டப்படி இணங்கி வராவிட்டால், பிறகு நான் அதற்குத் தகுந்த ஆட்களை வைத்து உன்னை எப்படியாவது பலவந்தப்படுத்திக் கண்காணாத இடத்தில் தூக்கிக் கொண்டு போய் வைத்து, உன்னை அடக்கி வசப்படுத்துவேன். அது முடியாவிட்டால், நீ வேறே யாரையாவது கலியாணம் செய்து கொள்ளவோ, அல்லது, ஆசைநாயகனாக வைத்துக் கொள்ளவோ நினைத்தால், நான் பலவகையில் முயற்சி செய்து அந்த மனிதன் உன் நடத்தையைப் பற்றி சந்தேகம் கொள்ளும்படி செய்துவிடுவேன். நீ என்னை வைத்துக் கொண்டிருப்பதாக, நான் ஊர்முழுதும் புரளி செய்வேன். இன்னம் ஆயிரம் ஆட்களை அமர்த்தி அதே மாதிரியான புரளியை இந்த ஊர் முழுதும் பரவச் செய்வேன். நீ எனக்கு எழுதியதுபோல அநேகம் காதல் கடிதங்களை நானே தயாரித்து அதைக் காட்டி, உன்னுடைய யோக்கியதையைக் குலைத்து விடுவேன். சண்டி புரண்டால் காடு கொள்ளாதென்று பழமொழி சொல்வதுண்டு. அதுபோல, நான் இடக்குப் பண்ண ஆரம்பித்தால் நீ தலை கீழாகக் கரணம் போட்டாலும் , உன்னை

எவனும் நாடாமல் அடித்து விடுவேன் என்பதை நீ நிச்சயமாக வைத்துக்கொள்!'' என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினான்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம், ''உம்முடைய பகைமைக்கு இவ்வளவு அர்த்தமிருக்கிறதா? இருக்கட்டும். நான் உம்முடைய சிநேகத்தையும் நாடவில்லை; உம்முடைய பகைமையையும் நாடவில்லை. நீராக வந்து, எதற்காக வற்புறுத்தி இரண்டிலொன்றை ஏற்படுத்திக் கொள்ளப் பார்க்கிறீர். நீர் என்னைப் பார்த்து ஆசைப்படுகிறீர் என்கிற காரணத்தினால், உம்மிடத்தில் சிநேகமாகவாவது விரோதமாக வாவது இருக்கவேண்டுமென்பது கட்டாயம் இல்லை. ஆகையால், வீணாக துன்மார்க்கத்தில் இறங்கித் துன்பத்தை விலைக்கு வாங்கவேண்டாம்; போய் விட்டு வாரும்; நமஸ்காரம்'' என்று கூறியவண்ணம் விசையாக அப்பால் நடக்க, பக்கத்திலிருந்த ஒரு புதரின் மறைவிலிருந்தபடி நமது பஞ்சண்ணாராவ் கனைத்துக் கொண்டு, ''யாரைய்யா அது சண்டை போட்டுக் கொள்ளுகிறது? பகலில் பக்கம் பார்த்துப் பேசுங்கள். அப்புறம் இப்புறம் மனிதர்கள் இருக்கிறார்கள்'' என்று கூறிய வண்ணம் வெளிப்பட்டான்.

## 13 - வது அதிகாரம்

## வியாழக்கிழமை - நான்காவது வலை

அவ்வாறு திடீரென்று வெளிப்பட்ட பஞ்சண்ணாராவைக் கண்டவுடனே சூரக்கோட்டைப் பாளையக்காரர் திடுக்கிட்டு, வந்தது யாரென்பதைக் கவனித்ததன்றி, பக்கத்தில் இன்னமும் வேறே மனிதர்கள் யாராகிலும் இருக்கிறார்களோ என்று நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தார். ஆதலால், அதற்குள் பூர்ணசந்திரோதயம் விரைவாக நடந்து நெடுந்தூரத்திற்கு அப்பால் போய்விட்டாள். மேலும் தாம் அவளைத்

தொடர்ந்துபோய், அவளைப் பலாத்காரம் செய்தால், அவள் கூச்சலிடுவாள் என்றும், ஜனங்கள் வந்து கூடிவிடுவார்கள் என்றும் நினைத்து ஒருவித அச்சங்கொண்ட பாளையக்காரர், அப்படியே நின்றவராய்ச் சிறிது தூரத்திலிருந்து பஞ்சண்ணாராவைப் பார்த்து, "பஞ்சண்ணா! வா அப்பா! நல்ல சமயத்தில் வந்தாய். சமயசஞ்சீவி என்றால் உனக்கே தகும். உன்னைக் கண்டு பேசவேண்டுமென்று நான் இப்போதுதான் நினைத்தேன். நீ உடனே எதிரில் வந்து நிற்கிறாய்! என்ன அப்பா! வெகுகாலமாக நீ கண்ணிலேயே படவில்லையே! இந்த ஊரிலேதான் இருக்கிறாயா? அல்லது வேறே ஏதாவது ஊருக்குப் போயிருந்தாயா?" என்று மிகவும் பிரியமாகவும் சந்தோஷத்தோடும் பேசினார்.

அதைக் கேட்ட பஞ்சண்ணாராவ், வாலையாட்டிக்கொண்டு நிற்கும் நாய்க்குட்டிபோல, அவருக்கு எதிரில் வந்து கூழைக்கும்பிடு போட்டுப் பல்லிளித்து ஆஜானுபாகுவான தனது உடம்பை விகாரமாக வளைத்து வணக்கமாக நின்று, "எஜமான் கோபிக்கக்கூடாது; மரங்களின் மறைவில் நான் வந்தபொழுது இங்கே இரண்டுபேர் சச்சரவு செய்துகொண்ட பேச்சுக் குரல் கேட்டது. எவனோ துஷ்டன், தனியாக வந்து அகப்பட்டுக் கொண்ட யாரோ ஒரு பெண்பிள்ளையைப் பலாத்காரம் செய்கிறான் என்று நினைத்து நான் இங்கே வந்துவிட்டேன். இங்கே இருப்பதுஎஜமான் என்பது தெரிந்திருந்தால், நான் இங்கே வந்தே இருக்கமாட்டேன். எஜமானுடைய காரியம் இந்நேரம் பலிதமாகி இருக்கும். அதற்கு இடைஞ்சலாக நான் வந்து சேர்ந்தேன். தெரியாத் தனத்தினால் நடந்த இந்தப் பெருத்த பிழையை எஜமான் க்ஷமித்துக்கொள்ள வேண்டும். இந்த நாய்க்குட்டி எப்போதும் எஜமானுடைய வீட்டுச் சோற்றைத் தின்று வளர்ந்தது. இப்போதும் எஜமானுக்கு இந்த நாய்க்குட்டியால் என்ன காரியம் ஆகவேண்டுமானாலும், செய்யக் காத்திருக்கிறது; கொஞ்ச காலமாக நான் எஜமானு

டைய கண்ணில் படவில்லையென்பது நிஜந்தான். கஞ்சாவுக்குக் காலணா கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. ஏதோ எனக்குத் தெரிந்த தொழிலைச் செய்து வயிறு வளர்க்க வேண்டியிருக்கிறது. அதற்காக இந்த நாய்க்குட்டி சோறு கண்ட இடம் சொர்க்கம், கஞ்சி கண்ட இடம் கைலாசம் என்று எங்கெங்கேயோ அலைந்து திரிகிறது. எஜமான் ஏதோ இந்த அடிமையை இப்போது நினைத்ததாகச் சொன்னாற் போலிருக்கிறதே? என்னால் என்ன ஜோலி ஆகவேண்டும்? சொன்னால், இதோ ஒருநொடியில் முடித்துத் தருகிறேன். இப்போது போனாளே இந்தக் குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து உங்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமா? எஜமான் ஒரு வார்த்தை சொல்லுங்கள். அடுத்த நொடியில் அந்தப்பெண் எங்கே இருக்கிறாள் பாருங்கள்'' என்றான்.

அவனது துணிகரமான சொற்களைக் கேட்ட பாளையக்காரர் மிகுந்த மகிழ்ச்சியும், துணிபும் அடைந்து அவனை நோக்கிப் புன்னகை செய்த முகத்தினராய், ''நீ பேசுவதைப் பார்த்தால், இப்போது போனவள் இன்னாளென்பது உனக்கு ஏற்கெனவே தெரியும் போலிருக்கிறதே? தெரிந்திருந்தால், இவளுடைய அந்தரங்கங்களையெல்லாம் கொஞ்சம் சொல்லப்பா! இவள் எப்பேர்ப்பட்டவருக்கும் மசியாத மகா அபூர்வச் சரக்காக இருக்கிறாள். உண்மையில் இவள் யாரென்பதும், இந்த ஊரில் வந்திருந்துகொண்டு எதற்காக இப்படி வெளிவேஷம் போடுகிறாள் என்பதும் தெரியவில்லை. இவளுடைய பேச்சோ மகா எடுப்பாக இருக்கிறது. யாராக இருந்தாலும் இவள் கேவலம் ஒரு திரணமாக மதித்துப் பேசுகிறாள். உண்மையிலேயே இவளுக்கு ஏதாவது தக்க பக்கபலம் இருக்கிறதா? அல்லது, யௌவனப் பருவத்து முறுக்கினாலும் இறுமாப்பினாலும் இவள் இப்படிப் பேசுகிறாளா? உண்மை ஏதாவது உனக்குத் தெரிந்திருந்தால், சொல். பஞ்சண்ணா!'' என்று கூறினார்.

உடனே பஞ்சண்ணாராவ் நிரம்பவும் வியப்படைந்தவன் போல நடித்து, "அடாடா! இங்கே இருந்துபோன குட்டி யார் என்று நான் கவனித்துப் பார்க்கவில்லையே! அவள் இப்படிப்பட்ட ஆசாமி யென்பது தெரிந்திருந்தால் நான் இந்நேரம் அவளை நன்றாகப் பார்த்தும் இருப்பேன்; தங்களை மீறி அவள் போகும்படி விடாமல் தடுத்தும் இருப்பேனே! அடாடா! கொஞ்சத்தில் காரியம் கெட்டுப்போய் விட்டதே! இப்போதுதான் என்ன! கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது. அவள் யாரென்பதைத் தாங்கள் சொன்னால், நான் இந்த நிமிஷம் முதல் அதே வேலையாயிருந்து அவளைப்பற்றி என்னென்ன சங்கதிகள் தங்களுக்குத் தெரியவேண்டுமோ அவைகளை அறிந்துகொண்டு வந்து தங்களுக்குத் தெரிவிக்கிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட பாளையக்காரர் நிரம்பவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தவராய், "இவள் தெற்கு ராஜவீதியில் ஜெகன் மோகன விலாசம் என்ற மாளிகையில் ஜாகை வைத்துக் கொண்டிருக்கிறாள். இவளுடைய பெயர் பூர்ணசந்திரோதயமாம். இவள் தன்னை தார்வார் தேசத்து மகாராஜாவினுடைய அபிமான புத்திரி என்று சொல்லிக் கொள்ளுகிறாளாம். அழகில் இவளுக்கு நிகராகச் சொல்லக் கூடிய பெண்ணே இந்த ஊரில் இருக்கமாட்டாள் என்று எல்லா ஜனங்களும் அபிப்பிராயப் படுகிறார்கள். இவளுடைய முகத்தழகை ஏறிட்டு ஒரு தரம் பார்த்தால், இவளைப் படைத்த பிரம்ம தேவன் கூட மதிமயங்கி உணர்வு கலங்கி அப்படியே மோகித்து நின்று விடுவான் என்பது நிச்சயம். இவளிடத்தில் எவ்வளவு அபார மான வசீகரத்தன்மை நிறைந்திருக்கிறதோ, அதுபோல, அசாத்தியமான புத்தி நுட்பமும், வாக்கு வல்லமையும், இறுமாப்பும் பிரமாதமாக நிறைந்திருக்கின்றன. நான் இந்நேரம் நயமாகவும் பயமாகவும் எவ்வளவோ கெஞ்சி மன்றாடுகிறேன். இவள் என்னை அவ்வளவு அலட்சியமாக எடுத்தெறிந்து பேசிவிட்டாள்.அடாடா! நினைக்க நினைக்க என்

மனம் பதறுகிறது. நீ எனக்காக ஓர் உதவி செய். இப்போது முதல் நீ போய் இவளுடைய ஜாகைப் பக்கத்தில் எங்கேயாவது மறைவாக இருந்துகொண்டு, இவளுடைய நடவடிக்கைகளைக் கவனித்து இவளுக்குப் பக்கத்துணை யானவர்கள் யார் யார் என்பதையும், இவள் யாருக்காவது வைப்பாக இருக்கிறாளா என்பதையும், இன்னும் இவளைக் குறித்த எந்த விவரம் உனக்குத் தெரிந்தாலும் அதையும், நீ என்னிடம் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். நான் இன்னும் சில ஆள்களை அமர்த்தி இரண்டொரு காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. இவள் நயத்தில் வழிக்கு வருகிறவளாகத் தோன்றவில்லை. ஆகையால், நாம் நிரம்பவும் தந்திரமாகவும், எவருக்கும் தெரியாதபடியும் இவளை சூரக்கோட்டைக்குக் கொண்டு போய், என்னுடைய வளவில் ரகசியமான இடத்தில் வைத்து இவளுடைய கொட்டத்தை அடக்கி இவளைக் கொண்டு வந்துவிட வேண்டும். பிறகு, இவள் எனக்கு வைப்பாட்டியாக இருந்தவள் என்ற விஷயம் இந்த ஊர் முழுவதும் பரவிக் போகும்படி நம்முடைய ஆள்கள் செய்துவிடவேண்டும். இந்த இரண்டு காரியங்களும் என்னுடைய தூண்டுதலின் மேலே தான் நடந்தன என்பது எவருக்கும் தெரியக்கூடாது. அவ்வளவு தந்திரமாக நாம் காரியத்தை நடத்த வேண்டும். என்னுடைய ஆசையும் நிறைவேறி விடவேண்டும். அதற்குமேல் இவளை வேறே யாரும் மதிக்காதபடி இவளுடைய பெயரும் கெட்டுப்போகும்படி செய்யவேண்டும். இந்த விஷயத்தில் நீ எனக்கு உதவியாக இருந்து என்னுடைய எண்ணங்களை நிறைவேற்றி வைத்தால், நான் உனக்கு நல்ல வெகுமதி தருகிறேன். இப்போதே ஏதாவது பணம் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்'' என்றார்.

உடனே பஞ்சண்ணாராவ் குனிந்து கூழைக்கும்பிடு போட்டுப் பல்லைக் காட்டி, ''எஜமானுடைய பிரியப்படி நடந்துகொள்ள இந்த நாய்க்குட்டி எந்த நேரத்திலும் காத்திருக்கிறது. அதைப்பற்றி எஜமானுக்குக் கொஞ்சமும்

சந்தேகம் வேண்டாம்; இப்போதே நான் நேராக அந்த ஜெகன்மோகன விலாசத்துக்குப் போய்ப் பக்கத்தில் ஒளிந்திருந்து எல்லா ரகசியங்களையும் அறிந்து நாளைக்கு சாயுங்காலம் எஜமானுடைய ஜாகைக்கு வந்து எல்லா விஷயங்களையும் சொல்லுகிறேன். இதற்காக எஜமான் எனக்கு வெகுமதிகூடச் செய்யவேண்டுமா? அதெல்லாம் எதுவும் தேவையில்லை. எஜமானுடைய பூரணமான தயவு இந்த அடிமையின்மேல் இருந்தால், அதுவே போதுமானது. எனக்கு வேறே ஒன்றும் தேவையில்லை'' என்று கூறினான்.

பாளையக்காரர், ''சரி; நீ போய்க் காரியத்தைப் பார்; நாளைய தினம் சாயுங்காலம் தவறாமல் என்னுடைய ஜாகைக்கு வந்து சேர்; இப்போது நீ வெறுங்கையோடு போனால், உனக்கு வயிறில்லையா? இன்று ராத்திரி உனக்குப் பசியுண்டாகும் அல்லவா! நீ பட்டினியாக இருந்துகொண்டே என்னுடைய வேலையைச் செய்யும்படி சொல்வது தருமமாகுமா!இதோ என் கையில் இருக்கும் பணத்தையெல்லாம் தருகிறேன். வாங்கிக்கொண்டு போ'' என்று கூறித் தமது இடுப்பிலிருந்த ஐந்து ரூபாய் பணத்தை எடுத்து அவனிடம் நீட்டி வற்புறுத்த அவன் மனமில்லாதவன் போல நடித்து, அதை வாங்கிக் கொண்டு அவரிடம் விடைபெற்று அவ்விடத்தை விட்டுப் பூர்ண சந்திரோதயம் சென்ற வழியிலேயே நடந்து போய்விட்டான்.

மறுநாளாகிய வியாழக்கிழமை வந்து சேர்ந்தது. அன்றைய தினம் காலையில் எழுந்தது முதல் பூர்ணசந்திரோதயத்தின் இடது கண்ணும் இடது மார்பும் துடித்துக்கொண்டே இருந்தன. அடிக்கடி காக்கை அவளுக்கருகில் வந்து கத்திக்கொண்டே இருந்தது. அவளது திருஷ்டியில் அநேக சுபசகுனங்கள் தென்பட்டுக் கொண்டிருந்தன. இன்ன காரணத்தினால் என்பது தெரியாமல் அவளது உள்ளம் பூரித்துப் பொங்கி ஆனந்தமாக நிறைந்து நின்றது. அவளது அற்புதமேனி பசத்து, அடிக்கடி மயிர்க் கூச்சலடைந்து கட்டிலடங்காமல் துடித்து நொடிக்கு

நெரடி திடுக்கிட்டது. அவளது மனது நெகிழ்ந்து உருகிக் கொண்டே இருந்தமையால், கருவண்டுகளைப் பழித்த அவளது ஏந்தெழில் விழிகள் இரண்டும் தண்ணீரில் மிதக்கும் தெப்பங்கள் போல மிதந்து ஜ்வலித்தன. அவளது வயிறு ஆனந்த மயமாக நிறைந்திருந்தமையால், அன்று முழுதும் பசி தாகம் முதலிய எவ்வித தேகபாதையும் அந்தப் பூங்கொம்பை வருத்தியதாகவே தோன்றவில்லை. மற்ற நாட்களில் அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டதை எல்லாம்விட அன்றையதினம் பதினாயிரம் மடங்கு விசேஷமாக அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அவளிடத்திலிருந்த ஆடையாபரணங்கள் எல்லாவற்றிலும் மேலானவைகளையும் விலைமதிப்பற்றவைகளையும் தேர்ந்தெடுத்து அந்த மின்னாள் அன்றையதினம் அணிந்து கொண்டாள். ஆதலால், உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வெல் வெட்டும், பட்டும், ஜரிகையும், வைரங்களும், முத்துமாலை களுமே மயமாக நிறைந்து, கலியாணப் பந்தலில் உட்கார ஆயத்தமாக இருக்கும் யௌவன ராஜகுமாரி போல மகா ஜாஜ்வல்லியமான வனப்போடு ஒரே இன்பமயமாகவும் வசீகரமாகவும் காணப்பட்டாள். ரோஜா, ஜாதிமல்லிகை முதலிய புஷ்பங்கள் நிறைந்த அவளது கூந்தல், அழகாகப் பின்னப்பட்டு அவளது கணைக்கால் வரையில் தொங்கி அவளது பின்னழகைக் கண்கொள்ளா வசீகரக்காட்சியாகச் செய்தது. இயற்கை அழகும், செயற்கை அலங்காரமும் ஒன்றுகூடி அந்த மடமயிலைக் காண்போர் எப்படிப்பட்டவரானாலும் மட்டுக்கடங்கா வியப்பும் பிரமிப்பும் அடைந்து, ''ஆகா! இவள் தெய்வலோகத்திலிருந்து இப்போதே வந்து இறங்கிய அப்சர ஸ்திரீயோ!'' என்று மயங்கிக் கலங்கச் செய்தன.

என்றைக்கும் இல்லாத புதிய அலங்காரத்தோடு அன்றைய தினம் காணப்பட்ட பூர்ணசந்திரோதயம் தனது மனத்தில் எழுந்து பொங்கிய அமிர்த ஊற்றைத் தானே பருகி அபரிமிதமான முகக்களையும் ஜ்வலிப்பும் புதிய அழகும்

மேனியும் பெற்று, மகாவிஷ்ணுவின் மோகினி அவதாரம் போல் விளங்கினாள். அவளது மனதும் ஓயாமல் சலனம் அடைந்து கொண்டிருந்தமையால், அதற்கிணங்க அவளது ஏந்தெழில் மேனியும் இருக்கை கொள்ளாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவள் ஸோபாவில் உட்கார்ந்து பார்ப்பாள், நாற்காலியில் சாய்ந்து கொள்வாள், எழுந்து சிறிதுநேரம் உலாவுவாள், பிறகு தனது சப்பிரமஞ்சத்தில் சயனித்துக் கொள்வாள், உடனே திடுக்கிட்டு எழுந்திருந்து நிலைக் கண்ணாடிக்கு எதிரில் போய்நின்று தனது வடிவழகைத் தணிக்கைசெய்து ஒவ்வோர் அலங்காரத்தையும் சீர்திருத்திக் கொண்டு நிகரற்ற தனது சுந்தரத்தைக் கண்டு பூரித்துப் புளகிதமெய்தித் தனக்குத்தானே மோகித்து மதிமயங்கி பிரமித்து நிற்பாள். எங்கேயாவது காலடியோசை கேட்டால், அவள் திடுக்கிட்டுத் தன்னிடத்தில் யாராவது வேலைக்காரர் ஏதாகிலும் செய்தி சொல்ல வருகிறார்களோ என்று நினைத்து சுற்று முற்றும் பார்ப்பாள். ராஜபாட்டையில் தடதடவென்று ஏதாவது வண்டி வந்த ஓசை உண்டானால், அவள் மான்போல மருண்டு நிமிர்ந்து நின்று ஓசை உண்டான பக்கத்தில் தனது பார்வையைச் செலுத்தி, அந்த வண்டி நெடுந்தூரம் போய் மறைந்துபோகிற வரையில் அப்படியே நின்று பிறகு உட்கார்ந்து கொள்ளுவாள். அவள் அடிக்கடி கிளிக் கூண்டுகளின் பக்கமாக நடந்தபோதெல்லாம் அவைகளுக்குள் இருந்த பஞ்சவர்ணக் கிளிகள் முதலிய அவளது பிராண சிநேகிதர்கள் அவளது புதுமையான தோற்றத்தைக் கண்டு ஆதங்கம் கொண்டு ஆடிப் பாடிக் கொஞ்சிக் குலாவி அவளிடத்தில் வந்துவிட வேண்டும் என்று துடிதுடித்து அரும்பாடுபட்டுக் கம்பிகளில் முட்டி மோதிக் கொள்ளும். ஆனால், அந்த இளந்தோகையின் மனம் அன்றைய தினம் அவைகளின்மீது நாடவில்லை. ஆகையால், அவள் அவைகளை அவ்வளவாக இலட்சியம் செய்யாமலே அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தாள். அவள் சென்ற இடத்திலிருந்த கொடிகளில் மலர்ந்து அவளைக்

கண்டு நகைத்து ஆனந்தத் தாண்டவம் ஆடிய சம்பங்கி, ரோஜா, ஜாதிமல்லிகை முதலிய நறுமலர்களெல்லாம் அவளது மிருதுவான கரங்களால் தீண்டப்படும் பாக்கியம் பெறாமையால் குழைந்து வாடித் தத்தளிப்பன போலக் காற்றில் அசைந்துக் கொண்டிருந்தன.

அப்படிப்பட்ட நிலைமையில், அந்த மடவன்னம் சலனமடைந்து தளர்வுற்று மஞ்சத்தில் சயனித்திருக்க, பிற்பகல் ஐந்துமணி சமயமாயிற்று. அவளுக்கு எதிரில் ஒரு வேலைக்காரி வந்து பணிவாக நின்று, ''அம்மணீ! வாசலில் ஒரு பெட்டிவண்டி வந்து நிற்கிறது. இந்த ஊர் மகாராஜாவுக்குச் சொந்தமான ஓர் அம்மாள் அந்த வண்டிக்குள் வந்திருக்கிறார்களாம். அவர்களுடைய சொந்த ஊர் தார்வார் தேசமாம். தாங்கள் தார்வார் தேசத்து மகாராஜாவின் அபிமான புத்திரி என்ற சங்கதியை அவர்கள் கேள்வியுற்றார்களாம்; அதுமுதல் தங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையாம் ; அதற்காக வந்திருக்கிறார்களாம்; உள்ளே சமயம் சரியா யிருக்கிறதா வென்று பார்த்துவிட்டு வரச்சொல்வதாக, அந்த அம்மாளுடைய தாதி சொன்னாள். அவளை வாசலிலேயே இருக்கச் சொல்லிவிட்டு நான் உள்ளே ஓடிவந்தேன்'' என்றாள்.

அவள் சொன்ன செய்தியைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் திடுக்கிட்டு எழுந்தாள். அவளது முகம் முற்றிலும் மாறுபட்டது. நான் ஒரு மனிதரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்க, முகமறியாத யாரோ ஒரு ஸ்திரீ தன்னைக் காண வந்திருப்பதைக் கேட்டு, அவள் கரைகடந்த வியப்பும் சஞ்சலமும் அடைந்தவளாய், தான் என்ன மறுமொழி சொல்வது என்பதை அறியாமல் இரண்டொரு நிமஷநேரம் தத்தளித்தாள். அந்த ஊர் மகாராஜாவுக்குச் சொந்தமான அந்தப் பெரிய இடத்துப்பெண் பிள்ளை தன்னை அவர்களது இருப்பிடத்திற்கு வரவழைக்கக் கூடிய அதிகாரமும் செல்வாக்கும் படைத்திருந்தும், தன்னை ஒரு பொருட்டாக

மதித்துத் தனது மாளிகைக்கே வந்திருக்கையில், தான் அவர்களது வேண்டுகோளை மறுப்பது மரியாதை ஆகாதென நினைத்தவளாய், அந்தப் பெண்பாவை தனது வேலைக்காரியை நோக்கி, "சரி; அவர்கள் பெரிய இடத்திலிருந்து வந்திருக்கிறார்கள். நீயும் கூட இருந்து தக்கபடி அவர்களை உபசரித்து மரியாதையாக அழைத்துக் கொண்டுவா!" என்று கூறி அவளை வெளியில் அனுப்பிவிட்டு, தனது ஆடையாபரணங்களை யெல்லாம் சீர்திருத்திக்கொண்டு நிலைக் கண்ணாடிக்கு எதிரில் போய் நின்று தனது தோற்றம் கம்பீரமாக இருக்கிறதா என்று பார்த்துத் திருப்தி அடைந்தவளாய், வாசல்படியண்டை போய் அந்தச் சீமாட்டியை எதிர் கொள்வதற்கு ஆயத்தமாக நின்று கொண்டிருந்தாள். அவளது மனதில் பலவகையான அச்சமும் கவலையும் சஞ்சலமும் எழுந்து புண்படுத்தினவானாலும், அதனால் தனது முகத்தில் ஏற்பட்ட சலனக் குறிகளை யெல்லாம் மறைத்து, தான் மிகுந்த குதூகலமும் ஆனந்தமும் பெருமைப்பாடும் அடைந்தவள் போலக் காட்டி அப்போதே மலர்ந்த தாமரைப் புஷ்பம்போலத் தனது முகார விந்தத்தில் புன்னகை உண்டாக்கிக் கொண்டு நின்றாள். தான் அந்தப் பெருமாட்டியினிடத்தில் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், தான் அதற்குமுன் எதிர்பார்த்திருந்த மனிதர் வந்து, தன்னோடு பேச சந்தர்ப்பம் சரியாக இல்லையென்று நினைத்து, ஏமாற்ற மடைந்து திரும்பிப்போய் விடுவாரோ என்ற நினைவினால் அவளது மனமும் தேகமும் பதறிக்கொண்டிருந்தன. அப்போது வரப்போகும் சீமாட்டி தார்வார் தேசத்தின் விவரங்களைப் பற்றி ஏதேனும் பேச ஆரம்பித்தால், தான் என்ன மறுமொழி சொல்லி, எப்படித் தப்புகிறது என்ற கவலையே பெருத்த கவலையாக எழுந்து அந்த அணங்கை வதைத்துக் கொண்டிருந்தது.

அவ்வாறு அந்த மடந்தை எண்ணமிட்டிருந்த காலத்தில், "இப்படி வாருங்கள்; இதோ இருக்கிறார்கள்" என்று

கூறியவண்ணம் இரண்டு தாதிகள் முன்னேவர, அவர்களைத் தொடர்ந்து ஒரு வடிவம் வந்தது. மகாராஜாவின் பட்டமகிஷிகளான பாய்ஸாகேப்புகளும், அவரது உறவினர்களும் கோஷா முறையை அனுஷ்டிக்கிறவர்கள். ஆகையால், அவர்கள் எங்கேயாகிலும் சென்றால், வேலைக்காரிகள் இரண்டு பெரிய துப்பட்டிகளைத் திரையாகப் பிடித்து மறைத்தபடியே அவர்களை வண்டியிலிருந்து வீட்டிற்குள்ளும், வீட்டிற்குள்ளிருந்து வண்டிக்கும் அழைத்துப் போவது வழக்கம். அதுபோல, மற்ற சாதாரணமான மகாராஷ்டிர ஸ்திரீகள் கூட வீட்டை விட்டு வெளியில் வருவதானால் துப்பட்டியால் தங்களை உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் மறைத்துக் கொண்டு வருவது வழக்கம். யாராவது புருஷர் தங்களுக்கு எதிரில் வந்தால், அவர்கள் தங்களது முகத்தைத் துப்பட்டியால் நன்றாக மூடிக்கொண்டு வேறே பக்கமாகத் திரும்பியபடி நடந்து போவது வழக்கம். சில ஸ்திரீகள் சீட்டித் துணியால் ஓர் அங்கி தைத்து அதைப் போட்டுத் தங்களை மறைத்துக் கொள்வர். அந்த அங்கி முகம் முதலிய சகலமான அங்கங்களையும் சுத்தமாக மறைத்துக்கொள்ளும். ஆனால், பார்ப்பதற்கு மாத்திரம் கண்களிற்கு எதிரில் இரண்டு சிறிய துளைகள் விடப் பட்டிருப்பது வழக்கம். அந்தத் துளைகளின் வழியாக அவர்கள் வெளியிலுள்ள பொருள்களையும் மனிதர்களையும் நன்றாகப் பார்ப்பார்கள். மற்றவர்களுக்கு அந்த ஸ்திரீகளது பிரகாசமான கண்களும் பாதங்களுமே தெரியுமன்றி மற்ற எந்த அங்கமும் தெரிவதில்லை.

அதுபோலவே பூர்ணசந்திரோதயத்தைப் பார்ப்பதற்காக அரண்மனையிலிருந்து வந்த பெருமாட்டி ஓர் அங்கியால் தனது உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மூடிக்கொண்டு தாதிகளுக்குப் பின்னால் வந்து சேர்ந்தாள். அந்த அங்கி ஜரிகைப் புட்டாக்கள் நிறைந்த பனாரீஸ் பட்டினால் தைக்கப்பட்டிருந்தது. அன்றி கண்களுக்காக விடப்பட்டிருந்த துளைகளைச் சுற்றிலும் அதன் அடிப்பக்கத்தின் கரைகளிலும்

ஜரிகை வேலைப்பாடுகளும், நவரத்னமணிகளும் நிறைந்திருந்தன. விலை உயர்ந்த பகட்டான அந்த அங்கிக்குள் மறைந்திருந்த ஸ்திரீ நன்றாகத் தடித்து உயர்ந்து செழுமையும் தளிர்ப்பையும் கொண்டிருந்தாள். அவளைக் கண்டவுடனேயே மற்ற எல்லோரும் ஒருவித பயபக்தியும் மரியாதையும் பணிவும் காட்டும்படி, அது அவ்வளவு கம்பீரமாகக் காணப்பட்டது. ஆனால், அந்த அங்கிக்குள் மறைந்துவந்த சீமாட்டி அம்மாளது நடை தளர் நடையாகவும் பிடியானையின் நடைபோலவும் இருந்தது.

அவ்வாறு வந்த பெருமாட்டியைக் கண்ட பூர்ணசந்திரோதயம் திடுக்கிட்டு அவள் மகாராஜாவின் நெருங்கிய உறவினளாக இருக்கவேண்டும் என்று யூகித்துக் கொண்டு, அப்படிப்பட்ட பெரிய இடத்து ஸ்திரீதன்னை ஒரு பொருட்டாக மதித்து அவ்வளவுதூரம் வந்ததைக் குறித்து மிகுந்த வியப்பும், கரைகடந்த களிப்பும் கொண்டவளாய், மிகவும் பணிவாகவும் அந்தரங்க அன்போடும் பேசத்தொடங்கி, ''வரவேண்டும் வரவேண்டும்'' என்று உபசரித்து அவளை வரவேற்க, அந்தப் பெருமாட்டி தனது தலையசைப்பால் அவளது மரியாதையை ஏற்றுக்கொண்டு, ''வருகிறேன்'' என்று மிருதுவாக மறுமொழி கூறியவளாய் உள்ளே நுழைந்தாள். தாதிகள் இருவரும் வெளியிலேயே நின்றுவிட்டதன்றி, அந்தப் பெருமாட்டி தனது அங்கியை ஒருகால் விலக்க நேரும் என்றும், அப்போது வேறே மனிதர் யாராவது வெளியிலிருந்து உள்ளே பார்த்தால், அவளது நிஜவடிவம் பிறரது திருஷ்டியில் படும் என்று நினைத்து முன் ஜாக்கிரதையாக வெளிக்கதவை மூடி வைப்பது வழக்கம். அந்த ஏற்பாட்டின்படி மேற்படி தாதிகள் மேன்மாடக் கதவை மூடிக்கொண்டு வெளிப்பக்கத்திலிருந்த தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டனர். உட்புறத்தில் பூர்ணசந்திரோதயம் அங்கியால் மூடிக்கொண்டு வந்திருந்த பெருமாட்டியைப் பணிவாகவும் மரியாதையாகவும் நடத்தி அழைத்துக் கொண்டுபோய் மகமல்மெத்தை தைக்கப்பட்டு மிகவும்

உன்னதமாக அமைக்கப்பட்டிருந்த ஒரு பெருத்த சாய்மான நாற்காலியைக் காட்டி அதன்மேல் உட்கார்ந்து கொள்ளும்படி உபசரிக்க, அந்தப் பெருமாட்டி, ''நீங்களும் உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்று நயமாகக் கூற, அவள் சிறிது தயங்கி ஒரு ஸோபாவின் மேல் உட்கார்ந்து கொண்டாள். அரண்மனையிலிருந்து வந்த பெருமாட்டி பூர்ணசந்திரோதயத்தால் காட்டப்பட்ட உன்னத ஆசனத்தில் அமர்ந்தாள். அப்படி அமர்ந்தவள் தனக்கு எதிரில் மிகவும் சமீபமாக உட்கார்ந்திருந்த பூர்ணசந்திரோதயத்தின் கட்டழகையும் அற்புத ஜோதியையும் கண்டு கரைகடந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்து அவளை உற்று நோக்கி, அவளது உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள ஒவ்வோர் அங்கத்தின் அற்புத சிருஷ்டியையும் கண்கொள்ளா அழகையும் ஏற இறங்கப்பார்த்து அப்படியே ஸ்தம்பித்து சிறிது நேரம் பேசாமல் மௌனம் சாதித்தாள். அவள் தனது வடிவத்தை மறைத்திருந்த அங்கியை விலக்கினால், அவள் எப்படிப்பட்ட அபூர்வமான அழகோடிருக்கிறாள் என்பதைத் தான் பார்க்கலாம் என்றும், அதன்பிறகு எப்போதாவது அவளது அடையாளத்தைத் தான் கண்டுகொள்ள அது அநுகூலமாக இருக்கும் என்றும் நினைத்து அவளது முகத்தைப் பார்க்க நிரம்பவும் ஆவல் கொண்டவளாக இருந்த பூர்ணசந்திரோதயம் நயமாக அவளோடு சம்பாஷிக்கத் தொடங்கி, ''என்னுடைய ஆயுட்காலத்தில் இன்றையதினந்தான் நல்ல சுபதினமென்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட பெரிய இடத்து பாயிஸாயேப்புகளுடைய தரிசனம், என்னைப்போன்ற சாதாரண ஜனங்கள் தலைகீழாக நின்று தவம் செய்தாலும் கிடைக்கக் கூடியதல்ல. ஏதோ நான் செய்த பூர்வ ஜென்ம புண்ணியத்தின் பலனே இன்றையதினம் பலிதமாகிறது போலிருக்கிறது'' என்று பீடிகை போட்டுப்பேசத் தொடங்கினாள்.

அதைக் கேட்ட அந்தப் பெருமாட்டி மிகவும் நயமான குரலில் பேசத் தொடங்கி, ''அம்மா! நான் வந்து உட்கார்ந்து உங்களை கிட்டத்தில் நெருங்கிப் பார்த்தவுடனே பரஸ்பரம் நானும்

அதேமாதிரி நினைத்து நீங்கள் சொன்ன வார்த்தைகளையே சொல்ல நினைத்தேன். அதற்குள் நீங்கள் முந்திக்கொண்டீர்கள். ஆனால், நீங்கள்சொன்ன விஷயங்களில் ஒன்றை மாத்திரம் நான் ஒப்புக்கொள்ள முடியாது. எங்களைப் போன்ற பெரிய இடத்து பாஸிஸாயேப்புகளுடைய தரிசனம் உங்களைப் போன்ற சாதாரண ஜனங்களுக்குக் கிடைப்பது அரிதென்று நீங்கள் நினைப்பது சரியல்ல. உங்களுடைய சிலாக்கியமான அழகையும், அமைப்பையும், புத்தி விசேஷத்தையும், குண மேம்பாட்டையும், நடத்தை அழகையும் பார்த்தால், இந்த உலகத்தை எல்லாம் ஏக சக்கராதிபதியாக ஆளும் மண்டலேசுவரனும் வணங்கி வழிபடத் தகுந்த அவனுடைய பட்டத்துராணி உங்களுடைய காலில் ஒட்டிய ஒரு தூசிக்கும் இணையாக மாட்டாள் என்று நான் துணிந்து சொல்லுவேன். மகாராஜனுடைய பெண் பிள்ளைகள் அரண்மனையின் ஏழாவது உப்பரிக்கையில் இருக்கலாம்; கோடி சூரியப் பிரகாசமான ஆடையாபரணங்களை வாரி உடம்பு முழுதும் நிறைத்துக் கொண்டிருக்கலாம்; பனாரீஸ் பட்டுகளால் ஆன அங்கிகளால் தங்களை மறைத்துக்கொண்டு பிறர் தங்களைப் பார்க்காமல் தங்களுடைய உடம்பை ஒளித்துக்கொண்டிருக்கலாம். அதனாலேயே அவர்கள் எல்லோரும் கட்டழகும், குணத்தழகும், மற்ற உத்தம லக்ஷணங்களும் பொருந்தியவர்கள் என்றும், மற்ற மனிதர்களைவிட மேம்பட்டவர்கள் என்றும் நாம் நினைத்து விடலாமா? அப்படி நினைப்பது சரியல்ல. உலகத்தில் வெறுங்கையை ஒருவன் மூடி வைத்துக் கொண்டிருந்தாலும், அதற்குள் ஏதோ அருமையான வஸ்து இருப்பதாக நினைத்து, அது என்ன என்பதை அறிய ஆவலும் ஆசையும் கொள்வது உலக இயற்கை. அதுபோலவே, பூடகமாக மறைத்து வைக்கப்பட்டிருக்கிற எந்த வஸ்து விடத்திலும் மனிதருக்குப் பிரேமையும், வேட்கையும் அதிகம். அதுபோல நாங்கள் எங்களுடைய உடம்பை வெளியில் காட்டாமல் அங்கியாலும், துப்பட்டியாலும் மறைத்து

இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. அப்படி இருந்தாலும் நான் என்னுடைய தாயாரிடத்தில் வைத்திருக்கும் அபாரமான வாஞ்சையானது!, என்னைத் தூண்டியதாகையால், நான் இங்கே வந்தேன். அந்த ஊரிலிருந்து யார் வந்தாலும் அவர்களைப் பார்ப்பது என்னுடைய தாயாரைப் பார்ப்பதுபோல, அவ்வளவு பிரமாதமான ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறது. முக்கியமாக அதைக் கருதியே நான் இப்போது இங்கே வந்தது'' என்று நயமாக மொழிந்தாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகுந்த லஜ்ஜையும் கலக்கமும் சஞ்சலமும் அடைந்தவளாய் அதற்குத் தான் என்ன மறுமொழி சொல்வதென்பதை அறியாமல் சிறிது நேரம் தத்தளித்தவளாய், அந்தப் பெருமாட்டியை நோக்கி, ''அம்மணீ! ராஜஸ்திரீகள் என்றால், அவர்கள் லட்சணமாக இருந்தாலும், அவலட்சணமாக இருந்தாலும், அவர்களை மகாலட்சுமிக்குச் சமானமாக மதித்து மற்ற ஜனங்கள் வழிபட வேண்டுமென்று நம்முடைய பெரியயோரும் சொல்லுவார்கள்; சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவாம். அப்படி இருக்க, தாங்கள் அவர்களை இறக்கியும் என்னை அபாரமாகப் புகழ்ந்தும் பேசுவதைக் கேட்பது எனக்கு நிரம்பவும் லஜ்ஜையாக இருக்கிறது. யானை கறுப்பாக இருந்தாலும் அதன் விலை ஆயிரம் பொன் என்று சொல்லுவார்கள். அதுபோல, ராஜ வம்சத்தில் பிறப்பவர்கள் அழகாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு எப்போதும் பூஜிதையுண்டு. ஒரு ராஜனைக் கலியாணம் செய்து கொள்வதற்கும் அவர்களுக்கு யோக்கியதையுண்டு. ராஜ வம்சத்தைச் சேராத சாதாரண ஜனங்களுடைய வயிற்றில் பிறந்த ஒரு பெண் கந்தருவ ஸ்திரீ போலவும் ரதிதேவி போலவும் இருந்து சகலமான மேம்பாடுகளும் உத்தம லட்சணங்களும் பெற்றிருந்தாலும் அவளுக்கு அப்படிப்பட்ட பூஜிதையும் உண்டாகாது. ஒரு மகாராஜனைக் கல்யாணம் செய்துகொள்ளத் தகுந்த யோக்கியதையும் உண்டாகாது'' என்றாள்.

அந்தப் பெருமாட்டி மகிழ்ச்சியும் புன்னகையும் மடைந்தவளாய், "நீங்கள் சொல்வது நிஜந்தான். ஆனால், அதில் ஒரு விஷயம் இருக்கிறது. ராஜவம்சத்தில் பிறந்த பெண் ஒரு மகாராஜனைக் கலியாணம் செய்துகொள்வது சுலபந்தான்; அதோடு அவளுக்கு மற்ற ஜனங்களுடைய பூஜிதையும் ஏற்படுமென்று நிச்சயம். ஆனால், அதனாலேயே அவளுக்கு உண்மையான ஆனந்தமும், மனத்திருப்தியாகிய நிகரற்ற செல்வமும் ஏற்பட்டுவிடுமா? ஒரு மகாராஜன் தான் கலியாணம் செய்துகொள்ளும் எல்லாப் பட்டமகிஷிகளிடத்திலும் நீடித்த பிரியம் வைக்கிறது சந்தேகமே; அவளிடத்தில் அபாரமான அழகும் சகலமான உத்தம லட்சணங்களும் இருந்தால்தான் அந்த ராஜனுக்கு அவளிடத்தில் வேரூன்றிய உண்மைக் காதலும் பிரேமையும் மன உறுதியும் ஏற்படுமேயன்றி, அவள் குரூபியாகவோ, குணக்கேடியாகவோ இருந்தால் அவன் அவளை ஒரு மூலையில் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தன் மனசுக்கு உகந்த லட்சணங்கள் வாய்ந்த ஸ்திரீயை நாடிச் செல்கிறான். ஆனால் அவளுக்கு ஆடையாபரணங்கள், சுகபோஜனம் முதலிய சகலமான சம்பத்தும் சௌகரியமும் ஏராளமாகக் கிடைக்குமென்ற ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயந்தான்; அது மாத்திரம் போதுமா? பெண்களுக்கு மற்ற எல்லா சம்பத்தைக் காட்டிலும், புருஷனுடைய அந்தரங்கமான வாஞ்சை, பிரேமை ஆகிய இரண்டுமே நிகரற்ற பாக்கியங்கள். அது இருந்தால் மாத்திரம் ஸ்திரீகள் ஆனந்தமாகவும் மனத் திருப்தியோடும் சந்தோஷமாக இருக்கலாமேயன்றி, புருஷன் நீங்கலாக மற்ற செல்வங்கள் எவ்வளவு நிரம்பி இருந்தாலும், அது உண்மையான வாழ்க்கையாகாது. ஆகையால், ராஜகுலத்தில் பிறந்து ராஜனுக்குப் பட்டமகிஷியாக இருந்து, அவனுடைய உண்மையான காதலுக்குப் பாத்திரப் படாமல் இரவு பகல் அழுது வயிறெரிந்துகொண்டு மூலையில் படுத்துக் கொண்டிருப்பதைவிட கேவலம் ஒருதாசி வயிற்றில் பிறந்து மகாராஜனுக்கு ஆசை நாயகியாக இருந்து, சதாகாலமும் அந்த

ராஜனுடைய இருதய கமலத்திலிருந்து, அவனுடைய பிரேமை யாகிய நிகரற்ற பெருஞ் செல்வத்தை ஓயாமல் அனுபவித்துக் கொண்டிருப்பது பதினாயிர மடங்கு சிரேஷ்டமானது என்று நான் எண்ணுகிறேன். நான் முக்கியமாகச் சொல்ல வந்ததென்ன வென்றால், அழகும் குணமும் நிறைந்த ஸ்திரீகள் எங்கே பிறந்தாலும், மதிப்பும் பூஜிதையும் சந்தோஷ வாழ்க்கையும் சகலமான செல்வங்களும், அவர்களுக்கு வந்து வாய்க்கலாம். ஒரு மகாராஜன் கூட அவளை வணங்கும்படியான பாக்கியம் கிடைக்கலாம். ஆனால், அந்த மகாராஜன் அவளை சாஸ்திரப்படி கலியாணம் செய்துகொள்ளக் கூடாமல் இருக்கலாம். அப்படி இருந்தாலும் பரவாயில்லை. கலியாணத்தில் என்ன இருக்கிறது? அது வெளிப்படையான ஒரு சடங்கேயன்றி அதனால், உண்மையான காதலும் மன ஒற்றுமையும் கட்டாயம் ஏற்படத் தான் வேண்டுமென்று சொல்லமுடியாது. ஒரு பெண்ணின் மேம்பாடுகளைக் கண்டு ஒரு புருஷன் அவளிடத்தில் காதல் கொண்டு பரஸ்பரம் மன ஒற்றுமை அடைந்து, சுகித்திருப்பது ஒரு பழம் தானாகவே கனிவது போன்றது. பிறர் பார்த்துக் கலியாணம் செய்து வைத்ததன் மேல் ஸ்திரீயும் புருஷனும் வாழ்ந்திருப்பது புகை போட்டு ஒரு காயைப் பலவந்தமாகக் கனிய வைப்பது போன்றது. அது பழுத்தாலும் பழுக்கலாம், வெம்பிப்போனா லும் போகலாம்; அப்படிப் பழுத்தாலும் தானாகக் கனிந்த பழத்தின் சுவை அதிலிருக்காது'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம் மிகுந்த லஜ்ஜை அடைந்தாள் ஆனாலும், தனது இயற்கை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கைவிடாதவளாய் இனிமையாகப் புன்னகை செய்து, ''ஏதேது! தாங்கள் பேசுவதைப் பார்த்தால், இனி உலகத்தில் கலியாணமே உதவாதென்றும், ஸ்திரீ புருஷர்கள் தங்கள் தங்கள் மனசுக்கு உகந்தவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே சிலாக்கியம் என்றும் சொல்லுவீர்கள் போலிருக்கிறதே! ஆனால், தாங்கள் சொல்வதும் ஒருவிதத்தில் உண்மையாகத்தான் இருக்கிறது.

மகாராணியென்று பெயர் வைத்துக்கொண்டு மற்ற சகலமான செல்வங்களையும் படைத்திருந்தும், புருஷனுடைய உண்மைக் காதலை மாத்திரம் அடையாது இருந்தால், அதைப்போல துர்ப்பாக்கியமான நிலைமை வேறொன்றும் இல்லை என்பது வாஸ்தவமான சங்கதிதான். அப்படி இருந்தாலும், ராஜ வம்சத்து ஸ்திரீகளும் எங்களைப் போன்ற சாதாரண ஸ்திரீகளுக்கும் ஒரு விஷயத்தில் வித்தியாசம் இருக்கிறது. புருஷனுடைய உண்மைக்காதல் இல்லாவிட்டாலும், சகலமான சம்பத்தும் மற்ற ஜனங்களுடைய பூஜிதையுமாவது ராஜஸ்திரீகளுக்கு அவசியம் இருக்கும். எங்களைப் போன்ற சாதாரண ஸ்திரீகளுக்குப் புருஷனுடைய உண்மைக் காதல் இல்லாவிட்டால், மற்ற எல்லாச் செல்வமும், சூன்யமாகி விடுகிறதல்லவா! முக்கியமான அந்த ஒரு விஷயத்திலாவது நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் தானே'' என்றாள்.

அதைக்கேட்ட பெருமாட்டி கலகலவென்று நகைத்து, ''ஆம்; அது உண்டுதான். அதிருக்கட்டும்; நீங்கள் தார்வார் தேசத்து ராஜாவின் அபிமான புத்திரியென்று ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்களே. அப்படியானால் நீங்களும் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தானே, அப்படி இருக்க நீங்கள் உங்களை சாதாரண ஜனங்களோடு சேர்த்துப் பேசுகிறீர்களே!'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம் முன்னிலும் அதிக இனிமையாகப் பேசத் தொடங்கி, ''அம்மணீ! நான் தார்வார் தேசத்து மகாராஜனுடைய அபிமான புத்திரியென்று நான் யாரிடத்திலும் சொன்னதே இல்லை. நான் சாதாரணமான ஒரு பெரிய மனிதருடைய குடும்பத்தைச் சேர்ந்தவளே யன்றி வேறல்ல. பொய்யான அந்தச் சங்கதியை யார் வெளியிட்டு இவ்வளவு தூரம் பரவச் செய்தார்கள் என்பது தெரியவில்லை. இதுவரையில் பலர் இந்த மாதிரியே என்னிடம் கேட்டுவிட்டார்கள். அந்தப் பிரஸ்தாபத்தைக் கேட்கும்போதே என்னுடைய உடம்பு

கூசுகிறது. தாங்களும் இப்போது வந்தவுடனே முதலில் அதையே சொன்னீர்கள். ஆனால், இந்தப் பொய் இவ்வளவு தூரம் பரவியதனாலேதான் தாங்கள் என்னை ஒரு பொருட்டாக மதித்து இவ்வளவு தூரம் வந்தீர்கள். இல்லாவிட்டால், தாங்கள் என்னை நினைத்துக்கூட இருக்க மாட்டீர்கள். இன்று எனக்குக் கிடைத்த இந்த பாக்கியத்திலிருந்தே ராஜஸ்திரீயாக இருப்பதனால் ஏற்படும் மேம்பாடு எவ்வளவு என்பது நன்றாகத் தெரியவில்லையா'' என்றாள்.

அதைக் கேட்ட அந்தப்பெருமாட்டி வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் பேசத் தொடங்கி, ''வெகுஜனவாக்கு வேத வாக்குக்குச் சமமல்லவா! உங்களைப் பார்த்தவுடனே நீங்கள் ராஜஸ்திரீயாக இருப்பதற்குத் தகுந்த சகலமான லட்சணங்களும் உங்களிடத்தில் இருப்பதைக் கண்டு பொது ஜனங்கள் உங்களை உண்மையிலேயே அப்படி ஆக்கிவிட்டார்கள். அவர்களால் கொடுக்கப்படும் மேம்பாட்டை நீங்கள், வகித்துக் கொள்ள வேண்டுமேயன்றி, அதை விலக்குவது சரியல்ல. நீங்கள் இதுவரையில் ராஜஸ்திரீகளைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசியதிலிருந்து உங்களுக்கும் ராஜஸ்திரீ ஆக வேண்டுமென்ற ஓர் அவா இருப்பதும் தெரிகிறது'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம் மகிழ்ச்சியாக நகைத்து, ''பிறப்பிலேயே ராஜவம்சத்தில் பிறந்து ராஜஸ்திரீ ஆகிறதா? அல்லது ஒருவர் பார்த்து ராஜஸ்திரீயாகச் செய்கிறதா?'' என்றாள்.

பெருமாட்டி, ''ஏன்! இரண்டு வகையிலும் ஆகலாம். இயற்கையிலேயே ராஜகுடும்பத்தில் பிறந்தும் ராஜஸ்திரீ ஆகலாம். சேர்க்கையினாலும் ராஜஸ்திரீ யாகலாம். ராஜஸ்திரீ என்றால் அர்த்தமென்ன? ராஜனுக்குப் பிரியமான ஸ்திரீ என்பதுதானே. அபூர்வமான அழகும், மற்ற சகலமான லட்சணங் களும் நிறைந்து மனமும் இருந்தால், ராஜனுக்குப் பிரியமான ஸ்திரீ ஆக எவ்வளவு நேரம் பிடிக்கும். ஆனால், உனக்கு அந்த விஷயத்தில் மனம் இருக்கிறதோ என்பதுதான் வெளிப்படை யாகத் தெரியவில்லை'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம் குதூகலமாக நகைத்து, "சரி சரி; நம்முடைய சம்பாஷணை எதிலேயோ ஆரம்பித்து எதிலேயோ போய் முடிந்தது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால், எனக்குப் பிரியமிருக்கும் பக்ஷத்தில் என்னை உடனே ராஜஸ்திரீ ஆக்கி விடுவீர்கள் போல இருக்கிறது. தங்களுக்குப் புத்திரரோ, அல்லது தம்பியோ இருந்து அவர் எந்த தேசத்திலாவது மகாராஜாவாக இருந்தால், தாங்கள் உடனே என்னைப் பற்றி அவரிடம் சிபாரிசு செய்து என்னை ராஜஸ்திரீ ஆக்கிவிடுவார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால், எனக்கு மாத்திரம் விருப்பம் இருந்தால் அது போதுமா? அவருக்கும் பரஸ்பரம் என் மேல் விருப்பம் இருக்க வேண்டாமா? அவர் என்னிடத்தில் உண்மையான காதலும் பிரேமையும் செய்து கொள்ளா விட்டாலும் என்னையே அவர் பட்ட மகிஷியாக மதித்து, ராஜாங்க விஷயத்தில் என்னுடைய இஷ்டத்தையும் கலந்து எல்லா விஷயங்களையும் நடத்த வேண்டும். இத்தனை விஷயங்களும் ஒத்துக்கொள்வதாக இருந்தால், தாங்கள் கருதுகிறபடி நான் ராஜஸ்திரீ ஆக இணங்கலாம். அது இந்த ஜென்மத்தில் நிறைவேறக்கூடிய காரியமல்ல" என்றாள்.

பெருமாட்டி சந்தோஷத்தோடு நகைத்து, "ஏன் அம்மா! அது இந்த ஜென்மத்தில் நிறைவேறாது என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் இப்போது சொன்ன நிபந்தனைகளின்மேல், இதே தேசத்து மகாராஜா உங்களை ராஜஸ்திரீயாகச் செய்துகொள்ள நானே ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்குச் சம்மதமானால், சொல்லுங்கள். இன்றைய தினமே முடித்து வைக்கிறேன். கரும்பு தின்ன யாராவது கூலி கேட்பார்களா? ஒரு மகாராஜனுடைய பட்டமகிஷி ஆவதற்கு உங்களைவிட அதிக மேம்பாடுடைய ஸ்திரீ இந்த உலகத்தில் இருக்கப்போகிறாளா என்பதே சந்தேகம். உங்களை அடையும்படியான பாக்கியம் சாதாரணமாக எல்லோருக்கும் வாய்க்கக்கூடியதல்ல. இந்த ஊர் மகாராஜனானாலும் இதைவிடப் பெரிய ராஜ்யத்தின்

சக்கரவர்த்தியானாலும், அல்லது, உங்களைப் படைத்த அந்த பிரம்ம தேவனானாலும், உங்களிடம் நெருங்கி ஒரு நொடி நேரம் பழகி உங்களுடைய குணாதிசயங்களை அறிவார்களானால், உங்களை அடைவதற்கு அவர்கள் எவ்வளவு கொடிய தவம் செய்யவும் இணங்குவதன்றி, அவர்களுடைய உடல், பொருள், ஆவி முதலிய எல்லாவற்றையும் கொடுத்துவிடவும் முந்துவர். உங்களிடத்திலுள்ள அபாரமான மகிமையும் யோக்கியதையும் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியாமல் இருப்பதால், நான் சொல்வது எல்லாம் உங்களுக்கு ஆச்சரியகரமாகவும் நம்பத் தகாததாகவும் இருக்கலாம். நான் பலபல பேசுவதைவிட ஒரே வார்த்தையில் உங்களுடைய சிறப்பு எவ்வளவு என்பதைச் சொல்லிவிடுகிறேன். இந்த உலகத்திலுள்ள மற்ற சாதாரண மனிதருள் எப்பேர்ப்பட்டவரும் உங்களைக் கையால் தொடுவதற்குக்கூட அருகமற்றவர்கள். நீங்கள் ஒரு தேசத்து மகாராஜனுடைய ஆசைநாயகியாக இருந்து, எல்லோருக்கும் தலைமை வகிக்கவே அருகமானவர்கள். ஆகையால், நீங்கள் லஜ்ஜைப்படாமல் உங்களுடைய மனசைவிட்டு என்னிடம் பேசுங்கள். நீங்கள் இவ்வளவு பெரிய பட்டணத்தில் எங்கேயோ ஒரு மூலையில் மறைந்து கொண்டிருந்தாலும் உங்களுடைய குணாதிசயங்களைப் பற்றியும் அபூர்வமான அழகைப் பற்றியும் பேசி ஆச்சரியம் அடையாத மனிதரே இல்லை. இந்த ஊர் மகாராஜாவுக்குக் கூட உங்களுடைய விவரங்கள் எல்லாம் எட்டி இருக்கிறது என்றால், இந்த ஊர் ஜனங்களுடைய இருதய கமலத்தில் நீங்கள் எவ்வளவு தூரம் புகுந்து விட்டீர்கள் என்பது நன்றாக விளங்கும். எத்தனையோ லக்ஷக்கணக்கில் ஜனங்கள் நிறைந்துள்ள இவ்வளவு பெரிய பட்டணத்தில் அழகில் ரதியை வெல்லக்கூடிய யௌவன ஸ்திரீகள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரும் கீர்த்தியும் இப்படிப் பரவியதே இல்லை. உங்களுடைய பெயரும் புகழும் இவ்வளவு

பிரமாதமாகப் பரவுவது என்றால், மற்றவர்களிடத்தில் இல்லாத ஏதோ ஒரு பெரும் சிறப்பு உங்களிடத்தில் இருப்பதனால், அப்படி ஆயிருக்கிறது என்பது நிச்சயமாகிறது அல்லவா! இப்போது நான் இங்கே வந்ததையே ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். நான் சாதாரணமாக இந்த ஊர் அரண்மனையிலுள்ள என்னுடைய அந்தப்புரத்தை விட்டு வெளிக்கிளம்பி எப்படிப்பட்ட பெரிய மனிதர்களுடைய ஸ்திரீகளைப் பார்ப்பதற்குக் கூடப் போனதில்லை. அப்படிப் பட்டவளான என்னையே நீங்கள் கவர்ந்து இங்கே வரும்படி செய்துவிட்டீர்களல்லவா! உங்களிடம் ஒரு விசேஷமான மேம்பாடு இருக்கிறது என்பதற்கு இதைவிட வேறே அத்தாக்ஷியும் வேண்டுமா!'' என்றாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகுந்த வியப்பும் கலக்கமும் பலவகையான சந்தேகங்களும் அடைந்து என்ன மறுமொழி சொல்வது என்பதை அறியாமல் சிறிதுநேரம் தயங்கி, ''அம்மணீ! தாங்கள் ஆரம்பத்தி லிருந்தே பேசுவதைப் பார்த்தால், தாங்கள் இந்த ஊர் மகாராஜா அவர்களால், இந்த விஷயமாக அனுப்பப்பட்டு வந்தவர்களாகத் தோன்றுகிறதேயன்றி, தார்வார் தேசத்திலுள்ள தாயாரைப் பற்றி விசாரித்துக்கொண்டு போக வந்தவர்களாகத் தோன்றவில்லை'' என்று கூறிப் புன்னகை செய்தாள். அந்தப் பெருமாட்டி, ''அப்படியல்ல, நீங்கள் ராஜஸ்திரீ ஆக வேண்டுமென்று ஆசைப்படுவதை அறிந்த பிறகுதான், என் மனசில் இந்த எண்ணம் உண்டாயிற்று. உங்கள் விஷயத்தில் நான் தூதாகப் போய், மகாராஜாவிடம் பேசி, உங்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்விக்கலாம் என்ற ஆசை உண்டாயிற்று. வேறொன்றும் இல்லை'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம், ''இந்த ஊர் பெரிய மகாராஜாவின் இடத்திலா என்னைப் பற்றி சிபாரிசு செய்யப் போகிறீர்கள்?'' என்றாள்.

பெருமாட்டி, ''இல்லை. இல்லை. அவர் குடுகுடு கிழவரல்லவா. அவருக்கு இப்போது வயது எழுபதாகிறது. அவருடைய புத்தியும் மாறாட்டம் அடைந்திருக்கிறது. அவர் இந்த ராஜாங்க விஷயம் எதையுமே கவனிக்கிறதில்லை. அவருடைய பிள்ளையான இளவரசர் இருக்கிறாரே அவர்தான் இப்போது மகாராஜாவின் அதிகாரங்களை யெல்லாம் நடத்தி வருகிறார். அவர் நிரம்பவும் அழகும் யௌவனப் பருவமும் வாய்ந்தவர். மகா ஸரசி; உல்லாஸ புருஷர். அதுவும் வடிவழகும், நற்குணங்களும், புத்திசாலித்தனமும் கல்வியும் வாய்ந்த யௌவனப் பெண்கள் என்றால், அவர்களை அவர் தம்முடைய உயிராகவே பாவித்துக் கனகாபிஷேகம் செய்வார். உங்களைப் பற்றிய சகலமான விவரங்களும் அவருக்கு எட்டி இருக்கின்றன. ஆகையால், உங்களுடைய பிரியத்தையும் சிநேகத்தையும் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று அவர் நிரம்பவும் ஆவலாக இருக்கிறார். ஆனால், உங்களுடைய மனப்போக்கு எப்படி இருக்குமோ என்ற சந்தேகத்தினால் அவர் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார். உங்களுடைய கருத்தும் அதற்கு ஒத்ததாக இருக்குமென்று இப்போது எனக்குத் தெரிவதால், நான் போய் உங்களுடைய சம்மதியை அவரிடம் தெரிவித்து, உங்களை நீங்கள் இருப்பதற்குத் தகுதியான அந்தஸ்தில் வைக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிறது. வேறொன்றுமில்லை'' என்றாள்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம், ''ஓகோ! அப்படியா! உண்மை இப்போதுதான் தெரிகிறது! வியாழக்கிழமையாகிய இன்றையதினம் அவருடைய முறையாயிற்றே. அவர் எப்படியும் இன்று நேரில் வந்து இப்படிப்பட்ட பிரஸ்தாபத்தைச் செய்வார் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அவர் வராமல் தங்களை அனுப்பி இருக்கிறார் போலிருக்கிறது. அப்படிப்பட்ட மேன்மை தங்கிய இளவரசரை நேரில்கண்டு பேச வேண்டும் என்றும், அவருடைய சொல்லை மீறி எப்படிப் பேசுகிறது என்றும்

நினைத்து இன்றைய காலைமுதல் என்மனம் பட்டபாடு இவ்வளவு அவ்வளவல்ல. என்னுடைய உடம்பும் இருக்கை கொள்ளாமல் ஓய்வின்றித் தவித்துக் கொண்டிருந்தது. அவர் வராமல் தாங்கள் வந்ததும் அநுகூல மானதுதான்'' என்றாள்.

அந்தப் பெருமாட்டி, ''ஆ என்ன ஆச்சரியம்! இன்று அவருடைய முறை என்பதுகூட உங்களுக்குத் தெரிந்திருக் கிறதே! அப்படியானால், அவர்கள் ரகசியமாக வைத்துள்ள பந்தயத்தின் விவரமெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! இதையெல்லாம் உங்களிடத்தில் சொன்னது யார்?'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம், ''இந்தப் பக்கம் திங்கட்கிழமையி லிருந்து ஆரம்பமாகி நடந்து வருகிறது. திங்கட்கிழமை ஒரு மிட்டாதார் வந்தார். செவ்வாய்க்கிழமை ஒரு இனாம்தார் வந்தார். நேற்று பாளையக்காரர் வம்புலாம் சோலையில் என்னை வளைத்துக் கொண்டார். நேற்றுவரையில் எனக்கு இந்த ரகசியம் தெரியாதிருந்தது. நேற்றுதான் எல்லா விஷயங்க ளையும் அந்தப் பாளையக்காரர் வெளியிட்டார். அவர் இந்த ரகசியங்களை யெல்லாம் என்னிடம் சொல்லியாவது என்னுடைய பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்று பார்த்தார். ஆனால், மற்றவர்களைப் போலவே அவரும் அவமானம் அடைந்து திரும்பிப் போய்ச் சேர்ந்தார். இன்றைக்கு இளவரசருடைய முறையென்று அவர்தான் சொன்னார். நாளைய தினம் யாரோ ஒரு கிழவருடைய முறையாம். மறுநாள் இன்னொருவர் வரப்போகிறாராம். இந்த மூன்று தினங்களும் எப்படிக் கழியுமோ என்று நான் நிரம்பவும் கவலை கொண்டிருக்கிறேன். இவர்கள் சாதாரணமாக என்னிடத்தில் வந்து இந்த விஷயத்தைப் பற்றிப் பேச நான் இடங்கொடுக்க மாட்டேன் என்று ஒவ்வொரு வரும் ஒவ்வொரு முகாந்திரத்தை வைத்துக்கொண்டு என்னிடம் வந்தார்கள் போலிருக்கிறது. நேற்று இந்தச் சதியாலோசனையைக்கேட்டவுடனே எனக்குப் பெருத்த

கவலையுண்டாகிவிட்டது; இன்னம் பாக்கி இருக்கும் மூன்று பேரும் எந்த நிமிஷத்தில் எந்த முகாந்திரத்தை வைத்துக் கொண்டு என்னிடம் வருவார்களோ என்று நான் கவலை கொண்டு ராத்திரிப் பகல் எச்சரிப்பாக இருந்து வருகிறேன். இன்று இளவரசர் எப்படிப்பட்ட தந்திரம் செய்யப் போகிறாரோ என்று யோசித்து இன்று காலை முதல் நான் அதே கவனமாக இருந்து வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது தாங்கள் வந்திருப்பது கூட இளவரசருடைய இன்றைய முறைக்கு சம்பந்தம் உள்ளதாக இருக்குமோ என்ற எண்ணந்தான் இப்போதும் என் மனசில் உண்டாகிறது'' என்றாள்.

அந்தப் பெருமாட்டி மிகுந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்தவராகத் தோன்றி பூர்ணசந்திரோதயத்தை நோக்கி, ''ஆகா! எல்லா ரகசியமும் இங்கே வந்து அற்றுப் போயிருக்கிறதே. இந்தப் பந்தய விஷயத்தை யாரும் பிறரிடத்தில் வெளியிடக் கூடாது என்ற கண்டிப்பான நிபந்தனை ஏற்படுத்தி அதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, இந்த சூரக்கோட்டைப் பாளையக்காரர் மாத்திரம் இப்படி நடந்துகொண்டது. அயோக்கியத்தனமாக இருக்கிறது. இந்த விஷயத்தை நான் போய் இளவரசரிடத்தில் தெரிவித்தால், அவரும், மற்ற நால்வரும் அந்தப் பாளையக்காரரை வெறுத்து அவருடைய சிநேகத்தையே விலக்கி அவரை இந்த ஊருக்கே வராமல் அடித்துவிடுவார்கள். தனக்குக் கிடைக்கவில்லை என்ற வயிற்றெரிச்சலினால், அவர் இதை வெளியிட்டு மற்றவருடைய ஏற்பாடுகளையும் கெடுத்திருக்கிறார் என்பது நிச்சயம். இருக்கட்டும்; நான் போனவுடனே இந்தச் சங்கதியை இளவரசரிடம் தெரிவித்து இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் செய்கிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் வேடிக்கையாக நகைத்து

''இந்த விஷயத்தில் அவர் ஒருவர் மாத்திரம் தவறு செய்ததாகத் தோன்றவில்லையே! அவர்கள் அறுவருக்குள் நடந்த இந்த ரகசியம் தங்களுக்கும் தெரிந்திருக்கிறதே. இந்த அறுவரில் ஒருவர்தானே இதைத் தங்களிடத்தில் வெளியிட்டிருக்க வேண்டும். அப்படியிருக்க, சூரக்கோட்டைப் பாளையக்காரர் ஒருவரை மாத்திரம் தண்டிப்பது நியாயமாகுமா?'' என்றாள்.

அந்தப் பெருமாட்டி திடுக்கிட்டுத் தயங்கி, ''ஆம்; கண்டிப்பாகப் பார்த்தால் நீங்கள் சொல்வது நியாயந்தான். இருந்தாலும் இரண்டிற்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. இளவரசருடைய ரகசியமெல்லாம் எனக்குத் தெரியும். அவருடைய மனமும் என்னுடைய மனமும் ஒன்றுதான். ஆகையால், அவர் எந்த விஷயத்தையும் என்னிடத்தில் சொல்லாமல் இருக்கமாட்டார். ஒரு விஷயம் அவருக்கு மாத்திரம் தெரிந்திருந்தால், அது எவ்வளவு ரகசியமாக இருக்குமோ அதுபோலவே, நானும் அந்த ரகசியத்தைக் காப்பாற்றி வருவேன். ஆகையால், எங்களிருவருக்கும் தெரிந்தால், ஒரே ஒருவருக்கு மாத்திரம் தெரிந்தது போன்றதே. ஆனால், அந்தப் பாளையக்காரர் செய்தது ஒழுங்கீனமான காரியம். அந்த ரகசியம் யாருக்குத் தெரியக் கூடாதோ அவருக்கே அதைத் தெரிவித்து மற்றவர்களுடைய காரியத்தைக் கெடுத்தது சுத்த நம்பிக்கைத் துரோகமான காரியம். இருக்கட்டும்; அவருக்குத் தக்க மரியாதை நாங்கள் நடத்தி வைக்கிறோம். அது போகட்டும். நாம் முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசுவோம். இந்த ரகசியங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்க, இனி நான் உங்களிடத்தில் கபடமாக மறைத்து மதித்துப்பேசுவது மரியாதையல்ல. ஆகையால், வந்த காரியம் இன்னதென்பதை நான் வெளிப்படையாக உங்களிடம் தெரிவித்து விடுகிறேன். அவர் விஷயத்தில் நீங்கள் இரங்கி அவருடைய இச்சையைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நீங்கள் இந்த ஊருக்கு வந்திருக்கி றீர்கள் என்ற சங்கதியே அவருக்குச் சென்ற ஞாயிற்றுக்

கிழமையன்று மற்றவர்கள் சொல்லித்தான் தெரிந்தது; உங்களுடைய அபூர்வமான அழகையும், மேம்பாட்டையும், நற்குணங்களையும், புத்தி சாதுர்யத்தையும், கல்வி முதிர்ச்சியையும் பற்றி அவர் பலருடைய வாக்குமூலமாகவும் கேட்கக் கேட்க, அப்படிப்பட்ட அபாரமான சிருஷ்டியாக இருக்கும் பெண்ணரசியைத் தமக்கு அரசியாகச் செய்து கொள்ளவேண்டும் என்ற தடுக்க முடியாத ஓர் ஆசை அவருடைய மனசில் மூர்த்தண்ணியமாக எழுந்துவிட்டது. உங்கள் விஷயத்தில் அவருடைய மனசில் பிரமாதமான காதலும் அபாரமான பிரேமையும் ஏற்பட்டு விட்டன. ராப்பகல் சதா காலமும் அவர் உங்களுடைய நினைவே நினைவாகவும் அதே பைத்தியமாகவும் இருந்து ஊண் உறக்கம் இல்லாமல் தவித்து வருந்திக் கிடக்கிறார். அவருடைய பரிதாபகரமான நிலைமையை எடுத்து உள்ள படி சொன்னால், அது உங்களுக்கு நம்பிக்கை படுமோ படாதோ! நீங்கள் எவ்வித நிபந்தனைகள் ஏற்படுத்துவ தானாலும் அவைகளுக்கு எல்லாம் அவர் இணங்கத் தடையில்லை. அவரே இன்று நேரில் வந்து உங்களிடம் பேச எவ்வளவோ ஆவல் கொண்டிருந்தார். ஆனாலும், அவர் வந்தால், மற்றவருக்குக் கிடைத்த மரியாதை தமக்கும் கிடைக்குமோ என்று பயந்து உங்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்ளும்படி என்னை அனுப்பினார். நீங்கள் எப்படியாவது தயை பாலித்து உயிர் அழிந்து வாடிக் கிடக்கும் அவரைக் கைதூக்கிவிட்டு உய்விக்கச் செய்வது உங்களைச் சேர்ந்த பொறுப்பு'' என்று நயமாகக் கூறி இறைஞ்சினாள்.

பூர்ணசந்திரோதயம், ''ஆம்; தாங்கள்சொன்னது எல்லாம் உண்மைதான். அது போகட்டும்; என்னுடைய குணாதிசயங் களைக் கேட்டு என்மேல் இளவரசர் ஆசை கொண்டாரே. அதை மனசிலேயே வைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்து உங்களிடம் அதைச்சொல்லி இப்போது அனுப்பியதுபோல, அப்போதே அனுப்பியிருந்தால், அது நிரம்பவும் மரியாதையாக இருக்கும். அதைவிட்டு, என்னை ஒரு சாமானைப் போல

மதித்துப் பந்தயம் வைத்து மற்ற ஐந்து பேரிடத்திலும் என்னைக் காட்டிக்கொடுத்து அவர்கள் வந்து என்னிடத்தில் அசங்கியமான பிரஸ்தாபங்களைச்செய்து என் மனசை வதைக்கும் படியான நிலைமையில் என்னை வைத்தது நியாயமாகுமா? இவர்கள் இப்படிப் பந்தயம் வைத்ததனால் சென்ற திங்கட்கிழமை யிலிருந்து என்மனம் எவ்வளவு பாடுபடுகிறது தெரியுமா?'' என்றாள்.

அந்தப் பெருமாட்டி மிகவும் நயமாகவும் கெஞ்சலாகவும் பேசத் தொடங்கி, ''அம்மா! நீங்கள் சுமத்தும் குற்றம் ஒரு விதத்தில் நியாயமானதாக இருக்கிறது. ஆனால், அந்தச் சமயத்தில் அவர் எண்ணிய எண்ணத்தையும் நான் தெரிவித்து விடுகிறேன். உங்களைப் பற்றி மற்றவர்கள் சொன்ன விவரங்களைக்கேட்ட அவர் உங்கள் மேல் மோகங் கொண்டார். அதுபோலவே, மற்ற எல்லாரும் உங்கள் பேரில் மோகங் கொண்டு வாயில் வந்தபடி பிதற்றினார்கள். ஆனால் நீங்கள் எப்படிப்பட்ட மனவுறுதி உடையவர்கள் என்பது அவருக்குத் தெரியாது. அந்த விஷயத்தில் உங்களைப் பரீட்சித்துப் பார்த்து மற்ற எப்பேர்ப்பட்டவர்களையும் நீங்கள் உதறித்தள்ளி உறுதியான கற்போடு இருப்பீர்களா, அல்லது, சபலசித்த முடையவர்களாக இருந்து எல்லோருக்கும் இணங்கி விடுவீர்களா என்பதை நன்றாக அறிந்து கொண்டு அதன்பிறகு உங்களைத் தம்முடைய உயிருக்குயிரான ஆசை நாயகியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது அவருடைய கருத்து. இந்தப் பந்தயம் வைக்கவேண்டுமென்ற பிரஸ்தாபம் உண்டானவுடனே, இதனாலேயே உங்களுடைய கற்பின் உறுதியைச் சோதித்து விடலாம் என்ற நினைவினால் அவரும் இதற்கு இணங்கிவிட்டார். ஆனால், இந்த விஷயத்தில் உங்களுக்கு மற்றவர்களால் துன்பமும் சங்கடமும் அவமானமும் ஏற்பட்டதைப் பற்றி இளவரசர் மனப்பூர்வமாக வருந்தி விசனிக்கிறார். இனி உங்களுக்கு இப்படிப்பட்ட துன்பம் நேராமல் பாதுகாப்பதோடு, இதுவரையில் ஏற்பட்ட

துன்பங்களை யெல்லாம் நீங்கள் ஒருநொடியில் மறந்து போகும்படியாக உங்களைச் சந்தோஷப்படுத்தி உங்களை உடனே அபார செல்வத்தில் வைத்து விடுவதாக உறுதி சொல்லும் படி என்னை அனுப்பினார்'' என்றாள்.

பூர்ணசந்திரோதயம், ''ஓகோ! அப்படியானால் சரிதான். என்ன இருந்தாலும் இவர்கள் அறுவரும் என் விஷயத்தில் பந்தயம் வைத்திருப்பதையும், ஒவ்வொருவரும் பகல் வேஷக்காரர் போல ஒவ்வொரு விதமாக என்னிடம் வந்து பிதற்றுவதையும் நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பு வருகிறது. இப்படிப்பட்ட அபூர்வமான யோசனை இந்த உலகத்தில் வேறே எவருடைய புத்திக்கும் எட்டியே இருக்காது என்று நினைக்கிறேன். அதிருக்கட்டும். இப்போது நான் தாங்கள் சொல்வதற்கு இணங்கவில்லையென்று வைத்துக் கொள்வோம். அப்போது இளவரசர் மற்றவர்களைப் போல் ஏதாவது வேஷம் போட்டுக்கொண்டு என்னிடம் வருவாரோ?'' என்றாள்.

அந்தப் பெருமாட்டி மகிழ்ச்சியோடு, ''அவர் மற்றவர்களைப் போல, அப்படியெல்லாம் உங்களுடைய மனசை வருத்தக் கூடியவர் அல்ல. இந்த விஷயத்தில் தானாகக் கனிவதே நிகரற்ற இன்பம் என்பது அவருடைய உறுதியான கொள்கை. ஆகையால், இப்போது நீங்கள் சம்மதிக்க வில்லையானால், அவரே உடனே வந்து உங்களை மறுபடியும் வற்புறுத்த மாட்டார். அவர் பலவகையில் உங்களுக்கு நன்மைகளைச் செய்து உங்களுடைய மனம் அவர் விஷயத்தில் இரங்கும்படி செய்ய முயற்சிப்பார். அப்படி இல்லாமல், மற்றவர்களைப் போல, இவர் உங்களுக்குத் தீங்கு செய்வதாகப் பயமுறுத்தக் கூடியவரும் அல்ல. உங்களுடைய மனம் எப்போதும் ஆனந்தமாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய எண்ணம் அன்றி, உங்களுடைய உடம்பில் ஒட்டிய ஒரு தூசிக்கும் தீங்கு செய்ய அவருக்கு மனம் வராது. இது சம்பந்தமாக உங்களுக்கு

நான் இன்னொரு முக்கியமான விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பந்தயத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் மற்ற மனிதர்களும் உங்களிடத்தில் கடும்மையல் கொண்டிருக் கிறார்கள். எப்பாடு பட்டாகிலும் அவர்கள் உங்களை அடைந்தே தீரவேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டிருக்கி றார்கள். அவர்கள்ஆள்கட்டு உள்ளவர்கள்; அவர்கள் மனம் வைத்தால், எப்படிப்பட்ட பாதுகாப்போடு இருக்கும் ஸ்திரீ களையும் ஆள்களைவிட்டு அபகரித்துக் கொண்டு போய் விடுவார்கள். முக்கியமாக இந்த சூரக்கோட்டைப் பாளையக் காரர் பரம துஷ்ட மனிதர். அவர் எப்படியும் உங்களுக்குத் தீங்கு செய்து உங்களுடைய பெயரைக்கெடுத்துவிட வேண்டும் என்று உறுதி செய்து கொண்டிருக்கிறார். அவர் அதை எப்படியும் நிறைவேற்றியே தீருவார். அதோடு, நாளைய முறைக்காரராகிய கிழவர் இந்த ஊரிலேயே முதன்மையான பெரிய மனிதர். அவருக்கு அபாரமான செல்வமும், செல்வாக்கு முண்டு. இந்தப் பாளையக் காரர் எவ்வளவுக்கெவ்வளவு முரட்டுக் குணமுடைய வராக இருக்கிறாரோ, அதுபோல அந்தக் கிழவர் மகா பிடிவாத குணமுள்ளவர். அவர் ஒரு ஸ்திரீயின்மேல் மனசு வைப்பார். ஆனால், அதனால் அவருடைய சொத்து முழுதும் போவதா னாலும், அவருடைய உயிரே போவதானாலும், அவர் இலட்சியம் செய்யாமல், தம்முடைய எண்ணத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவார். நீங்களோ இந்த ஊரில் எவ்விதத் துணையும் இன்றி ஒரு மான்குட்டிபோல இத்தனை புலிகளினிடையில் மாட்டிக்கொண்டி ருக்கிறீர்கள். நீங்கள் இந்த ஊரை விட்டு, இவர்களுக்குத் தெரியாமல் வேறே எந்த ஊருக்காவது போனால் அன்றி இங்கேயே இருந்து இவர்களுடைய உபத்திரவத்திலிருந்து தப்ப முடியாது. பல மனிதர்கள் பலவிதத்தில் உங்களை அவமானப்படுத்த யத்தனிப்பார்கள். ஆனால், நீங்கள் இந்த இளவரசருக்கு உரியவர் ஆகிவிடும் பட்சத்தில், அந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிடும். அதன்பிறகு எவரும் வந்து உங்களிடம்

வாலாட்டாமல் அப்படி அப்படியே ஒடுங்கிப் போவார்கள். அதன் பிறகு எவருடைய இடைஞ்சலும் இன்றி நீங்கள் சந்தோஷமாக இருக்கலாம். அது ஒரு பெரிய அநுகூலம் அல்லவா. அதைக் கருதியாவது நீங்கள் இளவரசருடைய கருத்துக்கு இணங்குவீர்கள் என்று நம்புகிறேன். அவருக்கு சாஸ்திரப்படி ஏற்பட்ட ஒரு பட்டமகிஷி இப்போது இருக்கிறாள். ஆனாலும், அவள் பெயருக்கு மாத்திரம் நாயகியே யொழிய வேறல்ல. அவருடைய ஆசையை யெல்லாம் திரட்டி, ஒருத்தியினிடத்தில் வைப்பதற்கு அவருடைய மனசுக்கு உகந்த ஸ்திரீ இதுவரையில் வாய்க்க வில்லை. அந்த ஆசை நாயகியின் ஸ்தானத்தில் உங்களை வைக்க, அவர் பரிபூரணமாக ஆவல் கொண்டிருக்கிறார். அவருக்குச் சொந்தமான சகல செல்வத்தையும் செல்வாக்கையும் அதிகாரத்தையும் உங்களுடைய இஷ்டம்போல நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். உங்களுடைய பிரியம் எப்படியோ அப்படியே அவர் இனி எந்த விஷயத்திலும் நடந்து கொள்வார். ஆகையால், இந்த ராஜாங்கத்தில் பெயருக்கு மாத்திரம் அவர் மகாராஜனாக இருப்பார்; உண்மையில் நீங்களே மகாராஜனாக இருந்து சகலமான அதிகாரங்களையும் நடத்தி வரலாம். ஆகையால், நீங்கள் இப்படிப்பட்ட எவருக்கும் கிடைக்கத்தகாத சம்பத்தையும் பாக்கியத்தையும் கருதி, சம்மதம் என்ற வார்த்தையைச் சொல்லுங்கள். அவர் உடனே நேரில் வந்து உங்களுடைய மனம் திருப்தியடையும்படி உறுதி செய்து கொடுப்பார்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் நயமாகவும் கூறினாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் கலகலத்துக் கலங்கிப் போனாள். ஆனாலும், தனது சஞ்சலத்தை வெளியில் காட்டாமல் மறைத்துக்கொண்டு அசட்டுப் புன்னகை செய்து, ''ஏதேது! இந்த இளவரசர் விரிக்கும் பொன்வலையி லிருந்து நான் என்னை விடுவித்துக் கொள்ள முடியாது போலிருக்கிறது. அவரால் அனுப்பப்பட்ட தூதர் சொல்லும்

வார்த்தைகளுக்கே உத்தரம் சொல்ல மாட்டாமல் நான் விழிக்க வேண்டியிருக்கிறதே. இன்னம் அவரே நேரில் வந்திருப்பாரானால், நான் உடனே அவருக்கு அடிமையாகி விடவே நேர்ந்துவிடும். அதன்பிறகு என்னுடைய சொல்லின் படி அவர் நடக்கப் போகிறாரோ, அல்லது, அவருடைய சொல்லின்படி நான் நடக்க நேருகிறதோ; அது அப்போதுதான் தெரியும். ஆனால், இன்னொரு விஷயம். நானோ இந்த ஊருக்குப் புதியவள். இந்த ஊர் இளவரசர் கறுப்பாக இருப்பாரோ சிவப்பாக இருப்பாரோ என்பது கூட எனக்குத் தெரியாது. நீங்கள் பிரஸ்தாபிக்கும் விஷயமோ மகா பெரிய விஷயம். இருவரும் பரஸ்பரம் ஒருவரிடத் தொருவர் மன இளக்கம் அடைந்து தானாகக் கனிந்து ஒன்றுபட வேண்டும். அவர் ஒருவேளை என்னைப் பார்த்தும் இருக்கலாம்; என்னுடைய குணாதிசயங்களைப் பற்றிய விவரங்களை யெல்லாம் நன்றாகக் கேள்வியுற்றும் இருக்கலாம். நான் அவரைப் பார்த்தது இல்லை. அவரைப்பற்றி இதுவரையில் மனதால்கூட நினைத்ததே இல்லை. ஆகையால், என்னுடைய மனம் அவருடைய மனம்போல இன்னமும் அவ்வளவு பரிபக்குவ நிலைமைக்கு வரவில்லை. ஏனென்றால் இப்படிப்பட்ட பெருத்த பாக்கியம் எனக்கு வந்து நேரப்போகிறது என்பதை நான் கொஞ்சமாகிலும் எதிர்பார்த் திருந்தால், நான் இந்த விஷயத்தில் ஒருமுடிவான தீர்மானத்தைச் செய்து வைத்திருப்பேன். ஆனால், இவர்கள் எல்லோரும் என் விஷயத்தில் பந்தயம் வைத்திருப்பதும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினம் என்னிடம் வரப் போகிறார்களென்பதும் எனக்குத் தெரியும். அதை நான் ஒரு குழந்தைப் பிள்ளையின் விளையாட்டு என்று நினைத்து அலட்சியமாக மதித்திருந்தேன். அதிலிருந்து இப்பேர்ப்பட்ட அபாயங்களும் நன்மைகளும் ஏற்படும் என்பதை நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. சூரக் கோட்டைப் பாளையக்காரர் முதலிய துஷ்டர்களுடைய வசத்தில் அகப்பட்டு இழிவடைவதைவிட இளவரசருக்கு

ஆசைநாயகியாகி எவருடைய இடைஞ்சலும் இல்லாமல் மகாராஜாவின் அதிகாரங்களையெல்லாம் செலுத்துவது பரம சிலாக்கியமான காரியந்தான். அதற்கு நான் இணங்குவதில், முதலில் அந்தக் கிழவர் என் விஷயத்தில் முயற்சி செய்யும் படியான மகாகேவலமான இழிவுக்கு நான் ஆளாகாமல் தப்பலாம். எல்லா விஷயங்களையும் யோசித்துப் பார்க்க, சம்மதம் என்று சொல்வதைத் தவிர வேறே எந்த வழியும் எனக்குப் புலப்படவில்லை. இன்னொரு முக்கியமான விஷயம். நான் அந்த இளவரசரையும் பார்க்கவில்லை. அவரால் அனுப்பப்பட்டு வந்தவர்களான நீங்களும் இன்னும் எனக்குத் தரிசனம் கொடுக்காமல், அங்கியால் உங்களுடைய வடிவத்தை மறைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் எந்த மனிதரையும் நேரில் பார்க்கக் கொடுத்து வைக்காதிருக்கும் நிலைமையில், மற்ற அபாரமான வைபவங்களும் சம்பத்தும் எனக்குச் சித்திக்கும் என்று என் மனம் எளிதில் நம்பமாட்டேன் என்கிறது'' என்றாள்.

அதைக்கேட்ட அந்தப்பெருமாட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவளாய், ''அம்மா! நான் இங்கே வந்தவுடனேயே என்னுடைய அங்கியை விலக்கி வைத்துவிட்டே உங்களோடு பேசியிருப்பேன். ஆனால் உங்களுடைய மனப்போக்கு எப்படி இருக்குமோ என்றும், நீங்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்காமல் மற்ற மூன்று பேரையும் இகழ்ந்து அனுப்பியதுபோல என்னையும் செய்வீர்களோ என்றும் அஞ்சி, உங்களுடைய மனநிலைமை எங்களுக்கு அநுகூலமாக இருந்தால், அதன்பிறகு என்னுடைய அங்கியை விலக்க எண்ணியிருந்தேன். இப்போது நீங்கள் எங்களுடைய கருத்துக்கு இணங்கி வந்ததைக்காண நான் அடையும் சந்தோஷம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லத் தக்கதல்ல. நான்போய் இந்த சந்தோஷச்செய்தியை இளவரசரிடம் தெரிவித்தால், அவர் அப்படியே ஆனந்தக் கூத்தாடுவார்; பூத உடம்போடு ஒருவன் சுவர்க்க லோகம் புகுந்தால், எவ்விதமான

பரம ஆனந்தம் அனுபவிப்பானோ, அவ்விதமாக அவர் மட்டுக்கடங்கா இன்பமும் களிப்பும் கொண்டு பூரித்து விம்மிதம் அடைவார். ஆகையால், நான் இனிமேலும் குறுக்கே இருந்து நீங்கள் இருவரும் அடையப்போகும் நிகரற்ற சாயுஜ்ய போகத்துக்கு இடையூறு செய்ய மனமில்லை. ஆகையால், நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். எல்லா விஷயங்களும் முடிந்த மாதிரியே நீங்கள் பாவிக்க வேண்டும். அவர் இனி உங்களைக் காணவரும் போது எவ்வித ஆட்சேபனை சமாதானங்களும் இருக்கவே கூடாது. மணவறையில் தன்னுடைய புதிய மணவாட்டியைக் காணப் போகும் புருஷன் எப்படிப்பட்ட வரவேற்பை எதிர் பார்ப்பானோ, அதே விதமான அவாவோடு அவர் இங்கே தோன்றுவார். நீங்கள் உடனே அவருடைய ஆலிங்கனத்துக்கு வந்து சேரவேண்டும். அதன்பிறகு அவராகவே உங்களுக்கு வேண்டிய சகலமான உறுதிகளையும் செய்து கொடுப்பார். நிபந்தனைகள் எல்லாம் உங்களுடைய வாயிலிருந்து வருவதே உங்களுடைய கண்ணியத்துக்குக் குறைவானது. நான் சொல்வது தெரிகிறதா? அப்படியே செய்வதாக ஒப்புக் கொள்ளுங்கள். நான் உடனே போய் அவரை அனுப்புகிறேன்'' என்று உரிமையாக வற்புறுத்திக் கூறினாள்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் மிகுந்த சஞ்சலமும் தவிப்பும் அடைந்தவளாய், ''சரி; அவர் இந்த ராஜ்யத்துக்கே மகாராஜா. அவருடைய திருவாக்குக்கு எதிர்வாக்கு சொல்ல யாருக்கு அதிகாரம் இருக்கிறது. அவருடைய பிரஜைகளுள் நான் ஒருத்தி. ஆகையால், நமக்கெல்லாம் தெய்வம், தாய் தந்தை, புருஷன் முதலிய சகலமும் அவர்தான். அப்படியிருக்க அவராகப் பார்த்து எனக்கு இப்படிப்பட்ட பெருமையை உண்டாக்கிக் கொடுக்க ஆவல் கொண்டு இவ்வளவு தூரம் பிரயாசைப் படும்போது அதற்கு மாறாக நான் நடப்பது தருமமாகாது. ஆகையால், அவருடைய மனம்போல நடந்து கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன். தாங்கள்

சொல்லுகிறபடி, அவர் இங்கே வரும்போது அவரிடத்தில் எவ்வித நிபந்தனையும் பேசமாட்டேன். அவருடைய பிரியப்படி என்னை நடத்திக்கொள்ளட்டும். அந்தச் சங்கதி இருக்க, தாங்கள் இன்னார் என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டாமா? தங்களுடைய பெயரென்ன? தங்களுடைய முக தரிசனம் எனக்குக் கிடைக்கக் கூடாதா? என்னுடைய மானமும் உயிரும் சகலமும் இப்போது உங்களுடைய கையில் நான் ஒப்புவித்து விட்டேனே. தாங்கள் மாத்திரம் இன்னமும் ஜாக்கிரதையாகவே மறைந்திருக்கிறீர்களே!'' என்றாள்.

அதைக்கேட்ட அந்தப்பெருமாட்டி, ''இதுவரையில்தான் ஜாக்கிரதை. இனிமேல் எனக்குக் கவலையில்லை. நீங்கள் எப்போது வாக்குக்கொடுத்துவிட்டீர்களோ அதிலிருந்து நீங்கள் பின்வாங்க மாட்டீர்கள் என்பது நிச்சயம். ஆகையால், நான் என்னுடைய அங்கியை விலக்கிவிடுகிறேன்''என்று கூறிய வண்ணம், தன்மீது மறைத்துக்கொண்டிருந்த பனாரீஸ் பட்டு அங்கியை விலக்கி அப்பால் போட, அதற்குள் இளவரசர் கலகலவென்று சந்தோஷமாக நகைத்துக்கொண்டு உட்கார்ந் திருந்ததைக்கண்ட பூர்ணசந்திரோதயம் திடுக்கிட்டு பிரமித்து ஸ்தம்பித்துத் தனது கண்களையே நம்பாமல் பேச்சு மூச்சற்று சிரத்தைக் குனிய வைத்துக்கொண்டு சித்திரப் பாவைபோல நாணமே வடிவமாக நின்றாள்.

அவ்வாறு தத்தளித்து நின்ற தோகை மடமயிலை இளவரசர் மோக ஆவேசப் பார்வையாகப் பார்த்து, ''கண்ணே! பூர்ண சந்திரோதயம்! வா இப்படி என் பக்கத்தில்; என்மேல் உனக்குக் கோபமா? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என் ராஜாத்தி யல்லவா நீ, எங்கே இப்படி வந்து என் மடியின்மேல் உட்கார்ந்து கொள். ஒரு நிமிஷத்துக்குமுன் நீ செய்த வாக்குறுதியை நீ மனப்பூர்வமான இஷ்டத்தோடு செய்தாய் என்பதை, காரியத்தில் செய்துகாட்ட இதுதான் சரியான காலம். அடீ கண்மணீ! கோபித்துக்கொள்ளாதே; வா இப்படி'' என்று மிகவும்

உருக்கமாகவும் வாஞ்சையாகவும் கூறி அழைக்க, அவரது சொற்களைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் முன்னிலும் அதிகமாக நாணிக்கோணித் தவிக்கலானாள். அவளது திரேகம் காற்றினால் அசையும் மாந்தளிர்போல வெடவெட வென்று நடுங்குகிறது. அடக்கி அடக்கி அடிக்கடி பெருமூச்சு விடுவதால், அவளது ஏந்தெழில் மார்பு படீரெனத் தெறித்துவிடுமோ வென அஞ்சுமாறு வீங்கி வீங்கி அடங்குகிறது. அவளது அங்கங்கள் யாவும் நெக்குவிட்டுத் தளர்ந்து நைந்து இளகி உருகுகின்றன. கண்கள் இரண்டும் கலங்கிப் பளபளவென்று ஜ்வலிக் கின்றன. மாதுளைப் பூவைப்போலச் சிவந்து கனிந்து மகா வசீகரமாகத் தோன்றிய அவளது நிகரற்ற அதரங்களில் அமிர்தரசம் ததும்புகிறது. அதுகாறும் தனக்கு இணை தானே எனவும், ஒரு மண்டலேசுவரனது பட்டமகிஷி போலவும் கம்பீரமான தோற்றத்தோடு மகா வசீகரமாகக் காணப்பட்ட அந்த அதிசுந்தர மோகனாங்கி அவ்வாறு அடங்கி ஒடுங்கி நாணம், மடம், அச்சம் முதலிய அணிகள் இலங்க நின்ற அந்த அற்புதக் காட்சி முன்னிலும் பதினாயிரம் மடங்கு அதிக வசீகரமாகவும், காண்போரது மனதை மயக்கி, உடலை உருக்கி, உயிரைக் கருக்கி, அறிவைக் கலக்கி, உன்மத்தங் கொள்ளச் செய்வதாக இருந்தது. பல நாட்களாக அவளது அபாரமான வனப்பையும் லட்சணங்களையும் உன்னி உன்னி மோகலாகிரி கொண்டு ஏங்கித் தவித்திருந்த இளவரசர், ஒரு நாழிகை நேரமாக அவளண்டையில் நெருங்கி இருந்து அவளது ஒவ்வோர் அங்கத்தின் கண்கொள்ளா அழகையும் கண்டு கட்டிலடங்கா வேட்கையுற்றுக் காதல் தீயான பெருத்த ஜாடராக்கினியில் புதைபட்டுக் கிடந்தவராதலால், அவரது பார்வைக்கு அந்த மின்னாள் நிலைகலங்கித் தனது இயற்கைத் துணிபை இழந்து அடங்கி ஒடுங்கி அழகின் திரளாக நின்ற காட்சி தெய்வலோகக் காட்சியாக தோன்றியது. அவளது அமைப்பு அதுகாறும் கண்டறியாத ஒப்புயர்வற்ற அபார சிருஷ்டியாகக் காணப்பட்டது. அவள் தமக்கு அருகில் நெருங்காமல்

சிறிது தூரத்திற்கு அப்பால் நின்றது, அவரது உயிரே உடலைவிட்டுப் பிரிந்து போய்த் தூரத்தில் நின்றது போல இருந்தது. ஆகவே, அவள் அவ்வாறு நின்ற ஒவ்வோர் இமைப்பொழுதும் அவருக்கு ஒவ்வொரு கற்பகாலம்போலத் தோன்றி அவரது மனதை வருத்திப் புண்படுத்தியது. அவர் அவளைத் தன்னிடம் வரும்படி அழைத்ததற்கு இணங்கி வராமல் மௌனம் சாதித்து நிற்கவே, அவரது மனவேதனை அசாத்தியமாகப் பெருகிவிட்டது. அவர் முன்னிலும் பதினாயிரம் மடங்கு அதிக உருக்கமாகவும் வாத்சல்யத்தோடும் பிரேமையோடும் அவளை விளித்து, "தங்கமே! என் கண்மணியே! என் ராஜாத்தி! உன் உயிர் துடிக்கிறதை நீ உணரவில்லையா! என்னுடைய மனம் எவ்வளவு பாடுபடுகிற தென்பது உனக்குத் தெரியவில்லையா? என் உடம்பு தவிக்கிற தவிப்பை நீ பார்க்கவில்லையா? நீ என்மேல் நிரம்பவும் கோபம் கொண்டிருக்கிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது. உன் விஷயத்தில் நான் சில தவறுகள் செய்துவிட்டேன் என்பதை நானே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும், உன்மேல் நான் வைத்துள்ள வாஞ்சையிலும் உன்னை நான் அடைந்து என்னுடைய உடல்,பொருள், ஆவி ஆகிய சகலத்தையும் உனக்கே தத்தம் செய்துவிட வேண்டுமென்ற ஆவலினாலும், தூண்டப்பட்டே நான் உன் விஷயத்தில் சில தவறுகள் செய்ய நேர்ந்தது. எல்லாப் பிழையையும் பொறுத்துக்கொண்டு என்னைக் காத்து ரக்ஷிப்பது உன்னைச் சேர்ந்த பொறுப்பு. எங்கே இப்படி என் பக்கத்தில் வந்து, வாயைத் திறந்து ஒருவார்த்தை சொல். பூர்ணசந்திரோதயம்! மனசால் நினைக்குமுன் நூற்றுக்கணக்கான ராஜஸ்திரீகளும், ஆயிரக்கணக்கான ஏவலரும், கோடிக்கணக்கான பிரஜைகளும் அடிபணிந்து காலால் இடும் வேலையைத் தலையால் நிறைவேற்றும் செல்வாக்குடைய இந்த தேசத்து மகாராஜனான நான் என்னுடைய கம்பீரத்தையும் மேன்மையையும் விலக்கிவிட்டு உன்னிடத்தில் தாசானுதாசனாக நடந்தகொள்ள சம்மதித்து இவ்வளவு தூரம் பணிகிறேன் என்பதை நீ கொஞ்ச

மாகிலும் எண்ணுவாயானால், நீ என்னிடத்தில் இப்படிப்பட்ட வருமம் பாராட்டமாட்டாய் என்பது நிச்சயம்'' என்றார்.

பசுமரத்தாணிபோல மனதில் பாய்ந்த அவரது வார்த்தை களைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் அதற்கு மேலும் தான் மௌனமாக நிற்பது தகாது என நினைத்துத் தனது வசீகரமான சுந்தரவதனத்தை மெதுவாக உயர்த்தி நாணத்தோடு புன்னகை செய்து, ''ஒரு பெண்பிள்ளை எவ்வளவுதான் புத்திசாலித்தன மாகவும், ஜாக்கிரதையாகவும் விழிப்பாகவும் நடந்து கொண்டாலும், எவ்வளவு தான் அவள் மற்ற புருஷர்களுக்கு இடங் கொடுக்காமல் நெருப்புத்தணல் போல இருந்தாலும், எப்படியும் கடைசியில் அவள் ஒரு புருஷரிடத்தில் அகப்பட்டுத் தோல்வி யடைந்து, அவருக்கு அடிமையாகி விடவேண்டியது தான் அவளுடைய கதி போல் இருக்கிறது. சர்வ சாதாரணமான மனுஷியான என்னிடத்தில் மகாராஜா இவ்வளவு அபாரமான பிரியமும் அமிதமான மதிப்பும் வைத்திருப்பதைக் காண, என் மனமே இன்னமும் நம்பிக்கை கொள்ள மாட்டேன் என்கிறது. தங்களுக்கு இந்த ஏழையினிடத்தில் இப்படிப்பட்ட அபரிமிதமான கருணா கடாக்ஷமும், இவ்வித எண்ணங்களும் இருக்கிறது என்பதை ஓர் ஆள் மூலமாகச் சொல்லி யனுப்பினால், நானே தங்களுடைய இருப்பிடத்துக்கு ஓடிவந்து தங்களுக்கு அடிமையாகி இருப்பேனே. அப்படியிருக்க, தாங்கள் இவ்வளவு தூரம் ஏன் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும்? ஏன் இப்படி உருமாறி வரவேண்டும்? முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும், திருடனைத் திருடனைக்கொண்டு பிடிக்கவேண்டும் என்று ஜனங்கள் சொல்லுவார்கள். அதுபோல, இந்தப் பெண்ணைப் பிடிப்பதற்கு பெண் வேஷம் போட்டு வந்தால் தான் காரியம் ஆகுமென்று நினைத்து இப்படிச் செய்தீர்கள் போலிருக்கிறது'' என்று மிருதுவாகவும் மாதுரியமாகவும் மொழிந்தாள்.

இளவரசர் ஆனந்தபரவசம் அடைந்தவராய்ப் புன்னகை செய்து, ''நான் இந்தத் தேசத்தை ஆளும் மகாராஜனல்லவா!

எங்களைப் போன்ற மகாராஜாக்கள் எல்லாம் மாறுவேஷம் பூண்டு நகர பரிசோதனைக்குப் போவது சர்வ சாதாரண காரியந்தானே. அப்படிச் செய்வது மிகவும் இன்பகரமான ஒரு கடமை அல்லவா! அதில் எங்களுக்குக் கொஞ்சமும் பிரயாசையே இல்லை. அதுவும், இப்பேர்ப்பட்ட நிகரற்ற அழகும், மாசற்ற குணமும் இணையற்ற புத்திசாதுரியமும் சரஸகுணமும் நிறைந்துள்ள பெண்ணரசியின் தரிசனமும் வரங்களும் பெறுவதற்கு நான் பகீரதப் பிரயத்தனம் செய்தாலும், அது எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றுமா? உன்னைக் கோரி நான் எவ்வளவு பாடுகள் பட்டாலும், துன்பங்கள் அநுபவித்தாலும் அவைகள் எனக்கு இன்பகரமாக இருக்குமேயன்றிக் கொஞ்சமும் துன்பகரமாக இரா. அதுவும் தவிர, இனி என்னுடைய ஆயுட்கால பரியந்தம் என்னுடன்கூட இருந்து காமதேனுவைப் போலவும் கற்பகத்தருவைப் போலவும், தேவாமிருதம் போலவும், எனக்கு எந்தெந்த சமயத்தில் எவ்விதமான இன்பம் தேவையோ அதை உதவி, சதாகாலமும் எனக்கு ரம்மியம் கொடுக்கும் வல்லமை வாய்ந்த இப்படிப்பட்ட பெண் தெய்வத்தை நான் மற்றவர்களைப் போலக் கேவலமாக மதித்து என்னிடம் வரும்படி உத்தரவு அனுப்புவது ஒழுங்காகுமா? அந்த தெய்வம் எழுந்தருளியிருக்கும் கோவிலுக்கு நானே நேரில் வந்து பயபக்தி விநயத்தோடு பணிந்து வழிபட்டு வேண்டிக் கொண்டு தெய்வத்தினிடம் வரப்பிரஸாதம் பெற்றால் தான், அது நீடித்து நிற்பதோடு எப்போதும் இன்பகரமாக இருக்கும். ஆகையால், நான் இப்போது உன் விஷயத்தில் எடுத்துக் கொண்டது ஒரு பிரயாசையாகவாவது என் கண்ணியத்துக்குக் குறைந்ததாகவாவது எண்ணவே நியாயமில்லை'' என்றார்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் முன்னிலும் அதிகரித்த சஞ்சலமும் இன்பமும் துன்பமும் அடைந்தவளாய், ''மகாராஜாவுடைய குணாதிசயங்களைப் பற்றி நான் அதிகமாக ஒன்றும்

கேள்விப்பட்டதில்லை. ஆனாலும், ஒரே ஒரு விஷயம் மாத்திரம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மகாராஜாவுடைய மனசுக்கு உகந்த அழகான பெண்களைக் கண்டுவிட்டால், அவர்களைத் தூக்கி வைத்துப் பேசி அபாரமாகப் புகழ்ந்து முகஸ்துதிகளைச் சரமாரியாக வாரி வீசி, அவர்கள் தலை யெடுக்கா விதம் அடித்து, ஒரே நொடியில் அவர்களைத் தம்முடைய வலையில் வீழ்த்தி விடுவதில் மகாராஜா நிரம்பவும் திறமை வாய்ந்தவர்களென்று நான் கேள்வி யுற்றிருக்கிறேன். அது நிஜமென்பது இப்போது நிதரிசனமாகத் தெரிந்துவிட்டது'' என்றாள்.

இளவரசர் கரைகடந்த மகிழ்ச்சியடைந்து சந்தோஷமாக நகைத்து, ''நீ மற்ற ஸ்திரீகளையெல்லாம்விட உயர்ந்த மேதாவி என்பது நீ இப்போது சொன்ன விஷயத்தினாலேயே நன்றாகத் தெரிகிறது. என்னிடத்தில் எந்த அம்சம் முக்கியமாக இருக்கிறதோ, அதை நீ தெரிந்துகொண்டு மற்றவைகளைத் தெரிந்து கொள்ளாமல் விட்டிருக்கிறாய். மற்ற ஸ்திரீகள் இந்த ஒரு விஷயத்தை மாத்திரம் தெரிந்து கொள்ளாமல் மற்ற விஷயங்களையெல்லாம் தெரிந்து கொள்ளுகிறார்கள். இதுதான் மேதைக்கும் பேதைக்கும் உள்ள வித்தியாசம். ஆனால், ஒரு மனிதரிடத்தில் நிரம்பவும் யோக்கியதை இருக்குமானால், அவர்களை மற்றவர் ஸ்தோத்திரம் செய்வது குற்றமாகாது. அண்ட பிண்ட சராசரங்களை எல்லாம் படைத்தவனும், சர்வ வல்லமை உடையவனும், சர்வக்ஞனுமான கடவுளை விட அதிகமான ஸ்தோத்திரப்பிரியன் வேறொருவனும் இருக்க மாட்டான். எப்பேர்ப்பட்ட பாபிகளும் துஷ்டர்களும் கூட ஈசுவரனைப் பார்த்து அப்பனே ஐயனே என்று ஸ்தோத்திரம் செய்து செய்து அவனுடைய பெயர்களைச் சொல்லி அவனுடைய செயல்களைப் புகழ்ந்து சகஸ்ரநாமம் சொல்லித் துதித்தால், அவனுடைய மனம் உடனே இளகிப் போகிறது. அவன் எல்லா வரங்களையும் உடனே கொடுத்து விடுகிறான். முகஸ்துதி செய்வது ஈசுவரனுக்கே உகந்ததாக

இருப்பதால், இது குற்றமான செய்கையாகாது. மனிதருக்குப் பேரின்பத்தை மாத்திரம் அளிக்கக்கூடிய கடவுள் ஈசுவரன். உன்னைப்போன்ற ரூபலாவண்ணியமும், உத்தம லக்ஷணங்களும், புத்தி தீக்ஷண்யமும் வாய்ந்த பெண்கள் இந்த உலகத்தில் சிற்றின்ப சுகமும், அடுத்த உலகத்தில் பேரின்ப சுகமும் ஆகிய இரண்டையும் ஒருங்கே மனிதருக்கு உண்டாக்கிக் கொடுக்க உதவி செய்யும் உயிர்க் கடவுள்கள். ஆகையால், அந்தக் கடவுளை ஆயிரம் பெயர்கள் சொல்லி ஸ்தோத்திரம் செய்தாலும், என்னுடைய ஆவல் அடங்காது; ஆசையும் தீராது. அப்படி நான் ஸ்தோத்திரம் செய்வதும் குற்றமாகாது'' என்று அன்பே நிறைவாகவும் தம்மை மறந்து நிரம்பவும் உருக்கமாகவும் பேசினார்.

இதன் தொடர்ச்சி 2ம் பாகத்தில் தொடரும்......

# ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
# நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
# அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்

## திகம்பர சாமியார்





1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா வினோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா வினோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா வினோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா





... ... ... இதற்கு மேலும் வருவார் !